229. ஜெயகுமார், திரு. டி.	..	ராயபுரம்
230. ஜெயக்குமார், திரு. எஸ்.	..	தியாகராயநகர்
231. ஜெயராமன், திரு. எஸ். ஆர்.	..	சேலம்-1
232. ஜெயலலிதா, டாக்டர் ஜெ.	..	பர்கூர்
233. ஜெய்சன் ஜேக்கப், டாக்டர்	..	ஆரணி
234. ஸ்ரீதரன், டாக்டர் அ.	..	வால்பாறை (செ.வ.)
235. பிட்ரிக்ஸ் டி' சோசா, டாக்டர்	..	நியமனம்

பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்

கிருஷ்ணமூர்த்தி, திரு. ஆர்.	..	தலைமை வழக்கறிஞர்

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

சித்திரை 11, யுவ- திருவள்ளுவர் ஆண்டு 2026

1995 ஏப்ரல் 24, திங்கட்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. இரா. முத்தையா அவர்கள் தலைமையில் காலை 10.00 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"தீயவை செய்தார் கெடுதல் நிழல்தன்னை
வீயாது அடிஉறைந் தற்று."

ஒருவரது நிழல் அவரை விடாது அவரது காலடியையே எப்படித் தொடருகிறதோ, அதேபோல் தீய செயல்களைச் செய்தவர்களை அதற்கான கெடுதலும் விடாது.

1. வினாக்கள்-விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 401, டாக்டர் வெ. சரோஜா. மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

401—

கண்காணிப்புக் குழு அமைத்தல்

***25753**—*டாக்டர் வெ. சரோஜா:*

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு பட்டா பாஸ் புத்தகச் சட்டம் 1983 செம்மையாக செயல்பட பிர்கா வாரியாக கண்காணிப்புக் குழு அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது நடைமுறைப்படுத்தப்படும்?

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம் வருவாய்த்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

டாக்டர் வெ. சரோஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்டா பாஸ் புத்தகம் என்பது நில உரிமையாளர்கள் குறித்த விவரங்கள், நிலப் பரப்பளவு, சர்வே எண் ஆகிய விவரங்களை உள்ளடக்கி அமைந்திருப்பதாலும், இந்தப் பட்டா பாஸ் புத்தகம் விவசாயிகள் நிலவள வங்கி மற்றும் பிற நிறுவனங்களிலிருந்து கடன் பெற அங்கீகாரச் சான்றிதழ் போல் கருதப்படுவதாலும் இந்தத் திட்டத்தை தமிழ்நாடு முழுவதும் அமல்படுத்துவதோடு, இது நல்லமுறையில் செயல்படுகிறதா என்பதைக் கண்காணிக்க மக்கள் பிரதிநிதிகள் அடங்கிய கண்காணிப்புக் குழு ஒன்றை ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசு பட்டா பாஸ் புத்தகம் திட்டத்தைக் கொண்டு வருவதிலே மிகவும் அக்கறையாக இருக்கிறது. நில உடைமையாளர்களுக்கு நிலத்தை உறுதிப்படுத்துவதற்கும், அதிலே அவர்கள் வில்லங்கச் சான்றிதழ் பெறுவதிலும், அதன் மூலம் கடன்கள் பெறுவதிலும் இன்றைக்கு பல்வேறு சிக்கல்கள் இருக்கின்றன. அதனால் காலதாமதமும் ஏற்படுகிறது. இந்தப் பட்டா பாஸ் புத்தகம் கொடுக்கப்பட்டால், விவசாயிகள் இதைக் காண்பித்து அரசு வங்கிகளிலோ அல்லது தனியார் வங்கிகளிலோ கடன் பெறுவதற்கான வாய்ப்பு இருக்கும் என்பதால் அரசு இதை நடைமுறைப்படுத்த தீவிரமாக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் கேட்கிறபோது அதற்குப் புதிதாக அதிகாரிகள் நியமிக்கப்படவேண்டுமென்று கேட்டார்கள். நான் இல்லையென்று சொன்னேன். இந்தப் பட்டா பாஸ் புத்தக திட்டத்தைச் சரிவர செய்யவேண்டும் என்பதற்காக ஒவ்வொரு வட்டத்திற்கும், ஒரு துணை வட்டாட்சியர், மூன்று வருவாய் ஆய்வாளர், ஒரு தட்டச்சர், ஒரு இளநிலை உதவியாளர், ஒரு துணை ஆய்வாளர், ஒரு புலன் ஆய்வாளர், அலுவலக உதவியாளர் என 19 பேர் போடப்பட இருக்கிறது. மேலும் மாண்புமிகு உறுப்பினர் கேட்கிறபோது எல்லா இடங்களிலும் இது நடத்தப்படுமா என்று கேட்டார்கள். மாநிலம் முழுவதும் நடத்தப்படும். அதில் முதல் கட்டமாக, வட ஆற்காடு-அம்பேத்கார் மாவட்டம், தஞ்சை மாவட்டம், திருச்சிராப்பள்ளி மாவட்டம், கோவை மாவட்டம், மதுரை மாவட்டம், சிதம்பரனார் மாவட்டம் என இப்படித் தமிழகத்திலே பல்வேறு இடங்களிலும், ஒரே இடத்தில் குவியாமல், பல இடங்களில் இதைச் செய்வதற்கு ஆவன செய்யப்படும், விரைவிலே செய்யப்படும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

1995 ஏப்ரல் 24]

டாக்டர் வெ. சரோஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்டா பாஸ் புத்தகத் திட்டம் 1983 என்ற உன்னத திட்டம் இந்தியத் துணைக் கண்டத்திலேயே முதன்முறையாக இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் பொற்கால ஆட்சியில்தான் அறிமுகப்படுத்தப்பட்டது. இந்த பட்டா பாஸ் புத்தகத்தில் உள்ள விவரங்கள் அனைத்தும் சட்டபூர்வமாகக் கருதப்படுவதால் நில விற்பனை செய்கின்றபோது, சப்ரிஜிஸ்திரார் அலுவலகத்தில் இதை தாக்கல் செய்து நிலமாற்றம் பற்றிய அனைத்து விவரங்களையும் அதில் பதிவு செய்ய, நடைமுறைப்படுத்த அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பட்டா பாஸ் புத்தகத்தைப் பற்றியும் அதிலுள்ள விவரங்கள் பற்றியும் தெரிந்து வைத்துக்கொண்டு கேட்கிறபோது நான் உண்மையிலேயே மகிழ்ச்சியடைகிறேன். அதுபோல, எல்லா உறுப்பினர்களும் இதைப் பற்றி தெரிந்து வைத்துக் கொண்டிருந்தாலும், தெரியாத சில விஷயங்களை பற்றியும் தெரிந்து வைத்துக்கொண்டால் அவரவர்கள் தொகுதியில் உள்ள பொதுமக்களுக்கு உதவிகரமாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் எஸ். சுந்தரராஜ்.

முற்பகல் 10-05

டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு முறையும் பட்டாக்கள் வழங்குகிறபோது பழங்காலத்தில் ஓடைப்புறம், கண்மாய்ப்புறம், களப்புறம் என்று அரசு நிர்ணயம் செய்தது. இப்போது அங்கே ஓடைகள் இல்லாமல் கண்மாய்கள் இல்லாமல் புறம்போக்காக இருந்து, மக்கள் குடிசைகளில் வாழ்கின்றார்கள். அந்த இடங்களில், பழங்காலத்து ரிக்கார்டுகளை வைத்து பட்டாக்கள் வழங்கப்படும் என்று பதில் சொல்லியிருக்கிறார்கள். தற்போதைய சூழ்நிலையை அறிந்து அதற்கேற்ப பட்டா வழங்க அமைச்சர் அவர்கள் புதிய யுக்திகளைக் கையாளுவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்டா வழங்குவது என்பது இன்றைக்கு வருவாய்த்துறை கொடுக்கிற நில உரிமைப் பதிவேடு. நில உரிமைப் பதிவேடு என்றால் அவர்களுக்கு இருக்கிற உரிமைகள் பூராவும் அதிலே இருக்கும். அது மட்டுமல்ல. அதிலே அவர்களுடைய போட்டோவும் ஒட்டப்படுகிறது. அதோடு, இது நன்றாக இருக்க வேண்டுமென்பதற்காக ரெக்சின் பைண்டிங் செய்கிறோம். இந்த பைண்டிங்குக்காக மாத்திரம் 1 கோடியே 80 லட்ச ரூபாய், இந்த அரசு

புரட்சித் தலைவி அரசு ஒதுக்கியிருக்கிறது. இதற்கு வேண்டிய எல்லா காரியங்களும் நடைபெறுகின்றன. இதற்கு மத்திய அரசிடம் நாங்கள் பணம் வேண்டுமென்று கோரிக்கை வைத்தோம். மத்திய அரசு வழக்கம் போல் இதற்கும் கையை விரித்து விட்டது. மத்திய அரசு கையை விரித்தாலும் அதுபற்றி பாதகம் இல்லை என்று இதற்கு ஒரு கோடியே 80 லட்ச ரூபாய், நல்ல அட்டையாக போடுவதற்காக மட்டுமே இந்த அரசு ஒதுக்கியிருக்கிறது. புத்தகம் அடிக்க வேண்டியிருக்கிறது. களத்தில் வேலை செய்ய வேண்டியிருக்கிறது. ஆகவே, பட்டா கொடுப்பது என்பது மட்டுமல்ல பிரச்சினை. உங்களுக்கு நான் இதைச் சொல்வதற்குக் காரணம், சட்டமன்ற உறுப்பினர்கள் மட்டுமல்ல எனக்கு அருகாமையில் அமர்ந்திருக்கின்ற அமைச்சர்கள் கூட நான் என்ன சொல்லுகிறேன் என்பதைக் கவனிக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அமைச்சர் சொல்வதை எல்லோரும் கவனியுங்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்டா புத்தகம் சும்மா கொடுத்து விடுவது இல்லை. அந்தப் பட்டா புத்தகத்தில் என்ன என்ன எழுதப்படுகிறதோ அதை அதிகாரப்பூர்வமாக அந்த வட்டாட்சியர் அல்லது துணை வட்டாட்சியர் கையெழுத்துப் போட்டு கொடுக்கிறார். சில இடங்களில் தவறுகள் நடக்கின்றன என்பதனால் இந்தப் பட்டா புத்தகத்தில் என்னென்ன விவரங்கள் இருக்கின்றன, எந்த உரிமையாளருக்கு இது கொடுக்கப்படுகிறது, பட்டா கொடுப்பதற்கு முன்னால் இந்த விவரங்ககள் அந்தந்த கிராமங்களில் வெளியிடப்படும். அந்தந்த வட்டங்களில் வெளியிடுவது மட்டுமல்ல. ஒரு வட்டத்தில் 100 பட்டா பாஸ் புத்தகம் கொடுக்க வேண்டுமென்றால் 100-ஐயும் கொடுத்து விடுவது இல்லை. 100-ஐயும் கொடுத்து விட்டால் தவறு ஏற்பட்டுவிடும் என்பதற்காக இந்தப் புரட்சித்தலைவி அரசு, நம்முடைய மாண்புமிகு முதல்வர் தவறே நடக்கக் கூடாது என்று உத்தரவு போட்டிருப்பதால்—இதை இங்கு சொல்வதற்குக் காரணம், இது வெற்றிகரமாக நடக்க வேண்டுமென்றால் இங்கே இருக்கிற அவ்வளவு உறுப்பினர்களும், சட்டமன்ற உறுப்பினர்கள், பொது மக்களும், செய்தித்தாள் மூலமாக நான் பொதுமக்களுக்கு தெரிவித்துக் கொள்ள விரும்புவது எல்லோரும் இதற்கு ஒத்துழைப்புக் கொடுக்க வேண்டும். அப்போதுதான் இது திறம்பட, நல்லபடியாக நடைபெறும். அப்படி நடைபெற வேண்டுமானால் கடைசியில் கொடுக்கப்போகிறோமே அதனுடைய மாதிரி எல்லா கிராமங்களிலும் அறிவிப்பாக போடப்படுகின்றன. எல்லா கிராமங்களிலும் அத்தனை பேர்களுக்கும் போடுவது இல்லை. முதலிலே 50 சதவீதம் போடப்படுகிறது. 50 சதவீதத்தை கொடுத்து விட்டால் அதிலே தவறு இருக்கிறதா இல்லையா என்று கிராமங்களிலேயிருந்து வந்து சொல்வார்கள்.

1995 ஏப்ரல் 24]

நீங்கள் கொடுத்த பட்டா பாஸ் புத்தகம் சரியாக இல்லை. நில உரிமைப் பதிவேடு சரியாக இல்லையென்று அவர்கள் சொன்னால் திருத்த வாய்ப்பு இருக்கிறது. எல்லாவற்றையும் கொடுத்து விட்டு திருத்துவதை விட முதலிலே 50 சதவீதத்தைக் கொடுத்தால் நல்லது. எப்படி நடக்கிறது என்பதற்கு மாதிரியாக 50 சதவீதம் எல்லா கிராமங்களிலும் போடப்படுகிறது. இதை நீங்கள் மக்களுக்குத் தெரிவிக்க வேண்டும். அது மட்டுமல்ல. அங்கங்கே இது அறிவிக்கப்பட உள்ளது. உங்களுடைய தொகுதிகளில் பட்டா பாஸ் புத்தகம் தவறாகக் கொடுக்கப்பட்டால் அதற்கு அதிகாரிகள் காரணம் என்று நீங்கள் சொல்லக் கூடாது; தவறாக கொடுக்கப்பட்டால் அந்தக் கிராமத்திலே இருக்கிற சட்டமன்ற உறுப்பினர்கள் பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டும். ஏனென்றால் அந்தக் கிராமத்திலே போட்டு விடுகிறோம். தவறு என்றால் அதைச் சுட்டிக்காட்ட வேண்டியது உங்களுடைய கடமை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. தா. வேடியப்பன்

திரு. தா. வேடியப்பன்:மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பட்டா பாஸ் புத்தகம் வழங்குவதிலே சில நேரங்களில் நிறைய சப்டிவிஷன் நெம்பர்கள் எல்லாம் கொடுக்கிறார்கள். உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால் 32 இருக்கிறது. 32 ஏ, பி. சி. டி. என்ற நிறைய நெம்பர்கள் எல்லாம் கொடுக்கிறார்கள். அப்படி கொடுக்கிற பட்சத்திலே அந்த நெம்பர்களை எல்லாம் சேர்த்து அவர்களுடைய எக்ஸ்டன்சன் எவ்வளவு இருக்கிறதோ, அவற்றைப் பூராவையும் ஒரே நெம்பராக கொடுத்தால், சப் டிவிஷன் பண்ணிய நெம்பர்களையெல்லாம் குறைப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது. இதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-10

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு ஒன்றரை கோடி புல எண்கள் தமிழ்நாட்டிலே இருக்கிறது. ஒருவருக்கு நிலம் இருக்கிறது என்றால், அது ஒரு இடத்தில் இருப்பதில்லை. ஒரே இடத்தில் பல இடங்களில் தனித்தனியாக இருக்கின்றன. சில புல எண்களில் 50 ஏக்கர்கள் இருக்கின்றன. சில புல எண்களில் 10 செண்ட் இருக்கிறது. இந்த மாதிரி பல்வேறு இடங்கள் இருக்கின்றன. எல்லா புல எண்களிலும் சர்வே நெம்பர் சொல்கிறார், பட்டா நெம்பர் சொல்கிறார். எல்லா சர்வே எண்களில் உள்ள நிலங்களை ஒன்றாகச் சேர்ப்பது என்றால், அவர்களுக்கு பல இடங்களிலே நிலம் இருக்கிறது. ஒரே இடத்தில் ஒன்றாக இருந்தால் அந்த புல எண்களை குறைத்தால் அரசுக்கும் நல்லது. இருக்கிற அதிகாரிகளுக்கும் நல்லது. ஆனால் புல எண் ஒரே இடத்தில் யாருக்காவது

நிலம் சொந்தமாக இருந்து, சேர்ந்தாற்போல் இருந்தால், அந்த புல எண்களில் உள்ள நிலங்களை ஒன்றாக சேர்க்க வேண்டுமென்று சொன்னால் மனு கொடுத்தால் அரசு அதை ஆய்வு செய்யும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கே. பி. ராஜு

திரு. கே.பி. ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது அறிமுகப்படுத்த இருக்கின்ற பட்டா புத்தகத்தில் புதிய சப்டிவிஷன்படி நிலங்களை அளந்து அதைக்குறிப்பதாக அறிகிறேன். பழைய அளவுக்கும், புதிய சப் டிவிஷனுக்கும் பல்வேறு வழக்குகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அந்த அளவுகள் சரியில்லை என்று கூட நீதிமன்றங்களுக்குச் சென்று கொண்டிருக்கிறார்கள். ஆகவே அப்படி புதிய சப்டிவிஷன்படி நிலங்களை அளந்து அந்தப்பட்டா புத்தகத்தில் பதிவு செய்துவிட்டால் பழைய நிலங்களை வைத்திருப்பவர்கள் பாதிக்கப்பட மாட்டார்களா? அந்த வழக்குகள் பாதகமாக முடியாதா என்பதை அமைச்சர் அவர்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிலவுடமை மேம்பாட்டுத் திட்டம் என்று புரட்சித் தலைவர் ஆட்சியில் வந்தது. 50,60 ஆண்டுகள் அல்லது 70 ஆண்டுகளுக்கு முன்னால் நிலத்தை அளந்தார்கள். அதற்குப் பிறகு ஆங்கிலேயர் ஆட்சிக்குப் பிறகு வந்த ஆட்சி அதை அப்படியே, நிலத்தைப் பற்றி கவலைப்படாமல் விட்டுவிட்டார்கள். புரட்சித் தலைவர் ஆட்சி வந்த பிறகு நிலவுடமை மேம்பாட்டுத் திட்டம் கொண்டுவரப்பட்டது. நிலவுடமை மேம்பாட்டுத் திட்டம் கொண்டுவரப்பட்டது மட்டுமல்ல. அதை நடைமுறைப்படுத்துவதற்கு எல்லாவிதமான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டன. அந்த நிலவுடமை மேம்பாட்டுத் திட்டம், அங்கே நிலம் யாருடைய அனுபோகத்தில் இருக்கிறது. யாருடைய பேரிலே பட்டா இருக்கிறது. அனுபோகதாரர் உண்மையான அனுபோகதாரரா என்று தெரிந்து கொள்வதற்காக எல்லா களத்திற்கும் சென்று அதைப் பார்வையிட்டார்கள். அதற்காக ரூ. 150 கோடி செலவு செய்து எல்லாவற்றையும் பண்ணியாகிவிட்டது. சில நேரங்களில் அதிகாரிகள் அங்கே வருகிறார்கள் என்பது பறைசாற்றப்பெற்றது. பறைசாற்றப்பெற்றது மட்டுமல்ல,கட்சிக்கு அப்பாற்பட்டு அந்த ஊரில் யார் வயதானரோ, விவரம் தெரிந்தவரோ அவருடைய தலைமையில் எல்லா இடங்களிலும் கூட்டங்கள் போடப்பட்டது. கூட்டங்களைப் போட்டு 4-ம் தேதி அல்லது இந்த தேதியில் எங்களுடைய அரசு அதிகாரிகள் களத்திற்கு வருவார்கள், நிலத்தைப் பார்ப்போம் என்றும் அப்போது யார் வேண்டுமானாலும் வந்து சொல்லலாம் என்றும் சொன்னோம். எல்லாவிதமான சடங்குகளையும் ஒழுங்காக முயன்று செய்து, சில இடங்களிலே அதற்குப் பிறகு இந்த ஆட்சி புரட்சித் தலைவி ஆட்சி வந்தபிறகு, அதற்குப் பிறகு நான் வருவாய்த் துறை அமைச்சரான பிறகு மீண்டும் நாம் செய்தது எல்லாம்

எப்படி இருக்கிறது என்று நான் ஆய்வு செய்தேன். அப்படி செய்த இடங்களிலே சில இடங்களிலே தவறு இருக்கிறது. இத்தனை சடங்குகளுக்குப் பிறகும் சில தவறுகள் இருக்கின்றன என்பது ஆய்வு செய்து கண்டுபிடிக்கப்பட்டது. அப்படி கண்டுபிடிக்கப்பட்ட பிறகு கூட இன்றைக்கு இருக்கின்ற மாவட்ட ஆட்சித் தலைவரிலிருந்து, கோட்ட வருவாய் அதிகாரியிலிருந்து, மாவட்டத்தினுடைய வருவாய் அதிகாரியிலிருந்து, வட்ட ஆய்வாளரிலிருந்து, எல்லோரும், ஒவ்வொருவரும் தனித்தனியே 5 கிராமங்களுக்கு சென்று இதையும் ஆய்வு செய்யவேண்டும் என்று சொல்லி இருக்கிறோம். ஆய்வு செய்து கொண்டிருக்கிறார்கள். சில இடங்களிலே தவறு இருக்கிறது. அதை சரிசெய்யச் சொல்லியிருக்கிறோம். ஆகையினால் இங்கே மக்களுடைய பிரதிநிதியாக இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் என்றால்—எல்லோரையும் என்னையும் சேர்த்துதான் சட்டமன்ற உறுப்பினர்கள்—என்னையும் சேர்த்தே சொல்கிறேன். இதிலே அமைச்சர்களும் வருகிறார்கள். ஆக உங்களுடைய தொகுதியில் எங்கே தவறு இருக்கிறது? நிலவுடைமை மேம்பாட்டுத் திட்டத்தில் எந்த இடத்திலே தவறு இருக்கிறது என்று உங்களால் சொல்லப்படவேண்டும். நீங்கள் குறைந்தது 5 கிராமங்களுக்குச் சென்று அந்த 5 கிராமங்களிலே எந்தெந்த இடத்திலே தவறு இருக்கிறது என்று அதை என்னிடத்திலே கொடுத்தால் அதை நான் ஒரு உதாரணமாக வைத்துக் கொள்வேன். அதாவது ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பதைப் போல நீங்கள் 5 கிராமங்களுக்குச் சென்று இன்னின்ன இடத்திலே தவறு இருக்கிறது என்று என்னிடத்திலே வந்து சொன்னால், இது உங்களுடைய பணி, அரசு அதிகாரியினுடைய பணியல்ல, உங்களுடைய பணி கூட, அதை என்னிடத்திலே கொடுத்தால், அரசு அதிகாரிகளுக்குக் கொடுத்து இன்னின்ன கிராமங்களிலே தவறு இருக்கிறது, நீங்கள் சரியாக இருக்கிறது என்று சொல்லியிருக்கிறீர்களே என்பேன். உங்களையும் சேர்த்துத்தான் சொல்கிறேன் (மணியடிக்கப் பெற்றது)

மன்னிக்க வேண்டும். அமைச்சர்களுக்கு எல்லாவிதமான உரிமையும் இருக்கிறது. நான் அவர்களைப் போல ஒரு சாதாரண அமைச்சர்தான். இருந்தாலும் நான் மக்களுடைய நலன் கருதி, அமைச்சர்கள் பேசுகிறபோது நான் திரும்பிப் பார்த்ததை அவர்கள் தவறாக கருதக் கூடாது. ஏனென்றால் நிலவுடைமைப் பதிவேடு என்பது மிக முக்கியமானது. முதலமைச்சருக்கு மட்டும் அதிலே பொறுப்பு இல்லை. எங்களுக்கும் பொறுப்பு இருக்கிறது. அதை நடைமுறைப்படுத்துவதற்கு வருவாய்த் துறை அமைச்சருக்கு மட்டும் பொறுப்பு இல்லை. எல்லா சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் பொறுப்பு இருக்கிறது என்கிறபோது இங்கே இருக்கின்ற அமைச்சர்களுக்கும் பொறுப்பு இருக்கிறது இதிலே. அதானால் நான் திரும்பச் சொன்னதற்கு அமைச்சர் எல்லோரும் மன்னித்துக் கொள்ள வேண்டும்.

உண்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

முற்பகல் 10-15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்போது எல்லோரும் கவனித்துக் கொண்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம்: ஆகையால், இதிலே நீங்கள் எந்த இடத்திலே வேண்டுமானாலும், மாண்புமிகு பரமசிவம் அவர்கள்கூட அவர்களுடைய தொகுதிக்குச் சென்று, 5 கிராமங்களுக்குப் போய் பார்த்துவிட்டு, நிலவுடமை மேம்பாட்டுத் திட்டத்தில் இன்னின்ன குறை இருக்கிறது என்று என்னிடத்திலே சொல்வதற்குக் கடமைப்பட்டிருக்கிறார்கள். அப்படி அமைச்சரும் சொல்லவேண்டும், சட்டமன்ற உறுப்பினர்களும் சொல்ல வேண்டும். இப்போதுகூட வருகிற சனி, ஞாயிறுகளில் போய் 5 கிராமங்களைப் பார்த்து, இந்த இடத்திலே தவறு இருக்கிறது என்று சொன்னால், அதற்குப் பிறகு இந்தச் சட்டமன்றம் முடிவதற்குள்ளேகூட, வருவாய்த் துறை அதிகாரிகளை அனுப்பி இன்னின்ன இடத்திலே தவறு இருக்கிறது, இந்தமாதிரி தவறு இருக்கிறது. இந்த உரிமையாளரிடம் தவறு இருக்கிறது என்று சொல்லி, கேட்டு, இந்தச் சட்டமன்றம் முடிவதற்கு முன்பேகூட நான் உங்களுக்குப் பதில் தருவேன் என்பதை மிகப் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 402, திரு. ஆர். சிங்காரம், மாண்புமிகு உணவு அமைச்சர்.

402—

பகுதி நேர கூட்டுறவு அங்காடி அமைத்தல்

***17518**—திரு. ஆர். சிங்காரம்:

மாண்புமிகு உணவு அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை வட்டம், முத்தாக்குறிச்சி பஞ்சாயத்து, சிலம்பவளங்காடு கிராமத்திற்கு பகுதிநேர கூட்டுறவு உணவுப் பொருட்கள் வழங்கும் அங்காடி அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

மாண்புமிகு திரு. இராம வீரப்பன், உணவு அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாண்புமிகு உறுப்பினர் கேட்டுள்ள முத்தாக்குறிச்சி பஞ்சாயத்து சிலம்பவளங்காடு கிராமத்திற்கு உணவுப் பொருள் வழங்கும் பகுதிநேர அங்காடி ஏற்கெனவே அமைக்கப்பட்டுவிட்டது.

முற்பகல் 10-15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்போது எல்லோரும் கவனித்துக் கொண்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம்: ஆகையால், இதிலே நீங்கள் எந்த இடத்திலே வேண்டுமானாலும், மாண்புமிகு பரமசிவம் அவர்கள்கூட அவர்களுடைய தொகுதிக்குச் சென்று, 5 கிராமங்களுக்குப் போய் பார்த்துவிட்டு, நிலவுடமை மேம்பாட்டுத் திட்டத்தில் இன்னின்ன குறை இருக்கிறது என்று என்னிடத்திலே சொல்வதற்குக் கடமைப்பட்டிருக்கிறார்கள். அப்படி அமைச்சரும் சொல்லவேண்டும், சட்டமன்ற உறுப்பினர்களும் சொல்ல வேண்டும். இப்போதுகூட வருகிற சனி, ஞாயிறுகளில் போய் 5 கிராமங்களைப் பார்த்து, இந்த இடத்திலே தவறு இருக்கிறது என்று சொன்னால், அதற்குப் பிறகு இந்தச் சட்டமன்றம் முடிவதற்குள்ளேகூட, வருவாய்த் துறை அதிகாரிகளை அனுப்பி இன்னின்ன இடத்திலே தவறு இருக்கிறது, இந்தமாதிரி தவறு இருக்கிறது. இந்த உரிமையாளரிடம் தவறு இருக்கிறது என்று சொல்லி, கேட்டு, இந்தச் சட்டமன்றம் முடிவதற்கு முன்பேகூட நான் உங்களுக்குப் பதில் தருவேன் என்பதை மிகப் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 402, திரு. ஆர். சிங்காரம், மாண்புமிகு உணவு அமைச்சர்.

402—

பகுதி நேர கூட்டுறவு அங்காடி அமைத்தல்

***17518**—*திரு. ஆர். சிங்காரம்:*

மாண்புமிகு உணவு அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை வட்டம், முத்தாக்குறிச்சி பஞ்சாயத்து, சிலம்பவளங்காடு கிராமத்திற்கு பகுதிநேர கூட்டுறவு உணவுப் பொருட்கள் வழங்கும் அங்காடி அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

மாண்புமிகு திரு. இராம வீரப்பன், உணவு அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாண்புமிகு உறுப்பினர் கேட்டுள்ள முத்தாக்குறிச்சி பஞ்சாயத்து சிலம்பவளங்காடு கிராமத்திற்கு உணவுப் பொருள் வழங்கும் பகுதிநேர அங்காடி ஏற்கெனவே அமைக்கப்பட்டுவிட்டது.

1995 ஏப்ரல் 24]

திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிப் பொறுப்பு ஏற்றபிறகு நான் இந்த கேள்வி போட்டபிறகு, இந்த அரசு உரிய நடவடிக்கை எடுத்து அங்கே பகுதிநேர அங்காடி அமைத்ததற்கு, அதுபற்றி அமைச்சர் அவர்கள் தக்க விளக்கம் அளித்ததற்கு, என் மனமார்ந்த நன்றியையும், வணக்கத்தையும், தமிழக முதல்வர் அவர்களுக்கும், உணவு அமைச்சர் அவர்களுக்கும் தெரிவித்து அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 403, திரு. வி. கே. லட்சுமணன், இருக்கையில் இல்லை. அவருக்குப் பதிலாக டாக்டர் ஜெ. பரந்தாமன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

403—

மருத்துவக் கல்லூரிகளில் கல்விக் கட்டணம்

***10862-எ—** *திரு. வி.கே. லட்சுமணன்:*

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு மருத்துவக் கல்லூரிகளில் மாணவர் கல்விக் கட்டணத்தை உயர்த்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எந்தக் கல்வி ஆண்டிலிருந்து உயர்த்தப்படும்?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): 1993-94-ஆம் ஆண்டு முதல் டாக்டர் அனந்தகிருஷ்ணன் குழுவின் பரிந்துரையின்படி, அரசு மருத்துவக் கல்லூரிகளில் மாணவர்கள் கல்விக் கட்டணம் ஆண்டொன்றுக்கு ரூ. 4,000/- ஆக உயர்த்தப்பட்டுள்ளது. அதற்கு மேல் உயர்த்தும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

டாக்டர் ஜெ. பரந்தாமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போஸ்ட் கிராஜுவேட் சூப்பர் ஸ்பெஷாலிட்டி கோர்ஸ்ஸில், கிளினிக்கல் எக்ஸ்பீரியன்ஸ் காலத்தை அதிகப்படுத்தி நிறைய அனுபவ பயிற்சி பெற சிறிதளவு கூடுதல் கட்டணம் மாணவர்களிடமிருந்து வசூலிக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போஸ்ட் கிராஜுவேட் மற்றும் சூப்பர் ஸ்பெஷாலிட்டியைப் பொறுத்தவரை, இப்போது போஸ்ட் கிராஜுவேட்டிலே இரண்டு ஆண்டுக்காலம்

1995 ஏப்ரல் 24]

திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிப் பொறுப்பு ஏற்றபிறகு நான் இந்த கேள்வி போட்டபிறகு, இந்த அரசு உரிய நடவடிக்கை எடுத்து அங்கே பகுதிநேர அங்காடி அமைத்ததற்கு, அதுபற்றி அமைச்சர் அவர்கள் தக்க விளக்கம் அளித்ததற்கு, என் மனமார்ந்த நன்றியையும், வணக்கத்தையும், தமிழக முதல்வர் அவர்களுக்கும், உணவு அமைச்சர் அவர்களுக்கும் தெரிவித்து அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 403, திரு. வி. கே. லட்சுமணன், இருக்கையில் இல்லை. அவருக்குப் பதிலாக டாக்டர் ஜெ. பரந்தாமன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

403—

மருத்துவக் கல்லூரிகளில் கல்விக் கட்டணம்

***10862-எ—** *திரு. வி.கே. லட்சுமணன்:*

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு மருத்துவக் கல்லூரிகளில் மாணவர் கல்விக் கட்டணத்தை உயர்த்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எந்தக் கல்வி ஆண்டிலிருந்து உயர்த்தப்படும்?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): 1993-94-ஆம் ஆண்டு முதல் டாக்டர் அனந்தகிருஷ்ணன் குழுவின் பரிந்துரையின்படி, அரசு மருத்துவக் கல்லூரிகளில் மாணவர்கள் கல்விக் கட்டணம் ஆண்டொன்றுக்கு ரூ. 4,000/- ஆக உயர்த்தப்பட்டுள்ளது. அதற்கு மேல் உயர்த்தும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

டாக்டர் ஜெ. பரந்தாமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போஸ்ட் கிராஜுவேட் சூப்பர் ஸ்பெஷாலிட்டி கோர்ஸ்ஸில், கிளினிக்கல் எக்ஸ்பீரியன்ஸ் காலத்தை அதிகப்படுத்தி நிறைய அனுபவ பயிற்சி பெற சிறிதளவு கூடுதல் கட்டணம் மாணவர்களிடமிருந்து வசூலிக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போஸ்ட் கிராஜுவேட் மற்றும் சூப்பர் ஸ்பெஷாலிட்டியைப் பொறுத்தவரை, இப்போது போஸ்ட் கிராஜுவேட்டிலே இரண்டு ஆண்டுக்காலம்

என்று இருந்தது, உச்ச நீதிமன்றத்தினுடைய தீர்ப்பின் அடிப்படையில் மெடிக்கல் கவுன்சில் மூன்று ஆண்டுகாலமாக அதை மாற்றியிருக்கிறது. எனவே, அதிலே தேவையான அளவிற்கு அனுபவம், பயிற்சி கொடுக்கிற வாய்ப்பு இருக்கிறது. கட்டணத்தைப் பொறுத்தவரை அதை அடிப்படையாக வைத்து நாம் உயர்த்துவதில்லை. இருக்கின்ற மற்ற விளைவுகளை வைத்துதான் நாம் வைத்திருக்கிறோம். எனவே, உயர் கல்விக் கட்டணத்தை ஓரளவுக்கு மாற்றுவதற்கு ஏற்கெனவே நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிற காரணத்தால் புதியதாக இனிமேல் உயர்த்துவதற்கு வாய்ப்பு இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை.

டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மருத்துவக் கல்லூரி மாணவர்கள் கல்விக் கட்டணத்தை ரூபாய் 4 ஆயிரம் என்ற அளவுக்கு அரசு உயர்த்தியிருக்கிறது. அதைக் குறைப்பதற்கு அரசு மறுபரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கேள்வியே உயர்த்தப்படுமா என்று போட்டக் கேள்வி. நான் ஏற்கெனவே சொன்னேன் டாக்டர் அனந்தகிருஷ்ணன் கமிட்டியினுடைய அடிப்படையிலே உயர்வு ஏற்கெனவே செய்யப்பட்டிருக்கிறது. எனவே, அதற்கு மேல உயர்த்துகிற திட்டம் அரசினுடைய பரிசீலனையில் இல்லை என்று நான் சொன்னேன். எனவே, இதைக் குறைக்கின்ற திட்டம் இல்லை. காரணம் ஏற்கெனவே உச்சநீதிமன்றத்தினுடைய தீர்ப்பை அடிப்படையாக வைத்து, ஒரு கமிட்டி அமைக்கப்பட்டு, அந்தக் கமிட்டி கொடுத்த பரிந்துரைபடிதான் இது நிர்ணயிக்கப்பட்டிருக்கிறதேயொழிய, அரசாங்கம் தன்னிச்சையாக நிர்ணயித்தது அல்ல. ஏற்கெனவே மாணவர்களுக்குக்கூட தெளிவாக தெரிவிக்கப் பட்டிருக்கிறது. எனவே, அதைப்பற்றி மீண்டும் அரசு ஆய்வு செய்வதற்கு தயாராக இல்லை. கமிட்டி ரிப்போர்ட்டிலே ஏதாவது மாற்றம் இருந்தால் அதைத்தான் அமலாக்க முடியுமேயொழிய அரசாங்கமாக இதிலே எந்த மாற்றத்தையும் செய்வதற்கு இப்போது தயாராக இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருமதி ஜீனத் சர்புதீன்.

முற்பகல் 10-20

திருமதி ஜீனத் சர்புதீன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாதாரணமாக மருத்துவர்கள் எல்லோரும் பட்டணங்களில் இருக்கவேண்டும் என்றுதான் விருப்பப்படுகிறார்கள். ஆகையினால், மருத்துவக் கல்லூரியில் சேரும்போதே, இத்தனை வருடங்கள் அவர்கள் கிராமங்களில் பணியாற்ற வேண்டும், அப்படி பணியாற்றினால்தான் அவர்களுக்கு பிரமோஷனிலும் சரி, போஸ்ட் கிராஜுவேட் ஸ்டடிஸிலும் சரி, இடம் கொடுக்கப்படும் என்று

1995 ஏப்ரல் 24]

சட்டம் இருக்கிறதா? அப்படி சட்டம் இருந்தால் அதை என்போர்ஸ் செய்கிறார்களா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது கட்டணம் பற்றிய பிரச்சினை. நீங்கள் சர்வீஸ்குள்ளே போகிறீர்கள். இது படிக்கும்போது இருக்கிற பிரச்சினை. அதனாலே, இதையொட்டிக் கேள்வி கேளுங்கள்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது கட்டணத்தைப் பற்றிய பிரச்சினை. மருத்துவமனையிலே, அரசிலே அவர்கள் வேலைக்குச் சேருகிறபோதுதான், அவர்களுக்கு விதிமுறைகள் விதிக்கப்படுகிறது. ஆனால் அவர்கள் படிப்பதற்காகச் சேருகிறபோது, அந்த விதிமுறைகளை நம்மால் விதிக்க முடியாது. ஆனால், அவர்கள் அரசாங்கத்தில் வேலைக்குச் சேருகிறபோது, கிராமத்திலே, ஆரம்ப சுகாதார நிலையங்களிலே அவர்கள் பணியாற்ற வேண்டும். போஸ்ட் கிராஜுவேட்டாக இருந்தால் 1 ஆண்டு காலமும், டிப்ளமோ-வாக இருந்தால் 2 ஆண்டு காலமும், எம்பிபிஎஸ் ஆக இருந்தால் 3 ஆண்டு காலமும் பணியாற்ற வேண்டும் என்று இருக்கிறது. இப்போது புதிதாக நான்கு கேடரை-ஐ நாம் உருவாக்கியிருக்கிறோம். அந்த நான்கு கேடர்கள், அட்மினிஸ்டிரேசன் கேடர், பிரைமரி ஹெல்த் சென்டர் கேடர், மெடிக்கல் சர்வீஸ் கேடர், மெடிகல் எஜுகேஷன் கேடர். இந்த நான்கு கேடரை உருவாக்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருக்கிறது. இதிலே, மாண்புமிகு உறுப்பினர்கள் என்ன எதிர்பார்க்கிறார்களோ, அத்தனை வழிமுறைகளும் இதிலே செய்யப்பட்டு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 404, திரு. ப. கலியபெருமாள், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

404—

சுகாதாரப் பணியாளர்களுக்கு ஊதியம் உயர்த்துதல்

***35679—**திரு. ப கலியபெருமாள்:

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா-

(அ) கிராமப் பகுதிகளில் சுகாதாரப் பணிபுரியும் செவிலியர்களுக்கும் துணையாகப் பணிபுரியும் ஆயாக்களுக்கும் ஊதியம் உயர்த்தித்தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

1995 ஏப்ரல் 24]

சட்டம் இருக்கிறதா? அப்படி சட்டம் இருந்தால் அதை என்போர்ஸ் செய்கிறார்களா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது கட்டணம் பற்றிய பிரச்சினை. நீங்கள் சர்வீஸ்குள்ளே போகிறீர்கள். இது படிக்கும்போது இருக்கிற பிரச்சினை. அதனாலே, இதையொட்டிக் கேள்வி கேளுங்கள்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது கட்டணத்தைப் பற்றிய பிரச்சினை. மருத்துவமனையிலே, அரசிலே அவர்கள் வேலைக்குச் சேருகிறபோதுதான், அவர்களுக்கு விதிமுறைகள் விதிக்கப்படுகிறது. ஆனால் அவர்கள் படிப்பதற்காகச் சேருகிறபோது, அந்த விதிமுறைகளை நம்மால் விதிக்க முடியாது. ஆனால், அவர்கள் அரசாங்கத்தில் வேலைக்குச் சேருகிறபோது, கிராமத்திலே, ஆரம்ப சுகாதார நிலையங்களிலே அவர்கள் பணியாற்ற வேண்டும். போஸ்ட் கிராஜுவேட்டாக இருந்தால் 1 ஆண்டு காலமும், டிப்ளமோ-வாக இருந்தால் 2 ஆண்டு காலமும், எம்பிபிஎஸ் ஆக இருந்தால் 3 ஆண்டு காலமும் பணியாற்ற வேண்டும் என்று இருக்கிறது. இப்போது புதிதாக நான்கு கேடரை-ஐ நாம் உருவாக்கியிருக்கிறோம். அந்த நான்கு கேடர்கள், அட்மினிஸ்டிரேசன் கேடர், பிரைமரி ஹெல்த் சென்டர் கேடர், மெடிக்கல் சர்வீஸ் கேடர், மெடிகல் எஜுகேஷன் கேடர். இந்த நான்கு கேடரை உருவாக்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருக்கிறது. இதிலே, மாண்புமிகு உறுப்பினர்கள் என்ன எதிர்பார்க்கிறார்களோ, அத்தனை வழிமுறைகளும் இதிலே செய்யப்பட்டு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 404, திரு. ப. கலியபெருமாள், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

404—

சுகாதாரப் பணியாளர்களுக்கு ஊதியம் உயர்த்துதல்

***35679—**திரு. ப கலியபெருமாள்:

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா-

(அ) கிராமப் பகுதிகளில் சுகாதாரப் பணிபுரியும் செவிலியர்களுக்கும் துணையாகப் பணிபுரியும் ஆயாக்களுக்கும் ஊதியம் உயர்த்தித்தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

[1995 ஏப்ரல் 24

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. ப. கலியபெருமாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் இல்லை என்று சொன்னார்கள். கிராமப் பகுதியில் சுகாதாரப் பணிபுரியும் செவிலியர்களுக்கும், அவர்களுக்குத் துணையாக பணிபுரியும் பணியாளர்களுக்கும் ஊதியம் உயர்த்தித் தர அரசு நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொன்னேன், அப்படிப்பட்ட நடவடிக்கை எடுக்க முடியாது என்று. காரணம், அவர்களுக்குச் சம்பளம் கொடுப்பதை மத்திய அரசாங்கம் ஒரு பகுதி ஏற்றுக் கொண்டிருக்கிறது. எனவே, மத்திய அரசிடம் இது குறித்து கேட்டபோது, அவர்கள் அதற்குமேலே உயர்த்த முடியாது என்று தெரிவித்திருக்கிறார்கள். அதோடு, ஊதியக் குழுவிலும் ஒவ்வொரு முறையும் இதற்கான நடவடிக்கை எடுக்கப்படுகிறது. எனவே, அரசாங்கம் தன்னிச்சையாக இதைச் செய்வதற்கான வாய்ப்பு இல்லை. அங்கேயிருக்கின்ற உதவியாளர்களைப் பொறுத்தவரை, குறிப்பிட்ட நேரத்திலே மட்டும்தான், அவர்கள் பகுதிநேர பணியாளர்களாக பணியாற்றுகிறார்கள். எனவே, அவர்களுக்கு 50 ரூபாய் கொடுக்கப்படுகிறது. அதை 150 ரூபாயாக உயர்த்த வேண்டும் என்று மத்திய அரசாங்கத்திற்கு நாம் எழுதினோம். மத்திய அரசாங்கம் அதை ஒத்துக் கொள்ள முடியாது என்று தெரிவித்திருக்கிறார்கள்.

திரு. ப. கலியபெருமாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு கிராமத்தில் பணிபுரியும் செவிலியர்களுக்கும் அவர்களுக்குத் துணையாக இருக்கின்ற பணியாளர்களுக்கும் இரண்டு, மூன்று ஊராட்சிகள் இணைக்கப்பட்டு அந்த ஊராட்சி மக்களுக்காகப் பணிபுரிகின்ற நிலைமை இருக்கிறது. அவர்கள் அங்கு பணியாற்றுகிறபொழுது, வீட்டு வாடகைக் கொடுத்துவிட்டு பணி செய்கின்ற நிலைமை ஏற்படுகிறது. இந்தச் சூழ்நிலையில் அவர்கள் குடும்பத்திற்கும் பின்னணியிலே பல குடும்பங்கள், குழந்தைகள், பெற்றோர்கள் இவர்களையெல்லாம் பராமரிக்க வேண்டிய நிலை இருக்கிற காரணத்தினால், கருணையுள்ளம் கொண்ட புரட்சித் தலைவியின் ஆட்சியில் பெண்களின் உரிமைக்காகவும், அவர்களின் முன்னேற்றத்திற்காகவும், திட்டங்களைப் போட்டு, செயல்படுத்துகின்ற, இந்தப் புரட்சித் தலைவியின் ஆட்சியில், மத்திய சர்க்கார் அனுமதி தரவில்லை என்றாலும், தமிழக அரசாவது, நமது மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சராவது இதை கருணையோடு

1995 ஏப்ரல் 24]

முயற்சி எடுத்து, அவர்களுக்குக் கருணைக்காட்டி, ஏதாவது ஊதியம் உயர்த்தித் தர ஆவன செய்வாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுகாதார செவிலியர்களைப் பொறுத்தவரை, ஏற்கனவே சம்பளக் கமிஷன் மூலமாக அவ்வப்பொழுது, உயர்வு அவர்களுக்குத் தரப்படுகிறது. இப்போது, நம்முடைய அரசு தன்னிச்சையாக அதிலே எந்த மாற்றத்தையும் செய்வதற்கான வாய்ப்பே இல்லை. காரணம், நான் ஏற்கெனவே சொன்னது போல் 1-4-1981-க்கு முன்னாலே துவக்கிய சுகாதார நிலையங்களைத் தவிர மற்ற அத்தனைக்கும் மத்திய அரசாங்கம்தான் சம்பளமாக பணம் கொடுத்துக் கொண்டு இருக்கிறார்கள். இதிலே நாமாக மாற்றம் செய்ய நிச்சயமாக முடியாது. மத்திய அராசங்கம்தான் அதைச் செய்ய முடியும். ஆனால் அவர்களுக்கு இருக்கின்ற உதவியாளர்களுக்குமே மத்திய அரசாங்கம் தான் இப்போது பணத்தைக் கொடுத்துக் கொண்டு இருக்கிறார்கள். எனவே, இதிலே நமக்கு நடவடிக்கை எடுக்க முடியாது. மத்திய அரசாங்கத்திற்கு வேண்டுமானால் மீண்டும் எழுதலாம். அதோடு, அவர்கள் பணியாற்றுகிற பகுதியிலே மொத்தம் 5 ஆயிரம் மக்கள் தொகைக்கு ஒருவர் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். எனவே, அந்த 5 ஆயிரம் மக்கள் தொகைக்குத்தான் அவர்கள் பணியாற்றுகிறார்கள். பெரும்பாலான இடங்களிலே அவர்கள் தங்குவதற்காக இடமும் கொடுக்கப்பட்டிருக்கிறது. சில இடங்களிலேதான் அவர்கள் வாடகைக்கு இருந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்குக் கட்டிடம் கட்டுவதற்கான நடவடிக்கை எல்லாம் எடுக்கப்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 405 திருமதி டி. சக்குபாய் தேவராஜ், மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்.

405—

திருவள்ளூர்-திருவண்ணாமலைக்குப் பேருந்து இயக்குதல்

***35566—**திருமதி டி. சக்குபாய் தேவராஜ்:

மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவள்ளூரிலிருந்து வேலூர் வழியாகத் திருவண்ணாமலைக்கு இயக்கி நிறுத்தப்பட்ட பட்டுக்கோட்டை அழகிரி போக்கவரத்துக் கழகப் பேருந்தை மீண்டும் இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது முதல் இயக்கப்படும்?

1995 ஏப்ரல் 24]

முயற்சி எடுத்து, அவர்களுக்குக் கருணைக்காட்டி, ஏதாவது ஊதியம் உயர்த்தித் தர ஆவன செய்வாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுகாதார செவிலியர்களைப் பொறுத்தவரை, ஏற்கனவே சம்பளக் கமிஷன் மூலமாக அவ்வப்பொழுது, உயர்வு அவர்களுக்குத் தரப்படுகிறது. இப்போது, நம்முடைய அரசு தன்னிச்சையாக அதிலே எந்த மாற்றத்தையும் செய்வதற்கான வாய்ப்பே இல்லை. காரணம், நான் ஏற்கெனவே சொன்னது போல் 1-4-1981-க்கு முன்னாலே துவக்கிய சுகாதார நிலையங்களைத் தவிர மற்ற அத்தனைக்கும் மத்திய அரசாங்கம்தான் சம்பளமாக பணம் கொடுத்துக் கொண்டு இருக்கிறார்கள். இதிலே நாமாக மாற்றம் செய்ய நிச்சயமாக முடியாது. மத்திய அராசங்கம்தான் அதைச் செய்ய முடியும். ஆனால் அவர்களுக்கு இருக்கின்ற உதவியாளர்களுக்குமே மத்திய அரசாங்கம் தான் இப்போது பணத்தைக் கொடுத்துக் கொண்டு இருக்கிறார்கள். எனவே, இதிலே நமக்கு நடவடிக்கை எடுக்க முடியாது. மத்திய அரசாங்கத்திற்கு வேண்டுமானால் மீண்டும் எழுதலாம். அதோடு, அவர்கள் பணியாற்றுகிற பகுதியிலே மொத்தம் 5 ஆயிரம் மக்கள் தொகைக்கு ஒருவர் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். எனவே, அந்த 5 ஆயிரம் மக்கள் தொகைக்குத்தான் அவர்கள் பணியாற்றுகிறார்கள். பெரும்பாலான இடங்களிலே அவர்கள் தங்குவதற்காக இடமும் கொடுக்கப்பட்டிருக்கிறது. சில இடங்களிலேதான் அவர்கள் வாடகைக்கு இருந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்குக் கட்டிடம் கட்டுவதற்கான நடவடிக்கை எல்லாம் எடுக்கப்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 405 திருமதி டி. சக்குபாய் தேவராஜ், மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்.

405—

திருவள்ளூர்-திருவண்ணாமலைக்குப் பேருந்து இயக்குதல்

***35566**—*திருமதி டி. சக்குபாய் தேவராஜ்:*

மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவள்ளூரிலிருந்து வேலூர் வழியாகத் திருவண்ணாமலைக்கு இயக்கி நிறுத்தப்பட்ட பட்டுக்கோட்டை அழகிரி போக்கவரத்துக் கழகப் பேருந்தை மீண்டும் இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது முதல் இயக்கப்படும்?

[1995 ஏப்ரல் 24

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) வினாவில் கோரியுள்ளவாறு பேருந்தை இயக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

முற்பகல் 10-25

திருமதி டி. சக்குபாய் தேவராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னை வாழவைக்கும் மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி, சமூகநீதி காத்த வீராங்கனை, ராஷ்ட்ரீய பீஷ்மாச்சாரி, தமிழகத்தின் நிரந்த முதல்வர் அவர்களின் பொற்கால ஆட்சியில் இல்லை என்று கூறாமல் மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் திருவள்ளூரிலிருந்து வேலூர் வரையில் போக்குவரத்து வசதி செய்து தர ஆவன செய்வார்களா? அதோடு திருவள்ளூரிலிருந்து சென்னை வரை ஜே.ஜே. பஸ் ஒன்று போகிறது. அதற்கு மாற்றுப் பேருந்து அமைத்துத் தருவார்களா அமைச்சர் அவர்கள் என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலிலே இந்தப் பேருந்தை இயக்குகிறபோது பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகத்தின் சார்பாக திருத்தணியிலிருந்து திருவண்ணாமலை வரையிலும், திருவள்ளூர் வரையிலும், இயக்கப்பட்டது. மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். போக்கு வரத்துக் கழகம் பிரிக்கப்பட்டதற்குப் பிறகு அந்தப்பேருந்துகளை இரு குறிப்பிட்ட வழித்தடங்களில் இயக்கிக் கொண்டிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் திருவள்ளூரிலிருந்து வேலூர் வரையில் ஜே.ஜே.டி.சி. பேருந்து இயக்கப்படுகிறதே, அது கூடுதலாக இயக்கப்படுமா என்று கேட்டார்கள். அதை உடனடியாக அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி டி. சக்குபாய் தேவராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் பொலிவுடனும் வளமுடனும் செயல்படக்கூடிய அமைச்சர். எனவே அவர்களுக்கு நன்றி கூறி ஒரு வார காலத்தில் அந்தப் பேருந்தை விடுவார்களா, அதற்கு ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி போக்குவரத்துக் கழகத்தில் புதிய பேருந்துகளை இயக்க நாம் இப்போது கூண்டு கட்டிக் கொண்டிருக்கிறோம். அந்தப் பேருந்துகளை விரைவாக இயக்குவதற்கு அரசு நடவடிக்கை மேற்கொள்ளும். உறுப்பினர் அவர்கள் சொல்வதுபோல்

1995 ஏப்ரல் 24]

நகரப் பேருந்து என்று சொன்னால் அந்தப் பகுதியில் இருக்கிற ஸ்பேர் பஸ் என்று சொல்லப்படுகிற பேருந்துகளை ஒரு வாரத்தில் இயக்க முடியும். இது நெடுந்தூரமாகச் செல்கிற பேருந்துகளாக இருக்கின்ற காரணத்தால் புதிய பேருந்துகளை இயக்குவதற்கு விரைவில் அரசு நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 406, திரு. கே. செல்வராஜ், மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்.

406—

பம்பாய்க்கு ஜெ.ஜெ. பேருந்து இயக்குதல்

***39300**—திரு கே. செல்வராஜ்:*

மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயமுத்தூரிலிருந்து பம்பாய்க்கு ஜெ.ஜெ. போக்குவரத்துக் கழகப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது முதல் இயக்கப்படும்?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திரு. கே. செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இல்லை என்று சொல்கின்ற முதல் கேள்வி இதுவாகத்தான் இருக்கும் என்று நினைக்கிறேன். கோவையிலிருந்து பம்பாய் வரையில் தனியார் போக்குவரத்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் பெயரிலே இயங்குகிற அந்தப் போக்குவரத்துக் கழகத்தின் மூலம் வெளி மாநிலங்களுக்கு இப்போது பேருந்துகள் இயக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. எனவே அந்தப் போக்குவரத்துக்கழகத்திலிருந்து இவ்வாறு இயக்குகிற வகையில் மீண்டும் பரிசீலனை செய்து பேருந்து இயக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இல்லை என்று சொன்னதற்குக் காரணம் சொல்கிறேன். நம்முடைய மாநிலத்திலிருந்து பக்கத்திலிருக்கும் நான்கைந்து

1995 ஏப்ரல் 24]

நகரப் பேருந்து என்று சொன்னால் அந்தப் பகுதியில் இருக்கிற ஸ்பேர் பஸ் என்று சொல்லப்படுகிற பேருந்துகளை ஒரு வாரத்தில் இயக்க முடியும். இது நெடுந்தூரமாகச் செல்கிற பேருந்துகளாக இருக்கின்ற காரணத்தால் புதிய பேருந்துகளை இயக்குவதற்கு விரைவில் அரசு நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 406, திரு. கே. செல்வராஜ், மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்.

406—

பம்பாய்க்கு ஜெ.ஜெ. பேருந்து இயக்குதல்

***39300**—திரு. கே. செல்வராஜ்:*

மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயமுத்தூரிலிருந்து பம்பாய்க்கு ஜெ.ஜெ. போக்குவரத்துக் கழகப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது முதல் இயக்கப்படும்?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திரு. கே. செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இல்லை என்று சொல்கின்ற முதல் கேள்வி இதுவாகத்தான் இருக்கும் என்று நினைக்கிறேன். கோவையிலிருந்து பம்பாய் வரையில் தனியார் போக்குவரத்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் பெயரிலே இயங்குகிற அந்தப் போக்குவரத்துக் கழகத்தின் மூலம் வெளி மாநிலங்களுக்கு இப்போது பேருந்துகள் இயக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. எனவே அந்தப் போக்குவரத்துக்கழகத்திலிருந்து இவ்வாறு இயக்குகிற வகையில் மீண்டும் பரிசீலனை செய்து பேருந்து இயக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இல்லை என்று சொன்னதற்குக் காரணம் சொல்கிறேன். நம்முடைய மாநிலத்திலிருந்து பக்கத்திலிருக்கும் நான்கைந்து

மாநிலங்களுக்குள்ளே தான் அதாவது இன்டர்ஸ்டேட் அக்ரீமென்ட் என்ற அடிப்படையில் பேருந்துகளை இயக்கிக் கொண்டிருக்கிறோம். அதாவது ஒன்று கர்நாடக மாநிலம்; மற்றொன்று கேரள மாநிலம்; இன்னொன்று ஆந்திர மாநிலம்; அடுத்து பாண்டிச்சேரி. இந்த மாநிலங்களுக்குள்ளாகத் தான் நாம் பேருந்துகளை இயக்கிக் கொண்டிருக்கிறோம். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே கோவையிலிருந்து பம்பாய் வரையிலும் பேருந்து இயக்கவேண்டும் என்று சொன்னார்கள். அந்தத் தடத்தின் நீளம் 1367 கிலோமீட்டர் ஆகும். அப்படி நாம் பேருந்துகளை இயக்கினால் ஏறத்தாழ 20, 25 மணி நேரம் இயக்கவேண்டும். அப்போது அதிலே பயணம் செய்கின்ற பயணிகள் ஓய்வு எடுக்க வாய்ப்பு இல்லை. அதேநேரத்தில் பராமரிப்பு வசதிகளும் அந்தந்தப் பகுதிகளில் இருக்கவேண்டும். இப்படி பராமரிப்புப் பிரச்சினையும் இருக்கின்ற காரணத்தால் அதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை என்று சொன்னேன்.

திரு. கே. செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவையிலிருந்து பம்பாய்க்கு இப்போது தனியார் பேருந்துகள் இயக்கப்படுகின்றன. அவை 24 மணி நேரத்தி பம்பாய்க்குச் சென்று விடுகின்றன. எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மீண்டும் பரிசீலனை செய்து பெங்களூர் வழியாக அவை செல்கிற காரணத்தால் பெங்களூரில் நம்முடைய அரசின் பஸ் டெப்போ இருக்கிற காரணத்தால் அங்கே பராமரிக்க வசதி இருக்கும் என்ற காரணத்தால் மீண்டும் மறுபரிசீலனை செய்து அவ்வாறு பேருந்துகளை இயக்க ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்காலத்தில் இதைப்பற்றிப் பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கே. பி. ராஜு

திரு. கே.பி. ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவையில் இருந்து பம்பாய் பேருந்து இயக்குவதற்கு கிலோமீட்டர் அதிகமாக இருக்கும், எனவே சாத்தியக்கூறுகள் இல்லை என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இரவு நேரங்களில் 24 மணி நேரமும் பயணம் செய்கிற போது பராமரிக்கவும் முடியாது, பயணிகளுக்கும் சிரமம் என்று சொன்னார்கள். எனவே இப்போது வெளிநாடுகளில் இருப்பதைப் போல டிரெய்லர் பஸ் விடலாம். எனவே ஜே. ஜே. பஸ் சர்வீஸ்-லே டிரெய்லர் பேருந்துகளை ஓய்வு எடுக்கும் அறைகளோடு பம்பாய்க்கு விடுவதற்கான சாத்தியக் கூறுகள் உண்டா என்பதைத் தலைவர் அவர்களின் மூலமாக அமைச்சரிடத்திலே இருந்து அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்கள் பயணம் செய்கிறபோது ஓய்வு எடுக்கிற அளவுக்கு

1995 ஏப்ரல் 24]

தரைவழிப் பயணத்தில் நாம் செய்யமுடியாது. மேலும் பல்வேறு வழித்தடங்களில் வளைவான சாலைகள் இருக்கின்றன. அந்தச் சாலைகளில் திடீரென்று எதிர்பாராமல் பிரேக் போட வேண்டி இருக்கும். இதுபோன்ற பல்வேறு இடர்பாடுகள் இருக்கின்ற காரணத்தால், இது போன்ற பேருந்துகளை இயக்குவது சாத்தியமாக இருக்காது. மாண்புமிகு உறுப்பினர் திரு. செல்வராஜ் அவர்கள் பெங்களூர் வழியாக இந்தப் பேருந்தை மீண்டும் இயக்குவதற்கு அரசு பரிசீலனை செய்யுமா என்று கேட்டார்கள். அது எவ்வளவு கிலோமீட்டர் இருக்கிறது என்பதை நாங்கள் பரிசீலித்து குறைந்தது, 12 மணி நேரத்திலாவது பயணிகளைக் கொண்டு செல்வதற்கு வாய்ப்பு இருந்தாலொழிய அதை இயக்க முடியாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10-30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 407—மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்களுடைய வேண்டுகோளுக்கிணங்க, பின்னர் எடுத்துக்கொள்ளப்படும்.

வினா எண் 408, திரு.எம். பூராசாமி, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

408—

கடலாழி ஆற்றின் குறுக்கே பாலம் கட்டுதல்

***15769**—திரு. எம். பூராசாமி:

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பூம்புகார் தொகுதி, செம்பனார்கோவில் ஊராட்சி ஒன்றியத்தில் கடலி கிராமத்தில் கடலாழி ஆற்றின் குறுக்கே புதிய பாலம் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திரு. எம். பூராசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பூம்புகார் தொகுதியில் கடலி கிராமத்தில் கடலாழி ஆற்றின் குறுக்கே புதிய பாலம்

1995 ஏப்ரல் 24]

தரைவழிப் பயணத்தில் நாம் செய்யமுடியாது. மேலும் பல்வேறு வழித்தடங்களில் வளைவான சாலைகள் இருக்கின்றன. அந்தச் சாலைகளில் திடீரென்று எதிர்பாராமல் பிரேக் போட வேண்டி இருக்கும். இதுபோன்ற பல்வேறு இடர்பாடுகள் இருக்கின்ற காரணத்தால், இது போன்ற பேருந்துகளை இயக்குவது சாத்தியமாக இருக்காது. மாண்புமிகு உறுப்பினர் திரு. செல்வராஜ் அவர்கள் பெங்களூர் வழியாக இந்தப் பேருந்தை மீண்டும் இயக்குவதற்கு அரசு பரிசீலனை செய்யுமா என்று கேட்டார்கள். அது எவ்வளவு கிலோமீட்டர் இருக்கிறது என்பதை நாங்கள் பரிசீலித்து குறைந்தது, 12 மணி நேரத்திலாவது பயணிகளைக் கொண்டு செல்வதற்கு வாய்ப்பு இருந்தாலொழிய அதை இயக்க முடியாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10-30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 407—மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்களுடைய வேண்டுகோளுக்கிணங்க, பின்னர் எடுத்துக்கொள்ளப்படும்.

வினா எண் 408, திரு.எம். பூராசாமி, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

408—

கடலாழி ஆற்றின் குறுக்கே பாலம் கட்டுதல்

***15769**—திரு. எம். பூராசாமி:

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பூம்புகார் தொகுதி, செம்பனார்கோவில் ஊராட்சி ஒன்றியத்தில் கடலி கிராமத்தில் கடலாழி ஆற்றின் குறுக்கே புதிய பாலம் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திரு. எம். பூராசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பூம்புகார் தொகுதியில் கடலி கிராமத்தில் கடலாழி ஆற்றின் குறுக்கே புதிய பாலம்

கட்டினால் மயிலாடுதுறை, நாகப்பட்டிணம், சீர்காழி, செம்பனார்கோவில் நல்லாறை வழியாக போக்குவரத்து ஏற்பட்டு, 50 ஆயிரம் மக்கள் பயன்பெறுவார்கள். எனவே, இதை அமைச்சர் அவர்கள் தயவு செய்து கட்டித் தருவதற்கு மீண்டும் பரிசீலனை செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பூம்புகார் பகுதி செம்பனார் கோவில் ஊராட்சி ஒன்றியத்தில் கடலி கிராமத்தில் உள்ள பாலமானது, செம்பனார் கோவில் நல்லாறை சாலையில் கி. மீ. 5/6 இல் கடலாழி ஆற்றின் குறுக்கே உள்ளது. தற்சமயம் இவ்விடத்தில் உள்ள செங்கலால் கட்டப்பட்ட குறுகிய வளைவு கொண்ட பாலம் 50 ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்ட பாலம் ஆகும். மூன்று கண்களுடைய அந்தப் பாலத்தினுடைய மேல்தளம் பழுதடைந்து, இப்போது அதைச் செப்பனிடுவதற்கு உடனடியாக ஏற்பாடுகள் செய்யப்பட்டு அந்தப் பாலம் முழுமையாகச் செப்பனிடப்பட்டிருக்கிறது. வாகனப் போக்குவரத்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. மேற்படி சாலையில் கடலாழி ஆற்றின் குறுக்கே 18 மீட்டர் நீர்வழிப் பகுதி கொண்ட ஒரு உயர்மட்ட இருவழிப் பாதை கொண்ட பாலம் அமைக்க ஏறத்தாழ 36 இலட்சம் ரூபாய் தேவைப்படுகிறது. ஆகவே, இப்போது இருக்கின்ற நிதி நெருக்கடி சூழ்நிலையில் புதிதாகப் பாலம் கட்டிக் கொடுக்கின்ற உத்தேசம் அரசுக்கு இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எம். பூராசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த புயல் மற்றும் வெள்ளத்தால் அந்தப் பாலம் பழுதடைந்து வீணாகி உள்ளது. மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே மனு கொடுத்தேன். அதை ரிப்பேர் செய்து மட்டும் கொடுத்து இருக்கிறார்கள். 50 ஆயிரம் மக்கள் பயன்படுத்துகின்ற அந்தப் பாலத்தைச் செப்பனிட்டால்தான், பொதுமக்களும், விவசாயப் பெருங்குடி மக்களும், மாணவ மணிகளும், அரசு மருத்துவமனைக்குச் செல்வதற்கும், மற்ற இடங்களுக்குச் செல்வதற்கும் சிரமம் இல்லாமல் செல்லக்கூடிய வாய்ப்பு இருக்கும். ஆகவே, தயவு கூர்ந்து புரட்சித் தலைவியின் அரசு எதையுமே பணத்தைப் பார்க்காமல், மக்களின் நலத்தை மட்டுமே பார்க்கின்ற அரசாக இருப்பதால் கருணைக்கூர்ந்து மீண்டும் இதைப் பரிசீலனை செய்து, இந்தப் பாலத்தைக் கட்டிக் கொடுக்க முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ்.கண்ணப்பன்: பேரவைத் தலைவர் அவர்களே, பாலங்களை நாம் செப்பனிடுவதற்கு எடுக்கின்றபோது எவ்வாறு எடுத்துக்கொள்கின்றோம் என்பதை இந்த மாமன்றத்திலே பலமுறை தெரிவித்திருக்கின்றேன். போக்குவரத்து முன்னுரிமையிலேதான் பழுதடைந்த பாலங்களை நாம் புதிதாகக் கட்டிக் கொடுக்கின்றோம். இந்தப் பாலத்தைப்

1995 ஏப்ரல் 24]

பொறுத்தமட்டில் இது பழைய பாலமாக இருந்தாலும்கூட, இப்போது போக்குவரத்து நடைபெற்றுக் கொண்டு இருக்கிறது. இப்போது உடனடியாக அதிலே ஒன்றும் பிரச்சினை கிடையாது. ஆகவேதான், இனி எதிர்வரும் காலங்களில் பரிசீலிக்கலாம் என்ற அடிப்படையிலேதான் தற்போது இத்திட்டம் பரிசீலனையில் இல்லை என்று நான் தெரிவித்தேன். எதிர்வரும் ஆண்டுகளில், இருக்கின்ற நிதி ஆதாரத்தைப் பொறுத்து இத்திட்டத்தைப் பரிசீலிக்கலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. து. மூர்த்தி

திரு. து. மூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாலங்களைப் பொறுத்தவரையில் பொதுவாக செம்பனார் கோவில், சீர்காழி, பூம்புகார் பகுதிகளில் ஆறுகள் அதிகமாக இருப்பதால் அங்கே போக்குவரத்தை இணைக்கக்கூடிய பாலங்கள் அதிகமாக உள்ளன. சில நேரங்களில் குறிப்பாக, மழை, வெள்ளக் காலங்களில் அதிகமாக அவை பாதிக்கப்பட்டு விடுகின்றன. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சீர்காழி, பூம்புகார் பகுதிக்கு கொஞ்சம் முன்னுரிமை கொடுத்து, அந்தப் பகுதிகளில் இது போன்ற பழைய பாலங்கள் செப்பனிடும் வகையில் இருந்தால் அவற்றைப் புதிதாக கட்டுவதற்கு சிறப்பு முன்னுரிமை கொடுத்துச் செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-35

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிக் காலத்திலே தான் காயிதே மில்லத் மாவட்டத்தைப் பொறுத்தமட்டில் அங்கே சாலைகள் எல்லாம் அடிக்கடி பழுது அடைகின்றன என்ற நிலையினைக் கருத்திற் கொண்டு, உடனடியாக ஏறத்தாழ 16 கோடியே 80 லட்சம் ரூபாயை இன்றைக்கு ஒதுக்கி அந்த மாவட்டத்திற்கு மாத்திரம் சிறப்பு நிதி தந்து, அந்தப் பணிகள் எல்லாம் இன்றைக்கு நடைபெற்றுக்கொண்டு இருக்கின்றன. வேறு எந்த மாவட்டத்திற்கும் இல்லாத அளவிற்கு முன்னுரிமை அந்த மாவட்டத்திற்கு கொடுக்கப்பட்டு இருக்கிறது. காரணம் அந்தப் பகுதியிலே அதிகமாக தண்ணீர் கால்வாய்கள் போகின்ற பகுதியாக இருக்கின்ற காரணத்தால், சாலைகள் பாதிக்கப்படுகின்ற நிலையை உணர்ந்ததற்குப் பின்னர்தான் இப்படிப்பட்ட நடவடிக்கைகள். இருந்தாலும் பாலங்கள் பழுதடைகின்றபோது, தமிழ்நாடு முழுவதும் பாலங்களை கட்டும்போது நிதி ஆதாரங்களை அதிகமாக ஒதுக்குவதற்கு வாய்ப்பு இல்லாமல் இருக்கின்ற காரணத்தினாலே தான் இதுபோன்ற சூழ்நிலைகள் ஏற்படுகின்றன. ஆகவே, நான் ஏற்கெனவே தெரிவித்ததைப் போல, எந்தெந்தப் பகுதிகள் மோசமாகப் பாதித்து இருக்கின்றன என்பதைப் பற்றி வேண்டுமானால் ஒரு ஆய்வு செய்து, எவை எவை எந்தக்

காலத்திலே தொழில்நுட்ப ரீதியாகக் கட்டப்பட வேண்டும் என்பதை அதிகாரிகளை வைத்து அந்தப் பகுதியிலே அரசு ஆய்வு செய்யும்; அதற்குப் பிறகு உரிய முடிவுகளை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 409, திருமதி கற்பகம் இளங்கோ, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

409—

காரைக்குடியில் புதிய மின் மாற்றி அமைத்தல்

***20466**—*திருமதி கற்பகம் இளங்கோ:*

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காரைக்குடி கம்பன் மணிமண்டபம் அருகில் மின் அழுத்தம் குறைவாக இருப்பதால், புதிய மின் மாற்றி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

புதிய மின் மாற்றி ஏற்கெனவே அமைக்கப்பட்டு, மின் அழுத்தம் சீரடைந்துள்ளது.

திருமதி கற்பகம் இளங்கோ: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இந்தக் கேள்வியை கடந்த ஒரு வருடத்திற்கு முன்பாகக் கேட்டிருந்தேன். ஆனால், மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் தலைமையின் கீழ் சீரிய முறையில் செயலாற்றி வரும் நமது மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்கள் மின்னல் வேகத்தில் செயல்பட்டு திட்டங்களைத் தீட்டி அதிகாரிகளுக்கு உத்தரவிட்டு-அதிகாரிகளும் தலைமை எப்படியோ அப்படியே நாங்களும்; எள் என்றால் எண்ணெய்யாக இருந்து மக்களது குறைகளை உடனடியாகக் களைந்து வருகிறார்கள் என்பதற்கு உதாரணமாக இருந்து, அனைத்துக் குறைகளையும் அப்பகுதியில் தீர்த்து வைத்தமைக்கு எனது தொகுதி மக்களின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொண்டு, நான் காரைக்குடி மின் துறை கோட்டப் பொறியாளர் அலுவலகத்திற்கு நிலையான கட்டடம் வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் வேண்டுகோள் வைத்தபோது,அதன் முக்கியத்துவத்தைக் கருதி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சுமார் 14 லட்சம் அதற்கு ஒதுக்கீடு செய்து விரைவில் பணி துவங்கி முடிய ஆவன செய்தமைக்கும் எனது தொகுதி மக்களின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, 50 ஆயிரம் மக்கள் தொகைக்கு மேல் அதிகமாகக் கொண்டிருக்கிற நகரமாக, தெற்குப் பகுதியில் இருக்கும் 7 மாவட்டங்களில்

காலத்திலே தொழில்நுட்ப ரீதியாகக் கட்டப்பட வேண்டும் என்பதை அதிகாரிகளை வைத்து அந்தப் பகுதியிலே அரசு ஆய்வு செய்யும்; அதற்குப் பிறகு உரிய முடிவுகளை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 409, திருமதி கற்பகம் இளங்கோ, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

409—

காரைக்குடியில் புதிய மின் மாற்றி அமைத்தல்

***20466**—*திருமதி கற்பகம் இளங்கோ:*

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காரைக்குடி கம்பன் மணிமண்டபம் அருகில் மின் அழுத்தம் குறைவாக இருப்பதால், புதிய மின் மாற்றி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

புதிய மின் மாற்றி ஏற்கெனவே அமைக்கப்பட்டு, மின் அழுத்தம் சீரடைந்துள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 19-4-1995 ஆம் நாளன்று எண்ணிக் கணிக்கும் முறைப்படி இங்கு வாக்கெடுப்பு நடைபெற்றபோது, பேரவையின் நியமன உறுப்பினர் டாக்டர் பிட்ரிக்ஸ் டி' சோசா அவர்களுக்கு வாக்களிக்கும் உரிமை இல்லை என்று அறிவித்திருந்தேன். ஆனால், விதிமுறைகளையும், கடந்தகால நேர்வுகளையும் எடுத்துப் பார்த்தபோது, இங்கு எழுப்பப்படும் பிரச்சினைகளில் அல்லது இங்கு கொண்டுவரப்படும் தீர்மானங்களில் அவருக்கு வாக்களிக்க உரிமை இருந்து வந்துள்ளது. அவைக்கு வெளியே ராஜ்யசபைத் தேர்தல் போன்ற தேர்தல்களில்தான் அவருக்கு வாக்களிக்கிற உரிமை இல்லை என்று தெரிவிக்கப்பட்டு இருக்கிறது. எனவே, அன்றையதினம் அவருக்கு வாக்களிக்க உரிமை இருந்தது. ஆகவே, அன்று அவர் அளித்த வாக்கைச் சேர்த்து, அன்றையதினம் எண்ணிக் கணிக்கும் முறையில், நான் அறிவித்த அந்த அறிவிப்பில் அந்த மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

3. கவன ஈர்ப்பு

(அ) புதுக்கோட்டை மாவட்டம் கீரனூர் அரசு மருத்துவமனையில் குளிர்சாதனப் பெட்டி வசதி செய்தல் குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு. திரு. சி. குழந்தைவேலு அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. சி. குழந்தைவேலு.

திரு. சி. குழந்தைவேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "புதுக்கோட்டை மாவட்டம், கீரனூர் அரசு மருத்துவமனையில் குளிர்சாதனப் பெட்டி வசதி இல்லாததால் நோயாளிகட்கு ஏற்பட்டுள்ள இன்னல் குறித்த" அவசரப் பொதுமுக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

2. அறிவிப்பு

19-4-1995 அன்று நடைபெற்ற எண்ணிக்கணிக்கும் வாக்கெடுப்பில் நியமன உறுப்பினர் டாக்டர் பிட்ரிக்ஸ் டி' சோசா அளித்த வாக்கு சேர்த்துக் கொள்ளப்பெறுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 19-4-1995 ஆம் நாளன்று எண்ணிக் கணிக்கும் முறைப்படி இங்கு வாக்கெடுப்பு நடைபெற்றபோது, பேரவையின் நியமன உறுப்பினர் டாக்டர் பிட்ரிக்ஸ் டி' சோசா அவர்களுக்கு வாக்களிக்கும் உரிமை இல்லை என்று அறிவித்திருந்தேன். ஆனால், விதிமுறைகளையும், கடந்தகால நேர்வுகளையும் எடுத்துப் பார்த்தபோது, இங்கு எழுப்பப்படும் பிரச்சினைகளில் அல்லது இங்கு கொண்டுவரப்படும் தீர்மானங்களில் அவருக்கு வாக்களிக்க உரிமை இருந்து வந்துள்ளது. அவைக்கு வெளியே ராஜ்யசபைத் தேர்தல் போன்ற தேர்தல்களில்தான் அவருக்கு வாக்களிக்கிற உரிமை இல்லை என்று தெரிவிக்கப்பட்டு இருக்கிறது. எனவே, அன்றையதினம் அவருக்கு வாக்களிக்க உரிமை இருந்தது. ஆகவே, அன்று அவர் அளித்த வாக்கைச் சேர்த்து, அன்றையதினம் எண்ணிக் கணிக்கும் முறையில், நான் அறிவித்த அந்த அறிவிப்பில் அந்த மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

3. கவன ஈர்ப்பு

(அ) புதுக்கோட்டை மாவட்டம் கீரனூர் அரசு மருத்துவமனையில் குளிர்சாதனப் பெட்டி வசதி செய்தல் குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத்தும் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு. திரு. சி. குழந்தைவேலு அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. சி. குழந்தைவேலு.

திரு. சி. குழந்தைவேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "புதுக்கோட்டை மாவட்டம், கீரனூர் அரசு மருத்துவமனையில் குளிர்சாதனப் பெட்டி வசதி இல்லாததால் நோயாளிகட்கு ஏற்பட்டுள்ள இன்னல் குறித்த" அவசரப் பொதுமுக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

1995 ஏப்ரல் 24] [திரு. சு. முத்துசாமி]

அறிக்கை

கீரனூர் அரசு மருத்துவமனையில் தற்பொழுது குளிர்சாதனப் பெட்டி வசதி இல்லை. இம்மருத்துவமனைக்கு தேவையான ஒரு குளிர்சாதனப் பெட்டி 1995-96 நிதியாண்டில் வாங்கித் தரப்படும்.

திரு. சி. குழந்தைவேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை, புரட்சித் தலைவி அவர்களுடைய இரும்புக் கோட்டை, எப்போதும் புரட்சித் தலைவியின் பக்கம்தான் புதுக்கோட்டை மாவட்ட மக்கள் இருக்கிறார்கள் என்பதை நிரூபித்து வரும் வகையில், புதுக்கோட்டை மாவட்ட மக்களுக்கு இரண்டு முறை நலத்திட்டங்களை வழங்கிய புரட்சித் தலைவியின் நல்லாட்சியில், எனது குளத்தூர் தொகுதியிலுள்ள கீரனூர் அரசு மருத்துவமனைக்கு, 1995-96 ஆம் நிதி ஆண்டில், குளிர்சாதனப் பெட்டி வாங்கித் தரப்படும் என்று கூறியதற்கு என் சார்பிலும், என் தொகுதி மக்களின் சார்பிலும், மாண்புமிகு இதயதெய்வம், புரட்சித் தலைவி அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் அந்த மருத்துவமனைக்கு எக்ஸ்ரே கருவி ஒன்றை வழங்க அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குளிர்சாதனப் பெட்டியைப் பொறுத்தவரையில் உண்டான கவன ஈர்ப்பு இது. எக்ஸ்ரேயைப் பொறுத்தவரையில், இந்த ஆண்டு புதிதாக 20 மருத்துவமனைகளுக்காக இந்த நிதி ஆண்டில் பணம் ஒதுக்கப்பட்டு இருக்கிறது. ஆனால், இந்த மருத்துவமனைக்கு வருமா என்று என்னால் இப்போது உத்தரவாதமாகச் சொல்ல முடியாது. எனவே, இதைப்பற்றி ஆய்வு செய்யப்படும்.

(ஆ) கள்ளக்குறிச்சி, சங்கராபுரம் பகுதிகளில் இரவில் மின் விநியோகம் தடைப்படுதல் குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்த கவன ஈர்ப்பு. திரு. சி. இராமசுவாமி அவர்கள், அவசரப் பொதுமுக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார், திரு. சி. இராமசுவாமி.

**திரு. சி. இராமசுவாமி:* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “கள்ளக்குறிச்சி, சங்கராபுரம் பகுதிகளில் கடந்த 10 நாட்களாக இரவில் மின் விநியோகம் தடைபட்டு பொது மக்கள் அவதிப்படுவது குறித்த” அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

1995 ஏப்ரல் 24] [திரு. சு. முத்துசாமி]

அறிக்கை

கீரனூர் அரசு மருத்துவமனையில் தற்பொழுது குளிர்சாதனப் பெட்டி வசதி இல்லை. இம்மருத்துவமனைக்கு தேவையான ஒரு குளிர்சாதனப் பெட்டி 1995-96 நிதியாண்டில் வாங்கித் தரப்படும்.

திரு. சி. குழந்தைவேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை, புரட்சித் தலைவி அவர்களுடைய இரும்புக் கோட்டை, எப்போதும் புரட்சித் தலைவியின் பக்கம்தான் புதுக்கோட்டை மாவட்ட மக்கள் இருக்கிறார்கள் என்பதை நிரூபித்து வரும் வகையில், புதுக்கோட்டை மாவட்ட மக்களுக்கு இரண்டு முறை நலத்திட்டங்களை வழங்கிய புரட்சித் தலைவியின் நல்லாட்சியில், எனது குளத்தூர் தொகுதியிலுள்ள கீரனூர் அரசு மருத்துவமனைக்கு, 1995-96 ஆம் நிதி ஆண்டில், குளிர்சாதனப் பெட்டி வாங்கித் தரப்படும் என்று கூறியதற்கு என் சார்பிலும், என் தொகுதி மக்களின் சார்பிலும், மாண்புமிகு இதயதெய்வம், புரட்சித் தலைவி அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் அந்த மருத்துவமனைக்கு எக்ஸ்ரே கருவி ஒன்றை வழங்க அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குளிர்சாதனப் பெட்டியைப் பொறுத்தவரையில் உண்டான கவன ஈர்ப்பு இது. எக்ஸ்ரேயைப் பொறுத்தவரையில், இந்த ஆண்டு புதிதாக 20 மருத்துவமனைகளுக்காக இந்த நிதி ஆண்டில் பணம் ஒதுக்கப்பட்டு இருக்கிறது. ஆனால், இந்த மருத்துவமனைக்கு வருமா என்று என்னால் இப்போது உத்தரவாதமாகச் சொல்ல முடியாது. எனவே, இதைப்பற்றி ஆய்வு செய்யப்படும்.

(ஆ) கள்ளக்குறிச்சி, சங்கராபுரம் பகுதிகளில் இரவில் மின் விநியோகம் தடைப்படுதல் குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்த கவன ஈர்ப்பு. திரு. சி. இராமசுவாமி அவர்கள், அவசரப் பொதுமுக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார், திரு. சி. இராமசுவாமி.

**திரு. சி. இராமசுவாமி:* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கள்ளக்குறிச்சி, சங்கராபுரம் பகுதிகளில் கடந்த 10 நாட்களாக இரவில் மின் விநியோகம் தடைபட்டு பொது மக்கள் அவதிப்படுவது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

[திரு. எஸ். கண்ணப்பன்] [1995 ஏப்ரல் 24

அறிக்கை

கள்ளக்குறிச்சி, சங்கராபுரம் முதலிய பகுதிகளுக்கு சின்னசேலம், தியாகதுர்க்கம், சங்கராபுரம் துணை மின் நிலையங்களிலிருந்து மின் விநியோகம் செய்யப்படுகிறது. மேற்படி துணை மின் நிலையங்கள், நெய்வேலி அனல் மின் நிலையத்திலிருந்து நெய்வேலி-தேவியாக்குறிச்சி மின்னூட்டி I & II மற்றும் விழுப்புரம் துணை மின் நிலையம் மூலம் மின் சப்ளை பெறுகின்றன. கடந்த சில நாட்களாக, நெய்வேலி அனல் மின் நிலையத்தில் உள்ள சில மின்னாக்கிகள் (Generators) பழுதடைந்த தாலும், சில மின்னாக்கிகள் பராமரிப்புக்காக நிறுத்தப்பட்டதாலும் மேற்கூறிய பகுதிகளுக்கு தேவையான மின் பளுவை ஈடுகட்ட முடியாததாலும், சில நாட்களில் மேற்கண்ட இடங்களில் சில மணி நேரங்களுக்கு மின் பளு குறைப்பு செய்வது தவிர்க்க முடியாததாகிவிட்டது. நெய்வேலி அனல் மின் நிலையத்தில் உள்ள மின்னாக்கிகள் கூடிய விரைவில் செயல்படத் துவங்கியவுடன் இப்பகுதிகளில் ஏற்படும் மின் தடை தவிர்க்கப்பட்டு, மின்சாரம் சீராக வழங்கப்படும்.

* திரு. சி. இராமசுவாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெய்வேலியிலுள்ள அனல் மின் நிலையத்தில் உள்ள ஜெனரேட்டர்கள் பழுதடைந்திருப்பதாலும், சில ஜெனரேட்டர்கள் பராமரிப்புக்காக நிறுத்தப்பட்டிருப்பதாலும், மின்சார விநியோகம் தடைப்பட்டுள்ளதாக அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. நான் இந்த கவன ஈர்ப்புத் தீர்மானத்தைக் கொடுக்கும்போது, இரவில் மட்டும்தான் மின்சார விநியோகம் தடைப்பட்டிருந்தது. இப்போது பகலிலும் மின்சார விநியோகம் தடைப்பட்டுள்ளது. மிக மோசமான நிலைமை உள்ளது. சங்கராபுரம், கள்ளக்குறிச்சி போன்ற பகுதிகளிலே மின் விநியோகம் தடைப்பட்டு, மிக மோசமான நிலைமை உள்ளது. எனவே, பழுதடைந்துள்ள ஜெனரேட்டர்களை பழுதுபார்த்தும், பராமரிப்புக்காக நிறுத்தப்பட்ட ஜெனரேட்டர்களை இயக்கியும், அந்தப் பகுதிகளுக்கு - சங்கராபுரம் மற்றும் கள்ளக்குறிச்சி பகுதிகளுக்கு - மின்சார விநியோகம் செய்ய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11-15

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கள்ளக்குறிச்சி, சங்கராபுரம் முதலிய -பகுதிகளுக்கு சின்னசேலம், தியாகதுர்க்கம், சங்கராபுரம் துணை மின்நிலையங்களிலிருந்து மின் விநியோகம் செய்யப்படுகிறது. மேற்படி துணை மின் நிலையங்களுக்கு நெய்வேலி அனல் மின் நிலையத்திலிருந்து மின்சாரம் சப்ளை செய்யப்

1995 ஏப்ரல் 24] [திரு. எஸ். கண்ணப்பன்]

படுகிறது. அங்கே சில யூனிட்டுகள் பழுதடைகின்றபோது சில நேரம் அந்த மின் உற்பத்தி நிறுத்தி வைக்கப்படுகின்றபோது இதுபோன்ற பிரச்சினைகள் ஏற்படுகின்றது. அது தவிர, பராமரிப்பிற்காக சில நேரங்களில் ஜெனரேட்டர்களை நாம் நிறுத்தி வைத்து பழுதுபார்க்கின்ற போதும் சில இடங்களிலே மின்சார தட்டுப்பாடு வருகின்றதே தவிர, இது ஒரு நிரந்தரமான பிரச்சினை அல்ல. நிரந்தரமான தட்டுப்பாடு அல்ல. மெஷினரிகளில் ஏற்படுகின்ற சிற்சில பிரச்சினைகளின் காரணமாக ஒரு 'டைம் பீயிங் அரேஞ்ச்மெண்ட்' என்றுதான் சொல்லவேண்டும். அந்த அளவிற்கு ஒரு குறிப்பிட்ட சில நேரங்களில்தான் இதுபோன்ற நிலை ஏற்படுகின்றது. அது தவிர, இப்போது சிங்கரேணியில் இன்றைக்கு வேலை நிறுத்தம் நடைபெற்றுக்கொண்டிருக்கிற நேரங்களில், இராமகுண்டத்தில் மின் உற்பத்தி பாதிக்கப்படுகின்றபோது 'சதர்ன் கிரிட்' தென் மண்டல மின் கட்டமைப்பிலே நமக்கு மின்சாரம் வருவது குறைகின்றது. இதுபோன்று கல்பாக்கம் அணு மின் நிலையத்திலே ஒரு ஜெனரேட்டர் பராமரிப்பிற்காக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. அப்படிப்பட்ட சில நேரங்களில் பிரச்சினைகள் வருகின்றபோதுதான் அப்படிப்பட்ட நேரங்களில் இம்மாதிரி தடைகள் ஏற்படுகின்றது என்பது தவிர வேறு ஒன்றுமில்லை. ஆகவே வேகமாக பழுதுபார்த்து பராமரிப்புகளை மேற்கொண்டு பணிகளை முடுக்கி விட வேண்டுமென்று சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு நம்முடைய மின்சார வாரியத்தின் மூலமாக ஆணையிடப்பட்டிருக்கிறது. ஆகவே இவைகள் எல்லாம் குறுகிய காலத்தில் சரிசெய்யப்படும். இனிமேல் இந்தப் பிரச்சினை இருக்காது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சி. இராமசுவாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சங்கராபுரம், கள்ளக்குறிச்சி பகுதிகளுக்கு மின்சார விநியோகம் ஈரோடு கிரிட் மூலமாக வருவதாகக் கூறப்படுகிறது. அந்த ஈரோடு கிரிட்டினுடைய மின்சார ஸ்விச்சானது ஆந்திராவிலே இராமகுண்டம் grid-ன் கண்ட்ரோலில் இருக்கிறது. நான்கு மாநில கட்டமைப்பாக இருந்தாலும்கூட, ராமகுண்டத்திலே இருக்கின்ற கிரிட்டின் (grid) மெயின்டனென்ஸ் அண்டு ஆப்பரேஷன் பண்ணுகின்ற அந்த 4 மாநில அதிகாரிகள் அங்கே இருக்கிறார்களா? ஆந்திர மாநிலம் தேவையான மின்சாரத்தை சர்ப்ளசாக எடுத்துக்கொண்டு, மீதியை தமிழகத்திற்கு கொடுக்கின்றார்கள். எனவே நான்கு மாநில கட்டமைப்பு அதிகாரிகள் மெயின்டனென்ஸ் அண்டு ஆப்பரேஷன் இயக்கத்தில் இராமகுண்டத்தில் இருக்கிறார்களா? அவர்கள் இந்த ஈரோடு கிரிட் செய்கின்ற மின்சார சப்ளையை செவ்வனே செய்ய முயற்சிகளைச் செய்கிறார்களா என அமைச்சர் அவர்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

[1995 ஏப்ரல் 24

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் கவன ஈர்ப்பிற்கு அப்பால் போய்க் கொண்டிருக்கிறார். அவர் கவனத்தை ஈர்க்கப்பட வேண்டிய பிரச்சினைகளை விட்டுவிட்டு, பொதுவாக பல பிரச்சினைகளை கேட்டுக் கொண்டிருக்கிறார். இது சம்பந்தமாக தென் மண்டல கட்டமைப்பிலே ஏற்படுகின்ற பிரச்சினைகள் குறித்து, இந்த மன்றத்திலே நான் தெளிவாக பதிலுரை வைத்திருக்கிறேன். நான்கு மாநிலங்களின் மின்சாரத்தை பகிர்மானம் செய்கின்றபோது ஆந்திர மாநிலத்தில் என்னென்ன பிரச்சினைகள் ஏற்பட்டது, அதற்குப் பிறகு நம்முடைய அரசின் சார்பிலே மாண்புமிகு தமிழக முதல்வர், டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் என்ன நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று உத்தரவிட்டார்கள் என்றெல்லாம் விளக்கமாக சொல்லப்பட்டிருக்கிறது. இப்போது அந்த நிலையெல்லாம் சரியாகப் போயிருக்கிறது. சில நேரங்களில் இப்படித்தான் நான்கு மாநிலங்கள் என்று வருகின்றபோது அவர்களுக்கு அதிகமான தட்டுப்பாடு இருக்கிறது. அதனாலே பிரச்சினை ஏற்படுகிறது. அதிகமான மின்சாரத்தை எடுக்கின்றபோது நம்முடைய 'ப்ரீகுவன்சி' குறைந்து நம்முடைய மெஷினரிகள் எல்லாம் செயலிழந்து போகின்றன. ஆகவே இதுசம்பந்தமாக அதிகாரிகளிடத்திலே பேசி 4 மாநில அதிகாரிகள் இருந்து பேசுகிறார்கள். 4 மாநிலத்திலும் அதிகாரிகள் இல்லாவிட்டால் எப்படி செயல்பாடு நடக்கும்? இது கேள்வியே அல்ல. ஆகவே இதுபோன்ற கேள்விகளைக் கேட்பது எந்தவிதத்தில் சரி என்று நான் கேட்கிறேன். ஆகவே அதிகாரிகள் இருக்கிறார்கள். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பொதுவாகவே சரியில்லை தான். கள்ளக்குறிச்சி மின் விநியோகத்தில் தடை ஏற்படுவது பற்றி உறுப்பினர் கேள்வி கேட்டுவிட்டு 4 மாநிலத்திற்கும் போனார் என்றால் என்ன அர்த்தம்?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே அதிகாரிகள் இருக்கின்ற காரணத்தினாலே தான் யார் யார் எவ்வளவு எடுக்கிறார்கள், எப்படி மின்சாரம் அதிகமாக எடுக்கப்படுகிறது என்றெல்லாம் கணக்கிடப்படுகிறது. உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படுகிறது. அந்தந்த மாநிலத்திற்கு உரிய அதிகாரிகள் இருந்துதான் செயல்படுத்துகிறார்கள். ஆகவே அதைக் கொடுக்கின்ற பொறுப்பு, சதர்ன் கிரிட்டிலே அதற்கென்று பொறுப்பான அதிகாரிகள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். மத்திய அரசினுடைய கன்ட்ரோலில் அது இருக்கிறது. ஆகவே ஒவ்வொரு மாநில அரசும் அதைக் கண்காணித்துக் கொண்டிருக்கிறது. ஆகவே இதுபோன்ற நிலைகள் தான் இன்று செயல்பாட்டில் இருக்கிறது. அப்படி பிரச்சினை வரும்போது இந்த

1995 ஏப்ரல் 24] [திரு. எஸ். கண்ணப்பன்]

மெயின்டனென்ஸ் பிரச்சினை வரும்போது சில நேரங்களில் இப்படித்தான் ஏற்படும். மெஷினரிகள் ஓடிக்கொண்டிருக்கின்றன. எந்த நேரத்தில் நிற்கும் என்று சொல்ல முடியாது. திடீரென்று ஒருபழுது ஏற்பட்டுவிட்டால் நின்றுவிடுகிறது. ஆகவே இதை நாம் உடனடியாக பழுதுபார்க்கிறோம். ஆகவே அப்படிப்பட்ட சிற்சில இடர்பாடுகள் வருகின்றபோது - இது நிரந்தரமாக இருந்தால்தான் பிரச்சினை - அது களையப்பட்டு இப்போது நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இனிமேல் அப்பகுதியில் மின்சார விநியோகம் ஒழுங்காக இருக்கும். ஏதாவது குறைகள் இருந்தால் அமைச்சரிடத்திலே மாண்புமிகு உறுப்பினரவர்கள் கோரிக்கைகளாக எழுதித் தரலாம். நான் அதைப் பரிசீலிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

4. அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)

சம்பளங்கள் வழங்கல் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 1995

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசினர் சட்டமுன்வடிவு அறிமுகம் செய்தல், 1995-ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு நிதியமைச்சர்.

முற்பகல் 11-20

***மாண்புமிகு டாக்டர் இரா . நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

" 1995 ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும் "

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்,
ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

1995 ஏப்ரல் 24] [திரு. எஸ். கண்ணப்பன்]

மெயின்டனென்ஸ் பிரச்சினை வரும்போது சில நேரங்களில் இப்படித்தான் ஏற்படும். மெஷினரிகள் ஓடிக்கொண்டிருக்கின்றன. எந்த நேரத்தில் நிற்கும் என்று சொல்ல முடியாது. திடீரென்று ஒருபழுது ஏற்பட்டுவிட்டால் நின்றுவிடுகிறது. ஆகவே இதை நாம் உடனடியாக பழுதுபார்க்கிறோம். ஆகவே அப்படிப்பட்ட சிற்சில இடர்பாடுகள் வருகின்றபோது - இது நிரந்தரமாக இருந்தால்தான் பிரச்சினை - அது களையப்பட்டு இப்போது நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இனிமேல் அப்பகுதியில் மின்சார விநியோகம் ஒழுங்காக இருக்கும். ஏதாவது குறைகள் இருந்தால் அமைச்சரிடத்திலே மாண்புமிகு உறுப்பினரவர்கள் கோரிக்கைகளாக எழுதித் தரலாம். நான் அதைப் பரிசீலிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

4. அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)

சம்பளங்கள் வழங்கல் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 1995

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசினர் சட்டமுன்வடிவு அறிமுகம் செய்தல், 1995-ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு நிதியமைச்சர்.

முற்பகல் 11-20

***மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

“ 1995 ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும் ”

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்,
ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

[1995 ஏப்ரல் 24

5. மானியக் கோரிக்கைகள், 1995-96, விவாதமும் வாக்கொடுப்பும் - தொடர்ச்சி.

(அ) கோரிக்கை எண் 47-ஊரகத் தொழில்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1995-96 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும் வாக்கெடுப்பும் - தொடர்ச்சி. மானிய கோரிக்கை எண் 47-ஊரகத் தொழில்கள், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. துரை ராமசாமி:* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"ஊரகத் தொழில்கள் பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 55,72,14,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெறவேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 2414, திரு. ஆர். சிங்காரம்.

திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சிறு தொழில் தொடங்க வழங்கப்படும் வங்கிக் கடன்களைக் காலதாமதமின்றி வழங்குவது குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரகத் தொழில்கள் பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 55,72,14,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

(ஆ) கோரிக்கை எண் 59- ஊரகத் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 59-ஊரகத் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு, மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. துரை ராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"ஊரகத் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு பற்றிய 59 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 4,53,67,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

1995 ஏப்ரல் 24]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 2315, திரு. ஆர். சிங்காரம்.

திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சேதுபாவாசத்திரம் கடலோரப் பகுதியில் மீன் பதப்படுத்தும் ஆயத்த உணவு தயாரிக்கும் தொழிற்சாலை துவக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரகத் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு பற்றிய 59 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,53,67,000-இல் ரூ.100 குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

மாண்புமிகு திரு. துரை ராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊரகத் தொழில்கள் மற்றும் பட்டுவளர்ச்சி பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு ஆங்கிலத்திலும், தமிழிலும் அச்சடிக்கப்பட்டு பேரவையின் முன் வைக்கப்பட்டுள்ளது. அதிலே தமிழிலே இருக்கிற கொள்கை விளக்கக் குறிப்பினை @ நான் இந்த அவையிலே ஆற்றிய உரையாக கருதி அவைக் குறிப்பிலே பதிவு செய்யக் கோருகிறேன். இத்துறைகளின் மீது மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துரைக்கும் கருத்துக்களுக்கும் நல்ல ஆலோசனைகளுக்கும், இறுதியாக என்னுடைய பதிலுரையில் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு எடுத்துள்ள நடவடிக்கைகளையும் புதிதாக எடுக்கப்பட உள்ள முடிவுகளையும் குறித்து இந்த அவையில் விளக்கம் அளிக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஊரகத் தொழில்கள் குறித்த மானியக் கோரிக்கைகள் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படவிருக்கிற அதே நேரத்தில் அதன் தொடர்புடைய துறைகளான, தொழில்கள் மற்றும் கதர் கிராமத் தொழில்கள் ஆகியவை பற்றிய மானியக் கோரிக்கைகளையும் சேர்த்தே விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளலாம் என அலுவல் ஆய்வுக் குழுவில் எடுத்த முடிவுக்கு இணங்க இந்த மானியக் கோரிக்கைகளையும் பேரவைமுன் வைக்கக் கேட்டுக் கொள்கிறேன்.

@ பக்கங்கள் 237 முதல் 328 வரை இணைப்பு I ஆக அச்சிடப்பெற்றுள்ளது.

(இ) கோரிக்கை எண் 24 - தொழில்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 24, தொழில்கள், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"தொழில்கள் பற்றிய 24-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 21,68,25,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெறவேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானங்கள், வெட்டுத்தீர்மானம் எண் 2375, திரு. ஆர். சிங்காரம்.

திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'பேராவூரணித் தொகுதியில் தேங்காய் மிக அதிகமாகக் கிடைப்பதால் தேங்காய் எண்ணெய் தயாரிக்கும் அரசு தொழிற்சாலை ஒன்று அமைப்பது குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில்கள் பற்றிய 24 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 21,68,25,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்"

(ஈ) கோரிக்கை எண் 53—தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 53, தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு, மாண்புமிகு தொழில் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு பற்றிய 53ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 24,72,19,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெறவேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 2242, திரு. ஆர். சிங்காரம்.

திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சுயவேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் படித்த இளைஞர்களுக்கு தொழில்

சட்டமன்றம் TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

செய்ய வழங்கப்படும் கடன்களை ஒழுங்குபடுத்தி உடனுக்குடன் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு பற்றிய 53ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 24,72,19,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால், கூறலாம்.

முற்பகல் 11-25

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழில்கள், தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு ஆகிய தலைப்புகளில் கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும் ஆங்கிலத்திலும் அச்சிடப்பட்டு அவைமுன் வைக்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழிலே இருக்கின்ற கொள்கை விளக்கக் குறிப்புகளை @ நான் இந்த அவையில் ஆற்றிய உரையாக கருதி அதை இந்த அவைக் குறிப்பிலே பதிவு செய்துகொள்ள வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன். இந்த கொள்கை விளக்கக் குறிப்புகள் மீது மாண்புமிகு உறுப்பினர் பெருமக்கள் எடுத்துக் கூறுகின்ற கருத்துக்களையொட்டி புரட்சித் தலைவி அரசின் சார்பிலே கூற வேண்டிய விளக்கங்களையும் எடுத்துள்ள முடிவுகளையும் இறுதியாக என்னுடைய பதிலுரையில் தெரிவிக்கிறேன் என்பதைச் சொல்லி அமர்கிறேன்.

(உ) கோரிக்கை எண் 26—கதர்-கிராமத் தொழில்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானிய கோரிக்கை எண் 26—கதர்-கிராமத் தொழில்கள், மாண்புமிகு கதர்த்துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. பி. ஈஸ்வரமூர்த்தி:* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"கதர்-கிராமத் தொழில்கள் பற்றிய 26-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 12,63,44,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானங்கள், வெட்டுத் தீர்மானம் எண் 2422, திரு. ஆர். சிங்காரம்.

@ பக்கங்கள் 329 முதல் 342 வரை இணைப்பு II ஆக அச்சிடப்பெற்றுள்ளது.

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"நசிந்து கொண்டிருக்கும் கதர் தொழிலை அபிவிருத்தி செய்ய வேண்டிய அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கதர் -கிராமத் தொழில்கள் பற்றிய 26-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 12,63,44,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு கதர்த்துறை அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

மாண்புமிகு திரு. பி. ஈஸ்வரமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கதர் கிராமத் தொழில் வாரியத்தின் கொள்கை விளக்க குறிப்பேடுகள் பற்றிய குறிப்புகள் தமிழிலும் ஆங்கிலத்திலும் அச்சிடப்பட்டு மாண்புமிகு உறுப்பினர்களுக்கு கொடுக்கப்பட்டுள்ளது. இதில் தமிழில் இருக்கின்ற உரையை @ நான் இந்த அவையில் ஆற்றிய உரையாகக் கருதி அதை பதிவேட்டிலே பதிவு செய்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன். மேலும் மாண்புமிகு உறுப்பினர்களுடைய மேலான ஆலோசனைகள், கருத்துக்களுக்குப் பிறகு அரசின் தரப்பாக கூற வேண்டிய பதிலுரைகளையும், துறையின் வளர்ச்சிக்காக மாண்புமிகு தமிழக முதல்வர் தெய்வத் தாய் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய அறிவுரைகளின்படி பல புதிய அறிவிப்புகளையும் எனது பதிலுரையாக ஆற்றவிருக்கிறேன் என்பதைத் தெரிவித்து அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கைகளும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் வைக்கப்பட்டுள்ளன. ஊரக தொழில்துறை, தொழில்துறை, கதர்த் துறை ஆகிய மூன்று துறைகள் சார்பிலேயும் 3 அமைச்சர்களும் முன்மொழிந்துள்ள மானியக் கோரிக்கைகள் மீதும் அவற்றிற்கு மொழியப் பெற்றுள்ள வெட்டுத் தீர்மானங்கள் மீதும் இப்போது விவாதம் தொடங்குகிறது. மிக இன்றியமையாத துறைகள் என்கிற காரணத்தாலும் நாட்டின் உயர்வுக்கும் வளர்ச்சிக்குமுரிய துறைகள் என்கிற காரணத்தாலும் இதற்கான விவாதத்திற்கு காலை, மாலை இரண்டு வேளைகளும் அலுவல் ஆய்வுக் குழு ஒதுக்கியிருக்கிறது. எனவே உறுப்பினர்கள் தங்களுடைய மேலான கருத்துக்களை, கொடுத்திருக்கின்ற இந்த நல்ல வாய்ப்பில் அவர்கள் பேரவையில் தெரிவிக்க வேண்டும். நீங்கள் தெரிவிக்கிற கருத்துக்கள் இந்த

@ பக்கங்கள் 343 முதல் 424 வரை இணைப்பு III மற்றும் iv ஆக அச்சிடப்பெற்றுள்ளது.

நாட்டின் நன்மைக்கு உரியவையாக இருக்க வேண்டும். அந்த அடிப்படையில் மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய மேலான கருத்துக்களை இங்கே எடுத்து வைக்கலாம். இப்போது விவாதம் தொடங்குகிறது. திரு .சஞ்சய் ராமசாமி.

திரு. சஞ்சய் ராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊரக தொழில் துறை, தொழில் துறை, தொழில் வளர்ச்சி துறை, கதர்த் துறை ஆகிய துறைகளின் மானிய கோரிக்கைகளின் மீதான விவாதத்தில் எனக்கு பேச அளித்த வாய்ப்பிற்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு தமிழக முதல்வர் சமூக நீதிகாத்த வீராங்கனை டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் 1992 ஆம் ஆண்டு புதிய தொழில் கொள்கையை தமிழ்நாட்டிற்கு அர்ப்பணித்தார்கள். இந்த புதிய தொழில் கொள்கையால் தமிழகம் தொழில் வளர்ச்சியில் வேகமாக முன்னேறுகிறது. புதிய தொழில் கொள்கை மூலம் வெளிநாட்டினரும், வெளி மாநிலத்தினரும் தமிழகத்தில் புதிய தொழில்கள் தொடங்குவதில் போட்டி போட்டு முன்வருகிறார்கள். டிட்கோ மூலம் பிற மாநிலங்களைச் சேர்ந்த தொழில் முனைவோர் 18 திட்டங்களை தமிழகத்தில் துவக்கியுள்ளது நமக்கு பெருமையாக இருக்கிறது. இது தமிழக அரசின் புதிய தொழில் கொள்கைக்கு கிடைத்த வெற்றியாகும். மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் ஆற்றலுக்கும் செயல்பாட்டிற்கும் கிடைத்த வெற்றியாகும். தமிழ்நாட்டில் உள்ள தமிழ்நாடு மினரல்ஸ் என்ற நிறுவனம் இன்றைக்கு உலக சந்தையில் கிரானைட் விற்பனையில் போட்டியிட்டு அந்நியச் செலவாணி ஃபாரின் எக்ஸ்சேஞ்ஜை நன்றாக ஈட்டித்தருகின்ற நிறுவனமாக செயல்பட்டு வருகிறது.. இன்றைக்கு கிரானைட் என்ற ஃபீல்டில் காம்படிஷன் அதிகரித்து உள்ளது. இந்த நேரத்தில் தமிழ்நாடு மினரல்ஸ் நன்றாகச் செயல்பட்டு வருகிறது. இன்றைக்கு பல பிரைவேட் நிறுவனங்கள் தன்னுடைய உற்பத்தியை இன்கிரீஸ் செய்வதற்கு தங்களுடைய பிராஃபிட்டை இன்கிரிஸ் செய்வதற்கு பல புதிய கருவிகளை கொண்டு வந்திருக்கிறார்கள். இதை ஒரு எக்ஸ்சாம்பிளாக எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

முற்பகல் 11-30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் இன்று உறுப்பினர்களுக்கு இனிப்பு மற்றும் மதிய உணவிற்கான சில சிற்றுண்டிகள் எல்லாம் வழங்கியிருக்கிறார்கள். எனவே, தெம்பாக உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களைச் சொல்லலாம். (குறுக்கீடு) 1½ மணிக்கு முடித்து விடுவோம்.

மாண்புமிகு திரு. பி. ஈஸ்வரமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கதர் கிராமத் தொழில் வாரியத்தின் மூலம் உடலுக்கு ஊட்டம் தரக்கூடிய பனை சீனியில் தயாரிக்கப்பட்ட குளிர்பானம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதையும் மாண்புமிகு உறுப்பினர்களுக்குக் கொடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதுவும் வழங்கப்பட்டிருக்கிறது. பிறகு மாலையில் வருகிறபோது ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் உங்களை எல்லாம் ரொம்ப சிறப்பாகக் கவனிப்பார். (சிரிப்பு)

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செவிக்கு உணவு இல்லாதபோதுதான் சிறிது வயிற்றுக்கு ஈயப்படுமே தவிர இதை விட்டுவிட்டு எல்லோரும் அங்கே போய் விடாதீர்கள் என்றுதான் குறிப்பிடுகிறேன். (சிரிப்பு)

திரு. சஞ்சய் ராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே தமிழக பட்ஜெட்டே இனிப்பாகத் தான் இருக்கிறது மக்களுக்கு. ஆகவே, இன்றைக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இனிப்புக் கொடுத்திருக்கிறார்கள், அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் இந்த தமிழ்நாடு கிரானைட்டிலுள்ள நிறுவனங்கள் இந்த புது கருவியை அதாவது மேக்கோ-ஜி என்ற கருவியை வாங்கி அதன் மூலம் உற்பத்தியை அதிகரிக்கலாம். ஏன் என்றால் கிரானைட்டை பெரிய பிளாக்குகளாக வெட்டும்போது சிறிய பிளாக்குகள் வேஸ்ட்டாக போகிறது. அதேநேரத்தில் இந்த எக்யூப்மென்ட் மூலமாக இந்த சிறிய பிளாக்குகளை, வேஸ்ட்டாக போகும் சிறிய பிளாக்குகளை டைல்களாக மாற்றி அந்த வீணாகப்போகின்ற இந்த பிளாக்குகளை வேஸ்ட்டு செய்ய விடாமல் நல்ல முறையில் உபயோகப்படுத்தலாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றைக்கு தொழில் துறையைச் சார்ந்த முன்னனி ஏற்றுமதியாளர்களின் 1993-94-ம் ஆண்டில் சுமார் 9 ஆயிரத்து எண்பத்திரெண்டு கோடி என்ற அளவுக்கு ஏற்றுமதி செய்ததன் மூலம் இன்றைக்கு தென் மாநிலங்களில் தமிழகம் முதல் மாநிலமாக திகழ்கிறது. இது தமிழ்நாட்டிற்கு பெருமை ஆகும். இது மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் தொழில் கொள்கையில் புரட்சிகரமான சாதனை செய்துள்ளதை எடுத்துக்காட்டுகிறது. ஆகவே இந்தியாவில் தலைசிறந்த முதலமைச்சராக தமிழக முதலமைச்சர் திகழ்கிறார்.

இந்த நேரத்தில் இன்னும் ஒன்றை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். கிரானைட் என்று சொல்லும்போது இன்றைக்கு அதாவது ஜப்பானில்

கோபேயில் ஏற்பட்ட எர்த்குவேக் காரணமாக அங்கே கிரானைட்டுக்கு பல டிமாண்டுகள் இருக்கின்றன. ஆகவே தமிழ்நாடு மினரலிலிருந்து யாராவது ஒரு ரெப்பரசன்டேட்டிவ் அங்கே இருந்தால் இந்த நேரத்தில் அந்த இடத்தில் இருந்தால் தமிழ்நாடு மினரலுக்கு நல்ல ஆர்டர் கிடைக்கின்ற வாய்ப்பு அங்கே இருக்கிறது. ஆகவே நமது தொழில் துறை அமைச்சர் அவர்கள் தமிழ்நாடு மினரலிலிருந்து யாராவது ஒரு ரெப்பரசன்டேட்டிவை அந்த நாட்டுக்கு அனுப்பி இந்த ஆர்டர்களை எடுப்பதற்கு முயற்சி எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் சிறு தொழில்களை பதிவு செய்வதில் சட்ட ரீதியில் சில பிரச்சினைகள் இருக்கின்றன. அந்தப் பிரச்சினைகளை எல்லாம் இன்றைக்கு மாற்றி சிறு தொழில் வளர்ச்சிக்கு உள்ள அனைத்து தடைகளையும் நீக்கி விட இந்த அரசு நடவடிக்கை எடுத்ததன் மூலம் தமிழகத்தில் சிறு தொழில்கள் பெருகி வருகின்றன. வேலைவாய்ப்பு இன்றைக்கு பெருகி வருகின்றது. பெரிய தொழில்களின் வளர்ச்சியும், சிறு தொழில்களின் வளர்ச்சியும் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் தலைமையில் இயங்குகின்ற புனிதமான ஆட்சியில்தான் பெரிதும் முன்னேறி வருகிறது என்பதை அனைவரும் நன்கு அறிவார்கள்.

படித்த வேலையற்ற இளைஞர்களுக்கு பிரதமரின் ரோஜ்கார் திட்டம் தமிழகத்தில் மாவட்ட தொழில் மையங்கள் மூலம் சிறப்பாக செயல்படுத்தக்கூடிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

மாவட்ட தொழில் மையங்கள் மூலம் கடன் அனுமதி வழங்குவதை இன்றைக்கு நேஷனலைஸ்டு வங்கிகள் மூலமாக செயல்படுத்தப்படுகிறது. ஆனால் இந்த நேஷனலைஸ்டு வங்கிகள் சில டிலேக்களை ஆக்கிக் கொண்டிருக்கிற காரணத்தால் இன்றைக்கு இளைஞர்கள் பாதிக்கப்படுகிறார்கள். ஆகவே, இந்த அரசு தயவுசெய்து இந்த நேஷனலைஸ்டு வங்கிகளுக்கு எடுத்துச் சொல்லி இந்த லோன்களை குறுகிய காலத்தில் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11-35

தமிழ்நாட்டில் குடிசைத் தொழில் மூலமாக கையினால் தயாரிக்கப்படும் தீப்பெட்டிகளின் உற்பத்தி பெருகி வருகிறது. விருதுநகர், சிவகாசி பகுதிகளில் பல்லாயிரக்கணக்கான பெண்கள் இத்தொழிலில் ஈடுபட்டுள்ளார்கள். மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் சீறிய முயற்சியால் சின்னஞ்சிறு தீப்பெட்டித் தொழிற்சாலைகளுக்கு ஆயத்தீர்வை குறைக்கப்பட்டு உள்ளது. இதுபோன்று கையினால் செய்யப்படும்

தீப்பெட்டிகளுக்கு விற்பனை வரியிலிருந்து விலக்கு அளிக்க தாயுள்ளம் கொண்ட தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆவன செய்ய வேண்டுமாய் மிகப் பணிவன்புடன் வேண்டுகிறேன். டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் முதல்வராகப் பதவியேற்ற பின்னர்தான் தமிழ்நாட்டிலுள்ள தொழிற்சாலைகளில் வேலைநிறுத்தங்கள் நடைபெறவில்லை. அமைதிப் பூங்காவாக தமிழகம் இருந்து வருகிறது. எத்தனையோ போராட்டங்களை தொழில் துறையில் தமிழகம் சந்தித்து உள்ளது. ஆனால் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் ஆட்சியில் தொழிற்சாலைகளின் உற்பத்தித் திறனும், தொழிலாளர்களின் அடிப்படை உரிமைகளும், வசதிகளும் பெருகி வருகின்றன என்பதை மனசாட்சி உள்ளவர்கள் அறிந்து பாராட்டுவார்கள். குழப்பவாதிகள் குழம்பிக் கொண்டு ஓடுகிறார்கள். குறுக்குவழி தேடுகிறார்கள். எதையும் தாங்கும் இதயம் கொண்ட முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் தொழில் கொள்கையில் புரட்சி செய்து புதிய அத்தியாயம் படைத்து வருகின்றார்கள். "அச்சம் இல்லை அச்சம் இல்லை அச்சம் என்பது இல்லையே; உச்சிமீது வான் இடிந்து வீழுகின்ற போதிலும் அச்சம் இல்லை அச்சம் இல்லை அச்சம் என்பது இல்லையே" என்ற பாரதியின் பாட்டுக்கு வீரம் கொடுத்து எதற்கும் அஞ்சாமல் நேர்மையோடு செயலாற்றும் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு என்றைக்கும் இந்த தமிழ்நாட்டு மக்கள் உறுதுணையாக இருப்பார்கள்; நாங்களும் என்றைக்கும் உறுதுணையாக இருப்போம் எனக்கூறி, இந்த வாய்ப்பினை அளித்ததற்கு என் நன்றியைத் தெரிவித்து, அமர்கிறேன், வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கே. எஸ். துரைமுருகன்.

திரு. கே. எஸ். துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழில் மானியக் கோரிக்கையின் மீது பேச வாய்ப்பு கொடுத்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் இந்த நிலைக்கு என்னை உருவாக்கிய தமிழகத்தினுடைய மாண்புமிகு முதல்வர், தங்கத் தலைவி இதயத் தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கும் நன்றி தெரிவித்து இந்தக் கோரிக்கையின்மீது சில கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

இன்றைக்கு இந்தியாவிலேயே மின்தடை இல்லாத ஒரு மாநிலம் Uninterrupted power supply, three-phase industrial power supply என்று சொல்லக்கூடிய, தொழில்களுக்கு ஆதாரமாக இருக்கக்கூடிய மும்முனை மின்சாரம் இன்றைக்குத் தங்குதடையின்றி கிடைக்கக்கூடிய ஒரு மாநிலமாகவும், தொழில் முனைவோருக்கு அரசின் ஆதரவும், ஊக்கமும்

கொடுக்கக்கூடிய ஒரு மாநிலமாகவும், மதக்கலவரங்கள் இல்லாத அமைதிப் பூங்காவாக இருக்கக்கூடிய ஒரு மாநிலமாகவும், கொடிய தொற்றுநோய்கள் பரவாமல், தொழில் வளர்ச்சி பாதிப்பு அடையாமல் இருக்கக்கூடிய ஒரு மாநிலமாகவும், கடந்த 3 ஆண்டுக் காலத்திலே தொழிலாளர்களுடைய போராட்டம் இல்லாத ஒரு அமைதியான மாநிலமாகவும், அகில இந்திய அளவிலே அதிகமான தொழில் வல்லுநர்களை உருவாக்குகின்ற ஒரு மாநிலமாகவும், தரமான மூலப் பொருள்கள் தொழில் துறைகளுக்கு கிடைப்பதற்கு ஏற்பாடு செய்கின்ற ஒரு அரசாங்கம் இருக்கிற மாநிலமாகவும், கடும் சோதனைகளையும் சாதனைகளாக மாற்றி நிலையான ஆட்சியை, Stable Government என்று சொல்லக்கூடிய நிலையான ஆட்சியைத் தரக்கூடிய மாநிலமாகவும், கடன்களை விரைவிலே வழங்குகின்ற quick disbursement of loans அரசாங்கம் உள்ள ஒரு மாநிலமாகவும், இந்தியாவிற்கு வருகை தருகின்ற வெளிநாட்டுத் தூதுவர்களும், வெளிநாட்டு அமைச்சர்களும், உலக வங்கியின் தலைமை நிர்வாகிகளும், பன்னாட்டு நிதி நிறுவனங்களுடைய தலைவர்களும், தேடி, நாடி வருகின்ற ஒரு முதலமைச்சர் உள்ள ஒரு மாநிலமாகவும், அந்நிய முதலீட்டை பெருமளவிலே பெற்று, மிகப் பெரிய பிரம்மாண்டமான தொழில்களை உருவாக்குகின்ற ஒரு மாநிலமாகவும், இந்தியத் தொழிற்சாலைகளின் கூட்டமைப்பு என்று சொல்லக்கூடிய Confederation of Indian Industries என்கிற, அகில இந்திய அளவில் உள்ள மிகப்பெரிய அமைப்பால் தொழில் அமைதி உள்ள ஒரு மாநிலம் என்று பாராட்டப்பட்ட சிறப்பைப் பெற்றதும், இத்தனை சிறப்புகளையும், பெருமைகளையும் ஒருங்கே அமையப்பெற்ற ஒரு மாநிலம் இந்தியாவிலே உண்டு என்றால் அது நமது தங்கத் தலைவி புரட்சித் தலைவி ஆளுகின்ற தமிழ்நாடுதான் என்பதை இந்த நேரத்திலே குறிப்பிட்டுக் காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

TRUTH ALONE TRIUMPHS

முற்பகல் 11-40

இன்றைக்கு நம்முடைய தமிழகத்திலேயிருந்தும், பக்கத்து மாநிலங்களிலேயிருந்தும் சென்று வெளிநாடுகளிலே நல்ல நிலைமையிலே வசதியோடு வாழக்கூடிய வெளிநாட்டு இந்தியர்கள் பலபேர் அகில உலக அளவில் இன்றைக்கு இருக்கிறார்கள். அவர்களெல்லாம் இன்றைக்கு இந்தியாவிலே, தமிழகத்திலே தொழில் துவங்க விரும்புகிறார்கள். ஆக, இந்தச் சூழ்நிலையைக் கருத்திற்கொண்டு, தமிழகத்தினுடைய தொழில் துறை 13-வது இடத்திலேயிருந்து இன்றைக்கு தமிழகத்தினுடைய முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் பொறுப்பேற்ற பிறகு 3-வது இடத்திற்கு இன்றைக்கு தொழில் துறையை முன்னேற்றியிருக்கக்கூடிய தங்கத்தலைவி, தொலைநோக்குப் பார்வை கொண்ட நம்முடைய

புரட்சித்தலைவி அவர்கள் வெளிநாட்டு இந்தியர்களுக்காகத் தனியாக ஒரு தொழிற்பேட்டையைத் தமிழகத்திலே அமைக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன். An exclusive Industrial Estate for N.R.Is. என்ற அளவிலே அது உருவாக்கப்பட வேண்டும். அப்படி உருவாக்கப்படுகின்ற அந்தப் பிரத்தியேகமான என்.ஆர்.ஐ. தொழிற்பேட்டைக்கு உரிமம் வழங்குவது Granting of Licence அதேநேரத்திலே கடன் வசதி வழங்குவது Loan facilities தொழில் தொடங்க ஆயத்த நிலைமைகளை உருவாக்கிக் கொடுப்பது போன்றவற்றையெல்லாம் Green Channel System என்று சொல்லக்கூடிய வகையிலே உடனுக்குடன் within the stipulated period என்று சொல்லக்கூடிய குறிப்பிட்ட காலக் கெடுவிற்குள் முடித்துக்கொடுக்கின்ற வகையிலே Green Channel System முறையிலே இந்தத் தொழிற்பேட்டையை அமைக்கும் பட்சத்திலே இன்றைக்கு 3-வது இடத்திலே இருக்கக்கூடிய தமிழகத் தொழில் துறை புரட்சித்தலைவியினுடைய அறிவால், ஆற்றலால், கூர்ந்த மதியால் இந்தியாவிலே முதல் இடத்தைத் தமிழகம் பெறக்கூடிய வாய்ப்பிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அப்படி உருவாக்கப்படுகின்ற இந்த தொழிற்பேட்டைக்கு "டாக்டர் புரட்சித் தலைவி என்.ஆர்.ஐ. இண்டஸ்ட்டிரியல் எஸ்டேட்" என்ற பெயர் வைத்தால் அது மிகவும் சாலப்பொருத்தமாக இருக்கும் என்று இந்த நேரத்திலே இந்த மாண்புமிகு அவையிலே தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றைக்கு இந்தியாவிலே நிதி நிறுவனங்களிலெல்லாம் கட்டுப்பாடு செலுத்துகின்ற அமைப்பு ரிசர்வ் பேங்க் ஆஃப் இந்தியா—இந்தியாவினுடைய ரிசர்வ் வங்கி. அது மத்திய அரசினுடைய கட்டுப்பாட்டின் கீழ் இருக்கக்கூடிய ஒரு அமைப்பு. இன்றைக்கு வெளிநாடுகளில் இருந்து வாங்கக்கூடிய - தொழில்களுக்கு வாங்கக்கூடிய கடன்களுக்கு அவர்கள் கேட்கின்ற வட்டி விகிதம் 3 சதவீதமாக உள்ளது. நாம் இந்திய நாட்டுக்கு வெளிநாடுகளிலேயிருந்தும், சர்வதேச நிதி நிறுவனங்களிடமிருந்தும் கடன்களை வாங்குகிறோம். அதிகபட்சமாக 7 சதவீதத்திற்கு மேல் வட்டியே இல்லை. ஆனால் இன்றைக்கு மத்திய அரசும், மத்திய அரசின் கட்டுப்பாட்டிலே உள்ள ரிசர்வ் பேங்க் ஆஃப் இந்தியாவும் தொழில்களுக்குக் குறைந்தபட்ச வட்டி அளவு 14 சதவீதத்திற்குக் கீழே போகக் கூடாது என்கிற உத்தரவை இன்றைக்கு வழங்கியிருக்கிறது.

அதுமட்டுமின்றி, கடந்த சில ஆண்டுகளிலே இந்தியாவினுடைய ரிசர்வ் வங்கி தொழில்களுக்குக் கொடுக்கின்ற கடன்களை முதலிலே 15.5

சதவீதம் என்று இருந்தது. அதை உயர்த்தி 16.5 சதவீதமாக்கியது. அதன்பிறகு 16.5 சதவீதத்திலேயிருந்து இன்றைக்கு 17.5 சதவீதம் ஆக்கியது. கடந்த சில தினங்களுக்கு முன்பாக மேலும் உயர்த்தப்பட்டு இன்றைக்கு 18.5 சதவீதம் வட்டியாக இன்றைக்குத் தொழில் துறைக்கு அது உயர்த்தி உள்ளது. இப்படி சமீபத்திலே மத்திய அரசு தேசீய வங்கிகளுக்கும், தனியார் வங்கிகளுக்கும், வெளிநாட்டு வங்கிகளுக்கும் தொழில்களுக்கான வட்டி விகிதத்தை அந்தந்த வங்கிகளே முடிவெடுத்துக் கொள்ளலாம் என்ற ஒரு யதேச்சாதிகாரத்தையும் இன்றைக்கு மத்திய அரசு நிதி நிறுவனங்களுக்கு வழங்கியிருக்கிறது. இது தொழில் துறையை மிகவும் பாதிக்ககூடிய ஒரு சூழ்நிலையாகும். அதுமட்டுமல்லாமல், ரிசர்வ் வங்கி வட்டி விகிதத்தை உயர்த்திக் கொண்டு போகின்றபோது தொழில் முனைவோர்களெல்லாம், குறிப்பாகச் சிறுதொழில் அதிபர்களெல்லாம் பெருமளவிலே பாதிக்கப்படுகின்ற ஒரு சூழ்நிலை இருக்கிறது. மத்திய அரசு இதைக் கண்டு கொள்ளாமல் இந்த நிலை உருவாவதற்கு அது அடிப்படைக் காரணமாக இருக்கிறது. மேலும் இந்த வங்கிகளெல்லாம் வட்டி விகிதத்தை நிர்ணயிக்கின்றபொழுது போட்டியைக் கணக்கில் கொண்டும், வங்கிகளில் இருக்கக்கூடிய இருப்புத் தொகையைக் கணக்கில் கொண்டும் வட்டி விகிதத்தை முடிவு செய்து கொள்ளலாம் என்று மத்திய அரசு அறிவித்துள்ளது. இது மிகவும் தவறான போக்கு. இன்றைக்குத் தேசிய வங்கிகள் வட்டி விகிதத்தை ஏற்றிக்கொண்டு போகிறார்கள். அதுவும் ஆறு மாதத்திற்கு ஒரு முறை உயர்த்துகின்றபொழுது சிறுதொழில் அதிபர்கள் கடுமையான முறையிலே பரிதாப நிலைக்கு உள்ளாகிறார்கள். இன்றைக்குத் தொழில் வளர்ச்சியினுடைய விகிதத்தைவிட வட்டி விகிதம் அதிகமாகிக் கொண்டிருக்கிறது, இந்தியாவினுடைய, மத்திய அரசினுடைய கொள்கையின் காரணமாக. இதனால் ஒரு உறுதியற்ற, நிலையற்ற தன்மை இன்றைக்கு இந்தியாவிலே உருவாக்குவதற்கு மத்திய அரசு காரணமாக இருக்கிறது. An element of uncertainty is prevailing in India என்று சொல்லக்கூடிய அளவிலே இன்றைக்கு நிலைமை போய்க்கொண்டிருக்கிறது.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

முற்பகல் 11-45

ஆனால், அதே நேரத்திலே சிறிய தனியார் வங்கிகளுடைய வட்டி விகிதம் இன்றைக்கு ஆச்சரியப்படத்தக்க வகையிலே குறைந்து கொண்டு வருகிறது. இதிலிருந்து மத்திய அரசு தொழில் வளர்ச்சியிலே போதுமான கவனத்தைச் செலுத்தவில்லை என்பதையும் கடமையிலிருந்து தவறுகிறது என்பதையும் இது மிகத் தெளிவாகக் காட்டுகிறது. மத்திய அரசு, பெரும் தொழில் அதிபர்களுக்கும், பெரிய பணக்காரர்களுக்கும், பெரிய தேசிய

வங்கிகளுக்கும், கொழுத்த லாபம் வருவதற்கு வழிவகைகளை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது. இதைப் பார்க்கும்போதுதான் ஜாமின் தொகை இழக்கும் ஜமின்தார் கட்சி இன்னும் அந்தத் தவறான தொழிற் கொள்கையிலிருந்து மாறுபடவில்லை என்பதைக் காட்டுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இன்றளவும் ஜமின்தார்களின் மானப்பான்மையை, பணக்காரர்களுக்கு ஆதரவான மனப்பான்மையை மத்திய அரசு மாற்றவில்லை என்பது வேதனைக்குரிய விஷயமாக இருக்கிறது. ஆனால் இன்றைக்கு ஏழை எளிய மக்களின் இதயதெய்வமாக தங்கத் தலைவியாக இருக்கக்கூடிய தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், தொழில் முனைவர்களுக்கு, புதிய புரட்சிகரமான தொழில் கொள்கைகளை அறிவித்து, இன்றைக்கு தமிழகத்தை தொழிற் துறையிலே முன்னேற்றிக் கொண்டு வருகிறார்கள். ஆகவே, தாயுள்ளத்தின் தலைவியாக இருக்கூடிய புரட்சித் தலைவி அவர்கள் இந்த நிலையை மாற்றுவதற்காக நீங்கள் எடுக்கின்ற முயற்சி எதிலும் தோல்வியுற்றதில்லை. ஆகவே, இந்தச் சூழ்நிலையிலே மத்திய அரசையும், இந்திய ரிசர்வ் வங்கியையும் தொழில் வளர்ச்சிக்கு உதவுகின்ற ஐ.டி.பி.ஐ. என்று சொல்லுகின்ற நிதிநிறுவனம் Industrial Development Bank of India, அதேபோல Small Industries Development Bank of India நிதிநிறுவனத்துக்கும் வட்டி விகிதத்தை குறைத்து இன்றைக்கு இந்தியாவிலேயே எந்த முதலமைச்சரும் எடுக்காத நடவடிக்கையை இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் எடுத்து, வட்டி விகிதத்தைக் குறைப்பதற்கு தாங்கள் முயற்சி எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே புரட்சி தலைவி அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

மிகப் பெரிய தொழில் மாநிலமாக உருவாவதற்கு மின்சாரம் அடிப்படைத் தேவையாக இருக்கிறது. இன்றைக்கு இந்தியாவிலேயே குறிப்பாக தமிழகத்தில்தான் மின்சாரம் தட்டுப்பாடு இல்லாத அளவிற்கு நம்முடைய தேவையைக் காட்டிலும் அதிகமான அளவிற்கு மின்சார உற்பத்தி செய்கிற ஒரு மாநிலமாக தமிழகம் இருந்து கொண்டிருக்கிறது. தமிழகத்திலே அணு மின் நிலையம் இருக்கிறது. அதேபோல, இன்றைக்கு அனல் மின் நிலையம், புனல் மின் நிலையம், கடல் அலைகளிலிருந்து மின்சாரம் எடுக்கக்கூடிய முறை, காற்றிலிருந்து மின்சாரம் எடுக்கக்கூடிய முறை, பயோ எனர்ஜி என்று சொல்லக்கூடிய விவசாய விலைபொருள்களுடைய வீண் கழிவுகளிலிருந்து மின்சாரம் எடுக்கக்கூடிய முறை, சூரிய ஒளியிலிருந்து மின்சாரம் எடுக்கக்கூடிய முறை, இப்படி எத்தனையோ முறைகளை இன்றைக்கு கடைபிடிக்கின்றது. இன்றைக்கு கல்பாக்கத்திலே அணு மின் நிலையமும், வடசென்னையிலே தெர்மல் பவர் ஸ்டேசனும், நெய்வேலி லிக்னைட் பவர் ஸ்டேசனும், தூத்துக்குடியில்

1995 ஏப்ரல் 24] [திரு. கே.எஸ். துரைமுருகன்]

தெர்மல் பவர் ஸ்டேசனும், மேட்டூரில் தெர்மல் பவர் ஸ்டேசனும், அதேபோல தமிழகத்தில் இருக்கக்கூடிய பெரிய அணைகளிலிருந்து ஹைடிரோ எனர்ஜி என்று சொல்லக்கூடிய புனல் மின்சாரம் இன்றைக்கு தமிழகத்திலே உற்பத்தி செய்து இன்றைக்கு மட்டுமல்லாமல், 20 ஆண்டுகாலம் தொலைநோக்குப் பார்வையோடு புரட்சித் தலைவி அவர்கள் மின்சார உற்பத்தியில் உபரி மாநிலமாக உருவாக்குகின்ற வகையிலே உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் இன்றைக்கு, தென்னிந்தியாவினுடைய ஆந்திரம், தமிழ்நாடு, கேரளம், கர்நாடகா, பாண்டிச்சேரி இந்த மாநிலங்களுடைய மின் இணைப்பு எல்லாம் ஒருங்காக இணைக்கப்பட்டு நேஷனல் கிரிட் என்று சொல்லக்கூடிய அமைப்பின் கீழே வைத்திருக்கிறார்கள். ஆந்திராவிலும், கர்நாடகாவிலும், கேரளாவிலும் மின்சாரப் பற்றாக்குறை கடுமையாக இருக்கிறது. அதனால் தமிழகத்திற்கு வரவேண்டிய மின்சாரத்தை, நம்முடைய மாநிலத்தில் உற்பத்தி ஆகின்ற மின்சாரத்தை அவர்கள் எடுத்துக்கொள்கின்ற காரணத்தினால், அடிக்கடி இங்கே தமிழகத்திலே மின்சாரத் தட்டுப்பாடு உருவாகின்ற சூழ்நிலையை உருவாக்கியிருக்கிறார்கள். இதனாலே தமிழகத்திலே மின்சாரத்தை உற்பத்தி செய்தாலும்கூட, இன்றைக்கு தமிழக மின்சார வாரியத்தை திறமையாக நிர்வாகம் செய்தாலும்கூட, நம்முடைய தமிழகத்திலே மின்சாரத் தட்டுப்பாடு உருவாவது போன்ற ஒரு நிலை, இந்த நேஷனல் கிரிட் என்ற அமைப்பின் மூலம் நமக்கு பாதகமான ஒரு நிலையிருக்கிறது. ஆகவே, இந்த நிலை தொடர்ந்தால், நம்முடைய தமிழகத்தை, நேஷனல் கிரிட் என்று சொல்லக்கூடிய தேசிய மின் அமைப்பிலிருந்து பிரித்து தமிழகத்திற்கு என்று பிரத்தியேகமான முறையிலே இந்த அமைப்பை உருவாக்கினால் தமிழகத்தினுடைய தேவையைப் பூர்த்தி செய்துவிட்டு, நாம் பக்கத்து மாநிலங்களுக்குக்கூட மின்சாரத்தைக் கொடுக்கக்கூடிய நிலையில் நாம் இருக்கிறோம். ஆகவே, புரட்சித் தலைவியினுடைய மாநிலம் இன்றைக்கு உபரி மின்சாரம் உற்பத்தி செய்கின்ற மாநிலமாக விளங்கிக் கொண்டிருக்கிறது என்பதை இந்த நேரத்தில் சொல்லிக் காட்ட விரும்புகிறேன். இன்றைக்கு நம்முடைய மாநிலத்திலே அணு மின்சாரம், அனல் மின்சாரம், புனல் மின்சாரம், கடல் அலை மின்சாரம், காற்றாலை மின்சாரம், பயோ எனர்ஜி என்று சொல்லக்கூடிய மின்சாரம், சோலார் என்று சொல்லக்கூடிய சூரிய ஒளியிலிருந்து இப்படி 5 பூதங்களிலிருந்து மின்சாரத்தை உற்பத்தி செய்வதோடு மட்டுமல்லாமல், 6-வது, 7-வது பூதங்களிலிருந்துகூட இன்றைக்கு மின்சாரத்தை உற்பத்தி செய்கின்ற, இந்த ஐந்து புலன்களையும் ஆட்டிப்படைகின்ற ஒரு தமிழகத்தினுடைய தலைவி புரட்சித் தலைவி இருக்கிறார்கள். 6-வது, 7-வது பூதங்களையும்கூட இன்றைக்கு ஆட்டிப் படைக்கின்ற தமிழகத்தினுடைய புரட்சித் தலைவியைப் பார்த்து இன்றைக்கு

ஒற்றை ஓட்டுப் பேர்வழிகள், தரம் கெட்ட அரசியல்** பயந்து ஓடுகின்ற பயந்தாங்கொள்ளிகள், புல்தடுக்கி பயில்வான்கள்....

முற்பகல் 11-50

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இந்த ** என்பது வேண்டாம். அந்த வார்த்தை அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

திரு. கே. எஸ். துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, சில ஆசாமிகள் எல்லாம் இன்றைக்கு புரட்சித் தலைவி அவர்களை எதிர்த்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களெல்லாம் வெறும் சுண்டைக்காய்கள். அந்த பயந்தாங்கொள்ளிகளுக்கு ஆதரவு தெரிவித்து ஆட்சிக்கட்டிலைப் பிடிக்கவேண்டுமென்ற சில குருட்டு மனிதர்களுடைய நாற்காலிக் கனவு தவிடுபொடியாகிவிடும் என்று இந்த நேரத்தில் நான் குறிப்பிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

இந்திய நாடு எழுபது சதவிகிதம் விவசாயிகளைக் கொண்ட நாடு, மக்கள் விவசாயத்தையே நம்பி இருக்கிறார்கள். ஆனால், இன்றைக்கு இந்தியாவிலே அனைத்து வளங்களும் இருந்தும்கூட, நீர்வளம், நிலவளம், கனிமவளம் ஆகியவை இருந்தும்கூட, விவசாயிகளுடைய பொருளாதார நிலை இந்திய அளவிலே உயராத சூழ்நிலை இருந்து கொண்டிருக்கிறது. இதைக் கருத்தில்கொண்டுதான் மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், விவசாய விளைபொருள்களுக்கு நல்ல சந்தை விலையும், இவைகளெல்லாம் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யக்கூடிய நல்ல வாய்ப்பும், கோடிக்கணக்கிலே அந்நிய செலாவணியை ஈட்டவேண்டுமென்பதற்காகவும் தொலைநோக்குப் பார்வையோடு தமிழகத்தினுடைய முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் திண்டுக்கல்-அண்ணா மாவட்டத்தில் வத்தலகுண்டு பகுதியிலே ``Agro Industrial Estate'' என்று சொல்லக்கூடிய வேளாண் பொருள்களுடைய தொழிற்பேட்டையை உருவாக்கியிருக்கிறார்கள். அதுபோல ஒவ்வொரு மாவட்ட அளவிலே விவசாய விளைபொருள்களுடைய தொழிற்பேட்டை உருவாக்கப் பட்டால், விவசாயிகளுக்கு அவர்களுடைய விளைபொருள்களுக்கான நல்ல விலையும் கிடைக்கும், அந்நியச் செலாவணியை ஈட்டுகின்ற வகையிலே நம்முடைய விவசாய விளைபொருள்களையெல்லாம் ஏற்றுமதி செய்யக்கூடிய நல்ல வாய்ப்பும் கிடைக்கும். அப்படி உருவாக்கப்படுகின்ற ``Agro Industrial Estate in each District'' என்ற முறையிலே அந்த விவசாய தொழிற்பேட்டைகளிலே

** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

விவசாய விளைபொருள்களெல்லாம் ``the product of perishable nature" என்று சொல்லக்கூடிய அழுகி போகக்கூடிய பொருளாக இருக்கின்றன. தக்காளி, மிளகாய், கத்திரி, மஞ்சள், திராட்சை, கொத்துமல்லி போன்ற பொருள்களெல்லாம் சில தினங்களுக்குப் பின் வைத்திருந்தால் அழுகக்கூடிய நிலை இருக்கின்றது. ஆகவே, இவற்றையெல்லாம் விவசாயிகள் எந்த விலைக்கு வந்தாலும் விற்றாக வேண்டிய நிலை இருக்கிறது. இல்லாவிட்டால் வீணாகப் போய்விடும் நிலை இருக்கின்றது. இவற்றையெல்லாம் பாதுகாத்து குளிர்சாதன கிடங்கிலே வைத்து, உலர்த்தி ப்ராஸஸ் செய்கின்ற வகையிலே இவற்றை பதனப்படுத்தி வெளிநாடுகளுக்கு அனுப்பி வைத்தால் விவசாயிகளுக்கு அவர்களுடைய விளைபொருள்களுக்கு நல்ல விலை நிர்ணயம் கிடைக்கின்ற வாய்ப்பு இருக்கின்றது. ஆக, ஒவ்வொரு மாவட்டத்திலும் விவசாயத் தொழிற்பேட்டை அமைக்கவேண்டுமென்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு நம்முடைய மாவட்டங்களில் தொழில் வளர்ச்சி ஏற்படுவதற்கு ``District Industries Centre" என்று ஒன்று இருக்கின்றது. இந்த நேரத்தில் நான் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். ஒவ்வொரு மாவட்டத்திலும் தொழில்வளர்ச்சிக் குழு என்று ஒன்று உருவாக்கவேண்டும். ``District Industrial Development Committee in each District" என்ற முறையிலே ஒவ்வொரு மாவட்டத்திலும் தொழில் வளர்ச்சிக் குழு உருவாக்கி அதில் it consists of members of successful entrepreneurs, local M.L.As., M.Ps. என்று அந்த அளவிலே உருவாக்குகிறபோது, அந்த மாவட்டங்களில் தொழில் வளர்ச்சி விரைவாக ஏற்படுவதற்கு ஒரு வாய்ப்பாக இருக்கும். மேலும், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் தொழில் வளர்ச்சியில் போதிய அளவு கவனம் செலுத்த முடியாத சூழ்நிலை இருக்கிறது. மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திலே விவசாயத்தைக் கவனிப்பதற்கு P.A. to Collector (Agriculture), P.A. to Collector (Noon-Meal Scheme), P.A. to Collector (Panchayat Development), P.A. to Collector (Town Panchayat), P.A. to Collector (Small Savings) என்றெல்லாம் இருக்கிறது. ஆனால் தொழிலுக்கு என்று தனியாக ஒரு அதிகாரி மாவட்ட அளவிலே அதுவும் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திலே இல்லாமல் இருக்கிறது. ஆகவே இதைக் கருத்தில் கொண்டு கூடுதல் மாவட்ட ஆட்சியர் அந்தஸ்தில் ஒரு அடிஷனல் கலெக்டர் (தொழில்துறை) என்று தனியாக மாவட்டத்தில் உருவாக்குகிறபோது அவர்கள் அந்த மாவட்டத்தில் தொழில் வளர்ச்சி உருவாவதற்கு முழு காரணமாக இருந்து, ஒவ்வொரு மாவட்டத்திலும் தொழில் வளர்ச்சி உருவாவதற்கு ஒரு வாய்ப்பாக இருக்கும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இன்றைக்கு தமிழகத்திலே ஏறக்குறைய 350 ஊராட்சிகள் இருக்கின்றன. அதில் ஏறக்குறைய 100 ஊராட்சிகளில் தொழிற்சாலைகள் இருக்கின்றன. மீதமுள்ள 250 ஊராட்சி ஒன்றியங்களில் தொழில்கள் உருவாக வாய்ப்பு இல்லாத சூழ்நிலை இருக்கிறது. ஆகவே ஒவ்வொரு ஒன்றியத்திலும் தொழில் வளர்ச்சி உருவாக வேண்டும். அப்படி உருவாகின்றபோது, தமிழ் நாட்டை தொழில்துறையிலே எந்த மாநிலத்திலும் இல்லாத அளவுக்கு முதலிடத்திற்குக் கொண்டுவர வாய்ப்பாக ஒவ்வொரு ஒன்றிய அளவிலே தொழில்பேட்டை அமைக்கப்பட்டால், தமிழ்நாடு இந்தியாவிலேயே, உலகத்திலேயே ஒரு வல்லரசாக உருவாகக்கூடும். ஒவ்வொரு ஒன்றியத்திற்கும் ஒரு கோடி ரூபாய் என்று ஆரம்பத்திலே கொடுத்து உதவினால் காந்தியடிகள் கண்ட கனவாகிய கிராம முன்னேற்றம்தான் இந்தியாவின் முன்னேற்றம் என்ற கனவை நிறைவேற்ற முடியும். எனவே கிராமங்களின் முன்னேற்றத்திற்காக ஒவ்வொரு ஒன்றியத்திற்கும் ஒரு கோடி ரூபாய் கொடுத்து தொழில்பேட்டை அமைத்துக் கொடுத்தால் சிறப்பாக இருக்கும்.

அடுத்து, தொழில்துறையிலே பணியாற்றுகின்ற அதிகாரிகளை நிர்வாகம் காரணமாக வேறு துறைக்கு மாற்றும்போது அவர்களுக்கு அத்துறையில் இருந்த அனுபவம் வீணாகாமல் இருக்க வசதியாக, நிர்வாகம் காரணமாக வேறு துறைக்கு மாற்றப்பட்டாலும் தொழில் துறையிலே உள்ள முக்கிய அதிகாரிகளை அவர்கள் வேறு துறையில் இருந்தாலும், ஏற்கெனவே பணியாற்றிய இடத்திலே "போர்டு ஆப் மேனேஜ்மெண்ட்" என்று சொல்லக்கூடிய அந்த அமைப்பிலே ஒரு இயக்குனராக நியமித்தால் அதிகாரியினுடைய அனுபவமும் ஆற்றலும் நமக்கு மேலும் கிடைக்க நல்லதொரு வாய்ப்பாக இருக்கும் என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதுமட்டுமன்றி, தொழில் துறையிலே பணியாற்றக்கூடிய அதிகாரிகளுக்கு உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் "அப்டுடேட் டெக்னாலஜி" என்று ஒரு பயிற்சியை நாம் சொல்லிக் கொடுத்தாகவேண்டும். இன்றைக்கு தொழில் வளர்ச்சியில் உலக அளவில் போட்டி போடக்கூடிய நிலையில் இருக்கிறோம்.

முற்பகல் 11-55

ஆகவே, அந்த அதிகாரிகளுக்கு தொழில் துறையில் உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் பயிற்சி கொடுத்து அப்-டு டேட் டெக்னாலஜி தெரிகின்ற அளவிலே ஒரு நிலையை உருவாக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். அது போலவே திருப்பூரிலே ஏறத்தாழ 2,000 கோடி ரூபாய் அன்னியச் செலாவணி ஈட்டுகின்ற அளவிலே பனியன் கம்பெனிகள் எல்லாம் வளர்ந்து வருகிறது. அங்கே இருக்கிற பனியன் கம்பெனிகளுக்கு

தேவையான வசதிகளை உருவாக்க நாம் வெளிநாட்டு டெக்னீசியன்களை வரவழைக்க வேண்டியிருக்கிறது. இந்த நிலையைப் போக்குவதற்கு திருப்பூரிலோ அல்லது தொழில் துறையில் பின்தங்கிய பகுதியாக இருக்கக் கூடிய என்னுடைய பல்லடத்திலோ அல்லது அவினாசியிலோ நெட் வொர்க் டிசைன் டிரைனிங் இன்சிடிட்யூட் ஒன்றை அமைத்தால் அந்தப் பகுதி தொழில் வளர்ச்சி அடைவதற்கும், வெளி நாட்டிற்கு வீணாக செல்கின்ற இந்த பணத்தை மிச்சப்படுத்துகின்ற ஒரு வாய்ப்பாக இருக்கும் என்பதைச் சொல்ல விரும்புகிறேன். Tamil Nadu Industrial Investment Corporation என்று சொல்லக்கூடிய தமிழ் நாடு தொழில் முதலீட்டுக் கழகம், சிப்காட் போன்ற அமைப்புகள் எல்லாம் முன்பு லோன் கொடுத்தால் 5-லிருந்து 10 சதவீதம் வரைதான் லோன் இருக்கும். ஆனால் இன்றைக்கு TIIC recovery என்று சொல்லக்கூடிய தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் லோன் ரெகவரியிலே ஒரு ரெகார்டு செய்திருக்கின்றது.

65 சதவீதம் இன்றைக்கு அவர்கள் திரும்பப் பெற்றிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு தேசிய அளவிலே பார்க்கிறபோது National average loan recovery 30 அல்லது 32 சதவீதமாக இருக்கிறது. தமிழ்நாட்டினுடைய தொழில் முதலீட்டுக் கழகம், புரட்சித் தலைவி அரசு ஏற்பட்ட பின்னர் 65 சதவீதத்தை திரும்பப் பெற முடிகிறது என்றால் (மேசையைத் தட்டும் ஒலி) அதற்குக் காரணம் இங்கு தொழில் ஆரோக்கியமாக இருக்கிறது என்பதும், தொழில் முனைவர்கள் திருப்பிச் செலுத்தக்கூடிய சக்தியோடு விளங்குகிறார்கள் என்பதும் தொழில் துறையினுடைய முன்னேற்றத்திற்கு சிறந்த உதாரணமாக எடுத்துக் கொள்ளலாம் என்பதையும் இங்கே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதுபோலவே, புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சி ஏற்பட்ட பிறகு தமிழகம் ஆட்டோமொபைல் இண்டஸ்டிரி என்று சொல்லக்கூடிய அந்தத் தொழிலிலே ஆசியாவினுடைய தலைநகரமாக இன்றைக்கு சென்னை உருவாகிக் கொண்டிருக்கிறது. உலக அளவிலே ஆட்டோமொபைல் இண்டஸ்டிரியினுடைய தலை நகரமாக அமெரிக்க நாட்டிலுள்ள டெக்ஸ்டோஸ் என்ற நகரம்தான் உலக அளவிலே ஆட்டோமொபைல் தொழிலினுடைய தலைநகரமாக இருந்து கொண்டிருக்கிறது. அந்த வகையிலே இன்றைக்கு ஆசியாவிலே உதிரிப் பாகங்கள், வாகனங்களுக்கு தேவைப்படுகின்ற உதிரிபாகங்களை உற்பத்தி செய்வதிலே ஆசியாவிலே—இந்தியாவிலே எடுத்துக் கொண்டால் தமிழகம்தான், அதனுடைய மையமாக விளங்கிக் கொண்டிருக்கிறது. அதிலும், குறிப்பாக சென்னையில் அம்பத்தூர் தொழில்பேட்டையும்,

மற்றும் ஓசூர் தொழில் பேட்டையும், கோவையிலிருந்தும், வெளி நாடுகளுக்கு எல்லாம் தேவையான, வாகனங்களுக்கான அத்தனை பொருள்களும் அனுப்பக்கூடிய அளவிற்கு புரட்சித் தலைவி ஆட்சியிலே, இந்த மூன்று ஆண்டுகளிலே தமிழகம் தொழில் துறையிலே முன்னேறி இருக்கிறது என்பதையும் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இந்தியாவிலே ஒரு நகரத்திற்கு, அதனுடைய அடிப்படை முன்னேற்றத்திற்காக 550 கோடி ரூபாய் கொடுக்கப்பட்டிருக்கிறது என்றால் அது தமிழ்நாட்டிலே இருக்கக்கூடிய திருப்பூர் நகரத்திற்குத்தான். புரட்சித் தலைவி அவர்கள் திருப்பூர் நகரத்தின் அடிப்படை வளர்ச்சிக்காக 'டேசிட்' என்று சொல்லக்கூடிய அமைப்பின் மூலமாக அந்த நிதியை ஒதுக்கியிருக்கிறார்கள். இது ஒரு சரித்திர சாதனை. இந்தியாவிலே வேறு எந்த ஒரு நகரத்திற்கும், எந்த ஒரு மாநிலமும் இது போன்ற ஒரு வசதியைச் செய்து கொடுத்தது இல்லை. இப்படி புரட்சித் தலைவி அவர்கள் 550 கோடி ரூபாயை திருப்பூருக்கு ஒதுக்கி இருக்கின்றதை நான் வரவேற்கிறேன், பாராட்டுகிறேன். அதே நேரத்திலே ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். திருப்பூர் என்பது பல்லடத்தையும் அவினாசியையும் உள்ளடக்கிய பகுதி. நூற்றுக்கணக்கான தொழிற்சாலைகள் இன்றைக்கு பல்லடத்திலும், அவினாசியிலும் இருக்கின்றன. ஆகவே, அங்கு அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதற்காக ஒதுக்கப்பட்டுள்ள அந்த நிதியை பல்லடத்திற்கும், அவினாசிக்கும் விரிவுபடுத்த வேண்டுமென்று இந்த நேரத்திலே மெத்த பணிவோடு புரட்சித் தலைவி அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

கோவை மாவட்டம், பல்லடம் தாலுக்கா, பொள்ளாச்சி தாலுக்கா ஆகிய இரண்டையும் தொழில் துறையில் பின்தங்கிய பகுதிகளாக அறிவித்து 5 ஆண்டுகள் முடிவுற்று மீண்டும் அதை ரினிவல் செய்ய வேண்டிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. பல்லடம் தாலுக்கா, பொள்ளாச்சி தாலுக்கா ஆகியவை இன்னும் தொழில் துறையில் போதிய முன்னேற்றம் இல்லாத பகுதிகளாக இருக்கின்றன. ஆகவே, இண்டஸ்டிரியலி பேக்வேர்டு தாலுக்கா என்று சொல்லுவார்கள். அந்த சலுகையை பல்லடம், பொள்ளாச்சி தாலுக்காக்களுக்கு நீடித்துக் கொடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் குறிப்பாகக் கேட்டுக் கொள்கிறேன்.

தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தினுடைய கிளையை பல்லடத்தில் உருவாக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். பல்லடம் பிற்படுத்தப்பட்ட பகுதி, மிகவும் வறட்சியான பகுதி. ஆகவே, அந்த இடத்தில் தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தினுடைய கிளை ஒன்றையும் உருவாக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

நண்பகல் 12-00

திருப்பூரிலே பனியன் கம்பெனிகளுடைய ஆர்டர்களை எல்லாம் நாம் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிறோம். அப்படி ஏற்றுமதி செய்கின்றபோது ஆர்டர்கள் எல்லாம் குறிப்பாக கோடைக் காலத்திலேதான் அதிகமாக வருகின்றன. மற்ற காலங்களில் எல்லாம் அங்கு இருக்கின்ற கம்பெனிகளில் வேலையின்றி இருக்கக்கூடிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, வருடம் முழுவதும், பணியாற்றக்கூடிய வகையிலே அந்தத் தொழிற்சாலைகளை ஈடுபடுத்த வேண்டும். தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு கொடுக்க வேண்டும். அந்த வகையிலே பார்க்கிறபோது இதே நிட்டிங் டெக்னாலஜிதான் இன்றைக்கு உல்லன் நிட்டிங்களிலும் பயன்படுகிறது. லூதியானாவிலேதான் இதுபோன்ற நிட்டிங் டெக்னாலஜி வளர்ந்து வருகிறது.

ஆகவே, திருப்பூரிலே அந்தக் கோடைகாலம் போக மீதிக் காலங்களில் ஆர்டர் இல்லாத பனியன் கம்பெனிகளுக்கு உல்லன் நிட்டிங் டெக்னாலஜியை அவர்களுக்குக் கொடுத்து உதவினால், அந்த தொழிற்சாலைகளில் அதைப் பயன்படுத்திக் கொள்வதற்கு வாய்ப்பாக இருக்கும் என்று நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதேபோல் திண்டுக்கல்-அண்ணா மாவட்டத்தில் இருக்கும் பழனி இன்றைக்கு புண்ணிய ஸ்தலமாக விளங்குகிறது. இந்தியாவிலே மிகக் குறிப்பிடக்கூடிய அளவுக்கு இன்றைக்கு பெருமை வாய்ந்த நகரம் பழனி. அந்தப் பகுதியிலேயும் தொழில் வளர்ச்சி பெறுவதற்காக, அதையும் பின்தங்கிய பகுதியாக அறிவிக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

அதேபோல் வட ஆற்காடு-அம்பேத்கார் மாவட்டத்தில் ஆம்பூர் சர்க்கரை ஆலை இன்றைக்கு சிறப்பாக செயல்பட்டுக்கொண்டு இருக்கிறது. அந்த ஆம்பூர் சர்க்கரை ஆலையிலே டிஸ்டிலரி பிரிவு ஒன்று துவங்க வேண்டும் என்று (மேசையைத் தட்டும் ஒலி) நான் அங்கே பேரவைக் குழுக் கூட்டத்திற்காகச் சென்றபோது அந்தப் பகுதி மக்களும் நம்முடைய இயக்கத்தினரும் தெரிவித்தார்கள். அதுபற்றி நான் சட்டமன்றத்திலே பேச வேண்டுமென்றும் கேட்டு இருந்தார்கள்; சட்டமன்ற உறுப்பினர் பரந்தாமன் அவர்களும் இதே கருத்தை வலியுறுத்துகிற காரணத்தினாலே, இதை நமது புரட்சித் தலைவி அரசு கவனத்திலே கொள்ள வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

இப்படித் தொழில் துறையிலே தமிழகம் 13-வது இடத்திலே இருந்து 3-வது இடத்திற்கு இன்றைக்கு புரட்சித் தலைவி அவர்கள் கொண்டுவந்து இருக்கிறார்கள். 3-வது இடத்திலிருந்து விரைவிலே தமிழகம் தொழில்

துறையில் முதலிடத்தைப் பெறக்கூடிய ஒரு சூழ்நிலையை இன்றைக்கு உருவாக்கிக் கொண்டு இருக்கிறோம். ஆகவே, இப்படி தமிழகத்தை அமைதிப் பூங்காவாக வைத்து, தமிழகம் இன்றைக்கு உலக நாடுகளிலே சிறப்பான இடத்தைப் பெறுகின்ற அளவுக்கு இதை முன்னேற்றம் அடையச் செய்யக்கூடிய மாண்புமிகு புரட்சித் தலைவிக்கும், தொழில் துறையை நிர்வகித்து வருகின்ற அன்பிற்குரிய மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும் இந்த நேரத்திலே நன்றியைத் தெரிவித்து விடை பெற்றுக்கொள்கிறேன்; நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் துரைமுருகன் அவர்கள் பழனி தாலுக்காவை தொழிலில் பின்தங்கிய பகுதியாக அறிவிக்க வேண்டும் என்று சொன்னார்கள். இது பழனி முருகன் கோரிக்கையா அல்லது துரைமுருகன் கோரிக்கையா என்பதை அறிய விரும்புகிறேன்.

திரு. கே. எஸ். துரைமுருகன்: பழனி முருகனுடைய பக்தனின் கோரிக்கை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பழனி முருகனுக்காக துரைமுருகன் இங்கே கோரிக்கை விடுகிறார்: வேறு ஒன்றும் இல்லை. முருகனுக்கு முருகனே கோரிக்கை விடுகிறார். (சிரிப்பு) அடுத்து டாக்டர். கோபால்.

டாக்டர் க. கோபால்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சிறு தொழில்கள் மற்றும் ஊரகத் தொழில்கள் மானியக் கோரிக்கைகள் மீது பேச வாய்ப்பு தந்தமைக்கு தங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். உலக அளவில் பொருளாதார மற்றும் தொழில் துறையில் ஏற்பட்ட அடிப்படை மாற்றங்களைத் தொடர்ந்து 1992 ஜனவரியில் மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் புதிய தொழில் கொள்கைகளை அறிவித்தபோது அதன் பயனாக மாநிலத்தில் விரைவான தொழில் மயமாக்கம் ஏற்பட்டு வேலை வாய்ப்பும் பெருகியது. புதிய தொழில்கள் தொடங்குவதற்கு வசதிகள் செய்து கொடுத்தும், உரிய ஊக்கச் சலுகைகள் அளித்தும், மேலும் இம்மாநிலத்தில் தொழில் அதிபர்கள் தொழில்களைத் தொடங்க ஊக்குவித்தும், தொழில் முன்னேற்றத்தில் தன்னுடைய சீரிய சிந்தைனையின் காரணமாக தொழில் துறையில் பின்தங்கிய மாநிலமாக இருந்த நிலையை, 6½ கோடி தமிழ் மக்களின் உயிர் மூச்சாக இருந்து கொண்டிருக்கிற

தமிழகத்தின் காவல் தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அகில உலகமே போற்றுகின்ற வகையில் தொழில் துறையில் தமிழகம் முதலிடத்தை அடைகின்ற நிலையை உருவாக்கி உள்ளார்கள். எனவே, அவர்களுக்கு என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தற்சமயம் எனது தொகுதியான நன்னிலத்தில், ரூபாய் 250 கோடிக்கான சென்னை எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் இயங்கிக்கொண்டிருக்கிறது. இரண்டு மாதங்களுக்கு முன்னர் சென்னை எண்ணெய் சுத்திகரிப்பு ஆலையின் தலைவர் அவர்களும் இந்தியன் ஆயில் கார்பொரேஷன் தலைவர் அவர்களும் சுமார் ரூபாய் 4000 கோடிக்கான அந்த ஆலையை விஸ்தரிப்பு செய்வதற்கு ஒப்பந்தம் செய்து இருக்கிறார்கள். அப்படி விஸ்தரிப்பு செய்கின்ற சூழ்நிலையில் கச்சாப் பொருட்கள் வெளிநாடுகளிலிருந்து தருவிக்கப்பட இருப்பதால், மிகவும் பழமை வாய்ந்த, ஒரு காலத்தில் சிறப்பாக விளங்கிக்கொண்டிருந்த அந்த நாகை துறைமுகம் இன்று சீர் செய்யப்படாமல் மிக மோசமான நிலையை அடைந்து இருக்கும் இந்த நேரத்தில்—அந்த தொழிற்சாலை விஸ்தரிப்பு செய்யப்படுகின்ற நேரத்தில் இந்தத் துறைமுகம் சீர் செய்து தரப்பட வேண்டுமாய் மாண்புகு அமைசசர் பெருமக்களைக் கேட்டுக்கொள்கிறேன். அந்த விஸ்தரிப்புக்கான பணியை உடனே துவங்க சம்பந்தப்பட்ட நிறுவனங்களை மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் தொடர்புகொண்டு துரிதப்படுத்த வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

தற்சமயம் அந்த ஆலையை சுற்றி எண்ணெய் சம்பந்தமான உப தொழில்கள் பல ஆரம்பிக்கப்பட்டு இருப்பதால்—குறிப்பாக சிலிகேட் தொழிற்சாலைகள், ஸ்பிக் நிறுவனம் மற்றும் கோத்தாரி நிறுவனங்கள் தான் அங்கே கிடைக்கின்ற இயற்கை எரிவாயுவையும் கச்சாப் பொருள்களையும் பயன்படுத்தி தொழில்கள் நடத்தி வருகினறனர். மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் இந்த அரசு, அங்கே கிடைக்கின்ற அந்த எரிவாயுவையும் கச்சாப் பொருள்களையும் பயன்படுத்தி தொழிற்சாலைகள் தொடங்க வேண்டுமாய் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-05

மேலும் அங்கே சென்னை எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம், ஐ.பி.பி. நிறுவனம் போன்ற சிலிகேட் தொழிற்சாலைகளில் அதிகமான தொழிலாளர்கள் வேலை செய்கின்ற சூழ்நிலை இருக்கின்றது. அங்கே அந்த எண்ணெய் மற்றும் புகையினால் ஏற்படக்கூடிய நோய்களுக்காக அந்த ஏழைத் தொழிலாளர்கள் பக்கத்தில் இருக்கின்ற நாகை அரசு மருத்துவ மனைக்கோ அல்லது நன்னிலம் அரசு மருத்துவமனைக்கோ

செல்கின்ற சூழ்நிலை இருப்பதால், தினக்கூலியாக இருக்கின்ற அவர்களுடைய சம்பளம் பாதிக்கப்பட்டு அவர்களுடைய வருமானம் குறைகின்ற நிலை இருக்கின்ற காரணத்தினால், அவர்களுடைய நோயைத் தீர்க்கின்ற வகையில் அங்கே ஒரு ஈ.எஸ்.ஐ. மருத்துவமனை உடனடியாக அமைத்துத் தர வேண்டுமாய் இத்தருணத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

எண்ணெய் சுத்திகரிப்பு ஆலையிலிருந்து சுத்திகரிக்கப்படும் அந்த எண்ணெயை தினந்தோறும் நூற்றுக்கணக்கான டேங்கர் லாரிகள்—குறிப்பாக அந்த நரிமணம் பகுதியிலிருந்து அந்த நாகூர், நன்னிலம், நாச்சியார் கோயில் சாலை வழியாகவும் மற்றும் கங்களாஞ்சேரி சாலை வழியாகவும் எடுத்துச் செல்கின்ற இந்தச் சூழ்நிலையில் அந்த சாலைகளை பொதுப்பணித் துறையின்கீழ் உள்ள நெடுஞ்சாலைத் துறை எவ்வளவுதான் சிறப்பாக பராமரித்து வந்தாலும் கூட அந்த சாலைகள் கூடிய விரைவில் பழுதடைகின்ற சூழ்நிலை இருக்கிறது. அந்த எம்.ஆர்.எல். நிறுவனம் கங்களாஞ்சேரியிலிருந்து நாகூர் செல்லும் சாலையை எடுத்து பராமரித்து வருவதைப்போல மேற்படி மற்ற சாலைகளையும் எடுத்துச் சீர்திருத்தித்தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, அந்த எண்ணெய்களை எடுத்துச் செல்கின்ற அந்த லாரிகள் நரிமணத்திலிருந்து நாகூர் செல்கின்ற சமயத்தில் அந்த வெட்டாற்றின் குறுக்கே இருக்கின்ற பாலத்தில் செல்கின்றன. அந்த பாலம் மிக குறுகிய பாலமாக இருக்கின்ற காரணத்தினாலும், அதே போல பிராவிடன் ஆற்றில் இருக்கின்ற அந்தப் பாலமும் மிகச் சிறிய பாலமாகவும் இருக்கின்றது. அந்தப் பாலம் 50 ஆண்டுகளுக்கு முன்னர் கட்டிய பாலம். அது வலுவிழந்த பாலமாக இருக்கின்றது. அந்த இரு பாலங்களையும் சம்பந்தப்பட்ட எண்ணெய் சுத்திகரிப்பு ஆலையின் கீழ் எடுத்துக் கொண்டு சீர்செய்துதர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மேலும் நன்னிலம், நரிமணம், களப்பால், கமலாபுரம், நெகவை போன்ற பகுதிகளில் வீணாக எரிந்துகொண்டிருக்கிற அந்த இயற்கை எரிவாயுவை ஒருங்கிணைத்து ஒரு காஸ் பிளாண்ட் அமைக்கும்படி மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் நாகை-காயிதே மில்லத் மாவட்டத்தினுடைய கடற்கரைப் பகுதியில் அதிகப்படியான சிலிகான் மணல் கிடைக்கின்ற காரணத்தினால் அரசே சிலிகேட் பேக்டரியை அமைத்துத்தர இத்தருணத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

சென்ற இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர், தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி இந்தத் தொழில் துறையை வைத்திருந்தபோது, நன்னிலம் பகுதியில் உத்தமசோழபுரத்தில் 100 கோடி ரூபாய் மதிப்பிற்கான ஒரு

காஸ்டிக் சோடா தொழிற்சாலை அமைப்பதற்கு இங்கே அறிவித்தார்கள். மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள், நரிமணம் வந்தபோதுகூட அங்கே மக்கள் கோரிக்கை வைத்தபோது, கூடிய விரைவில் அந்தத் தொழிற்சாலை அமைப்பதற்கான ஒரு நிலையை எடுப்பதாக அறிவித்தார்கள். எனவே அந்தத் தொழிற்சாலையும், நடப்பாண்டில் அந்த வேலையைத் தொடங்குவதற்கான ஏற்பாடுகளை செய்துதரவேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் அந்தப் பகுதியிலுள்ள விவசாயிகள் தங்களுடைய அதிகப்படியான நிலங்களையும், விளை நிலங்களையும், அவர்களுடைய சொந்த வீடுகளை எல்லாம் கொடுத்து அந்த ஆலை அமைவதற்கு உதவிகரமாக இருந்தார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தப் பகுதிக்கு வந்தபோது கூட எங்களுக்கு முழுமையான காம்பென்சேஷன் கிடைக்கவில்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அது குறித்து கூறினார்கள். அமைச்சர் அவர்களும் செய்து தருவதாக வாக்குறுதி அளித்தார்கள். எனவே சம்பந்தப்பட்டவர்களுக்கு, அந்த முழுமையான காம்பென்சேஷன் தொகை கிடைக்காதவர்களுக்கு, விளை நிலங்கள் கொடுத்த அந்த கிராம விவசாயிகளுக்கு உடனடியாக கொடுக்கும்படியாக கேட்டுக்கொள்கிறேன்.

அதே போல, வேலைவாய்ப்பின் போது அந்தப் பகுதியில் படித்த இளைஞர்களுக்கு அந்தப் பகுதியில் வேலை வாய்ப்பு கிடைக்கவில்லை என்ற குறை இருக்கிறது. எல்லா குடும்பத்திலும் படித்த இளைஞர்கள் இல்லாத காரணத்தினால் அந்த படித்த இளைஞர்கள் இல்லாத அந்த குடும்பத்தில் உள்ள அந்த பெரியவர்கள் தாங்கள் சிபாரிசு செய்கின்ற வேறு ஒரு நபருக்கு வேலை கொடுக்கவேண்டும் என்று ஒரு நீண்டநாள் கோரிக்கையை வைத்துக்கொண்டிருக்கிறார்கள். எனவே அமைச்சர் அவர்கள் அதை மறு பரிசீலனை செய்து அவர்கள் சிபாரிசு செய்கின்ற நபர்களையாவது வேலையில் சேர்ப்பதற்கு அவர்கள் உதவிடவேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

அதே போல நரிமணம் பகுதியிலிருந்து கிடைக்கக்கூடிய அந்த அதிகப்படியான எண்ணெய் இன்று கிடைத்துக்கொண்டிருக்கின்ற காரணத்தினால் மத்திய அரசு அந்த எண்ணெய்க்குக் கொடுக்கக்கூடிய ராயல்டி தொகை எவ்வளவு வந்துகொண்டிருக்கிறது? அது மத்திய அரசிடமிருந்து பெறப்பட்டு விட்டதா? அப்படிப் பெறப்பட்ட ராயல்டி தொகை எந்த வழியில் செலவழிக்கப்படுகிறது என்பதைத் தெரிந்துகொள்ள ஆசைப்படுகிறேன். அப்படிக் கொடுக்கக்கூடிய தொகையை, மத்திய அரசு மாநில அரசுக்கு அந்த ராயல்ட்டித் தொகையைக் கொடுக்கின்றபோது

எங்களுடைய பகுதிக்கு, எங்களுடைய நாகை-காயிதே மில்லத் மாவட்டத்திற்கு முழுமையான தொகையை செலவு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதே போல., எம்.ஆர்.எல். மற்றும் ஐ.பி.பி. நிறுவனங்களும் மற்றும் இயங்குகின்ற அந்த சிலிகேட் தொழிற்சாலைகள் எல்லாம் அங்கே அதிகமாக இருக்கின்ற காரணத்தினாலே, அதே பகுதியிலே அவர்கள் அதிகமான மின்சாரத்தை எடுத்துக்கொள்கின்ற காரணத்தினாலே, அந்தப் பகுதியில் குறிப்பாக திட்டச்சேரி, கணபதிபுரம், பூந்தோட்டம், போன்ற பகுதிகளிலே எல்லாம் மின் அழுத்தம் மிகக் குறைவாக இருக்கிறது. இரவு நேரங்களில் மின்சார குறைவால் 40 வாட் பல்ப் எரியாத சூழ்நிலை எல்லாம் இருந்துகொண்டிருக்கிறது. எனவே அந்தப் பகுதியில் புதிய டிரான்ஸ்பார்மர்ஸ்களையும் ரெக்டிபையர்ஸ் போன்றவற்றை போட்டுத்தர வேண்டுமென்று சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்களிடம் தொழில் துறை அமைச்சர் கேட்டுக்கொள்ளவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-10

மேலும், பணங்குடி மற்றும் வாழமங்கலம் போன்ற பகுதிகளில் அதிகமான புஞ்சை நிலங்கள் இருக்கின்ற காரணத்தினால் அங்கே சிப்காட் தொழிற்சாலை ஒன்று அமைய இருப்பதாய் சென்ற மானியக் கோரிக்கையின்போது தொழில் துறை அமைச்சர் அவர்கள் அறிவித்தாகள். இதுவரை அந்தப் பகுதியில் அந்தத் தொழிற்சாலை அமைப்பதற்கான ஒரு ஏற்பாடும் செய்யப்படவில்லை. எனவே, சிப்காட் தொழிற்சாலையை அமைப்பதற்கும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்ய வேண்டுமாய் இந்த நேரத்தில கேட்டுக்கொள்கிறேன்.

திட்டச்சேரி பணங்குடி, நரிமணம், குத்தாலம், கோனேரிராஜபுரம், உத்தமசோழபுரம் போன்ற பஞ்சாயத்துக்களை எல்லாம் சென்ற 4 ஆண்டுகளுக்கு முன்பே ஒருங்கிணைத்து நகரம் ஒன்றை அமைப்பதாக அறிவித்தார்கள். இன்னும் அந்தப் பகுதிகள் எல்லாம் ஒருங்கிணைக்கப்பட்டு நகரமாக ஆக்கப்படவில்லை. அதையும் நடப்பாண்டில் செய்து தர வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

நன்னிலம் தொகுதியில் கொள்ளுமாங்குடி அருகே கீரனூரில் திரு ஆரூரான் சர்க்கரை ஆலை அமைக்கப்பட்டு வருவதால் அந்த நாகை-காயிதே மில்லத் மாவட்டத்தினுடைய சாலைகள் எல்லாம் மிக மோசமாக இருக்கின்ற காரணத்தினாலும், அந்த ஆலைகள் அங்கே துவக்கப்பட இருக்கின்ற காரணத்தினால் இன்று பல பகுதிகளில் கரும்பு உற்பத்தி

அதிகமாய் இருக்கின்ற காரணத்தினாலும் இன்று கரும்பு உற்பத்தி திட்டத்தின்கீழ் இந்த சில சாலைகளை போட்டுத்தர வேண்டுமாய் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக, சோழகநல்லூர், கீழ் தஞ்சாவூர், மேலபூதலூர், திருச்செங்காட்டான்குடி வழியாக அண்ணாமண்டபம் வருகின்ற சாலை மிக மோசமாக இருக்கிறது. ஏனென்றால், அந்தப் பகுதியில் அதிகமான கரும்புகள் விளைகின்ற ஒரு சூழ்நிலையில் அந்தச் சாலையை சீர் செய்து தர வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன். அதேபோல், நெடுங்குளம் காளியாகுடி, அன்னதானபுரம் வழியாக இரண்டாவது குறுக்கே ஒரு பெரிய பாலத்தைக் கட்டி அந்த புதிய சாலையையும் அவர்கள் போட்டுத்தர வேண்டுமாய் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கின்றேன்.

அமைச்சர் அவர்கள் எங்கள் பகுதியில் ஆரூரான் சர்க்கரை ஆலையும், அதேபோல் தலைஞாயிறில் உள்ள நடிப்பிசைப் புலவர் கே.ஆர். இராமசாமியினுடைய ஆலையும் இருக்கின்ற காரணத்தினால் ஒரு புதிய டிஸ்டிலரி யூனிட் ஒன்றை எங்கள் பகுதியில் போட்டுத் தர வேண்டுமாய் இந்த நேரத்தில் அவர்களை கேட்டுக்கொள்கிறேன். அதேபோல இரண்டு ஆலைகள் இருக்கின்ற காரணத்தினாலும், இன்று நடிப்பிசைப் புலவர் கே.ஆர். இராமசாமி சர்க்கரை ஆலை விஸ்தரிக்கப்படுகின்ற காரணத்தினாலும், ஒரு கோ-ஜெனரேசன் யூனிட்டை அமைத்து, மின்சார உற்பத்தியைப் பெருக்க ஆவன செய்ய வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், நன்னிலம் பகுதியில் அதிகமான ஆறுகள், வாய்க்கால்கள் இருக்கின்ற காரணத்தினால் அங்கு அதிகப்படியான மணல்கள் சேமிக்கப்பட்டிருக்கின்றன. குறிப்பாக, இன்று மணலை ஏலம் விடாத சூழ்நிலையில் இன்று திருட்டுத்தனமாக அதிகமான மணல்கள் எடுக்கக்கூடிய சூழ்நிலையில் நிலைமை இருந்துகொண்டிருக்கிறது. எனவே, அமைச்சர் அவர்கள் அந்த மணலை ஏலத்தில் விடுவதற்கான நடவடிக்கையை உடனடியாக எடுக்க வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக, தங்கள் சொந்த வீடுகளுக்கு ஒரு டிராக்டர். இரண்டு டிராக்டர் மணல் எடுக்கும்பொழுது கூட அந்தப் பகுதியில் அந்த டிராக்டரை பிடித்து வைத்துக்கொண்டு இன்றைக்கு அதற்கு பெனாலிட்டி மற்றும் பைன் போடுகின்ற ஒரு சூழ்நிலை இருந்துகொண்டிருக்கிறது. எனவே, அமைச்சர் அவர்கள் சொந்த உபயோகத்திற்கு தேவைப்படுகின்ற மணலை, அந்த சம்பந்தப்பட்ட கிராம நிர்வாக அதிகாரியிடமிருந்தோ அல்லது வட்டாட்சியரிடமிருந்தோ அதற்ககான சான்றிதழை பெற்று வைத்துக்கொண்டால் அவர்கள் தங்களுக்கு வேண்டிய மணலை எடுத்துக் கொள்ளலாம் என்கின்ற ஒரு சூழ்நிலை உருவாக்க வேண்டுமென்று

கேட்டுக்கொள்கிறேன். அவர்கள் கலெக்டர், அங்குள்ள ஏ.டி.(மைன்ஸ்) என்கின்ற அளவுக்கு செல்ல வேண்டுமென்று இருக்குமானால், கிராமவாசிகள் அவர்கள், செல்ல முடியாத சூழ்நிலைமை அங்கு இருந்துகொண்டிருக்கிறது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதையும் செய்து தர வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல, அரசு துறை மூலமாக குருப் உறவுசஸ், பஞ்சாயத்து யூனியன் பள்ளிக்கூடங்கள் போன்றவற்றை கட்டுகின்ற ஒரு சூழ்நிலையில் அந்த வேலைகளுக்குக் கூட தேவையான மணலை எடுக்க முடியாத சூழ்நிலைமைகளும், இன்று ஹைவேஸில் ஹை டென்சிட்டி காரிடார் என்று சொல்லப்படுகின்ற அந்த சாலைகள் போடுகின்றபொழுது அங்கு அதிகமான மணல் தேவைப்படுகின்ற காரணத்தினால் அந்த வேலைகளும் இன்று பாதிக்கப்படக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. எனவே, அமைச்சர் அவர்கள் இந்த அரசு துறைகள் சம்பந்தப்பட்ட அந்த வேலைகளைச் செய்வதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடமிருந்து, குறிப்பாக ஊராட்சி ஒன்றிய அலுவலரிடமிருந்தோ அல்லது வட்டாட்சியரிடமிருந்தோ அனுமதி பெற்று அந்த மணலை எடுத்துக்கொள்ளலாம் என்கின்ற சூழ்நிலையை உருவாக்கித் தர வேண்டும்.

அதைப் போல், சென்ற 4, 5 ஆண்டுகளுக்கு முன்பு ஆதிதிராவிட மக்களுக்கு திருப்பூர் மற்றும் கோயம்பத்தூரில் பனியன் தொழிற்சாலை அமைக்கப்பட, விண்ணப்பங்கள் எல்லாம் பெறப்பட்டு, அதற்கான நேர்காணல் நடத்தப்பட்ட பின்னரும்கூட இன்னும் அந்தத் தொழிற்சாலைகள் எல்லாம் அவர்களுக்குக் கொடுக்கப்படாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தச் சூழ்நிலையை...

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்.

* *மாண்புமிகு திரு. எம். ஆனந்தன்:* மாண்புமிகு பேரவைத் துணை தலைவர் அவர்களே, பனியன் தொழிற்சாலை சம்பந்தமாக வேலைகள் நடந்துகொண்டிருக்கிறது. கட்டுமான பணிகள் நடந்துகொண்டிருக்கிற காரணத்தினால் அதன்பிறகுதான் அந்த பயனாளிகள் பட்டியல் அறிவிக்கப்படும்.

டாக்டர் க. கோபால்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அப்படி மணல் எடுக்க பெர்மிசன் கொடுக்கிறபொழுது, அங்கு அதிகப்படியான மணல்கள் எல்லாம் பாலத்தின் அடியில், பாலத்தின் அருகே டெப்பாசிட் ஆகின்ற சூழ்நிலை இருக்கின்ற காரணத்தினால் பெரும்பாலான மணல்கள் எல்லாம் அந்தப் பாலத்திற்கு

அடியிலே இருக்கின்ற சூழ்நிலையில், நாங்களும் பல தடவை சொல்லியிருக்கின்றோம், மணல் எடுக்கிறவர்கள் நாங்கள் சொல்லியும் கேட்காமல், அந்தப் பாலத்திற்கு அடியிலே இருக்கின்ற அந்த மணலை தோண்டுகின்ற சூழ்நிலை இருக்கின்றது. எனவே, அமைச்சர் அவர்கள் கண்டிப்பாக அந்தப் பாலங்கள் மற்றும் முக்கியமான வழித் தடங்களில் இருக்கின்ற அந்த இடங்களிலுள்ள மணலை எடுக்கக்கூடாது என்று கடுமையான ஒரு சட்டத்தை போட்டுத் தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு வாய்ப்புக்கு நன்றி கூறி அமைகின்றேன், நன்றி, வணக்கம்.

பிற்பகல் 12-15

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மணலை சட்டவிரோதமாக எடுப்பதற்கு இந்த அரசு அனுமதிக்காது. அதே நேரத்தில் அனுமதி கொடுக்கின்றபோது பாலம், நீர்நிலைகள் போன்ற இடங்களிலிருந்து 500 மீட்டர்கள் தள்ளித்தான் மணல் எடுக்க வேண்டுமென்ற விதி ஏற்கெனவே இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. கி. பால சுப்பிரமணியன்.

* **THIRU K. BALASUBRAMANIAN:** Hon. Deputy Speaker, Sir, I am very grateful to the Hon. Chief Minister and the three Hon. Ministers who have placed three Demands before the Assembly in a combined manner.

First of all, I want to make a comment on the Budget which was presented initially. At the outset, I wish to congratulate the Hon. Finance Minister for the comprehensive, all embracing, well-balanced Budget which presented to the Assembly for consideration. (Thumping of desks) A number of tax-concessions for various components of trade and industry have been offered in the Budget which, in turn, will ease the inflationary pressures and make consumer goods available at reduced prices. (Thumping of desks) In this connection, I feel that a permanent Committee may be constituted to monitor the complaints in this regard, so that the intended benefits actually reach the consumer. In the Budget, the Hon. Finance Minister has proposed automatic disinvestment by

TIDCO from joint sector and associate sector investment after a period of three years. In my opinion, this proposal needs to be reconsidered as the period of investment for threee years is too short for any industrial ventrue to go on steam.

Sir, I do not want to speak elaborately on this subject because everything has been fully described in the Policy Notes. However, since an opportunity has been given to me, I want to make use of the entire time allotted to me for the benefit of my Constituency and to putforth the requirements that are to be fulfilled by the Hon. Chief Minister and other Hon. Ministers concerned.

எனது தொகுதி பட்டுக்கோட்டையில் காவல் துறையைப் பொறுத்தவரையில் காவல் நிலையங்களை இரு தரப்பாகப் பிரிக்க வேண்டும். மொத்தம் 71 பஞ்சாயத்துகள் இருக்கின்றன. எனவே கிராம நிலையை ஒட்டியும், நகரத்தை ஒட்டியும் இரண்டு பகுதியாகப் பிரிக்கப்பட வேண்டும். அனைத்து மகளிர் காவல் நிலையம் ஏற்படுத்தப்பட வேண்டும். அதிராமபட்டினத்தில் உள்ள காவல் நிலையம் 100 வருடங்களைக் கம்ப்ளீட் செய்துள்ள நிலையில், அதன் கட்டிடம் இடிக்கப்பட்ட நிலையில் இருக்கிறது. அதைக் கட்டித் தருவதற்கு முன்வர வேண்டும். என்னுடைய தொகுதியிலே டிராவலர்ஸ் பங்களா இருக்கிறது. நம்முடைய மந்திரிகள் வரும்போது அவர்கள் தங்குவதற்கு அங்கே இடமில்லாமல் தவிக்கிறார்கள். அங்கே அடிஷனல் சூட் ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டிருந்தேன்....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் விரிவாகப் பேச வேண்டுமென்பதற்காகத்தான் 3 துறைகளினுடைய மானியக் கோரிக்கைகள் இன்றைக்கு எடுக்கப்பட்டிருக்கின்றன. இந்த மூன்றையும் தாண்டி, நான்காவது துறைக்கு உறுப்பினர் அவர்கள் போய்க்கொண்டிருக்கிறார். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் அதைத் தடுத்து நிறுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. பாலசுப்பிரமணியம் அவர்கள் தனக்குப் பேசுவதற்கு இப்போதுதான் வாய்ப்புக் கிடைத்திருக்கிறது, அதனால் எல்லாவற்றையும் பேசுகிறேன் என்கிறார். வேறு ஒன்றுமில்லை.

1995 ஏப்ரல் 24]

திரு. கி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொன்னதற்கு நன்றி. இருந்தாலும் எனக்குப் பேசுவதற்கு தரப்படும் வாய்ப்பு மிகவும் குறைவாக இருக்கிறது. அதனால் என்னுடைய தொகுதியைப் பற்றி மட்டுதான் பேச வேண்டுமே தவிர மற்ற விஷயங்களைச் சொல்ல வேண்டிய அவசியமில்லை என்ற காரணத்தாலே அதிலே புகுந்தேன். அதற்கு அவர்கள் என்னை மன்னித்தருள வேண்டும்.

தொழில்கள் என்று சொல்லும்போது, சி.வி.சி. நிறுவனம் ஆரம்பித்து 4 ஆண்டுகள் ஆகின்றது. அவர்களுக்கு 20 ஏக்கர் நிலம் கொடுக்கப்பட வேண்டும். இந்த நிலம் தரப்படாமல் இருக்கிறது. அதைப் பற்றி சென்ற ஆண்டிலே நமது தொழிலமைச்சர் அவர்கள் சொல்லுகின்றபோது, பட்டுக்கோட்டையார் கோட்டை விடாமல் இருந்தால் போதும் என்று சொன்னார்கள். நான் கோட்டைவிடாமல் இருந்தாலும், அது மெத்தனமாகச் செல்வதன் காரணமாக, அது தொடங்கப்படாமல் இருக்கிறது. டிட்கோ நிறுவனம் சி.வி.சி. நிறுவனத்தோடு கூட்டு வைத்துக்கொள்ள விரும்பாத ஒரு நிலை உருவாகியிருக்கிறது. மேலும் என்.ஆர்.ஐ. மூலமாக வரக்கூடிய பண்டுகளை எல்லாம் எடுத்து, உபயோகித்து, அந்தத் தொழிலை ஆரம்பிக்க வேண்டுமென்றால், அதிலே பல கஷ்டங்கள் இருக்கின்றன. இந்தக் காலகட்டத்தில் அந்த நிலமும் வரவில்லை என்றால், அரசுத் துறை கூட்டு முயற்சி எப்படி ஏற்படும்? மேலும் இப்போது மத்திய அரசிலே பல கட்டுப்பாடுகளை எல்லாம் தளர்த்தி இருக்கிறார்கள். இந்த சி.வி.சி. நிறுவனர் 100% எக்ஸ்போர்ட் ஓரியன்டட் யூனிட் என்று சொல்லி, அவர்கள் கிரீன் கார்ட் வாங்கியும், இந்தக் கம்பெனியால் இன்னும் ஆரம்பிக்க முடியவில்லை. அதற்கு ஆவன செய்யும்படி கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-20

எம்.ஆர்.எல். நிறுவனமானது நரிமணத்தில் தங்களது விரிவாக்கப் பணியில் இறங்கியிருக்கிறார்கள். அவர்களுக்கு வேண்டிய ஆன்சிலரி யூனிட்டுகளுக்காக அமைச்சர் அவர்களை அவர்கள் அணுகினால், அவர்களுக்கு என்னென்ன தேவைப்படுமோ அவைகளையெல்லாம் அவர்களுக்கு அளித்து சலுகைகளைக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இன்னும் சொல்லப்போனால் தஞ்சாவூர் மாவட்டத்திலே தொழில் தொடங்குவது என்பது ரொம்ப கஷ்டம். அதற்கு ஒரு கமிட்டி போட்டு தொழில் முனைவோர்களை உருவாக்கவேண்டும். அங்கே விவசாயம் தான் முக்கிய தொழிலாக இருப்பதால், விவசாயிகள் விவசாயத் தொழிலில் ஈடுபட்டிருப்பதால்,

வேறு தொழில்கள் துவங்க அவர்கள் முன்வருவதில்லை. ஆகவே அதற்குத் தேவையான கமிட்டிக் கூட்டங்கள் போட்டு அவர்களை தொழில் துவங்க முன்வரும்படியான ஆலோசனைகளைக் கூறவேண்டும். அந்தக் கமிட்டியிலே எம்.எல்.ஏ.க்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து, அந்த மக்களை முன்னுக்குக் கொண்டுவரவேண்டுமென்று நான் ஏற்கெனவே அரசிடம் விண்ணப்பம் கொடுத்திருக்கிறேன். அதைச் செயல்படுத்தவேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அதிராம்பட்டிணம் நகரப் பஞ்சாயத்தில் நிதிவசதி இல்லை. அதற்கு 65 லட்சம் ரூபாய் பணம் கேட்டிருந்தேன். அதையும் செய்யவேண்டும். அங்கேயுள்ள சாலைகளுக்கு 34 லட்சம் ரூபாய் கேட்டேன். இப்படி அந்தப் பகுதியின் மேம்பாட்டுக்காக ரூ.3.69 கோடிக்கு என்னுடைய கோரிக்கைகளை முதலமைச்சர் அவர்களிடம் வைத்திருக்கிறேன். அதைத் தாங்கள் செய்து தரவேண்டும். (குறுக்கீடு) பாலிசி நோட்டில் விளக்கமாக இருந்தாலும் இந்தச் சந்தர்ப்பத்திலே அதையே திருப்பித் திருப்பி பேசாமல், தொகுதி பற்றிப் பேசுகிறேன் என்பதை முன்னாலேயே தெளிவாகச் சொல்லி விடுகிறேன். குறிப்பாக நமது மாநிலத்திலே எத்தனை யூனிட்டுகள், சிக் யூனிட்டுகளாக இருக்கின்றன? அந்த சிக் யூனிட்டுகள் எல்லாம் எப்போது திறக்கப்படும்? குறிப்பாக எனக்கு 4, 5 யூனிட்டுகள் தெரிந்திருந்தாலும், மொத்தமாக எவ்வளவு சிக் யூனிட்டுகள் அப்படிக் கருதப்படுகின்றன? அதை திரும்பவும் திறக்க சாத்தியக்கூறுகள் இருக்கிறதா? அதற்கு அரசுத் தரப்பில் என்னென்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். வங்கிகளைக் கூட சில பேர் அணுகி எங்களுக்கு ரீ-ஷெட்யூல் போட்டு அந்த முதலீடுகளையும், கடன் வழங்கப்பட்டதையும் திருப்பிக் கொடுத்து வட்டியையும் நீங்கள் குறைத்துக் கொடுத்தால் திரும்பவும் நாங்கள் தொழிலை நடத்துகிறோம் என்று சொல்லியும் வங்கிகள் மெத்தனமாக இருக்கின்றன. அதை அரசு கவனத்தில் கொள்ளவேண்டும் என்பது என்னுடைய கோரிக்கை. இப்போது இண்டஸ்டிரீஸ் வளரவேண்டுமானால் மின்சாரம் வேண்டும். அந்த வகையில் பட்டுக்கோட்டைக்கு மின் துறை அமைச்சர் அவர்கள் 110 கே.வி. திறன் கொண்ட துணை மின் நிலையத்தைக் கொடுத்துவிட்டார்கள். மதுக்கூரிலும் அதற்கான வேலைகளை முடித்துவிட்டார்கள். அதிராம்பட்டிணத்திலும் ஒரு யூனிட் வரவேண்டும். அதையும் தந்தால் தொழில் துறைக்கு அது சாதகமாக அமையும் என்று சொல்லிக்கொண்டு இந்த மூன்றையும் விரைவாக முடித்து அவைகளைச் செயல்படுத்த அனுமதிக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு, எனக்குப் பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி தெரிவித்து அமைகிறேன்.

1995 ஏப்ரல் 24]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. சி. கிருஷ்ணன். (குறுக்கீடு) திரு. பாலசுப்பிரமணியம், ஏற்கெனவே நீங்கள் பேசி முடித்துவிட்டீர்கள். அமைகிறேன் என்று நீங்களே சொல்லிவிட்டீர்கள். அதற்குப் பிறகு திரு. கிருஷ்ணனை அழைத்து விட்டேன். (குறுக்கீடு) பேசவேண்டுமா? சரி. திரு. கி. பாலசுப்பிரமணியன்.

திரு. கி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரே ஒரு விஷயம். தொழில் தொடங்கவேண்டும், தொடங்கவேண்டும் என்று நாம் ஆர்வத்தோடு இருக்கிறோம். ஆனால் அப்படி ஆர்வத்தோடு இருக்கும் ஒரு நபர், ரீட்டா பாட்டிலிங் கம்பெனி என்று சொல்லப்படுகிற முதலாளிகள் நமது டிட்கோ மூலம் அப்ளிகேஷன் போட்டிருக்கிறார்கள். அந்தத் தொழிலைத் தொடங்க ஒரு ஏக்கர் நிலத்தைக் கேட்டிருக்கிறார்கள். பலமுறை டிட்கோ சேர்மனை அவர்கள் அணுகியும் அவர்கள் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. அவர்களிடம் சொல்லி அந்த நிலத்தை அவர்களுக்கு அலாட் செய்தால் நிச்சயமாகத் தொழில் தொடங்குவார்கள் என்று கூறி அமைகிறேன்.

பிற்பகல் 12.25

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. சி. கிருஷ்ணன்.

திரு. சி. கிருஷ்ணன்: இந்தியத் துணைக் கண்டத்திலே ஜனநாயகத்தின் மாண்பின் அடிப்படையில் தமிழகச் சட்டமன்றத்தை நடத்தி வருகின்ற மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களுக்கும் என்னுடைய பணிவான நன்றி கலந்த வணக்கத்தை முதலில் தெரிவித்துக்கொள்கிறேன். இந்திய அரசியல் சகாப்தத்தில் ஜான்சி ராணியின் வீரத்தையும் அன்னை தெரசாவின் கருணையையும், தந்தை பெரியாரின் பகுத்தறிவையும், பேரறிஞர் அண்ணா அவர்களுடைய கூரிய மதி நுட்பத்தையும், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய தேசியக் கொள்கையையும் ஒன்றாகப் பெற்றிருக்கின்ற மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு நன்றி கலந்த வணக்கத்தைக் காணிக்கையாக்குகின்றேன்.

கடந்த காலக்கட்டத்தில் 1989-90 இல் கூட நான் இந்த சட்டமன்றத்தில் இருந்து பேசியிருக்கிறேன். அன்றைக்கெல்லாம் இந்தத் துறை யாரிடம் இருந்தது, பல்வேறு துறைகள் எவரிடம் இருந்தன, அந்தத் துறைகள் எல்லாம் எப்படி இருந்தன என்பதெல்லாம் அன்றைக்கு சட்டமன்ற உறுப்பினர்களாக இருந்த எங்களுக்கே புரியாமல், தெரியாமல் இருந்த நிலைமை இருந்தது. எப்படியென்று சொன்னால் ஒரு கோழையிடத்தில் ஒரு பெரிய வாளை கொடுத்து எதிரியை வீழ்த்த வேண்டுமென்று

சொன்னால் எதிரியை வீழ்த்துவதை விட தன்னையே வீழ்த்திக்கொண்டு அந்தக் கோழை அடிபடுவான். ஆனால் இன்றைக்கு புரட்சித்தலைவி அவர்களுடைய கையில் இருக்கிற வாளைப் போல இந்தத் துறை அமைச்சர்கள் செயல்படுகிறார்கள். அனைத்து துறைகளும் இந்தியத் துணைக் கண்டத்திலே போட்டி போட்டுக் கொண்டு முன்னுக்கு வர வேண்டுமென்று ஆர்வத்தோடு அனைத்துத் அமைச்சர்களும் செயல்படுகிறார்கள் என்று சொல்லுகிறபோது அத்துனைத் துறைகளிலும் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி அவர்களுடைய முத்திரை, கொடி கட்டிப்பறக்கிறது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பெருந்தொழில் திட்டத்தை இன்றைக்கு இந்தியத் துணைக் கண்டத்திலே நம்முடைய மாநிலத்தில் தான் அனைத்து வசதிகளும் கூடிய ஒரு இடத்தில் தொடங்க வேண்டும் என்பதற்காக ஒரு குழுவை அமைத்து, அந்தக் குழுவிற்கு நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே தலைமைப் பொறுப்பை ஏற்றிருக்கிறார்கள் என்று சொன்னால் அந்தத் தொழில் வளர்ச்சியில் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எவ்வளவு அக்கறையும், ஆர்வமும் கொண்டிருக்கிறார்கள் என்பதை உணரலாம். இந்தத் தொழில் துறையை இந்தியத் துணைக் கண்டத்திலே முதன்மை இடத்திற்கு அழைத்துச் செல்வதற்கு முதலமைச்சர் அவர்கள் எவ்வளவு ஆயத்தப்படுகிறார்கள் என்பதை இந்த நேரத்தில நான் குறிப்பிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடன், முதல் கட்டமாக பெருந்தொழில் அதிபர்களை எல்லாம் ஒன்றாக அழைத்து, அவர்களுடன் ஆலோசித்து, தொழில் தொடங்குவதற்கு எப்படியெல்லாம் வசதி வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும், நம்முடைய மாநிலம் தொழில் துறையில் முதலிடம் வகிப்பதற்கு எப்படிப்பட்ட முறைகளைக் கையாள வேண்டும் என்பதற்காக பேசினார்கள். அன்றைக்கு தொழில் அதிபர்களிடத்தில் பேசி, அதன்வழியில் இன்று அளவிற்கும் நின்று நம்முடைய தமிழகத்தை மாண்புமிகு தமிழக முதலமைச்சர், டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் மிகத் தெளிவாக, தொழில் துறையில் முதலிடத்திற்கு கொண்டுவர வேண்டும் என்ற ஆர்வத்தோடு இன்றைக்கும் செயல்பட்டுக் கொண்டு வருகிறார்கள். அந்த அளவுக்கு நம்முடைய தொழில் துறை அமைச்சர் அவர்களும் மிகவும் சிறப்பாக இன்றைக்கு பணியாற்றிக் கொண்டு வருகிறார்கள் என்பதை இந்த நேரத்தில் குறிப்பிட விரும்புகிறேன்.

இன்றைக்கு உலக நாடுகளில் சிங்கப்பூர் ஒரு தனித்தன்மையைப் பெற்று விளங்குகிறது. உலக மார்க்கெட்டிலே அங்கம் வகிக்கிற ஒரு

நாடாக சிங்கப்பூர் இருந்து வருவதால், அங்கே பலவகையான தொழில்கள் என்று எதுவும் இல்லையென்று சொன்னாலும், உலக மார்க்கெட் என்று சொல்கிற அந்தத் தனித் தன்மையைப் பெற்று இருப்பதால் சிங்கப்பூர் உலகத்திலேயே சிறந்த நாடாக விளங்குகிறது. அதனுடைய அடிப்படையில் சென்னையிலும் கூட சோழிங்கநல்லூர் என்ற இடத்தில் 800 ஏக்கர் நிலத்தைக் கையகப்படுத்தி, சுமார் 450 கோடி ரூபாய் அளவில் தொழில் பூங்கா அமைத்து இருக்கிறார்கள் என்று சொன்னால் நம்முடைய சென்னையையும், நம்முடைய மாநிலத்தையும் சிங்கப்பூர் போல தொழில் பூங்காவாகக் கொண்டு வர வேண்டுமென்று ஆர்வத்தில் தான் நம்முடைய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் இப்படி ஒரு திட்டத்தை அறிவித்து செயல்படுத்திக் கொண்டு வருகிறார்கள் என்று கூற விரும்புகிறேன்.

அடுத்து, மாநிலத் தொழில் முன்னேற்ற நிறுவனம், சிப்காட் பற்றி சொல்லவேண்டுமென்று சொன்னால், இன்றைக்கு பல பேர்களுக்கும் இப்படி ஒரு நிறுவனம் இருப்பதே தெரியவில்லை. மக்களுக்கு அனுபவபூர்வமாக சிப்காட் நிறுவனத்தைப் பற்றி தெரிந்து கொள்ள முடியாத அளவுக்கு இருக்கிறது. குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால் நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்களுக்கே கூட இந்த சிப்காட் நிறுவனத்தைப் பற்றி தெரிந்து கொள்ள முடியாத நிலை இருக்கிறது. ஏனென்று சொன்னால் இதிலே கடன் வாங்க வேண்டுமென்று செல்கிறபோது பல்வேறு கடுமையான சட்டதிட்டங்களைப் போட்டு நம்மையே குழப்பி விடுகிறார்கள்.

இந்தச் சட்டதிட்டங்களைத் தளர்த்தி, மேலும் பல இடங்களில் இதனுடைய கிளைகளை நிறுவவேண்டும். இந்தக் கிளைகளை நிறுவுவதன் மூலமாக மக்களுக்குப் பயன்படக்கூடிய வகையில், சிப்காட் நிறுவனத்தின் மூலமாக தொழில் துவங்குவதற்கான வாய்ப்புகள் ஏற்படும். எனவேதான், பல மாவட்டங்களிலே சிப்காட் நிறுவனத்தின் கிளைகளை நிறுவவேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

பிற்பகல் 12-30

இன்றைக்குக் கனிம நிறுவனம் இருக்கிறது. நம்முடைய தமிழக அரசுக்கு மிகப் பெரிய அளவிலே வருவாயை ஈட்டித் தரக்கூடிய ஒரு நிறுவனம் இருக்கிறது என்று சொன்னால், அது கனிம நிறுவனம் மட்டும்தான். இன்றைக்கு நம்முடைய மாநிலத்திற்கு மட்டும் கிட்டத்தட்ட 16 கோடி ரூபாய் லாபத்தை சென்ற ஆண்டு ஈட்டிக் கொடுத்திருக்கிறது. அதேபோன்று அன்னியச் செலாவணியாக, அடுத்த ஆண்டு,

39 கோடி ரூபாய் அளவுக்கு லாபத்தை ஈட்டித் தரக்கூடிய நல்ல தொழிலாக இந்தக் கனிம நிறுவனம் இன்றைக்குத் தமிழகத்திலே செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. இந்தத் தொழில் வளரவேண்டும் என்று சொன்னால், இந்தத் தொழிலை மேலும் வளப்படுத்தவேண்டும் என்று சொன்னால், சில சலுகைகளை அளிக்கவேண்டும். காரணம் இப்போது பட்டா நிலங்களுக்கு மட்டும்தான் உரிமம் வழங்கப்படுகிறது. பட்டா நிலம் இன்றைக்கு கிராமப்பகுதிகளிலே போய்க் கேட்கிறபோது, ஒரு ஏக்கர் 10 லட்சம், 15 லட்சம் என்று சொல்கிற அளவுக்கு விலை உயர்ந்து விட்டது. அதனாலே, இந்தத் தொழிலிலே இருப்பவர்கள், நிலத்தை வாங்கி, தொழிலைச் செய்ய முடியாத நிலைமை ஏற்படுகிறது. இன்றைக்குப் புறம்போக்கு நிலங்களைப் பார்க்கிறபோது மலைபோல் கற்கள் குவிந்திருக்கின்றன. அப்படிப்பட்ட புறம்போக்கு நிலங்களுக்கு அரசு அனுமதி வழங்கினால், அதன்மூலம் பல கோடி ரூபாய் அன்னியச் செலாவணியை ஈட்டித் தரக்கூடிய வாய்ப்பு நம்முடைய அரசுக்குக் கிட்டும். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இந்த முறை புறம்போக்கு நிலத்திற்கு அனுமதி வழங்குவதற்கு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய அனுமதியோடு ஆணை பிறப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்து, ஆணை வழங்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து புகளூர் காகித ஆலை. அங்கே கிட்டத்தட்ட 1 லட்சத்து 80 ஆயிரம் மெட்ரிக் டன் உற்பத்தி செய்யப்படுகிறது. மிகப் பெரிய அளவிலே, புகளூர் ஆலை செயல்பட்டு வருகின்ற காரணத்தால், இன்னமும் கூட அதை நவீனப்படுத்துவதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். நான் இதை மனதாரப் பாராட்டுகிறேன். நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் என்னுடைய மாவட்டத்திற்கு மிக அருகாமையிலே இருக்கிறார். என்னுடைய மாவட்டத்தின் எல்லையிலே அமைந்திருக்கிற ஊரிலே இருக்கிற மாண்புமிகு அமைச்சர் அவர்கள், சேலம் மாவட்டத்தில் இதுவரையிலும், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில், எந்த ஒரு தொழிற்சாலையையும் அமைப்பதற்கு ஆணை வழங்கவில்லை. எப்படியாவது சேலம் மாவட்டத்திலே ஒரு காகித ஆலையை அமைத்துக் கொடுக்கவேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

இன்றைக்கு சர்க்கரை ஆலைகளுக்கு விவசாயிகள் பல்வேறு பகுதிகளிலேயிருந்து கரும்புகளை வெட்டி அனுப்புகிறார்கள். இந்தியாவிலே இரண்டாவது இடம் அல்லது முதல் இடம் வகிக்கக்கூடிய அளவிற்கு கரும்பு உற்பத்தியிலே நாம் புகழ் பெற்றிருக்கிறோம். அதுவும், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சி இன்றைக்கு கரும்பு உற்பத்தியில் மிகப் பெரிய சாதனை படைத்திருக்கிறது. இன்றைக்கு

கரும்பு ஆலைகளுக்கு விவசாயிகள் கரும்புகளை அனுப்புகிறார்கள். அந்தக் கரும்புகளை வெட்டுவதற்கு ஆணை வழங்குவதிலே காலதாமதம் ஏற்படுகிறது. ஒரு விவசாயி, 12 மாதங்களிலே கரும்பை வெட்டவேண்டும் என்று சொன்னால், இன்றைக்கு 14 மாதங்கள், அல்லது 15 மாதங்கள் ஆகின்றன. இப்படிக் காலதாமதம் ஆவதால், விவசாயிகளுக்கு பெரும் நஷ்டம் ஏற்படுகிறது. மேலும் காலதாமதம் ஏற்படுகிறபோது வெட்டிய கரும்பை சரியான நேரத்திலே லாரிகளிலே ஏற்றி ஆலைகளுக்கு அனுப்ப முடியாத நிலைமை எல்லாம் ஏற்படுகிறது. அப்படிப்பட்ட நிலைமை ஏற்படுகிறபோது, கரும்பினுடைய எடை குறைகிறது. இதனால் விவசாயிகளுக்குப் பாதிப்பு ஏற்படுகிறது. இதனைத் தவிர்க்கக்கூடிய...

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர்.

பிற்பகல் 12-35

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கிருஷ்ணன் அவர்கள் கரும்பை வெட்டி எடுப்பதிலே காலதாமதம் ஏற்படுகிறது என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். சென்ற ஆண்டு, இந்தியாவிலே வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர், டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் கருணை உள்ளத்தோடு கரும்பு விவசாயிகளுக்கு விலையை அதிகப்படியாக கொடுத்த காரணத்தால், விவசாயிகள் போட்டி போட்டுக் கொண்டு எல்லோரும் கரும்பைப் பயிரிட ஆரம்பித்தார்கள். அதன் விளைவாக, இன்றைக்கு அரசுத் துறையிலே இருக்கிற 3 ஆலைகள், கூட்டுறவுத் துறையிலே இருக்கிற 15 ஆலைகள், ஆக மொத்தம் 18 ஆலைகளிலும், அளவுக்கு அதிகமாக நிர்ணயித்த அளவைவிட 11 லட்சம் டன் கரும்பு இன்றைக்கு அதிகமாக பயிர் செய்யப்பட்டு இருக்கிறது. அதனாலேதான் அந்த வெட்டிய கரும்பை அரவை செய்வதிலே சில சிக்கல்கள் ஏற்பட்டிருக்கிறது. ஆகவேதான் நான் கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் மூலம் பொது ஆலைகளில் இருக்கின்ற எஞ்சிய கரும்புகளை எடுக்கவேண்டுமென்று தனியார் ஆலைகளின் நிர்வாகிகளை எல்லாம் அழைத்துப் பேசியிருக்கிறேன். அவர்கள் சில சலுகைகளை எல்லாம் கேட்டிருக்கிறார்கள். அந்தச் சலுகைகளை எல்லாம் மாண்புமிகு முதலமைச்சரோடு கலந்து பேசி, இருக்கின்ற கரும்புகளை எல்லாம் எல்லா ஆலைகளிலிருந்தும் சேர்த்து எடுத்து, இந்த ஆண்டிற்குள் எல்லா கரும்புகளையும் எடுத்து அரைப்பதற்கு அரசு முயற்சிகளை எடுத்துக்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சி. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்களுக்கு நன்றி, இதிலே நான் குறைபாடுகள் எதுவும் சொல்லவில்லை. தமிழகத்தைப் பொருத்த மட்டிலும் 32 கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் இருப்பதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். உற்பத்தி அதிகமாக இருப்பதாலே ஆலைகள் குறைவாக இருக்கின்றது. மேலும் கூடுதலாக ஆலைகள் வேண்டும் என்பதற்காகத்தான் இந்தக் குறைபாடுகளைத் தெரிவித்திருக்கின்றேன். அதன் அடிப்படையில் ஓமலூருக்குக் கூட ஒரு கரும்பு ஆலை நிறுவினால் மிகவும் வசதியாக இருக்கும். அதுவும் சேலம் அருகிலே அந்த ஆலையை அமைப்பதற்கு வாய்ப்புகள் இருக்குமேயானால், அப்படிப்பட்ட நல்ல வாய்ப்பினை பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென்று இந்த நேரத்திலே எடுத்துச்சொல்ல விரும்புகிறேன். ஏனென்று சொன்னால், வாழப்பாடி, கருமன்துறை போன்ற பகுதிகளிலேயிருந்து பாலக்கோடுக்குச் செல்ல வேண்டுமென்றால் அல்லது மோகனூருக்குச் செல்லவேண்டுமென்று சொன்னால், சுமார் 200 கிலோமீட்டருக்கு விவசாயிகள் எடுத்துச் செல்ல வேண்டிய அவதிக்குள்ளாகின்றார்கள். அதனைப் போக்குகின்ற வகையிலே சேலத்திற்கு அருகிலே, ஓமலூரிலோ அல்லது கருப்பூர் பகுதியிலோ, எங்களுக்கு கரும்பு ஆலை ஒன்றை அமைக்க அனுமதி வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களை இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து ஓமலூர் பகுதியைப் பொறுத்தமட்டிலும் மிகவும் பின்தங்கிய மக்கள் வாழ்கின்ற பகுதி . அந்தப் பகுதியிலே இருக்கின்ற மக்கள் சென்ற தலைமுறை புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுக்கு வாக்களித்தார்கள். இந்தத் தலைமுறை புரட்சித் தலைவி அவர்களுக்கு வாக்களித்திருக்கிறார்கள். இன்னமும் வாக்கு அளிக்க இருக்கிறார்கள். எனவே இது பின்தங்கிய பகுதி, வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள மக்கள் வாழ்கின்ற பகுதி. இந்தப் பகுதி வானம் பார்த்த பூமி, மழையை நம்பியிருக்கின்ற பகுதி. உழைக்கும் மக்கள் மட்டும்தான் அந்தப் பகுதியிலே இருக்கின்றார்கள். அந்தப் பகுதியிலே இருக்கின்ற மக்கள் அங்கே தொழில் வாய்ப்பே இல்லாமல் கூலி வேலை மட்டும்தான் செய்துவருகின்றார்கள். எனவே அந்த ஓமலூர் பகுதி குறித்து பல ஆண்டுகாலமாக கோரிக்கைகள் விடுத்திருக்கிறோம். ஓமலூர் பகுதியை தொழிலிலே பின்தங்கிய பகுதியாக அறிவிக்கவேண்டுமென்று நீண்டநெடுங்காலமாக அந்தக் கோரிக்கையை வைத்து வலியுறுத்தி வந்திருக்கிறோம். புரட்சித் தலைவியினுடைய ஆட்சியிலேதான் இப்படிப்பட்ட கோரிக்கை வெற்றி பெறவேண்டும். எனவேதான் மாண்புமிகு அமைச்சர் அவர்களை புரட்சித் தலைவி அனுமதியோடு இந்தக் கோரிகையை ஏற்று, ஓமலூர் பகுதியை தொழிலிலே பின்தங்கிய பகுதியாக அறிவிக்கவேண்டுமென்ற கோரிக்கையை

விடுக்கின்றேன். அமைச்சரவர்கள் செய்து கொடுப்பார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கின்றது. அப்படி இல்லையென்று சொன்னாலும் கூட, ஓமலூர் ஒன்றியத்தையாவது தொழிலிலே பின்தங்கிய பகுதியாக அறிவிக்கவேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

மேலும், தமிழ்நாடு மேக்னசைட்டை பொறுத்தமட்டிலும் இன்றைக்கு கிட்டத்தட்ட 6,000 தொழிலாளர்கள் உழைத்துவருகின்றார்கள். அதிலே கடந்த 15 மாதங்களுக்கு முன்னாலே சம்பளத்தினுடைய பேச்சுவார்த்தை நிகழ்ந்து இன்றைக்கு நடந்துகொண்டிருக்கிறது. அதனை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எப்படியாவது முடித்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரையிலும் தமிழ்நாடு மேக்னசைட்டை ஒரு தனியாரிடத்திலேயிருந்து நாம் ஏற்றுக்கொண்டிருக்கிறோம். அப்படி ஏற்றுக்கொண்டிருந்தாலும்கூட, இன்றையளவிற்கும் அதனுடைய தொழிலாளிகளை தமிழக அரசு தொழிலாளர்களாக நாம் இன்னமும் அறிவிக்காமல் இருந்து வருகிறோம். இந்த மேக்னசைட் நிறுவனத்தில் பணியாற்றுகின்றவர்களுக்கு தமிழக அரசு வழங்குகிற சலுகைகளை இவர்களுக்கு வழங்கவேண்டும். தமிழக அரசு ஊழியர்களாக அவர்களை ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது தொழில் துவங்குவோருக்கு பல முனைகளில் தமிழக அரசு ஊக்கத்தை அளித்துவந்தாலும்கூட, பெண்களுக்கென்று எந்த முக்கியத்துவமும் கொடுக்கமுடியாத நிலைமையிலே இன்றைக்கு அறிவிப்புகள் இருந்துவருகின்றது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் புரட்சித் தலைவியினுடைய அனுமதியோடு 30 சதவீதம் பெண்களுக்கு தொழில் துவங்குவதற்கு மானியம் கொடுத்து அனுமதி வழங்கி அவர்களை ஊக்குவிக்கின்ற வகையிலே தொழில் துவங்குவதற்கு பெண்கள் முன்வரவேண்டிய வாய்ப்பினை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்படுத்திக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

பிற்பகல் 12-40

அதேபோல நாமக்கல்லைப் பொறுத்த மட்டிலே மிகச் சிறப்பான ஒரு தொழிலாக இருந்து வருகிறது கோழி வளர்ப்பு. இங்கே முட்டை உற்பத்தி என்பது மிக அதிக அளவிலே இருந்து வருகிறது. இந்த முட்டையை ஒரு சில நாட்களுக்கு வைத்திருந்தாலும் கூட முட்டை கெட்டு விடக் கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே அந்த முட்டையைக் கொண்டு பவுடர் தயாரிப்பதற்கு நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள்

நாமக்கல்லிலே ஒரு ஆலையை நிறுவ வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து திருச்செங்கோடு கூட்டுறவு விற்பனை சங்கம் கொங்கனாபுரத்திலே செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. இங்கே பல கோடி ரூபாய் அளவிலே பஞ்சு உற்பத்தியும், வியாபாரமும் நடந்து வருகிறது. இந்த அடிப்படையிலே கொங்கணாபுரத்திலே ஒரு ஜின்னிங் பேக்டரி அமைப்பதற்கான வாய்ப்புகள் இருந்து வருகின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தப் பகுதியிலே ஒரு ஜின்னிங் பேக்டரியோ அல்லது ஒரு நூற்பு ஆலையோ ஏற்படுத்த வேண்டும் என்று வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக ஆற்றிலேயிருந்து மணல் எடுப்பதிலே தான்தோன்றித் தனமாக மணலை எடுத்து விற்பது என்பது பல்வேறு கால கட்டங்களிலே நடந்து வருகிறது. அதையெல்லாம் வகைப்படுத்தி முறைப்படுத்தி செய்ய வேண்டும் என்று சொல்லுகிறபோது, யாரோ தனியாருக்கு அந்த லாபம் போய்விடுகிறது. அதனால் இதனை அரசு பயன்படுத்திக்கொண்டு அந்த மணலை எல்லாம் டெண்டர் விட்டு, டெண்டர் முறையிலே அனுமதி தந்து செய்தால் அதன் மூலம் அரசுக்கு லாபம் ஈட்டுவதற்கு ஒரு வாய்ப்பு உண்டாகும் என்பதையும் இந்த மன்றத்திலே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல சேலம் மாவட்டம் நாமக்கல்லிலே ஆட்டோ நகர் தொடங்குவதாக சென்ற ஆண்டு அறிவிக்கப்பட்டது. ஆனால் இன்னும் அந்த ஆட்டோ நகர் தொடங்கப்படாமல் இருந்து வருகிறது. இந்தக் காலக் கட்டத்திலாவது மாண்புமிகு புரட்சித் தலைவியினுடைய அனுமதியோடு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதைத் துவங்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு...

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. துரை ராமசாமி: மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நாமக்கல்லில் ஆட்டோ நகர் நிறுவுவதில் காலதாமதம் ஆனதற்குக் காரணம், அந்த தொழில் முனைய முன்வந்தோர்களே தவிர அரசிடம் கால தாமதம் இல்லை. அவர்கள் ஒரு கோடி ரூபாய் அரசு கொடுக்க வேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். அந்த மாதிரியான திட்டங்கள் நம் அரசிடம் இல்லாததால் அது முடியாது என்று சொன்னபிறகும் அவர்கள் முன் வராத காரணத்தினால்

தான் கால தாமதம் ஆகிக் கொண்டிருக்கிறது. மற்றபடி இடத்தைக் கொடுப்பது, கட்டிடங்கள் கட்ட உதவுவது, மற்ற காரியங்கள் செய்வதையெல்லாம் செய்வதற்கு அரசு தயாராக இருக்கிறது. அவர்கள் அதை பயன்படுத்திக் கொள்ளவில்லை என்பதை மட்டும் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு. சி. கிருஷ்ணன்: மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி. மேலும் இன்றைக்கு தொழில் துறையை பொறுத்த மட்டிலும் பெரும் தொழில்கள் அல்லது ஊரகத் தொழில்கள் போன்ற தொழில்கள் எல்லாம் துவங்குவதற்கு பல்வேறு வகையான வாய்ப்புகளைப் பெற்றிருப்பவர்கள் அதாவது தொழில் அதிபர்கள் எல்லாம் கூட தொழில்களை அதிகமாக ஏற்படுத்த வேண்டும் என்று சொல்லுகிறபொழுது அதற்கான பல்வேறு வசதிகளையெல்லாம் ஏற்படுத்திக் கொடுப்பதிலே நம்முடைய அரசு முனைப்பாக இருந்தாலும் கூட, பணம் வைத்திருப்பவர்களுக்கு எப்படி தொழில் தொடங்குவது, எவ்வாறு எந்தத் தொழில் தொடங்குவது என்பது புரியாமல் அதிலே பல மனக் குழப்பங்கள் எல்லாம் ஏற்படுகின்றன. ஆகவே நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அப்படிப்பட்டவர்களுக்கு வழி காட்டுகிற வகையிலே சிப்காட் மூலமாகவோ அல்லது வேறு நிறுவனத்தின் மூலமாகவோ ஒவ்வொரு மாவட்டத்தினுடைய தலைமை இடத்திலும் ஒரு பயிற்சி முகாமை நடத்தி, அந்தப் பயிற்சி முகாமை அந்தத் துறையைச் சேர்ந்த அரசு அலுவலர்களோ அல்லது ஏதாவது நிறுவனத்தின் மூலமாகவோ நடத்தி அதன் மூலம் அந்தந்த மாவட்டங்களில் தொழில் தொடங்குவதற்குரிய வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அப்படிப்பட்ட நிலையிலேதான் அந்தப் பகுதிகளில் வேலை வாய்ப்பு கூட பெருகுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. எனவே பணத்தை வைத்துக் கொண்டு தொழில் துவங்குவதற்கு தெரியாமல் இருப்பவர்களுக்கு இப்படிப்பட்ட சந்தர்ப்பத்தை நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பயிற்சியின் மூலமாக அல்லது தகவல் தொடர்பு மூலமாகவாவது அப்படிப்பட்டவர்களுக்கு வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுக்கும் வகையிலே முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, இந்த நல்ல வாய்ப்பினை நல்கிய பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்து விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

பிற்பகல் 12-45

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. வே. தம்புசாமி.

TRUTH ALONE TRIUMPHS

திரு. வே. தம்புசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தொழிற் துறை சம்பந்தமாகவும், ஊரக வளர்ச்சித் துறை சம்பந்தமாகவும், ஒரு சில கருத்துக்களைக் கூற அனுமதி தந்த தங்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். தொழிற் கொள்கை தமிழகத்திலே புதிய, புதிய தொழில்களை துவங்குவதற்காக சுலப நடவடிக்கைகளையும் மேற்கொண்டிருக்கிறோம் என்று தொடர்ந்து சொல்லப்படுகிறது. ஆனால், அருகாமையிலே இருக்கக் கூடிய பாண்டிச்சேரி மாநிலத்திற்கும், நமது மாநிலத்திற்கும் பார்க்கிறபொழுது, பாண்டிச்சேரி மாநிலத்திலே பெருந்தொழிலாக இருந்தாலும், சிறு தொழிலாக இருந்தாலும் வேகமாக வளர்ச்சி பெற்று வருகிறது. இந்த மாவட்டத்திற்கு அருகாமையிலே இருக்கக் கூடிய காரைக்காலில் கூட ஒரே ஒரு கோடு; கோட்டிற்கு கீழ்புரம் அதிகமான அளவிற்கு தொழிற்சாலைகள் வேகமாக வளர்ந்து கொண்டு இருக்கிறது. அந்த தொழிற்சாலைக்கு பயன்படுத்தக் கூடிய, அடிப்படையாக இருக்கக் கூடிய எரிபொருள் நாகை-காயிதே மில்லத் மாவட்டத்தில் கிடைக்கக்கூடிய நில வாயுவை பயன்படுத்தி தொழிற்சாலைகள் துவங்கப்படுகிறது. ஆனால், அதே நில-வாயுவை பயன்படுத்தி, தமிழக அரசு நாகை-காயிதே மில்லத் மாவட்டத்திலோ, தஞ்சை மாவட்டத்திலோ அல்லது தென்னாற்காடு, வடாற்காடு மாவட்டங்களிலோ, பின்தங்கிய பகுதிகளிலே ஒரு தொழிற்சாலையை ஏற்படுத்துவதில் என்ன தயக்கம் இருக்கிறது? என்ன தேக்கம் இருக்கிறது? ஏன் அதைத் துவக்கவில்லை? அப்படித் துவக்கப்படாமல் இருப்பதற்கு என்ன அடிப்படையான காரணங்கள் அமைந்திருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் பதிலுரையில் கூற வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன். (குறுக்கீடுகள்). குறிப்பாக, தொழிற் கொள்கை என்பது சாதாரணமாக ஒரு இயந்திரத்தோடு இருக்கக்கூடிய கொள்கை மட்டும் அல்ல. அது மனித வாழ்வோடு இணைந்து இருக்கக்கூடிய ஒரு கொள்கை. குறிப்பாக, விவசாயத் தொழிலோடு இணைந்து இருக்கக்கூடிய ஒரு கொள்கை. தொழிற்சாலைகளுக்கு பாதிப்பு வருகிறபோது, விவசாய உற்பத்தியும் பாதிக்கப்படும். விவசாயத்திலே பாதிப்பு வருகிறபோது, தொழிற் உற்பத்தியும் பாதிக்கப்படும். காரணம், இன்றைக்கு தொழிற்சாலைகளுக்கு மூலப்பொருள் உற்பத்தி செய்யக் கூடிய மிகப்பெரிய தொழில் வேளாண்மைத் தொழில். அப்படி இரண்டு தொழிலுக்கும் ஒன்றோடொன்று தொடர்ந்து பாதிப்பு வருகிறபோது, இரண்டு தொழில்களும் சேர்ந்து பாதிக்கப்படும். ஆகவே, இரண்டு தொழில்களும் பாதிக்கப்படாமல் பாதுகாக்கப்படுவது என்பதுதான் தொழிற் துறை முன்னேற்றத்தை வேகமாக முன்னோக்கி செலுத்த முடியும். அந்த வகையிலே தொழிற்கொள்கை அமைக்கப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். குறிப்பாக, இன்றைய தினம் புதிய தொழில்கள்

துவங்குவதற்காக பல்வேறு திட்டங்கள் இருக்கின்றன. அதற்கு பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. முகவர்கள் வந்து கொண்டிருக்கிறார்கள் என்று சொன்னால் கூட, இருக்கிற தொழில் அழிந்து வருகிறது, இருக்கிற தொழில் மூடப்படுகிறது, இருக்கிற தொழில் உற்பத்தி செய்யாமல் முடக்கம் ஏற்படுவதற்கு என்ன காரணம் என்பதைப் புரிந்து கொள்ள முடியவில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திரு. தம்புசாமி அவர்கள் எந்தெந்த தொழில் முடக்கப்பட்டிருக்கிறது என்பதைக் குறிப்பாக சொல்ல வேண்டும். பொதுவாக அவர்கள் எல்லா தொழில்களும் முடக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னால் அது பதிவாகவும். அவைக் குறிப்பில் இந்த அரசாங்கத்தால் தொழிற்சாலைகள் எல்லாம் முடக்கப்பட்டிருக்கிறது என்று ஒரு தோற்றத்தை உருவாக்கும். ஆகவே, எந்தத் தொழில் முடக்கப்பட்டிருக்கிறது என்பதை குறிப்பாகச் சொன்னால் அது பதில் சொல்வதற்கும், நடவடிக்கை எடுப்பதற்கும், ஆயத்தமாகவும், வசதியாகவும் இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. வே. தம்புசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கூட்டுறவு நூற்பாலை என்று 18 ஆலைகள் இருக்கின்றன. இந்த 18 ஆலைகளில் (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. தம்புசாமி பேசட்டும்.

திரு. வே. தம்புசாமி: இதிலே, **

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. தம்புசாமி அவர்களுக்கு மற்றவர்களுக்கு இல்லாத ஒரு வாய்ப்பு என்ன என்று சொன்னால், திரு. தம்புசாமி அவர்களும், திரு. பழனிசாமி அவர்களும் தினந்தோறும் எல்லா மானியக் கோரிக்கையிலும் பேசுவதற்கு அருமையான ஒரு வாய்ப்பு இருக்கிறது. அவர்கள் ஆற அமர பேசலாம். ஆகவே, அவர் குறிப்பிடுகின்ற

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

அந்த டெக்ஸ்டைல் மில்ஸ் எல்லாம் தொழிற்துறையிலே வரவில்லை. தனியாக, கைத்தறி துணிநூல் துறையிலே அந்த மானியக் கோரிக்கை வருகின்றபோது, நீங்கள் விரிவாக கேள்வி கேட்கலாம். அந்தத் துறை சம்பந்தப்பட்ட அமைச்சர் உங்களுக்கு நல்லமுறையில் பதில் சொல்வார் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நீங்கள் ஒரு குற்றச்சாட்டை சொல்லுகின்றபோது, குறிப்பாக ஒரு தொழிற்சாலையில் இந்தப் பிரச்சினை வருகிறது என்று, ** என்று சொன்னால், அதற்கு அமைச்சர் பதில் அளிப்பதற்கு வசதியாக இருக்கும். எனவே எந்தக் குற்றச்சாட்டாவது சொல்லப்படுகின்றபோது அதைக் குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதே நேரத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதைப்போல இந்த நூற்பாலைகள் சம்பந்தமாக அந்த மானியக் கோரிக்கை வர இருக்கிறது. எனவே அப்போது அதைப்பற்றிப் பேசிக்கொள்ளலாம். இப்போது அது வேண்டாம். எனவே அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

பிற்பகல் 12-50

திரு. வே. தம்புசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைக்குத் தமிழ்நாட்டிலே மிகப் பெரிய தொழிலாக இருக்கக்கூடிய ஸ்டாண்டர்டு மோட்டார்ஸ் கம்பெனி. இந்த ஸ்டாண்டர்டு மோட்டார் தொழிற்சாலை தொடர்ந்து திறக்கப்பட வேண்டும் என்று பலதரப்புகளிலே வற்புறுத்தப்படுகிறது. அரசு மூலம் 4 கோடி ரூபாய் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இன்று வரையிலும் திறப்பதற்கான எந்தவிதமான நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. தம்புசாமி, ஏற்கெனவே நீங்கள் பலமுறை ஒரு முறை அல்ல, இரண்டு மூன்று முறைகள் இந்தக் குற்றச்சாட்டைச் சொல்லியிருக்கிறீர்கள். திரு. பழனிசாமி அவர்களும் சொல்லியிருக்கிறார். இன்னும் மற்ற எதிர்கட்சியைச் சார்ந்த உறுப்பினர்களும் சொல்லியிருக்கிறார்கள். அத்தனைக்கும் இரண்டு மூன்று முறை அமைச்சர் அவர்கள் தெளிவான, விரிவான பதிலை ஏற்கெனவே சொல்லியிருக்கிறார்கள். மீண்டும் மீண்டும் இதிலே நீங்கள் சொல்வது என்பது முறையாக இருக்காது. அது அவையினுடைய விதிக்கும் உட்பட்டதாக இருக்காது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

திரு. ஜி. பழனிசாமி: துணைத் தலைவர் அவர்களே, தெளிவாக பதிலை....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: உட்காருங்கள். மாண்புமிகு தொழில் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி: துணைத் தலைவர் அவர்களே, இந்த ஸ்டாண்டார்டு மோட்டார்ஸ் தொழிற்சாலை பற்றி ஏற்கெனவே இந்த மன்றத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் நானும் பல தடவை சொல்லியிருக்கிறோம். இருந்தாலும் அவர் மூடப்பட்டிருக்கிறது; அது ஏன் திறக்கப்படவில்லை என்று கேட்கிறார். அதற்குரிய பதிலை நான் என்னுடைய பதிலுரையில் தெரிவிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் அவர்கள், வேண்டாம் அதை அவைக் குறிப்பிலிருந்து எடுத்துவிட்டோம். திரு. தம்புசாமி.

திரு. வே. தம்புசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அடுத்து டான்ஸி இருக்கிறது. அதிலே பல்வேறு உப தொழில்கள், தொழில்கள் இருக்கின்றன. அந்தத் தொழில்களும் கிட்டத்தட்ட குறைந்து வருகிறதே ஒழிய வளர்ந்து வருகிறது என்று சொல்ல முடியாது. அப்படி குறைந்து வருவதற்கு என்ன அடிப்படையான காரணங்கள் என்று பரிசீலிக்க வேண்டும். பொதுவாக லாபம் வரவில்லை அதனால் அந்தத் தொழில் பாதிக்கப்பட்டிருக்கிறது என்று சொல்ல முடியாது. இன்றைக்குத் தனியார்கள் பல்வேறு தொழில்களை நடத்திக்கொண்டிருக்கிறார்கள். அந்தத் தொழில்கள் இன்றையதினம் வளர்க்கப்படுகிறது. அது மேலும் மேலும் வளர்ச்சி அடைகின்ற ஒரு சூழ்நிலை இருக்கிறது. அப்படியிருக்கின்றபோது அரசு நடத்தக் கூடிய இதுபோன்ற தொழில்கள் மட்டும் இப்படி நஷ்டத்திலே இயங்குவதற்கான காரணங்கள் என்ன என்பதைப் பரிசீலிக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. துரை ராமசாமி: மாண்புமிகு சட்டப்பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, டான்ஸி நிறுவனம் கடந்த ஆண்டு, இந்த ஆண்டு லாபத்தை ஈட்டியிருக்கிறது. நட்டத்தில் போகவில்லை. ஏற்கெனவே முன்பு இருந்த அரசு மற்ற காலங்களிலே ஏற்பட்ட நட்டங்களைத்தான் இப்போது ஈடு செய்வதிலே சிரமம் இருக்கிறதே ஒழிய அது நட்டத்திலே இல்லை என்பதைச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு. வே. தம்புசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நட்டம் வராத நிலையில் 65 ஊழியர்களை இப்போது ஆட்குறைப்பு செய்ததற்கு என்ன அவசியம் ஏற்பட்டிருக்கிறது. இப்போது ஆட்குறைப்பு செய்யப்பட்டிருக்கிறார்கள். லாபம் வரக்கூடிய ஒரு தொழிலிலே பணியாற்றக்கூடிய அந்தத் தொழிலாளர்கள் மொத்தத்திலே 105 பேர்கள் வேலை செய்வதில் 65 பேர்கள் ஆட்குறைப்பு செய்வதற்கு நேற்றையதினம் அறிவிக்கப்பட்டு இருக்கிறது. இது எப்படி பொருந்தும் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. துரை ராமசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அது வாலண்டரி ரிடையர்மெண்ட் தான். அவர்களாக தன்னிச்சையாக ரிடையர் ஆகின்றோம் என்று எழுதிக் கொடுத்து வாலண்டரி ரிடையர்மெண்ட்டிலே சென்றிருக்கிறார்கள். மற்றபடி டான்ஸி நிறுவனத்திலிருந்து நாம் யாரையும் நிறுத்தவில்லை.

திரு. வே. தம்புசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,**

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. துரை ராமசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மிகவும் தவறான தகவலை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கு கொடுக்கக் கூடாது. அவர் மூத்த உறுப்பினர், அனுபவம் மிக்கவர். இப்படி தவறான தகவல்களை சபைக்குக் கொடுப்பது நியாயம் அல்ல.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. தம்புசாமி, நீங்கள் ஒரு குற்றச்சாட்டைச் சொன்னீர்கள். அதிலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெளிவாக அவர்களாகவே முன்வந்து வாலண்டரி ரிடையர்மெண்ட் கொடுத்திருக்கிறார்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். எனவே அதனை நீங்கள் தவறான நோக்கத்தில் சொல்வது என்பது சரியாக இருக்காது. எந்த ஆதாரத்தின் அடிப்படையில் அதைச் சொல்கின்றீர்கள்? அப்படி ஏதாவது ஆதாரம் இருந்து கொடுத்தால் மட்டுமே நான் அதை அவைக் குறிப்பிலே வைத்துக்கொள்ள முடியும்.

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

நீங்கள் எந்த குறிப்பையும் கொடுக்காமல் தன்னிச்சையாக சொல்வதால் அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

பிற்பகல் 12-55

திரு. வே. தம்புசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தயவு செய்து பரிசீலிக்க வேண்டும். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: ஒன்றும் பரிசீலிக்க வேண்டாம். திரு. பழனிசாமி, நான் கேட்பதற்கு மட்டும் நீங்கள் சொல்லுங்கள். (குறுக்கீடு) பரிசீலிப்பது என்பதைப் பற்றி மாண்புமிகு அமைச்சர் சொல்லுவார். ஆனால் திரு. தம்புசாமி, யாராவது அப்படி ஒரு குற்றச்சாட்டை உங்களிடத்திலே சொல்லி ஒரு புகார் கொடுத்திருந்தால் அந்தப் புகாரை இந்த அவைக்கு நீங்கள் அளித்தால் மட்டுமே நாங்கள் அதனை ஏற்றுக் கொள்ள முடியும். அந்தவிதமான புகார் எதுவும் தங்களிடத்தில் இல்லை. இப்படி நீங்களாக ஒரு குற்றச்சாட்டைச் சொல்லுவது என்பது சரியாக இருக்காது. எனவே, அது அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

திரு. வே. தம்புசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சொல்லக்கூடிய கோரிக்கை சரியா; தவறா; என்று பரிசீலிக்க வேண்டும். பரிசீலித்த பிறகு சொல்லுவது தவறாகக் கூடச் சொல்லலாம். ஆனால் (குறுக்கீடு) கேளுங்கள், பத்திரிகையைக் காட்டினால் இந்த ஆதாரத்தை ஏற்றுக்கொள்ள முடியாது என்று சொல்லுகிறீர்கள். அப்புறம் ஆதாரத்தைச் சொன்னால் இதை ஏற்றுக்கொள்ள முடியாது என்று சொல்லுகிறீர்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. தம்புசாமி (குறுக்கீடு) நியூஸ்பேப்பரில் வருவதை இந்த அவையில் ரிலையபிளாக எடுத்துக்கொள்ள முடியாது என்று ஏற்கெனவே ரூலிங்ஸ் இருக்கிறது. அதற்குரிய அவை விதிகளும் இருக்கின்றன. இந்த அவையினுடைய விதிகளின் அடிப்படையில்தான் தீர்ப்புகளைச் சொல்ல முடியுமே தவிர தன்னிச்சையாகச் சொல்லிவிட முடியாது. இப்போது நீங்கள் ஒரு குற்றச்சாட்டைச் சொல்லுகிறீர்கள்; அமைச்சர் இல்லை என்று மறுத்திருக்கிறார். ஆனால் உங்களிடத்திலே ஏதாவது ** என்று சொல்லி ஒரு புகார் கொடுத்திருந்து அந்தப் புகாரை இந்த அவையில் நீங்கள் கொடுத்திருந்தால் அதை ஏற்றுக்கொள்ளலாம். எனவே, நீங்கள் சொல்லுகின்ற குற்றச்சாட்டு தன்னிச்சையானது. அதை ஏற்றுக்கொள்ள

** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

முடியாது. அப்படி ஏதாவது உங்களிடத்தில் நிச்சயமாக ஆதாரம் இருக்குமானால் இந்த அவையில் நீங்கள் சமர்ப்பிப்பீர்களானால் அதனை நாங்கள் அவைக் குறிப்பில் எடுத்துக்கொள்ள முடியும். இந்த சமயத்தில் இது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

திரு. ஜி. பழனிசாமி: பாயின்ட் ஆப் ஆர்டர். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்படி வாலண்டரியாக தங்களுடைய வேலைகளை ராஜினாமா எழுதிக் கொடுத்துவிட்டு அதற்கான கிராஜுவிட்டி போன்ற பணங்களை எல்லாம் வாங்கி விலகக்கூடியவர்கள் அதைபோல் ஸ்டாண்டர்டு மோட்டாரிலே கிட்டத்தட்ட நூற்றுக்கு மேற்பட்டவர்கள் எழுதிக்கொடுத்து இதுவரையில் அவர்களுக்குப் பணம் கொடுக்கப் படவில்லை; அந்த தனியாரிடத்திலிருந்தும் பெற்றுக் கொடுக்கப்படவில்லை; அதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது?

அது ஆதாரபூர்வமாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது; பல தடவை சட்டமன்றத்தில் வினாவாக கிளப்பப்பட்டிருக்கிறது; அதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. பழனிசாமி, நீங்கள் பாயின்ட் ஆப் ஆர்டர் என்று சொல்லிவிட்டு பாயின்ட் ஆப் கிளாரிபிகேஷன் கேட்டுக்கொண்டிருக்கக்கூடாது. உங்களுடைய கருத்துக்களை எல்லாம் இதிலே கேட்கக்கூடாது. திரு. தம்புசாமி.

திரு. வே. தம்புசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற குறைபாடுகளைச் சொல்லுகிற போது எந்தவகையில் ஆதாரம் கொடுக்கவேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தன்னுடைய விளக்கத்தில் சொல்ல வேண்டும். இனிமேல் அப்படி ஆதாரம் தேடி கொடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படலாம்.

அடுத்து, தொழில்களுக்கு கடன் கொடுக்கிறபோது சாதாரணமாக ஏழை, எளிய குடும்பங்களில் இருக்கக்கூடியவர்கள், படித்தவர்கள், பட்டதாரியாக இருக்கக் கூடியவர்கள் அல்லது தொழில் கல்வி பயிற்சி பெற்றவர்கள், அவர்கள் தொழிலுக்கு கடன் கேட்கிறபோது சம தொகைக்கு ஜாமீன் கேட்கப்படுகிறது. சாதாரணமாக ஒரு டிராக்டர் வாங்குவதற்கு 2 லட்ச ரூபாய் ஆகுமானால் 21/4 லட்ச ரூபாய்க்கு ஜாமீன் கேட்கப்படுகிறது. அப்படி ஜாமீன் கொடுக்க முடியுமா? அப்படி ஜாமீன் கொடுக்க முடியாத காரணத்தால்....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்.

1995 ஏப்ரல் 24]

மாண்புமிகு திரு. துரை ராமசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 50 ஆயிரம் ரூபாய்க்கு கீழே இருப்பதற்கு கொலாட்ரல் செக்யூரிட்டியை நாம் கேட்பது இல்லை. அதற்கு மேலே வருகின்றபோது அவர்கள் அந்தக் கட்டிடங்கள் கட்டுவதற்கு, அந்த மிஷின் வாங்குவதற்கு கடன் பெறுகிறார்கள். அந்த மிஷினரி வேல்யூ; பில்டிங் வேல்யூ; சைட் வேல்யூ; அதைத்தான் நாம் கொலாட்ரல் செக்யூரிட்டியாக எடுத்துக்கொள்கிறோம். அதற்கும் அதிகமாக கடன் வாங்குகின்ற நேரத்தில் தான் வேறு சொத்துக்களைக் கேட்கிறோமே ஒழிய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லுவது போல் வேறு சொத்துக்களை கொலாட்ரல் செக்யூரிட்டியாக இப்போது கேட்பது இல்லை.

திரு. வே. தம்புசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான், கட்டிடங்களை கட்டுவது, இயந்திரம் வாங்குவது பற்றி குறிப்பிடவில்லை. சாதாரணமாக படித்த, வேளாண்மைக் கல்வி பயின்ற, விவசாயக் குடும்பத்தில் பிறந்த ஒருவர் டிராக்டர் வாங்கவேண்டுமென்று விரும்புகிறார்; அந்த டிராக்டர் வாங்குவதற்கு 2¼ லட்ச ரூபாய் கடன் பெறவேண்டும். 2¼ லட்ச ரூபாய்க்கு மேலே அவர் ஜாமீன் கொடுக்கவேண்டியதாக இருக்கிறது. ஜாமீன் கொடுக்கிற அளவுக்கு அவருக்கு நிலம் இருந்தால் அந்த டிராக்டர் வாங்க வேண்டிய அவசியம் இல்லை. ஆகவே அதை ரத்து செய்யவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. துரை ராமசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, டிராக்டர் வாங்குவதிலேயும் அவர் ஹையர் பர்சேஸ் ஸ்கீமில் வாங்குகிறார். அந்த டிராக்டரைத் தான் ஐபாத்திகேட் செய்கிறார். அதைத்தான் கடனுக்குக் கொடுக்கிறார்; கொடுத்துத் தான் கடன் வாங்குகிறார். அதிக கடன் பெறுகிறபோதுதான் கொலாட்ரல் செக்யூரிட்டி வருகிறது. இந்த டிராக்டர் வாங்குகிறாரே அதையே கொலாட்ரல் செக்யூரிட்டியாக நாம் எடுத்துக்கொள்கிறோம் என்பதை நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு. வே. தம்புசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அடுத்து, அந்த மாதிரி ஏழை, எளிய குடும்பத்தில் இருக்கக்கூடியவர்கள், ஒரு சாதாரண வாடகை வண்டி வாங்குவது அல்லது ஒரு வேன் வாங்குவது என்றால் அதற்கு... (குறுக்கீடு) இல்லை,

கிடையாது, இப்போது சாதாரணமாக ஒரு வேன் வாங்குவதற்கு சொத்து ஜாமீன் கொடுக்க வேண்டியிருக்கிறது. (குறுக்கீடு) அவர் கிட்டத்தட்ட 1½ லட்ச ரூபாய்க்கு 1¾ லட்ச ரூபாய் சட்ட பூர்வமான வில்லங்கம் இல்லாத சொத்து ஜாமீன் கொடுக்கப்படவேண்டும். சொத்து ஜாமீன் கொடுத்தால்தான் கடன், இல்லையென்றால் கடன் இல்லை. அவ்வாறு இல்லையென்பது சரியானதல்ல. ஆகவே நான் கூறுவதெல்லாம்..

பிற்பகல் 1-00

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. துரை ராமசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தயவுசெய்து சரியானது அல்ல என்று சொல்லக் கூடாது. நான் சொன்ன கருத்து சரியான கருத்துதான். தமிழ்நாடு நிதிநிறுவனங்கள் ஸ்தாபனங்களில் மட்டுமல்ல, Lead Banks and other Nationalised Banks -லே கூட கடன் மூலமாக டிராக்டர் வாங்கினால், அந்த டிராக்டரைத்தான் முதல் ஜாமீனாக எடுத்துக் கொள்கிறார்கள். அது போதவில்லை என்கிறபோதுதான், சொத்து ஜாமீன் கேட்கிறார்கள். அதனால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதை நன்றாக விசாரித்து தெரிந்து கொண்டால் நல்லது என்று கருதுகிறேன்.

திரு. வே. தம்புசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு சாதாரண குடும்பத்திலே பிறந்த பையன் வேன் வாங்குவதற்காக சாசனம் அடமானம் வைக்கப்பட்டு இருக்கிறது. இது உண்மை. இப்போது நடந்த நிகழ்ச்சியைத்தான் நான் சொல்கிறேன். ஒன்னேமுக்கால் லட்சம் பெறுமானமுள்ள நிலத்தை, தாசில்தார் சர்டிபிகேட் வாங்கி, இ.ஓ., சர்டிபிகேட் வாங்கி உண்மையான பத்திரம் உட்பட வங்கியிலே இப்போது இருக்கிறது. அதற்காகத்தான் நான் சொல்கிறேன். ஆகையினால் அதுபோன்ற சாதாரண குடும்பத்தைச் சேர்ந்தவர்களில் உள்ள படித்தவர்களுக்கு வேலை கிடைக்கவில்லை. வேலை கிடைக்காத நெருக்கடி இருக்கிறது. அந்த நெருக்கடியிலே இருந்து குடும்பத்தைப் பாதுகாப்பதற்காக, இதுபோன்ற சிறுதொழில்களைத் துவங்குகின்றபோது, அவர்களுக்கு எந்தவொரு ஜாமீனும் கோராமல் கடன் வழங்கவேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக் கொள்கிறேன்.

சிறுதொழில்கள் என்று சொல்கிறபோது, கிராமப் புறங்களிலே இன்றைக்குப் பல தொழில்கள் பாதிக்கப்படுகின்றன. மர வேலை செய்யக்கூடியவர்கள், இரும்பு வேலை செய்யக்கூடியவர்கள், பல்வேறு கைவினைப் பொருள்களைச் செய்யக்கூடியவர்கள், இவர்கள் திறமையானவர்களாக இருந்தாலும், இவர்களுக்கு இதுபோன்ற கடன் கிடைக்காமல் அந்தத் தொழிலில் முன்னேற முடியாமல், அதனால் தங்களுடைய குடும்பத்தை நடத்த முடியாமல், பெரிய பெரிய கம்பெனிகளுக்குச் சென்று குறைந்த சம்பளம் பெறுகின்ற சூழ்நிலைமை இருக்கிறது. ஆகவே, கிராமங்களிலே இருக்கக்கூடிய, மர வேலை செய்யக்கூடியவர்களாக இருந்தாலும் அவர்களுக்குக் கடன் வழங்கப்பட வேண்டும். அதேமாதிரி இரும்பு வேலை செய்யக்கூடியவர்களுக்கும் கடன் வழங்கப்பட வேண்டும். அதேபோல, பல்வேறு பொருள்களைச் செய்யக்கூடியவர்களுக்கும் கடன் வழங்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். மேலும், கடன் வழங்கிவிட்டால் மட்டும்போதாது, அவர்களால் உருவாக்கப்படுகின்ற பொருள்களை அரசே கொள்முதல் செய்யவேண்டும். உதாரணத்திற்குச் சொல்லவேண்டுமென்றால், இரும்பு வேலை செய்யக்கூடியவர்கள், வேளாண்மைக்குப் பயன்படக்கூடிய பரம்பு சட்டம் இருக்கிறது. அந்த பரம்பு சட்டத்தை கிராமப்புறங்களிலே விவசாயம் செய்யக்கூடிய விவசாயிகளுக்கு அரசு மூலம் இரும்பு வேலை செய்யக்கூடியவர்களிடமிருந்து வாங்கிக் கொடுக்க முடியும். ஆனால், அந்த பரம்புச் சட்டம் ஓரிடத்திலிருந்து தருவிக்கப்பட்டு கொடுக்கப்படுகிறது. அதைத் தவிர்த்து அரசு மூலமாக மானியத்திலே அளிக்கக்கூடிய பொருளை சிறு தொழில்கள் நடத்தக்கூடியவர்களே அவற்றைச் செய்து வழங்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்யவேண்டும்.

அதேமாதிரி கட்டுமானத் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். அவர்களும் இன்றையதினம் குறைந்த சம்பளத்தில் வேலை செய்கின்ற ஒரு வாய்ப்பு இருக்கிறது. அவர்கள் கட்டிடம் கட்டுவதற்கான மூலப் பொருள்களை வாங்குவதற்கோ அல்லது கட்டிடங்களைச் சுத்தப்படுத்துவதற்கோ அல்லது கட்டிடங்களை பாலிஷ் போடுவதற்கான இயந்திரங்களை வாங்குவதற்கோ, கடன் வழங்குவதன்மூலம் அவர்களுடைய வாழ்க்கைத் தரம் உயருவதற்கு உதவிகரமாக இருக்கும்.

இன்றையதினம் கடனில் மாட்டுவண்டிகள் வழங்கப்படுகின்றன. மாட்டு வண்டிகளை யாருக்கு வழங்குகிறார்கள்; எங்கே வழங்குகிறார்கள்; எப்படி வழங்குகிறார்கள் என்பதே தெரியவில்லை. (மணியடிக்கப்பெற்றது)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. துரை ராமசாமி: மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாட்டு வண்டி வழங்குவது என்பது இந்தத் துறையிலே வராது, அதை விவசாயத்துறையிலே கொடுக்கிறார்கள். அந்த மானியத்தின்போது அவைகளைப் பேசினால் சரியாக இருக்கும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. தம்புசாமி, விவசாய மானியக் கோரிகையிலே சொல்லவேண்டியதை எல்லாம் இப்போது சொல்லிக்கொண்டு இருக்கிறீர்கள்.

திரு. வே. தம்புசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதுவும் சிறு தொழில் சம்பந்தப்பட்டது என்பதால், சிறு தொழில்கள் மூலமாக அந்த மாட்டு வண்டிகளைத் தயாரிப்பதற்கு கடன் வழங்கவேண்டுமென்பதற்காகச் சொல்கிறேன். அதேபோல, அச்சுத் தொழில் செய்யக்கூடியவர்களுக்கும், நகரிலே 'சா மில்' வைத்து நடத்தக் கூடியவர்களுக்கும் கடன் வழங்கப்பட வேண்டும். சாதாரணமான, ஏழைக் குடும்பங்களாகப் பார்த்து கடன் கொடுப்பதன் மூலம், அடித்தளத்திலே இருக்கக் கூடிய மக்களுக்கு பொருளாதார வசதி ஏற்படுத்திக் கொடுப்பதற்கு அது உதவியாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். அந்த வகையிலே கடன் வழங்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். கடன் வழங்குகிறபோது, குறைந்தபட்சம் அந்தந்தப் பகுதிகளிலே இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்கள் அல்லது அரசு சொல்கிறமாதிரி பொதுஜன சேவையிலே ஈடுபடக்கூடியவர்களுடைய முன்னிலையிலே பரிசிலித்து வழங்கினால் கடன் வழங்கப்படுவதில் தவறு நடக்காமல் தடுப்பதோடு, தவறு நடப்பதிலிருந்து பாதுகாக்கலாம்.

உதாரணத்திற்குச் சொல்லவேண்டுமென்றால்,** அதற்கான முழு ஆதாரங்களையும் அமைச்சர்கள் கையிலே கொடுத்து இருக்கிறேன். நான் சும்மா சொல்லவில்லை. அமைச்சர்கள் கையிலே கொடுத்திருக்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்.

பிற்பகல் 1-05

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன்: எந்த அமைச்சர் கையிலே? (குறுக்கீடு) இல்லை, இல்லை, என்னிடத்திலே கொடுக்கவே இல்லை. தப்பாகச் சொல்லக் கூடாது கொடுத்தால் எனக்கு முதல் வேலையே

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

அதுதான், நடவடிக்கை எடுக்கிற வேலையே. இப்படியெல்லாம் சொல்லக்கூடாது. கரெக்டாகச் சொல்ல வேண்டும்.

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆதிதிராவிடர்களுக்கு ** அதற்கு ஆதாரம் கொடுத்து இருக்கிறேன் என்று சொன்னால், அது அவைக்குறிப்பிலே இருக்கும்பொழுது ** போல ஒரு தோற்றத்தை உருவாக்கும். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் தம்புசாமி அவர்கள், ஒன்று ஆதாரத்தை அவைத் தலைவர் மூலமாகக் கொடுத்துவிட்டுப் பேச வேண்டும். (குறுக்கீடு) அமைச்சரிடத்திலே ஆதாரம் கொடுக்க முடியாது, அவையில் பேசுகின்றபொழுது...

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர், நான் சொல்கிறேன். மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் பதில் சொல்ல வந்தது (குறுக்கீடு) சரி, அமைச்சர் சொல்லி முடிக்கட்டும்.

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி : அவையில் பேசுகிறபொழுது ஆதாரங்களை அவைத் தலைவரிடத்திலே கொடுத்துவிட்டுத்தான் பேச வேண்டும். அடுத்து, திரு. தம்புசாமி அவர்கள் திரும்பத்திரும்ப ஒரு கருத்தைச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். தொழில்களுக்குக் கடன் கொடுக்கும்பொழுது ஜாமீன் இல்லாமல் கொடுக்க வேண்டுமென்று சொன்னார்கள். பொதுவாகக் கடன் என்பது ஜாமீன் கொடுத்துத்தான் பெறவேண்டும். இல்லையென்று சொன்னால் அது கம்யூனிஸ்டுகள் தொழிற் சங்கத்தில் வசூலிப்பதுபோல சந்தாவாக ஆகிவிடும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : தம்புசாமி, இப்பொழுது நீங்கள் சொன்ன குற்றச்சாட்டு—ஏற்கெனவே ஊரகத் தொழில் துறை அமைச்சரிடத்திலே ஒரு குற்றச்சாட்டைச் சொன்னீர்கள். அது ஆதாரமற்றது என்று சொல்லி அவைக் குறிப்பிலேயிருந்து நீக்கச் சொன்னேன்—இப்பொழுது நீங்கள் புதியதாக ஒரு குற்றச்சாட்டைச் சொன்னீர்கள். ஆதாரத்தை ஏற்கெனவே அமைச்சரிடம் கொடுத்திருக்கிறேன் என்று சொல்லியிருக்கிறீர்கள். ஆனால் அமைச்சர் சொல்லட்டும் என்பதற்காகத் தான் நான் காலம் கொடுத்தேன். அதற்குப் பின்னால் அமைச்சர் பதில் சொல்லுகின்றபொழுது, இதுவரை என்னிடத்திலே கொடுக்கப்படவில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். எனவே, இப்படித் தவறாக இந்த அவையிலே கருத்துக்களை நீங்கள் சொல்ல வேண்டாமென்று கேட்டுக் கொள்வதோடு,

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

நீங்கள் சொன்ன ** சம்பந்தமான அந்தக் கருத்துக்கள் அவைக் குறிப்பிலேயிருந்து நீக்கப்படுகின்றன. (குறுக்கீடு) மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. துரை ராமசாமி : மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் தயவு செய்து தொழில் துறை, ஊரகத் தொழில் துறை, காதி இந்த மூன்று துறைகளிலே உள்ள கருத்துக்களைச் சொன்னால் அது அரசுக்குப் பிரயோஜனமாக இருக்கும். அவர்கள் விவசாயத் துறை, ஆதிதிராவிடர் துறை, ஹேண்ட்லூரம்ஸ் இப்படிப் பல்வேறு டிபார்ட்மெண்டுகளிலே பேசுகிறபொழுது, நாங்கள் சொல்ல முடியாமல் சிரமமாக இருக்கிறது. ஆகையால், இந்த மூன்று துறைகளுக்குள் பேசும்படி அன்போடு கேட்டுக்கொள்ளுகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

திரு. வே. தம்புசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் ஜாமீன் வாங்கிக் கொண்டுதான் கடன் கொடுக்கப்படுகிறது என்று சொன்னார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் அப்போதைக்கப்போது தம்புசாமிக்கு ஞாபகப்படுத்த வேண்டியிருக்கிறது. எப்பொழுது பார்த்தாலும் இந்தத் திசை நோக்கிப் பேசினீர்கள் என்றால் இந்தக் குழப்பம் வராது. நீங்கள் அமைச்சர்கள் இருக்கின்ற திசையை நோக்கியே பார்த்துப் பேசுகிறீர்கள்.

திரு. வே. தம்புசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சரவர்கள் ஜாமீன் வாங்கிக் கொண்டுதான் கடன் கொடுக்கப்படுகிறது என்று குறிப்பிட்டார்கள். நான் கூறுவது ஏழ்மை நிலையிலே இருக்கக் கூடியவர்கள், வறுமையிலே வாடக் கூடியவர்கள், அந்தத் தொழிலிலே படித்துப் பட்டம் பெற்றிருக்கக் கூடியவர்கள், குறைந்தபட்சம் தொழில் செய்வதற்கு அவர்களிடம் ஜாமீன் கேட்டால் யார் யாரை நம்பி, ஏழைகளை நம்பி யார் ஜாமீன் கொடுப்பார்கள் ? அவர்கள் கொடுக்க முடியுமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்.

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

மாண்புமிகு திரு. துரை ராமசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொல்வதுபோல மிக வசதி அற்றவர்கள், மிகவும் வறுமைகோட்டிற்குக் கீழே இருப்பவர்களுக்காகத்தான் ஐ.ஆர்.டி.பி. லோன் கொடுக்கின்றோம். அதற்கு எந்த ஜாமீனும் நாம் கேட்கவில்லை. 50,000-க்குக் குறைவாகத் தொழில் செய்பவர்களுக்கும் நாம் Collateral Security கேட்பது இல்லை என்று ஏற்கெனவே நான் சொல்லியிருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பேசுவது கேட்பதற்கு அழகாக இருக்கும். ஆனால், இந்த அரசைப் பொறுத்தவரையில் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இதுபோன்ற சிக்கல்களைத் தீர்க்கின்ற வகையிலேதான் ஆதிதிராவிட மக்கள் கடன் பெறுவதற்காக மார்ஜின் தொகையை 85,000 ரூபாய் இருந்ததை ஒன்றேகால் இலட்சமாக உயர்த்தியிருக்கிறார்கள். அதாவது மானியத் தொகை 15 ஆயிரம் ரூபாயாக இருந்ததை 25 ஆயிரமாக உயர்த்தியிருக்கிறார்கள். இப்படி உயர்த்திய காரணத்தினால் ஆதிதிராவிடர், ஏழை எளிய நலிந்த மக்கள் மிகச்சிறப்பான முறையிலே கடன் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. வே. தம்புசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏழை எளிய மக்கள் கடன் பெறுகிறார்கள், எனக்கு ஆட்சேபணை கிடையாது. ஆனால் ஒன்று, இந்த மாவட்டத்தைப் பொறுத்த வரையிலே இப்பொழுதும் மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சரவர்கள் கொடுத்திருக்கிற கடன், யார் யாருக்குக் கொடுக்கப்பட்டது என்று ஒன்றியத்திலே பட்டியல் கொடுக்கத் தயாராக இருப்பார்களா என்று அறிய விரும்புகிறேன். அவ்வளவுதான். (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமைச்சர் சொல்லும்பொழுது பிறகு அவர் பேசாமல் என்ன செய்வார் ? (குறுக்கீடு) நீங்கள் பதில் சொல்லியிருந்தால் பரவாயில்லை. ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்—அவர் தொழில் துறையில் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். இந்த அமைச்சர்கள் பதில் சொன்னால் பரவாயில்லை. நீங்கள் பதில் சொல்லி விடுகிறீர்கள். பிறகு உறுப்பினர் உங்களிடத்திலேதான் கேள்வி கேட்க வேண்டியிருக்கிறது. அப்பொழுது சம்பந்தப்பட்ட அமைச்சர் எங்கள் மானியத்தை விட்டுவிட்டு ஆதிதிராவிடர் மானியத்தில் பேசுகிறீர்கள் என்று உறுப்பினரைக் கேட்க வேண்டியிருக்கிறது.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ** என்று சொன்னார். அதற்காகத்தான் நான் எழுந்தேன். இல்லையென்றால் எழுந்திருக்க மாட்டேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்பொழுது அவர் இந்தச் சிறுதொழில் கடன் கொடுப்பது பற்றிப் பேசிக்கொண்டிருக்கிறார்.

பிற்பகல் 1-10

திரு. வே. தம்புசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் ஏதோ எங்கள் கட்சிக்காக கேட்கிறதாகவும், கட்சிக்காக கொடுக்க வேண்டுமென்று சொல்வதாகவும் சொன்னார்கள். நான் தயவுசெய்து என் கட்சிக்காக கேட்கவில்லை. உங்கள் கட்சிக்காரர்களுக்கே, ஏழ்மை நிலையில் இருப்பவர்களுக்கே நீங்கள் கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருக்கு நம்முடைய ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் விளக்கமாகச் சொல்லியிருக்கிறார்கள். 50 ஆயிரத்திற்குக் கீழே Self Employment Scheme, அதாவது சுய வேலைவாய்ப்புத் திட்டத்தில் படித்த இளைஞர்களுக்கு மாவட்ட தொழில் மையத்தின் மூலம் சிபாரிசு செய்யப்பட்டு, அந்தந்த வங்கிகளிலே கடன் கொடுக்கப்படுகிறது. அப்படி கொடுக்கப்படுகிற கடன்களுக்கு யாரும் ஜாமீன் கேட்பதில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. வே. தம்புசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜாமீன் இல்லையென்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்ததற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். அந்த நிலைமைகள் அப்படி கீழே இல்லை என்பதையும் பரிசீலிக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக் கொள்கிறேன். அதோடுகூட ஒரு வங்கி..... (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தொழில் துறையில் கேட்டுக் கொண்டிருக்கிறார். ஐ.ஆர்.டி.பி.-க்குப் போகப் போகிறீர்கள். மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : இல்லை வேறு எதற்கும் போகவில்லை. ஒரு small clarification. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகிறபோது தன்னுடைய கட்சிக்காரர்களுக்கு அவர் லோன் கொடுக்கவில்லை. அண்ணா தி.மு.க.-விலே இருக்கின்ற ஏழ்மையில் இருக்கின்ற கட்சிக்காரர்களுக்காவது கொடுங்கள் என்று மிக அக்கறையோடு சொன்னார். தெளிவாக சொல்ல வேண்டுமென்று சொன்னால், புரட்சி தலைவி அவர்களுடைய உத்தரவே ஏழ்மை நிலையில் இருக்கின்ற யாராக இருந்தாலும் அவர்களுக்கு தகுதி இருப்பின் விதிமுறைப்படி அவர்களுக்கு லோன் வழங்க வேண்டுமென்றுதான் சொல்லியிருக்கிறார்களே தவிர, கட்சிப் பாகுபாடோ அல்லது எங்கள் கட்சியைச் சார்ந்தவர்களுக்கோ என்று சொல்லவில்லை. அது எங்களுக்குத் தெரியும், யாருக்கு கொடுக்க வேண்டுமென்று. இதுதான் உண்மையான பிரின்சிபில், கருத்து, ஏழ்மை நிலையிலே இருப்பவர்களுக்கு கொடுக்க வேண்டும் என்பதுதான்.

திரு. வே. தம்புசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்ட கருத்தை நான் ஏற்றுக் கொள்கிறேன், இல்லையென்று மறுக்கவில்லை. ஆனால், கடன் வழங்கிய பட்டியலை ஊராட்சி ஒன்றியத்திலே அறிவிப்பார்களா ? இப்போதும் கேட்கிறேன், அறிவிக்கத் தயாரா என்று கேட்டுக் கொள்கிறேன். (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கும் நான் சொல்கிறேன், பட்டியல் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வேண்டுமென்று சொன்னால், இன்றைக்கும் நான் அறிவிக்கத் தயாராக இருக்கிறேன். அதிலே ஒளிவு மறைவு இல்லை. It is not a secret document. ஒரு 100 கடன்கள் வழங்குகிறோம் என்று சொன்னால், 100 கடன்கள் யாருக்கு வழங்கப்பட்டிருக்கிறது என்பதை அறிவிக்கத் தயாராக இருக்கிறோம். அதிலே ஒன்றும் இரகசியம் இல்லை. It is not a secret document at all.

திரு. வே. தம்புசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த வகையிலேதான் அந்தச் சாதாரண அடித்தளத்திலே இருக்கின்ற மக்களுக்கு கடன் வழங்க வேண்டும். அப்படி கடன் வழங்குகிறபோது ஒரு பொதுவான குழுவின் மூலம் பரிசீலிக்கப்பட்டு கடன் வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஏன் இதைக் கூறுகிறேன் என்றால், நான் ஒரு மூன்று ஒன்றியத் தொகுதிக்குள் இருக்கின்ற

சட்டமன்ற உறுப்பினர். எனக்கு எந்தக் கடனும் சுத்தமாகத் தெரியாது. பலதடவை எழுதி கேட்டால்கூட அது தரப்படுவதும் கிடையாது. அதனால்தான் இது ஏதோ இரகசியமாக வழங்கப்படுவது, ஏதோ ஒரு விஷயத்திற்கு நடைபெறுவதற்காக வழங்கப்படுகிறது என்று கருதக்கூடிய சூழ்நிலையிருக்கிறது. (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. துரை ராமசாமி : மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, ஊரகத் தொழில் துறையிலும், தொழில் துறையிலும் என்னென்ன கடன்கள் கொடுக்கிறார்கள் என்று ஏற்கெனவே சபையிலும் அறிவித்திருக்கிறோம். பொதுக் கூட்டத்திலும் பேசுகிறோம். பத்திரிகையிலே விளம்பரமும் கொடுத்திருக்கிறோம். ஆக உறுப்பினர் அவர்கள் எத்தனை கடன் வேண்டுமானாலும் அவர்கள் தாராளமாகக் கேட்கலாம். அரசு கொடுக்கத் தயாராக இருக்கிறது. தனக்கே கிடைக்கவில்லை என்ற குறைபாடு அவருக்குத் தேவையில்லை.

திரு. வே. தம்புசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நான் கேட்டதாக குறிப்பிடுகிறார்கள். இதுவரையிலும் எந்த அரசுக் கடனையும் நான் பெற்றது கிடையாது. பெறப்போவதும் கிடையாது என்பதை இந்த நேரத்திலே அமைச்சர் அவர்களுக்குச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். நான் சொந்தத்திலோ, என்னுடைய சொந்த நபர்களுக்கோ, வேண்டியவர்களுக்கோ யாருக்கும் எங்கேயும் கேட்ட வழக்கம் கிடையாது. (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதிலேகூட எங்களுக்கு கருத்து வேறுபாடு உண்டு. நாங்கள் கேட்பதெல்லாம் மாண்புமிகு உறுப்பினர் மக்களுடைய பிரதிநிதி, eligible candidate-க்கு, eligible-ஆக இருக்கக்கூடிய ஏழை எளிய மக்களுக்கு அவர் கொடுப்பார் என்று சொன்னால் அதனை அரசு பரிசீலிக்கத் தயாராக இருக்கிறது. அதைத்தான் திரும்பத் திரும்பச் சொல்கிறோம். நான் கொடுக்கவே மாட்டேன், நான் எதற்குமே போவது இல்லையென்று சொன்னால், தன்னுடைய கடமையிலிருந்து நழுவுகிறார் என்றுதான் அர்த்தம்.

1995 ஏப்ரல் 24]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமைச்சர் சொன்னார். அமைச்சர், தனக்குக் கிடைக்கவில்லை என்று பேசுகிறார் என்று சொல்கிறபோது, நான் கேட்கவில்லை என்றார்.

திரு. வே. தம்புசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த வகையிலேதான் தொழில் கடன் கொடுக்க வேண்டுமென்று கேட்டு வாய்ப்புக்கு நன்றி தெரிவித்து, விடைபெறுகிறேன்.

பிற்பகல் 1-15

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஜெ. பாலகங்காதரன்.

திரு. ஜெ. பாலகங்காதரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெருந்தொழில்கள், ஊரகத் தொழில்கள் மற்றும் கதர் கிராமத் தொழில்கள் ஆகியவற்றில் என்னைப் பேச அனுமதித்த மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சி தலைவி அவர்களுக்கும், தங்களுக்கும் என்னுடைய நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். இன்றைய தினம் தமிழகத்தைப் பொறுத்தமட்டில் இந்திய அளவிலே தொழில் துறையிலே முதலாவது மாநிலமாக அதிக விரைவிலே முன்னேறி வருவதை மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சி தலைவி அவர்களுடைய கொள்கை விளக்கக் குறிப்பு விளக்கிக் கொண்டிருக்கிறது. தமிழகத்தைப் பொறுத்த மட்டில், புதிய தொழில்களைத் தொடங்க, அது பெருந்தொழிலாக இருந்தாலும் சரி, சிறிய தொழிலாக இருந்தாலும் சரி, அத்தொழிலைத் தொடங்குவதற்கு ஒரு உகந்த சூழ்நிலை இருப்பதாகவும், தமிழகம் அமைதிப் பூங்காவாகத் திகழ்கிறது என்றும் இந்தியாவிலே இருக்கின்ற அனைத்து தொழில் அதிபர்களும் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். நான் ஏன் இதைச் சொல்கிறேன் என்றால், கடந்த மாதம் பம்பாயிலே நானும் ஒரு தொழிலதிபர் என்ற முறையிலே தொழிலதிபர்கள் கூட்டத்திலே கலந்து கொண்டபோது, அங்கே பேசிய தொழிலதிபர்கள் அனைவரும் மகாராஷ்டிர மாநிலத்தில் இன்றைக்கு இருக்கக் கூடிய அரசியல் சூழ்நிலையைப் பார்த்துவிட்டு, பம்பாய்க்கு அடுத்தபடியாக சிறந்த மாநிலமாக இன்றையதினம் எந்த வகையிலும் சட்டம் ஒழுங்கு கெடாமல் அமைதிப் பூங்காவாகத் தமிழகம் இருக்கிறது என்று எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சி தலைவி அவர்கள் தொழில் தொடங்க யார் முன்வந்தாலும் சரி, அவர்களுக்கு முன்னுரிமை அளித்துக் கொண்டிருக்கிறார்கள். நாங்கள் எல்லோரும் தமிழகத்தில் தொழில் தொடங்க இருக்கிறோம். உங்களால் ஆன உதவிகளை எங்களுக்குச் செய்ய இயலுமா என்று அவர்கள் கேட்டபோது நான் சொல்லியிருக்கிறேன், நீங்கள் இங்கே இருக்கின்ற அமைச்சர் பெருமக்களை எளிதில் அணுகினால்,

அவர்களே உடனடியாக உங்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்வார்கள் என்று சொல்லியிருக்கிறேன். மேலும் புரட்சி தலைவி அவர்கள் ஆட்சி ஏற்பட்டவுடனே இங்கே அறிவித்திருக்கின்ற தொழில் கொள்கையைப் பற்றி எடுத்துக் கூறியபோது, அவர்கள் அப்படியா, அவ்வாறெல்லாம் செயல்படுகின்றனவா என்று ஆச்சரியப்பட்டு என்னிடம் கேட்டார்கள். அவற்றையெல்லாம் தமிழகத்தில் மட்டும் வைத்துக் கொள்ளாமல், ஒவ்வொரு மாநிலத்திலும் இருக்கின்ற பெரிய தொழில் அதிபர்களுக்கெல்லாம் அனுப்பி எங்களுடைய மாநிலத்தில் இப்படி தொழில்களுக்கு உண்டான ஆக்கத்தையும் ஊக்கத்தையும் நாங்கள் அளித்து வருகிறோம் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒவ்வொரு மாநிலத்திற்கும் ஒரு புத்தகம் வாயிலாக வெளியிட வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கடந்த நான்கு ஆண்டுகளுக்குப் பிறகு நாம் தொழில்களை எடுத்துக்கொண்டால் தொழிலாளர்களுடைய போராட்டங்கள் மிகக் குறைவாக இருக்கின்ற ஒரே மாநிலம் இன்றையதினம் தமிழகம்தான். இப்படிப்பட்ட மாநிலத்தில் தொழில் துவங்க போட்டியாளர்கள் இருக்கின்றார்கள், தொழில் துவங்க முனைவர்கள் அதிகமாக இருக்கின்றார்கள் என்பதை நான் பெருமையோடு கூறிக்கொள்ள விரும்புகிறேன். இதய தெய்வம் டாக்டர் புரட்சி தலைவி அவர்களுடைய புதிய தொழில் கொள்கைக்கேற்ப தமிழகத்தில் இன்றையதினம் டிட்கோ நடத்தி வருகின்ற டான்செம், தமிழ்நாடு மேக்னம் & மெரைன் கெமிக்கல்ஸ், தமிழ்நாடு வெடிமருந்து தொழிற்சாலை ஆகியவற்றை தனியார்மயமாக்க இருப்பதை நான் இங்கே வரவேற்கின்றேன். இதை நான் ஏன் கூறுகிறேன் என்றால், இன்றையதினம் உலக அளவிலே பெரிய மாறுதல்கள் வந்து கொண்டிருக்கின்றன. ரஷ்யா உடைந்துபோன காரணத்தால் இன்றையதினம் அங்கேயே அவர்களே தனியார்மயமாக்குதலுக்கு விரைந்து சென்று கொண்டிருக்கின்ற காலத்திலே இந்தியாவில் நாம் தொழிற்துறையில் முன்னேற வேண்டுமானால் தனியார் துறைக்கு அளித்தால்தான் மிக விரைவாக முன்னேற வாய்ப்பிருக்கிறது. குறிப்பாக டான்செம், என்னுடைய தொகுதியில் ஆலங்குளத்திலே தமிழ்நாடு சிமிண்ட் தொழிற்சாலை நடத்தி வருகிறார்கள்.......

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசைப் பொறுத்தவரையில் தமிழ்நாடு சிமிண்ட் தொழிற்சாலையை தனியாருக்கு கொடுக்கப்படவில்லை, ஒரு கோ-ப்ரமோட்டர் அதிலே இன்னொருவரை முதலீடு செய்கின்ற அளவுக்கு கூட்டாளியைத் தேடிக் கொண்டிருக்கிறோம். தவிர அது முழுக்க

தனியாருக்கு கொடுக்கபடவில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு. ஜெ. பாலகங்காதரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கத்திற்கு நன்றி. It is an associated sector என்று கொள்கை விளக்கக் குறிப்பிலே கொடுக்கப்பட்டிருக்கிறது. அப்படி கோ-ப்ரமோட்-ஆக அவர்களுக்கு கொடுக்கும்போது, அந்த ஆலங்குளத்திலே இருக்கின்ற அந்த தொழிற்சாலையிலே இருக்கின்ற அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த, அண்ணா தொழிற்சங்கத்தைச் சேர்ந்த தொழிலாளர்கள் என்னிடத்திலே ஒரு கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். அது என்னவென்றால், அப்படி கோ-ப்ரமோட்-ஆக அவர்களிடம் ஒப்படைக்கும்போது நிர்வாகமே அவர்களிடம் மாறிவிடுமோ அல்லது எங்களையெல்லாம் வாலண்டரி ரிடையர்மெண்ட் அல்லது ரிட்ரென்ஞ்மெண்ட் செய்து விடுவார்களோ என்று அவர்களிடத்திலே ஒரு ஐயம் நிலவிக் கொண்டிருக்கிறது. அவர்களுடைய ஐயத்தைப் போக்கும் வண்ணம், அவர்களுக்கு ஒரு நிரந்தரப் பாதுகாப்பு தரும் வண்ணம் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கத்தைத் தர வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

பிற்பகல் 1-20

அதோடு மட்டுமல்லாமல் தமிழ்நாடு சிமெண்ட்ஸ் ஆலங்குளத்திலே இருக்கிறது. அந்த தமிழ்நாடு சிமெண்ட்ஸ்-லிருந்து அதிகமான புகை வருகின்ற காரணத்தால் கிட்டத்தட்ட 40, 50 கிராமப் பகுதிகள் பாதிக்கப்பட்டு விவசாயம் பாதிக்கப்படுகிறது. இதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சற்று கண்டிப்பாக கவனிக்க வேண்டும். அங்கே, இ.எஸ்.பி. போட்டு இருக்கிறோம். 460 கோடி ரூபாயிலே மிகப் பெரியத் திட்டத்தை போட்டிருந்தாலும், அங்கே 26 கோடி ரூபாய் செலவிலே எலக்ட்ரோ ஸ்டேடிக் பிரிசிபிடேடர் போட்டிருக்கிறோம். அது ஆரம்பித்த நாளிலிருந்து செயல்படவில்லை என்று சொல்கிறார்கள். அதனால் அங்கிருக்கின்ற 50 கிராமங்களிலுள்ள கிராம மக்கள் விவசாயம் பண்ண முடியவில்லை. அதோடு மட்டுமல்லாமல் ஆஸ்துமா மற்றும் லங்க் டிஸ்ஸீஸஸ் என்று சொல்லக்கூடிய பல நோய்களுக்கு அவர்கள் ஆளாக்கப்படுகிறார்கள். அவற்றையெல்லாம் கவனிக்க வேண்டும். குறிப்பாக அங்கே மறைமுகமாக பயன்பெற்று வரும் கிட்டத்தட்ட 5 ஆயிரம் பேர்களுக்கு இந்த தொழிற்சாலை வாழ்வு அளிக்கின்றது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு அறிக்கை மூலமாக, இந்த தொழிற்சாலை

கோ-புரமோட்டருக்கு கொடுக்கப்பட்டாலும், அதனால் தொழிலாளர்களுக்கு எந்த பாதிப்பும் ஏற்படுத்துமா, ஏற்படுத்தாதா என்று ஒரு அறிக்கை மூலமாக தெரிவிக்க வேண்டும். கண்டிப்பாக ஏற்படுத்தாது என்று நினைக்கின்றேன். அதை தாங்கள் ஒரு அறிக்கை மூலமாக தெளிவுபடுத்த ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதற்கு அடுத்தபடியாக, 1992-லே டிட்கோ மூலமாக ஆதாயப் பங்குத் தொகை அறிவித்து இருப்பதை நான் பாராட்டுகின்றேன். ஏன் என்றால் இன்றைய தினம் பெரும்பாலும், அரசாங்கம் நடத்துகின்ற அனைத்துப் பகுதிகளும் நஷ்டத்தில் இயங்கி வருகின்றன என்ற இமேஜை எதிர்க்கட்சிகளைச் சேர்ந்தவர்கள் வெளியே கிளப்பிக் கொண்டிருக்கிறார்கள். அப்படி இருக்கும் போது அரசு நடத்துகின்ற இந்த டிட்கோ நிறுவனம் ஆதாயப் பங்குத் தொகையாக அளித்திருக்கின்றது என்பதை நான் வரவேற்கிறேன். அடுத்தபடியாக சிப்காட் மூலமாக சிவகாசியில் ஒரு தொழில் வளாகம் அமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர். இன்னொரு உறுப்பினர் பேசுகிறபோது அவர் பார்வையை என் பார்வையிலிருந்து மறைக்கக் கூடாது. (சிரிப்பு).

திரு. ஜெ. பாலகங்காதரன் : பெரிய தொழில்களை பொறுத்தமட்டிலும், இண்டஸ்டிரியலி பேக்வேர்டு இன் பிக் இண்டஸ்டிரீஸ் என்று சாத்தூர் தாலுக்காவை குறிப்பாக சிவகாசியை அறிவிக்க வேண்டும். ஏன் இதைச் சொல்கிறேன் என்றால் சிவகாசியிலே இருக்கின்ற தொழில்கள் எல்லாம் மிகச் சிறிய தொழில்கள்தான். 5 லட்சத்திலிருந்து 10 லட்சத்திற்குள்ளாக இருக்கின்ற தொழில்கள் எண்ணற்றவை இருக்கின்றன. இவையெல்லாம் குடிசைத் தொழில்கள்தான். எனவே, பெரிய தொழிலாக ஆரம்பிக்கும் வண்ணம், இண்டஸ்டிரியலி பேக்வேர்டு இன் பிக் இண்டஸ்டிரீஸ் என்று சாத்தூர் தாலுக்காவை அறிவிக்க வேண்டும். இல்லையென்றால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தலையிட்டு, மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்களிடம் பேசி, மிகப் பெரிய தாலுக்காவாக இருக்கின்ற சாத்தூர் தாலுக்காவை இரண்டாக பிரித்து, சிவகாசியை ஒரு தாலுக்காவாக மாற்ற வேண்டும். அப்படி மாற்றி, அந்த சிவகாசி தாலுக்காவை இண்டஸ்டிரியலி பேக்வேர்டு தாலுக்காவாக அறிவிக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். அதாவது சிவகாசியை பெரும் தொழில்கள் இல்லாத இண்டஸ்டிரியலி பேக்வேர்டு கிளாஸ் என்று அறிவிக்க வேண்டும்.

தமிழ்நாடு மினரல்ஸ் கிரானைட் திருத்தங்கலில் இருக்கிறது. என்னுடைய தொகுதியில் திருத்தங்கலில் காஸ்மேரிரோஸ் என்ற வகை கிரானைட் கல் கிடைக்கின்றது. அங்கே இருக்கின்ற அந்த டேமின் கிரானைட் ஆனது இப்போது அரசாங்கம்தான் எடுத்து நடத்தி வருகின்றது. அதை நல்ல லாபகரமாக இயக்க வேண்டும். அதற்கு அருகாமையில் இருக்கின்ற நிலங்களில் எல்லாம் லாபகரமான முறையில் தனியார் தோண்டியெடுத்து கொண்டிருக்கின்றார்கள். அந்த நிலம் வழக்கில் மாட்டிக் கொண்டிருக்கிறது. அதிக அளவு கல்லை எடுக்க முடியாது என்று சொல்லுகிறார்கள். அதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, 'டேசிட்' மூலமாக திருப்பூரிலே 653.20 கோடி ரூபாய் செலவில் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதற்காகவும், உயர்நிலைப்படுத்துவதற்காகவும் ஒரு பெரிய கூட்டு ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளீர்கள். மத்திய அரசாங்கத்திற்கும் சரி, மாநில அரசாங்கத்திற்கும் சரி, அதிக அளவு வருமானத்தை ஈட்டித் தருகின்ற சிவகாசிப் பகுதியின் அடிப்படை வசதிகளுக்காக, திருப்பூருக்கு 653 கோடி ரூபாய் வழங்கியதுபோல், சிவகாசிக்கும் 500 கோடியாவது வழங்கிட வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

டி.என்.பி.எல். மூலம் காகிதங்களை எக்ஸ்போர்ட் பண்ணுகிறார்கள் என்று கொள்கை விளக்கக் குறிப்பிலே குறிப்பிடப்பட்டுள்ளதை நான் வரவேற்கிறேன். இன்றையதினம் காகிதத்தைப் பொறுத்தமட்டிலே, சிவகாசியில் அச்சுத் தொழில் அதிகமாக இருக்கின்ற காரணத்தினால், சிவகாசிக்கு காகிதத் தேவை அதிகமாக இருக்கின்றது. எனவே, அந்த காகிதங்களை நீங்கள் எக்ஸ்போர்ட் செய்வதைக் குறைத்து, சிவகாசிக்கு குறைந்த கட்டுப்படியான விலையில் காகிதங்களை தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பிற்பகல் 1-25

அதோடு மட்டுமல்லாமல் இன்றையதினம் காகிதத்தின் விலை- அது மத்திய அரசினுடைய விலை நிர்ணய கட்டுப்பாட்டில் உள்ளது, அது இன்றையதினம் 200 மடங்கு விலை உயர்வு ஏற்பட்டு இருக்கின்றது என்று அங்கே இருக்கின்ற அச்சுத் தொழில் நடத்துபவர்கள் சொல்கிறார்கள். எனவே, அந்தத் தொழில் நசிந்து விடுமோ என்ற பயம் எங்களுக்கு இருக்கின்றது. அதை நீங்கள் கவனத்தில் கொண்டு, டி.என்.பி.எல். மூலம் உற்பத்தியாகின்ற காகிதத்தை சிவகாசிக்கு குறைந்த விலையில் தர வேண்டும் என்று நான் மீண்டும் கேட்டுக் கொள்கிறேன்.

சோளிங்க நல்லூரிலே மின்னணுத் தொழில் மூலம் இன்றையதினம் ஏற்படுத்தப்படுகின்ற அந்தத் தொழிற்பேட்டை உலக அளவிலே ஒரு நல்ல பெயரை ஏற்படுத்தும் என்பதை நான் பாராட்டுகிறேன். காமராசர் மாவட்டத்தைப் பொறுத்தமட்டிலும், இராஜபாளையம் அல்லது வத்ராயிருப்பு பகுதியிலே சர்க்கரை ஆலை தொடங்குவதற்கு தனியார் யாரேனும் முன் வந்தால் மினி பிளாண்ட் போடுவதற்கு நீங்கள் வசதி செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். ஏனென்று சொன்னால், அங்கு உற்பத்தி ஆகின்ற கரும்புகளை வாசுதேவநல்லூர் மற்றும் அலங்காநல்லூர் போன்ற பகுதிகளுக்குத் தான் கொண்டு செல்ல வேண்டி இருக்கிறது. எனவே, நீங்கள் வத்ராயிருப்பு அல்லது இராஜபாளையம் பகுதியிலே ஒரு சர்க்கரை ஆலை நிறுவித் தர வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதற்கு அடுத்தபடியாக, மணல் அள்ளுவதைப் பற்றிப் பேசும்போது எங்களுக்கெல்லாம் மிகுந்த வேதனையாக இருக்கின்றது. எங்களுக்கு குடிநீர் ஆற்றிலிருந்து தான் கிடைக்கின்றது. அங்கே இருக்கின்ற மணலை அள்ளிக் கொண்டு செல்வதால் எங்களுக்கு குடிநீர்த் தட்டுப்பாடு அடிக்கடி ஏற்படுகின்றது. இந்த மணல் அள்ளுவதை ஒரு வரையறைக்குக் கொண்டு வந்து, லைசன்ஸ் மூலம் அதை அள்ளுவதற்கு உரிமம் தர வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதற்கு அடுத்தபடியாக, ஊரகத் தொழிலைப் பொறுத்தமட்டிலும் இன்றையதினம், சிவகாசியில் பட்டாசு, தீப்பெட்டி மற்றும் அச்சுத் தொழில்கள்தான் இருந்துகொண்டு வருகின்றன. இன்றையதினம் அங்கே பட்டாசு தொழிலுக்குத் தேவையான திரி சுற்றுபவர்கள் கிட்டத்தட்ட 30 ஆயிரம் பேர் பிழைத்து வருகின்றார்கள். அங்கே இல்லம் தோறும் பட்டாசு திரியை சுற்றி வருகிறார்கள். இன்றையதினம் அவர்களிடம் காவல் துறையினர் சென்று அவர்களுக்கு சொல்லொண்ணாத் துயரத்தைத் தந்து கொண்டு இருக்கிறார்கள். ஏனென்று சொன்னால், காவல் துறையினர் மீதும் நாங்கள் குற்றம் சாட்ட முடியாது. காரணம் பட்டாசு திரிக்குத் தேவையான டெஸ்டின், சல்ஃபர், சார்க்கோல், பேப்பர் ஆகியவற்றை அவர்கள் பயன்படுத்துகிறார்கள். அவற்றிலே சல்ஃபரை அவர்கள் பயன்படுத்துவதற்கு அவர்களுக்கு உரிமம் பெற்றுத் தர வேண்டும். 5 கிலோ சல்ஃபர் வரை தினந்தோறும் பயன்படுத்துவதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் உரிமம் தரலாம் என்று ஒரு விதி இருக்கின்றது. அதை மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் கவனித்து, அந்த 30 ஆயிரம் குடும்பங்களும் வீதிக்கு வராமல் இருப்பதற்கு, நசிவடையும் நிலையிலிருந்து அந்தக் குடும்பங்களைக் காப்பாற்ற மாவட்ட

ஆட்சித் தலைவர்களுக்கு அறிவுரை சொல்லி, அவர்களுக்கு உரிமம் வழங்கி, அவர்கள் சட்டப்படி அந்தத் தொழிலிலே ஈடுபடுவதற்கு ஒவ்வொரு குடும்பத்திற்கும் உரிமம் தர வேண்டும் என்று நான் மீண்டும் மீண்டும் தாழ்மையோடு கேட்டுக் கொள்கின்றேன்.

அதற்கு அடுத்தபடியாக, இன்றையதினம் மாண்புமிகு இதய தெய்வம் அவர்களுக்கும் மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய மேலான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஏனென்று சொன்னால், சிட்கோ தொழிற்பேட்டை ஒன்று சென்ற ஆண்டு நான் கேட்டுக் கொண்டதற்கிணங்க இன்றையதினம் சிவகாசியிலே அமைத்துத் தருவதற்கு என்னுடைய மேலான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதேபோல, காமராசர் மாவட்டத்திலே இராஜபாளையத்திலும் இன்றையதினம் சிட்கோ தொழிற்பேட்டை நிறுவப்பட்டு, தொழிற்சாலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. நான் பாளையங்கோட்டைக்கு, இதய தெய்வம் புரட்சி தலைவி பேரவை சார்பாக மாண்புமிகு உறுப்பினர் தர்மலிங்கம் அவர்களோடு சென்றபோது, அங்கே எனக்கு ஒரு கோரிக்கை வைத்தார்கள். நானும் திரு. தர்மலிங்கம் அவர்களும் இருந்தபோது, 'சென்ற ஆண்டு கொள்கை விளக்கக் குறிப்பிலே பாளையங்கோட்டைக்கு சிப்காட் மூலமாக ஒரு தொழிற்பேட்டை அமைத்துத் தருகின்றேன் என்று நீங்கள் சொன்னீர்களே; ஆனால் இதுவரை அதற்கான நடவடிக்கை எதுவுமே எடுக்கவில்லையே' என்று என்னிடமும் அன்பு நண்பர் தர்மலிங்கத்திடமும் சொன்னார்கள். அதை தயவுசெய்து இந்த ஆண்டாவது நிறைவேற்றித் தர வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. துரை ராமசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டு அறிவித்தபோது இந்த ஆண்டிலே செய்வோம் என்று அறிவித்தோம். ஆனால், நிலம் கையகப்படுத்துவதிலே—இப்போது அரசு புறம்போக்கு நிலம் எங்கெங்கு இருக்கிறதோ அதைப் பயன்படுத்திக் கொள்ளலாம்; அப்படி இல்லாத இடத்தில் மட்டும் மற்றவர்களிடம் வாங்கலாம் என்ற கொள்கை அடிப்படையிலே ஒரு புதிய கொள்கையை எடுத்து இருக்கின்ற காரணத்தினாலே காலதாமதம் ஆகிவிட்டது. இந்த ஆண்டு அதை நிறைவேற்றுவதற்குத் தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

பிற்பகல் 1-30

திரு. ஜெ. பாலகங்காதரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி. அதையும் எங்களிடம் சொன்னார், புறம்போக்கு நிலம் கிடைக்காததுதான் காரணம் என்று சொன்னார்கள். அது நகராட்சியாக இருந்தது. இன்றையதினம் மாநகராட்சியாக மாறிவிட்ட காரணத்தினால் புறம்போக்கு நிலம் கிடைக்கவில்லை என்று அன்றையதினம் சட்டமன்ற உறுப்பினர் திரு. தர்மலிங்கம் அவர்களிடம் சொன்னார்கள். அதனால்தான் சொல்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு மீண்டும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். சிவகாசியில் சிட்கோ மூலமாக மூலப்பொருட்கள் வழங்கப்படுகின்றன. (மணியடிக்கப்பெற்றது).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் இன்று மாலை 4 மணிக்குத் தொடரலாம்.

பேரவையின் முன்அனுமதியோடு பேரவையின் இன்றைய காலை நிகழ்ச்சிகள் இப்போது முடிவுற்று மீண்டும் பேரவை மாலை 4 மணிக்குக் கூடும் என்பதை அறிவிக்கிறேன். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-31 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. இரா. முத்தையா அவர்கள் தலைமையில் பிற்பகல் 4-00 மணியளவில் பேரவை மீண்டும் கூடியது.

. **மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. பாலகங்காதரன் தன்னுடைய விவாதத்தைத் தொடரலாம்.

திரு. ஜெ. பாலகங்காதரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இடைவேளையில் இனிப்பு அளித்த, மதிய வேளையில் ** பிரியாணி, தயிர் சாதம் அளித்த அமைச்சருக்கு முதலில் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதேபோல......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்த ** நல்ல டீ பாக்கெட் மற்றும் சில பாக்கெட்டுகளை எல்லாம் ஊரகத் தொழில் துறை அமைச்சர் கொடுத்திருக்கிறார்.

திரு. ஜெ. பாலகங்காதரன் : அதைத்தான் சொல்ல வருகின்றேன், இங்கே, அதைப்போல மதியம்......

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர்.

* *மாண்புமிகு திரு. பி. ஈஸ்வரமூர்த்தி :* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் இதுபோன்று ** இருப்பார்கள் என்ற எண்ணத்திலே தான் சுக்குக்காப்பி வைத்திருக்கிறோம். அதை அருந்திவிட்டுப் பேசலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர் சுக்குக்காப்பி வைத்திருக்கிறார். ஊரகத் தொழில் துறை அமைச்சர் நல்ல ஸ்ட்ராங்க் ஆக டீ பவுடர் மாதிரி ஒரு பாக்கெட் கொடுத்திருக்கிறார். எனவே, ரொம்ப தெளிவாகப் பேசலாம்.

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி : இவற்றை எல்லாம் சாப்பிட்டுவிட்டு கோளாறானால் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் இருக்கிறார், மருந்து கொடுப்பதற்கு.

திரு. ஜெ. பாலகங்காதரன் : ** வண்ணம் சுக்குக்காபி அளிக்கும் அமைச்சருக்கும், டீ கொடுக்கும் அமைச்சருக்கும், இவற்றால் ஏதாவது கோளாறு ஏற்பட்டுவிட்டால் மருந்து கொடுக்க இருக்கின்ற அமைச்சருக்கும் நன்றியைத் தெரிவித்து.....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ** என்று இருக்க வேண்டாம். கொஞ்சம் சோர்வாக இருப்பீர்கள், அதைப் போக்குவதற்குத்தான்.

திரு. ஜெ. பாலகங்காதரன் : என்னுடைய நன்றியைத் தெரிவித்து, சிவகாசியில் இப்பொழுது சிட்கோ நிறுவனத்தின் மூலம் மூலப்பொருள்கள் வழங்குகிறார்கள். அவற்றைப் பொறுத்தமட்டிலும் இப்பொழுது பேப்பர் விலை அதாவது கோர்ஸ் பேப்பர் மற்றும் ரேப்பர் பேப்பர், தீப்பெட்டி மேல் பெட்டி செய்யக்கூடிய அனைத்து பேப்பர்களின் விலையும் கிட்டத்தட்ட 200 சதவிகிதம் ஒரு மாதத்தில் அதிகமாகி இருக்கிறது. அந்த மூலப்பொருள்கள் கொடுக்கும் நிறுவனத்தில் தான் பழைய விலையில் கொடுக்கின்றார்கள். எனவே, அந்த நிறுவனத்தில், மூலப்பொருள் கொடுக்கின்ற அந்த சிவகாசி சிட்கோவில், அதோடு மட்டுமல்லாமல் மெழுகும் கண்ட்ரோல் ரேட்டிலே கொடுக்கின்றார்கள். அப்போது ஒருசிலர் மட்டும் அனுமதி பெற்றார்கள். அனுமதி பெறாதவர்களும் அதிலே ஒரு சிலர் மட்டும் ஆதாயம் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

வருகின்றேன். அதோடு மட்டுமல்லாமல் நான் ஏற்கெனவே சொல்லியிருக்கின்றேன், சென்ற முறையும் மாமன்றத்திலே பேசும்போது சொல்லியிருக்கின்றேன், அந்த....

மாண்புமிகு திரு. துரை ராமசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முறைப்படி எஸ்.எஸ்.ஐ. யூனிட் ரெஜிஸ்ட்ரேசன் முதலில் வாங்க வேண்டும். அதை வாங்கிய பிறகு முறைப்படி அவர்கள் விண்ணப்பிக்க வேண்டும். அந்த விண்ணப்பத்தை அரசு பரிசீலித்து பிறகு அவர்களுக்கு மெழுகு மற்றவைகளுக்கு எல்லாம் நாம் கோட்டா முறையிலே, இன்று பற்றாக்குறை இருக்கின்ற காரணத்தாலே, அவர்களுக்கு பெர்மிட் கொடுக்கின்றோம். அந்த பெர்மிட்டின் அடிப்படையிலே தான் சிட்கோ அவைகளை எல்லாம் வினியோகம் செய்து கொண்டிருக்கின்றார்கள். ஆக, யாராவது எஸ்.எஸ்.ஐ. யூனிட் ரெஜிஸ்ட்ரேசன் பண்ணாமலோ அல்லது அதற்கு முறையாக விண்ணப்பிக்காமலோ இருந்தால் அவர்களுக்கு நாம் கொடுக்க இயலாது என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன். வேறு அதிலே எந்தத் தவறும் இதுவரை நடைபெறவில்லை.

திரு. ஜெ. பாலகங்காதரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சருடைய பதிலுக்கு நன்றி. நான் சொல்லுவது என்னவென்றால், மெழுகுக்கு எஸ்.எஸ்.ஐ. ரெஜிஸ்ட்ரேச்ன் எல்லாம் பெற்ற பிறகு அந்த கோட்டாவைப் பெறுகின்றார்கள். கடந்த 5 ஆண்டுகளாக புதிய கோட்டாவே வழங்கப்படவில்லை. ஏனென்று சொன்னால், இது மத்திய அரசாங்கத்தோடு சம்பந்தப்பட்டது என்று கூறி புதிய கோட்டாக்களையே புதிய தொழிற்சாலைகளுக்கு வழங்குவதே இல்லை. ஏற்கெனவே கோட்டா பெற்றவர்கள் தொழிற்சாலையை நடத்துவதே இல்லை. முறைப்படி—அவர்களுக்கு எல்லாம் முறைப்படி தான் இருக்கிறது. தொழிற்சாலையே நடத்தாமல் அதில் getting Wax from the Government and selling it for higher rate to the other Entrepreneurs அதைத்தான் நான் சொல்ல விரும்புகின்றேன். இதிலே எந்தவித தவறும் கிடையாது.

மாண்புமிகு திரு. துரை ராமசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே எஸ்.எஸ்.ஐ. யூனிட் ரெஜிஸ்ட்ரேசன் வாங்கி, அந்தத் தொழிற்சாலையை ஆரம்பித்து நடத்திக் கொண்டிருப்பவர்களுக்கு தான் கோட்டா கொடுத்திருக்கின்றோம். இடையிலே ஏதாவது ஒரு காரணத்தினால் அந்தத் தொழிற்சாலையை விட்டிருப்பார்களானால் அதையும் நாம் 3 மாதத்திற்கு ஒரு முறை அதிகாரிகளை அனுப்பி அங்கு அது சரியாக நடக்கிறதா இல்லையா என்பதை ஆராய்கின்றோம்.

அதிலும், மேலும் ஏதாவது தவறு இருந்தால் குறிப்பிட்ட இடத்தை அவர்கள் சொல்வார்களானால் உறுதியாக இந்த அரசு அதன்மீது கடுமையாக நடவடிக்கை எடுக்கும்.

பிற்பகல் 4-05

திரு. ஜெ. பாலகங்காதரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மெழுகு கோட்டாவை புதிய தொழிற்சாலைகளுக்கும் மாண்புமிகு அமைச்சரவர்கள் பரிந்துரை செய்து பெற்றுத்தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அடுத்து தீப்பெட்டித் தொழிலுக்கு வேண்டிய பேப்பரின் விலை அதிக அளவுக்கு விலை உயர்ந்திருக்கிறது. மத்திய அரசோடு பேசி, இந்தத் தொழிலுக்கு மட்டும் ஏதாவது ஒரு சலுகை விலையில் கிடைப்பதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்தியாவிலே 80 சதவிகிதம் தீப்பெட்டிகள் சிவகாசியில்தான் உற்பத்தி செய்யப்படுகின்றன. அப்படி தீப்பெட்டியை குடிசைத் தொழிலாக உற்பத்தி செய்யும்போது, கிட்டத்தட்ட சிவகாசி, சாத்தூர், கோவில்பட்டி, அருப்புக்கோட்டை, இராஜபாளையம் ஆகிய அனைத்துப் பகுதிகளையும் சார்ந்த தொழிலாளர்கள் இதனால் பயன்பெறுகிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. துரை ராமசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தீப்பெட்டித் தொழிற்சாலைகளைப் பொறுத்த வரையில் அரசு மிகக் கனிவோடு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது. அதிலும் நம்முடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சி தலைவி அவர்கள் அம்மாதிரி சிறுதொழில் செய்கின்றவர்களுக்கு, சிவகாசி பகுதியில் தீப்பெட்டி, பட்டாசு செய்கின்றவர்களுக்கு எல்லா உதவிகளையும் செய்ய வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் அதிலுள்ள பிரச்சினை, தொழிற் கூட்டுறவுச் சங்கம் அமைத்து, அதைச் செயல்படுத்தும்போதுதான் எல்லாவிதமான உதவிகளையும் செய்ய முடியும். தொழில் கூட்டுறவுச் சங்கம் அமைப்பதற்கு அவர்கள் முன்வரவில்லை. அவர்கள் எல்லாம் குடிசைத் தொழில்போல், அவரவர்களுடைய வீட்டிலேயே தீப்பெட்டி, பட்டாசுகள் ஆகியவைகளைச் செய்கின்ற காரணத்தால்தான் நம்மால் மேற்கொண்டு உதவி புரிய முடியவில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அவர்களுக்கெல்லாம் அறிவுரை வழங்கி தொழிற் கூட்டுறவுச் சங்கங்களை அமைத்துக் கொடுத்தார்களேயானால் உறுதியாக இந்த அரசு எல்லோருக்கும் எல்லா உதவிகளையும் செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஜெ. பாலகங்காதரன் : மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். 80 சதவிகிதம் தீப்பெட்டி உற்பத்தி செய்யும்போது, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சி தலைவி அவர்கள் மத்திய அரசைக் கேட்டுக் கொண்டதற்கு இணங்க, குறிப்பாக சென்ற பட்ஜெட்டிலே, திரு. மன்மோகன் சிங் அவர்கள் பேசும்போது, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சி தலைவி அவர்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க நான் ஆயத் தீர்வை விலக்கு அளிக்கிறேன் என்று சொல்லியிருக்கிறார். அப்படி மத்திய அரசாங்கத்தை இதய தெய்வம் டாக்டர் புரட்சி தலைவி அவர்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க ஆயத் தீர்வையில் விலக்கு அளிக்கும்போது, தமிழ்நாட்டில் தீப்பெட்டித் தொழிலுக்கு 3 சதவிகிதம் வரி விதித்திருக்கிறார்கள். இவ்வாறு சென்ற ஆண்டு வரி விதித்ததனால் கடுமையான பாதிப்பு அந்தத் தொழிலுக்கு ஏற்பட்டிருக்கிறது. ஆனால் தீப்பெட்டி விலை கடந்த 15 ஆண்டுகளாக அதே விலையில் இருந்து கொண்டு வருகிறது. வேண்டுமானால் 1 பைசா, 2 பைசா கூட்டியிருக்கிறார்களே தவிர, 200 சதவிகிதம் விலை உயர்ந்த போதிலும்கூட, அந்த 200 சதவிகிதம் அளவுக்கு தீப்பெட்டி விலை உயரவில்லை. கடந்த 15 ஆண்டுகளாக அதே விலைதான் இருக்கிறது. எனவே தீப்பெட்டித் தொழில் நசிந்துவிடுமோ என்ற ஒரு நிலை ஏற்பட்டிருக்கிறது. இப்போது தீப்பெட்டித் தொழிலில் மிகப் பெரிய தேக்க நிலை ஏற்பட்டிருக்கிறது. ஒவ்வொரு பேக்டரியிலும் கிட்டத்தட்ட 3 இலட்சத்திலிருந்து 5 இலட்சம் வரையில் உற்பத்தி செய்யப்பட்ட தீப்பெட்டிகள் தேங்கிக் கிடக்கின்றன. இவற்றை எல்லாம் பார்க்கும்போது ஒரு சில ஆண்டுகளில் நம்முடைய பேக்டரிகள் எல்லாம் இழுத்து மூடப்படுமோ என்று அங்கே இருக்கிற எல்லோரும் அஞ்சுகிறார்கள். அதோடு மட்டுமல்லாமல், இப்போது அந்தத் தொழிலுக்கு நல்லதொரு சூழ்நிலை ஏற்பட்டிருந்த போதிலும், மாண்புமிகு அமைச்சரவர்கள் இதில் தலையிட்டு, அந்தத் தேக்க நிலைக்கு காரணம் என்ன என்பதை அறிந்து, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சி தலைவி அவர்களோடு கலந்து பேசி, விற்பனை வரி விலக்கு இந்த ஆண்டே அளிக்க அவர்கள் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு மட்டுமல்லாமல், பட்டாசுத் தொழிற்சாலைகளைப் பொறுத்த வரையில் ஒவ்வொரு ரூமுக்கும் இடையே கிட்டத்தட்ட 16 மீட்டர் அல்லது 20 மீட்டர் இருக்க வேண்டுமென்று மத்திய சட்டம் - எக்ஸ்ப்ளோசிவிஸ் ஆக்ட் - இருக்கிறது. அதனால், பட்டாசுத் தொழிற்சாலை ஆரம்பிக்க வேண்டுமென்று சொன்னால் மினிமம் 20 ஏக்கர் வேண்டும். சிறிய பேக்டரி ஆரம்பிக்கும்போது 20 ஏக்கர் வேண்டும், பெரிய பேக்டரி

ஆரம்பிக்கும்போது 50 ஏக்கர் வேண்டும். அப்போது நில உச்சவரம்புச் சட்டத்தின்கீழே இது தடுக்கப்படுகிறது. அதனால் பெரிய பேக்டரி ஆரம்பிப்பதற்கான சாத்தியக்கூறு இப்போது இல்லாத நிலைமை இருக்கிறது. எனவே லேன்டு சீலங் ஆக்டின்கீழ் இன்டஸ்டிரியல் ஏரியா வராமல் சற்று பார்த்துக்கொள்ள வேண்டும்.

சிவகாசியில் ஒரு மின்னணு தொழிற்பேட்டை ஆரம்பிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இப்போது ஆதிதிராவிடர்களுக்காக சிவகாசியில் சித்தார்த்தா பனியன் இன்டஸ்டிரீஸ் என்று ஒன்று தொடங்கப்பட்டிருக்கிறது. அதற்கு மாண்புமிகு அமைச்சரவர்கள் முழு ஆக்கமும், ஊக்கமும் தர வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். ராஜபாளையம் மற்றும் சிவகாசி பகுதிகளிலே மிளகாய் வற்றல் அதிகமாக உற்பத்தியாவதால், மிளகாய் வற்றலிலிருந்து எண்ணெய் தயாரிக்கும் நிறுவனம் கண்டிப்பாக ஆரம்பிக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல, தீப்பெட்டிக்குத் தேவையான மூலப்பொருள்களான ப்ளோரைடு உற்பத்திற்கு அதிக அளவு மின்சாரம் தேவைப்படுகிறது. அதில், முதல் 3 ஆண்டுகளுக்கு மின்சாரக் கட்டணத்தில் சலுகை அளிக்கிறீர்கள். ஆனால் அதில் அவ்வளவாக உற்பத்தி செய்ய முடியாத காரணத்தினால் அந்த மின்சாரக் கட்டணத்திலிருந்து சற்று விலக்கு தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பிற்பகல் 4-10

பிரதமரின் ரோஜ்கார் யோஜனா கடன் திட்டத்தின் கீழ், சட்டமன்ற நாடாளுமன்ற உறுப்பினர்களின் பரிந்துரைகளின் பேரில் கண்டிப்பாகக் கடன் கொடுக்கப்பட வேண்டும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். அதேபோல், சிறு தொழில் பதிவில், தற்காலிகப் பதிவு, நிரந்தரப் பதிவு பெறுவதற்கு மாவட்டத் தொழில் மையங்கள் சற்று விரைந்து சான்றிதழ் தரவேண்டும். அப்போதுதான் அதை வைத்து லோன் வாங்க முடியும். சற்று காலதாமதம் ஏற்பட்டால் கூட லோன் கிடைக்கும் வாய்ப்பே நழுவி, லோன் கிடைக்கவில்லை என்ற புகார்கள் வருகின்றன. சிங்கிள் விண்டோ கமிட்டியில் சிறந்த இலக்காக இன்றையதினம் இதய தெய்வம் டாக்டர் புரட்சி தலைவி அவர்களுடைய ஆட்சியில் ஏற்படுத்தப்பட்டதை நான் பாராட்டுகிறேன். சிறு தொழில் துறையை இதய தெய்வம் டாக்டர் புரட்சி தலைவி ஏற்படுத்தியதற்கு நான் என்னுடைய பாராட்டைத் தெரிவித்துக் கொள்கிறேன். 14 வகையான தொழில்களுக்கு ஜெனரேட்டர் மானியம் 15 சதவீதம் கொடுப்பதை இதில் குறிப்பிட்டிருந்தாலும், சிவகாசியில் உள்ள அச்சுத் தொழிலுக்கும் அது கொடுக்கப்பட வேண்டும். இதில்

குறிப்பிடப்படவில்லை. தயவுசெய்து தாங்கள் அச்சுத் தொழிலுக்கும் ஜெனரேட்டர் மானியம் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மகளிர் 30 சதவீதத்திற்கும் அதிகமாக வேலை செய்யும் தொழிலுக்கு 5 சதவீதத்துக்கு மானியம் அளிக்கப்படுவதை நான் வரவேற்கிறேன். அதே நேரத்தில் இம்மானியம் மகளிர் இயற்கையாக அதிகமாக வேலை பார்க்கக்கூடிய தீப்பெட்டி, பட்டாசுத் தொழிலுக்கு அளிக்கப்பட்டது என்று குறிப்பிட்டிருக்கிறீர்கள். தயவு செய்து இந்த மானியம் தீப்பெட்டி மற்றும் பட்டாசுத் தொழிலுக்கு அளிக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

கும்பகோணத்தை அடுத்த திருபுவனம் பகுதியில் ஒரு தொழில் பேட்டை அமைந்துள்ளது. அந்தத் தொழில் பேட்டையில் ஒருசில தொழில்கள் நன்றாக நடைபெறாததால் மூடப்பட்டுக்கிடக்கின்றன. அவைகள் எல்லாம் நான் கும்பகோணம் சென்றபோது என்னுடைய சக சட்டமன்ற உறுப்பினர் அருமை சகோதரர் இராமநாதன் அவர்கள் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் கும்பகோணம் சென்றபோது கொடுத்தாரா, இப்போது கொடுத்தாரா ?

திரு. ஜெ. பாலகங்காதரன் : மாநாட்டுக்கு அங்கே சென்றிருந்தபோது அங்கே போனபோது அப்போது என்னிடம் கொடுத்தார். அதை அவர் பேசுவார் என்று எதிர்பார்த்தேன். கும்பகோணம் இராமநாதன் அவர்களிடம் அவர்கள் அந்தக் கோரிக்கையை வைத்தார்கள். நான் கண்டிப்பாக ஏற்பாடு செய்கிறேன் என்று கூடச் சொன்னார்கள். ஆகவே அங்கே மூடப்பட்டுள்ள தொழிற்சாலைகளை எல்லாம் யாருக்காவது தேவைப்பட்டால் அதை அவர்களுக்கு அளிக்கவேண்டுமென்று கூறி, எனக்கு நீண்டதொரு வாய்ப்பை அளித்த எங்களுடைய சபாநாயகருக்கு நன்றியைத் தெரிவித்து விடை பெறுகிறேன், நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருமதி க. பழனியம்மாள்.

திருமதி க. பழனியம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழில்கள், ஊரகத் தொழில் மற்றும் கதர்த்துறை மானியங்களின் மீது பேசுவதற்கு வாய்ப்பளித்த தங்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தப் பாரம்பரியம் மிக்க சபையிலே பல அறிவார்ந்த முதலமைச்சர்கள் இருந்து பெருமைப்பட்டிருக்கிறார்கள். பல திறமை வாய்ந்த முதலமைச்சர்கள் இருந்து புகழ் பெற்றிருக்கிறார்கள். ஆனால் இன்றைக்கு அறிவும் திறமையும் ஒருங்கே பெற்ற நம்முடைய டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இங்கு முதலமைச்சராக இருப்பதால் இந்தச் சபையே பெருமைப்

பட்டுக்கொண்டிருக்கிறது என்பதைக் கூற நான் கடமைப்பட்டிருக்கிறேன். அவர்களுடைய ஆட்சிக்காலத்திலே அவர்களுடைய தலைமையில் இயங்குகிற இந்த ஆட்சியில் தொழில் துறையானது விரைந்து முன்னேறிக் கொண்டிருக்கிறது என்பதில் எந்தவித சந்தேகமும் இல்லை. பொதுவாகச் சொல்வார்கள், 'Industry needs technical skill, organisation, capital, skilled labour' இவைகள் எல்லாம் அடிப்படைத் தேவைகள் என்று சொல்வார்கள். அதை உணர்ந்து தான் நம்முடைய டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இந்த அடிப்படை வசதிகளை எல்லாம் நம்முடைய தமிழ்நாட்டிலே நல்லமுறையில் உருவாக்கவேண்டுமென்று முயற்சி செய்துகொண்டிருக்கிறார்கள். உற்பத்திக் குறியீட்டை (Production Index) நாம் எடுத்துக்கொண்டால் அதில் மறுமலர்ச்சியே கூட ஏற்பட்டிருக்கிறது என்று சொல்லலாம். 1994 செப்டம்பர் முடிய அந்த அரையாண்டுக் காலத்தில் 5.1 சதவீத உற்பத்தியை அதிகரித்திருக்கிறது என்று சொன்னால் அது மிகையாகாது. The Industrial Development Bank of India சமீபத்திலே ஒரு அறிக்கையை வெளியிட்டிருக்கிறது. அந்த அறிக்கையில் நம்முடைய தமிழ்நாட்டு அரசாங்கத்தை எவ்வாறு அது பாராட்டியிருக்கிறது என்பதை நாம் பார்க்கவேண்டும். தொழில்களுக்காக கடன் அனுமதிப்பதுடன், கடன் வழங்குவதிலும் தொடர்ந்து மூன்றாவது இடத்தில் வந்திருக்கிறது என்பதைப் பாராட்டி இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 4-15

அதைப்போலவே, இன்றைக்கு இந்திய நாட்டிலே 18 நிதியுதவிக் கழகங்கள் இருக்கின்றன. இந்த 18 நிதியுதவிக் கழகங்களில் நம்முடைய தமிழ் நாட்டில் உள்ள தொழில் முதலீட்டுக் கழகம் இன்றைக்கு ஒரு பெரிய சாதனையைச் செய்திருக்கிறது என்று சொன்னால் மிகையாகாது. அது கடன் அனுமதிப்பதில் 54.8 சதவீதத்தை உயர்த்தி இன்றைக்கு தேசிய அளவில் 4-வது இடத்திலிருந்து 2-வது இடத்தை எட்டியிருக்கிறது (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை நாம் மிகவும் பெருமையோடு சொல்லிக் கொள்ளலாம்.

இன்றைக்கு மத்திய அரசாங்கமானது பொருளாதார கொள்கையைத் தளர்த்தி இருப்பதன் காரணமாக மாநிலங்களுக்கு இடையில் போட்டி நிலவுகிறது. இந்தச் சூழ்நிலையில் மாநிலங்களில். 'ரிபார்ம்ஸ்'' சீர்திருத்தங்கள் கொண்டு வந்தால் தான் அந்தப் போட்டியை சமாளிக்கக் கூடிய ஒரு தகுதி ஒவ்வொரு மாநிலத்திற்கும் வரும். இதை நன்றாக அறிந்து வைத்திருக்கிற டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் 'a State-specific Action-Plan' ஒன்றை இன்றைக்கு தமிழ் நாட்டில் 'இனிஷியேட்' பண்ணி இருக்கிறார்கள். அதன்மூலமாக அவர் வலியுறுத்த விரும்புவது இந்தத்

தொழில்கள் எல்லாம் முன்னேற வேண்டுமென்றால் நாம் இந்தமாதிரி ஒரு infrastructure - efficient infrastructure - ஐ உருவாக்க வேண்டும். அதோடு மட்டுமல்லாமல் அதற்குண்டான மற்ற வசதிகளையும், power, water, fostering of specific industry groups, easy access to land, speedy clearances இவைகளை எல்லாம் கொண்டு வந்தால் தான் தொழில் துறை நன்றாக முன்னேற முடியும். அப்படி பார்க்கிறபோது இவைகளை எல்லாம் முன்னேற்றும்போது, தொழில் நகரங்கள் எல்லாம் உருவாகும்போது, urban infrastructure and housing அதுவும் ஒரு முக்கிய இடத்தை வகிக்கிறது.

18-வது நூற்றாண்டில் இங்கிலாந்தில் தொழில் புரட்சி ஏற்பட்டபோது, industrial revolution வந்தபோது, அங்கே புதிய தொழில் நகரங்கள் தோன்றிய காலத்தில் கிராமங்களிலிருந்த மக்கள் எல்லோரும் நகரை நோக்கி சென்ற போது, பொதுச் சுகாதாரம், கல்வி மற்ற வசதிகளைப் பொறுத்த வரையில் அங்கே ஒரு பெரிய சிக்கல் ஏற்பட்டது. அதை அவர்கள் அடுத்த நூற்றாண்டில், 19-வது நூற்றாண்டில் தான் சரி செய்ய முடிந்தது. ஆனால் இன்றைக்கு நம்முடைய புரட்சித்தலைவி அவர்கள் மிகவும் ஆராய்ந்து, அறிந்து இன்றைக்கு urban infrastructure and housing-லே எல்லாம் டெவலப் செய்தால் தான் இன்றைக்கு புதிய தொழில் நகரங்கள் நல்லமுறையில் அமைய முடியும் என்பதை இன்றைக்கு தெரிந்து, அதை நடைமுறைப்படுத்திக் கொண்டு வருகிறார்கள். இந்தத் தொழில்களுக்கு எல்லாம் அனுமதி வழங்குவதை விரைவுபடுத்த வேண்டுமென்ற காரணத்திற்காக இன்றைக்கு 'High-level Committee' என்ற ஒரு கமிட்டியை ஏற்படுத்தி, அதற்கு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களே தலைமை ஏற்று சிறப்பான முறையில் நடத்தி வருகிறார்கள்.

அதைப்போலவே, District Co-ordination Committee-களையும் இன்றைக்கு ஏற்படுத்தி தொழில் வளர்ச்சியில் விரைவு கண்டுகொண்டிருக்கிறார்கள். இப்படி இந்த தொழில் துறையானது நன்றாக முன்னேற வேண்டுமென்றால் அதற்கு முக்கிய அடிப்படை காரணமாக எரிசக்தி துறை நல்லமுறையில் செயல்பட வேண்டும். இன்றைக்கு எரிசக்தித் துறையைப் பொறுத்தவரையில் இந்திய அளவிலே நம்முடைய தமிழ்நாட்டைச் சேர்ந்த எரிசக்தித் துறை நல்லமுறையில் முன்னேறிக் கொண்டிருக்கிறது என்றால் அது மிகையாகாது. இன்றைக்கு நார்த் மெட்ராஸ் தெர்மல் பிளாண்ட்டை டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் தொடங்கி வைத்திருக்கிறார்கள். அதிலே இரண்டாவது மற்றும் மூன்றாவது யூனிட்டுகளையும் வெகுவிரைவில் தொடங்க இருக்கிறார்கள்.

அதோடு மட்டுமல்லாமல், பேசின் பிரிட்ஜ் கேஸ் பேஸ்ட் தெர்மல் பிளாண்டையும் தொடங்கி வைத்திருக்கிறார்கள். இவைகளைத் தவிர, தனியார்த் துறையிலும் இன்றைக்கு மின் திட்டங்களை தொடங்குவதற்கு அனுமதி வழங்கி இருக்கிறார்கள் என்றால் இதற்கு எவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை நாம் புரிந்து கொள்ள முடியும்.

பிற்பகல் 4-20

அதோடு மட்டுமல்லாமல், இன்றைக்கு காற்று சக்தியை கொண்டும் மின்சாரத்தை தயாரிக்கமுடியும் என்பதற்கு முன்னுதாரணமாக நம்முடைய தமிழ்நாடு திகழ்ந்து, அதிலே இன்றைக்கு தேசிய விருதை பெற்று இருக்கிறது என்றால் இது நாம் அனைவரும் பெருமைப்படக்கூடிய விஷயமாகும். இப்படிப்பட்ட சூழ்நிலையில் இந்த எரிசக்தித் துறையை இவ்வளவு விரைவாக முன்னேற்றிக் கொண்டிருக்கிறார்களே, ஒரு தொலைநோக்குப் பார்வையோடு எரிசக்தித் துறையை நடத்திக் கொண்டிருக்கிறார்களே, இந்த காலகட்டத்தில் மத்திய அரசாங்கத்தின் பங்கு இதில் என்ன இருக்கிறது என்பதை நாம் பார்க்கவேண்டும். இவ்வளவு திட்டங்களை, 'மெகா புராஜக்ட்ஸ்' என்று சொல்லக்கூடிய இவ்வளவு பெரிய திட்டங்களை எல்லாம் நம்முடைய தமிழ்நாடு அரசாங்கம் ஏற்படுத்தியிருந்தாலும்கூட, அதற்காக ஒரு பைசாகூட மத்திய அரசாங்கம் செலவழிக்கவில்லை என்பதை நாம் இங்கே பார்க்க வேண்டியுள்ளது.

அதோடு மட்டுமல்லாமல், தமிழ்நாட்டிலே, கனரகத் தொழில்கள் ஏன் நிறைய தோன்றவில்லை என்று பார்த்தோமானால், 1967-லேயிருந்து மத்திய அரசாங்கம் தன்னுடைய முதலீட்டை படிப்படியாக குறைத்து வந்திருக்கிறது. அதனால்தான் இன்றைக்கு நம்முடைய தமிழ்நாடு அரசாங்கம், டாக்டர் புரட்சித் தலைவி தலைமையில் அமைந்திருக்கிற இந்த அரசானது, பல முயற்சிகளை எடுத்து, இன்றைக்கு தொழில்துறையை வளர்த்துக் கொண்டிருக்கக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது.

தொழிற்துறை வளர்ச்சிக்கு அடுத்து முக்கியமானது டிரான்ஸ்போர்ட்டேசன். சாலை அமைப்பு. இந்த சாலை அமைப்புக்காக, இன்றைக்கு உலக வங்கித் திட்டம், 950 கோடி ரூபாய் செலவில் புதிய சாலைகளை அமைக்க உதவி செய்ய முன்வந்திருக்கிறது. இதையெல்லாம் எப்படி சாதிக்க முடிகிறது என்றால், இன்றைக்கு நம்முடைய தமிழ்நாட்டில் எல்லாவற்றையுமே விரைந்து செயல்படுத்துகிறோம் என்ற காரணத்தால், உலக வங்கி நம்முடைய தமிழ்நாட்டைப் பாராட்டி இந்தத் திட்டங்களை எல்லாம் எடுத்துக் கொண்டிருக்கிறது.

அதோடு மட்டுமல்லாமல், இன்றைக்கு எண்ணூரிலே துணைத் துறைமுகம் ஏற்படுத்தவேண்டும் என்று மத்திய அரசாங்கத்தை நாம் வலியுறுத்திக் கொண்டிருக்கிறோம். கடலூரிலேயுள்ள துறைமுகத்தை 600 கோடி ரூபாயில் படிப்படியாக நிறைவேற்ற முயற்சிகள் எடுத்துக் கொண்டிருக்கிறோம். இன்றைக்குத் தூத்துக்குடி துறைமுகத்தையும் விரிவுபடுத்தவேண்டும் என்று மத்திய அரசாங்கத்தைக் கேட்டுக் கொண்டிருக்கிறோம். இப்படி எல்லா வகையிலேயும், தொழில் துறை முன்னேற வேண்டும் என்பதற்காகவும், அதைச் சார்ந்த மற்ற துறைகளையும் இன்றைக்கு விரைந்து செயல்படுத்திக் கொண்டு இருக்கிறோம்.

அதோடு மட்டுமல்லாமல், இன்றைக்கு தமிழ்நாட்டிலே 'இன்டஸ்ட்ரியல் ரிலேசன்ஸ்' எப்படி இருக்கிறது என்பதை எடுத்துக் கொண்டாலும், அது நல்ல சூழ்நிலையில் இருந்து கொண்டு இருக்கிறது. இந்த மனித வேலை நாட்கள் இழப்பு என்பது மிகவும் குறைந்துள்ளது. 39.2 சதவீதத்திற்கு அது குறைந்துள்ளது. அதோடு மட்டுமல்லாமல், இன்றைக்கு தொழில் நுட்பக் கல்வி. தொழில் நுட்பக் கல்வி அளித்தால்தான் 'ஸ்கில்டு லேபர்ஸ் ', டெக்னிக்கல் ஸ்கில் கிடைக்கக்கூடிய வாய்ப்பு ஏற்படும் என்ற காரணத்தால்தான், இந்த தொழில் நுட்பப் பணியாளர் கல்விக்காக 76 கோடி ரூபாயிலே ஒரு திட்டத்தை டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் உருவாக்கி இருக்கிறார்கள்.

அதோடு மட்டுமல்லாமல், இந்தத் தொழில் பயிற்சி நிலையங்களை எல்லாம் மேம்பாடு செய்வதற்காக 21.74 கோடி ரூபாயை இன்றைக்கு ஒதுக்கி சிறப்பான பணியைச் செய்து கொண்டு இருக்கிறார்கள். இப்படி எந்த விதத்தில் பார்த்தாலும், தொழில் துறை முன்னேறிக் கொண்டிருக்கிற இந்தக் கால கட்டத்தில் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களை எத்தனை பேர்கள் எத்தனை சூது செய்து, எப்படி கவிழ்க்க நினைத்தாலும் அவர்கள் அதற்கெல்லாம் பயப்படமாட்டார்கள். (மேசையை தட்டும் ஒலி) அதை எதிர்த்து, நின்று போராடி வெற்றி பெறக்கூடிய சக்தி படைத்தவர்கள் என்பதால்தான் இன்றைக்கு இவ்வளவு இக்கட்டான சூழ்நிலையிலும் கூட, தொழிற்துறையை இவ்வளவு முன்னேற்றிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

அதோடு மட்டுமல்லாமல், இந்த ஊரகத் தொழில்துறையைப் பொறுத்தவரையில் இன்றைக்கு நிறைய தொழில்கள் அனுமதிக்கப் பட்டுள்ளன. நிறைய தொழலகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. கடன்கள் நிறைய வழங்கப்படுகின்றன. இருந்தாலும் கூட, கிராமப்புறங்களில் உள்ள சில தொழில்கள் நசிந்துவிடுகின்றன. இதற்கான காரணம் என்ன என்பதை நாம் கட்டாயம் ஆராய்ந்து பார்க்கவேண்டும். அந்தத் தொழில் முனைவோர்களை நாம் அணுகிக் கேட்கும்போது, - இன்றைக்கு நிறைய

சிக் யூனிட்ஸ் கிராமப் புறங்களில் இருக்கின்றன, அதற்குக் காரணத்தை அவர்கள் சொல்லும்போது ஒர்க்கிங் கேப்பிட்டல், நடைமுறை மூலதனம் அவர்களுக்கு சரியான முறையிலே அமையவில்லை என்ற காரணத்தைத் தெரிவிக்கிறார்கள். அடுத்த காரணமாக அவர்கள் சொல்வது மார்கெட்டிங் பெசிலிட்டிஸ். இன்றைக்கு நம்முடைய முதல்வர், டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசாங்கம் மார்கெட்டிங் பெசிலிட்டிஸ்களை நல்லமுறையில் அமைத்துக் கொடுத்து இருந்தாலும் கூட, பிராக்டிக்கலாகப் பார்க்கும்போது, சிலருக்கு மார்கெட்டிங்கை எப்படி செய்வது, தாங்கள் உற்பத்தி செய்த பொருட்களை எப்படி விற்பது என்ற முறை தெரியாமல், அவர்கள் தொழிலை நடத்துவதால், அவை சிக் யூனிட்டுகளாகப் போய்விடுகின்றன. எனவே, ஊரகத் தொழில் துறையிலே, இந்த மார்கெட்டிங்கைப் பொறுத்தவரையில், அதை ஸ்ட்ரீம்லைன் செய்து, சிறு தொழில்களைச் செய்வோர், தங்களுடைய பொருட்களை விற்பதற்கு நல்ல வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

பிற்பகல் 4-25

அதைப்போலவே, இன்றைக்கு கோவை நாகரில், வருடந்தோறும் 'வோர்ல்டு ஃபேர்' என்று 'கொடிசியா' என்ற அமைப்பைச் சேர்ந்தவர்கள் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். காலத்திற்கு ஏற்ப, நவீன இயந்திரங்களை அவர்கள் கொண்டு வந்து, பார்வைக்காகவும், விற்பதற்காகவும், அந்த 'வோர்ல்டு ஃபேரிலே' வைக்கிறார்கள். அப்படி வைக்கும்போது அங்கே விற்கின்ற இயந்திரங்களுக்கு மட்டும் வரிவசூலிப்பது என்றில்லாமல் வைக்கப்படுகின்ற அனைத்து இயந்திரங்களுக்குமே வரி வசூலிக்கப்படுவது அவர்களுக்கு ஒரு இடைஞ்சலாகவே இருக்கிறதென்று கூறுகிறார்கள். அங்கே விற்கப்படுகின்ற அந்த இயந்திரங்களுக்கு மட்டும் வரி வசூலிப்பது என்ற நிலைமை இருந்தால் இனி புதுப் புது இயந்திரங்களை அவர்கள் கொண்டுவந்து பார்வைக்காக வைப்பதற்கு ஒரு வாய்ப்பாக அமையும் என்று கூறுகிறார்கள். எனவே ஊரகத்தொழில் துறை அமைச்சரவர்கள் இதைக் கவனத்திற்கொண்டு அவர்களுக்கு ஏதாவது ஒரு பரிகாரம் செய்து தரவேண்டுமென்று நான் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாக இந்தத் தொழில்துறையைப் பொறுத்தவரையில் என்னுடைய தொகுதியைப் பற்றி சொல்லவேண்டுமென்று சொன்னால், இன்றைக்கு என்னுடைய தொகுதி தொழில்துறையிலே பிற்படுத்தப்பட்ட தொகுதியாக, வட்டமாக அறிவிக்கப்பட்டிருக்கின்றது. ஆனால் இன்றுவரை அரசாங்கத்தின் சார்பிலே ஒரு தொழிற்சாலை கூட அங்கு அமைக்கப் படவில்லை. நான் இதைப்பற்றி பலமுறை இந்தச் சட்டமன்றத்திலும் எடுத்து வைத்திருக்கிறேன். இப்போது சேலம் மாவட்டம் முழுவதும்

எடுத்துக்கொண்டால்கூட அங்கு இன்றைக்கு கோழி வளர்ப்புத் தொழில் மிகவும் சிறப்பான முறையில் நடந்து கொண்டிருக்கிறது. இன்றைக்கு என்னுடைய தொகுதியில் 12 லட்சம் கோழிகள் வளர்க்கப்படுகின்றன. தினந்தோறும் சுமார் 10 லட்சம் முட்டைகள் உற்பத்தியாகின்றன. நாமக்கல் வட்டாரத்தில் 60 லட்சம் கோழிகள் வளர்க்கப்பட்டு 40 லட்சம் முட்டைகள் உருவாக்கப்படுகின்றன. சேலம் மாவட்டம் முழுவதும் என்று எடுத்துக்கொண்டால் இன்றைக்கு சுமார் 75 லட்சம் கோழிகள் வளர்க்கப்பட்டு 60 லட்சம் முட்டைகள் உற்பத்தியாகின்றன. இந்த முட்டைகளில் 60 பர்சென்ட் கேரளாவிற்கு அனுப்பப்படுகின்றது. 10 பர்சென்ட் வெளிமாநிலங்களுக்கும் அனுப்பப்படுகின்றது. 30 பர்சென்ட்தான் நம்முடைய தமிழ்நாட்டிலே விற்கப்படுகின்றது. இப்படி உற்பத்தியாகின்ற முட்டைகள் 70 பர்சென்ட் வெளிமாநிலங்களுக்கு அனுப்பப்பட்டுக்கொண்டிருக்கிறது. அங்கே சிலசமயங்களில் சரியான விலை கிடைக்காத நிலைமையும் ஏற்படுகிறது. இதையெல்லாம் கருத்தில்கொண்டு, வெளியே அனுப்பப்படுகின்ற அந்த 70 பர்சென்ட் முட்டைகளை நம்முடைய மாநில அரசே உபயோகப்படுத்துகின்ற, அதாவது பயன்படுத்துகின்ற வகையில் ஒரு எக் பவுடர் தொழிற்சாலை, முட்டை பவுடர் தயாரிக்கும் தொழிற்சாலையை சேலம் மாவட்டத்திற்கான பவுடர் தயார்செய்யும் தொழிற்சாலையை கொடுக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். தொழிற்துறையில் பிற்படுத்தப்பட்ட வட்டமாக அறிவிக்கப்பட்டிருக்கின்ற என்னுடைய தொகுதியிலே எக் பவுடர் தயாரிக்கும் தொழிற்சாலையை அமைத்துத் தரவேண்டுமென்று அமைச்சர் அவர்களை டாக்டர் புரட்சித் தலைவி அவர்களிடம் சொல்லி, என்னுடைய தொகுதியில் அமைத்துக்கொடுக்கும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பழனியம்மாள் அவர்கள், அவர்கள் சார்ந்திருக்கின்ற ராசிபுரம் வட்டம் தொழிற்துறையில் பின்தங்கிய வட்டமாக அறிவிக்கப்பட்டிருக்கிறது, ஆனால் எந்தத் தொழிலும் தொடங்கப் படவில்லை என்று சொன்னார்கள். தொழில்துறையில் பின்தங்கிய வட்டம் அல்லது மிகவும் பின்தங்கிய வட்டம் என்று அறிவிப்பதற்குக் காரணம், அங்கு யார் எல்லாம் தொழில் துவங்குகிறார்களோ, அவர்களுக்கு சில சலுகைகளை அளிப்பதற்குத்தான் அதை அரசாங்கம் அறிவிக்கிறது. ஆகவே தொழில்துறையில் பின்தங்கிய அல்லது மிகவும் பின்தங்கிய வட்டம் என்று அறிவித்திருக்கிறோமே ஒழிய, அங்கே போய் அரசாங்கம் தொழில் துவங்கவேண்டுமென்ற கட்டாயம் இல்லை. இன்றைக்கு இந்திய அரசாங்கத்தினுடைய பொருளாதாரக் கொள்கையைப் பார்த்தாலும்

'குளோபலைசேஷன், பிரைவேட்டிசேஷன், லிபரலைசேஷன்' எல்லாவற்றிலும் தொழில் முதலீட்டாளர்களைத்தான் நாம் இன்றைக்கு ஊக்குவித்துக் கொண்டிருக்கிறோம். இதில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனியார் முதலீட்டாளர்களை அழைத்து அங்கே தொழில் துவங்குவதற்கு ஆவனசெய்யவேண்டுமென்று நான் அவர்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன். அப்படிச் செய்தால், அரசு அவர்களுக்கு உதவிசெய்யும்.

அடுத்து நாமக்கல் பகுதியில் ஏராளமான முட்டைகள், பண்ணைகள் இருக்கின்றன. அவற்றின் மூலம் முட்டைகள் எல்லாம் வெளிமாநிலங்களுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. ஏன் இங்கேயே ஒரு எக்பவுடர் தொழிற்சாலையை அமைக்கக்கூடாது என்று கேட்டு, அத்தோடு தன்னுடைய பகுதியிலே இதை வைக்கவேண்டுமென்று கேட்டிருக்கிறார். அந்தப் பகுதியில் முட்டை பவுடர் செய்கின்ற எக் பவுடர் செய்கின்ற ஒரு தொழிற்சாலையை தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்தோடு, இணைத்துறையில் ரூ. 40 கோடியில் எஸ். கே. மயில்சாமி கவுண்டர் என்ற கோ-பிரமோட்டர் வைத்து. அந்தப் பகுதியில் இப்போது ஒரு தொழிற்சாலை தொடங்குவதற்கு மாண்புமிகு முதலமைச்சரவர்கள் உத்தரவிட்டிருக் கிறார்கள். அவர் அமெரிக்கன் டெக்னலாஜியைத் தேடி, அமெரிக்கா எல்லாம் போய், அதற்குண்டான டெக்னாலஜியைத் தேடிக் கண்டுபிடித்து, நல்லமுறையில் அதை அவர்கள் துவங்க இருக்கிறார்கள். அந்த இடம் எங்கே என்று கேட்டபோது அந்த இடம் ராசிபுரத்தில் தான் அமைக்க இருக்கிறேன் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவே அரசாங்கத்திலும், அமைச்சரிடத்திலும், மாண்புமிகு முதலமைச்சரிடத்திலும் அவர்கள் சொன்னது ராசிபுரத்தில்தான் அமைக்க இருப்பதாகச் சொல்லியிருக் கிறார்கள். டிட்கோவும் அதைத்தான் சொல்லியிருக்கிறார்கள்.

பிற்பகல் 4-30

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமைச்சர் அவர்கள் சொல்லி விட்டீர்கள். அன்பழகன் எழுந்திருக்கிறார்கள். (சிரிப்பு)

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி : ஒருவேளை ராசிபுரத்திலிருந்து வேறு எங்காவது நாமக்கல்லுக்கு இது போனால், அதற்கு அரசாங்கம் பொறுப்பு அல்ல, அதற்கு பழனியம்மாள் தான் பொறுப்பு என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். (சிரிப்பு) (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். அதற்குத்தான் அமைச்சர் அவர்களும் சொல்லிவிட்டார்கள். அதைத்தானே கேட்கப்போகிறீர்கள்? திரு. எஸ். அன்பழகன்.

திரு. எஸ். அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஒரு ஆண்டுக்கு முன்பாக நம்முடைய தொழில் துறை அமைச்சர் அவர்கள் நாமக்கல்லிலே ஒரு பெரிய விழாவிலே வந்து நிச்சயமாக அந்த பவுடர் தொழிற்சாலை நாமக்கல்லுக்குத் தான் வரும் என்று ஒரு வாக்கினை கொடுத்து வந்தார்கள். எனவே அந்த வாக்கினை காப்பாற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நாமக்கல்லுக்கும் இராசிபுரத்திற்கும் ரொம்ப தூரம் இல்லை.

திருமதி க. பழனியம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் சொன்னதைப்போல ராசிபுரத்திற்கும் நாமக்கல்லுக்கும் வெகு தூரம் இல்லை. இந்தத் தொழிற்சாலையை ராசிபுரம் தொகுதியில் ஆண்டிகலூர் கேட்டில், அந்த நேஷனல் ஹைவேஸ்-ஸிலே அமைத்தால், அது கோழிப்பண்ணைகள் இருக்கிற எல்லா இடத்திற்கும் ஒரு பொதுவான இடமாக, நடுநாயகமான இடமாக இருக்கிறது. அங்கே கோழி ஆராய்ச்சி நிறுவனமும் ஏற்கெனவே செயல்பட்டுக்கொண்டிருக்கிறது. எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியை தெரிவித்துக்கொள்வதோடு, அந்த இடத்தை மாற்றாமல், தேர்வு செய்து அந்த இடத்திலேயே இந்த தொழிற்சாலையை அமைக்க உதவி செய்ய வேண்டுமாய் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு) தொகுதிப் பிரச்சினை மட்டும்தான். வேறு எதுவும் பேசப்போவதில்லை. (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. துரை ராமசாமி : மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பழனியம்மாள் அவர்கள் பேசுகிறபோது கோயம்புத்தூரிலே நடக்கின்ற பொருட்காட்சியிலே விற்கப்படாத பொருள்களுக்கும் விற்பனை வரி வசூலிக்கிறார்கள் என்று சொன்னார்கள். அது தவறான கருத்து. அங்கு விற்கப்படுகின்ற பொருள்களுக்குத்தான் விற்பனை வரி வசூல் செய்கிறோம். பொருட்காட்சியை நடத்துகின்றவர் களுடைய கோரிக்கை, எக்ஸ்ஸிபிஷன் நடத்துவதற்கு நிறைய செலவாகிறது. அங்கு ஸ்டால்களை அமைக்க நிறைய பணம் செலவழிக்க வேண்டிய நிலை இருக்கிற காரணத்தினாலே உள்ளே விற்கின்ற பொருள்களுக்கு எக்ஸ்ம்ஷன் வேண்டும் என்று கேட்கிறார்கள். வரி விதிவிலக்கு வேண்டும் என்று அங்கு விற்பனை வரி விதிக்கக்கூடாது என்று கோரிக்கையை அரசு முன் வைத்திருக்கிறார்கள். அது அரசினுடைய பரிசீலனையில் இருக்கிறது என்பதைச் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திருமதி க. பழனியம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுக்கு நன்றி. இந்தக் கோழிப்பண்ணையைச் சேர்த்து இன்னும் 2, 3 தொழிற்சாலைகள் அமைக்க சாத்தியக் கூறுகள் இருக்கின்றன. இங்கே தனியார்கள் தான் கோழித் தீவனத்தை தயாரித்து கோழிப் பண்ணைக்கு கொடுத்து வருகிறார்கள். அதைக் கூட்டுறவுத் துறையிலே தீவனம் தயாரிக்கின்ற ஒரு நிறுவனத்தை ஏற்படுத்தினால், கோழிப் பண்ணைகளுக்கு தரமான தீவனம் கிடைப்பதுடன் அவர்கள் உற்பத்திச் செய்கின்ற முட்டைகளுக்கும் நல்ல விலை கிடைக்க வாய்ப்பு ஏற்படும். அது மட்டும் அல்ல, இந்தக் கோழி எருவானது ஒரு நேச்சுரல் மேன்யூர். இதிலே நைட்ரஜன் போன்ற Gas-கள் அதிகமாக இருக்கின்றன. அதை பயோ கெமிக்கல் பிராசஸ் மூலம் அதை பேலன்ஸ்ட் முறைக்கு கொண்டு வந்தால் அது ஒரு நேச்சுரல் பெர்டிலைசர் என்ற முறையில் நல்ல முறையில் விவசாயிகளுக்கு பயன்படும்.

இன்றைக்கு சேலம் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் கோழிப்பண்ணைகள் அதிகமாக இருக்கிற காரணத்தால், இந்த மாதிரி ஒரு தொழிற்சாலையை அமைத்து செய்தால் அதுவேலை வாய்ப்புக்கும் வழி வகுக்கும், விவசாயிகளுக்கும் நல்ல நேச்சுரல் பெர்டிலைசர் கிடைக்கின்ற வாய்ப்பு ஏற்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதைப்போலவே அங்கிருக்கின்ற 'Culled bird's' எனக்கூறப்படும் கிழட்டுக் கோழிகளை தினமும் 5 ஆயிரம், 10 ஆயிரம் என்று வெளி மாவட்டத்திற்கு கொண்டு செல்லுகிறார்கள். அதற்குச் சரியான விலை கிடைக்கவில்லை. அதற்காக ஒரு பிளான் அமைத்து டிரஸ்ஸிங் அண்டு பிராசசிங் செய்து அதை பாஸ்ட் புஃட்டாக மாற்றி நம்முடைய இந்தியாவிலேயே விற்பனை செய்தாலும் சரி, வாய்ப்பு கிடைத்தால் ஏற்றுமதி செய்தாலும் விவசாயிகளுக்கு நல்ல விலை கிடைக்க வாய்ப்பு இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். அதைப்போலவே கோழிப்பண்ணைகளுக்குத் தேவைப்படுகிற கேஜஸ்-ஐ பாண்டிச்சேரியிலிருந்தும், பெங்களூரிலிருந்தும் தான் இந்த கோழிப்பண்ணைகள் வாங்கிக் கொண்டிருக்கின்றன. அதனால் இத்தகைய தொழிற்சாலை அமைத்தால், மிகப் பெரிய தொழிற்சாலை அமையும் வாய்ப்பு இருக்கிறது என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதைப்போலவே கிராமத் தொழில்களைப் பொறுத்தவரை ராசிபுரத்திலே ஒரு தொழில் பேட்டை அமைக்க வேண்டும் என்பதற்காக 30 தொழில் முனைவர்களிடம் விருப்பக் கடிதத்தை வாங்கி சேலம் மாவட்டத் தொழில் மையத்திலே கொடுத்திருக்கிறேன். 2 வருடங்கள் ஆகிவிட்டன. இன்னும் இடம் தேர்வு செய்ய முடியவில்லை என்ற ஒரே

காரணத்தை 2 வருடங்களாக சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். எனவே இந்தத் தொழிற்பேட்டை அமைய உடனடியாக அமைச்சர் அவர்கள் தலையிட்டு அதற்கு உதவி செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதைப்போலவே கதர் துறையைப் பொறுத்தவரையில் தற்போது இந்த நடப்பு ஆண்டில் 20 கிராமிய நூற்பு மையங்களை ஏற்படுத்தப்போவதாக அமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள்.

பிற்பகல் 4-35

அதில் ஒரு நூற்பு மையத்தை என்னுடைய தொகுதியிலே அமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதுவும் இல்லாமல் ராசிபுரமானது பட்டு நெசவிலே மிகவும் முன்னணியிலே இருந்து கொண்டிருக்கிறது. அங்கு ஒரு கதர் பட்டு சொசைட்டி ஏற்படுத்தினால் அந்த நெசவாளர்களுக்கு மிகவும் நன்மை பயப்பதாக இருக்குமென்பதையும் கூறிக்கொள்கிறேன். அதைப் போலவே, கதர்வாரியத் துறை மூலமாக இன்றைக்கு பனைமரம் ஏறுவோர்களுக்கு, ஆயிரம் பேர்களுக்கு இலவசமாக அந்தக் கருவிகள் வழங்கப்படுவதாக அறிவித்திருக்கிறார்கள். என்னுடைய தொகுதியில் பனை மரம் ஏறுபவர்கள் நிறைய பேர் இருப்பதால், ஒரு 100 கருவிகளாவது என்னுடைய தொகுதியிலே இருக்கின்ற பனைமரம் ஏறுகிறவர்களுக்கு கொடுத்து உதவ வேண்டுமென்று நான் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன். அதைப் போலவே, நான் இங்கு சட்ட மன்றத்திலே ஒரு கேள்வி எழுப்பி குறிப்பாக ராசிபுரம் தொகுதியில் கடலைக்காய், மரவள்ளிக் கிழங்கு மிகவும் அதிகமான அளவிலே விளைவதால்—ஏன் என்றால் அது வானம் பார்த்த பூமியாக இருப்பதால், மானாவாரி கடலைக்காய், குச்சிக்கிழங்கு இவை தான் அதிகம் விளைகின்றது—அங்கு 100-க்கும் மேற்பட்ட சேகோ பாக்டரீஸ் இருக்கின்றன. அவைகளிலிருந்து கிடைக்கக்கூடிய கழிவுப் பொருள்களிலிருந்து அட்டை தயாரிக்கும் ஒரு தொழிற்சாலையை ஏற்படுத்தினால் வேலைவாய்ப்பு, வருமானம், கிராமப்புற முன்னேற்றம் நன்றாக இருக்கும் என்பதையும் நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன். அதைப் போலவே, கிராமத் தொழில் துறை மூலமாக அங்கு கூட்டுறவு முறையிலே ஒரு சேகோ பாக்டரி ஆரம்பித்தால், அதனால் விவசாயிகள் உற்பத்தி செய்கின்ற அந்த மரவள்ளிக் கிழங்குக்கு நல்ல விலை கிடைக்கக்கூடிய ஒரு வாய்ப்பு ஏற்படும். இத்தகைய வாய்ப்புகளையெல்லாம் என்னுடைய தொகுதியிலே ஏற்படுத்தித் தர வேண்டும். டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இன்றைக்கு எல்லா தொகுதிகளுக்கும் வித்தியாசம் பாராமல் நல்ல முறையிலே செய்து கொண்டிருக்கிறார்கள். என்னுடைய தொகுதியிலே இதையெல்லாம் கருத்தில் கொண்டு, பல தொழிற்சாலைகளை ஏற்படுத்தி அங்கு விரைவான முன்னேற்றத்தை ஏற்படுத்தி உதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக்

கொண்டு வாய்ப்பு நல்கிய பேரவைத் தலைவருக்கு நன்றி கூறி, விடைபெறுகிறேன், நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. இரா. அப்பு நடேசன்.

திரு. இரா. அப்பு நடேசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1995-ஆம் ஆண்டு ஊரகத் தொழில், தொழில் ஆகிய மானியக் கோரிக்கைகளில் பேச வாய்ப்பு தந்தமைக்கு முதற்கண் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஒரு நாடு முன்னேற்றத்தை காண வேண்டுமென்றால், அந்த நாட்டின் தொழில் வளர்ச்சிதான் முன்னேற வேண்டும். அந்த நிலையிலே நமது இந்தியாவிலே தமிழகம் மிகச் சிறப்பான முறையிலே முன்னேறிக் கொண்டிருக்கிறது என்பதற்காக புரட்சித் தலைவி அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். எங்களுடைய கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தவரையிலே, தொழில் துறையிலே மிக பின்தங்கிய மாவட்டம். அங்கு புதிதாக தொழில்கள் பெரிய அளவிலே இல்லை. 1992-ஆம் ஆண்டிலேயே, மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் அங்கு ரப்பரை மூலப்பொருளாகக் கொண்டு 400 கோடி ரூபாய் அளவிலே ஒரு பெரிய தொழிற்சாலை, டயர் தொழிற்சாலை, கூட்டுத் துறையிலே நிறுவுவதாக வாக்களித்திருக்கிறார்கள். அந்த ரப்பர் தொழிற்சாலையை இந்த வருடத்திலேயே துவங்கித் தருமாறு பணிவாகக் கேட்டுக் கொள்கிறேன். அதோடு அது மலை நிறைந்த பகுதியாக இருக்கின்றது. வேலை இல்லாமல் நிறைய பேர்கள் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அங்கு பல ரகக் கற்கள் டிராக்நைட் கற்கள் கிடைக்கின்றன. இதையெல்லாம் தனியார் உடைத்து பெர்மிட் வாங்கி பல இடங்களுக்கு கொண்டு சென்று கொண்டிருக்கிறார்கள். ஆனால், அரசு ஒரு நல்ல டிராக்நைட் தொழிற்சாலையை அந்தக் கன்னியாகுமரி மாவட்டத்திலே அமைக்க வாய்ப்பாக—என்னுடைய திருவட்டாறு தொகுதியிலேதான் பாறை நிறைய இருக்கிறது—அந்த திருவட்டாறு தொகுதியிலே ஒரு நல்ல தொழிற்சாலையை துவங்குமாறு மிகவும் பணிவாகக் கேட்டுக் கொள்கிறேன். அங்கு 10, 12 சிறு தொழிற்சாலைகள் இருந்தன. அதில் 7, 8 தொழிற்சாலைகள் மூடி இருக்கின்றன. காரணம் என்ன என்றால், அங்கு மூலப்பொருளாக கிடைக்கின்றது ரப்பர். அந்த ரப்பர் மூலப்பொருளாக கிடைப்பதினால் அந்த ரப்பர் தொழிற்சாலையைத் தான் சிறு, சிறு தொழிற்சாலைகளாக வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் உற்பத்தி செய்யக் கூடிய அந்தப் பொருளை விநியோகம் பண்ண, மார்க்கெட்டிங் ஒழுங்காகப் பண்ண முடியாத காரணத்தினாலும், அரசுக்கு அந்தப் பொருள்கள் தேவையிருந்தும் கூட, அவர்கள் ஸ்மால் ஸ்கேல் இன்டஸ்டிரியலில் இருந்து வாங்கப்படவில்லை என்ற கோரிக்கையும் அவர்கள் வைத்துள்ளார்கள். மேலும் என்னுடைய

மாவட்டத்திலே ஒரு சிறிய தொழிற்சாலையை தொடங்க வேண்டும் என்றால் முதன் முதலாக ஒரு புராஜெக்ட் தயார் பண்ண வேண்டும். அடுத்தபடியாக அதற்கு சூட்டபுளான நல்ல ஒரு இடத்தை தேர்வு செய்ய வேண்டும். அங்கே ஏழை எளியவர்கள் கூடுதலாக இருப்பதால் வசதி இல்லாதவர்கள் அதிகமாக இருப்பதால் மிகவும் சிரமப்பட்டு ஒரு இடத்தை தேர்வு செய்வர்கள். அந்த இடத்தை அந்தக் கம்பெனிக்காக வாங்குவார்கள். வாங்கினால் உடனே அதற்கு பல லைசென்ஸ்கள் பெறவேண்டும். முதல் முறையாக சைட் அப்ரூவல் என்று சொல்லி டி.எச்.ஓ. அவர்களிடமிருந்து அப்ரூவல் வாங்க வேண்டும். அந்த டி.எச். ஓ. அவர்களிடத்திலே சைட் அப்ரூவலுக்காக பஞ்சாயத்து அல்லது முனிசிபாலிட்டி மூலமாக இங்கிருந்து அப்ளிகேஷனை கொடுக்க வேண்டும். எங்கள் ஊர் டி.எச்.ஓ. மிகவும் திறமையானவர். அந்த முதலாளி 10, 15 தடவையாவது அவரை நேரிலே சென்று பார்த்து **

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

பிற்பகல் 4-40

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. துரை ராமசாமி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு அரசு அதிகாரியைப் பற்றி தங்களிடம் எந்தக் குறிப்பும் கொடுக்காமல் ஒரு குற்றச்சாட்டை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். இதை அவைக் குறிப்பிலிருந்து நீக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. அப்பு நடேசன், ஒரு குற்றச்சாட்டைச் சொல்வதாக இருந்தால் நீங்கள் மேலெழுந்தவாரியாக வேண்டுமானால் சொல்லலாம். குறிப்பிட்ட நபரையோ, குறிப்பிட்ட அலுவலரையோ சொல்லி அந்த மாதிரிக் குற்றச்சாட்டு சொல்ல வேண்டாம். அதை நான் கடைசியிலே பார்த்து அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிடுகிறேன்.

மாண்புமிகு திரு. துரை ராமசாமி : துணைத் தலைவர் அவர்களே, அவர் ஸ்பெசிபிக்காகச் சொல்லியிருக்கிறார் . ** என்று சொல்லியிருக்கிறார். அது ரொம்ப தவறான கருத்து.

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. அப்பு நடேசன், நீங்கள் ஒரு குறிப்பிட்ட நபருடைய பெயரை, ஒரு அலுவலருடைய பெயரைச் சொல்லியிருந்தால் அது அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

திரு. இரா. அப்பு நடேசன் : துணைத் தலைவர் அவர்களே, நீக்குவதிலே சந்தோஷம். நீக்கிக்கொள்ளுங்கள். நான் அந்தக் குற்றச்சாட்டை எழுதிக் கொடுத்துவிட்டு பேசுகிறேன். அப்படி அந்த டி.எச்.ஓ. பெர்மிஷனை பெற்றுவிட்டு அடுத்தபடியாக அந்த வாட்டர் பொல்யூஷன், ஏர் பொல்யூஷன் ஆகிய விஷயத்தில் அவர்கள் லைசென்ஸ் பெறவேண்டும். அதற்காகவும் பல நடைகள் ஓடி அதையும் பெறுகிறார்கள். அதையும் பெற்றுவிட்டு லோன் அப்ளிகேஷன் கொடுக்கிறார்கள். மூலதனத்திற்காக

மாண்புகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. துரை ராமசாமி : துணைத் தலைவர் அவர்களே, டி.எச்.ஓ.-விடமும் மற்ற அதிகாரிகளிடமும் அவர்கள் ஓடவேண்டியதில்லை. பலமுறை நடக்க வேண்டிய அவசியம் இல்லை. இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசிலே சிங்கிள் விண்டோ கமிட்டி என்ற ஒரு குழுவை அமைத்திருக்கிறோம். மாவட்ட ஆட்சித் தலைவர்களுடைய தலைமையிலே எந்த ஒரு அரசு அலுவலகத்திலே காலதாமதம் ஏற்பட்டாலும் அந்தக் குழுவிடம் இவர்கள் விண்ணப்பம் கொடுத்தால் அது 15 தினங்களுக்குள் பரிசீலிக்கப்பட்டு தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு அவர்களுக்கு ஆவன செய்து கொடுக்கப்படுகிறது என்பதை நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு. இரா. அப்பு நடேசன் : துணைத் தலைவர் அவர்களே, உண்மையிலேயே பல தடவை மாவட்ட ஆட்சித் தலைவருக்கு பெட்டிஷன் கொடுத்தாலும் அது 15 தினங்களில் நடப்பதில்லை. கூடியசீக்கிரம் இனி நடக்க இருக்கலாம். அப்படியெல்லாம் லைசென்சை பெற்றுவிட்டு லோன் அப்ளிகேஷன் கொடுக்கிறார்கள். உண்மையிலேயே டி.ஐ.ஐ.சி-யை பொறுத்த அளவிலே கூடிய சீக்கிரம் ஒழுங்காக அப்ளிகேஷனை கொடுப்பதாக இருந்தால் மேக்சிமம் 2, 3 மாதங்களிலே அவர்கள் லோனை சேங்ஷன் செய்து கொடுத்துவிடுகிறார்கள். நல்ல ஸ்கீமாக இருந்தால் அடிஷனல் செக்யூரிட்டி இல்லாமலேயே அவர்கள் கொடுக்கிறார்கள். அவர்களைப் பாராட்ட வேண்டும். அப்படியெல்லாம் வாங்கிவிட்டு ஈ.பி-க்கு அப்ளிகேஷன் போடுகிறார்கள். லோன் எல்லாம் வாங்கி மெஷினரி எல்லாம் பிட் பண்ணி 2, 3 மாதங்கள் ஏன் வருடங்கள்

ஆனாலும் கூட கனெக்ஷன் கிடைப்பதில்லை. எங்களது மாவட்டத்திலே எலக்ட்ரிக் கனெக்ஷன் கிடைப்பதற்கு தாமதம் ஏற்படுகிறது. பல இன்னல்கள். ஆகையினால் இப்போது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியது போல ஒரே இடத்திலே, ஒரே அலுவலகத்திலே சிறு தொழில் தொடங்குவதற்கு எல்லா லைசென்சும் ஒரே இடத்திலிருந்து வழங்குவதாக இருந்தால் மிக மிக நன்றாக இருக்கும். அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியில் ஏற்பாடு செய்தால் நன்றாக இருக்கும். அப்படிக் கஷ்டப்பட்டு ஒரு சிறு தொழிற்சாலையைத் தொடங்கி அந்தத் தொழிற்சாலையிலே உற்பத்தி செய்யக்கூடிய அந்தப் பொருட்களை வியாபாரம் செய்ய வேண்டும் என்றால், பெரிய தொழிற்சாலைகள் உற்பத்தி செய்யக்கூடிய அந்தப் பொருட்களும் இதுவுமாக போட்டியிட்டு வியாபாரம் செய்ய வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. அப்படிப் போட்டியிடும்போது தரத்திலே நன்றாக இருந்தாலும்கூட பெரும் தொழிற்சாலையில் உற்பத்தி பண்ணக் கூடிய அந்தப் பொருட்களைத்தான் எல்லோரும் வாங்குகிறார்கள். ஆகவே, சிறு தொழிற்சாலையிலே உற்பத்தி செய்கின்ற அந்தப் பொருட்களை அரசுக்குத் தேவையாக இருந்தால், அது எந்த நிர்வாகமாக இருந்தாலும் அதற்குத் தேவையாக இருந்தால் முதலிடம் கொடுத்து அந்தப் பொருட்களை பெறவேண்டும். அதற்காக கேட்டும், இப்போது சில பொருட்களை வாங்குகிறார்கள். வாங்கினால் ஒரு மாதத்திலே பணம் கொடுக்கவேண்டுமென்று இருக்கிறது. உண்மையில் 4, 5 மாதங்கள் ஆகிவிடுகின்றன. அப்படி 4, 5 மாதங்கள் பணம் கிடைப்பதற்கு தாமதம் ஏற்படுவதால்—இந்தச் சிறு தொழிலில் ஒர்க்கிங் கேப்பிட்டல் கொஞ்சம் வைத்திருப்பார்கள்—அந்த ஒர்க்கிங் கேப்பிட்டல் குறைவதால் அப்படியும் அவர்களுக்கு நஷ்டம் வந்து விடுகிறது. சிறு தொழில்களுக்கு ஊக்கம் கொடுக்கின்ற நம்முடைய தமிழக அரசு மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு இங்கே சிறு தொழில்கள் மூலம் உற்பத்தி செய்யக்கூடிய இந்தப் பொருட்களுக்கு ஒரு மார்க்கெட்டிங் ஸ்பெசாலிட்டிஸ் உண்டாக்கிக் கொடுக்க வேண்டுமென்று மிகவும் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 4-45

அதோடு எங்களுடைய கன்னியாகுமரி மாவட்டத்தில் பல புது, புது தொழிற்சாலைகளுக்குத் தேவையான வசதிகள், மூலப்பொருட்கள் கிடைக்கின்றன. தென்னை மரம் நிறைய இருக்கிறது. தேங்காய் மூலம் ஒரு நல்ல தொழிற்சாலையை அங்கே உருவாக்கலாம். கடந்த வருடத்தில் நமது தோவாளையிலே கூட்டுறவுத் துறையின் மூலமாக ஒரு சர்க்கரை ஆலை துவங்குவதாக குறிப்பில் இருந்தது. அதேபோல் புது புது தொழிற்சாலைகளை

எல்லாம் எங்களுடைய மாவட்டத்திற்கு செய்து தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடந்த பல ஆண்டுகளாக எங்களுடைய மாவட்டத்தை புறக்கணித்து வைத்து இருந்தார்கள். இப்போது மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியில் மட்டும்தான் என்னவோ அவர்களுடைய நல்ல மனதோடு நம்முடைய கன்னியாகுமரி மாவட்டத்தை தமிழகத்தில் உள்ள எல்லா மாவட்டங்களுக்கும் ஒப்பாக வைத்து அங்கு பல நல்ல காரியங்களைச் செய்து கொடுப்பதற்காக நன்றி சொல்லி இந்த மானியத்தில் பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி சொல்லி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : டாக்டர் ஆ. வெ. புருஷோத்தமன்.

டாக்டர் ஆ.வெ. புருஷோத்தமன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அஞ்சாமை, ஆற்றல், துணிவுடைமை ஆகிய திறன்களைக் கொண்ட நம்முடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் தூய ஆட்சியை துணிவுடைமைக் கொண்ட ஆட்சியை சில அரசியல் அனாதைகள் மற்றும் விரோதிகளால் மாசு ஏற்படுத்த முயல்வோர்களை, முயல்வோர்களுடைய முகமூடியை கிழித்து எறிந்து மீண்டும் இவர்களை முகவரியே இல்லாதவர்கள் ஆக்கி மகத்தான மக்கள் சக்தியினால் இவர்கள் மண்டியிடும் சூழ்நிலையை மிக விரைவில் ஏற்படுத்தி தமிழகத்தில் மட்டும் அல்லாமல் இந்திய திருநாட்டின் எதிர்கால அரசியல் வழிக்காட்டியென நிரூபிக்கும் நாள் இந்த நாட்டினுடைய பொன்னான அந்த நாளை எதிர்நோக்கி (மேசையைத் தட்டும் ஒலி) மானியக் கோரிக்கை எண் 47, மற்றும் மானியக் கோரிக்கை எண் 59 மற்றும் மானியக் கோரிக்கை எண் 24 ஆகிய மானியக் கோரிக்கைகளில் இதில் மிகவும் முக்கியமான மானியக் கோரிக்கை எண் 47 பட்டு வளர்ச்சி துறையின் சார்பாக பேசுவதற்கு வாய்ப்பு அளித்த உங்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நம்முடைய தமிழகத்தில் மிகவும் பிற்படுத்தப்பட்ட பகுதிகளில் பல்வேறு வறட்சிக்கு இலக்காகும் பகுதிகளில் இந்த பட்டுப் பூச்சி வளர்ப்புத் திட்டத்தை நம்முடைய இந்திய அரசாங்கத்தின் துணையோடும், நம்முடைய தமிழக அரசினுடைய பல்வேறு திட்டங்கள் மூலமாகவும் இன்று நாம் நடைமுறைப்படுத்தி வருகிறோம். நம்முடைய பட்டுப்பூச்சி வளர்ப்பு

நம்முடைய இந்திய திருநாட்டிலே கர்நாடக மாநிலத்திற்கு அடுத்ததாக நம்முடைய தமிழகத்திலே தான் இந்த பட்டு உற்பத்தி அதிகமாக நடைபெற்று வருகிறது. கடந்த காலத்திலே பல்வேறு மாவட்டங்களிலே தேசியப் பட்டு வளர்ச்சி திட்டத்தின் மூலமாக உலக வங்கி மற்றும் சுவிஸ் வளர்ச்சி கூட்டுறவின் உதவியோடு 33,750 ஏக்கரிலே இந்த ஆண்டு பட்டுச் செடி பயிரிடுவதற்கு இதன் மூலமாக ஒரு லட்சத்து 70 ஆயிரம் பெண்கள், ஆண்களுக்கு வேலைவாய்ப்பு கிடைத்திடவும் இப்படிப்பட்ட திட்டத்தின் மூலமாக 1666 மெட்ரிக் டன் கூடுதலாக பட்டு உற்பத்தி ஏற்படுத்தவும் இந்த பட்டு வளர்ப்புத் திட்டம் இந்த ஆண்டு நடைமுறைப்படுத்த இருக்கிறது. நான் இந்த மாமன்றத்தின் மூலமாக தெரிவித்துகொள்ளுவது என்னவென்றால் இப்படிப்பட்ட நல்ல திட்டங்கள் எல்லாம் இருப்பது மக்களுக்கு, கிராமப்புறத்தில் உள்ள மக்களுக்கு இன்றுவரை சரியாக தெரிவது இல்லை. ஆகவே பல்வேறு திட்டங்கள் இருந்தாலும் அந்த மக்களுக்கு, அந்த விவசாயிகளுக்கு இப்படிப்பட்ட திட்டங்கள் அதாவது இந்த பட்டு வளர்ச்சி மூலமாக பட்டுக்கூடு எப்படி வளர்ப்பது ? புழுக்களை எப்படி வளர்ப்பது ? முட்டைகளை எப்படி வாங்குவது ? கிரைனேஜ் எங்குள்ளது ? அதற்கான வியாதிகளுடைய தன்மை என்ன? அந்த சில்க் எப்படி எடுக்க வேண்டும் ? அதை எப்படி ரீலீங் செய்யவேண்டும் ? அந்த ரீலீங் செய்த பிறகு அந்தப் பட்டை எப்படி கொண்டுபோய் எங்கு விற்கவேண்டும் ? என்ன விலை கிடைக்கும் ? போன்றவையெல்லாம் அந்த கிராமப்புற மக்களுக்குத் தெரியாத ஒரு சூழ்நிலையிலே நாம் அவர்களுக்கு நல்லமுறையிலே விளம்பரப்படுத்தி, அவர்களுக்குப் பல்வேறு பயிற்சிகள் மூலமாக, பல்வேறு கருத்தரங்குகள் மூலமாக, பல்வேறு திட்டங்கள் மூலமாக பல்வேறு வகையிலே அவர்களுக்குப் பயிற்சி அளித்தால், அந்தப் பட்டு வளர்ச்சித் துறையின் மூலமாக பல்வேறு நலத்திட்டங்கலெல்லாம் இந்த நாட்டு மக்களுக்கு கிடைக்கக்கூடிய சூழ்நிலை உள்ளது.

பிற்பகல் 4-50

இன்று நம்முடைய மாநிலத்திலே பட்டு வளர்ச்சி நீர்ப்பாசனத்தின் மூலமாகவும், மானவாரி நிலங்கள் மூலமாகவும் நடைபெற்று வருகின்றது. இதிலே குறிப்பாக, நம்முடைய மாவட்டங்களிலெல்லாம் மழை நிறைந்த பகுதி இல்லாத காரணத்தால் மானாவாரி நிலங்கள் மூலமாக பட்டு வளர்க்கப்படுகிறது. இப்படிப்பட்ட மானாவாரி நிலங்கள் மூலமாக பட்டு வளர்ச்சி செய்கின்ற விவசாயிகளெல்லாம் ஏழை விவசாயிகள். அப்படிப்பட்ட ஏழை விவசாயிகளெல்லாம் பட்டுக் கூடுகளை, 100 முட்டைகளோ அல்லது 200 முட்டைகளோ வாங்கி, தங்களுடைய

1995 ஏப்ரல் 24] [டாக்டர் ஆ.வெ. புருஷோத்தமன்]

தேவைக்கேற்ப, தங்களுடைய நிலத்தின் தன்மையைக் கருதி தங்களுக்குண்டான ஒரு ஏக்கர், இரண்டு ஏக்கர் நிலத்தின் மூலமாக இருக்கக்கூடிய அந்த மல்பரி செடிகளிலிருந்து வரக்கூடிய அந்தத் தன்மையைக் கருதி அவர்கள் அந்த முட்டைகளை வாங்கி அந்தப் பட்டை வளர்க்கின்றார்கள். அந்தப் பட்டை தங்களுடைய இல்லங்களிலே வளர்க்கும்போது அவர்களுக்கு வீடு பற்றாக்குறையாக இருக்கின்றது. ஆகவே, நம்முடைய அரசாங்கம் இந்தப் பட்டுப்புழுவை வளர்ப்பதற்கு உண்டான வசதியை அவர்களுக்கு ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். பல்வேறு வகையான திட்டங்கள் இப்போது இருந்தும் அவர்களுக்கு இன்னும் அதிகமான முறையிலே வீடுகள் கட்டிக் கொடுத்தால் அதன்மூலமாக அதிகப்படியான பட்டுப் புழுவை வளர்ப்பதற்கும், அதன்மூலமாக பட்டுக் கூடு உற்பத்தியாவதற்கும், அதன்மூலமாக இந்த நாட்டினுடைய பட்டு உற்பத்தி அதிகம் ஆவதற்கும், அதன் மூலமாக அந்நிய செலவாணி கிடைப்பதற்குமான சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, இதில் நாம் சிறந்த கவனம் செலுத்தி ஆக வேண்டும். இந்த மானாவாரி நிலங்களிலுள்ள பட்டுக் கூடுகள்தான் மிகவும் தரம் வாய்ந்ததாக இருக்கின்றன. ஆகவே, அப்படிப்பட்ட இந்தத் திட்டத்தை கிராமப்புற மக்களுக்கு இன்னும் அதிகப்படியான அளவிலே நாம் வழங்கியாக வேண்டுமென்று மெத்த பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன். மேலும் நம்முடைய மாநிலத்திலே இருக்கின்ற பட்டு முட்டைகளையெல்லாம் பெங்களூருக்கோ அல்லது அருகாமையிலுள்ள நகரங்களுக்கோ எடுத்துச் சென்றுதான் நூற்க வேண்டிய ஒரு சூழ்நிலை உள்ளது. ஆகவே, இந்த ரீலிங் சென்டரை ஒவ்வொரு தாலூகாவிலும் ஏற்படுத்தினால் அதன்மூலமாக பல்லாயிரக்கணக்கான பெண்களுக்கு நேரடியாக வேலைவாய்ப்புகள் கிடைக்கும் வாய்ப்பு இருக்கிறது. ஆகவே, இந்த ரீலிங் சென்டரை ஒவ்வொரு தாலுகாவிலும் ஏற்படுத்த வேண்டும். இந்த வருடம் 7 மாவட்டங்களுக்கு விஸ்தரிப்பு செய்துள்ளார்கள். கடந்த ஆண்டு திட்டத்திலே 12 மாவட்டங்களில் ஏற்படுத்தி இருக்கிறார்கள். ஆக மொத்தம் 20 மாவட்டங்களிலே வந்துவிட்ட நிலையிலே ஒவ்வொரு தாலூகாவிலும் எந்தெந்த இடங்களிலே பட்டு உற்பத்தி அதிகமாக இருக்கிறதோ அந்தந்தப் பகுதிகளிலெல்லாம் இப்படிப்பட்ட அந்த ரீலிங் சென்டரை ஆரம்பித்து வைத்தால் ஏழை விதவைகளுக்கும், கணவனால் கைவிடப்பட்ட பெண்களுக்கும், ஏழை விவசாயிகளுக்கும் குறிப்பாக கிராமப்புறங்களிலே உள்ள குறைந்த அளவிலே படித்த பாமர பெண்களுக்கும் வேலைவாய்ப்பு ஏற்படுவதற்கு ஒரு வாய்ப்பு இருக்கிறது. ஆகவே, அந்த வாய்ப்பை நாம் உருவாக்கிக் கொடுப்பதற்கு இந்த ரீலிங் சென்டரை நாம் ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும் என்று இந்த மாமன்றத்தின் மூலமாகக் கேட்டுக் கொள்கிறேன்.

பிற்பகல் 4-55

மேலும் விவசாயிகளுக்குப் பல்வேறு பயிற்சித் திட்டங்களெல்லாம் இருக்கின்றன. ஆனால் எத்தகைய விவசாயிகள் என்ன பயிற்சி பெறுகிறார்கள் ; அவர்களுடைய பயிற்சியின் நோக்கம் என்ன ? அதனுடைய தன்மை என்ன ? அதன்மூலமாக எந்த அளவுக்கு அவர்கள் உற்பத்தியைப் பெருக்க வேண்டும் என்ற ஒரு எண்ணம் அவர்களுக்கு ஏற்பட வேண்டும். ஏனென்றால், அவர்கள் படிக்காதவர்கள். குறிப்பாக, கிராமப்புறங்களிலே இருக்கிற விவசாயிகள் எல்லாம் 100-க்கு 80 பேர் படிக்காத விவசாயிகள். அப்படிப்பட்ட விவசாயிகளுக்கு நம்முடைய திட்டங்களெல்லாம் நல்லமுறையிலே சிறப்பாகக் கிடைக்க வேண்டும். அவர்களுக்கு சிறப்பான பயிற்சித் திட்டங்களைக் கொடுக்க வேண்டும். ஏனென்றால் அதன்மூலமாக ஆயிரம் விவசாயிகளுக்கு இந்த ஆண்டு பயிற்சி கொடுப்பதாக இங்கே குறிப்பிடப்பட்டு இருக்கிறது. ஆகவே, இந்த ஆயிரம் விவசாயிகள் அல்லாமல் இன்னும் ஆயிரம் விவசாயிகளுக்கு கூடுதலாக பயிற்சி கொடுப்பதற்குக்கூட வாய்ப்பு உள்ளது. ஆகவே, இப்படிப்பட்ட விவசாயிகளுக்கு ஒரு மாதத்திற்கு 150 ரூபாயும் அவர்களுடைய அந்த டிரெயினியிங் செலவிற்காக 150 ரூபாயும், ஆக, 300 ரூபாய் கொடுக்கப்படுகிறது. இது உண்மையிலேயே இந்த விவசாயிகளுக்குப் பற்றாக்குறையான சூழ்நிலையில் தான் உள்ளது. ஏனென்றால், 100 கிலோமீட்டர், 200 கிலோமீட்டர் என்று ஒரு விவசாயி பயிற்சி எடுக்க வருகிறார் என்றால் அவர்களுக்கு அந்த மாதம் 300 ரூபாய் என்பது மிகவும் குறைவாகக் காணப்படுகிறது. ஆகவே, இந்த 300 ரூபாய் என்பதை 500 ரூபாயாக உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று மெத்தப் பணிவுடன் மாண்புமிகு அமைச்சரவர்களை இந்தப் பேரவையின் வாயிலாகக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்ததாக, தீவிர விவசாயிகள் பயிற்சித் திட்டம். அதாவது வசதி படைத்த—இதிலே நல்ல முன்னோடித் திட்டங்கள் மூலமாகப் பட்டு வளர்க்கக்கூடிய இப்படிப்பட்ட விவசாயிகளுக்கு - 250 விவசாயிகளுக்கு இந்த ஆண்டு அவர்கள் பயிற்சியளிக்கத் திட்டமிட்டிருக்கிறார்கள். ஒவ்வொரு விவசாயிக்கும் 500 ரூபாய் பயிற்சிப் பணம் கொடுக்க இருக்கின்றார்கள். ஒரு விவசாயி, இதிலும் 100 கிலோமீட்டர், 200 கிலோ மீட்டர் என்று ஒரு விவசாயி வந்து, அவர் பயிற்சி பெற வேண்டுமென்றால் இந்த 500 ரூபாய் என்பது மிகக் குறைந்த அளவாக இருக்கின்ற காரணத்தால் இந்த 500 ரூபாயை 750 ரூபாயாக உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று மெத்தப் பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்ததாக, இந்த ஆண்டு இந்த ரீலிங் - அதாவது இந்த மல்பரியிலிருந்து அந்தக் கூட்டின் மூலமாக அந்த நூல் சுற்றுகின்ற பணிக்கு சுமார் 100 விவசாயிகளை - 100 நூற்பன்னர்களைப் பயிற்சி கொடுக்கின்ற இந்தத் திட்டத்தின் வாயிலாக 250 ரூபாய் மாதம் ஒன்றுக்குக் கொடுக்க இருக்கின்றார்கள். இந்த 250 ரூபாய் என்பது மிகவும் குறைவாக இருக்கிறது. ஏனென்றால், பட்டு வளர்ச்சித் துறை வளர்ந்து வருகின்ற துறை. உலக வங்கித் திட்டங்கள் மூலமாகவும், பன்னாட்டுத் திட்டங்கள் மூலமாகவும், பல்வேறு மத்திய அரசாங்கத்தினுடைய திட்டங்களின் மூலமாகவும் இங்கு அவர்களுக்குச் செலவிடப்படுகின்ற பணம் மிகவும் குறைவாக இருக்கின்றது. ஆகவே, இந்தப் பணத்தை அவர்களுக்கு உயர்த்திக் கொடுக்க வேண்டும் என்று மெத்தப் பணிவுடன் கேட்டுக் கொள்கின்றேன்.

மேலும் இந்த விவசாயிகளெல்லாம் தங்களுடைய பட்டு வளர்ப்பை மேம்படுத்துவதற்காக பட்டு முட்டைகளையெல்லாம் எங்கு வாங்க வேண்டுமென்று அவர்களுக்குச் சில நேரங்களிலே அண்டை மாநிலங்களுக்குச் செல்வதற்காகவும், அல்லது அரசாங்கத்தினுடைய கிரெய்னேஜுக்குச் செல்ல வேண்டிய ஒரு சூழ்நிலையும் அல்லது தனியாருடைய கிரெய்னேஜுக்குச் செல்ல வேண்டிய ஒரு சூழ்நிலையும் உள்ளது. நம்முடைய தமிழ் நாட்டிலே இவ்வளவு மாவட்டங்களிலே பட்டு வளர்ச்சியை நாம் துரிதப்படுத்தியிருந்தாலும் அந்த கிரெய்னேஜ் என்பது 22 தான் உள்ளன. அரசாங்கத்தினுடைய கிரெய்னேஜ் 10 இருக்கின்றன. உண்மையிலேயே போதாத ஒரு சூழ்நிலை உள்ளது. இன்னும் அதிகப்படியாகத் தனியாருடைய கிரெய்னேஜையோ அல்லது அரசாங்கத்தினுடைய கிரெய்னேஜையோ ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று இந்த மாமன்றத்தின்வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாக இந்த டெக்னிக்கல் சரிவீஸ் சென்டர்ஸ் என்பது பல்வேறு மாவட்டங்களிலே சுமார் 300 செண்டர்கள் மூலமாக இந்த ஏழை விவசாயிகளுக்கு - அங்கு ஏற்படுகின்ற தட்ப வெப்ப நிலைகளுக்கேற்ப என்ன பயிரிடுவது, என்ன உரமிடுவது, எந்தவகையான முட்டைகளை வாங்குவது, எந்தவகையில் அவர்கள் புழுக்களைப் பராமரிப்பது, எந்தவகையிலே கூடுகள் கட்டுவது, அதற்குண்டான உபகரணங்களை எப்படி வாங்குவது, அதற்குண்டான மருந்துகளைத் தெளிப்பது எப்படி என்று இப்படியெல்லாம் சொல்லிக்கொடுக்கின்ற ஒரு சூழ்நிலை இந்த டெக்னிக்கல் சர்வீஸ் செண்டரிலே இருக்கிறது. ஆனால் இந்த டெக்னிக்கல் சரிவீஸ் செண்டர் என்பது, ஒரு இடத்திலே உட்கார்ந்துகொண்டு அந்த விவசாயிகளை வரவழைத்து இவர்கள் டிரெயினிங் கொடுத்தால் அது

அவ்வளவாக நன்றாக இல்லாத சூழ்நிலை உள்ளது. ஆகவே, இந்த டெக்னிக்கல் டிரெயினிங் சென்டர்களில் உள்ளவர்களெல்லாம் விவசாயிகளை நோக்கி அவர்களிடத்திலே சென்று வாரத்திற்கு ஒரு முறை, 15 நாட்களுக்கு ஒரு முறை விவசாயிகளை அவர்கள் கண்டிப்பாகச் சென்று பார்வையிட்டு அவர்களுக்குத் தக்க அறிவுரை வழங்கி வர வேண்டும். அடுத்ததாக விவசாயி தன்னிடத்திலே உற்பத்தியாகின்ற...

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர்.

மாண்புமிகு திரு. துரை ராமசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே ஏ.டி.கள், பீல்டுமேன் என்று நாம் போட்டிருக்கிறோம். அவர்களெல்லாம் விவசாயிகளினுடைய அந்தப் பண்ணைகளுக்கே சென்று அவர்களுக்கு வேண்டிய அத்தனை தொழில் நுட்பங்களையும் மற்றும் பொருட்களைக் கொடுப்பது, என்ன மருந்து அடிக்க வேண்டும், என்ன உரம் வைக்க வேண்டும் என்கின்ற அத்தனை விவரங்களையும் அவர்கள் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். அதை இன்னும் விரிவுபடுத்த வேண்டுமென்றால் அதைப்பற்றி அரசு பரிசீலிக்கும்.

டாக்டர் ஆ. வெ. புருஷோத்தமன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள், ஆனால் உண்மையிலேயே சிலயிடங்களிலே விவசாயிகளுக்குச் சரியான ஆலோசனைகள் சரியான நேரத்திலே கிடைப்பதில்லை. ஏனென்றால் அவர்கள் தங்களுக்கு இட்ட பணிகளைச் செய்வதில்லை. அவர்கள் வேறு வகையான பணிகளைச் செய்து கொண்டிருக்கிறார்கள். அதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறேன். எக்ஸ்சப்ஷனல் கேஸ் இருக்கலாம். (குறுக்கீடு)

பிற்பகல் 5-00

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. துரை ராமசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ஒரு அதிகாரியை மனதிலே வைத்துக்கொண்டு ஏதேதோ சொல்லிக் கொண்டிருக்கிறார். பொதுப்படையாக குற்றம் சாட்டக்கூடாது. இத்துறையைப் பொறுத்தவரை, எல்லா அதிகாரிகளும் அவர்களுடைய பணிகளைச் சிறப்பாகச் செய்துகொண்டிருக்கிறார்கள். ஒரு குறிப்பிட்ட அதிகாரி பணி செய்யவில்லை என்றால், அதுபற்றி தனியாக புகார் மனு கொடுத்தால் உறுதியாக நடவடிக்கை எடுக்கப்படும்.

1995 ஏப்ரல் 24]

டாக்டர் ஆ. வெ. புருஷோத்தமன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் விளக்கத்திற்கு நன்றி. பட்டு முட்டைகளையெல்லாம் உற்பத்தி செய்த பிறகு அந்த விவசாயி, அந்தப் பட்டுக் கூடுகளை, வளாகத்திற்கு, மார்கெட்டிற்கு எடுத்துச் செல்கிறான். எந்த மார்க்கெட்டிலே என்ன விலை என்று அவர்களுக்கு தெரியாது, புரியாத சூழ்நிலை இருக்கிறது. அண்டை மாநிலங்களிலே விலை அதிகமா அல்லது நம்முடைய பகுதியிலே விலை குறைவா என்கிற விவரங்கள் எல்லாம் தெரியாத சூழ்நிலை உள்ளது. நம்முடைய தமிழ்நாட்டிலே உள்ள இந்தக் கக்கூன் மார்க்கெட்டிங் மூலமாக 40 கோடி ரூபாய்கூட வியாபாரம் நடைபெறுகின்றது. 40 கோடி ரூபாய். அந்தப் பட்டுக்கூடு மார்க்கெட்டிலே பெண்கள் அதிகமாகப் ஈடுபடுத்தப்பட வேண்டுமென்று மெத்தப் பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன். ஏன் என்றால், அந்தப் பட்டுக் கூட்டை கையாளவும், அந்தப் பட்டுக் கூடுகளை தரம் பிரிக்கவும், பட்டுக் கூடு வியாபாரத்தை நல்ல முறையில் கண்காணிப்பதற்கும் பெண்கள் நியமிக்க வேண்டுமென்று மெத்தப் பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்ததாக இப்படி விற்கப்பட்ட இந்தப் பட்டுக்கூடுகளையெல்லாம் ரீலிங்குக்கு எடுத்துச்செல்ல வேண்டும். நம்முடைய தமிழகத்திலே குறிப்பிட்டுச் சொல்லும்படியாக ரீலிங் சென்டர்கள் இல்லை. ரீலிங் சென்டர் ஒரு இண்டஸ்டிரியல் யூனிட். அந்த இண்டஸ்ரீயல் யூனிட் எத்தனை யூனிட்டுகள் உள்ளன, யார் யார் இண்டஸ்டிரியல் யூனிட் வைத்திருக்கிறார்கள். எவ்வளவு கூடுகள் இங்கே ரீலிங் செய்யப்படுகின்றன, டுவிஸ்டிங் சென்டர் உள்ளதா? இந்த டுவீஸ்டிங் ஆனவுடன் இந்தச் சில்க்குகள் எல்லாம் நம்முடைய மாநிலத்திலே விற்கப்படுகிறதா? அண்டை மாநிலங்களுக்குச் செல்கிறதா என்ற தெளிவான சூழ்நிலை இல்லை. இங்குள்ள சில்க் எக்ஸ்சேஜ் காஞ்சிபுரத்திலேதான் இருக்கிறது. தமிழ்நாட்டிலே உற்பத்தி ஆகின்ற சில்க் அதாவது பட்டுகள் எல்லாம் காஞ்சிபுரத்திற்குத்தான் வந்தாக வேண்டும். ஆனால், அண்டை மாநிலத்திலே பெங்களூரிலே பட்டுக்கு என்று சில்க் எக்ஸ்சேஜ்கள் சுமார் 50, 60 இருக்கின்றன. (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. துரை ராமசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சிக்ஸ் எக்ஸ்சேஜ்களைப் பொறுத்தவரை காஞ்சிபுரத்திலே இருந்தாலும்கூட, மொபைல் எக்ஸ்சேஜ் இப்போது ஏற்பாடு செய்திருக்கிறோம். எங்கெங்கே அதிக உற்பத்தி ஆகிறதோ,

மொபைல் எக்ஸ்சேஜ்ஜிலே சென்று அங்கே வாங்கி வந்து விற்கிறார்கள். இப்போது சேலத்திற்கு புதிதாக ஆரம்பித்திருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினருடைய பகுதியிலே அதிகம் இருக்கிறது என்று சொல்வாரானால், அங்கே அந்த மொபைல் எக்ஸ்சேஜ்ஜை அனுப்புவதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம். ஆகையால், நம்மிடம் உற்பத்தியாகின்ற அத்தனை சில்க்குகளையும் காஞ்சிபுரமே கொண்டு செல்ல வேண்டுமென்ற நிலையில்லை என்பதைப் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் ஆ. வெ. புருஷோத்தமன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சருடைய விளக்கத்திற்கு நன்றி. நான் ஏன் இதைக் குறிப்பிடுகிறேன் என்றால், இது வளர்ந்து வருகின்ற துறை. இதற்காக கோடிக்கணக்கான ரூபாய் பன்னாட்டு நிறுவனங்கள், மாநில அரசாங்கம், மத்திய அரசாங்கம், இவ்வளவு செலவு செய்து ஒரே ஒரு சில்க் எக்ஸ்சேஜ் இருக்கிறது என்றுதான் நான் குறிப்பிட்டேன். ஏனென்றால் இந்தத் திட்டம் 22 மாவட்டங்களில் 17 மாவட்டங்களுக்கு விரிவுபடுத்தப்பட்டிருக்கிறது. 17 மாவட்டங்களில் விரிவுபடுத்தப்படுகிற போது, இந்த சில்க் ரீலிங் யூனிட், சில்க் டுவிஸ்டிங் யூனிட் இது எல்லாம் குறைவாக இருக்கும். அதன் காரணமாகத்தான் நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். மேலும் இதன் மூலமாக பல்வேறு வகையான சங்கடங்கள் எல்லாம் . . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. துரை ராமசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ரீலிங்கைப் பொறுத்தவரை தனியார்கள் செய்து கொண்டிருக்கிறார்கள். ரீலிங்கிலே பலவித சிக்கல்கள் இருக்கின்றன. அதிலே அதிக லாபத்தை ஈர்க்க முடியாது. சில நேரங்களிலே நஷ்டம்தான் அதிகமாக வருகிற காரணத்தினால், ரீலிங் செய்வதற்கு அதிகம் பேர் முன்வருவதில்லை. ஆகவே, இப்போது அரசு அதற்கு முயற்சி எடுத்து கோயம்புத்தூரிலே ஒரு தனியார் மூலமாக இன்று புதியதாக ஒரு மெஷினரியை கண்டுபிடித்திருக்கிறார்கள். ரீலிங் கம் டுவிஸ்டிங் என்ற இரண்டு தொழில்களை ஒரே மெஷின் செய்கின்ற அளவுக்கு இன்று அது செய்யப்பட்டு, அது பட்டுத் துறையின் மூலம் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. அது அடுத்து வருகின்ற காலத்திலே அறிமுகப்படுத்தப்பட்ட பிறகு இந்தமாதிரி பிரச்சினைகள் இருக்காது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

1995 ஏப்ரல் 24]

பிற்பகல் 5-05

டாக்டர் ஆ. வெ. புருஷோத்தமன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்கு நன்றி. இந்தப் பட்டு வளர்ச்சித் துறை பல்வேறு திட்டங்களையெல்லாம் செயல்படுத்தி வருகின்றது. மேற்கு மலைத் தொடர்ச்சித் திட்டம், ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம், மத்திய அரசினுடைய சிறப்பு நிதியுதவித் திட்டம் இப்படி பல்வேறு திட்டங்கள் எல்லாம் வந்தும் இன்னும் அதற்குண்டான இலக்கை நாம் அடையவில்லை. ஏனென்றால், ஒரு காலத்திலே சில்க் இறக்குமதி செய்யப்பட்டது. சைனாவிலிருந்து ரா-சில்க் இறக்குமதி செய்யப்பட்டது. இப்படிப்பட்ட சூழ்நிலைகள் எல்லாம் எதிர்காலத்தில் நிகழா வண்ணம் இருக்கவேண்டும். இன்றைக்கு சில்க் மூலம் அந்நிய நாடுகளிலிருந்து ஃபாரின் எக்ஸ்சேஞ் அதிகமாக பெற்றுத் தரக்கூடிய ஒரு சிறப்பான துறை இந்ததுறை. இந்தத் துறையின் மூலமாக பெண்களுக்கு நேரடியாக வேலைவாய்ப்பு கிடைக்கிறது. ஆண்களுக்கு பல்வேறு பகுதிகளில் வேலைவாய்ப்பு கிடைக்கிறது. இதன் மூலமாக இந்த ஆண்டு மட்டும் 1.70 இலட்சம் பேர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்க இருக்கிறது. இப்படிப்பட்ட திட்டங்களெல்லாம் கிராமப்பகுதி மக்களுக்கு சென்றடையவேண்டும். ஏனென்றால் நம்முடைய பகுதி 80 விழுக்காடு மலையையே நம்பியிக்கிற பகுதியாகும். ட்ரைலேண்டு என்று சொல்வார்கள். இந்த ட்ரைலேண்டு மூலமாக இப்படிப்பட்ட திட்டங்களை நாம் கண்டிப்பாக செயல்படுத்தியாகவேண்டும். இறுதியாக இந்தப் பட்டு வளர்ச்சி மூலமாக தாழ்த்தப்பட்ட மக்களுக்கு அரசாங்கத்தினுடைய சப்சிடியை வாங்கிக் கொடுத்து, அவர்களுக்கு கிணறு வெட்டிக் கொடுத்து, அவர்களுக்கு வீடு கட்டிக் கொடுத்து, அதாவது பட்டுப்புழு வளர்ப்பதற்கு வீடு கொடுத்து, அவர்களுக்கு பயிற்சி அளித்து, இந்தத் திட்டங்களையெல்லாம் கடந்த ஆண்டு பட்ஜெட் கூட்டத் தொடரிலேயே நாம் இதன் மூலமாக நிறைவேற்றினோம். இந்த ஆண்டு அது எந்தநிலையில் உள்ளது, எவ்வளவு ஆதி திராவிடர்கள் இதன் மூலமாக பயனடைந்தார்கள்? எவ்வளவு நிலங்கள் வாங்கப்பட்டன? எவ்வளவு நிலங்கள் மல்பரி கல்டிவேஷனுக்குக் கொண்டுவரப்பட்டன? இதன் மூலமாக எவ்வளவு பட்டுப்புழு வளர்க்கப்பட்டது, எவ்வளவு சில்க் இதன் மூலமாக சில்க் எக்ஸ்சேஞ்ச்க்கு சென்றது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வாயிலாக அறிய விரும்பி, என்னுடைய தொகுதி பற்றி சில பிரச்சினைகளை நான் இங்கு குறிப்பிட்டு ஆகவேண்டும். என்னுடைய பகுதி தர்மபுரி மாவட்டத்திலேயே மிகவும் பின்தங்கிய வறட்சியான பகுதி. இந்தப் பகுதியிலே பாப்பாரப்பட்டி வறட்சியாகி குடிநீர் பிரச்சினை வருடம் முழுவதும் இருந்து வருகிறது. இந்தப் பாப்பாரப்பட்டி பொதுமக்களின்

குடிநீர்ப் பிரச்சினையை தீர்ப்பதற்கு நம்முடைய பஞ்சப்பள்ளி கால்வாய் திட்டத்தை கடந்த 2,3 சட்டமன்றக் கூட்டத் தொடரிலேயே நான் இடைவிடாது கேட்டும்.. ..

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. புருஷோத்தமன், குடிநீர்ப் பிரச்சினை சம்பந்தமான மானியக் கோரிக்கை ஏற்கெனவே முடிந்துவிட்டது. நீங்கள் உங்கள் தொகுதிக்கு வேண்டியதை ஒரு கோரிக்கையாகக் கேட்டால் அதை வரிசையாகச் சொல்லலாம். இதிலே நீண்டதொரு விவாதம் வேண்டாம். உங்கள் தொகுதிக்கான கோரிக்கையை வரிசையாகச் சொல்லலாம்.

டாக்டர் ஆ. வெ. புருஷோத்தமன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பஞ்சப்பள்ளி கால்வாய் திட்டத்தை நிறைவேற்றிக் கொடுக்கவேண்டுமென்று மெத்தப் பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன். மேலும் என்னுடைய பகுதி தொழிற்சாலையே இல்லாத பகுதி. நம்முடைய தமிழக அரசால் தொழில்துறையிலே மிகவும் பின்தங்கிய பகுதி என்று அறிவிக்கப்பட்டு இன்றுவரை ஜீரோ இண்டஸ்ட்ரி பகுதியாக இருந்து வருகிறது. இப்படிப்பட்ட பகுதியிலே என்னுடைய தொகுதியிலே சிலிக்கன் அதிகமாகக் கிடைக்கிறது; கருப்புக் கற்கள் அதிகமாக கிடைக்கின்றன, கற்றாழை அதிகமாக கிடைக்கிறது. இன்னும் பல்வேறு வகையான பொருட்கள் எல்லாம் என்னுடைய பகுதியிலே கிடைக்கின்றன. இப்படிப்பட்ட பொருள்களையெல்லாம் பயன்படுத்தி, அந்த மக்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கின்ற வகையிலே பல்வேறு திட்டங்களைத் தீட்டி, சிறிய தொழிற்பேட்டையாவது அமைத்துக் கொடுத்தால் இதன் மூலமாக அந்த ஜீரோ இண்டஸ்ட்ரி என்ற ஒரு நிலையை மாற்றி, இந்தப் பகுதி மக்களை நிறைவு செய்ய முடியும். என் பகுதி மக்களை திருப்திப்படுத்த இந்த ஆண்டிலாவது சிறிய தொழிற்பேட்டையை அமைத்துக் கொடுக்கும்படி மெத்தப் பணிவன்புடன் கேட்டு வாய்ப்பு கொடுத்த துணைத் தலைவருக்கு என்னுடைய பணிவான வணக்கத்தையும் நன்றியையும் தெரிவித்து அமைகிறேன். நன்றி, வணக்கம்.

பிற்பகல் 5-10

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. ஆர். சிங்காரம்.

திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்று ஊரகத் தொழில்துறை, தொழில்துறை, கதர்துறை மானியக் கோரிக்கையின் மீது எனக்கும் பேசுகின்ற வாய்ப்பு தந்தமைக்கு தங்களுக்கு என்னுடைய நன்றியை முதற்கண் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத்துணைத் தலைவர்: திரு. சிங்காரம், 'எனக்கும்' என்று சொல்லாதீர்கள், உங்களுக்கு வாய்ப்புகள் நாங்கள் தந்துகொண்டுதான் இருக்கிறோம்.

திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் சொல்ல வந்தது என்னவென்றால், நான் ரெடியாக இல்லை, வேறொரு உறுப்பினர் பேசுவதாக இருந்தது, திடீரென்று எனக்கு வாய்ப்பு வந்தது, அதற்காகச் சொன்னேன்.

இங்கே ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் முன்மொழிந்த ஊரகத் தொழில் துறை குறித்த மானியக் கோரிக்கையின் மீது பல்வேறு கருத்துக்களை சட்டமன்ற உறுப்பினர்கள் எடுத்துக் கூறினார்கள். மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் குறித்து என்னுடைய கடந்த கால நினைவுகளை நான் நினைத்து பார்க்கின்றபோது அவர் ஒரு நேரத்தில் காங்கிரஸ் பேரியக்கத்தினுடைய தூணாக, காங்கிரஸினுடைய மான மரியாதையைக் காப்பாற்றுபவர். அப்படிப்பட்ட அவரை, இன்று மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் சட்டமன்ற உறுப்பினராக்கி, அமைச்சராக்கி இந்த தமிழ்நாட்டிலே அழகு பார்க்கின்ற காட்சியை நான் பார்க்கின்றபோது மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன். ஏன் இதை நான் சொல்ல ஆசைப்படுகின்றேன் என்று சொன்னால் எங்கள் இயக்கத்திலே பல்வேறு இயக்கங்களிலிருந்து வந்தவர்களுக்குத்தான் முதல் மரியாதை. நீங்கள் வரிசையாக பார்ப்பீர்களேயானால் நாங்கள் எல்லாம் தொடர்ந்து மஞ்சப்பட்டியை மறக்க முடியுமா என்ற காலத்திலிருந்து நான் காங்கிரஸ் பேரியக்கத்திலே இணைத்துக் கொண்டவன். ஆனால், இன்று என்னுடைய நிலை என்ன என்பதை வெளியிலே, நாட்டு மக்களிடத்திலே கேட்டால் வேறு மாதிரியாக பேசிக் கொள்வார்கள்.

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் திரு. துரை இராமசாமி அவர்கள் மிகச் சிறப்பான முறையில் சீரான முறையில் அன்போடும், பண்போடும், பாசத்தோடும் இன்று இந்த ஊரகத் தொழில் துறையை கவனித்துக் கொண்டிருப்பது குறித்து நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

அதுபோல, நம்முடைய மாண்புமிகு அமைச்சர், தொழில் துறை அமைச்சர் அவர்கள், இங்கே அவருடைய பெயரிலே—பெயரைச் சொல்லலாமா? ஒன்றும் தவறில்லையே?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: என்ன சொல்லப் போகிறீர்கள் என்பதைப் பற்றித் தெரியாமல் சொல்லலாமா என்றால்?

திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு அமைச்சர் திரு. சின்னசாமி என்று இருந்தாலும் கூட அவர் தொழில் துறையைப் பொறுத்தவரையில் மிகத் திறமையாக, சிறப்பான முறையில், அமைதியான முறையில், இன்னும் சொல்லப் போனால், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் சொன்னது போல தமிழகத்தினுடைய நரசிம்மராவ் என்ற முறையிலே, எதையும் நிதானமாக சிந்தித்து ஒரு முடிவு எடுத்தாலும், சிறப்பான, இறுதியாக ஒரு நல்ல முடிவு எடுப்பார். சுறுசுறுப்பாக இங்கே பேசுவது, அளந்து பேசினாலும் ஆய்ந்து பேசுவார். எடுக்கின்ற முடிவு விரைந்த முடிவாக இருக்கும். சிறப்பாக செயல்படுகின்ற நம்முடைய தொழில் துறை அமைச்சர் அவர்களை நம்முடைய தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் நியமித்து இருக்கின்றார்கள். அவர்களிடத்தில் எந்த விஷயத்தைச் சொன்னாலும், உடன் முடிவாக இது முடியும், இது முடியாது என்று மெதுவாக சொன்னாலும், அமைதியோடும், அன்போடும் சொல்வார்.

நம்முடைய கதர் துறை அமைச்சர் அவர்கள் மிகவும் சிறப்பானவர். நல்ல இளைஞர் பண்புள்ள இளைஞர். எந்த விஷயத்தைச் சொன்னாலும், யார் சொன்னாலும், எந்தக் கட்சி சொன்னாலும், உடனுக்குடன் 'டிஸ்போசல்' செய்கின்றவர். ஆற்றல் மிக்க நல்ல மறவரை, நல்ல நண்பரை, நல்ல ஒரு திறமையான அமைச்சரை நம்முடைய தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இங்கே நியமித்து இருக்கின்றார்கள். இந்த மூன்று பேரும் அவர்களுடைய மானியக் கோரிக்கைகளின் மீது இங்கே பதிலளிக்க இருக்கின்றார்கள். நானும் ஒருசில வார்த்தைகளை சொல்லி முடிக்க எண்ணுகின்றேன்.

பிற்பகல் 5-15

முதலிலே நான் சொல்ல விழைவது தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்தவன் நான். தஞ்சை மாவட்டத்திலே 6 மாதம்தான் விவசாயம் இருக்கும். மீதி 6 மாதங்களுக்கு விவசாயம் இருக்காது. ஆக வேறு ஏதாவது தொழில் செய்வார்களா என்றால் செய்ய முடியாது, செய்ய மாட்டார்கள். விவசாயத் தொழில் போக மீதி நாட்களில் சும்மா இருந்துவிடுவார்கள். அவர்கள் மற்ற 6 மாதங்களுக்கு ஏதாவது ஒரு தொழில் செய்ய வேண்டும். அங்கு சாதாரண தொழிலாளர்கள் நிரம்பி இருக்கிறார்கள். அதிலே இரண்டு நிலை இருக்கிறது. மேல் தஞ்சையிலே ஒரு நிலை, கீழ் தஞ்சையிலே ஒரு நிலை. கீழ் தஞ்சை, தொழிலாளர்கள் அதிகமாக நிரம்பிய பகுதி. மேல் தஞ்சை, தொழிலாளர்களும், மிராசுதாரக்களும் அல்லது விவசாயிகளும் நிரம்பிய பகுதி. ஒரு ஏக்கர் நிலம் இருக்கின்றவர் கூட விவசாயத் தொழிலாளியாக இருப்பார். அதுபோலவே, கீழ்த் தஞ்சையிலே ஒரு ஏக்கர் நிலம் வைத்திருக்கின்றவர் கூட ஒரு விவசாயத்

தொழிலாளியாக இருப்பார். ஒரு ஏக்கர் நிலத்திலே சாகுபடி செய்து விட்டு சும்மா இருக்க வேண்டியதுதான். சாகுபடி முடிந்தவுடன் வேறு வேலை கிடையாது. ஆகவே, தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் நீண்ட பல வருடங்களாக ஒதுக்கப்பட்ட பகுதியாக இருந்து வந்தது. ஆனால் தஞ்சை மாவட்டத்தை எடுத்துக் கொண்டால் பெரும்பெரும் தலைவர்கள் இந்தியாவுக்கே நான் வழி காட்டுகிறேன் என்று சொல்வார்கள். ஊரெல்லாம் நாங்கள் போய் பஞ்சாயத்து செய்து விட்டு வருகிறேன் என்று சொல்வார்கள். தஞ்சை மாவட்டத்திலே பிறந்தவன், தஞ்சை மாவட்டம் நாட்டுக்கு வழிகாட்டும் என்று சொல்வார்கள். ஏதாவது செய்தார்களா என்று சொன்னால் இல்லை.

நம்முடைய தமிழக முதலமைச்சர் தானைத் தலைவி, தங்கத் தலைவி, புரட்சித் தலைவி அவர்கள் வந்த பிறகு தான் உலகத் தமிழ்மாநாடு ஒன்று போட்டு (மேசையைத் தட்டும் ஒலி) தஞ்சைக்கு சிறப்பு செய்கின்ற வரையில், தஞ்சை மாவட்டத்தை தத்து எடுத்துக்கொண்டது போல, தஞ்சையிலிருந்து 18 கிலோ மீட்டர் அளவிற்கு சாலைகளும் பாலங்களும், கட்டிடங்களும்—இவை போன்ற பல்வேறு திட்டங்களை செயலாற்றி, இன்று பிரம்மிக்கத்தக்க வகையிலே உலகத் தமிழ்மாநாட்டை நடத்திக்காட்டி, உலகத்திலேயே மிகச் சிறந்த ஒரு தலைவியாக, தமிழ்த் தலைவியாக, உன்னதத் தலைவியாக நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் விளங்குகிறார்கள் என்று சொன்னால், அது அவருக்கே உரித்தான திறன்! அவர் எங்கே பிறந்தார், எங்கே வளர்ந்தார்? ஆனால், தஞ்சையிலே பிறந்து, தஞ்சையிலே வாழ்கின்ற பெரும் தலைவர்கள் என்று சொல்லிக்கொள்கின்றவர்கள் எல்லாம் தஞ்சைக்கு எதுவுமே செய்யவில்லை. ஆகவே தான், ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்களையும், நம்முடைய தொழில் துறை அமைச்சர் அவர்களையும் பார்த்து நான் கேட்டுக்கொள்வது, தஞ்சை மாவட்டத்தை ஒரு பெரிய ஃபேக்டரி மாவட்டமாக ஏதாவது ஒரு ஃபேக்டரியை ஏற்படுத்தி, மீதமுள்ள 6 மாதங்களுக்கு தொழிலாளர்கள் வேலை செய்கின்ற அளவுக்கு ஒரு வாய்ப்பினைச் செய்து தர வேண்டும் என்று, நான் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிக் காலத்திலேயாவது நீங்கள் செய்து தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால் இந்த ஆட்சியைத் தவிர வேறு எந்த ஆட்சியும் அதைச் செய்யமுடியாது. வெவ்வேறு கோணங்களில் வெவ்வேறு முதலமைச்சர்கள் வந்தாலும், அவர்கள் வெவ்வேறு கோணங்களில் பயப்படுவார்கள். ஆனால், எதற்கும் அஞ்சாத வீராங்கனையாக, யார் எந்த சாதி எந்த மதம் என்ற பேச்சுக்கே இடம் இல்லை; எந்த மாவட்டம் என்ற பேச்சுக்கே இடம் இல்லை; ஆனால், சாதனை ஒன்றே தன்னுடைய முயற்சி என்று சொல்லிக்

கொண்டு இருக்கிற நம்முடைய முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிக் காலத்தில் (மேசையைத் தட்டும் ஒலி) தஞ்சை மாவட்டத்தை (குறுக்கீடு), தஞ்சை என்றாலே இரண்டு மாவட்டங்களும் தான்—தஞ்சை மற்றும் நாகை காயிதே மில்லத் மாவட்டங்கள் இரண்டும் சேர்த்துதான் சொல்கிறேன். அங்கே தொழிலாளர்கள் 6 மாதங்களுக்கு வேலை இல்லாது இருக்கும் நேரத்தில் அவர்கள் தொழில் துறையிலே சிறப்பான முறையிலே பணியாற்றி வாழ்க்கை நடத்துவதற்கு நீங்கள் ஒரு ஏற்பாட்டினைச் செய்ய வேண்டும் என்று நான் பணிவன்போடு வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

நான் இந்தச் சட்டமன்றத்தின் வாயிலாக, ஒரு காங்கிரஸ் பிரதான எதிர்க்கட்சியின் காங்கிரஸ் உறுப்பினராக இருந்தாலும்கூட, நான் இன்றைக்கு மத்திய சர்க்காருக்கும் மாநில சர்க்காருக்கும் சேர்த்துத்தான் ஒரு கோரிக்கை வைக்கக் கடமைப்பட்டு இருக்கிறேன். தமிழகத்திலே நம்முடைய தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் முதலமைச்சராக வந்த பிறகு இங்கே டிட்கோ சேர்மன் ஈ.வி.கே.சுலோசனா சம்பத் அவர்கள் நடத்திய ஒரு பங்ஷனுக்கு நான் சென்று இருந்தேன். அங்கே அவர்கள் பல்வேறு திட்டங்களைச் சிறப்பான முறையில் செயலாற்றியதை நான் பார்த்தேன். அதேபோல, பல திட்டங்கள் வந்தாலும்கூட, மிகப் பெரிய திட்டங்கள், அதாவது 'பெல்' நிறுவனம் போன்ற பெரிய திட்டங்களை தமிழகத்திலே மத்திய சர்க்கார் கொண்டு வரவேண்டும்; அதற்கு நம்முடைய முதலமைச்சர் அவர்கள் முயற்சி எடுத்துக்கொண்டு இருக்கிறார்கள் என்று கருதுகிறேன். நான் சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில் இந்த மாமன்றத்தின் வாயிலாக, மத்திய சர்க்கார்—எங்களுடைய பிரதமர் திரு. நரசிம்ம ராவ் அவர்கள், எதையும் நிதானமாகச் செய்தாலும், மெதுவான ஒரு முயற்சியை எடுத்தாலும்கூட, அதை நிந்தரமாக நல்ல முடிவாக எடுப்பார் என்றே கருதுகிறேன்; இந்த மாமன்றத்தின் வாயிலாக காங்கிரஸ் பேரியக்கத்தின் சார்பாக நான் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்; தமிழகத்திலே மிகப் பெரிய ஒரு தொழிற்சாலையை ஏற்படுத்துவதற்கு நீங்கள் உத்திரவிட வேண்டும் என்று தமிழகத்தின் முதலமைச்சர் வாயிலாக, இந்த மாமன்றத்தின் வாயிலாக நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல இன்னும் ஒருசில கோரிக்கைகளை நான் இங்கே வைக்க விரும்புகிறேன். நம்முடைய மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் 5 சர்க்கரை ஆலைகளை தமிழகத்திற்குத் தந்து இருக்கிறார்கள். அந்த 5 ஆலைகள் மட்டும் போதாது. இன்னும் ஒரு 5 சர்க்கரை ஆலைகளை ஏற்படுத்தி, அதாவது மொத்தம் இன்னும் 10 சர்க்கரை ஆலைகள் ஏற்படுத்துவீர்களேயானால், நான் சொன்ன அந்த விவசாயத்

தொழிலாளர்கள் அதிலே பங்கு பெறுவதற்கு நன்றாக இருக்கும். மேலும், இப்போது எங்கு பார்த்தாலும் எல்லோரும் கரும்பு போட ஆரம்பித்து விட்டார்கள். அந்தக் கரும்பு நிறைய எல்லா இடங்களிலும் கிடைக்கின்றது. தஞ்சையிலே கூட எல்லோரும் விவசாயத்தைத் தான் நம்பி இருந்தோம். ஆனால், இப்போது அதை விட்டு, திருச்சி மாவட்டம், தஞ்சை மாவட்டம் மற்றும் எல்லா மாவட்டங்களிலும் கரும்பு போட ஆரம்பித்து விட்டார்கள். ஆக, நிறைய கரும்பு கிடைக்கிறது. எனவே இன்னும் 5 சர்க்கரை ஆலைகளை ஏற்படுத்தி, அந்தத் தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பினை நீங்கள் தரலாம் என்று நான் பணிவன்போடு வேண்டி விருப்பிக் கேட்டுக் கொள்கிறேன்.

பேராவூரணி தொகுதியைப் பொறுத்தவரையில் பொதுவாக சில கோரிக்கைகளை நான் முன்வைக்கக் கடமைப்பட்டு இருக்கிறேன். என்னுடைய தொகுதி தஞ்சை மாவட்டத்திலே தென்கோடி கடைசியில்—தென்பகுதிக்கு அந்தப் பக்கம் புதுக்கோட்டை மாவட்டம், அந்த பார்டரில் தான் என்னுடைய தொகுதி இருக்கிறது. அதன் டெயில் எண்டு பகுதியில் உள்ள 15 ஊராட்சிகள் கடலோரப் பகுதியை சேர்ந்தவை. அந்தத் தொகுதி முழுவதுமே கடைமடைப் பகுதியாகும். வறண்ட பிரதேசம் போல காட்சி அளிக்கின்ற பகுதியாக பேராவூரணி இருக்கிறது. ஆகவே, தொழில் என்பது அங்கே அறவே இல்லை. ஆனால், அங்கே நிறைய தேங்காய் கிடைக்கிறது, அந்தத் தேங்காயை வைத்து ஒரு பெரிய தொழிற்சாலை அங்கே அமைக்கலாம். அதை அரசே ஏற்படுத்தி செய்தால் மிக நன்றாக இருக்கும். அதற்கு பிரதானமான மூலப்பொருளான தேங்காய் நிறைய அங்கு கிடைக்கிறது. கடல் ஓரப் பகுதியில் உள்ள 15 பஞ்சாயத்துகளில் உப்புத் தண்ணீர் இருப்பதால், அங்கே உப்பு கிடைக்கிறது. அதை வைத்து ஏதாவது உப்பு தொழிற்சாலை ஆரம்பிக்கலாம். அதே போல நம்முடைய ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் இதை ஏற்பாடு செய்யவேண்டுமென்று நான் பணிவன்போடு வேண்டிவிரும்பி கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 5-20

சிறுதொழில்கள் செய்கின்றவர்களுக்கு இந்த வங்கிக் கடன் வழங்கப்படுகிறது. ஆனால் தேசியமயமாக்கப்பட்ட வங்கியிலே, நேஷனலைஸ்ட் வங்கியிலே கடன் வழங்குவதிலே ரொம்ப டிலே செய்கிறார்கள். அதாவது கவர்ன்மெண்ட்டைப் பொறுத்தவரையில் உடனடியாக மானியம் கொடுத்துவிடுகிறார்கள். நாம் சொன்னோம் என்றால் அல்லது மனு கொடுத்தால் இம்மிடியட்டாக சேங்ஷன் பண்ணிவிடுகிறார்கள். ஆனால் வங்கியிலே—அவர்களுடைய கன்ட்ரோலே ரிசர்வ் வங்கிதான். ஆகவே நாம் அதிகாரம் பண்ணமுடியவில்லை.

மத்திய சர்க்கார்கூட அதிகாரம் பண்ணமுடியவில்லை. நானும் கதர்சட்டை போட்ட காங்கிரஸ்காரன் ஐயா, திரு. நரசிம்மராவ் இடத்திலே போய் சொல்வேன் என்று சொன்னால்கூட அவர்கள் கேட்கமாட்டேன் என்கிறார்கள். அதனாலே பாங்கியைப் பொறுத்தவரையில் அந்தமாதிரி ஒரு கஷ்டமான சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. இந்தச் சிறுதொழில்கள் மட்டுமல்ல, ஐ.ஆர்.டி.பி. லோன் மற்ற எல்லா லோனுமே கொடுக்க மாட்டேன் என்கிறார்கள், தடுக்கிறார்கள் அல்லது டிலே பண்ணுகிறார்கள் அல்லது ரொம்ப டிலே பண்ணுகிறார்கள். அதனாலே பல்வேறு நேரத்திலே நடக்கவேண்டிய தொழில்கள் நேரத்திலே நடக்கமுடியாமல் போய்விடுகிறது.

இன்னொன்று செல்ப் எம்ப்ளாய்மெண்ட் ஸ்கீம். சுய வேலைவாய்ப்பு திட்டத்தின் கீழ் கடன் வழங்கப்படுகிறது. அந்தக் கடன் வழங்குவதற்கு முறைப்படி மனுப் போடுகிறார்கள். இன்டர்வியூ நடக்கிறது. இன்டர்வியூ நடக்கிறபோது அந்தச் சம்பந்தப்பட்ட வங்கியினுடைய மேலாளர் வந்து இசைவு கொடுத்தாலொழிய அந்த லோன் சேங்ஷன் செய்யப்பட மாட்டாது. அந்த பாங்கியினுடைய மேனேஜர் வந்து இதைக் கொடுக்கலாம் என்று சேங்ஷன் செய்கிறார். அதிலே டிக்-குக்கு அதிகாரம் இல்லாத மாதிரி தெரிகிறது. நடைமுறையிலே இருப்பதைச் சொல்கிறேன் நான். ஆக டிக்-கும் அந்த மேனேஜரும் சேர்ந்து இவர் அவசியமான கேன்டிடேட், நல்ல கேண்டிடேட், சிறப்பான முறையிலே செய்வார், இவர் படித்திருக்கிறார், அவருக்குக் கிடைக்க வேண்டுமென்ற உணர்வு இருக்கவேண்டும். 100 பேர்கள் வந்தால் ஒரு 10 அல்லது 5 பேர்களுக்குத்தான் அந்த லோன் சேங்ஷன் செய்கிறார்கள். மீதி பேர்களுக்கும் லோன் சேங்ஷன் செய்வதில்லை. ஆக அனைவருக்கும் இந்த லோன் கிடைப்பதற்கான ஏற்பாடு செய்யவேண்டும். இரண்டாவது, சேங்ஷன் ஆனாலும்கூட அந்த வங்கிக்கு வந்த பிறகு ஒரு வருடம் ஆகிறது அந்த லோன் சேங்ஷன் ஆவதற்கு. ஆக அந்த டிக்கிலேயிருந்து சேங்ஷன் ஆர்டர் வந்து மானியம் வந்து விடுகிறது. உங்கள் மிஸ்ட்டேக் இல்லை. மிஸ்டேக் இஸ் வித் தி பேங்க். ஆகவே அதற்கு ஒரு வழி செய்ய வேண்டுமென்று கவர்ன்மென்ட்டைக் கேட்டுக்கொள்கிறேன். பாங்கியிலே இருந்து லோன் கொடுக்கிறதிலே ரொம்ப டிலே பண்ணுகிறார்கள். அந்தமாதிரி செய்யாமல் இருப்பதற்கு தக்க ஏற்பாடு செய்யவேண்டுமென்று நான் உங்களைப் பணிவன்போடு வேண்டிவிரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

இந்த 3 மானியக் கோரிக்கைகளிலும் பேசுகின்ற வாய்ப்பினைக் கொடுத்த நம்முடைய மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி என்னுடைய உரையை முடிக்கிறேன். ஜெய்ஹிந்த்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: விவாதம் முடிவுற்றது. மாண்புமிகு சிறுதொழில்கள், ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்களுடைய பதிலுரை.

1995 ஏப்ரல் 24]

மாண்புமிகு திரு. துரை ராமசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

காலத்தின் காவியமாய்
கவிதையின் ஜீவியமாய்
ஞாலத்தின் தலைமகளாய்
நானிலத்தின் கலைமகளாய்
சீலத்தின் திருவடிவாய்
சீர்திருத்தும் மறுவடிவாய்
கோலத்தில் பேரொளியாய்
கொள்கையிலே நேர் வழியாய்த் திகழும்
புரட்சித் தலைவியின் பூ மனம் மலர்ந்தால் (மேசையைத் தட்டும் ஒலி)
புஞ்சையிலே பொன் விளையும்
தஞ்சையிலே தமிழ் விளையும்
தரணியெல்லாம் புகழ் விளையும்
பஞ்சினிலே மணி விளையும்
பசித்தோர்க்கு நலம் விளையும்
நெஞ்சினிலே பலம் விளையும்
நேரத்தில் நிலம் விளையும்
சொல்லரிசி கேட்டே
சுகம் மறந்த ஏழைக்கு
நல்லரிசி போட்ட தாய் (மேசையைத் தட்டும் ஒலி)
நாடு போற்றும் நல்ல மனத்தாய்
கல்லெறியும் பாவிகளை
வெல்லரிய துணிவுடனே
வெகுண்டெழுந்தாய் வீரத்தாய்
அறிவு உடைமை
அன்பு உடைமை
அவை அஞ்சாமை
இனியவை கூறல்
இன்னா செய்யாமை
என்ற குறள்நெறி வழி நடந்து
“வறியோர்க்கு ஈவதே ஈகை”
என்ற பெரியோர்களின் வாக்குக்கேற்பவும்,
“வாடிய பயிரை காணும்போதெல்லாம் வாடினேன்”
என்ற வள்ளலாரின் மொழிக்கொப்பவும்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

"அச்சம் என்பது மடமையடா
அஞ்சாமை திராவிடர் உடமையடா" (மேசையைத் தட்டும் ஒலி)
என்ற கொள்கை குறிப்புனர்ந்து,
"தருமத்தின் வாழ்வுதனைச் சூது கவ்வும்
தருமம் மறுபடியும் வெல்லும்"

என்ற அருள்வாக்கை மெய்ப்பிக்கும் வகையில் (மேசையைத் தட்டும் ஒலி)

உறுதியும் விடா முயற்சியும், தளராத மனமும்
தன்னகத்தே கொண்ட தனிப்பெரும் தலைவி
(மேசையைத் தட்டும் ஒலி)
பெரியாரின் துணிச்சலும்,
பேரறிஞர் அண்ணாவின் ஆற்றலும்
புரட்சித்தலைவரின் மனித நேயமும்
ஒருங்கிணைந்த ஒப்பற்ற தலைவி (மேசையைத் தட்டும் ஒலி)
தங்கத் தமிழ்நாடு தறிகெட்டுப் போகாமல்
தடுத்திடவே வந்துதித்த மாதரசி! (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 5-25

தடைக்கற்கள் உண்டெனினும் திடந்தோள்கள் உண்டு எனும் அண்ணாவின் மொழிக்கொப்ப எடுத்ததை முடிக்கும் திராவிட நாட்டின் ஏற்றமிகுத் தலைவி நீங்கள். (மேசையைத் தட்டும் ஒலி) நான் வாழும் இக்காலம் பொற்காலம் என நாடும், ஏடும், நாள் முழுக்க, நாடு முழுவதும் முழங்கச் செய்யும் வகையில், நிதானமாக, நியாயமாக, நேர்மையாக, நேர்த்தியாக, மத, மொழி, இன உணர்வற்ற தேசிய உணர்வோடு ஆட்சி நடத்தும், புனிதத் தலைவி, (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகத்தை வாழ்விக்க வந்த மாதரசி, வரலாற்று சிறப்பு மிக்க பெண்ணரசி, ஆழ்ந்த மதிநுட்பமும், தொலைநோக்கு சிந்தனையும் பெற்று விளங்குகிற தீர்க்கதரிசி நம்முடைய புரட்சித் தலைவி., மேசையைத் தட்டும் ஒலி) இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் திசை நோக்கி என்னுடைய பணிவான வணக்கங்களைச் செலுத்தி, என்னுடைய உரையைத் துவங்குகின்றேன்.

தமிழ்நாடு கைத்திறன் தொழில்கள் வளர்ச்சிக் கழகம் வரலாற்றையும், கற்பனையையும் இணைத்து அதன்பால் தன்னை ஒருநிலைப்படுத்தி வடிவமைக்கும் உருவங்களை கண்முன் கொண்டுவந்து அழகுமிளிர கலைநயத்தோடு, இலக்கணம் மாறாமல் பார்ப்போர் வியக்க

உருவாக்கித்தரும் தமிழக கைவினைஞர்களை உக்குவித்தும், அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும்பொருட்டும் கைவினைப் பொருட்களை பூம்புகார் மூலம் விற்பனை செய்து வருகிறது.

கடந்த ஆண்டு உலகப் புகழ் வாழ்ந்த திருமலை-திருப்பதி தேவஸ்தான கோவிலுக்கு தங்க இரதம் செய்து கொடுத்துள்ளதோடு, இந்த ஆண்டு சென்னை மயிலாப்பூரில் உள்ள அருள்மிகு கற்பகாம்பாள் கோயில், மருதமமலையிலுள்ள அருள்மிகு சுப்ரமணியசுவாமி திருக்கோயில் மற்றும் ஈச்சனாரியிலுள்ள அருள்மிகு விநாயகர்கோவில் அனைத்திற்கும் தங்க இரதங்களும், சென்னை திருவேற்காட்டிலுள்ள அருள்மிகு தேவி கருமாரியம்மன் திருக்கோவில், கொன்னையூர் அருள்மிகு மாரியம்மன்கோயில் ஆகியவற்றிற்கு வெள்ளி இரதங்களையும் செய்து வருவதோடு, புதுடெல்லியில் உள்ள அருள்மிகு வெங்கடேஸ்வரா மந்திருக்கு கலை அழகுமிக்க கோபுர கதவு மற்றும் கொடிமரம், திருச்சியிலுள்ள அருள்மிகு வெங்காளியம்மன்கோவில் அம்மனுக்கு தங்கக் கவசமும் மற்றும் சிறப்புப் பணிகளும் செய்து வருகின்றது.

இதயதெய்வம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் ஆட்சிக் காலத்தில் இக்கழகம் இரண்டு மடங்கு உற்பத்தியையும், (மேசையைத் தட்டும் ஒலி) இரண்டு மடங்கு விற்பனையையும், ஆலயத் தங்கத் தேர் போன்ற பல சிறப்புப் பணிகளையும் செய்து சாதனை படைத்து வருகின்றது.

1993-94 ஆம் ஆண்டில் மொத்த இலாபம் 44 இலட்சம் ரூபாயை இக்கழகம் ஈட்டியுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

பட்டு வளர்ச்சித் துறை: தமிழ்நாட்டின் பாரம்பரியமிக்க, புகழ்மிக்க பட்டு நெசவுத் தொழில் அதன் தன்னிறைவுக்குத் தேவையான கச்சாப்பட்டு உற்பத்திக்கு வழிவகுக்கும் வகையில் உலக வங்கி நிதியுதவியுடன் பட்டு வளர்ச்சித் துறை இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்ற நாளிலிருந்து மிகச் சிறப்பாக செயல்பட்டு வருகிறது.

இத்திட்டம் ரூ.62 கோடி உலக வங்கி நிதியுதவியுடன் நிறைவேற்றப்பட்டு வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இத்திட்டத்தில் பெண்கள், தாழ்த்தப்பட்ட பழங்குடியினர், சிறு விவசாயிகள் மற்றும் நலிந்த பிரிவினர் பயன்பெறும் வகையில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்தொழிலின் சீரிய வளர்ச்சிக்கு பட்டு விதைப் பண்ணைகள், வித்தகங்கள், பட்டுக்கூடு அங்காடிகள், தொழில்நுட்ப சேவை மையங்கள், புழு

வளர்ப்பு மற்றும் பயிற்சி மையங்கள், அண்ணா பட்டு பரிமாற்றகம், நடமாடும் பட்டு பரிமாற்றகம் மற்றும் முறுக்கேற்றிய பட்டுநூல் கூட்டுறவு விற்பனை இணையம் ஆகியவை ஏற்படுத்தப்பட்டுள்ளன. இத்திட்டத்தில் 42,028 ஏக்கர் பரப்பளவில் மல்பரி செடிகள் பயிரிடப்பட்டு, 10,500 மெட்ரிக் டன்னாக கக்கூன்களும், 1,105 மெட்ரிக் டன்னாக பட்டு உற்பத்தியை உயர்த்தும்வகையில் அனைத்து அடிப்படை வசதிகளும் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. இந்த ஆண்டு 10,650 ஏக்கர் பரப்பளவில் மல்பரி செடிகள் பயிரிடப்பட திட்டமிடப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

இரு சுழற்சியில் பட்டுக் கூடுகளை உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்கு கிலோ ஒன்றுக்கு ரூ. 15 வீதமும், பட்டு நூற்பாளர்களுக்கு கிலோ ஒன்றுக்கு ரூ. 100 வீதமும் ஊக்கத்தொகையாக வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்மூலம் சுமார் 1 இலட்சம் கிலோ இரு சுழற்சி வீரிய கலப்பினப் பட்டுக்கூடுகள் உற்பத்தி செய்யப்படுகிறது. இதன்மூலம் சுமார் 1500 விவசாயிகள் பயன் அடைகிறார்கள். சுமார் 10 டன் தரம்வாய்ந்த கச்சாப்பட்டு உற்பத்தி செய்யப்பட்டு நூற்பாளர்களுக்கு ஊக்கத்தொகையாக ரூ. 15.50 இலட்சம் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) சிறிய பட்டு நூற்பாளர்களுக்கு நடைமுறை மூலதனமாக, வங்கிக் கடன் பேரில் 2.5 சதவீதம் வட்டி மானியமாக வழங்கப்பட்டு வருகிறது. இவ்வாண்டு பட்டு உற்பத்தியில் தமிழகம் தன்னிறைவு அடைய (மேசையைத் தட்டும் ஒலி) கீழ்க்குறிப்பிட்டுள்ள நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. பட்டுத் தொழில் ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிலையம் அமைக்கவும், அதன்மூலம் பல்வேறு ஆராய்ச்சிகள் செய்து தரமான பட்டு உற்பத்தியை அதிகப்படுத்துதல்; பெண்களுக்கான பட்டு நூற்பு மற்றும் நெசவு மையங்கள் அமைத்தல்; பட்டு விசைத்தறி மையங்கள் ஏற்படுத்துதல் ஆகிய நடவடிக்கைகள் மூலம் சர்வ தேசத் தரத்திற்கு இணையான தரம் உயர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு உள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 5-30

தமிழ்நாடு தோல் வளர்ச்சிக் கழகம். தமிழ்நாடு தோல் வளர்ச்சி நிறுவனம் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் பொறுப்பேற்ற நாளிலிருந்து தொடர்ந்து லாபத்தை ஈட்டி வருகிறது. இந்த ஆண்டு ரூ. 15.45 இலட்சம் லாபத்தை ஈட்டியுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம். இதயதெய்வம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் சீரிய தலைமையில் தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தின் பணி தொடர்ந்து

சீரோடும் சிறப்போடும் நடைபெற்று வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கி அதன் 1993-94 ஆம் ஆண்டு அறிக்கையில் நமது நாட்டிலுள்ள 18 மாநில நிதி நிறுவனங்களில், தேசிய அளவில் நம்முடைய தொழில் முதலீட்டுக் கழகம் முதலிடத்தைப் பெற்றுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) என்று அறிவித்துள்ளதைப் பெருமையோடு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இக்கழகம் பல்வேறு சாதனைகளைப் படைத்திருக்கிறது. இக்கழகம் கடந்த 46 வருடங்களில் கடன் அனுமதி அளித்துள்ளது 52 சதவீதம். ஆனால் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியில் 3½ ஆண்டுகளில் 48 சதவிகிதம் அனுமதி வழங்கியுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) 46 வருடங்களில் 52 சதவிகிதம், 3½ ஆண்டுகளில் 48 சதவிகிதம் அனுமதி அளித்துள்ளது. எத்தனை சதவிகிதம் உயர்ந்து இருக்கிறது என்பது இந்த அவைக்குப் புரியும் என்று நினைக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இக்கழகம் தனது 46 வருடப் பணியில் கடன் வழங்கியது 55 சதவிகிதம். ஆனால் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களது ஆட்சியில், இந்த 3½ ஆண்டுகளில் கடன் வழங்கியது 45 சதவிகிதம். (மேசையைத் தட்டும் ஒலி) 46 ஆண்டுகளில் 55 சதவிகிதம். 3½ ஆண்டுகளில் 45 சதவிகிதம் அளித்துள்ளது. தனியார் மற்றும் வரையறுக்கப்பட்ட பொது நிறுவனங்களுக்கும், பதிவு செய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கங்களுக்கும் ரூ.90 இலட்சமாக இருந்த காலக்கடன் ரூ. 150 இலட்சமாக உயர்த்த இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோல் உரிமையுடைய அல்லது பங்குதார நிறுவனங்களின் கடன் வரம்பு ரூ. 60 இலட்சத்திலிருந்து ரூ. 90 இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது. இது தவிர இக்கழகம் எல்லா வகையான தொழில் நிறுவனங்களுக்கும் மற்றும் சேவைப் பிரிவுகளுக்கும் தவணைக் கொள்முதல் மற்றும் குத்தகை நிதியுதவி ஆகிய சிறப்புத் திட்டங்களின்கீழ் அதிகபட்ச உதவியாக ரூ.250 இலட்சம்வரை அளிக்கிறது. தவிர இக்கழகத்தின் கிளைகளுக்குக் கொடுக்கப்பட்டுள்ள கடன் அளிக்கும் அதிகார வரம்பு ரூ.10 இலட்சத்திலிருந்து ரூ.20 இலட்சமாக இன்று அதிகரிக்கப்பட்டுள்ளது. கழகத்தின் அனைத்துப் பிரிவுகளும் கணினிமயமாக்கப்பட்டுள்ளது.

மண்டல ஆலோசனைக் குழு 3 மாதங்களுக்கு ஒரு முறை கூடி தொழில் மேம்பாட்டுக்கு சம்பந்தப்பட்ட பொருட்களை ஆலோசனை செய்கிறது. இதில் தொழில் முனைவோர்களின் கூட்டமைப்பு, வங்கிகள், மாவட்டத் தொழில் மையங்கள், தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் மற்றும் பல அலுவலகங்களின் பிரதிநிதிகள் உறுப்பினர்கள் ஆவார்கள்.

நலிவடைந்த தொழிற்பிரிவுகளின் புனரமைப்புத் திட்டம். தனித்தியங்கும் தகுதி பெற்ற நலிந்த தொழிற் பிரிவுகள் மீண்டும் புத்துயிர் பெற தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் அத்தொழில் பிரிவுகளுக்கு அபராத வட்டி, கூட்டு வட்டி தள்ளுபடி, கடனைத் திருப்பிச் செலுத்துவதற்கு கூடுதல் கால அவகாசம் போன்ற சலுகைகளை வழங்குகிறது.

பிற்பகல் 5-35

கடனைத் தீர்ப்பதற்கான சலுகைகள்

தொழிற் பிரிவுகளைத் தொடர்ந்து நடத்துவதற்கும், கடனைத் திருப்பிச் செலுத்துவதற்கும், துயர்படும் தொழிற் பிரிவுகளுக்கு கடனை முழுமையாகச் செலுத்துவதற்குத் தேவையான சலுகைகளை தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் வழங்குகிறது.

அடுத்ததாக, கடனை ஒழுங்காகத் திருப்பிச் செலுத்துகிறவர்களை ஊக்குவிக்கும் வகையில் பொன் அட்டை/பச்சை அட்டை/தகுதி அட்டை வழங்குதல். இந்த ஆண்டு தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் ஏற்கெனவே கடன் பெற்று, முறையாகத் திருப்பிச் செலுத்துபவர்களை ஊக்குவிக்கும் வகையில் பொன் அட்டை/ பச்சை அட்டை/ தகுதி அட்டை போன்றவற்றை வழங்கும் முறை ஒன்றைப் புதிதாகக் கொண்டு வந்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) இதயதெய்வம் புரட்சித் தலைவியின் அறிவுரையின்படி இத்திட்டம் நிறைவேற்றப்பட்டு வருகிறது. இந்தத் திட்டத்தின்கீழ் இந்த அட்டை பெறுபவர்களுக்கு வட்டி விகிதம் குறைப்பு, தொழில் முனைவோர் பங்குத்தொகை குறைப்பு, துணை பிணையத் தொகை குறைப்பு, விரைந்து அனுமதி வழங்குதல் போன்ற சில சலுகைகள் வழங்கப்படுகின்றன. இத் திட்டம் இந்த ஆண்டின் தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தின் ஒரு சிறந்த திட்டம் என அறிவிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தை மற்ற மாநிலங்கள் பின்பற்றுகின்ற காட்சியை நாம் காணமுடிகின்றது. அதை நான் பெருமையோடு சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

புதிதாகக் கிளை துவக்கம்

தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் ஏற்கெனவே 33 கிளை அலுவலகங்களையும் 8 மண்டல அலுவலகங்களையும் கொண்டு இயங்கி வருகின்றது. தற்போது பெரியார் மாவட்டத்தில் வளர்ந்து வரும் தொழில் முனைவோரின் எண்ணிக்கையைக் கருத்தில் கொண்டும், பெருந்துரை ஒரு வளர்ச்சி மையம் என்பதாலும் மற்றும் ஓது கிளை அலுவலகம் பெருந்துறையில் திறப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

1995 ஏப்ரல் 24] [திரு. துரை ராமசாமி]

கீழ்குறிப்பிடப்பட்டுள்ள திட்டங்களில் குறுந்தொழில் மற்றும் சிறு தொழிலுக்கு ஊக்கத்தைக் கொடுத்து உதவி வருகிறது இக்கழகம். தொடக்க உதவித் தொகை கடனுதவி, மின் உற்பத்தி இயந்திரங்கள் கடனுதவி, தொழில் நுட்ப வல்லுநர்கள் ஊக்கக் கடனுதவித் திட்டம், சுயவேலை வாய்ப்புத் திட்டம், மருத்துவர்கள் கடனுதவித் திட்டம், கூட்டுக் கடன் திட்டம், மருத்துவமனைகள் கட்டும் கடனுதவித் திட்டம், பெண் தொழில் முனைவோருக்கு சலுகை உதவிகள் திட்டம், ஆதி திராவிடர் - பழங்குடியினர் - உடல் ஊனமுற்றோர் சலுகை உதவித் திட்டம், முன்னாள் இராணுவத்தினர் சலுகை உதவித் திட்டம், மகளிர் நிதியுதவித் திட்டம், ஹோட்டல்கள் கட்டும் திட்டம், நவீனமயமாக்கும் திட்டம், சாதனங்கள் மறுநிதியுதவித் திட்டம், நலிவுற்ற தொழில் பிரிவுகள் திட்டம், குறித்த காலக் கடனும் நடைமுறை மூலதனத் திட்டம், தரக்கடன் திட்டம் மேம்பாடு, தேசிய சமநிதித் திட்டம், சாதனங்களுக்கான குத்தகைத் திட்டம், தவணைக் கொள்முதல் திட்டம் போன்றவற்றுக்கு ஊக்கத்தை இக்கழகம் கொடுத்து வருகிறது.

நான் கடந்த ஆண்டு கூறியது போல் கீழ்க்கண்ட திட்டங்கள் செயல்வடிவம் கொடுக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம், நூற்பாலைகள் தொடங்குவதற்கு உள் நாட்டில் தயாரிக்கப்பட்ட பழைய இயந்திரங்களுக்கும் கடன் வசதி அளித்து நூற்பாலைகள் பெருகுவதற்கு மிகவும் உறுதுணையாக இருக்கிறது. இதேபோல் தொழில் முனைவோருக்கு முனைப்பு மூலதன நிதி ஒன்று 20 கோடி ரூபாயில் உருவாக்கப்பட்டு, அதன்கீழ் ரூ.2 கோடி நடப்பு நிதியாண்டில் வழங்கப்பட்டுள்ளது. தொடர்ந்து இத்திட்டம் வெற்றிகரமாகச் செயல்படுவதற்கு எல்லா முயற்சிகளும் மேற்கொள்ளப்படுகிறது. தொழில் துவங்குவோர் தங்களுக்குக் கடன் வேண்டும் என்கின்றபோது, அந்தத் தொழில் 'வயபிள்' ஆக இருந்தால் அதிலே 2 கோடி ரூபாய் வரை ஷேரை இந்த நிறுவனம் வாங்கி அவர்களுக்கு உதவி செய்கிறது.

மேலும் வருகின்ற நிதியாண்டில் கீழ்க்கண்ட திட்டங்களின் மூலம் நிதியுதவி வழங்குவதற்கு எல்லா ஏற்பாடுகளும் இக்கழகம் செய்து வருகிறது:

(1) பண்பாட்டு மையம் அமைக்க (Cultural Centre)

(2) விவசாய சார்புள்ள உயர் தொழில்நுட்பத் திட்டங்கள் (Agro based Hi-Tech Industries)

(3) தொழில் வகையில் தேர்ச்சி பெற்றவர்களுக்குக் கடன். (Loan assistance to professionals)

(4) வர்த்தக வங்கிப் பணிகள்.

எந்தக் காலத்திலும் இல்லாத அளவுக்கு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களது அரசு பொறுப்பேற்ற பிறகு ரூ.1,100 கோடி நிதியுதவி அனுமதி அளித்துள்ளது. இதன் மூலம் 11,702 தொழில் முனைவோர் பயன் அடைந்துள்ளனர். இதன் மூலம் 1,35,000 பேர் வேலைவாய்ப்புப் பெற்றுள்ளனர்.

தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனம் (டான்சி)

இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அரசு பொறுப்பேற்ற பிறகு, எந்தக் காலத்திலும் இல்லாத அளவுக்கு டான்சி நிறுவனமானது இன்று ரூ.3,445.25 இலட்சத்திற்குத் தனது விற்பனைச் சாதனையை நிகழ்த்தியுள்ளதுடன், ரூ.91 இலட்சம் இலாபம் ஈட்டியுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) ரூபாய் 60 இலட்சம் பெறுமான ஏற்றுமதி ஒன்று கென்யா நாட்டிற்கும் மற்றொன்று மிக நுணுக்கம் வாய்ந்த விண்வெளி உபகரணங்களை இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிலையத்திற்கும் செய்துள்ளது என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 5-40

1994-95 ஆம் ஆண்டில் மின் உற்பத்தி தயாரிப்பதற்காக காற்றாலைகளும், தஞ்சையில் நடந்த உலகத் தமிழ் மாநாட்டிற்காக ரூ.35 லட்சம் மதிப்புள்ள அறைகலச் சாமான்களும் மற்றும் கர்நாடகா, கேரளா, ஒரிசா, பீகார் மற்றும் கோவா ஆகிய மாநிலங்களின் தேர்தலுக்காக, 45,000 ஓட்டுப் பெட்டிகளும் டான்சியால் செய்து கொடுக்கப்பட்டுள்ளன என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் இந்த அவைக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம் (சிட்கோ). 1991-92 முதல் 1994-95 வரை சிறுதொழில்களுக்கு கட்டித்தரப்பட்டுள்ள தொழிற்கூடங்கள் 800. ஒதுக்கப்பட்ட மனைகள் 706.

இதயதெய்வம் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் சீரிய முயற்சியினால் 1994-95 ஆம் ஆண்டில் புதிய தொழிற்பேட்டைகளை அமைக்க செங்கற்பட்டு-எம்.ஜி.ஆர். மாவட்டத்தில் திருமுடிவாக்கம், விச்சூர் மற்றும் ஆர்.கே. பேட்டை, திருநெல்வேலி-

கட்டபொம்மன் மாவட்டத்தில் கடையநல்லூர், தர்மபுரி மாவட்டத்தில் பர்கூர் மற்றும் ஊத்தங்கரை, தஞ்சை மாவட்டத்தில் நாஞ்சிக்கோட்டை ஆகிய இடங்களில் சுமார் 419.84 ஏக்கர் நிலத்தை ரூ.914 இலட்சம் முதலீட்டில் சிட்கோ நிறுவனம் வாங்கியிருக்கிறது. மேற்படி இடங்களில் தொழிற்பேட்டைகள் அமைப்பதன் மூலம் சுமார் 1,50,000 பேர்களுக்கு நேரடி மற்றும் மறைமுக வேலை வாய்ப்பு ஏற்படுகிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மத்திய அரசின் ஒருங்கிணைந்த அடிப்படை வசதித் திட்டம். மேலும் ஒருங்கிணைந்த அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கும் திட்டத்தின் கீழ் மதுரை உரங்கான்பட்டி தனியார் தொழிற்பேட்டை அபிவிருத்திக்காக ரூ.444 இலட்சம் செலவில் திட்டம் தீட்டப்பட்டு அதில் ரூ.266 இலட்சம் கடனாக இந்திய சிறுதொழில் வளர்ச்சி வங்கியிடமும் மீதம் ரூ.178 இலட்சம் இந்திய அரசின் மானியமாகவும் 24-3-1995 அன்று பெறப்பட்டு, மேற்படி தனியார் தொழிற்பேட்டை அபிவிருத்திக்காக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. டாக்டர் புரட்சித்தலைவி அரசு பொறுப்பேற்ற பிறகு இந்தியாவிலேயே தமிழ்நாடுதான் முதல்முதலாக இத்திட்டத்தை செயல்படுத்துகிறது என்பதைப் பெருமையுடன் சொல்லிக் கொள்கிறேன்.

திருப்பூர் ஏற்றுமதி பின்னலாடை உற்பத்தியாளர்கள் சங்கத்தால் கோவை மாவட்டத்தில் திருப்பூர் தாலுக்காவில் உள்ள செட்டிப்பாளையம் கிராமத்தில் தனியார் தொழிற்பேட்டை அமைக்கக் கோரி சிட்கோ 37 தொழிற்கூடங்கள் கட்டி முடிவடையும் தருவாயில் உள்ளன.

விழுப்புரம்-இராமசாமி படையாச்சியார் மாவட்ட சிறுதொழில் சங்கத்தினால், விழுப்புரத்தில் 15 ஏக்கர் நிலம் தனியார் தொழிற்பேட்டை அமைக்க தேர்ந்தெடுக்கப்பட்டு சிட்கோவினால் தொழிற்கூடங்கள் கட்டப்பட உள்ளன.

சென்னைக்கு அருகாமையில் பெரிய தொழிற்பேட்டை. இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் சிட்கோவில் வெள்ளி விழாவில் அறிவித்தற்கிணங்க செங்கை-எம்.ஜி.ஆர். மாவட்டத்தில் சைதாப்பேட்டை தாலுக்காவில், வெள்ளனூடா, பம்மதுகுளம், புத்தூர் மற்றும் மோரை கிராமங்களில் உள்ள சுமார் 1,000 ஏக்கர் அரசு புறம்போக்கு நிலங்களில் சிறுதொழில்களுக்காக சகல அடிப்படை வசதிகளுடன் கூடிய பெரிய தொழிற்பேட்டை அமைக்க, சிட்கோவுக்கு வழங்க நடவடிக்கைகள் அரசால் எடுக்கப்பட்டு வருகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 5-45

புரட்சித் தலைவி அவர்கள் பல்வேறு மாவட்டங்களுக்குச் சென்று, பல அறிவிப்புகளைச் செய்த நேரத்திலும், இங்கே பல விழாக்களிலே அறிவிப்பு செய்த நேரத்திலும், மாற்றுக் கட்சியைச் சேர்ந்தவர்கள், எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்கள், அறிவிப்புகள் வருகிறதேயொழிய, நடவடிக்கை இல்லை என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் நிலைமை அப்படியில்லை. அவர்கள் அறிவித்த அந்த நிமிடத்திலேயிருந்து, அந்தந்தத் துறைகள் அந்த நடவடிக்கைகளிலே இறங்கி இருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி). அந்த அடிப்படையிலேதான், சிட்கோ வெள்ளி விழாவிலே அறிவித்த 1000 ஏக்கர், இன்றைக்கு சிட்கோவிற்கு மாற்றிக் கொடுக்கின்ற நடவடிக்கை மின்னல் வேகத்திலே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இதில் 100 ஏக்கரில் குறுந்தொழில்களுக்கு தொழில் பேட்டைகள் கட்டிக் கொடுக்கவும், மேலும் 100 ஏக்கரிலே பெண்களுக்கு தொழில் பயிற்சி கொடுப்பதற்கும், தொழில் கூடங்கள் கட்டவும், திட்டமிடப்பட்டுள்ளதோடு இன்று காலையில் மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன் அவர்கள் கோரிக்கையை ஏற்று, என்.ஆர்.ஐ.க்காக, அந்த ஆயிரம் ஏக்கரிலே 100 ஏக்கர் தனியாக ஒதுக்கி, என்.ஆர்.ஐ. தொழில் பேட்டை ஒன்று உருவாக்கவும் அரசு திட்டமிட்டுள்ளது.

1991-92 ஆம் ஆண்டு முதல் 1994-95 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் வரை, சிறுதொழில்களுக்கு வினியோகம் செய்யப்பட்டுள்ள மூலப் பொருட்களின் விவரங்கள் வருமாறு:

1991-92-ல், 94.85 கோடி; 1992-93-ல், 80.79 கோடி; 1993-94-ல் 100 கோடி; 1994-95-ல் 115.75 கோடி ரூபாய்க்கு விற்பனைகள் செய்யப்பட்டுள்ளன.

1994-95 ஆம் ஆண்டில் 35 ஆயிரம் டன்கள் இரும்பு எஃகு வினியோகம் செய்ய வேண்டும் என்ற குறியீட்டின்படி, பிப்ரவரி மாதம் வரை 31,215 டன்கள் விற்பனை செய்து, இந்த நடப்பு ஆண்டு சாதனையாக 35 ஆயிரம் டன்கள் விற்பனையை சிட்கோ நிச்சயம் எட்டிவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த விற்பனை சென்ற ஆண்டை விட 18 விழுக்காடு அதிகமாகும். 1994-95 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டிற்கான இரும்பு எஃகு ஒதுக்கீடு 44 ஆயிரம் டன்களாக அதிகரிக்கப்பட்டது. இது சென்ற ஆண்டின் ஒதுக்கீட்டைவிட 22 விழுக்காடு அதிகமாகும்.

இரும்பு அல்லாத மூலப்பொருட்கள். 1994-95 ஆம் ஆண்டில் 9000 டன்கள் மெழுகு வினியோகம் செய்ய வேண்டும் என்ற குறியீட்டின்படி பிப்ரவரி மாதம் வரை 8551 டன்கள் வினியோகம் செய்யப்பட்டுள்ளது.

இந்தச் சாதனை பிப்ரவரி 1995 வரையிலான குறியீட்டு இலக்கில் 104 விழுக்காடு ஆகும். வழக்கமான ஒதுக்கீட்டைவிட 538 டன் மெழுகு கூடுதலாக இந்த ஆண்டு சிறுதொழில் நலனுக்காக கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. பிளாஸ்டிக் குருணைகள் 1993-94 ஆம் ஆண்டு முழுவதிலும் 214 டன்கள்தான் விற்கப்பட்டன. ஆனால் இந்த ஆண்டு பிப்ரவரி 1995-க்குள் 288 டன்கள் விற்பனை ஆகியுள்ளன.

உலகச் சந்தையில் அலுமினியக் கம்பிகள் தட்டுப்பாட்டில் இருந்தபோதிலும், பிப்ரவரி 1995-ல் 50 டன்னும், மார்ச் 1995-ல் 100 டன்னும் எடையுள்ள அலுமினியக் கம்பிகள் பிரத்தியேகக் கூடுதல் ஒதுக்கீடு 'நால்கோ' நிறுவனத்திடமிருந்து சிட்கோவால் பெறப்பட்டது. தமிழ்நாடு சிட்கோ ஒன்றுதான் நமது நாட்டில் அலுமினியக் கம்பிகளை ஒரிசா மாநிலத்திலுள்ள 'நால்கோ' நிறுவனத்திடமிருந்து மொத்தமாகக் கொள்முதல் செய்து, தமிழ்நாட்டிலுள்ள சிறுதொழில்களுக்குக் கடனுதவித் திட்டத்தின்கீழ் வழங்கி வருகிறது என்பதைப் பெருமையோடு சொல்லிக் கொள்கிறேன்.. (மேசையைத் தட்டும் ஒலி) சிட்கோ நிறுவனத்தின் இந்த உதவியால், மின்சார வாரியங்களுக்குத் தேவையான அலுமினிய மின்கடத்திகளை உற்பத்தி செய்து குறிப்பிட்ட காலத்திற்குள் வழங்க சிறுதொழில் முனைவோரால் முடிகிறது.

தவணை முறை மற்றும் குத்தகை அடிப்படையில் இயந்திரங்கள் வாங்க உதவி. தவணை முறை மற்றும் குத்தகை அடிப்படையில் இயந்திரங்கள் வாங்க சிட்கோ தொழிற்பேட்டைகளில் உள்ள சிறுதொழில் மற்றும் குறுந்தொழில் முனைவோருக்கு உதவிட, இந்திய சிறுதொழில் வளர்ச்சி வங்கி, 'சிட்பி' மூலம் முதல் தவணையாக ரூ.100 லட்சம் கடன் அனுமதி பெற்று, தவணை முறை மற்றும் குத்தகைத் திட்டம் ஜனவரி 1994 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இது ஒரு தொடர் திட்டம். இத்திட்டம் எண்ணற்ற சிறுதொழில் முனைவோரை வாழ்விக்கக்கூடிய திட்டமாகும் என்பதைப் பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,
சோலையிலே பூக்கின்ற மலர்கள் எல்லாம்
சுகமான மணத்தினையே தருவதில்லை.
மாலையில் மலர்கின்ற விண்மீன் கூட
மாறாத ஒளியுடனே மின்னுவதில்லை.
ஆனால் நம் புரட்சித் தலைவியோ
ஓலையிலே பூத்திட்ட தமிழ் மலர்கள்
ஓராயிரம் சேர்த்து மணக்க வைத்தார். (மேசையைத் தட்டும் ஒலி)

மூலையிலே கிடந்த தமிழ் இலக்கியங்கள்
முறையாக உலகெங்கும் மின்னச் செய்தார்.
அமுதமெனச் செந்தமிழைச் சொல்லுவார்கள்
அகிலத்துக்கு அதையளித்த அன்னை நீயே.
இமய முதல் குமரியெனும் இந்தியாவின்
எல்லைகளைக் கடந்த தமிழ்க் கப்பல் தன்னை
சுமையேற்றி உலகெங்கும் உலவச் செய்தாய்.
சுகமான புகழ் பரவ வழியும் செய்தாய்
எமையெல்லாம் வாழ்விக்கும் தலைவி நீயே.
இந்நாட்டின் வளத்துக்கு என்றும் முதல்வி நீயே. (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 5-50

தொழிற்கூட்டுறவுச் சங்கங்கள், மொத்தம் உள்ள சங்கங்கள் 408. மொத்த உறுப்பினர்கள் 65504. உற்பத்தி ரூ.183.17 கோடி. விற்பனை ரூ.208.57 கோடி. வேலைவாய்ப்பு 1,11,716 பேர்.

கடந்த நான்கு ஆண்டுகளில் தொழிற்கூட்டுறவுச் சங்கங்கள் அமைத்திட அரசு உதவி. சங்கங்களின் முதலீட்டில் அரசின் பங்கு ரூ.1013.89 லட்சம். பயன்பெற்றோர் 2000 நபர்கள்.

தேயிலை தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள். தொழிற்சாலைகள் 17. பயன்பெற்றுள்ள சிறு தேயிலை விவசாயிகள் 17,560 பேர். தேயிலை உற்பத்தியாகும் நிலப்பரப்பு 30,073 ஏக்கர். மொத்த விற்பனை ரூ.3490.22 லட்சம். வேலைவாய்ப்பு 1,09,106 நபர்கள்.

1994-95-ல் மேற்கொள்ளப்பட்ட முக்கிய அபிவிருத்தி நடவடிக்கைகள் (1) 3 தேயிலைத் தொழிற்சாலைகள் ரூ.82 இலட்சம் செலவில் நவீனப்படுத்தப்பட்டுள்ளன. (2) நீலகிரி மாவட்டத்தில் பிதர்காடு, எபநாடு ஆகிய இடங்களில் கூட்டுறவு தேயிலைத் தொழிற்சாலைகள் அமைக்க பூர்வாங்க வேலைகள் முடிக்கப்பட்டு கட்டுமானப் பணிகள் துவங்கப்பட்டுள்ளது. (3) மலையரசி எனும் பெயரில் இன்கோசர்வ் மூலம் பாக்கெட் தேயிலை விற்பனை துவங்கப்பட்டுள்ளது. பச்சைத் தேயிலை விலை வீழ்ச்சியால் சிறு விவசாயிகளுக்கு ஏற்பட்ட பாதிப்பிலிருந்து காப்பாற்றவும், நியாயமான விலை கிடைக்கவும், தக்க பரிந்துரை செய்ய அரசு ஒரு உயர்மட்டக் குழுவை நியமித்து, இக்குழுவின் பரிந்துரையின் பேரில் தேயிலை பகுப்பாய்வு மையம் நிறுவுதல், தேயிலையில் கலப்படம் ஏற்படாமல் தடுக்க கடுமையான கண்காணிப்பு இன்கோசர்வ் மற்றும்

தேயிலைத் தொழில் கூட்டுறவுச் சங்கங்களுக்கு மானிய உதவி வழங்குதல்; எரிபொருள் செலவினைக் குறைப்பதற்காக நடவடிக்கைகள், விலை சமச்சீர்பாட்டு நிதி ஏற்படுத்துதல், இடுபொருட்களுக்கான மானியங்களை உயர்த்துதல், இன்கோசர்வ் மூலம் நேரடியாகத் தேயிலை ஏற்றுமதி ஆகியவைகளை அரசு கொள்கை அளவில் ஏற்றுக் கொண்டுள்ளது.

இந்த ஆண்டு தேயிலையினுடைய விலையில் மிகவும் வீழ்ச்சி ஏற்பட்டது. ரஷ்யாவிற்கு ஏற்றுமதி செய்துகொண்டிருந்த தேயிலை திடீரென்று நிறுத்தப்பட்டதன் காரணமாக விலை வீழ்ச்சி ஏற்பட்டது. மைய அரசிடம் நாம் பல்வேறு கோரிக்கைகளை வைத்தோம். அவர்கள் கேட்கவில்லை. ஆனால் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் குன்னூர் சென்றிருந்தபோது விலை வீழ்ச்சியைச் சரிக்கட்டுவதற்கு தமிழக அரசு முயற்சி எடுக்கும் என்ற உறுதியைச் சொன்னார்கள். அந்த அடிப்படையிலே உயர் மட்டக் குழு அமைக்கப்பட்டு, நான் ஏற்கெனவே சொன்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு, இன்று தேயிலை விலை வீழ்ச்சி சீர்செய்யப் பட்டு, முன்னைய விலையைவிட அதிக விலைக்கு விற்கப்படுகின்றது என்பதையும் பெருமையோடு சொல்லிக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தொழில் கூட்டுறவுக் கயிறு சங்கங்களின் எண்ணிக்கை 82. உறுப்பினர்கள் 12038. வேலைவாய்ப்பு 2254 பேர். விற்பனை ரூ.566.18 லட்சம்.

8 தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள், மதுரை, நெல்லை-கட்டபொம்மன், காமராசர், இராமநாதபுரம், நாகை காயிதே மில்லத் மற்றும் திருச்சி மாவட்டங்களில் பதிவு செய்யப்பட்டுவிட்டன. அவற்றுக்கு ரூ.8 லட்சத்தை அரசு பங்கு மூலதனமாகவும், பங்கு மூலதனக் கடனாகவும் வழங்கியுள்ளது.

1994-95-ல் விற்பனை ரூ.660 லட்சம். பர்கூர், கடைய நல்லூர் ஆகிய இடங்களில் அமைக்கப்பட்ட, இரு கயிறு வளாகங்களில் உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டு, பயிற்சி முடிந்து முதல் கட்டமாக கயிறு முறுக்கும் பணி துவக்கப்பட்டுள்ளது. சுமார் 100 பெண்கள் வேலைவாய்ப்பு பெற்று இருக்கிறார்கள்.

பிற்பகல் 5-55

சேலம் சவ்வரிசி சேவை தொழிற் கூட்டுறவுச் சங்கம். சங்கம் மிகவும் சிறப்பாகச் செயல்பட்டதன் மூலம் 1990-91-ல் ரூ.52 கோடியாக இருந்த இதன் விற்பனை தற்போது இரு மடங்குக்கும் மேலாகி புரட்சித் தலைவி அவர்களுடைய முயற்சியின் காரணமாக இந்த ஆண்டு விற்பனை ரூ.110 கோடியை மிஞ்சும் நிலையில் உள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

கூட்டுறவுத் தொழிற்பேட்டைகள். பதிவு பெற்ற சங்கங்கள் 12, செயல்பட்டு வருபவை சென்னை, பொள்ளாச்சி, சேலம், சிவகாசி, தூத்துக்குடி ஆகிய 5 இடங்கள். உறுப்பினர்களுக்குத் தரப்பட்டுள்ள தொழிற்கூடங்கள் 130, அபிவிருத்தி செய்யப்பட்ட மனைகள் 365. தமிழ்நாடு தொழிற் கூட்டுறவு வங்கி 1994-95-ல் முன்னேற்றம். தற்போதைய கிளைகள் 18. 28-2-1995 அன்றைய நிலவரப்படி வழங்கப்பட்ட கடன் தொகை ரூ.1855.62 இலட்சம், பெறப்பட்ட வைப்புத் தொகை ரூ. 1855.35 இலட்சம். புதிய கிளைகள் திறக்கப்பட்டது. 4, உதவியளிக்கப்பட்ட சங்கங்கள் 160. தங்க நகைகளின் பேரில் கடன் வழங்கும் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. உதவி பெற்ற தனி நபர் 3003, தொகை ரூ.217.92 இலட்சம், 1993-94 ஆம் ஆண்டு ஈட்டிய இலாபம் ரூ.70.00 இலட்சம். மேலும் 265 சிறு மற்றும் குறுந் தொழில்களுக்கு தாட்கோ வங்கி ரூ.230.38 இலட்சத்திற்கு இதுவரை நிதியுதவி அனுமதி தரப்பட்டுள்ளது.

1995-96-ல் பரிசோதனை மற்றும் பயிற்சி வசதிகள் மேம்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. வளர்ந்து வரும் தொழில் நுட்பத்திலே புதிய தொழில் நுட்பங்கள் எல்லாம் அயல் நாடுகளிலேயிருந்து நாம் பெற்றுக் கொண்டிருக்கக்கூடிய இந்தச் சூழ்நிலையில் தமிழகத்திலும் தொழில் நுட்பத்தை ஊக்குவிக்க வேண்டும் என்பதற்காக பல்வேறு நடவடிக்கைகளை புரட்சித் தலைவி அவர்கள் எடுத்து வருகின்றார்கள். அதன் அடிப்படையிலே ரூ.12 இலட்சம் செலவில் சென்னையில் உள்ள இரசாயனப் பரிசோதனை மற்றும் பகுப்பாய்வு கூடத்தில் பரிசோதனை வசதிகளை மேம்படுத்த கூடுதல் சாதனங்கள் நிறுவப்படும். இவை பொருள் பரிசோதனைக்கு மட்டுமல்லாது, தகுதி வாய்ந்த தொழில் முனைவோர்க்கு இரசாயன மற்றும் சார்புத் தொழில்கள் துவக்க பயிற்சி அளிக்கவும் பயன்படுத்தப்படும்.

காக்கலூரில் உள்ள மத்திய மின் ஆய்வுக் கூடத்தில் பரிசோதனை வசதிகளை நவீனப்படுத்த ரூ.21 இலட்சம் செலவில் கூடுதல் சாதனங்கள் அமைக்கப்படும்.

அளவை கருவிகள் மற்றும் கருவிகள் வடிவமைப்பு இவற்றின் நவீன உத்திகள் பற்றிய விழிப்புணர்வினைத் தோற்றுவிக்கும் நோக்குடன், கிண்டியில் உள்ள தொழில் நுட்பப் பயிற்சி நிலையத்தில் ரூ.9.28 இலட்சம் செலவில் சிறிய கம்ப்யூட்டர் உதவி மையம் அமைக்கப்படும்.

கிண்டியில் உள்ள தொழில் பயிற்சி நிலையத்தில் குளிர்பதன சாதனங்கள் மற்றும் மின் அணுவியல் கருவியல் இவற்றில் பயிற்சி மீண்டும் அறிமுகப்படுத்தப்படும். அதிக ஆற்றல் திறன் கொண்ட பம்ப்செட்டுகளின்

தொழில் நுட்பத்தை மேம்படுத்துவதற்காக வடிவமைப்பு, முன்மாதிரி செயல், சோதனைக் கருவிகள் மற்றும் மாசுக் கட்டுப்பாடு ஆராய்ச்சி முதலியனவற்றில் முன்னேற்றமடையவும் கோவையில் ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்டத்தின் துணையோடு சிறு தொழில் சோதனை ஆராய்ச்சி மையத்தின் மூலம் செயல்படுத்த இவ்வரசு மொத்தம் 91 இலட்சம் நிதியுதவி ஒதுக்கீடு செய்திருக்கிறது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இதன் மூலம் குறைந்தது 10 சதவீத ஆற்றல் அதிகரிப்பு எதிர்பார்க்கப்படுகிறது. 10 சதவீதம் ஆற்றல் அதிகரிப்பின் மூலம் நாட்டுக்குக் கிடைக்கக்கூடிய லாபம் ரூ.800 கோடி மீதம் ஏற்பட வாய்ப்புண்டு. (மேசையைத் தட்டும் ஒலி)

தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் உற்பத்தி 193.13 கோடி, விற்பனை 220.00 கோடி. ரூ. 176 இலட்சம் செலவில் 13 தேயிலைக் கூட்டுறவுத் தொழிற்சாலைகளை நவீனப்படுத்தவும் கோவை மாவட்டத்தில் ரூ.100 இலட்சம் செலவில் பிளன்டிங் அண்ட் பேக்கேஜிங் பேக்டரி நிறுவப்படவும், ரூ.100 இலட்சம் செலவில் ஒரு தேயிலைக் கிடங்கு நிறுவப்படவும், சீட் மணி ஆக ரூ.70 இலட்சம் மலை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ளது.

நீலகிரி மாவட்டத்தில் ஒரு தேயிலைத் தொழிற்சாலை நிறுவவும் அரசு பரிசீலித்து வருகிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

குச்சிக் கிழங்கு சிறு விவசாயிகளின் உற்பத்திப் பொருளுக்குக் கூடுதல் விலை கிடைக்க வழி செய்யும் வகையில் நவீன இயந்திரங்களின் மூலம் நூதனமுறையில் மதிப்புடைய பொருட்கள் உற்பத்தி செய்யும் தொழில் கூட்டுறவுச் சங்கம் சேலத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பிற்பகல் 6-00

இச்சங்கத்தின் திட்ட மதிப்பு ரூ.1147.66 இலட்சமாகும். இதற்கான திட்ட அறிக்கையை திருவாளர்கள் டாடா கன்சல்டன்சி சர்வீசஸ் தயாரித்துள்ளது. மைய அரசு மற்றும் விவசாயப் பொருட்கள் ஏற்றுமதி வளர்ச்சி முகாம் மேற்கொண்ட ஆய்வின்படி மேற்கத்திய நாடுகளுக்கு குச்சிக் கிழங்கினை ஏற்றுமதி செய்யக்கூடிய சாத்தியக் கூறுகள் இருப்பதாகத் தெரிய வந்துள்ளது. குச்சிக் கிழங்கை பதப்படுத்தி துண்டுகளாகத் தயாரித்து ஏற்றுமதி செய்யும் திட்டமொன்று தயாரிக்கப்பட உள்ளது. இந்தத் திட்டத்தின் மூலம் சேலம் மாவட்டத்திலே உள்ள ஆயிரக்கணக்கான சிறு விவசாயிகள் பயன் அடைவார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி). தமிழ்நாடு இரப்பர் பால் உற்பத்தியில், இந்தியாவில் 2-வது இடத்தை வகிப்பது தெரிந்ததே. கன்னியாகுமரி மாவட்டத்தில் ரப்பர் மரம் வளர்க்கும் 2500 சிறு

விவசாயிகள் பயனடைய ஒரு தொழிற் கூட்டுறவுச் சங்கம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

தமிழ்நாட்டில் கயிறு தொழில் மேம்பாட்டைக் கருதி புதிதாக 11 கயிறு தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கவும் தற்போது இயங்கி வரும் 48 கயிறு தொழிற் கூட்டுறவுச் சங்கங்களை வலுவூட்டவும் சுமார் ரூ.16.71 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு ஒருங்கிணைந்த கயிறு வளர்ச்சித் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் 1995-96 முதல் மூன்று ஆண்டுகளில் செயல்படுத்தப்படும்.

1995-96-ல் மேற்கொள்ளப்பட உள்ள திட்டங்கள். இராணிப்பேட்டை வண்ணத்தோல் தொழிற் கூட்டுறவுச் சங்கத்திலுள்ள சாதனங்களை நவீனப்படுத்த ரூ.148 இலட்சம் செலவில் செயல்படுத்தப்படும். இதற்கென தேசீய தோல் அபிவிருத்தி நிறுவனம் ஒரு இலட்சம் டாலர் வழங்க முன்வந்துள்ளது. இதில் மாநில அரசின் மூலதன மானியம் ரூ.20 இலட்சம் ஆகும்.

தமிழ்நாடு தொழில் கூட்டுறவு வங்கியின் செயல்பாடுகள் விரிவுபடுத்தப்படும். மேலும் மூன்று கிளைகள் திண்டுக்கல், தர்மபுரி மற்றும் காரைக்குடி ஆகிய இடங்களில் துவங்கப்படும்.

தமிழ்நாட்டில் சென்னையில் டாக்டர் விக்ரம் சாராபாய் மின்னணு தொழிற்பேட்டை திருவான்மியூரிலும், செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர். மாவட்டத்தில் பெருங்குடியிலும், திருவள்ளூரை அடுத்த காக்கலூரிலும், திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் துவாக்குடியிலும், தருமபுரி மாவட்டத்தில் ஹோசூரிலும், கோயம்புத்தூர் மாவட்டத்தில் காளப்பட்டியிலும், மதுரை மாவட்டத்தில் கப்பலூரிலும், சேலம் மாவட்டத்தில் சூலமங்கலத்திலும் ஆக மொத்தம் 8 மின்னணு தொழிற்பேட்டைகள் அமைத்து மொத்தம் 493 செப்பனிடப்பட்ட மனைகளும் மற்றும் 138 தொழிற்கூடங்களும் தொழில் முனைவோர்களுக்கு 1973 முதல் ஒதுக்கீடு செய்யப்பட்டு வந்துள்ளது. ஆனால் 20 ஆண்டுகளாகியும் மேற்படி தொழிற்பேட்டைகளிலுள்ள செப்பனிடப்பட்ட மனைகளும், கட்டி முடிக்கப்பட்ட தொழிற்கூடங்களும் இதுவரை எந்த ஒரு அரசாலும் இறுதி விலை நிர்ணயம் செய்யப்படாமல் இருந்து வந்துள்ளது. இறுதி விலை நிர்ணயம் செய்யப்படாததால் அவர்களுக்கெல்லாம் அதை கிரயப் பத்திரம் பதிவு செய்து கொடுக்க முடியாத நிலை இருந்து வந்தது. ஆகையால், தொழில் முனைவோர்கள் இந்த நிலைத்தை வைத்து கடன் பெறவோ, வேறு காரியங்களுக்குப் பயன்படுத்தவோ முடியாத சூழ்நிலை இருந்தது. இதை அறிந்த டாக்டர் இதயதெய்வம் புரட்சித் தலைவி

அவர்கள் உத்தரவின் பேரிலே இன்று இந்த அரசு தக்க நடவடிக்கை எடுத்து மேற்படி மனைகளுக்கு இறுதி விலை நிர்ணயம் செய்யப்பட்டு கிரயப் பத்திரங்கள் வழங்க உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்பதை இந்த மாமன்றத்தில் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

சிறுதொழில் வளர்ச்சியை ஊக்குவிக்க டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அரசால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளும், செயல்படுத்தப்பட்ட திட்டங்களும். 31 மிகவும் பிற்படுத்தப்பட்ட வட்டங்களில் மானியம் 15-லிருந்து 20 விழுக்காடாக உயர்த்தப்பட்டுள்ளது. அதாவது ரூ. 15 லட்சத்திலிருந்து ரூ.20 இலட்சம். சிறுதொழில் அமைத்து உற்பத்தியைத் துவக்கிய பிறகே கொடுக்கப்பட்ட இம்மானியத்தை தற்போது துவக்கத்திலிருந்தே படிப்படியாக வழங்க ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. 15 விழுக்காடு மூலதன மானியம் கிடைக்கும் பிற்பட்ட வட்டங்களின் எண்ணிக்கை 76லிருந்து 82 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. பிற்பட்ட வட்டங்களில் கொடுக்கப்படும் மானியம் மதுரை மாவட்டம் வேடத்துக்குளத்தில் உள்ள பின்னலாடை தொழிற்பேட்டைக்கும், காசிப்பாளையத்தில் சிறுதொழில் சங்கத்தின் தொழிற்பேட்டைக்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. முகப்பேர் பகுதியில் 63 குறுந்தொழில்களுக்கு 5 விழுக்காடு சிறப்பு மானியம் வழங்கப்பட்டுள்ளது. குறிப்பிட்ட பகுதிகளில் கிடைத்திடும் 5 ஆண்டு விற்பனை வரி விலக்கு வசதி திருவான்மியூர் விக்ரம் சாராபாய் மின்னணுத் தொழிற்பேட்டைக்கும், சோளிங்கநல்லூரில் மின்னணு தொழில் நகருக்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. குறைந்த மின்னழுத்த மானியம் உயர் மின்னழுத்த இணைப்பிற்குப் போலவே உயர்த்தப்பட்டுள்ளது. அதாவது முதல் ஆண்டு 30 விழுக்காடிலிருந்து 40 விழுக்காடு, இரண்டாம் ஆண்டு 20 விழுக்காடிலிருந்து 30 விழுக்காடு, மூன்றாம் ஆண்டு 10 விழுக்காடிலிருந்து 20 விழுக்காடு என்று உயர்த்தப்பட்டுள்ளது. சுமார் 30 ஆண்டுக் காலமாக நடைமுறையிலிருந்து வந்துள்ள மின்னழுத்த உச்ச அளவு 130 குதிரைத் திறனிலிருந்து 150 குதிரைத் திறனாக அதிகரிக்கப்பட்டுள்ளது. குறுந்தொழில்களுக்கு நிதியுதவி அளித்திட ஒரு தனி நிதி நிறுவனம் இல்லாமல் இருந்ததை உணர்ந்து குறுந்தொழில் முனைவோர்க்கு உதவிடும் வகையில் தமிழ்நாடு தொழிற் கூட்டுறவு வங்கியின் பணியை விரிவாக்க ஆணையிடப்பட்டுள்ளது. நலிவுற்ற சிறுதொழில்களுக்கு முதல் 5 ஆண்டுகளுக்கு விற்பனை வரி ஒத்திவைப்பு வசதி அளிக்கப்பட்டுள்ளது. குடிசை குறுந்தொழில் மற்றும் சிறு தொழில் முனைவோருக்கு 5 குதிரைச் சக்தித் திறன் வரை மின் கட்டணச் சலுகையை இந்த ஆண்டு 10 குதிரைச் சக்தித் திறன் வரை என்று இதய

தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்ததன் மூலம் லட்சோப லட்சம் குறுந்தொழில் முனைவோர்கள் பயன் அடைந்துள்ளார்கள்.

பிற்பகல் 6-05

பிற்படுத்தப்பட்ட வட்டங்களில் விற்பனை வரி ஒன்பது ஆண்டுகளுக்கு ஒத்திவைப்பு மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட வட்டங்களில் விற்பனை வரி ஐந்து ஆண்டுகளுக்கு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. குறிப்பிட்ட சில தொழில்களுக்கு சிறப்புதவித் தொகையாக குறைந்தபட்சம் ரூ.15 லட்சமாகவும் அதிகபட்சம் ரூ.35 லட்சமாகவும் வழங்கப்படுகிறது. ரூ.50,000 வரையிலான துணை பிணை பத்திர முறையைத் தளர்த்தியுள்ளது. சென்னை நகரில் தொழில் உரிமம் தொடர்பான பிரச்சினைகளுக்குத் தீர்வு காண உயர்மட்டக் குழு ஒன்றை அமைத்து, குறுந்தொழில் முனைவோர் சங்கப் பிரதிநிதிகளுக்கும் இடம் அளித்து, பல ஆண்டுகளாக தீர்க்கப்படாமல் இருந்த பல பிரச்சினைகள் தீர்க்கப்பட்டுள்ளது. புதிதாக தொழில் ஆரம்பிப்பவர்களுக்கும், தொழில் துவங்குபவர்களுக்கும், நலிந்த தொழில்களுக்கு புத்துயிர் ஊட்டவும், அவற்றின் பிரச்சினைகளை ஆராய்ந்து அறிந்து தீர்வு காண மாவட்ட அளவில் ஒருங்கிணைப்புக் குழு அமைத்து, தொழில் முனைவோர் பிரதிநிதிகளுக்கு இடம் அளித்து சிறுதொழில்களுக்கு இடர்பாடுகள் இல்லாமல் பேருதவி செய்து வருகிறது நம்முடைய இதயதெய்வம் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு (மேசையைத் தட்டும் ஒலி). ஆற்றல்மிகு தொழிலதிபர்களுக்கு மாநில அரசின் விருதுகள் அறிமுகம். தமிழக அரசு, சிறுதொழில்களுக்கான மாநில மற்றும் மாவட்ட அளவிலான விருதுகள் மற்றும் சிறந்த ஏற்றுமதியாளர்களுக்கான விருதுகள் ஆகியவற்றை ஏற்கெனவே வழங்கி வருகிறது. பெருவாரியான ஆற்றல்மிக்க மகளிர் தொழில் துவங்குவதில் ஈடுபட்டிருப்பதால் அவர்களை ஊக்குவிப்பதற்காக, திறம்படச் செயலாற்றும் மகளிர் தொழில் அதிபர்களுக்கு விருதுகள் வழங்கும் திட்டத்தை இப்போது செயலாற்றி வருகிறது. இத்திட்டத்தின்கீழ் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆணையின்படி முதல் பரிசாக ரூ.25,000/- ரொக்கப் பரிசும், (மேசையைத் தட்டும் ஒலி) ரூ.3000/- மதிப்புள்ள கேடயமும், நற்சான்றிதழும் வழங்கப்படுகின்றன. மேலும் இரண்டாவது, மூன்றாவது பரிசுகளாக முறையே ரூ.15,000/-, ரூ.10,000/- ரொக்கத் தொகையுடன் கூடிய ரூ.3000/- மதிப்புள்ள கேடயமும் நற்சான்றிதழும் அளிக்கப்படுகின்றன. தரமிக்க பொருட்களைத் தயாரிக்கும் தொழிலதிபர்களை ஊக்குவிப்பதற்காக பெரிய நடுத்தர மற்றும் சிறுதொழில் துறையின்கீழ் வருகின்ற திறமை வாய்ந்த தொழிலதிபர்களுக்கு முதல்

பரிசாக ரூ.25,000/-மும் இரண்டாவது பரிசாக ரூ.15,000/-மும் மூன்றாவது பரிசாக ரூ.10,000/-மும் ரூ.3000/- மதிப்புள்ள கேடயமும் நற்சான்றிதழும் அளிக்கப்படுகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) சிறுதொழில்களுக்கு நிரந்தரப் பதிவு 28-2-1995 வரை. சிறுதொழில்களுக்கு எல்லாம் பதிவு செய்வதிலே காலதாமதம் ஏற்படுகிறது என்று மாண்புமிகு உறுப்பினர் அப்பு நடேசன் அவர்கள் பேசும்போது குறிப்பிட்டார்கள். ஆனால் அது உண்மையல்ல. இதுவரை மொத்தம் பதிவு அளிக்கப்பட்டவை 2,04,226. முதலீடு ரூ.4,606 கோடி. உற்பத்தி ரூ.12,000 கோடி.

வேலைவாய்ப்பு 22.50 லட்சம் நபர்கள். டாக்டர் புரட்சித் தலைவி அவர்களால் 1-7-1991-லிருந்து 5 ஆண்டுக் காலத்தில் துவக்கப்பட வேண்டிய சிறு தொழில்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட இலக்கான ஒரு லட்சத்தில் 28-2-1995 வரை 91 ஆயிரத்து 68 சிறு தொழில்களுக்கு நிரந்தரச் சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி) இவற்றில் முதலீடு ரூபாய் 2002 கோடி எனவும் இவை சுமார் 9 லட்சம் நபர்களுக்கு வேலை வாய்ப்பு அளித்துள்ளன என்றும் மதிப்பிடப்பட்டுள்ளது. ஆக இன்னும் ஒரு ஆண்டுக் காலத்திற்குள் இன்னும் அந்த ஒரு லட்சம் என்ற இலக்கைத் தாண்டி அதற்கு மேலே 25 சதவீதம் நாம் பதிவு செய்ய முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நாடாளுமன்றத்திலே கடந்த 1994 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில் வெளியிடப்பட்ட அறிக்கையின்படி சிறு தொழில்களுக்கு வழங்கப்பட்ட நிரந்தரச் சான்றிதழ்களில் தமிழகம் 5-வது இடத்தையும் இவற்றின் மூலம் உருவாக்கப்பட்ட வேலைவாய்ப்புகளில் முதல் இடத்தையும் வகிக்கிறது என்று அறிவிக்கப்பட்டுள்ளது என்பதை பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 6-10

இந்திய சிறுதொழில் அபிவிருத்தி நிதி நிறுவனத்தாரால் 1995 ஜனவரி திங்களில் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையின்படி அந்த நிறுவனத்திடமிருந்து நிதி உதவி பெற்ற மாநிலங்களில் தமிழகம் தொடர்ந்து 3-வது இடத்தைப் பெற்று வருகிறது என்பதை இந்த மாமன்றத்தில் மிக்க மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

சிறுதொழில்களுக்கு அளிக்கப்பட்டுள்ள மானியம், முதலீட்டு மானியம் 1989 லிருந்து 1991 வரை 721 லட்சம். ஆனால் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் பொறுப்பு ஏற்ற பிறகு 1,953.75 லட்சம்.

குறைந்த அழுத்த மின் கட்டண மானியம் 1991 வரை 125 லட்சம். மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் பொறுப்பு ஏற்ற பிறகு 352.87 லட்சம். ஜெனரேட்டர் மானியம் 35.50 லட்சம். இன்று 98.80 லட்சம். வட்டியில்லா விற்பனை வரி தள்ளுபடி, தள்ளிவைப்பு சான்றிதழ்கள் வழங்கப்பட்டது ஐ.எப்.எஸ்.ட்டி. 1991 வரை 1842; 1991க்கு பிறகு 9,304.32. கடந்த ஆண்டு அறிவித்தபடி பெருங்குடி மின்னணு தொழில் பேட்டையில் மின்னணு அடுக்குமாடிக் கட்டிடம் கட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இதற்கென 33 உறுப்பினர்கள் கொண்ட தொழில் கூட்டுறவுச் சங்கம் பதிவு செய்யப்பட்டு இதற்குத் தேவையான நிலமும் ஒதுக்கப்பட்டுள்ளது. கட்டிடம் அமைக்க சென்னை பெருநகர குழுமத்தின் ஒப்புதல் பெற்றவுடன் கட்டிடம் கட்டும் பணி விரைவில் துவக்கப்பட இருக்கிறது.

பெருங்குடி மற்றும் டாக்டர் விக்ரம் சாராபாய் தொழிற்பேட்டைகளில் அடிப்படை வசதிகளை மேம்படுத்த 26.35 லட்சம் செலவில் திட்டம் செயற்படுத்தப்பட இருக்கிறது.

மகளிரை ஊக்குவிப்பதற்கு சிறப்புத் திட்டங்கள். அரசு சார்புடைய எல்லா புதிய தொழில் பேட்டைகளில் மகளிருக்கு 30 விழுக்காடு இட ஒதுக்கீடு செய்ய மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோல் தொழிலாளர்களில் 30 விழுக்காட்டுக்கு மேல் மகளிர் வேலைவாய்ப்பு அளித்திடும் புதிய தொழில்களுக்கு கூடுதல் மானியம் 5 விழுக்காடு அல்லது ரூ. 5 லட்சம் வரை வழங்க உத்தரவிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

முதல் முறையாக தகுதி வாய்ந்த மகளிர் தொழில் முனைவோருக்கு மாநில அரசின் விருதுகள் அளிக்கப்படுகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) இந்தத் திட்டம் பெண் தொழில் முனைவோர்களிடையே நல்ல வரவேற்பைப் பெற்று வருகிறது என்பதைப் புள்ளிவரங்களிலிருந்து காணலாம். திட்டச் செலவு 47 லட்சம். பயிற்சி அளிக்கப்பட்டோர் 3,400 பேர். சொந்த தொழில் அமைத்துள்ளவர்கள் தொள்ளாயிரத்து எழுபத்தி மூன்று பேர். இவற்றின் மூலம் வேலை வாய்ப்பு பெற்றோர் 3,683 பேர் நேரடி வேலைவாய்ப்பு. மறைமுக வேலைவாய்ப்பு 12,756 பேர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர், முக்கால் மணி நேரம் போதும் என்று சொன்னீர்கள்.

1995 ஏப்ரல் 24]

மாண்புமிகு திருதுரை ராமசாமி: இன்னும் 10 நிமிடத்தில் முடித்து விடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்போது 50 நிமிடங்கள் ஆகியிருக்கின்றன.

மாண்புமிகு திரு. துரை ராமசாமி: 5 நிமிடத்தில் முடித்து விடுகிறேன். 1994-95-ல் ஆயிரம் தொழில் முனைவோருக்கு, பயிற்சி பெற்றவர்களை ஊக்குவிப்பதற்கு இந்த அரசு ரூபாய் 3 லட்சம் வழங்கியுள்ளது.

தொழில் கூட்டுறவுப் பணியாளர்கள் மற்றும் உறுப்பினர்கள் நலம் பாதுகாப்பு. இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் தாயுள்ளத்தோடு இன்று இந்தத் திட்டத்தை அறிவித்திருக்கிறார்கள். தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் கடந்த 40 ஆண்டுக் காலமாக செயல்பட்டு வந்தாலும் பணிபுரியும் உறுப்பினர்கள் மற்றும் பணியாளர்களுக்கு எதிர்பாராத இன்னல்கள் நேரும்போது நிறுவன ரீதியாக எந்தவித பாதுகாப்பும் இல்லாத நிலை நிலவி வந்தது.

தாயுள்ளம் கொண்ட டாக்டர் புரட்சித் தலைவி, இவர்களுக்கென காப்பீட்டுறுதி ஏற்பாட்டினை உருவாக்கி, விபத்தினால், இயலாமையினால் இறப்பு நேரிட்டால் ரூபாய் 25 ஆயிரமும், மருத்துவத்திற்கு ரூபாய் 11 ஆயிரமும், குடிசை மற்றும் உடமைகள் இழப்புக்கு ரூபாய் ஐந்தாயிரமும் வழங்க அரசு இன்று பரிசீலித்து, அதன்மூலம் 21 ஆயிரம் நபர்கள் பயனடைய நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெட்டுப் பிரேரணைகளுக்கு தனித்தனியாக பதில் சொல்லி விடலாமா? அல்லது மொத்தமாக பதில் சொல்லி விடலாமா?

பிற்பகல் 6-15

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எல்லாவற்றையும் உங்களுடைய கவனத்தில் எடுத்துக்கொண்டு, மாண்புமிகு உறுப்பினர்களுடைய வெட்டுத் தீர்மானங்களை நல்லமுறையிலே பரிசீலனை செய்தாலே போதும் என்று நினைக்கிறேன். உங்களுடைய கவனத்தை ஈர்த்தாலே வெட்டுத் தீர்மானங்களுக்கெல்லாம் பரிகாரம் கிடைக்கும் என்று மாண்புமிகு உறுப்பினர்களுக்கும் எனக்கும் தெரியும்.

மாண்புமிகு திரு. துரை ராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

யாருடைய பெயரைச் சொன்னால்
வானம் இங்கே வளைந்து கொடுக்குமோ (மேசையைத் தட்டும் ஒலி)
யாருடைய திருப்பெயரை உச்சரித்தால்
பூமி இங்கு புஷ்பிக்குமோ (மேசையைத் தட்டும் ஒலி)
யார் பெயரைக் கேட்டு
எழு சுரங்களும் பெருமை கொள்கிறதோ (மேசையைத் தட்டும் ஒலி)
யாருடைய திருப்பெயரை உச்சரித்தால்
ஏழை மக்கள் முகத்தில் ஒளி ஏற்படுகிறதோ (மேசையைத் தட்டும் ஒலி)
யார் இந்தத் தமிழகத்தின் ஜீவனோ (மேசையைத் தட்டும் ஒலி)
அந்தப் புரட்சித் தலைவியின்
புதுமைத் தாயின்
சத்தியத் திருவுருவின்
சாதனையின் மறு வடிவில்
சரித்திரத்தின் வெற்றி முனையில்
சகாப்தத்தின் தொகுப்பினை (மேசையைத் தட்டும் ஒலி)
தர்மத்தின் இந்த நாட்டின் வெற்றி ரேகை (மேசையைத் தட்டும் ஒலி)
அதுதானே 'மக' ராசி (மேசையைத் தட்டும் ஒலி)
எங்கள் மகராசியின் சாதனை
மதராசிக்கு டெல்லியிலே மரியாதையை வாங்கித் தந்தது (மேசையைத் தட்டும் ஒலி)
எங்கள் மகராசியின் சாதனை
மதராசிக்கு டெல்லியிலே மரியாதையை வாங்கித் தந்தது (மேசையைத் தட்டும் ஒலி)
எங்கள் மகராசியின் ஆட்சிதானே-
அதிலும் நிலையான ஆட்சி (மேசையைத் தட்டும் ஒலி)
உறுதியான ஆட்சி (மேசையைத் தட்டும் ஒலி)
மக்களின் ஆதரவு பெற்ற மக்களாட்சி (மேசையைத் தட்டும் ஒலி)
ஏழையின் இதயத்திலே இடம் பெற்ற ஆட்சி (மேசையைத் தட்டும் ஒலி)
சோதனைகளை சாதனைகளாக்கிய ஆட்சி (மேசையைத் தட்டும் ஒலி)
சமூக நீதி காத்த ஆட்சி (மேசையைத் தட்டும் ஒலி)
தொட்டில் கொடுத்து துயர் துடைத்த ஆட்சி (மேசையைத் தட்டும் ஒலி)
பெண்ணுரிமை பெற்றுத் தந்த ஆட்சி (மேசையைத் தட்டும் ஒலி)

ஒதுக்கப்பட்டவர்களை வேதம் ஓத நீதி காத்த ஆட்சி (மேசையைத் தட்டும் ஒலி)

கற்பூரம் காணாத கோவில்களின் கதவுகளைத் திறக்கச் செய்த ஆட்சி (மேசையைத் தட்டும் ஒலி)

சீரிளமைத் தமிழ் மொழிக்கு சிறப்பு செய்யும் ஆட்சி (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டம் ஒழுங்கை சீர் செய்த ஆட்சி (மேசையைத் தட்டும் ஒலி)

உறவுக்குக் கரம் கொடுத்த ஆட்சி (மேசையைத் தட்டும் ஒலி)
உரிமைக்குக் குரல் கொடுத்த ஆட்சி (மேசையைத் தட்டும் ஒலி)
பல புதுமைகள் படைத்திட்ட ஆட்சி (மேசையைத் தட்டும் ஒலி)
அந்த ஆட்சியைக் காக்கிற காவல் தெய்வம்
புரட்சித் தலைவி (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று எதிர்க்கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் இல்லையே என்று கவலையாக இருக்கிறது. இருந்தாலும் நான் சொல்லுவதைச் சொல்லியாக வேண்டும்.

திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் இருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சிங்காரம் அவர்கள் இருக்கிறார்கள் இங்கே.

மாண்புமிகு திரு. துரை ராமசாமி: எதிர்க்கட்சியைச் சார்ந்த நண்பர்கள் நன்றாக யோசித்துப் பாருங்கள். இதயத்திலே கை வைத்துச் சொல்லுங்கள். இதற்கு முன்பு பொது மக்களின் ஏகோபித்த ஆதரவைப் பெற்ற இப்படிப்பட்ட கட்சியை, அந்தக் கட்சியின் அருமைத் தலைவியாம் டாக்டர் புரட்சித் தலைவியைப் போல (மேசையைத் தட்டும் ஒலி) உலக வரலாற்றிலேயே எங்கேனும் கண்டதுண்டா? (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழகத்துக்கு, தமிழ் பேசும் இனத்திற்கு
இன்றைக்குக் கிடைத்திருக்கின்ற சரியான விலாசம்
டாக்டர் புரட்சித் தலைவிதானே (மேசையைத் தட்டும் ஒலி)
இனி இப்படிச் சொல்லலாம்
புரட்சித் தலைவியின் ஆட்சியில்
புதுமைகள் பல பூத்தன
புனிதத் தாயின் ஆட்சியில்

அவர் புண்ணியம் காத்தது தமிழ்நாட்டை (மேசையைத் தட்டும் ஒலி)
சூதும் சூழ்ச்சியும்

சில சுவாமிகளின்
சுவாசம்...
ஏச்சும் பேச்சும்
சில ஆசாமிகளின்
சுபாவம்.... (மேசையைத் தட்டும் ஒலி)
தங்கள் வலிமையும்,
வல்லமையும்
திறமையும்,
நேர்மையும் அஞ்சாமையும்
அறியாத வீணர்கள்; தெரியாத ** (மணியடிக்கப்பெற்றது)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதுபாட்டுக்குப் போய்க்கொண்டே இருக்கிறது. ** என்கின்ற வார்த்தையை எல்லாம் இங்கே சொல்லக் கூடாது. அது அவைக்குறிப்பிலே இருந்து நீக்கப்படுகிறது.

பிற்பகல் 6-20

மாண்புமிகு திரு. துரை ராமசாமி: அந்த நச்சு அரவக் கும்பல் தோற்பது நிச்சயம், பின் ஓடி ஒளிவதும் நிச்சயம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த இரு மானியக் கோரிக்கைகளின் மீது மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களின் மேலான ஆலோசனைகளையும், கருத்துக்களையும் வழங்கியுள்ளார்கள். மேலும் வெட்டுத் தீர்மானங்களையும் கொடுத்துள்ளார்கள். வெட்டுத் தீர்மானங்களுக்குத் தேவையான விளக்கங்களை அளித்துள்ளேன்.

ஆகவே மாண்புமிகு உறுப்பினர்கள் வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக் கொள்ளுமாறு அன்போடு கேட்டுக்கொண்டு, இந்த இரு மானியக் கோரிக்கைகளையும் நிறைவேற்றித் தருமாறு கேட்டுக்கொண்டு அமர்கிறேன், நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமைச்சர்கள் அவரவர்கள் இருக்கைகளில் இருக்க வேண்டும். இருக்கையை விட்டே செல்லக்கூடாது.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

பாராட்டுக்குரிய பதிலுரைதான். அதற்காக இருக்கையிலிருந்து எழுந்து போய் அவரைப் பாராட்ட வேண்டியதில்லை, இருக்கையிலிருந்தே பாராட்டுங்கள், போதும். மாண்புமிகு தொழில் துறை அமைச்சரவர்களுடைய பதிலுரை.

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சற்றொப்ப 15 ஆண்டுகளுக்கு முன்னால் தமிழ்நாட்டு அரசியலில் வேர்விட்டு எழுந்து இன்று இந்திய அரசியல் அரங்கத்தில் இமயம் போல் எழுந்து நிற்கிற, ஆர்ப்பரிக்கும் அலைகடலொப்ப மக்கள் சக்திக்குச் சொந்தக்காரர் (மேசையைத் தட்டும் ஒலி) ஓர் அற்புதமான அரசியல் சிந்தனையாளர், அறிவியல் தமிழ் இயக்கத்தை அறிமுகப்படுத்தியவர்; அனைத்து மாநில முதலமைச்சர்களுக்கெல்லாம் முதலமைச்சராக விளங்கும் அறிவார்ந்த முதலமைச்சர் (மேசையைத் தட்டும் ஒலி) டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் சீரிய தலைமையின் கீழ் சிறப்பாகச் செயலாற்றி வரும் அமைச்சரவையில் இரண்டாவது முறையாகத் தொழில் துறை மானியக் கோரிக்கையினைச் சரித்திரக் கீர்த்தி மிக்க இந்தச் சட்டமன்ற அவைக்களத்தில் தாக்கல் செய்து உரையாற்றுகிற நல்வாய்ப்பினை நல்கிய ஆற்றல் மிக்க முதல்வர், 6 கோடி தமிழ் மக்களுடைய இதயதெய்வம், ஒரு கோடி அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத் தொண்டர்களுடைய இதயத் துடிப்பு; மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு நான் மிகுந்த நன்றிக் கடன்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பேரவைத் தலைவரவர்களே, நான் எனது பதிலுரையை அரை மணி நேரத்தில் முடித்துக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சுருங்கச்சொல்லி விளங்க வைப்பதில் தொழில்துறை அமைச்சர் பாராட்டுக்குரியவர்தான் என்பதை அவையினர் அறிவர்.

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி: அதற்குமுன்பு ஒரு பொதுவான வேண்டுகோளை இந்த அவைக்கு வைக்க விரும்புகிறேன். பேரவைத் தலைவரவர்களே, என்னுடைய உரை இறுதிக்கட்டத்தை அடைகின்ற வரைக்கும் இடையிடையே பேசி இடையூறு செய்யாமல் இருக்க வேண்டுமென்று பொதுவான வேண்டுகோளை வைக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர்கள் ஏதாவது ஐயங்கள் கேட்டால்தான்.

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி: வேண்டுகோள் பொதுவாக இருந்தாலும் ஏதோ என் மீது குறி வைத்துத் தாக்குவதைப்போலத் தெரிகிறது என்று மாண்புமிகு சமூகநலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சரவர்கள் சந்தேகப்பட்டால் அதற்கு நான் பொறுப்பல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் அடிக்கடி பொதுவாகவே சொல்லி வந்திருக்கிறேன். அமைச்சர்கள் பதில் சொல்லுகின்றபொழுதும், பேசுகின்றபொழுதும் பக்கத்தில் இருக்கிற அமைச்சர்கள் அவர்களுக்கு மிகுந்த உறுதுணையாக இருக்க வேண்டும்.

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வேண்டுகோளை வைக்கச் சொன்னதே மாண்புமிகு வணிகவரிகள் துறை அமைச்சரவர்களும், மாண்புமிகு பிற்பட்டோர் நலத்துறை அமைச்சரவர்களும்தான் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் தலைமையில் அமைந்த தமிழக அரசின் தொழில்துறை மானியக் கோரிக்கையின்மீது பத்துக்கு மேற்பட்ட உறுப்பினர்கள் தங்கள் மேலான கருத்துக்களை எடுத்துச் சொல்லியிருக்கின்றார்கள். எல்லோரும் ஆக்கபூர்வமான ஆலோசனைகளை இந்த அரசுக்கு அளித்திருக்கிறார்கள். அவர்களுடைய ஆலோசனைகள் அத்தனையும் செயல் வடிவமாக்கப்படும் என்பதைப் பேரவைத் தலைவர் வாயிலாக அவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இந்தியப் பொருளாதார மாற்றங்களை உடனுக்குடன் உணர்ந்து, ஜனவரி 92-ல் புதிய தொழில் கொள்கையை அறிவித்தார்கள். இந்தப் புதிய தொழில் கொள்கை தாராளமான நிதியுதவிகளையும், சலுகைகளையும் கொண்டுள்ளது. இந்தப் புதிய தொழில் கொள்கை, மாநிலத்தில் துரிதமான தொழில் வளர்ச்சியைக் கொண்டுவர தூண்டுகோலாக அமைந்தது.

இந்தத் தொழில் கொள்கையில், துரிதமான தொழில் வளர்ச்சிக்கு வகுக்கப்பட்ட செயல் திட்டத்தின் ஒரு பகுதியாகச் சில முக்கியமான துறைகளை மாநில அரசு கண்டறிந்துள்ளது.

தரமான, திறமையான தொழில் அடிப்படை வசதிகளை அளித்தல்; தொழில் அனுமதிகளைத் துரிதமாக வழங்க ஓர் அமைப்பை ஏற்படுத்துதல்; தொழில்களுக்கு நிலம், நீர் மற்றும் மின்சாரம் ஆகியவற்றைத் தாராளமாகவும், எளிதாகவும் வழங்குதல்; மற்ற மாநிலங்களோடு

ஒப்பிடுகையில் தமிழகத்தில் சாதகமான நிலைகள் உள்ள குறிப்பிட்ட சில தொழில்களுக்கு ஊக்கம் அளித்தல்; நல்ல தொழில் உறவுகளுக்கு உகந்த நிலை இருத்தல்; தொழில்நுட்ப மனிதவள ஆற்றலை மேம்படுத்துதல்; ஒரு நிலையான நிதிக் கொள்கை இருத்தல்; நகர்ப்புற வீட்டுவசதி மற்றும் அடிப்படை வசதிகளை மேம்படுத்தல். 1995-96-ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில், மேற்கூறிய செயல்திட்டத்தில் உள்ள இனங்களுக்குத் தேவையான நிதி ஒதுக்கப்பட்டுள்ளது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 6-25

தொழில் வளர்ச்சிக்காக புரட்சித் தலைவியினுடைய அரசு அளித்து வரும் பல்வேறு ஊக்கச் சலுகைகளை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவீர்கள். அவை, தொழிலில் பின்தங்கிய, மிகவும் பின்தங்கிய பகுதிக்கான முதலீட்டு மானியம், தனித்தன்மை வாய்ந்த தொழில்களுக்கான சிறப்பு முதலீட்டு மானியம், பெண்களுக்கு வேலைவாய்ப்பளிக்கும் தொழில்களுக்கான மானியம், முன்னோடித் தொழில்களுக்குச் சிறப்பு மானியம், மின் உற்பத்தி சாதனங்களுக்கான மானியம், பெரும் தொழில் திட்டங்களுக்கான மானியம், மின்கட்டணத்தில் சலுகை, கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்க மானியம், விற்பனை வரித் தள்ளுபடி, வட்டியில்லா விற்பனை வரி தள்ளி வைப்புத் திட்டம். தற்போது நலிவுற்ற தொழில் நிறுவனங்களுக்கு, சிக் இன்டஸ்டிரியல் யூனிட்ஸ்-க்கு மட்டுமே வழங்கப்படும் சலுகைகளை நலிவுறும் நிலையில் உள்ள தொழில் நிறுவனங்களுக்கும் வழங்க அரசு ஆணையிட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) இதன் மூலம் தொழில் நிறுவனங்கள் முழுவதுமாக நலிவுறாமல் தடுக்கத் தேவையான மறுவாழ்வுத் திட்டங்களை மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு எடுத்துள்ளது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தொழில் உற்பத்தியில் இடப்படும் மூலப் பொருட்களுக்கு விற்பனை வரி பெயரளவிற்கே இருக்க வேண்டும் என்பதைக் கருத்தில் கொண்டு அரசு அண்மையில் எல்லாவித கனிம எண்ணெய், மசகு எண்ணெய், கிரீஸ் மற்றும் வாயுக்கள் ஆகிய பொருட்களுக்கு தமிழ்நாடு பொது வரிச் சட்டம் 83 (3) பிரிவின்கீழ் விற்பனை வரி விகிதத்தில் சலுகை பெறத் தகுதி இல்லையென்றாலும், அவை 3 சதவிகிதம் என்ற அளவில் சலுகை விகிதத்தில் விற்பனை வரி செலுத்த ஆணையிட்டுள்ளது. இந்தச் சலுகை கனிம எண்ணெய்களையும், வாயுக்களையும் மூலப் பொருட்களாகவும், முதன்மையான எரிபொருட்களாகவும் பயன்படுத்துகிற தொழில்கள், தாங்கள் உற்பத்தி செய்யும் பொருட்களின் விலை சந்தையில் போட்டியிடத்தக்க அளவு உதவி செய்யும்.

மின்னணுத்துறை ஒரு வளரும் தொழில் என்ற முக்கியத்துவத்தை உணர்ந்து மின்னணுப் பொருட்களில் பயன்படுத்தப்படும் சிறிய டிரான்ஸ்பார்மர்கள் மற்றும் கெபாசிட்டர்கள் போன்ற பாகங்களுக்கு அரசு அண்மையில் விற்பனை வரி விகிதத்தை 3 சதவீதமாகக் குறைத்துள்ளது. இதனால் இம்மாநிலத்தில் மின்னணுத் தொழில் ஒரு மிகப் பெரும் உத்வேகம் பெறும் என்று எதிர்ப்பார்க்கப்படுகிறது.

சிப்காட் நிறுவனம் வழங்கும் தொழில் கடன்களைப் பொறுத்தவரை சில சலுகைத் திட்டங்களை அண்மையில் அறிமுகப்படுத்தியுள்ளோம். தற்போது எல்லாத் தொழில்களுக்கும் 17.5 சதவிகித வட்டி விதிக்கப்பட்டுள்ளது. தொழில் நிறுவனங்களின் நற்பெயர், நாணயம், திறமையான செயல்பாடு ஆகியவைகளின் அடிப்படையில் அவை கோரும் கடன்கள் மீது இனிமேல் 15.5 சதவிகிதத்திலிருந்து 17 சதவீதம் வரை வட்டி விகிதம் குறைத்து விதிக்கப்படும். சிப்காட் தற்போது வரையறுக்கப்பட்டக் கடன்களுக்கு அதிகபட்சம் ரூ. 300 லட்சங்களும், கூட்டு நிறுவனங்களுக்கு அதிகபட்சம் ரூ. 90 லட்சங்களும் தொழில் கடன் வழங்குகிறது. திட்ட மதிப்பீடு ரூ. 75 லட்சங்களுக்கு மேற்பட்டு ரூ. 500 லட்சங்களுக்கு மேல் இருந்தாலும் இந்தக் கடன்கள் வழங்கப்படும்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் தமிழகத்தில் ஆட்சிப் பொறுப்பேற்று நான்கு ஆண்டுக் காலத்தில் தமிழகம் தொழில் வளர்ச்சியில் இதுவரையில்லாத சிறப்பான நிலையை எய்தியுள்ளது என்பதை யாரும் மறுக்க முடியாது. இந்த வளர்ச்சியைக் கண்டு பொறுக்காத சிலர் ஆராய்ச்சி என்கின்ற பெயரில் குறிப்பிட்ட ஒரு சில பகுதியை வைத்துக் கொண்டு 'ரேண்டம் சேம்பிலிங்' முறையில் கணிப்புகளை தெரிவிப்பதும், கதைக்கு உதவாத கருத்துக் கணிப்புகளை எவரும் மறுக்க முடியாத உண்மை நிலை என்பது போல் முலாம் பூசி ஏதோ தமிழகத் தொழில் துறை வளர்ச்சி அடையவில்லை என்பது போலவும், இந்த ஆட்சியில் திடீர் தேக்கம் ஏற்பட்டுவிட்டது போலவும் ஒரு மாயத் தோற்றத்தை உண்டாக்கும் முயற்சியில் சில எதிர்க்கட்சியினர் வேண்டுமென்றே உள்நோக்கத்துடன் ஈடுபட்டு வருகிறார்கள். எந்த ஒரு காரியத்தை எடுத்துச் செய்தாலும் அதன் முழு பலன்கள் வெளிவருவதற்கு ஒரு குறிப்பிட்ட கால அவகாசம் 'ஜெஸ்டேஷன் பீரியட்' தேவை. அதற்குள்ளாக ஆக்கப் பொறுத்தவர்கள் ஆறப் பொறுக்கவில்லை என்பதைப் போல, பலன்கள் கிடைக்கவில்லையே என்பது சற்றும் நியாயமில்லாத செயலாகும்.

1991-92, இந்த ஆட்சி பொறுப்பேற்ற நேரத்தில் மற்றும் 1992-93 ஆகிய ஆண்டுகளைவிட, 1993-94 மற்றும் 1994-95 ஆகிய ஆண்டுகளில்தான்,

இந்த புரட்சித் தலைவியினுடைய அரசு நடைமுறைப்படுத்தி வருகின்ற பல திட்டங்களின் உண்மையானப் பலன்கள் வெளிப்பட ஆரம்பித்துள்ளன. 12-2-1995 ஆம் நாளிட்ட 'இந்து' நாளிதழில் National Council of Applied Economic Research என்ற நிறுவனத்தின் இயக்குநர் திரு. எஸ்.எல். ராவ், "Tamil Nadu lacks efforts to attract Industries" என்ற தலைப்பில் மற்ற தென்னக மாநிலங்களைப் போல, தமிழ்நாடு, கூடுதல் முதலீடுகளை வரவேற்பதிலும் புதிய தொழிற்சாலைகளை ஏற்படுத்துவதிலும் அக்கறை காட்டவில்லை என்றும் தொழில் துறையில் முன்னணியில் இருந்த தமிழகத்தின் நிலை இன்றைக்குப் பின்னுக்குத் தள்ளப்பட்டிருக்கிறது என்றும், வெளி மாநிலங்களில் இருந்து தமிழ்நாட்டில் தொழிற்சாலைகளில் முதலீடு செய்ய முன்வரும் தொழில் முனைவோர்களுக்குத் தேவையான புள்ளிவிவரங்களை அளிப்பதில் தமிழக அரசு மெத்தனமாக இருக்கிறதென்றும் குற்றச்சாட்டுக்களைக் கூறியுள்ளார்.

பிற்பகல் 6-30

அயல்நாட்டுத் தொழில்நுட்ப உதவிக்கான ஒப்புதல்கள் குறித்து நான் பதில் சொல்லும் விதத்தில் சில ஆதாரங்களை இப்பொழுது அவைக்கு வைக்க இருக்கிறேன். அயல்நாட்டுத் தொழில்நுட்ப உதவிக்கான ஒப்புதல்களிலும் தமிழ்நாடு நான்காவது இடத்தைப் பெற்றுள்ளது. ஏற்றுமதிக்காகவே ஏற்படுத்தப்படும் தொழில்களில் அதாவது, எக்ஸ்போர்ட் ஓரியண்டட் யூனிட்டுகளில் அகில இந்திய அளவில், தமிழகம், 214 தொழில்களுடன் மூன்றாவது இடத்தில் இருக்கிறது. மராட்டிய மாநிலம் 238 தொழில்களுடன் முதலிடத்திலும், ஆந்திர மாநிலம் 222 தொழில்களுடன் இரண்டாவது இடத்திலும், அதையடுத்து தமிழகம் மூன்றாவது இடத்திலும் இருக்கின்றது. கர்நாடக மாநிலம் பெற்றுள்ளது 142 தொழில்களே.

அகில இந்திய நிதி நிறுவனங்களான ஐ.டி.பி.ஐ. மற்றும் ஐ.எப்.சி.ஐ., ஐ.சி.ஐ.சி.ஐ. ஆகிய நிறுவனங்கள் 1993-94-ஆம் ஆண்டு தமிழகத் தொழில்களுக்கு விநியோகித்த கடன் உதவி 793.54 கோடி ரூபாயாகும். ஆகவே மாநிலங்களுக்கிடையே தொழில் வளர்ச்சியை மதிப்பீடு செய்தபோது, இதுபோன்ற அமைப்புகள் எந்த அளவில் தொழிலில் முதலீடு செய்திருக்கிறதோ அதை வைத்துத்தான் நாம் மதிப்பிட முடியும். அந்த அளவில் தமிழ்நாடு மூன்றாவது இடத்தைப் பெற்றுள்ளது என்பதை தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆந்திராவிற்கு வழங்கப்பட்ட கடன் தொகை ரூ. 517 கோடியும், கர்நாடகாவிற்கு வழங்கப்பட்ட கடனுதவித் தொகை 530 கோடி ரூபாய் ஆகும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல் சி.எம்.ஐ.ஈ. என்கிற Centre for Monitoring Indian Economy என்ற நிறுவனம் தயாரித்துள்ள Index of Relative Development of Infrastructure என்பதன் அடிப்படையில், மாநிலங்களில் அமைந்துள்ள அடிப்படை வசதிகள், வளர்ச்சி கட்டமைப்பு ஒப்புநோக்கில், தமிழ்நாடு ஐந்தாவது இடத்தைப் பெற்றுள்ளது. அகில இந்திய சராசரி 100 என்று வைத்துக் கொண்டால், தமிழகத்தின் இன்டெக்ஸ் எண் 138 ஆகும். ஆனால் ஆந்திராவின் சராசரி எண் 103 ஆகவும், கர்நாடகத்தின் எண் 97 ஆகவும் உள்ளது.

ஏதாவது ஒரு குறிப்பிட்ட புள்ளி விவரத்தில் தமிழ்நாடு மிகவும் பின்தங்கிப் போயிருக்கிறது என்றால் அது மத்திய அரசு தமிழ்நாட்டில் செய்து வருகின்ற மூலதனத்தின் புள்ளி விவரமாகத்தான் இருக்கும். இதைத்தான் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இதே அவையில் சொன்னார்கள். என்றைக்கு திராவிட இயக்கத்தின் ஆட்சி தமிழ்நாட்டில் ஏற்பட்டதோ அன்றிலிருந்து மத்திய அரசு தமிழ்நாட்டில் முதலீடு செய்வதைப் படிப்படையாக் குறைத்துக் கொண்டே வந்தது. அகில இந்திய அளவில் மத்திய அரசின் முதலீட்டில் தமிழகம் ஐந்தாவது இடத்தில் இருந்த அருமையான நிலைமை மாறி, 1992-93 நிதியாண்டில் ஒன்பதாவது இடத்திற்குத் தள்ளப்பட்டது என்பதை வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன். இதற்குக் காரணம் தமிழ்நாடு அல்ல, நீங்கள் உங்கள் பங்கிற்கு மத்திய அரசிடம் ஏன் வாதாடிப் பெறவில்லை என்ற கேள்வியை இங்கே சிலர் எழுப்பிக் கொண்டிருக்கிறார்கள். மத்திய அரசிடமும் திட்டக் கமிஷனிடமும் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் மத்திய அரசின் முதலீட்டை தமிழ்நாட்டில் அதிகப்படுத்த வேண்டுமென்றும், அதற்காக புதிய தொழில்களை மத்திய அரசு சார்பில் துவக்க வேண்டுமென்று கொடுத்த கோரிக்கைகள் எல்லாம் வழக்கம்போல் செவிடன் காதில் ஊதிய சங்காக மாறிவிட்டது (மேசையைத் தட்டும் ஒலி) எனவேதான் இந்தநிலை ஏற்பட்டுள்ளது என்பதை தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழகத்தின் முன்னேற்றத்தில் உண்மையில் அக்கறை இருந்திருந்தால், இன்று எங்களைக் குறை கூறுகின்ற காங்கிரஸ்காரர்கள் மத்தியில் ஆட்சி செய்யும் காங்கிரஸ் கட்சியைத் தட்டிக் கேட்டு, தமிழகத்தின் வளர்ச்சிக்கு வழி வகுத்திருக்க வேண்டும். ஆக அதையெல்லாம் விட்டு விட்டு அடிக்கடி டெல்லிக்கு எதற்கெல்லாமோ போகின்ற தமிழ்நாட்டு காங்கிரஸ் கட்சிக்காரர்கள் இதை என்றாவது கேட்டிருக்கிறார்களா என்பதை நாட்டு மக்கள்தான் கேட்க வேண்டும். அத்தகைய முயற்சிகளை அவர்கள் மேற்கொள்ளவில்லை என்பதையும் தமிழக மக்கள் கவனித்து கொண்டுதான் வருகிறார்கள். அதற்கு உரிய காலகட்டத்தில் மக்களுக்கு அவர்கள் பதில்

சொல்லியே ஆகவேண்டிய கட்டாயம் இருக்கிறது என்பதைக் காங்கிரஸ் நண்பர்கள் மறந்துவிடக்கூடாது.

தமிழகத்தில் விரைந்த தொழில் வளர்ச்சியை ஏற்படுத்த 1991-ஆம் ஆண்டு மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவியின் அரசு அமைந்தபின்பு புதிய தொழில் கொள்கை – New Industrial Policy – அறிவிக்கப்பட்டது. தமிழகத்தின் விரைந்த தொழில் வளர்ச்சிக்கு வழி வகுப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதே இந்தக் கொள்கையின் அடிப்படை நோக்கமாகும். "தொழில் அடிப்படை வசதிகள் வளர்ச்சி கட்டமைப்பை" மேம்படுத்த வேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்தில் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் டாஸிட் - Tamil Nadu Corporation for Industrial Infrastructure Development - என்ற ஒரு அரசு நிறுவனத்தை 1992-ல் நிறுவுவதற்கு உத்திரவு போட்டார்கள். அதன் அடிப்படையில் பெரியார் மாவட்டம் பெருந்துறை, நெல்லை மாவட்டம் கங்கைகொண்டான், திண்டுக்கல்-அண்ணா மாவட்டம் நிலக்கோட்டை மற்றும் தர்மபுரி மாவட்டம் பர்கூர் ஆகிய நான்கு இடங்களில் வளர்ச்சி மையங்களை (க்ரோத் சென்டர்ஸ்) இந்த நிறுவனம் உருவாக்கி வருகின்றது. அதேபோல சிப்காட் நிறுவனத்தின் மூலம் கடந்த ஆண்டு செய்யாறில் ஒரு தொழிற்பேட்டை உருவாக்கப்பட வேண்டுமென்று மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் உத்திரவு போட்டார்கள். அதன் அடிப்படையில் அதற்கான நிலம் கையகப்படுத்தப்பட்டு வருகின்றது. அதுபோல டாஸிட் நிறுவனத்தின் மூலம் ஊத்துக்கோட்டையில் ஒரு ஏக்கர் நிலப்பரப்பில் அனைத்து வசதிகளுடன் கூடிய தொழிற்பேட்டைகள் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சியிலே அமைக்கப்பட்டு வருகின்றன என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 6-35

அதுபோலவே, மத்திய அரசின் உதவியுடன் 20 கோடி ரூபாய் செலவில் கும்மிடிப்பூண்டியில் Export Promotion Industrial Park, அதாவது இ.பி.ஐ.பி. என்று சொல்லக்கூடிய ஏற்றுமதி வளர்ச்சி தொழிற் பூங்கா ஒன்று விரைவில் அமைக்கப்படவுள்ளது. அதுபோல,(மேசையைத் தட்டும் ஒலி) TIDCO, SPIC, Balaji Group of Industries ஆகியவற்றுடன் கூட்டு முயற்சியில் Singapore Corridor என்றழைக்கப்படும் சென்னை தொழிற் பூங்காவை, அனைத்து உயர்தர கட்டமைப்புக்களுடன் 450 கோடி ரூபாய் செலவில் சென்னைக்கு அருகில் உள்ள சோழிங்கநல்லூரில் 1500 ஏக்கர் நிலப்பரப்பில் அமைக்கப்பட உள்ளது. இந்தத் தொழில் பூங்காவின் பணிகளை விரைந்து செயல்படுத்த அண்மையில் அதனுடைய நிர்வாக

அதிகாரியாக ஒரு ஐ.ஏ.எஸ். அதிகாரி நியமிக்கப்பட்டிருக்கிறார் என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழகத்தில் தொழில் வளர்ச்சிக் கழகம் - TIDCO - நிறுவனத்தின் முயற்சியால், 1991 ஜுன் முதல் 1995 ஜனவரி வரை, Joint, Associates மற்றும் Escort துறைகள் மூலம் 10,936 கோடி ரூபாய் முதலீட்டில், 44 புதிய தொழில்கள் தொடங்கப்பட்டுள்ளன என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். டிட்கோ ஆரம்பித்து இந்த 26 ஆண்டுகளில் 1430 கோடி ரூபாய் செலவில் வெறும் 49 தொழில்களை மட்டுமே இதுவரை அமைத்திருக்கிறது. மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பிறகு, இந்த 4 ஆண்டுகளில் 10,936 கோடி ரூபாய் செலவில் 44 புதிய தொழில்கள் உருவாகியுள்ளன என்றால் இது தொழில் துறையின் மகத்தான வளர்ச்சியென்று கூறாமல், வேறு எப்படிக் கூற முடியும் ? (மேசையைத் தட்டும் ஒலி)

தொழில் வளர்ச்சியில் புரட்சித் தலைவி அரசு சரியான அக்கறை செலுத்தவில்லை. தொழில் முனைவோர்கள் தமிழ்நாட்டில் முதலீடு செய்ய விரும்பவில்லை என்றெல்லாம் கூறுவது முரண்பட்ட கருத்து என்று இந்தப் புள்ளி விவரங்கள் விளக்கவில்லையா? உண்மையில் சொல்லப்போனால், பெரும்பாலான டிட்கோ கூட்டுத்துறை தொழில்களில் முதலீடு செய்துள்ள தொழில் முனைவோர்கள் பிற மாநிலங்களையும், ஏன் பிற நாட்டையும் சேர்ந்தவர்கள் ஆவார்கள். பல்வேறு உதாரணங்கள் சொல்ல முடியும். நேரம் இல்லாத காரணத்தால் ஒருசில பெயர்களை மட்டும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். மிகப் பெரிய தொழில் நிறுவனங்களான DCM, Mc. Nalli Bharat, Duncann Agro Industries, J.K. Corporation, WIMCO, Sutlej Cotton Mills, Pennar Natco, Enkay Petrochemicals, Jenson & Nicholson, Skyline மற்றும் Madanapalle Spinning Mills ஆகியவை தமிழ்நாட்டில் தொழில் தொடங்க முன்வருவது எதைக் காட்டுகிறது? இவர்களெல்லாம் பிற மாநிலத்தினைச் சேர்ந்தவர்கள், பிற நாட்டைச் சேர்ந்த நண்பர்கள் என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அக்கறை காட்டியதால்தானே இவர்கள் தமிழகத்திற்கு தொழில் புரிய முன்வந்து கொண்டிருக்கிறார்கள். தமிழகத்தில் முதலீடுகளைச் செய்வதற்கு சாதகமான சூழ்நிலைகளை ஏற்படுத்தியதால்தானே, இந்த நிறுவனங்கள் தமிழ்நாட்டில் முதலீடு செய்து வருகின்றன என்பதைத் தெரிவிக்கக் கடமைப் பட்டிருக்கிறேன்.

காழ்ப்புணர்ச்சியோடு நடுநிலை பிறழ்ந்து காணுகின்ற கண்களுக்கு உண்மையை உணருகின்ற சக்தி மறைந்து விடுவதில் வியப்பு ஒன்றும் இல்லை.

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் தனிப்பட்ட முயற்சியால், பம்பாயைச் சேர்ந்த ஸ்டெர்லைட் நிறுவனத்தின் Copper Smelter & Lube Oil சுத்திகரிப்புத் திட்டத்தை ரூ. 1,300 கோடி திட்ட மதிப்பீட்டில் தமிழகத்திற்குக் கொண்டு வர முடிந்தது. அதே நிறுவனத்தை அணுகி 12 ஆண்டுக் காலமாக மூடியிருந்த மேட்டூர் அலூமினியம் தொழிற்சாலையை மாண்புமிகு முதலமைச்சர் முயற்சியின் காரணமாக இன்றைக்குத் திறக்கப்பட்டு (மேசையைத் தட்டும் ஒலி) இதில் பணியாற்றும் 1,500 தொழிலாளர்களுக்கும் மறுவாழ்வு கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

ரூ. 18,000 கோடி முதலீட்டில் துவக்கப்படவுள்ள ஜெயங்கொண்டம் பழுப்பு நிலக்கரி மின்சாரக் கழகம் Jayankondam Lignite Power Corporation-JLPC 3,000 கோடி மதிப்பீட்டிலான Aromatic தொழிற்சாலை SISCOL-TIDCO கூட்டு நிறுவனத்தின் மூலம் 600 கோடி ரூபாய் செலவில் தேனிரும்பு மற்றும் ஸ்டீல் தயாரிக்கும் திட்டம் ஆகியவை தமிழகத்தில் செயல்படுத்தப்பட்டு வரும் பெரிய தொழில் திட்டங்களாகும்.

நம்முடைய தொழில் வளர்ச்சிக்கு மிகுந்த முக்கியமான காரணம் மின் துறை. மின் துறையில் வளர்ச்சி இல்லையென்றால் அங்கே தொழில் வளராது. ஆகவே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் விரைந்து தொழில் வளர்ச்சிக்கு அடிப்படைத் தேவை கூடுதல் மின் உற்பத்தியும், அதன் சீரான விநியோகமும்தான் என்பதை அறிந்திருந்ததால்தான், எங்கள் மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் நல்ல பல திட்டங்களைத் தீட்டி செயல்படுத்தி வருகிறார்கள். சமீபத்தில் வடசென்னை அனல் மின் நிலையத்தை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் துவக்கி வைத்தார்கள். இந்த அனல் மின் நிலையத்திற்கு நாங்கள்தான் அடிக்கல் நாட்டினோம் என்று திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தலைவர் சொல்லிக் கொண்டு வருகிறார். திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சியில் அடிக்கல் நாட்டப்பட்ட இந்தத் திட்டத்திற்குத் தேவையான நிதி ஒதுக்கீடு செய்யப்படாததால் பின்னடைவு அடைந்திருந்தது. மாண்புமிகு முதல்வர் பொறுப்பேற்ற பிறகுதான் இந்தத் திட்டத்திற்குத் தேவையான நிதி ஒதுக்கப்பட்டு இந்தத் திட்டம் இன்றைக்குத் தொடங்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 6-40

புதிய திட்டங்களைச் செயல்படுத்துவதற்குத் தேவையான முதலீடுகளை அரசுத் தரப்பிலிருந்து வழங்கியது மட்டுமல்லாமல், முதன் முதலாக மின்சார உற்பத்தியில் தனியார் துறையையும் ஈடுபடுத்தி, தனியாரின் வசமிருந்து பெரிய முதலீடுகளை வெளிக்கொண்டு வந்தோம். புரட்சித்

தலைவி அவர்களின் ஆட்சிக் காலத்தில் தான் இந்த மாபெரும் மாறுதல்கள் நடைபெற்றுள்ளன என்பதை மறந்துவிடக் கூடாது. வெளிநாட்டு தொழில் நிறுவனத்தின் துணையோடு, 18,000 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஜெயங்கொண்டம் மின் திட்டம், 377 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 120 மெகாவாட் திறனுள்ள பேசின் பிரட்ஜ் எரிவாயு மின் சுழலி மின் உற்பத்தித் திட்டம்—உலக அளிவிலேயே முதன் முதலாக சிதம்பரனார் மாவட்டம் குலசேகரப்பட்டினம் கடற்கரைப் பகுதியில் Sea Solar Power Incorporated என்ற அமெரிக்க நிறுவனத்தால் 800 கோடி ரூபாய் செலவில் கடல் நீர் வெப்பத்தில் இருந்து 100 மெகாவாட் மின்சாரம் தயாரிக்கும் திட்டம், திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம் தேவர்குளத்தில், 55 கோடி ரூபாய் மதிப்பில் காற்றாலைகளில் இருந்து 15 மெகாவாட் மின்சாரம் தயாரிக்கும் திட்டம் ஆகியவை தமிழக மின்துறைக்கு ஒரு புதிய பரிமாணத்தை உண்டாக்கி வருகிறது. இதை எல்லாம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களினுடைய சாதனை என்பதை யாரும் மறுக்க முடியாது.

5,020 மெகாவாட் மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்கு மேலும் 8 புதிய மின் திட்டங்கள் தனியார் துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. முறைசாரா எரிசக்தியைப் பயன்படுத்தி மின் உற்பத்தியைப் பெருக்குவதிலும், குறிப்பாக காற்றாலைகளில் இருந்து மின்சாரம் தயாரிப்பதிலும்—இங்கே பல உறுப்பினர்கள் பேசுகின்றபோது தொழில்களுக்கு சரியான அனுமதி கிடைக்கவில்லை; நீண்டகாலம் ஆகி வரலாம் என்று ஒரு குற்றச்சாட்டைச் சொல்லிக் கொண்டு இருக்கிறார்கள். இதையெல்லாம் கண்ணோட்டத்தில் எடுத்துக்கொண்டு பெருந்தொழில்களை ஊக்குவிக்கவும், விரைவில் அவற்றை ஏற்படுத்தத் தேவையான அனுமதிகளைப் பெற்றுத் தரவும், தடைக்கற்களை அகற்றிடவும், Single Window Clearance Committee ஒன்றினை மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் தலைமையில் அமைக்கப்பட்டுள்ளது. 50 கோடி ரூபாய்க்கு அதிகமான முதலீடுகளைக் கொண்ட புதிய தொழில் முயற்சிகளுக்கு வேண்டிய அனைத்து அனுமதிகளையும் ஒரே இடத்தில் வழங்குவதற்காகத்தான் இந்தக் கமிட்டி ஏற்பாடு செய்யப்பட்டு இருக்கிறது. அதன் அடிப்படையில் கடந்த 23-3-1995 அன்று மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களினுடைய தலைமையில் இருக்கிற இந்தக் கமிட்டி, அவர்களுடைய ஆணையின் பேரில் கூடி ரூபாய் 5,974.35 கோடி மதிப்பீட்டில் டிட்கோவில் 22 தொழில் திட்டங்களுக்குத் தேவையான எல்லா அனுமதிகளையும் ஒரே சமயத்தில் வழங்கியுள்ளது என்பதை

மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ள நான் கடமைப்பட்டு இருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல் வெளிமாநிலங்களிலிருந்து தமிழ்நாட்டில் முதலீடு செய்ய விரும்புவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யவும், அவர்களுக்குத் தகவல்களை வழங்கவும் Industrial Guidance and Export Promotion Bureau என்ற நிறுவனத்தை மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் 1992-ஆம் ஆண்டு ஏற்படுத்தினார்கள். ஒரு முதுநிலை ஐ.ஏ.எஸ். அதிகாரியின் அனுபவமிக்க தலைமையில் செயல்படும் இந்த அரசு நிறுவனம் இந்தியத் துணைக் கண்டத்தில் மட்டுமின்றி, அயல்நாட்டிலும் தமிழ்நாட்டின் நிலையை எடுத்துக் கூறுவதில் சிரத்தை காட்டி வருகிறது. 1994-ஆம் ஆண்டு தொழில் மேம்பாட்டு முகாம்கள் - Industrial Promotion Campaigns - இந்தியாவின் முக்கிய நகரங்களிலும் Gulf நாடுகளிலும் நடத்தப்பட்டுள்ளன. இத்தகைய முகாம்களில் வெளியிடப்படும் தகவல்களின் அடிப்படையில்தான் பல தனி நபர் தொழில் முனைவோர்களும், பெரும் தொழில் நிறுவனங்களும், தமிழ்நாட்டில் முதலீடு செய்ய முன்வந்துள்ளார்கள்.

இந்த வழிகாட்டி நிறுவனம் அண்மையில் DIALOG Retrieval Services என்ற அமெரிக்க நிறுவனத்தின் மூலம் சர்வதேச (குறுக்கீடு) புள்ளி விவர மையங்களுடன் உடனுக்குடன் தொடர்பு கொள்ளும் வசதியை 17-4-1995 தேதி அன்று தொடங்கி வைத்து இருக்கிறேன் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

இதன்மூலம் ஏற்றுமதியாளர்கள் தொழில் நுட்பத் தகவல்கள், சர்வதேச விலை நிலவரங்கள், உலக வர்த்தக விசாரணைகள், அரசாங்கக் கட்டுப்பாடுகள் போன்ற தகவல்களை உடனுக்குடன் பெறுவதற்கு ஒரு அருமையான வாய்ப்பாகும். தமிழ்நாட்டிற்குப் புதிய தொழில்களை ஈர்க்க, அமைச்சர் அளவிலும், அதிகாரிகள் அளவிலும் பல்வேறு தீவிர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பிற்பகல் 6-45

20 பேர்கொண்ட அமெரிக்கக் குழுவிடம், டிட்கோ அதிகாரிகளும், அரசு அதிகாரிகளும் தமிழ்நாட்டின் அடிப்படை வசதிகள், கட்டமைப்பு வசதிகள் குறித்துத் தெளிவாக விளக்கி இருக்கின்றார்கள். அதைப் போல, தமிழகத்திற்கு வருகை தரும் தொழில் அதிபர்களின் குழுக்கள், வணிக-வியாபார பெருமக்களின் குழுக்கள் ஆகியவற்றை தமிழக அதிகாரிகள் சந்தித்து தமிழகத்தின் தொழில் வளர்ச்சியையும், தொழில் முதலீட்டிற்கு தமிழ்நாட்டில் நிலவுகின்ற சாதகமான சூழ்நிலைகளையும் எடுத்து விளக்கியுள்ளார்கள்.

அண்மையில் ஜெர்மனி நாட்டின் Baden Wurttemberg என்ற மாநிலத்தின் முதலமைச்சர் Thiru. Erwin Teufel என்பவரும் பெல்ஜியம் நாட்டின் இளவரசரின் தலைமையில் ஒரு வர்த்தகக் குழுவும், பல தொழிலதிபர்களுடன் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களை நேரில் சந்தித்து உரையாடிய பின்னர், தமிழகத்தில் முதலீடு செய்து தொழில் துவங்குவது குறித்து தங்களது ஆர்வத்தை வெளியிட்டுள்ளார்கள். நிலைமை இவ்வாறு இருக்க சிலர் அக்கறை இல்லை, மெத்தனமாக உள்ளோம் என்றெல்லாம் வாய் கூசாமல் குற்றம் சாட்டுவது சற்றும் நியாயமற்றது ஆகும். (மேசையைத் தட்டும் ஒலி)

1994-ஆம் ஆண்டு நடைபெற்ற Confederation of Indian Industry என்ற அமைப்பின் தென் பிராந்தியக் கூட்டத்தில், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் கலந்துகொண்டு சிறப்புரை ஆற்றினார்கள். தொழில் முனைவோர் நாட்டின் வளர்ச்சிக்கு ஆற்ற வேண்டிய கடமைகளை நினைவுப்படுத்திய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் அந்த நிறுவனத்தின் சென்னை அலுவலகக் கட்டிடம் கட்டுவதற்கு, 25 லட்சம் ரூபாய் நிதி உதவியையும் அளித்துள்ளார்கள் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.(மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல, தொழிற்துறை அமைச்சராகிய நானும், தொழிற்துறை செயலரும் சென்னைக்கு வருகின்ற அத்தனை தொழில் முனைவோர் குழுக்களையும் சந்தித்து வருகிறோம். சமீபத்தில் Ford மற்றும் Mahindra and Mahindra நிறுவனங்கள் கூட்டாக சென்னையில் கார் தயாரிக்கும் திட்டத்தைச் செயல்படுத்த இடத்தைத் தேர்ந்தெடுக்க வந்தபோது அவர்கள் என்னை சந்தித்துப் பேசியுள்ளார்கள். இதெல்லாம் அரசியல் அளவிலான கவனம், Political attention என்று கருத முடியாது என்றால், வேறு என்ன பெயர் சொல்லி அழைப்பது என்று எனக்குத் தெரியவில்லை.

கொள்கை முடிவு எடுக்கும் நிலையிலும், பல்வேறு நிலைகளிலும் தவறுகள் நடைபெறுவதால் இந்த மாநிலத்தில் முதலீடு செய்யத் தயங்குகிறார்கள் என்ற ஒரு பொத்தாம் பொதுவானக் குற்றச்சாட்டை ஆராய்ச்சியாளர் ராவ் என்பவர் அண்மையில் கூறியிருக்கிறார்கள். எந்தவிதமான அடிப்படையுமின்றி காழ்ப்புணர்ச்சியுடன் கூறப்பட்ட கருத்தாகத்தான் இதை எடுத்துக் கொள்ள வேண்டும். ஒரு ஆராய்ச்சியாளர் பொதுவாக புள்ளிவிவரங்களின் அடிப்படையில் எழுகின்ற சிந்தனைகளை வைத்து தனது கருத்துக்களை வெளியிட்டால் அது ஆராய்ச்சியின் அடிப்படையில் எழுந்த விளக்கங்களாகக் கருதலாம்—ஏற்றுக் கொள்ளமுடியும். ஆனால் ஊகங்களின் அடிப்படையிலும், அனுமானத்தின் அடிப்படையிலும், தனிப்பட்ட நபர்களின் சொந்தக் கருத்துகளின்

அடிப்படையிலும், ஆதாரமற்ற விவரங்களின் அடிப்படையிலும், கருத்து கணிப்புகளை வெளியிடுவது விஞ்ஞான உணர்வற்ற பயனற்ற செயலாகும். திரு.எஸ்.எல்.ராவ் என்ற அந்த ஆராய்ச்சியாளர் புள்ளி விவரங்களின் அடிப்படை இல்லாமல் இப்படி பல கருத்துக்களை எதற்காகக் கூறியிருக்கிறார் என்பதுதான் இன்னும் எங்களுக்குப் புரியாத புதிராக இருக்கிறது.

தமிழகத்தின் தொழில் வளர்ச்சியில் பல்லாண்டுகளாக தன்னை ஈடுபடுத்திக் கொண்டு வரும் தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம் (டிட்கோ) இன்று வளர்ச்சிப் பாதையிலே வெற்றிநடை போட்டுக் கொண்டிருக்கிறது என்பதை இந்த நிறுவனம் ஈட்டியுள்ள லாபம் தெளிவுபடுத்தும் என்று நான் கருதுகின்றேன். 1992-93-ஆம் ஆண்டில் 345 இலட்சம் ரூபாய் மட்டுமே லாபத்தை ஈட்டியுள்ள டிட்கோ, 1993-94-ல் 392 லட்சம் ரூபாயை லாபமாக ஈட்டியுள்ளது. 1994-95-ஆம் நிதியாண்டிற்கான லாபத்தொகை 1,700 லட்சம் ரூபாய், அதாவது 17 கோடி ரூபாயாக உயரும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

அதேபோல, 1993-94-ஆம் ஆண்டில் டிட்கோ தனது கீழ் உள்ள நிறுவனங்களிடமிருந்து 631 லட்சம் ரூபாய் பங்கு ஆதாயத் தொகையாக Dividends-களைப் பெற்றுள்ளது. 1994-95-ஆம் ஆண்டிற்கு டிசம்பர், 1994 வரையில் இந்த ஆதாயப் பங்கு வருவாய் 1,078 இலட்சம் ரூபாயாக அதிகரித்துள்ளது.

டிட்கோ தொழில் திட்டங்களுக்கு நிதி ஆதாரங்களைத் திரட்டவும், அரசின் நிதியைச் சார்ந்திருக்கும் தன்மையைக் குறைக்கவும், தற்போதுள்ள நிறுவனங்களின் முதலீடுகளைத் திரும்ப பெறும் கொள்கை - Disinvestment Policy - ஒன்றைத் தீவிரமாக மேற்கொண்டு வருகின்றது. 1994-95-ஆம் ஆண்டில் Ushta-Te-Biotech மற்றும் R.R.Medi Pharma ஆகிய இரண்டு நிறுவனங்களிடமிருந்து தனது முதலீட்டைத் திரும்பப்பெற்றுள்ளது. ஆசியன் வளர்ச்சி வங்கியிடமிருந்தும் மற்ற நிதி ஆதாரங்களிடமிருந்தும் நிதி திரட்டவும் திட்டமிடப்பட்டுள்ளது. பொது மக்களிடமிருந்து குறித்த கால வைப்புத் தொகை பெறுவதிலும் தீவிர நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. கடந்த 3 ஆண்டுகளில் குறித்த கால வைப்புத் தொகை - Fixed Deposit - கடனீட்டு உறுதிப் பத்திரங்கள் - Bonds மூலம் டிட்கோ சேகரிக்கின்ற நிதி அதிகரித்து வருகின்றது.

பிற்பகல் 6.50

டிட்கோ-வால் உருவாக்கப்பட்டுள்ள நிறுவனங்களின் பங்குகளைப் பற்றி, பங்கு மாற்று நிலையம், ஸ்டாக் எக்ஸ்சேஞ்ச் பட்டியல் இட்டுள்ளது. 31-3-1994 அன்றைய நிலவரப்படி டிட்கோவின் முதலீடு மதிப்பு

119 கோடி ரூபாயிலிருந்த 406 கோடி ரூபாயாக, கிட்டத்தட்ட 302 சதவிகிதம் அதிகரித்துள்ளதையும் கோடிட்டுக் காட்டுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) டிட்கோவால் உருவாக்கப்பட்டுள்ள நிறுவனங்கள் ஒட்டுமொத்தமாக முடுக்கி விடப்பட்டதால் ஏற்பட்டுள்ள சிறப்பான செயல்பாட்டை இந்தப் புள்ளிவிவரங்கள் எடுத்துக் காட்டுகின்றன என்பதை பேராசிரியர் ராவ் போன்றவர்கள் உணர வேண்டும்.

பேராசிரியர் ராவ் அவர்கள் கூறியுள்ள கருத்துக்கள், தமிழ்நாட்டில் முதலீடு செய்வதற்கான சாதகமான சூழ்நிலைகள் எவ்வாறு இருக்கின்றன என்பதை அறியாமல், தவறான தகவல்களின் அடிப்படையிலும், குறுகிய மனம் படைத்த சிலர் கொடுத்த முலாம் பூசப்பட்ட தகவல்களின் அடிப்படையிலும் அமைந்துள்ளன.

தொழிலுக்கு உகந்த கட்டமைப்பு, இன்ப்ராஸ்ட்க்சர், எளிதான அலுவலக ஆணைகள், அதாவது ஈசி கிளீயரன்சஸ் மற்றும் சுமூகமான தொழிலாளர் நல்லுறவு ஆகியவையே மூலதனத்தைக் கவர்ந்து கொள்ளக்கூடிய முக்கியமான தேவைகள் என்பதை உணர்ந்ததோடு, தாராளமயமாக்கல் மற்றும் தனியார் மயமாக்கல் என்ற புதிய தொழில் வளர்ச்சிக் கொள்கையின் அடிப்படையில் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுத்து மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவியினுடைய தலைமையில் இருக்கிற அரசு சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு உறுப்பினர் பெருமக்கள் சிலபேர் பேசுகின்றபோது சில கருத்துக்களை எடுத்துச் சொன்னார்கள். அவற்றுக்கு எல்லாம் நான் சுருக்கமாக விளக்கம் சொல்ல விரும்புகிறேன். திரு. சஞ்சய் ராமசாமி அவர்கள் வேஸ்ட் கிரானைட் கற்களை மாற்றி டைல்ஸ் ஆக்குவதற்கு மைக்ரோஜி மெஷின் அமைக்கப்படுமா என்று கேட்டிருக்கிறார்கள். வேஸ்ட் கிரானைட் கற்களை மாற்றி டைல்ஸ் மற்றும் கனசதர கற்களை உற்பத்தி செய்வதற்கு ரூ. 50 லட்சம் தமிழ்நாடு கனிம நிறுவனத்தால் ஒதுக்கப்பட்டு பல்வேறு இயந்திரங்கள் தயாரிக்கும் இடத்திலிருந்து விலைப்பட்டியல் கோரப்பட்டுள்ளது. திரு. சஞ்சய் ராமசாமி அவர்கள் குறிப்பிட்ட மைக்ரோஜி மெஷின் கம்பெனியின் விலை உரிய விதிமுறைக்கு உட்பட்டிருந்தால் அவை வாங்கப்படும். இந்தத் தொழிற்சாலை இந்த ஆண்டில் செயல்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்

அதைப்போல, திரு. சஞ்சய் ராமசாமி அவர்கள் ஜப்பானில் அண்மையில் பூகம்பம் ஏற்பட்ட காரணத்தால் அங்கே கிரானைட்

கற்களுக்கு நல்ல மார்க்கெட் இருக்கிறது, தமிழ்நாடு கனிம வள நிறுவனத்தின் மூலம் ஒரு பிரதிநிதியை அனுப்பி அங்கு இருக்கிற மார்க்கெட் நிலவரத்தை பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென்ற ஒரு யோசனையைச் சொன்னார்கள். ஜப்பானில் பூகம்பம் ஏற்பட்டுள்ளதால் கிரானைட் கற்களுக்கு நல்ல மார்க்கெட் உள்ளது என்ற கருத்து சரிதானா என்பதை முதலில் சரிபார்க்க வேண்டும். ஏனென்றால் கறுப்பு கிரானைட் கற்களுக்கு ஜப்பானில் கணிசமாக விலை குறைந்துள்ளது. எனவே, அக்கூற்று சரியாக இருந்தால் டாமின் பிரதிநிதி ஒருவரை அனுப்பி பெரிய விற்பனைக்கு ஏற்பாடு செய்யப்படும்.

அதைப்போல நம்முடைய சிவகாசி சட்டமன்ற உறுப்பினர் திரு. பாலகங்காதரன் அவர்கள் திருத்தங்கல் குவாரியைப் பற்றி ஒரு தகவலைச் சொன்னார். அவர் சொன்ன தகவல் தவறானது என்பதை நான் திருத்த வேண்டுகிறேன். திருத்தங்கலில் கிடைக்கும் கிரானைட்டுக்கு அவர் சொன்னதுபோல் காஷ்மீர் ரோஸ் அன்று. சிவகாசி எல்லோ என்று பெயர். வழக்கு எல்லாம் முடிவு பெற்று தமிழ்நாடு கனிம நிறுவனம் டாமின் இந்தக் குவாரியில் மும்முரமாக தற்பொழுது கிரானைட் எடுக்கும் பணியில் ஈடுபட்டுள்ளது. 31-3-1995 அன்று முடிவுற்ற ஆண்டில் ரூ. 48 லட்சத்திற்கு சிவகாசி எல்லோ கிரானைட் கற்கள் விற்கப்பட்டுள்ளன என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். அதைப்போல மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லோரும் சில பாலங்கள் மற்றும் மத்திய மாநில நிறுவனங்கள், குடிநீர்த் திட்ட அமைப்புகள், கிணறுகள் ஆகியவற்றுக்கு 200 மீட்டர் சுற்றளவுக்குள் மணல் குவாரி செய்யக் கூடாது என்று தமிழ்நாடு சிறு கனிம விதிகளின்படி, அதாவது அரசாணை எண் 166, தொழில் துறை, நாள் 16-6-1994 வாயிலாக புதிய சட்ட விதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பெரும்பாலும் கள்ளத்தனமாக மணல் குவாரி செய்து, எடுத்துச் செல்லும் வாகனங்கள்மீது கட்டாயமாக ரூபாய் 10 ஆயிரம் அபராதமாக விதிக்கப்படும் என்ற நிலையை மாற்றி மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் செய்த அறிவிப்புக்கு இணங்க யார் எல்லாம் கள்ளத்தனமாக மணல் எடுக்கிறார்களோ அவர்களுக்கு திருத்தப்பட்ட விதிகள் மூலம் இப்பொழுது 1 லட்சம் ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டுள்ளதால் கள்ளத்தனமாக மணல் எடுப்பது குறைந்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) வெகு விரைவில் உரிய விதிகளின்படி, சிறு கனிம விதிகளின்படி டெண்டர் மூலம் ஆற்று மணல் எடுப்பதற்கு அனுமதி வழங்கப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அப்படி எல்லா ஆறுகளுக்கும், எங்கே நாம்

மணல் எடுக்கிறோமோ அங்கே எல்லாம் அனுமதி வழங்கிவிட்டால் இதுபோன்று கள்ளத்தனமாக மணல் எடுக்கிற செயல் குறைந்துவிடும் என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 6-55

அதைப்போல சிவகாசி சட்டமன்ற உறுப்பினர் திரு. பாலகங்காதரன் அவர்கள் சாத்தூர் தாலூகாவையும், ஓமலூர் சட்டமன்ற உறுப்பினர் திரு.கிருஷ்ணன் அவர்கள் ஓமலூர் தாலூகாவையும் பின்தங்கிய வட்டமாக அறிவிக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அதைப் பற்றி பின்னால் என்னுடைய அறிவிப்பில் சொல்ல இருக்கிறேன். அதைப்போல பழனி தொகுதி சட்டமன்ற உறுப்பினர், சட்டமன்ற உறுப்பினர் திரு. துரைமுருகன் அவர்கள் மூலமாக பழனியைத் தொழிலில் பின்தங்கிய வட்டமாக அறிவிக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். பழனி தாலூக்காவைப் பொறுத்தவரையில் தொழிலில் பின்தங்கிய வட்டத்திற்கான குறைந்தபட்சத் தகுதி பழனி வட்டத்தில் இல்லாத காரணத்தால் அது பின் தங்கிய வட்டம் என்ற அறிவிப்பிலிருந்து எடுக்கப்பட்டது என்பதைத் திரு. சுப்புரத்தினம் அவர்களுக்கும், திரு. துரைமுருகன் அவர்களுக்கும் வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன். இருந்தபோதிலும் அவர் முழுக்க முழுக்க வருத்தப்படாமல் இருக்க பின்னாலே புதிய அறிவிப்பு வெளியிட இருக்கிறேன் என்பதை இந்த நேரத்தில் அட்வான்சாகத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப்போல நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் திரு. துரைமுருகன் அவர்கள் பல்லடம், பொள்ளாச்சி ஆகியவை தொழிலில் பின்தங்கிய வட்டங்களாக இருக்கிற நிலையில், காலக்கெடு முடிகின்ற காரணத்தால், தொடர்ந்து அவை பின்தங்கிய வட்டங்களாக இருக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார். அந்த 2 வட்டங்களும் எப்போது பின்தங்கிய வட்டங்களுடைய நிலையிலிருந்து மாறும் என்பதை இதுவரை அரசு கவனிக்கவில்லை. ஊரிலே ஒரு பழமொழி சொல்லுவார்கள். தூங்குகிற மணியக்காரரைத் தட்டி எழுப்பினால், அவர் போன வருட வாய்தாவையும் சேர்த்துக் கேட்பார் என்று சொல்லுவார்கள். அதைப்போல இப்போது அரசே அதில் அக்கறை எடுக்காத நேரத்தில் திரு. துரைமுருகன் அவர்களும், திரு.வி.பி. சந்திரசேகர் அவர்களும் ஏன் போட்டி போட்டுக்கொண்டு, அக்கறை எடுக்கிறார்கள் என்று தெரியவில்லை. இருந்தபோதிலும் அவர்கள் ஆதங்கப்படுகிற அளவுக்கு எதுவும் நடக்காது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த இரண்டு வட்டங்களும் தொடர்ந்து அதே நிலையில், பின்தங்கிய வட்டம் என்ற நிலையில் இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஓமலூர் சட்டமன்ற உறுப்பினர் திரு. கிருஷ்ணன் அவர்கள் சிப்காட் கிளைகளை மாவட்டந்தோறும் அமைக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். சிப்காட் என்பது பெரிய, நடுத்தரத் தொழில்களுக்கு முதலீடு செய்கிற ஒரு அமைப்பு. எனவே இப்படிப்பட்ட நிலை இருக்கிற காரணத்தால் சிப்காட்டினுடைய தலைமை அலுவலகத்தில் எல்லாக் கடனையும் வழங்குகிற காரணத்தால், ஒவ்வொரு மாவட்டத்திலும் கிளை அமைக்க வேண்டிய நிலைமை தற்போது இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நம்முடைய ஓமலூர் சட்டமன்ற உறுப்பினர் திரு. கிருஷ்ணன் அவர்கள் நாமக்கல்லிலே ஒரு முட்டைத் தொழிற்சாலை அமைக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். திருமதி பழனியம்மாள் பேசுகின்ற போதே இடையிலே எழுந்து நான் இதற்கு பதில் சொல்லியிருக்கிறேன். நம்முடைய ஓமலூர் சட்டமன்ற உறுப்பினர் திரு. கிருஷ்ணன் அவர்கள் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக சட்டமன்ற உறுப்பினராக இருந்து கொண்டு; அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு சேலம் மாவட்டத்தில் எந்தவிதத் தொழிலும் ஏற்படுத்தவில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். அவருடைய கூற்றை மறுத்து, இந்த அறிவிப்பை வெளியிடுகிறேன். அவருடைய தொகுதிக்குப் பக்கத்தில் உள்ள மேச்சேரியில் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் பொறுப்பேற்றதற்குப் பின்னால், பொத்தனேரி எம். காளிப்பட்டியில் ரூ. 600 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்தோடு சதர்ன் அயர்ன் ஸ்டீல்—சிஸ்கால்— என்ற கம்பெனி மூலம் ஒருங்கிணைந்த இருப்புத் தொழிற்சாலை நிறுவுவதற்கு அரசு அனுமதி அளித்து, இப்போது பணிகள் நடைபெற்று வருகின்றன என்பதை அவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அங்கே மின்னிரும்பு தொழிற்சாலை, எஃகு இரும்பு தொழிற்சாலை, எஃகு உருட்டு ஆலை, கரியடுப்புப் பிரிவுகள் கொண்டதாக அது இருக்கும். மின்னிரும்பு தயாரிக்கும் தொழிற்சாலை இந்த ஆண்டு ஜூன் மாதத்தில் தொடங்கப்படும் என்பதையும், எஞ்சிய பிரிவுகள் அடுத்து ஆண்டு செயல்படுத்தப்படும் என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் திரு. கிருஷ்ணன் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். அவருடைய கருத்தை அவர் மாற்றிக் கொள்ள வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

ஆலங்குளம் சிமெண்ட் தொழிற்சாலையிலிருந்து மாசுக் கட்டுப்பாட்டு வாரிய நிபந்தனைகளுக்கு உட்படாமல் அங்கே மாசு படிவதாக உறுப்பினர் திரு. பாலகங்காதரன் அவர்கள் குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறார்கள்.

அவர் சொல்லிய கோரிக்கைமீது அரசு உரிய நடவடிக்கை எடுத்து, அது கட்டுப்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 7-00

மாண்புமிகு உறுப்பினர் திரு. பாலகங்காதரன் டான்செம் பற்றிச் சொன்னார்கள். தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனத்தின் மூலம் இருக்கிற அந்த யூனிட்டுகளில் உள்ள அந்த இயந்திரங்கள் எல்லாம் பழைய இயந்திரங்கள், பழுது பட்டவைகள். அவற்றையெல்லாம் புதுப்பித்து நவீன மயமாக்கினால்தான் இப்போதுள்ள தேவையை நவீன முறையில் உற்பத்தி செய்து பூர்த்தி செய்யமுடியும். அதற்கு 300 கோடி ரூபாய் தேவை என்று அரசு மதிப்பீடு செய்துள்ளது. அரசே அந்த 300 கோடியையும் திரட்டி அந்த ஆலையை நவீனப்படுத்த முடியும் என்ற நிலை இல்லாத காரணத்தால்தான் அந்த டான்செம் நிறுவனத்தை அசோசியேட் செக்டார் என்கின்ற இணைத் துறை மூலம் ஒரு கூட்டாளியைத் தேர்ந்தெடுத்து அவர்கள் மூலம் நிதி கொண்டு வந்து மாடர்னைசேஷன் செய்ய வேண்டுமென்ற நிலைமையை அரசு எடுத்துள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அப்படிச் செய்கின்றபோது எந்தக் காரணத்தைக் கொண்டும் அங்குள்ள தொழிலாளர்கள் பாதிக்கப்பட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதிக்கமாட்டார்கள் என்பதையும் திரு. பாலகங்காதரன் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

ஸ்டாண்டர்டு மோட்டார் தொழிற்சாலையில் இருக்கின்ற பணம் அந்தத் தொழிலாளர்களுக்குப் போய்ச் சேரவில்லை என்று திரு.தம்புசாமி அவர்களும் திரு பழனிசாமி அவர்களும் குறிப்பிட்டுச் சொன்னார்கள். ஸ்டாண்டர்டு மோட்டார் தொழிற்சாலையில் தானாக முன்வந்து ஓய்வுபெறும் திட்டத்தின்கீழ் ரூ. 5.50 கோடி 939 தொழிலாளர்களுக்கு ஒதுக்கப்பட்டது. இதன்மூலம் 777 ஓய்வு பெற்ற பணியாளர்களுக்கு 4.46 கோடி ரூபாய் இதுவரையில் அளிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 1.04 கோடி ரூபாயை இரண்டு காலாண்டுத் தவணைகளாக அளிக்க இருந்த சமயத்தில் அந்த தொழிற்சாலையைப் புனரமைக்க தொழில் மற்றும் நிதி புனரமைப்பு நிறுவனத்தின் (பி.ஐ.எப்.ஆர்) முன்பு சென்றதால், மீதித் தொகையைக் கொடுக்காமல் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

சட்டமன்ற உறுப்பினர்கள் டாக்டர் கோபால் அவர்களும் திரு. தம்புசாமி அவர்களும் நரிமணத்தில் ஓ.என்.ஜி.சி. எடுக்கும் எரிவாயு போதிய அளவுக்குக் கிடைக்காததால் அந்த வாயுவைப் பயன்படுத்தி அங்கே தொழிற்சாலை அமைக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள்.

இந்த வாயு போதுமான அளவுக்கு அங்கே கிடைக்காததால் அங்கே தொழிற்சாலை அமைப்பதற்கு இல்லை. அதைப்போல அவர்கள் காஸ்டிக் சோடா தயாரிக்கும் தொழிற்சாலை பற்றிக் கேட்டார்கள். நன்னிலம் பகுதியில் காஸ்டிக் சோடா தொழிற்சாலை அமைப்பதற்கு ஏற்கெனவே மூன்றாண்டுக் காலத்திற்கு முன்பு முடிவெடுக்கப்பட்டது. காஸ்டிக் சோடா தயாரிக்கும் தொழிலில் இப்போது ஒரு மந்த நிலை ஏற்பட்டிருக்கிற காரணத்தால் அதற்கு நிதியுதவி அளிக்க நிதி நிறுவனங்கள் முன்வர வில்லை. இருந்தாலும் எதிர்காலத்தில் அது பரிசீலிக்கப்படும் என்பதை அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். ஓ.என்.ஜி.சி. நிறுவனத்திற்கு நிலம் கொடுத்தவர்களுக்கு இழப்பீட்டுத் தொகையும் வாரிசுகளுக்கு வேலைவாய்ப்பும் இல்லை என்று டாக்டர் கோபால் அவர்கள் சொன்னார்கள். ஓராண்டுக்கு முன்பு நான் நாகப்பட்டினம் சென்று சம்பந்தப்பட்ட அதிகாரிகளை அழைத்துப் பேசி, நிலம் கொடுத்தவர்களின் வாரிசுகளுக்கு வேலை வாய்ப்புகள் அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டேன். அவர்களும் பரிசீலிப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். இழப்பீட்டுத் தொகையும் கொடுக்க அந்த நிறுவனத்தார் ஒத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். டாக்டர் கோபால் அவர்கள் மயிலாடுதுறையில் நடிப்பிசைப் புலவர் கே.ஆர்.ராமசாமி கூட்டுறவு சர்க்கரை ஆலையில் எரி சாராயம் வடிப்பது குறித்து கேட்டுக்கொண்டார்கள். அதை அரசு பரிசீலிக்கும். நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் திரு. சி. கிருஷ்ணன் சேலத்தில் காகித ஆலை நிறுவப்பட வேண்டுமென்று கேட்டார்கள். அது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஓமலூர் சர்க்கரை ஆலை வேண்டுமென்றும் அவர்கள் கேட்டார்கள். ஒரு சர்க்கரை ஆலை அமைப்பதற்குப் பல்வேறு தகுதிகள் வேண்டும். அந்தத் தகுதிகள் எல்லாம் ஓமலூரில் இல்லை. ஆகவே இப்போது அதைப் பரிசீலிப்பதற்கு இல்லை. அதைப்போல சேலத்தில் உள்ள டான்மாக் நிறுவனத்தில் இருக்கும் தொழிலாளர்களை அரசு ஊழியர்களாக ஆக்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர்கள் கேட்டுக்கொண்டார்கள். அது ஒரு அண்டர்டேக்கிங் ஆக இருப்பதால் அவர்களை அரசு ஊழியர்களாக ஆக்குவதற்கு இல்லை.

பிற்பகல் 7-05

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 1992-ல் அறிவித்த புதிய தொழில் கொள்கையின்படி புதிய தொழில் பிரிவுகளில் 30 விழுக்காட்டுக்கு மேல் பெண்களுக்கு வேலை வாய்ப்பளிக்க ரூ. 3 லட்சம் உயரளவுக்கு உட்பட்ட 5 விழுக்காடு கூடுதல் மானியமாக அறிவிக்கப்பட வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் கிருஷ்ணன் அவர்கள்

கேட்டிருக்கிறார்கள். அடுத்து நம்முடைய மாண்புமிகு பிற்பட்டோர் நலத் துறை அமைச்சருடைய நெருங்கிய நண்பர் மாண்புமிகு அப்பு நடேசன் அவர்கள் கன்னியாகுமரியில் டயர் தொழிற்சாலை அமைப்பது என்னாவாயிற்று என்று கேட்டார்கள். (சிரிப்பு) அவருக்கு நான்...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் சொல்வதைப் பார்த்தால் திரு. அப்பு நடேசன் அவர்கள் பிற்பட்டோர் நலத் துறை அமைச்சருக்கு மட்டும் தான் நெருங்கிய நண்பர் என்பதைப் போல வருகிறது. அவர் எல்லோருக்கும் நெருங்கிய நண்பர். (சிரிப்பு)

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எப்படிப்பட்ட நெருக்கம் இருக்கிறது என்பதை மாண்புமிகு பிற்பட்டோர் நலத் துறை அமைச்சரிடம் தனியாக நீங்கள் கேட்டால் சொல்வார்கள் (சிரிப்பு) இந்த ரப்பர் தொழிற்சாலை அமைக்க வேண்டுமென்று- டிட்கோ நிறுவனம் இந்தியாவிலே மிகப்பெரிய ஒருங்கிணைந்த ரேடியல் டயர் தொழிற்சாலை ஒன்றைத் தொடங்க வேண்டுமென்று திட்டமிடப்பட்டு இதிலே கார்கள், பஸ்கள் மற்றும் லாரிகளுக்குத் தேவையான ரேடியல் டயர்களைத் தயாரிக்கும் நோக்கத்தோடு சாத்தியக்கூறுகள் தாயரிக்கப்பட்டு வருகின்றன. இது இந்த மாதத்தில் முடிவடைந்து மேல் நடவடிக்கை எடுக்கப்படும். இந்தத் தொழிற்சாலை கன்னியாகுமரி மாவட்டம், தோவாளை வட்டம், செண்பகராமன்புதூரில் (மேசையைத் தட்டும் ஒலி) ரப்பர் அதிகமாக விளையும் பகுதியில் அமைக்கப்படுகிறது. இந்தத் தொழிற்சாலை ஆண்டு ஒன்றுக்கு 15 இலட்சம் ரேடியல் டயர்களை உற்பத்தி செய்யும். இந்தத் தொழிற்சாலையின் திட்ட மதிப்பீடு ரூபாய் 400 கோடி. இது அமெரிக்கன் டயர்ஸ் என்கிற அமெரிக்க நிறுவனத்தைக் கூட்டு நிறுவனமாகக் கொண்டு ஆரம்பிக்கப்படும். மத்திய அரசின் வெளிநாட்டு முதலீட்டு வாரியம் -- Foreign Investment Board - F.I.B. அனுமதி அளித்துள்ளது. இதற்குத் தேவைப்படும் சுமார் 70 ஏக்கர் நிலம் செண்பகராமன்புதூரில் கையகப்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்த டயர் தொழிற்சாலைக்கு உலகத்திலேயே மிகச் சிறந்த டயர் கம்பெனிகளில் ஒன்றான ஒரு ஐரோப்பிய கம்பெனியின் தொழில் நுட்பம் பயன்படுத்தப்பட்டுள்ளது. விரைவில் அந்தத் தொழிற்சாலை அமைக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் திரு. அப்பு நடேசன் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப்போல மாண்புமிகு உறுப்பினர் திரு. கிருஷ்ணன் அவர்கள் சேலத்தில் இருக்கிற டான்மேக் தொழிற்சாலையில் பணியாற்றுகிற பணியாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருப்பதாகக் குறிப்பிட்டுச்

சொன்னார்கள். இப்போது அதில் பேச்சுவார்த்தை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. வெகுவிரைவில் அந்தப் பேச்சுவார்த்தை முடிவுபெற்று மீண்டும் தொழிலாளர்கள் வேலைக்குத் திரும்புகிற முயற்சியில் தொழிலாளர் நல ஆணையமும், மத்திய தொழிலாளர் நல ஆணையமும் முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த டான்மேக் நிறுவனம் மாண்புமிகு உறுப்பினர் கிருஷ்ணன் அவர்களுடைய தொகுதியில் இருக்கிற காரணத்தால் அவர்களும் ஒத்துழைப்பு தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரையில் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு தொழிற் துறையில் என்னென்ன செய்திருக்கிறது என்பதை எடுத்துச் சொன்னேன். நடந்தவைகளைச் சொல்லியாயிற்று. இனி நடக்க வேண்டியவைகளைச் சொல்லியாக வேண்டும்.

மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்களுடைய மேலான அனுமதியுடன் தொழில் துறையில் கீழ்க்கண்ட அறிவிப்புகளை வெளியிட விரும்புகிறேன். சில உறுப்பினர்கள், பேரவைத் தலைவர் உள்பட, தங்களுடைய பகுதிகளை தொழிலில் பின்தங்கிய வட்டமாக அறிவிக்க வேண்டுமென்று பல்வேறு சந்தர்ப்பங்களில் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதன் அடிப்படையில், அரசு 83 தாலுக்காக்களை தொழிலில் பின்தங்கியவை எனவும், 32 தாலுக்காக்களை தொழிலில் மிகவும் பின்தங்கியவை எனவும் ஏற்கெனவே அறிவித்துள்ளது. அதிலே மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுடைய தொகுதியில் அடங்கியிருக்கிற பேரையூர் வட்டமும் ஏற்கெனவே அறிவிக்கப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதை அறிவிக்க வேண்டிய அவசியமே இல்லை. பின்தங்கியதே, (குறுக்கீடு) அறிவிக்காமலேயே பின்தங்கி இருக்கிறது.

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி: இப்போது புதியதாக இந்த ஆண்டு தர்மபுரி மாவட்டத்தில் புதியதாக உருவாக்கப்படும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய தொகுதியை உள்ளடக்கியிருக்கிற போச்சம்பள்ளி தாலுக்காவை தொழிலில் பின்தங்கிய தாலுக்கா எனவும் (மேசையைத் தட்டும் ஒலி) அதைப்போல மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்களுடைய தொகுதியை உள்ளடக்கியிருக்கிற இராமநாதபுரம் மாவட்டம், கடலாடி வட்டத்தை தொழிலில் மிகவும் பின்தங்கிய தாலுக்காவாகவும் அறிவிக்க வேண்டுமென்று (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணை வழங்கி இருக்கிறார்கள்.

சென்ற ஆண்டு வணிகவரித் துறை அமைச்சர் அவர்கள் மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களிடம், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் போராடி, அவருடைய வட்டத்தை வருவாய்த் துறையில் பின்தங்கிய வட்டம் என்று ஒப்புதல் வாங்கினார்கள். இந்த ஆண்டு தொழில் துறையில் அவருடைய வட்டத்தை பின்தங்கிய வட்டமாக அறிவிப்பதற்கு (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டு இருக்கிறார்.

பிற்பகல் 7-10

இப்படிப் பல்வேறு வட்டங்களைப் பின்தங்கிய வட்டங்கள், மிகவும் பின்தங்கிய வட்டங்கள் என்று அறிவித்திருந்தாலும், அதில் ஒரு சில குறைபாடுகள் இருக்கின்றன. உதாரணமாக நம்முடைய சுப்புரத்தினம் போன்றவர்களுக்கு அந்தக் குறைபாடு இருக்கிறது. காரணம் ஒரு வட்டம் பின்தங்கிய அல்லது மிகவும் பின்தங்கிய வட்டம் என்று சொன்னால், அந்த வட்டத்திலே குறைந்தபட்சம் 3 ஒன்றியங்கள் இருக்கும். குறிப்பாக என்னுடைய தொகுதியான கரூர் வட்டத்தில் 3 ஒன்றியங்கள் இருக்கின்றன. அதில் கரூர் ஒன்றியம் மாத்திரம் தொழில் துறையில் முன்னேறிய பகுதியாக இருக்கிறது. ஆகவே கரூர் ஒன்றியம் முன்னேறிய பகுதியாக இருக்கின்ற காரணத்தாலே, மீதியிருக்கின்ற 2 ஒன்றியங்கள் தொழில் துறையில் பின்தங்கிய பகுதிகளாக இருக்கின்றன. ஆகவே, இந்த 3 ஒன்றியங்களும் அந்த வட்டத்தில் இருக்கிற காரணத்தால், அந்த விதிமுறைகளுக்கு உட்பட்டுப் போகிற காரணத்தால் ஒட்டுமொத்தமாக கரூர் வட்டம் தொழில் துறையில் முன்னேறிய வட்டம் என்று சொல்லி, மீதியிருக்கிற அந்த 2 ஒன்றியங்களுக்கும் அந்தப் பலன் கிடைக்காமல் போகிறது என்று சொல்லி பல்வேறு கோரிக்கைகள் கடந்த 3 ஆண்டுக் காலமாக வந்து கொண்டிருப்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உணர்ந்து, இந்த ஆண்டு முதல் வட்டங்கள் என்பதற்குப் பதிலாக ஊராட்சி ஒன்றிய அளவில் பின்தங்கிய மற்றும் மிகவும் பின்தங்கிய பகுதிகள் என்று அறிவித்து, தொழில் வளர்ச்சியைப் பெருக்க வேண்டும் என்று ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த அளவில், ஊராட்சி ஒன்றியங்கள் தொழிலில் பின்தங்கிய மற்றும் மிகவும் பின்தங்கிய ஒன்றியங்கள் என்று எப்படி எடுப்பது என்பதற்கு உயர்மட்டக் குழு உடனடியாக அமைக்கப்படும். அந்தக் குழுவினுடைய அறிக்கையை வெகு விரைவில் கொடுக்க வேண்டும் என்று கேட்டு இருக்கிறேன். அந்த அறிக்கை கிடைத்தவுடன்,வட்டங்களுக்குப் பதிலாக ஊராட்சி ஒன்றியங்கள் தொழிலில் பின்தங்கிய அல்லது மிகவும் பின்தங்கிய பகுதிகளாக வரும். அப்போது மாண்புமிகு உறுப்பினர் சுப்புரத்தினம் போன்றவர்களுடைய குறைகள் நிவர்த்தி செய்யப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதைப்போல பிற்படுத்தப்பட்ட மக்களுடைய தலைவராக விளங்கிய மறைந்த பெரியவர் இராமசாமி படையாச்சியார் அவர்களுடைய பெயரில் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் தென் ஆற்காடு மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து, விழுப்புரம்-இராமசாமி படையாச்சியார் மாவட்டத்தை உருவாக்கினார்கள். அந்த மாவட்டம் தொழிலில் பின்தங்கிய மாவட்டமாகும். அந்த மாவட்டத்திலுள்ள 8 தாலுக்காக்களில் 7 தாலுக்காக்கள் தொழிலில் பின்தங்கிய தாலுக்காக்களாகவும், மற்றொரு தாலுக்கா தொழிலில் மிகவும் பின்தங்கிய தாலுக்காவாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. ஆக, மொத்தம் 8 தாலுக்காக்களுமே, பின்தங்கிய, மிகவும் பின்தங்கியிருக்கிற காரணத்தால்தான், அந்த மாவட்டம் முழுவதுமே தொழிலில் பின்தங்கிய மாவட்டமாக இருக்கிறது. ஆகவே, மாநிலத்தில் எல்லாப் பகுதிகளிலும் சீரான தொழில் வளர்ச்சி இருக்க வேண்டும் என்ற கொள்கையின் அடிப்படையில், அந்த மாவட்டத்தில், தமிழ்நாடு தொழில் அடிப்படை வசதி மேம்பாட்டுக் கழகம், அதாவது 'டாசிட்' மூலம் ஒரு புதிய தொழிற்பேட்டையை உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அமைச்சர் திரு. ஆனந்தன் கைத்தட்டாமல் இருக்கிறார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அமைச்சர் ஆனந்தன் அவர்கள், இரண்டு மாவட்டங்களையும் இப்படி அறிவிக்கவில்லையே என்கிற நிலையில் இருக்கிறார். அவர், இரண்டு மாவட்டத்தையும் சேர்ந்தவர்.

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி: 1992 ஆம் ஆண்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்ட மாநில புதிய தொழில் கொள்கை அறிவிப்பில் ஏற்றுமதி வளர்ச்சி மற்றும் ஏற்றுமதியை அடிப்படையாகக் கொண்ட தொழில்கள், தனிக் கவனம் செலுத்தப்படவேண்டிய துறைகளில் ஒன்றாகக் குறிப்பிட்டுள்ளது. 1993-94 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டின் ஏற்றுமதி சுமார் ரூ.9082 கோடியாகும். இது நாட்டின் மொத்த ஏற்றுமதியில் 13 சதவீதமாகும். தென் மாநிலங்களில் தமிழ்நாடு ஏற்றுமதியில் முதலிடத்தையும், ஏற்றுமதி அடிப்படைத் தொழில்களை நிறுவுவதில் மூன்றாவது இடத்தையும் பெற்றுள்ளது. ஏற்றுமதியாளர்கள் பயன்பெறும் வகையில், கும்மிடிப்பூண்டியில் சுமார் 211 ஏக்கர் நிலப்பரப்பில் ரூ. 20 கோடி செலவில் ஒரு ஏற்றுமதி வளர்ச்சி தொழிற் பூங்கா (Export Promotion Industrial Park) அமைக்க திட்டமிடப்பட்டு, பணிகள் வேகமாக நடைபெற்று வருகின்றன. ஏற்றுமதிப் பொருட்களின் வகைகளை அதிகரிக்கவும், இரண்டாயிரமாவது ஆண்டில் தமிழகத்தின் ஏற்றுமதி

ரூ. 25,000 கோடி என்ற இலக்கை எட்டவும், தேவையான பல்வேறு செயல் திட்டங்களை உள்ளடக்கிய மாநிலத்தின் ஏற்றுமதிக் கொள்கை (State Export Policy) ஒன்றை வெகு விரைவில் வெளிக்கொணர திட்டமிட்டிருக்கிறோம்.

அதேபோல், தமிழ்நாட்டில் பொதுத் துறை நிறுவனங்களில் மிகவும் அதிக லாபத்தை ஈட்டக்கூடியது தமிழ்நாடு செய்தித்தாள் நிறுவனம். இந்த நிறுவனம் மூலம் அதிகமாக நிதி திரட்டப்படுகிறது என்ற மகிழ்ச்சி அரசுக்கு இருப்பதோடு எனக்கும் இருக்கிறது. காரணம், இந்த ஆலை அடியேனுடைய தொகுதியில் இருக்கிறது என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அந்த ஆலையினுடைய விரிவாக்கத் திட்டத்திற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 22-1-1994 அன்று அடிக்கல் நாட்டினார்கள். அதற்குப் பிறகு, ஆண்டு ஒன்றுக்கு 1 லட்சத்து 80 ஆயிரம் டன்களாக அந்த உற்பத்தி உயரும். எகிப்து, ஜோர்டான், துபாய், ஆஸ்திரேலியா போன்ற நாடுகளுக்கு இந்த நிறுவனத்தின் மூலம் காகித ஏற்றுமதி செய்யப்படுகிறது. எனவே இந்த நிலைமையைக் கருத்தில் கொண்டு, தமிழ்நாட்டில் இன்னொரு புதிய காகித ஆலை நிறுவ வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். ஆகவே இதற்கான சாத்தியக்கூறு அறிக்கை தயாரிக்கும் பணி ஆலோசனை நிறுவனம் (கன்சல்டன்ட் கம்பெனி) ஒன்றிடம் கொடுக்கப்பட்டுள்ளது. அந்த அறிக்கை விரைவில் கிடைக்கவேண்டுமென்று கேட்கப்பட்டுள்ளது. அந்த அறிக்கை கிடைத்தவுடன் தமிழ்நாட்டில் அதிகமான கரும்பு ஆலைகள், சர்க்கரை ஆலைகள் இருக்கிற ஏதாவது ஒரு மாவட்டத்தில் இந்த ஆலை துவங்கப்படும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே மாண்புமிகு உறுப்பினர்கள் எந்த மாவட்டத்தில் அதிகமான தொழிற்சாலைகள் இருக்கின்றன என்பதைக் கேட்டுத் தெரிந்துகொண்டால் நல்லது என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

இரவு 7-15

அடுத்து தமிழ்நாடு மின் அணு நிறுவனத்தின் (எல்காட்) மூலம் புதிய திட்டங்கள். தமிழ்நாட்டில் வேலைவாய்ப்பைப் பெருமளவு உருவாக்க வேண்டுமென்ற நோக்கில், தொழில்நுட்பப் பயிற்சி பெற்ற ஏராளமான மனிதவளத்தைப் பயன்படுத்தி, மின்னணு சாதனங்களைப் பழுதுபார்க்கவும், பராமரிக்கவும், 100 மின்னணு சேவை மையங்களை மாநிலத்தின் பல்வேறு இடங்களில் தமிழ்நாடு மின்னணு நிறுவனம் நிறுவ உத்தேசித்துள்ளது. மின்னணு தொழில்நுட்பம், அடிப்படை வசதிகள், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி ஆகியவற்றில் புதிய முதலீடுகளை ஈர்க்கும்

வகையில் உயர் தொழில்நுட்ப மின்னணுவியல் மையம் (ஹை-டெக் எலக்ட்ரானிக் சென்டர்) ஒன்று கோயம்பத்தூர் மாவட்டத்தில் சுமார் 100 ஏக்கர் நிலப்பரப்பில் அமைக்கப்படும். அதேபோல் மின்னணுவியல் வளாகம் ஒன்று சேலம் மாவட்டத்தில் அமைக்கப்படும்.

தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் (டிட்கோ) புதிய திட்டங்கள். தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம், 1995-ஆம் ஆண்டில் 19 புது தொழில் திட்டங்களை ரூ. 5805.93 கோடி மதிப்பில் உருவாக்க உள்ளது. இவைகளில், தூத்துக்குடியில் 500 மெகாவாட் திறன் கொண்ட அனல் மின் நிலையமும் அடங்கும். அத்துடன் சமீபத்தில் மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் சட்டமன்றப் பேரவையில் ஒரு அறிவிப்பினைச் செய்தார்கள். ஆண்டு ஒன்றுக்கு 84 லட்சம் டன் திறன் கொண்ட ஒருங்கிணைந்த இரும்பாலை திட்டம் (இன்டர்கிரேடட் ஸ்டீல் பிளான்ட்ஸ்) குறிப்பிடக் கூடிய ஒன்றாகும். இந்த ஆலையின் முதல் பகுதியை ரூ. 3300 கோடி மதிப்பில் ஆதித்ய பிர்லா குருப்பைச் சேர்ந்த கிராஸிம் இண்டஸ்ட்ரீஸ் நிறுவனத்துடன் கூட்டாக தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் அமைக்க உள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இது திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டம் மற்றும் சேலம் மாவட்டத்தில் உள்ள இரும்பு தாதுப் படிவங்களை ரூ. 500 கோடி செலவில் மேம்படுத்தும் திட்டம் ஒன்றை டிட்கோ ஆய்வு செய்துவருகிறது. இந்த இரு திட்டங்களும் மேற்கூறிய நிறுவனத்தால் செயல்படுத்தப்படும்.

தொழில் மண்டலம் என்று கண்டறியப்பட்ட பகுதிகளில், விவசாய நிலங்களைத் தொழில்களுக்கான நிலங்களாக மாற்ற நடைமுறையிலுள்ள வழிமுறைகளை எளிதாக்க உத்தேசிக்கப்பட்டு, தொழில் மண்டலங்கள் மற்றும் அந்தந்த நகராட்சி மற்றும் நகர திட்ட அதிகாரிகள் மற்றும் எந்தத் திட்டமும் இல்லாத பகுதிகளைப் பொறுத்தவரை, விவசாய நிலங்களை தொழில் நிலங்களாக மாற்றி மத்திய அரசு நிர்ணயிக்கும் பொதுவான வழிகாட்டி நெறிகளுக்குட்பட்டு அனுமதி வழங்கப்படும், இந்த செயல் திட்டம் மராட்டிய மாநிலத்திலுள்ள திட்டத்தை அடிப்படையாகக் கொண்டது.

நிரந்தர பன்னாட்டு தொழில்-வணிகப் பொருட்காட்சி மையம். (இன்டர்நேஷனல் டிரேட் பேர் காம்ப்ளக்ஸ்) தற்போது பன்னாட்டு தொழில்-வணிகக் காட்சிகள் நடத்த புதுடில்லியில் மட்டுமே (பிரகதி மைதானத்தில்) ஒரு நிரந்தர தொழிற்காட்சி மையம் உள்ளது. இதுபோன்ற ஒரு நிரந்தர தொழிற்காட்சி மையம் ஒன்றினை தமிழ்நாட்டிலுள்ள ஏற்றுமதியாளர்களும், தென் மாநிலங்களில் உள்ள ஏற்றுமதியாளர்களும்

பயன்பெறும்வகையில், சென்னையில் அமைக்கவேண்டுமென்பது நீண்டகாலமாக இருக்கிறத் திட்டம். எனவே, சென்னைப் புறநகர்ப் பகுதியில் ஒரு நிரந்தர தொழிற்காட்சி மையம் ஒன்றை அமைக்கத் திட்டமிட்டுள்ளோம். தமிழ்நாடு தொழில் அடிப்படை மேம்பாட்டுக் கழகம், இந்திய ஏற்றுமதியாளர்களின் சங்கங்களின் இணையம் மற்றும் பன்னாட்டு தொழிற்காட்சிகளைச் சொந்தமாக உருவாக்கி நடத்த அனுபவம் பெற்ற வெளிநாட்டு வாழ் கூட்டாளி ஆகியவர்கள் கூட்டாக இணைந்து, சென்னை பன்னாட்டு காட்சியகம் (மெட்ராஸ் இண்டர்நேஷனல் எக்ஸ்போசிஷன் லிமிடெட்) என்ற பெயரில் நிரந்தர தொழிற்காட்சி மையம் (பர்மனென்ட் எக்சிபிஷன் சென்டர்) ஒன்றை சொந்தமாக நிறுவி, இயக்க திட்டமிட்டுள்ளன. இந்தத் தொழிற்காட்சி மையம் சென்னை புறநகர்ப் பகுதியில், சுமார் 35 ஏக்கர் பரப்பில் ரூ. 70 கோடி செலவில் அமைக்கப்படும்.

பிற்பகல் 7-20

அதுபோல் பிசினஸ்-கம்-பைனான்ஷியல் டிஸ்ட்ரிக்ட் அட் மெட்ராஸ். சென்னை வர்த்தகம் மற்றும் நிதி மாவட்டம் அமைத்தல். இந்தியா மற்றும் வெளிநாட்டு கம்பெனிகளின் கவனத்தில், தமிழ்நாடு மிக முக்கியமான முதலீட்டு இலக்குகளில் ஒன்றாக உருவாகி வருகிறது.

இந்தியாவின் வர்த்தக தலைநகரமான 'பம்பாய்' மிகவும் விலை உயர்ந்த மையமாக மாறிவிட்டது. கட்டிடங்களின் விலை மற்றும் வாடகை கற்பனைக்கு எட்டாத அளவு உயர்ந்து விட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆரம்பித்த போது அரை மணி நேரத்தில் முடித்தேவிடலாம் என்று அறை கூவல் விட்டீர்கள். இப்போது ஒரு மணி நேரம் ஆகிவிட்டது.

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி: இன்னும் 5 நிமிடம் தான். எனவே பம்பாய் பெருநகருக்கு மாற்றாக பல பெரிய தொழில் நிறுவனங்களும், நிதிநிறுவனங்களும் வேறு ஒரு பெருநகரை (மெட்ரோபாலிடன் சிட்டி) தங்களின் தலைமையிடமாக தற்சமயம் தேடிக் கொண்டிருக்கிறார்கள். இந்தச் சூழ்நிலையை சாதகமாக எடுத்துக்கொண்டு பன்னாட்டு விமானங்களையும் பெரிய துறைமுகம் போன்ற மிக அருமையான அடிப்படை வசதிகள் கொண்ட சென்னைப் பெருநகரை, இந்தியாவின் தொழில் மற்றும் நிதி மையமாக உருவாக்குவது மிக நல்ல திட்டமாகும். மேலும், பல வங்கிகள், வங்கி பணி இல்லாத நிதி நிறுவனங்கள், முதலீட்டு ஆலோசனை நிறுவனங்கள் போன்றவை, சென்னையைத்

1995 ஏப்ரல் 24] [திரு. ம. சின்னசாமி]

தலைமையிடமாகக் கொண்டுள்ளன என்பது குறித்து நாம் பெருமைப் படலாம். சென்னைப் பெருநகரத்தில் வங்கி மற்றும் நிதி நிர்வாகத்தில் தனி ஆற்றல் பெற்ற பணியாளர்கள் பெரும் எண்ணிக்கையில் உள்ளார்கள். இத்துடன் மிகச் சிறந்த பயிற்சி பெற்ற கணிப்பொறி தொழில் வல்லுநர்கள் ஏராளமாக உள்ளனர். ஆதலால், சென்னையில் ஒரு வர்த்தக மற்றும் நிதி மையத்தை உருவாக்குவது மிகப் பொருத்தமாக இருக்கும்.

இப்படிப்பட்ட வர்த்தக நிதி மையத்தை உருவாக்குவதன் மூலம், தமிழ்நாடு முதலீட்டாளர்களின் விருப்பமான இலக்கு என்ற கருத்து மேலும் வலுப்பெறும். சென்னை தொழிற் பூங்கா, மின்னணு நகரம், பிரிட்டிஷ் தொழில் வளாகம் போன்ற புதிதாக உருவாகும் திட்டங்களுக்கு இந்த வர்த்தக நிதி மையம் ஒரு ஆதரவாக இருக்கும்.

அதேபோன்று, திருப்பூர் நகரில் ஒருங்கிணைந்த அடிப்படை வசதி மேம்பாட்டுத் திட்டம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. அதில் என்னென்ன பணிகள் என்பதை மிகச்சுருக்கமாகச் சொல்லி விடுகிறேன்.

திருப்பூரிலிருந்து 55 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள பவானி ஆற்றிலிருந்து நாளொன்றுக்கு 185 மில்லியன் லிட்டர் தண்ணீரை ரூ. 253 கோடிசெலவில் எடுத்து வரும் குடிநீர் திட்டம்.

திருப்பூர் நகருக்குள் குடிநீரை வினியோகிக்கும் இணைப்புகளைப் பதித்தல்.

திருப்பூர் நகருக்கும் அதைச் சுற்றியுள்ள தொழிற்சாலைகளுக்கும், ரூ.199 கோடி செலவில் வடிகால் வசதி அமைத்தல், மற்றும் ரூ.105 கோடி செலவில் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைத்தல்.

நகரில் தேர்ந்தெடுக்கப்பட்ட சாலைகளை ரூ. 32 கோடி செலவில் விரிவு படுத்தி மேம்படுத்துதல்.

தொலை தொடர்பு வசதிகளை ரூ. 65 கோடி செலவில் மேம்படுத்துதல்.

அடுத்தது ஸ்டேட் ரென்யூவல் பண்ட். மத்திய அரசு 1991-ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தி வரும் புதிய பொருளாதார கொள்கையின் அடிப்படையில், திருத்தியமைக்கப்பட்ட தொழில் கொள்கையினால், பாதிக்கப்பட்ட பொதுத்துறை நிறுவனங்களின் தொழிலாளிகளுக்கு பாதுகாப்பு வளையமாக, தேசிய புதுப்பிப்பு நிதி ஒன்றை மத்திய அரசு ஏற்படுத்தியது.

மாநில அரசின் தொழில் நிறுவனங்கள் அவைகளின் நிகர மதிப்பு 25 சதவிகிதம் குறையும் போது அந்நிறுவனத்தின் தொழிலாளர்களுக்கு விடுப்பு ஓய்வு திட்டத்தின் கீழ் உதவி வழங்க இந்த தேசிய புதுப்பிப்பு நிதியிலிருந்து உதவி பெறலாம். இது போன்ற இனங்களில் 85 சதவிகிதம் மானியமாகவும், எஞ்சிய 15 சதவிகிதம் மாநில அரசாலும் செலுத்தப்படும். இந்த தேசிய புதுப்பிப்பு நிதியிலிருந்து நிதியுதவி பெற, மாநில கோரிக்கைகள்மீது காலதாமதம் ஏற்படுவதைக் குறைக்க மாநில புதுப்பிப்பு நிதி (ஸ்டேட் ரென்யூவல் பண்ட்) ஒன்றை நிறுவ தமிழக அரசு தீர்மானித்துள்ளது.

புதிய சர்க்கரை ஆலைகள். மாண்புமிகு உறுப்பினர் திரு. அப்பு நடேசன் அவர்களுடைய தோவாளை பகுதியிலே சர்க்கரை ஆலை அமைக்கப்பட வேண்டும் என்று ஏற்கெனவே சொல்லியிருப்பதாகச் சொன்னார்கள்.

மாநில அரசு கடந்த மூன்று ஆண்டுகளாக தொடர்ந்து கரும்புக்கு மிக லாபகரமான விலையை வழங்கி வந்ததால், விவசாயிகள் தங்கள் வயல்களில் கரும்பு பயிரிடுவதை அதிகமாக்கி வருகின்றனர். இதனால், ஒவ்வொரு ஆண்டும் கரும்பு உற்பத்தி மிக அதிகமாக உயர்ந்து வருகிறது. இந்த ஆண்டு அரசு மற்றும் தனியார் துறை சர்க்கரை ஆலைகள் தங்கள் முழுத்திறனுக்கு இயங்கினாலும், அரைவைப் பருவம் முடிந்த பின் ஓய்வின்றி கரும்பைத் தொடர்ந்து அரைத்தாலும், பல லட்சக்கணக்கான கரும்பு அரைக்கப்படாமல் அழியக் கூடிய சூழ்நிலை உருவாகியுள்ளது. கரும்பு உற்பத்தி அதிகரித்த அளவு அதை சமாளிக்கத் தேவையான புதிய சர்க்கரை ஆலைகள் அனுமதிக்கப்படவில்லை. தமிழ்நாடு அரசு கீழ்க்கண்ட 5 இடங்களில் புதிய சர்க்கரை ஆலைகளை நிறுவ அனுமதி வழங்குமாறு இரண்டாண்டுகளுக்கு முன்பே மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்திருக்கிறது.

செங்கை எம்.ஜி.ஆர். மாவட்டம், காஞ்சிபுரம்

திருவண்ணைமலை சம்புவராயர் மாவட்டம், போளூர்

தஞ்சாவூர் மாவட்டம், திருவிடைமருதூர்,

திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், அம்பாசமுத்திரம்

கன்னியாகுமரி மாவட்டம், தோவாளை.

இவைகளில் செங்கை எம்.ஜி.ஆர். மாவட்டம் காஞ்சிபுரம், திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டம் போளூருக்கும் மாத்திரம் மத்திய அரசு அனுமதி வழங்கியிருக்கிறது. திருவிடைமருதூர் மத்திய

அரசின் பரிசீலனையில் இருக்கிறது. திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், அம்பாசமுத்திரத்தில் அமைக்கப்பட வேண்டும் என்று கேட்டிருந்த சர்க்கரை ஆலைக்கும், கன்னியாகுமரி மாவட்டத்தில் தோவாளையில் அமைக்கப்பட வேண்டும் என்று கேட்டிருந்த சர்க்கரை ஆலைக்கும் மத்திய அரசு நிராகரித்து விட்டது என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

பிற்பகல் 7-25

இருந்தபோதிலும், மீண்டும் அந்த ஆலைகளை அங்கு அமைக்க வேண்டுமென்று மாநில அரசு தொடர்ந்து வலியுறுத்தும். தமிழ்நாடு அரசிற்கு 2 சர்க்கரை ஆலைகள் மட்டும் கொடுத்த மத்திய அரசு, கடந்த ஆண்டில் உத்திரப்பிரதேசத்திற்கு 25 சர்க்கரை ஆலைகளுக்கும், மராட்டிய மாநிலத்திற்கு 17 சர்க்கரை ஆலைகளுக்கும், ஆந்திரப் பிரதேசத்திற்கு 13 சர்க்கரை ஆலைகளுக்கும், கர்நாடகத்திற்கு 5 சர்கரை ஆலைகளுக்கும் அனுமதி வழங்கியுள்ளது. ஆனால், தமிழ்நாட்டிற்கு 2 சர்க்கரை ஆலைகளுக்கு மட்டுமே அனுமதி வழங்கப்பட்டு மற்றவை நிராகரிக்கப்பட்டுள்ளன என்பதை வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன். அதேபோல, சர்க்கரை ஆலைகள் சிலவற்றை, எரிசாராய ஆலைகளாக அமைக்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர்கள் கேட்டுக் கொண்டு இருக்கிறார்கள். சர்க்கரை ஆலைகள் மிகப் பெரிய அளவில் (Molasses) கரும்பு கசண்டை உற்பத்தி செய்கின்றன. அரசு மற்றும் தனியார் துறை சர்க்கரை ஆலைகள் உற்பத்தி செய்யும் கரும்பு கசண்டை, மதிப்புள்ள (Value added) பொருளாக மாற்றுவதற்கு எரிசாராயம் தயாரிக்கும் வடிப்பாலைகளை அமைத்து வருகின்றன. இப்படிப்பட்ட வடிப்பாலைகள் இல்லாத அரசு மற்றும் கூட்டுறவு சர்க்கரை ஆலைகளிலும் படிப்படியாக எதிர்காலத்தில் வடிப்பாலைகள் (Distilleries) அமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, தமிழ்நாடு கனிம நிறுவனம் (TAMIN) ,1993 மார்ச் மாதத்தில் அறிவிக்கப்பட்ட மத்திய அரசின் புதிய தேசிய கனிமக் கொள்கையைக் கருத்தில் கொண்டு, தமிழ்நாடு அரசு கனிம அபிவிருத்திக் கொள்கையில் தாராளமயம் ஆக்குதலையும், தனியார்மயமாக்குதலையும் அறிமுகப்படுத்தியது.

அதே சமயம், சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்பும் கருத்தில் கொள்ளப் பட்டது. சிறு கனிமங்கள் சலுகை விதிகளின் கீழ், பட்டா நிலங்களில் மாத்திரம் கிரானைட் வெட்டியெடுப்பதற்கு இதுவரை குத்தகைக்கு வழங்கும் உரிமையை அரசு அனுமதித்து வந்தது. இப்போது அரசு நிலங்களுக்கும் அதாவது ரெவின்யூ லேண்ட்ஸ்-இல் இருக்கிற கனிமங்களை

வெட்டி எடுப்பதற்கு தகுதியானவர்களுக்கு உரிமம் வழங்குவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓமலூர் கிருஷ்ணன் அவர்களும், உறுப்பினர் திரு. புருஷோத்தமன் அவர்களும் நாங்கள் விதித்திருக்கிற தகுதிகள் இருந்தால் மனு செய்யலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாநிலத்தின் கனிம வளத்தை ஆய்வு செய்து கண்டுபிடிக்க தமிழ்நாடு கனிம நிறுவனம் (TAMIN) மற்றும் அண்ணா பல்கலைக்கழகம் ஆகியவை கூட்டாகச் சேர்ந்து, தமிழ்நாட்டின் கனிம வளங்களை வரைபடமாக தயாரித்து வருகின்றன. கடற்கரைகளில் கிடைக்கும் அபூர்வமான மண், விலையுயர்ந்த கற்கள், ஓரளவிற்கு மதிப்புள்ள தங்கம் மற்றும் உயரிய உலோகங்களை வணிக ரீதியில் பயன்படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது. மாநிலத்திலிருக்கும் கனிம வளங்களை முழுவதுமாக கண்டறியவும், முழுவதுமாக பயன்படுத்தவும் ஒரு விரிவான கனிம கொள்கை ஒன்றை, (Mineral Policy) தமிழ்நாடு அரசு விரைவில் கொண்டு வர இருக்கிறது.

ஜெம் பார்க். தமிழ்நாட்டில் திருச்சி, புதுக்கோட்டை, கடலூர், திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் விலையுயர்ந்த மற்றும் ஓரளவு மதிப்புள்ள கற்கள் பெருமளவு கிடைப்பதால், அதனை வெட்டி எடுத்து மெருகேற்றும் தொழிலில் ஈடுபட, தமிழ்நாடு கனிம நிறுவனம் திட்டமிட்டுள்ளது. இந்த விலைமதிப்புள்ள கற்களை வெட்டியெடுக்கவும், உரிய முறையில் அதைப் பக்குவப்படுத்தி மெருகேற்றவும், புதிய ஜெம் பார்க் ஒன்றை நிறுவத் தீர்மானித்துள்ளது. கார்னட் சேண்ட்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அப்பு நடேசன் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். கார்னட் என்று அழைக்கப்படும் மணலுக்கு உலக சந்தையில் மிகப் பெரும் தேவை ஏற்பட்டுள்ளதால், தமிழ்நாடு கனிம நிறுவனம் முதற்கட்டமாக கன்னியாகுமரியிலிருந்து தூத்துக்குடி வரையில் கிழக்குக் கடற்கரையில் கிடைக்கும் கார்னட் மணலை கடற்கரைப் பகுதியிலே சுற்றுச் சூழலுக்கு குந்தகமின்றி எடுத்து தூய்மை செய்து ஏற்றுமதி செய்ய தீர்மானித்து உள்ளது. இந்த கார்னட் மணலை தூய்மைப்படுத்தும் வசதிகளை ரூ.50 இலட்சம் செலவில், திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டத்தில் உருவாக்க திட்டமிடப்பட்டுள்ளது. இவ்வாறு தூய்மைப்படுத்தும்போது கிடைக்கும் இல்மனைட் (Ilmenite) என்ற உயரிய தாது பிரிக்கப்பட்டு மத்திய அரசுக்கு சொந்தமான Indian Rare Earth Ltd. என்ற நிறுவனத்திடம் ஒப்படைக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஊரகத் தொழில் துறை அமைச்சர் கவியை எல்லாம் பாடி 1 மணி நேரத்திற்குள்ளேயே முடித்து விட்டார்.

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென்னாற்காடு மாவட்டத்தில் இரண்டு கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் ஒரே இடத்தில் அமைந்துள்ளன. ஒன்று கள்ளக்குறிச்சி யூனிட் நம்பர் 1; கள்ளக்குறிச்சி யூனிட் நம்பர் 2 என்று இருக்கிற காரணத்தினாலே அதில் ஒரு குழப்பம் ஏற்பட்டிருக்கிறது. கள்ளக்குறிச்சி என்றால் எந்த ஆலை என்று தெரியவில்லை என்றும், அதற்கு ஒரு பெயர் மாற்றம் செய்யப்பட வேண்டுமென்று மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. ஆர். பி. பரமசிவம் மற்றும் சட்டமன்ற உறுப்பினர் திரு. துரை அவர்களும், அங்கேயிருக்கிற பொதுமக்கள் எல்லோரும் கோரிக்கைகளை கொடுத்த வண்ணம் இருக்கிறார்கள். ஆகவே தென்னாற்காடு மாவட்டம் கள்ளக்குறிச்சி வட்டத்தில் இருக்கிற இரண்டாவது ஆலைக்கு கள்ளக்குறிச்சி யூனிட் நம்பர் 2 என்ற ஆலைக்கு ஒரு புதிய பெயரை சூட்ட வேண்டுமென்று நான் முடிவெடுத்துள்ளேன். ஒரு நிறுவனத்திற்கு பெயர் சூட்டுகிறபொழுது நாட்டிற்கு உழைத்தவர்களுடைய பெயரைச் சூட்டி மரியாதை செய்ய வேண்டும். அதேபோல, நாட்டிற்கு உழைப்பதற்கு உரிய தலைவர்களை இந்த நாட்டுக்கு அளிக்கப்பெற்றவர்களுக்கும் மரியாதை செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில் தமிழகத்தினுடைய 61/2 கோடி மக்களுடைய தாயாக (மேசையைத் தட்டும் ஒலி) விளங்குகிற மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி என்கிற தாயை தமிழ்நாட்டிற்கு தந்திட்ட தாய் அன்னை சந்தியாவினுடைய பெயர் சூட்டப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.(மேசையைத் தட்டும் ஒலி)

இனிமேல் கள்ளக்குறிச்சி யூனிட் நம்பர் 2 கச்சிராப்பாளையத்தில் உள்ள அந்தக் கூட்டுறவுச் சர்க்கரை ஆலை அன்னை சந்தியா கள்ளக்குறிச்சி கூட்டுறவுச் சர்க்கரை ஆலை என்று பெயர் மாற்றம் செய்து அமைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 7-30

பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் தொழில் வளர்ச்சிக்கு பல்வேறு முயற்சிகள். எடுத்து வெற்றி கண்டிக்கின்ற மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களைப் பார்த்து, இன்றைக்கு பலபேர் பதவி விலக வேண்டும் என்று சொல்கிறார்கள். அப்படியானால் தமிழ்நாட்டில் தொழில் வளர்ச்சி வேண்டாம் என்பதைப்போல் அவர்களுடைய கூற்றுக்கள் இருக்கின்றன. புரட்சித் தலைவி அவர்களைப் பார்த்து பதவி விலக வேண்டும் என்று

சொல்கிறவர்கள் யார் தெரியுமா? மக்களுக்கும் தங்களுக்கும் மகத்தான இடைவெளியோடு மரணப் போராட்டம் நடத்திக்கொண்டிருக்கும் (மேசையைத் தட்டும் ஒலி) பொறுப்பு இல்லாதவர்கள். பொறுப்புத் தொகையைப் பறிகொடுப்பதற்காவே தேர்தலில் நிற்பவர்கள். இவர்கள்தான் இன்றைக்கு மாண்புமிகு முதலமைச்சர் - மகத்தான மக்கள் சக்தி கொண்டிருக்கின்ற மாண்புமிகு முதலமைச்சர் - டாக்டர் புரட்சித் தலைவி அவர்களைப் பார்த்து பதவி விலக வேண்டும் என்று இன்றைக்கு கூப்பாடு போட்டுக்கொண்டு இருக்கிறார்கள். நம்பிக்கை என்பது வாழ்க்கை. நம்பிக்கையின்மை என்பது மரணம் என்றார் வீரத் துறவி விவேகானந்தர். புரட்சித் தலைவி அவர்களே, நீங்கள் மக்கள் மீது வைத்திருக்கும் நம்பிக்கை மக்கள் உங்கள் மீது வைத்திருக்கும் நம்பிக்கை (மேசையைத் தட்டும் ஒலி) உங்களுக்கே பிரத்தியேகமாக இருக்கின்ற தன்னம்பிக்கை (மேசையைத் தட்டும் ஒலி) இந்தக் கைகள் நமக்குப் போதும். ஆளும் கட்சி மீதும், அடுத்த கட்சி மீதும், அவர்கள் கட்சி மீதும் அன்றாடம் அறிக்கை விடுவதையே அன்றாடத் தொழிலாக வைத்திருக்கும் அலுத்துப்போன கைகள்; துண்டாகிப்போன கைகள்; துண்டு துண்டாகிப் போன கைகள்; உதிக்காத சூரியன்; ஆடி அடங்கிய பம்பரம்; பிரேக்டவுனான பஸ்; ஜாதி வெறி (மேசையைத் தட்டும் ஒலி) மத வெறி ஆகிய இரண்டையும் கையில் எடுத்துக்கொண்டு வன்முறை வெறியாட்டம் ஆடி தனக்குத் தானே குழி பறித்து குப்புற வீழ்ந்து கிடக்கும் யானை (மேசையைத் தட்டும் ஒலி) இவர்களோடு கதிர் அறுவாள், அறுவாள் சுத்தியல் எல்லாம் ஒன்று சேர்ந்து - ஒன்று சேரமாட்டார்கள் - ஒன்று சேர்ந்தாலும் புரட்சித் தலைவி அவர்களே உங்களை ஆட்டவோ அசைக்கவோ முடியாது. (மேசையைத் தட்டும் ஒலி) உங்களுக்கு இருக்கிற மகத்தான மக்கள் சக்தி என்ற நெருப்புக்கு முன்னால் அவர்கள் எல்லாம் விட்டில் பூச்சிகள். தமிழருக்குத் தொண்டு செய்ய தாங்கள் மேற்கொண்டுள்ள நியாயங்களின் பயணத்தில் தமிழகம் உங்கள் பின்னாலே தொடர்ந்து வரும்; வரும் என்று கூறி என்னுடைய உரையை முடிப்பதற்கு முன்னால் வெட்டுத் தீர்மானங்களைக் கொடுத்திருக்கின்ற உறுப்பினர் பெருமக்கள் அந்த வெட்டுத் தீர்மானங்களைத் திரும்ப பெற்றுக்கொண்டு மனமகிழ்ச்சியோடு மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டு அமர்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் மு. சீனியம்மாள்.

டாக்டர் மு. சீனியம்மாள்: பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டம் அவினாசி தொகுதியும் பல்லடமும் பிற்பட்ட தொகுதிகளாக அறிவிக்கப்பட்டதோடு அங்கு இப்பொழுதுதான் தொழில் முனைவோர்கள் சிறிது சிறிதாக வந்துகொண்டிருக்கிறார்கள். இன்றைக்கு வறட்சியிலே

அதைப் பாதிக்கப்பட்ட தொகுதியாக கருதி 40 இலட்சம் ஒதுக்கியிருக்கிறார்கள். என்றாலும், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தப் பின்தங்கிய தொகுதியாகிய அவினாசி தொகுதியை கருணைகூர்ந்து தொழில் புரட்சி செய்துகொண்டிருக்கின்ற டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய நல்லாட்சியில் மிகவும் பின்தங்கிய தொகுதியாக அறிவித்தால் இங்கு தொழிலைப் பெருக்குவதன் மூலமும் தொழில் முனைவோர்கள் அதிகமாக சலுகைகளைப்பெற்று வளமோடு தொகுதியை வைத்துக்கொள்ள ஒரு வாய்ப்பாக இருக்கும் என்ற காரணத்தின் அடிப்படையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மிகவும் பின்தங்கிய தொகுதியாக அவினாசி தொகுதியை அறிவித்து உதவுவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தொகுதியை அறிவிக்க முடியாது. வட்டங்களைத்தான் அறிவிக்கலாம்.

டாக்டர் மு. சீனியம்மாள்: பேரவைத் தலைவர் அவர்களே, மிக்க நன்றி, தொழிலில் மிகவும் பின்தங்கிய வட்டமாக அறிவித்து உதவுவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, தொழிலில் பின்தங்கிய வட்டம் என்பதற்கும் மிகவும் பின் தங்கிய வட்டம் என்பதற்கும் சில நார்ம்ஸ் இருக்கின்றன. அந்த அடிப்படைத் தேவைகள் இருப்பின் அவற்றை ஆராய்ந்துப் பார்த்து மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன், அது மட்டுமல்லாமல் இப்போது வட்டங்கள் என்பதற்குப் பதிலாக ஒன்றியத்தைக் கொண்டு வருகின்றபோது நிச்சயமாக அவர்களுடைய குறைகள் போக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கே. முனிவெங்கடப்பன்.

திரு. கே. முனிவெங்கடப்பன்: தலைவர் அவர்களே, தமிழகத்தை இன்றைக்கு தொழில் துறையிலே ஒரு முதல் மாநிலமாக மாற்றிவரும் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியிலே 1992 ஆம் ஆண்டு கிருஷ்ணகிரி வட்டத்தில் ஒரு பழக்கூழ் தயாரிக்கும் தொழிற்சாலை சுமார் 42 கோடி ரூபாயில் ஆரம்பிக்கப்படும்; அந்தத் தொழிற்சாலை ஆசியாவிலேயே மிகப்பெரிய தொழிற்சாலையாக இருக்கும் என்று அறிவிக்கப்பட்டது. அதன் செயல்பாடு எந்த நிலையில் இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன். மேலும், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இன்னொரு காகித ஆலையை ஆரம்பிப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, அந்தக் காதித ஆலையை இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் வெற்றிப்பெற்ற தர்மபுரி மாவட்டத்தில் பர்கூர் தொகுதியில் ஆரம்பிக்க முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

பிற்பகல் 7-35

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காகித ஆலை ஆரம்பிக்கின்றபோது அந்த ஆலை ஆரம்பிப்பதற்கான என்ன என்ன சாத்தியக் கூறுகள் இருக்கும் என்பதை ஆராய்ந்துப் பார்த்து அந்தச் சாத்தியக் கூறுகள் மாண்புமிகு உறுப்பினர் திரு. முனிவெங்கடப்பன் அவர்கள் சொல்லுகிற பகுதியில் இருக்குமானால் பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருமதி ஜீனத் சர்புதீன்.

திருமதி ஜீனத் சர்புதீன்: மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்களே, ராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள ராமேஸ்வரம் வட்டத்தில் எந்தத் தொழிலும் இல்லை; எந்தத் தொழிற்சாலையும் இல்லை. சுற்றி நான்கு பக்கமும் கடல்தான் இருக்கிறது. ஆகவே, ராமேஸ்வரம் வட்டத்தை மிகவும் பின் தங்கிய வட்டம் என்று அறிவிப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அங்கே பிறந்தவர், அதனால்தான் அக்கறை அவருக்கு இருக்கிறது.

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதே ராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள முதுகுளத்தூர் தாலுக்காவைப் பின் தங்கிய வட்டமாக அறிவிக்கவேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் அடிக்கடி செல்லிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, இப்போது வட்டங்கள் என்ற அளவில் இருப்பதற்குப் பதிலாக ஒன்றியங்கள் என்ற அளவிலே வருகின்றபோது இதுவெல்லாம் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இராமேஸ்வரம் ஒரு வட்டமே, ஒன்றியம் அல்ல; அது ஒரு வட்டமே. அரசு கொறடா திரு. எஸ். ஜெயக்குமார்.

திரு. எஸ். ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சர்க்கரை ஆலை துவங்குவதற்கு 5 அனுப்பி, 2 தான் பர்மிஷன் கொடுத்ததாகச் சொன்னார்கள். ஆனால் ஒரு மாதத்திற்கு முன்பு பேப்பரில் படித்தேன், இனிமேல் சர்க்கரை ஆலை துவங்குவதற்கு மத்திய அரசு லைசன்ஸ் ரத்து செய்யப்படுகிறது என்று பேப்பரிலே படித்தோமே அது அமலுக்கு வந்துவிட்டதா என்று அறிய முற்படுகிறேன்.

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு சர்க்கரை ஆலை அமைப்பதற்குண்டான அந்த விதிமுறைகளை அனுசரிக்கும்போது மாநில அரசினுடைய பங்கு இந்த இடத்தல் சர்க்கரை ஆலை அமைப்பதற்குண்டான சாத்தியக் கூறுகள் உள்ளன, ஆகவே நீங்கள் சர்க்கரை ஆலை அமைக்க அனுமதி தாருங்கள் என்று பரிந்துரைதான் செய்கிறோம். அனுமதி வழங்குகின்ற முழு அதிகாரமும் மத்திய அரசுக்குத்தான் இருக்கிறது. அண்மையில் பேப்பரில் வந்ததாக ஒரு செய்தியை மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெயக்குமார் அவர்கள் சொன்னார்கள். இந்தச் சர்க்கரை ஆலைக்கு அனுமதி வழங்குகின்ற அந்த நிலையை டீ-சென்ட்ரலைஸ் செய்யலாம் என்று மத்திய அரசு பரிசீலித்துக்கொண்டிருப்பதாக ஒரு செய்தி இருக்கிறது. ஆகவே எந்த அளவுக்கு உண்மை என்பது எனக்குத் தெரியவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வே. கோபாலகிருஷ்ணன்.

* *திரு. வே. கோபாலகிருஷ்ணன்:* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம் கங்கை கொண்டானில் தொழிற்பேட்டை அமைக்கின்ற பணி முழுமையாக எப்போது தொடங்கப்படும் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாவட்டம், கங்கைகொண்டானில் தமிழ்நாடு தொழில் அடிப்படை வசதி மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் அங்கே ஒரு ஆயிரத்திற்கு மேற்பட்ட ஏக்கரில் தொழிற்பேட்டை உருவாக்கப்பட்டு வருகிறது. 40 கோடி ரூபாய் செலவு அதற்கு பிடிக்கும். மாநில அரசு 10 கோடியும், மத்திய அரசு 10 கோடியும், மீதியிருக்கிற 20 கோடியை நிதி நிறுவனங்கள் மூலம் பெறுவதற்காக அந்தத் திட்டம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. மாநில அரசினுடைய பங்கைச் செலுத்திவிட்டது. மத்திய அரசு இதுவரையில் தன்னுடைய பங்கைச் செலுத்தாமல் இருந்தது. மாநில அரசு பலமுறை கடிதங்கள் எழுதியும், பல செய்திகளை அனுப்பியும் இப்போது தான் அண்மையில் அந்த 10 கோடியை அவர்கள் ரிலீஸ் செய்திருக்கிறார்கள். இப்போது நில ஆர்ஜித வேலை நடந்து வருகிறது. வெகு விரைவில் அது முடிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதுவரை பேசுவதற்கு வாய்ப்புக் கிடைக்காத உறுப்பினர்களுக்குதான் இப்போது அனுமதி. அடுத்து, திரு. த. க. இராதாகிருஷ்ணன்.

திரு. த. க. இராதாகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒன்றிய ரீதியாக தொழிலில் பின்தங்கிய பகுதிகளை ஆராய்வதாகக் கூறினார். எனது திருமங்கலம் வட்டத்தை எடுத்துக்கொண்டால் கள்ளிக்குடி ஒன்றியம் மிகவும் பின்தங்கிய பகுதியாக இருக்கிறது. ஆகவே, ஒன்றிய ரீதியாக ஆய்வு செய்கின்ற பணி இந்த நிதியாண்டில் செய்து முடிக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்கு ஒரு குழு அமைக்கப்பட்டிருக்கிறது. அந்தக் குழு வெகு விரைவில் ஆராய்ந்து அறிக்கை கொடுத்தபின் பணிகள் துவக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. தா. வேடியப்பன்.

* திரு. தா. வேடியப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டத்திலே போளூரில் சர்க்கரை ஆலை நீண்ட நாள் கோரிக்கையாக இருந்ததை மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் பெற்று தந்துள்ளமைக்காக மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கும், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றி கூறி, அந்த சர்க்கரை ஆலை அதிகமான கரும்பு உற்பத்தியில் இந்த ஆண்டில் ஏறத்தாழ 85 ஆயிரம் டன் அரைக்கக்கூடிய அளவுக்குக் கரும்பைப் பதிவு செய்திருக்கிறார்கள். மேலும், விவசாயிகள் எல்லாம் அது போதவில்லை என்று கூறுகிறார்கள். அதிக அளவில் உற்பத்தி ஆனாலும் அதை வேறு மில்களுக்குக் கொடுப்பதற்கு பதிவு செய்வதற்கு அங்கீகாரம் அளிப்பாரா என அறிய விரும்புகிறேன்.

பிற்பகல் 7-40

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள், இந்தக் கேள்விக்கு நான் காலையிலேயே பதில் சொல்லி இருக்கிறேன். சென்ற ஆண்டும் அதற்கு முந்தைய ஆண்டும் மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் கரும்பு விவசாயிகளுக்கு அளவுக்கு அதிகமான, அவர்களே எதிர்பார்க்காத அளவுக்கு விலையைக் கொடுத்த காரணத்தினால்தான் இந்த ஆண்டு ஏராளமான பேர் கரும்பைப் பயிரிட்டுவிட்டார்கள். கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளும், பொதுத் துறை சர்க்கரை ஆலைகளும், ஆக 18 சர்க்கரை ஆலைகள் மாத்திரம் அளவுக்கு அதிகமாக, அளவைவிட 11 லட்சம் டன் கரும்பை அதிகமாக பயிரிட்டு இருக்கிறார்கள். ஆகவே, அந்தக் கரும்பை எல்லாம் அரைக்க வேண்டுமென்று தனியார் ஆலைகளைக் கேட்டு இருக்கிறோம்.

நான்கூட இரண்டு, மூன்று தடவை தனியார் நிறுவன உரிமையாளர்களை எல்லாம் அழைத்துப் பேசி, எல்லா கரும்புகளையும் எடுக்கவேண்டும் என்று கேட்டு இருக்கிறேன். இந்த ஆண்டு ஜூலை மாதம் வரைக்கும் 18 சர்க்கரை ஆலைகளின் அரைவைப் பருவத்தில் நீட்டிக்க வேண்டுமென்று கேட்டு இருக்கிறேன். ஆகவே, நிச்சயமாக எல்லா கரும்புகளும் அரைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கே. ஆர். முருகானந்தம்.

திரு. கே. ஆர். முருகானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'டாமின்' நிறுவனம் பசும்பொன் முத்துராமலிங்கத்தேவர் மாவட்டம் சிவகங்கையிலே சுமார் 28 கோடி ரூபாய் செலவில் மாண்புமிகு புரட்சித் தலைவி ஆட்சியிலே பல்வேறு நிதி நெருக்கடி நிலைமையிலும் கிராஃபைட் கனிமம் தயாரிக்கும் தொழிற்சாலையை ஏற்படுத்தி இருக்கிறார்கள். இப்போது வர்த்தக ரீதியான உற்பத்தியையும் தொடங்கி விட்டார்கள். சிவகங்கை பின்தங்கிய பகுதியாக இருப்பதால் அந்த 'டாமின்' நிறுவனம் கிராஃபைட் மூலப் பொருள்களைப் பயன்படுத்தும் துணைப் பொருள்களைத் தயாரிக்கும் திட்டங்களைத் தொடங்க மாண்புமிகு புரட்சித் தலைவியினுடைய அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பட்டதைப் போல அது இன்னும் கமர்ஷியல் புரடக்ஷனை ஆரம்பிக்கவில்லை. இந்நேரம் அது ஆரம்பிக்கப்பட்டு பணி தொடங்கி உற்பத்தியெல்லாம் ஆரம்பிக்கப்பட்டு இருக்கவேண்டும். இடையிலே ஏற்பட்ட தீ விபத்தின் காரணமாக அதில் கொஞ்சம் காலதாமதம் ஏற்பட்டிருக்கிறது. கமர்ஷியல் புரடக்ஷனை ஆரம்பித்த பிறகு அதன் மூலம் ஏறத்தாழ 200 கோடி ரூபாய் அளவிற்கு டவுன் ஸ்ட்ரீம் இன்டஸ்ட்ரீஸ், துணை தொழில்கள் தொடங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஆர். பி. பரமசிவம்.

திரு. ஆர். பி, பரமசிவம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியில் அமைந்துள்ள கள்ளக்குறிச்சி-2 என்று இதுவரையில் அழைத்து வந்த சர்க்கரை ஆலைக்கு, என்னுடைய கோரிக்கையையும் எங்களுடைய மாவட்டத்திலுள்ள சட்டமன்ற உறுப்பினர்களுடைய கோரிக்கையையும், எங்களுடைய மாண்புமிகு

அமைச்சர் அவர்களுடைய கோரிக்கைகளையும் ஏற்று அந்த சர்க்கரை ஆலைக்கு இதயதெய்வத்தின் தாயினுடைய பெயரை, 'அன்னை சந்தியா' என்று வைத்தமைக்கு (மேசையைத் தட்டும் ஒலி) என்னுடைய தொகுதி மக்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்து, அதே நேரத்திலே எங்களுடைய பின்தங்கிய மாவட்டத்திற்கு ஒரு தொழிற்பேட்டையைக் கொடுத்த மாண்புமிகு இதய தெய்வத்திற்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த இரண்டு பெரிய காரியங்களைச் செய்து கொடுத்ததற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் ஆ. வெ. புருஷோத்தமன்.

டாக்டர் ஆ. வெ. புருஷோத்தமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல வருடங்களாக தொழில் முறையில் மிகவும் பின்தங்கிய வட்டமாக அறிவிக்கப்பட்டு இன்றுவரை எந்தத் தொழிற்சாலையும் என்னுடைய தொகுதியிலே ஆரம்பிக்கப்படவில்லை. தனியார்கள் யாரும் தொழிற்சாலைகளைத் தொடங்குவதற்கு முன்வரவில்லை. அப்படிப்பட்ட நிலைமை இருக்கிறது. இப்படிப்பட்ட தொகுதிகளுக்கு மாற்றுத் திட்டம் ஏதாவது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வைத்து இருக்கிறார்களா? கடந்த 20 ஆண்டுகளாக அந்தப் பகுதியில் தொழிற்சாலைகளே வராத நிலை இருக்கின்றபோது, இப்படிப்பட்ட பகுதிகளுக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் என்ன திட்டம் வைத்து இருக்கிறார்கள் எனபதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு பகுதியை தொழிலில் பின்தங்கிய அல்லது மிகவும் பின்தங்கிய பகுதியாக அறிவிக்கிறோம் என்று சொன்னால் அங்கே தொழில் தொடங்க வருபவர்களுக்கு ஊக்கமளிக்கவும் சலுகைகளை அளிக்கவும்தான் அரசு உதவி செய்கிறது. அரசே எல்லா இடங்களிலும், தொழிற்சாலைகளைத் தொடங்குகின்ற நிலையில் எந்த அரசும் இன்றைக்கு இல்லை. இப்போதுள்ள மாறிவருகின்ற பொருளாதார சூழ்நிலை மற்றும் மத்திய அரசின் கொள்கையின் காரணமாகவும், லிபரலைசேஷன், பிரைவேட்டைசேஷன், குளோபலைசேஷன் காரணமாகவும் தனியார்களைத் தொழில் தொடங்குமாறுதான் எல்லா அரசுகளும் இன்றைக்கு ஊக்குவித்துக் கொண்டு வருகின்றன. கம்யூனிஸ்ட் மாநிலமாக இருக்கக்கூடிய மேற்கு வங்கத்திலேகூட அந்த மாநிலத்தினுடைய முதலமைச்சர் திரு. ஜோதிபாசு அவர்கள், அவர்களுடைய கட்சியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் திரு. சோமநாத் சாட்டர்ஜி அவர்களை மலேஷியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளுக்கு அனுப்பி அங்கே இருக்கிற

தனியார் தொழில்முனைவர்களைச் சந்தித்து தங்களுடைய மாநிலத்திலே தொழில் தொடங்க வேண்டுமென்று நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டு இருக்கின்ற இந்தக் காலகட்டத்தில், இனிமேல் தனியார்களைத்தான் ஊக்குவிக்கவேண்டும். அரசே எல்லா தொழில்களையும் ஏற்று நடத்துவதற்கு எந்த அரசும் தயாராக இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் எஸ். சுந்தரராஜ்.

டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள கடலாடி தொகுதியை மிகவும் பின்தங்கிய பகுதியாக அறிவித்த மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைக் கூறிக்கொள்கிறேன். அதேசமயம் எங்களுடைய மாவட்டமே பல வருடங்களாக மிகவும் பின்தங்கிய நிலையில்தான் இருக்கிறது. எந்தவிதமான தொழில் முன்னேற்றமும் இல்லை. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் சுட்டிக்காட்டியதைப்போல, முதுகுளத்தூர் வட்டமும் மிகவும் பின்தங்கிய நிலையில்தான் இன்னமும் இருந்துகொண்டு இருக்கிறது. ஆகவே, இராமநாதபும் மாவட்டத்தையே தொழில் துறையில் மிகவும் பின்தங்கிய மாவட்டமாக அறிவிக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

பிற்பகல் 7-45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் முதுகுளத்தூரைச் சொன்னது, கோரிக்கையாகச் சொல்லவில்லை. நீங்கள் சொல்லுகிற அந்த நார்ம்ஸ்படியே இருக்கிற ஒரு வட்டம். அதை ஏன் இன்னும் அறிவிக்கவில்லை; அதைப்போலத்தான் அவர் சொல்லுவது போல அந்த மாவட்டம் பூராவும் ஏனைய வட்டங்களும் அப்படித்தான் இருக்கும். அந்த அளவிலேகூட அறிவிக்கலாம் என்பதற்காகத்தான் சொன்னேன்.

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி: பேரவைத் தலைவரவர்களே, மாவட்டம் தொழில் ரீதியாகப் பின்தங்கிய மாவட்டம் என்று அறிவிக்கும் நிலை ஏற்கெனவே மத்திய அரசு வைத்திருந்தது. இப்பொழுது அவர்கள் அதைக் கைவிட்டு விட்டார்கள். அதன் காரணமாக ஏற்பட்ட பாதிப்பின் காரணமாகத்தான் மாநில அரசு வட்டங்களைப் பின்தங்கிய மற்றும் மிகவும் பின் தங்கிய வட்டங்கள் என்று இப்பொழுது அறிவித்து வந்து, அதற்குண்டான சப்சிடீஸ், இந்த உதவிகளையெல்லாம் செய்து கொண்டிருக்கிறோம். இதுகூட, இப்படியிருக்கின்றபொழுது இன்னும் தொழில் வளர்ச்சி முழுமையாக ஏற்படும் என்ற காரணத்தைக் கருத்திற்கொண்டு இன்றைக்கு ஒன்றிய அளவில் அதைக் கொண்டு வருகிறோம்.

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி : டாக்டர் சுந்தரராஜ் அவர்களுடைய கருத்துக்கேற்ப இராமநாதபுரம் மாவட்டத்தில் எந்தத் தொழிலும் இல்லை என்பது உண்மைதான். ஒரு தொழிலைத் துவங்க வேண்டுமென்று சொன்னால் பின்தங்கிய மாவட்டம் என்பதற்காக அங்கே தொழிலைத் தொடங்கிவிட முடியாது. அந்த இடத்திலே கிடைக்கிற மூலப்பொருள்கள், மற்ற ஆதாரங்களைக் கொண்டுதான் அங்கே தொழிலைத் தொடங்க முடியும். இராமநாதபுரம் மாவட்டத்தில் என்னென்ன மூலப்பொருட்கள் கிடைக்கும் என்பதைப் பார்த்து அரசு - அரசோ அல்லது தனியார்களை வைத்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை.

டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் 400 கோடி ரூபாய் அளவில் இரப்பர் தொழிற்சாலை அமைப்பதற்கு எனது தொகுதியில் உள்ள செண்பகராமன் புதூரில் சுமார் 70 ஏக்கர் நிலத்தை இன்று நில ஆர்ஜிதம் செய்து எடுத்துள்ளார்கள். அந்த ஆலையின் பணிகளை இந்த ஆண்டே துவக்க அமைச்சர் முன்வருவாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, நிலம் கையகப்படுத்தப்பட்ட பணி முடிந்தவுடன் இந்த ஆண்டே தொடங்கப்படும். அந்தக் 'கோ-புரமோட்டார்' கூட துவங்குவதற்குத் தயாராகத்தான் இருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஏன் நிறைய பேர் கையைத் தூக்கிகொண்டே இருக்கிறீர்கள்? திரு. கி. தருமலிங்கம்.

திரு. கி. தருமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தங்கள் உரையிலே குறிப்பிட்ட காகித ஆலைக்காக வடாற்காடு-அம்பேத்கார் மாவட்டத்தில் காகித ஆலைக்கு மூலப்பொருளான ஆம்பூர் சர்க்கரை ஆலை, திருப்பத்தூர் சர்க்கரை ஆலை, வேலூர் திருவலம் சர்க்கரை ஆலை ஆக மூன்று ஆலைகள் இருக்கின்றன. மேலும் நீலகிரி மரங்கள் உற்பத்தியாகும் இடமும் நிறைய இருக்கிறது. ஆகவே, காகித ஆலையை வடாற்காடு-அம்பேத்கார் மாவட்டத்தில் பாலாற்றங்கரையோரத்தில் நீராதாரம் உள்ளது. எனவே, அப்பகுதியில் ஆலை துவங்க ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுதுதான் திருமணம் நிச்சயமாகியிருக்கிறது. திருமணம் முடிந்து குழந்தை பிறந்தபிறகு பார்த்துக் கொள்ளலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பெரியார் மாவட்டத்திலே என்ன? எல்லாம் இருக்கிறது. திரு. வி. கே. சின்னசாமி.

* *திரு. வி. கே. சின்னசாமி:* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய பெரியார் மாவட்டத்தில் இரண்டு தனியார் சர்க்கரை ஆலைகள் - சக்தி சர்க்கரை ஆலை, இன்னொன்று பன்னாரியம்மன் சர்க்கரை ஆலை இருக்கின்றன. எங்கள் மாவட்டம் காளிங்கராயன் பாசன பகுதி. அரக்கன்கோட்டை, தடப்பள்ளி, மற்றும் கீழ்பவானியிலே இரண்டு இலட்சம் ஏக்கருக்குமேல் பாசன வசதி பெற்ற பகுதிகளாக இருக்கின்றன. ஆகையால் இரண்டு சர்க்கரை ஆலைகளும் சுமார் 5 ஆயிரம், 7 ஆயிரம் டன் வரை நாள் ஒன்றுக்கு அரைக்கின்ற திறன் உள்ளதாக இருக்கிறது. ஆனால் இப்பொழுது இருக்கிற நிலைமையைப் பார்க்கும்பொழுது, மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய நல்லாட்சியில் முப்போகமும் விளைகின்ற அளவிற்குக் கீழ்பவானி அணை நிரம்பி வழிகிறது. ஆகவே, விவசாயிகள் அந்தக் கரும்பைப் பயிரிட வேண்டுமென்றால் அவர்களுக்கு பயிரிடுவதற்கு, அந்தக் கரும்பை உற்பத்தி செய்கின்ற விவசாயிகளுக்கு அனுமதி அளிக்க மறுக்கின்றார்கள். காரணம், அவர்கள் ஏற்கெனவே கொடுத்த கரும்பையே வெட்டி எடுக்க முடியாத சூழ்நிலையிருக்கிறது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தக் கரும்புத் திறனை, அந்த ஆலைகள் பத்தாயிரம் டன் வரை நாள் ஒன்றுக்கு அரைப்பதற்கான அனுமதி அளிக்க வேண்டும் அல்லது ஒரு அரசு நிறுவனத்தோடு தனியாக ஒரு கூட்டுறவுச் சர்க்கரை ஆலையாவது அமைப்பதற்கு முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி : தலைவரவர்களே, உறுப்பினர் திரு. சின்னசாமி அவர்கள் ஏற்கெனவே ஆரம்பத்திலே பேசுகின்றபொழுது, ஒரு நாளைக்கு 7 இலட்சம் டன் என்று சொன்னார்கள். 7 இலட்சம் டன் அல்ல; ஒரு நாளைக்கு 7 ஆயிரம் டன். ஆகவே, மாண்புமிகு உறுப்பினரவர்களுக்கு ஏற்கெனவே அதைத் தெரிவித்திருக்கிறேன். சென்ற ஆண்டு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய தாராள மனத்தின் காரணமாக இந்த ஆண்டு ஏராளமான பேர் கரும்பைப் பயிரிட்டு விட்டார்கள்; உறுப்பினர் குறிப்பிடுகின்ற சக்தி சர்க்கரை ஆலை நிறுவனத்தையும் அழைத்து, கூட்டுறவுத் துறையிலே

இருக்கிற கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலையிலே இருக்கிற கரும்பை நீங்கள் எடுத்துக் கொள்ளுங்கள் என்று நாங்கள் அவர்களைக் கேட்டுக் கொண்டிருக்கும்பொழுது உறுப்பினருடைய கோரிக்கையைப் பரிசீலிப்பதற்கு இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஏற்கெனவே அங்கே நிறைய இருக்கிறது என்றால், ** 7 இலட்சம், 8 இலட்சம் என்று. ** தொழில்துறை மானியக் கோரிக்கைகள் மீதான விவாதம் முடிவுற்றது. மாண்புமிகு கதர்த்துறை அமைச்சரவர்களுடைய பதிலுரை. (குறுக்கீடு)

பிற்பகல் 7-50

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ** பற்றி சொன்னதை அவைக் குறிப்பிலிருந்து எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உயர்வாகத்தானே சொன்னேன். நிறைய வைத்திருக்கிறீர்கள். ஆகவே, எல்லாம் கேட்டுக் கொண்டிருக்கிறீர்கள்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : ** இருக்கின்றன. ஆகவே, அதை நீக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்களை ரொம்ப உயர்வாகத் தானே சொல்கிறோம். அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. பி. ஈஸ்வரமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிரிக்கெட்டில் ஒரு நாள் மேட்ச் இருக்கிறது. அந்த ஒரு நாள் மேட்சிலே சில நிகழ்ச்சிகள் நடக்கும். தொடக்க ஆட்டக்காரர்களாக இறங்குபவர்கள் சாவகாசமாக தொடங்கி அதிகமான பந்துகளை சந்தித்து, அதிகமான ரன்களையும் குவித்துவிட்டு சென்று விடுவார்கள். 40 ஓவர்களுக்கு மேலே வரக்கூடிய பேட்ஸ்மேன், 50 ஓவர் தான் இருக்கிறது, இத்தனை ஓவர்கள்தான் இருக்கின்றன, இத்தனைப் பந்துகள் போடுவார்கள், அதற்குள் இவ்வளவு ரன்கள் எடுக்க வேண்டுமென்று கட்டாயத்திற்கு ஆட்பட்டுவிடுகிறார்கள். அதைப்போன்று......

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கெட்டிக்கார ஆட்டக்காரர்களை ரிசர்வ்-ஆக வைத்து கடைசியில் விடுவது, அதுவும் ஒரு விளையாட்டு முறைதான். ஆகவே, இப்போது உங்களை இறக்கியிருக்கிறோம். (சிரிப்பு).

மாண்புமிகு திரு. பி. ஈஸ்வரமூர்த்தி : அதைத்தான் நானும் சொல்ல வந்தேன், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைப் போன்று தாங்கள் கட்டாயப்படுத்தாமல் தாராளமாக நேரம் ஒதுக்கிக் கொடுப்பீர்கள் என்ற நம்பிக்கையோடு 1995-96 ஆம் ஆண்டுக்கான கதர் மற்றும் கிராமத் தொழில் துறையினுடைய மானியக் கோரிக்கைகள் மீதான பதிலுரையை ஆற்ற விழைகிறேன்.

சங்க காலத்தில் மூவேந்தர்கள் தமிழகத்தை ஆண்டார்கள் என்பது உண்மை. இந்த மூவேந்தர்கள் வீரம் மிக்கவர்களாக, விவேகம் மிக்கவர்களாக, அன்பு உள்ளம் கொண்டவர்களாக, அறம் வளர்க்கும் ஆன்மீக நெறி படைத்தவர்களாக, நாட்டிற்கும் நாட்டு மக்களுக்கும் ஏதாவது சோதனை ஏற்படும் நேரத்திலே அவர்கள் வீறிட்டு எழுந்து வெற்றி பெற்று நாட்டையும், நாட்டு மக்களையும் மொழியையும் காப்பாற்றினார்கள் என்பதைப் படித்திருக்கிறோம், கேட்டிருக்கிறோம், ஆனால் பார்த்ததில்லை. இன்று அந்த மூவேந்தர்களும் மொத்த உருவிலே வந்ததுபோன்று, தமிழகத்தை மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் சீரோடும், சிறப்போடும் தமிழையும், தமிழ்நாட்டையும், தமிழ் மக்களையும் காத்து, அறம் வளர்த்து, ஆன்மீக நெறி பரப்பி நல்லாட்சி செய்யும் தெய்வத்தாயை வணங்கி, இந்த மாமன்றத்தில் கதர் மற்றும் கிராமத் தொழில் துறை மானியக் கோரிக்கை மீதான எனது பதிலுரையை ஆற்ற விழைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த தேசத்தை காந்தி தேசம் என்கிறோம், காந்தியை தேசபிதா என்கிறோம். தேசத்தை நினைக்கும் பொழுதெல்லாம் காந்தியை நினைக்க வேண்டும். அப்படி காந்தியை நினைக்கும் போதெல்லாம் கதரை நினைக்க வேண்டும். அப்படி கதரை நினைத்தால் கிராமத்தில் இருக்கக்கூடிய ஏழை எளிய மக்கள் நலனை நினைப்பதாக பொருளாகக் கருத வேண்டும். இங்கு எத்தனைப் பேர் இப்படி நினைக்கிறார்கள் என்றோ, நினைக்கவில்லை என்றோ நான் கூறவில்லை. அனைவரும் நினைக்க வேண்டும் என்பது எனது அன்பான வேண்டுகோள்.

கதர் கிராமத் தொழில் வாரியமானது, கதர் கிராமத் தொழில் ஆணையத்தால் அங்கீகாரம் செய்யப்பட்ட 96 கிராமத் தொழில்களில், 59 கிராமத் தொழில்களைச் சிறப்பாகச் செயல்படுத்தி வருகிறது. இத்திட்டங்களை இவ்வாரியம் தனது 1,284 சொந்த அலகுகளின் மூலமாகவும், 1,876 தொழில் கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாகவும்

செயல்படுத்தி வருகிறது என்பதை இந்த மாமன்றத்தில் ஏற்கெனவே குறிப்பிட்டிருக்கிறேன்.

அதுமட்டுமல்ல, 82 ஆயிரத்திற்கு மேற்பட்ட கைவினைஞர்களுக்கு அவரவர்கள் வாழும் பகுதியிலேயே சுயவேலை வாய்ப்பினை ஏற்படுத்தி கிராம மக்களின் பொருளாதார மேம்பாட்டிற்கு வழிவகைகள் செய்து வருகிறோம் என்பதை இங்கே பெருமையோடு கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இதுவரை இத்துறையின் மூலமாக 13 இலட்சத்திற்கு மேற்பட்ட கிராம கைவினைஞர்களுக்கு வேலை வாய்ப்பு அளித்துள்ளோம் என்பதோடு, 13 இலட்சத்தில் 4.87 இலட்சம் பேர் பெண்கள் என்றும், 2.84 இலட்சம் பேர் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் என்பதையும் இங்கே கூறுவதில் நான் பெருமைப்படுகின்றேன்.

பிற்பகல் 7-55

அதேபோல, வருகின்ற 1995-96 ஆம் ஆண்டில் மேலும் 1,40,000 நபர்களுக்கு கூடுதல் வேலைவாய்ப்பு அளித்திடவும், கதர் வாரியம் திட்டமிட்டுள்ளது என்பதை நான் கூறிக்கொள்கிறேன். ஏழை, எளிய கிராம மக்கள், தாங்கள் வசிக்கும் பகுதியில் அவரவர்களுக்குத் தெரிந்த தொழிலைக் குறைந்த மூலதனத்துடன், செய்து அதிக வேலை வாய்ப்பினைப் பெறுகின்ற அளவிற்கு, கதர் கிராமத் தொழில் வாரியம் கிராம மக்களுக்கு பெரிதும் உதவி வருகின்றது.

இவ்வாரியத்தின் கட்டுப்பாட்டில் 225 கதர் அங்காடிகள் இயங்கி வருகின்றன. இதில் ஒன்று கேரள மாநிலத்தில் பாலக்கோட்டிலும், மற்றொன்று கர்நாடக மாநிலத்தில் பெங்களூரிலும் சிறப்பான முறையில் செயல்பட்டு வருகின்றன. மேலும், இந்த ஆண்டு கர்நாடக கோலார் தங்க வயலில் கதர் அங்காடி ஒன்று அமைக்க நடவடிக்கை எடுத்து வருகிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

பம்பாய் கதர் ஆணைக்குழு, தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் மற்றும் கதர் ஆணைக் குழுவினால் அங்கீகாரம் பெறப்பெற்ற சர்வோதயா போன்ற நிறுவனங்களுக்குத் தேவையான பஞ்சு ரகங்களைக் கொள்முதல் செய்து வருகிறது. அவ்வாறு வாரியத்திற்குத் தேவையான பஞ்சினை, பேல்களுக்குரிய தொகையை, வாரியம், கதர் ஆணைக்குழுவிடமிருந்து பெற வேண்டிய மானியத்துடன் பெற்று உபயோகித்து வருகிறது.

இவ்வாறு பெறப்படும் பஞ்சினை வாரியத்தின்கீழ் செயல்படும் 694 கதர் கிராமிய நூற்பு நிலையங்களில், 584 நூற்பு நிலையங்களில் ஆறு

வகையான கதர் நூல்களும், 110 நூற்பு நிலையங்களில் பாலியஸ்டர் நூல்களும் உற்பத்தி செய்து, வாரியமானது இந்த நூல்களைப் பயன்படுத்தி வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். அதுபோன்று இந்த ஆண்டு அதாவது 1995-96 ஆம் ஆண்டு மேலும் 20 நூற்பு மையங்கள் தொடங்கப்படவுள்ளன என்பதை நான் இங்கே கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மேலும் இங்கு கொடுக்கப்பட்டுள்ள ஏராளமான வெட்டுத் தீர்மானங்களில் கதர் கிராமத் தொழில் பொருட்களுடைய விற்பனை நாளுக்கு நாள் குறைந்துகொண்டே வருகின்றது; இதற்கு அரசின் மூலம் சரியான விளம்பரம் இல்லை என்று மாண்புமிகு உறுப்பினர்கள் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். அது தவறான கருத்து. அரசின் மூலம் பல்வேறு நடவடிக்கைகள் எடுத்து வரப்பட்டிருக்கின்றன. மேலும், கதர் மற்றும் கிராமத் தொழில் பொருட்களின் விற்பனை, பிற நவீன பொருட்களுடன் போட்டி போடும்போது, விற்பனையில் பின்தங்கி விடக்கூடாது என்பதற்காக நமது தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், தயாரிக்கப்படும் பொருட்கள் நல்ல விளம்பரம் செய்யப்பட வேண்டும் என்ற எண்ணத்திலே 10 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கியிருக்கிறார்கள் என்பதை கடந்த ஆண்டு இந்த மானியக் கோரிக்கையிலே நான் கூறியிருந்தேன். அந்த அடிப்படையிலே, நல்ல விளம்பரம் செய்யப்பட்டு, கதர் கிராம வாரியத்தின் மூலம் நெய்யக்கூடிய பட்டுத் துணிகள் நல்லமுறையில் விற்பனை செய்யப்பட்டு வருகிறது என்பதை நான் விளக்கமாக எடுத்துக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மேலும், இங்கே வெட்டுத் தீர்மானங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்ற உறுப்பினர்களுக்கு நான் தெரிவித்துக் கொள்வது என்னவென்றால், கதர் விற்பனையை அதிகப்படுத்துவதற்காக நாங்கள் வாரியத்தின் மூலம் நடவடிக்கை எடுத்து வருகின்றோம். அதற்காக செய்தித்தாள் விளம்பரங்கள், போஸ்டர்கள், தொலைக்காட்சி மேலும் அகில இந்திய வானொலி மூலம் விளம்பரங்கள், முக்கிய தினங்களில் சிறப்புத் தள்ளுபடி அதாவது ஆண்டிற்கு 90 நாட்கள் சிறப்புத் தள்ளுபடி, ஆண்டு முழுவதும் 15 சதவீதம் தள்ளுபடி போன்ற தள்ளுபடி சலுகைகளை கொடுத்து விற்பனையை ஊக்கப்படுத்துவதற்காக வாரியமானது பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது. மேலும், கதர் மற்றும் பாலியஸ்டர் பட்டு ரகங்களில் பல புதிய வண்ணமிகு ஆடைகளைத் தயாரித்து வாரியமானது விற்பனை செய்து வருகின்றது என்பதை இங்கே நான் கூறிக்கொள்வதில் பெருமைப்படுகிறேன்.

1995-96 ஆம் ஆண்டிற்கான கதர் உற்பத்தி மற்றும் விற்பனைக் குறியீடுகளை நான் இங்கே அறிவிக்க இருக்கின்றேன். இந்த ஆண்டு

பட்டுத் துணிகளுக்கு 22 கோடியும், கதர் துணிகளுக்கு 21 கோடியும், கிராமத் தொழில்களுக்கு 354 கோடியும் உற்பத்தி செய்து விற்பனை செய்வதற்காக வாரியத்தின் குறியீடுகள் நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றன என்பதை இங்கே கூறிக் கொள்கிறேன். இதை மிக மிக எளிதிலே எட்டுவோம் என்பதை உறுதியாகக் கூறிக் கொள்கிறேன். ஏனென்று கேட்டால், கடந்த 1994-95 ஆம் ஆண்டு முதல் இந்தக் கதர் கிராமத் தொழில் வாரியமானது அளவுக்கு அதிகமான முறையில் குறியீடுகள் நிர்ணயிக்கப்படாமல் எந்த அளவிலே குறியீட்டை எட்ட முடியுமோ அந்த அளவுக்குக் குறியீடுகள் நிர்ணயிக்கப்பட்டு அதை மிக எளிதில் அடைந்திருக்கிறது என்ற காரணத்தின் அடிப்படையிலே இந்த ஆண்டு குறியீடுகளை மிக எளிதில் அடையும் என்பதை நான் உறுதியாகக் கூறிக் கொள்கிறேன்.

தள்ளுபடி பற்றி பல்வேறு உறுப்பினர்கள் இங்கே வெட்டுத் தீர்மானங்கள் கொடுத்திருக்கிறார்கள். தள்ளுபடி என்பது மத்திய அரசு கதர் ஆணைக்குழுவினுடைய அனுமதியோடு கொடுக்கப்படுவது. மத்திய கதர் ஆணைக்குழு என்பது 90 நாட்களுக்கு சிறப்புத் தள்ளுபடியும், ஆண்டு முழுவதும் 15 சதவீதம் தள்ளுபடியும் கொடுக்கிறது. அதற்கு மேலாக கூடுதல் நாட்களுக்குத் தள்ளுபடி கொடுக்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே தெரிவித்திருக்கிறார்கள். இது குறித்து மத்திய கதர் ஆணைக்குழுவிடம் நாங்கள் கேட்டபொழுது, அவர்கள் மறுத்திருக் கிறார்கள். ஆகவே, இந்த 90 நாட்களுக்கு சிறப்புத் தள்ளுபடியும் ஆண்டு முழுவதும் 15 சதவீதம் தள்ளுபடி மட்டும் வாரியத்தின் மூலம் தள்ளுபடி சலுகைகளாகக் கொடுக்க முடியும் என்பதை நான் இங்கே கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். அந்த அடிப்படையிலே, முக்கியமான தலைவர்கள் பிறந்த நாட்கள், பண்டிகை போன்ற நாட்களுக்குச் சிறப்புத் தள்ளுபடி வழங்கப்படுகிறது. பொங்கல், ரம்ஜான் போன்ற பண்டிகை நாட்களுக்கும், பெருந்தலைவர் காமராஜ் அவர்கள் பிறந்த நாள், பேரறிஞர் அண்ணா பிறந்த நாள், தந்தை பெரியார் பிறந்த நாள், அண்ணல் காந்தியடிகள் பிறந்த நாள், தீபாவளி மற்றும் கிறிஸ்துமஸ் போன்ற பண்டிகை நாட்களுக்கும், மற்றும் ராஜாஜி பிறந்த நாள், மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் – இந்தக் கதர் துறையை கடந்த 3 ஆண்டு காலமாக வெற்றிப் பாதையிலே, வளர்ச்சிப் பாதையிலே எடுத்துச் செல்வதற்கு பல்வேறு ஆலோசனைகளை வழங்கிக் கொண்டிருக்கின்ற, தமிழகத்தைக் காத்து நிற்கின்ற புரட்சித் தலைவி –அவர்களின் பிறந்த நாள் (மேசையைத் தட்டும் ஒலி) போன்ற நாட்களுக்கு, மொத்தமாக 90 நாட்களுக்கு கதருக்கு 35 சதவீதமும், பட்டுக்கு 20 சதவீதமும், பாலியஸ்டருக்கு 30 சதவீதமும், உல்லன் துணிகளுக்கு 30 சதவீதமும் கதர் வாரியத்தின் மூலம் சிறப்புத்

தள்ளுபடி வழங்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 8-00.

கதருக்கு அடுத்தபடியாக கிராமத் தொழில். இந்தக் கிராமத் தொழிலிலே மிக மிக முக்கியமானது பனைத் தொழில். இந்தப் பனைத் தொழில் வளர்ச்சி அடைய வேண்டும். நாளுக்கு நாள் பனைத் தொழில் நலிந்து கொண்டிருப்பது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய அறிவுக்கெட்டி, இந்தியத் துணைக் கண்டத்திலே எந்த ஒரு மாநிலத்திலும் யாரும் செய்யாத அளவுக்கு, புரட்சித் தலைவி அவர்களுடைய சிந்தையில் உதித்த பனைத் தொழில் அபிவிருத்தி வாரியமானது அமைக்கப்பட்டது. இன்று தமிழகத்தில் பனைத் தொழிலின் வளர்ச்சி மிக்க சீரோடும், சிறப்போடும் (மேசையைத் தட்டும் ஒலி) நடத்தி வருகிறார்கள் என்பதைப் பெருமையோடு குறிப்பிட கடமைப்பட்டுள்ளேன். அந்த அளவுக்கு இன்றைய தினம் பனைத் தொழிலானது மிகச் சிறப்பான முறையிலே, மற்ற மாநிலங்களிலே இருக்கக்கூடிய வாரியங்களுக்கு ஒரு முன்னுதாரணமாக இருக்கிறது என்பதைக் குறிப்பிடக் கடமைப்பட்டுள்ளேன்.

தமிழ்நாடு பனைபொருள் அபிவிருத்தி வாரியமானது, மாநில அளவிலே, தமிழ்நாடு மாநில பனைவெல்லம் மற்றும் தும்பு விற்பனைக் கூட்டுறவு இணையத்தினையும், மாவட்ட அளவில் ஏழு மாவட்ட பனைவெல்லக் கூட்டுறவு சம்மேளனங்களையும், 1576 ஆரம்ப பனைவெல்ல கூட்டுறவுச் சங்கங்களையும் தன்னகத்தே கொண்டு இயங்கி வருகின்றது. இந்தப் பனைத் தொழில் அபிவிருத்தி வாரியத்தின் மூலம் கிட்டத்தட்ட தமிழகத்திலே 8 லட்சம் பேர்கள் இந்தத் தொழிலிலே ஈடுபட்டு வருகின்றார்கள். இந்த 8 லட்சம் பனைத் தொழிலாளர்களுடைய வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்காக நலிந்து கொண்டிருக்கக்கூடிய பனைத் தொழிலை உயர்த்துவதற்காக புரட்சித் தலைவியினுடைய சிந்தையில் உதித்தவையே, மேற்கூறிய அமைப்புகளின் அடிப்படை என்பதை இந்த நேரத்தில் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன்.

இதன் மூலம் வேலை வாய்ப்பு பெறக்கூடிய 8 லட்சத்து 26 நபர்கள் மூலம், இந்தப் பனைத் தொழில் மூலம் உற்பத்திச் செய்த பொருள்களின் அளவு, 13 கோடியே 98 லட்ச ரூபாயாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

அதேபோன்றுதான், இந்தப் பனைப் பொருள்களிலே உண்ணும் பொருட்கள், உண்ணாப் பொருட்கள் என்று இரு வகையாக உள்ளன. பதநீர், பனைவெல்லம், பனங்கற்கண்டு, பனஞ்சீனி, பனஞ்சீனியால் உற்பத்தி செய்யப்பட்ட பிஸ்கட், கேக், மிட்டாய் வகைகளும்,

குளிரூட்டப்பட்ட பான வகைகளும், சர்பத், பதப்படுத்தப்பட்ட ஜாம் போன்றவை உண்ணும் பொருட்களாகும். பனம் தும்பு, கயிறு போன்றவை உண்ணாப் பொருட்கள் ஆகும். இந்தப் பனை வாரியத்தின் மூலம் மேற்கூறிய பொருட்கள் மிக நல்ல முறையில் தயாரிக்கப்பட்டு வருகின்றன என்பதை இங்கே கூறிக் கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன்.

இந்தப் பனைத் தொழிலில் இருக்கக்கூடிய தொழிலாளர்கள் அறியாமையினால், அதாவது கிராமப்புறங்களிலுள்ள தொழிலாளர்கள் பெரும்பாலும் கல்வி அறிவு இல்லாதவர்களாக இருக்கிற வாய்ப்பு இருக்கிறது. ஆகவே, இந்தக் கல்வி அறிவு இல்லாத இந்தப் பனைத் தொழிலாளர்கள் கிராமத்திலே உள்ள ஏழை எளிய மக்கள் உரிமம் பெறுவதற்கு மறந்து விடுகின்றார்கள். உரிமம் பெறுவது என்பது பனை வாரியத்தின் மூலம் ஆங்காங்கு இருக்கக்கூடிய ஆரம்பப் பனை வெல்லக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் இந்த உரிமம் வழங்கப் பெறுகிறது. அந்த உரிமத்தைப் பெற்று அவர்கள் முறையாக அந்தத் தொழிலைச் செய்தால் காவல் துறையினர் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்காமல் இருக்க ஏதுவாக இருக்கும். மேலும், பல்வேறு கடன் உதவி போன்ற சலுகைகளை, மத்திய மாநில அரசுகளின் மூலமாக பனைத் தொழிலுக்குக் கொடுக்கப்படுகின்ற கடன் உதவிகளை, உரிய முறையிலே சிறந்த முறையிலே அந்தத் தொழிலைச் செய்கிறவர்கள் பெற வேண்டுமானால் அவர்கள் உரிமம் பெற வேண்டும். கிராமங்களிலே இருக்கக்கூடிய ஏழை எளிய மக்கள், உரிய முறையிலே அந்த உரிமத்தைப் பெறாமல் இந்தத் தொழிலை செய்வது என்பது சட்டப்படி குற்றமாகும். அப்படி உரிமம் பெறாமல் அவர்கள் மரம் ஏறும் காலத்தில், மழைக் காலத்திலோ, காற்றுக் காலத்திலோ, மரம் ஏறும் நேரத்தில் எதிர்பாராமல் விபத்து ஏற்படுமாயின், அவர்களுடைய குடும்பத்திற்கு முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து 10,000 ரூபாய் தருவதும் அவர்கள் பெற முடியாமல் போய்விடும். உரிமம் பெறாத காரணத்தால், அவர்கள் அந்தத் தகுதி இல்லாதவர்களாக ஆகிவிடுகிறார்கள். ஆகவே, கிராமப் பகுதிகளில் இருக்கக்கூடிய ஏழை எளிய மக்கள், வறுமைக் கோட்டிற்குக் கீழே இருக்கக்கூடிய பாமர மக்கள் முறையாக அந்த உரிமத்தைப் பெற்று, எங்கள் கதர் வாரியத்தில் இருக்கக் கூடிய ஆரம்பப் பனை வெல்லக் கூட்டுறவு சங்கங்கள் மூலம் உரிமத்தைப் பெற்று, அதற்கான தொழில் செய்வார்கள் என்றால் அவர்களுக்கும் பலன் இருக்கிறது; அவர்கள் மூலம் வாரியத்திற்கும் பலன் இருக்கிறது என்பதை இந்த மாமன்றத்திலே கூறிக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

பிற்பகல் 8-05

அதேபோலத்தான், இந்த உரிமத்தைப் பெறுவதற்கு இன்னும் ஒரு சிலர் என்ன நினைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்றால், வாரியத்திற்கு

ஏதாவது தொகை செலுத்த வேண்டும் என்று நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். முழுக்க முழுக்க அந்த உரிமமானது இலவசமாகக் கொடுக்கப்படுகிறது. அதற்கும் மேலாக, அவர் அந்தத் தொழிலைச் செய்வதற்குத் தேவையான பயிற்சிகளும் கொடுக்கப்படுகின்றன. அவர்களுக்குத் தேவையான பல்வேறு கடன் உதவிகள் கொடுக்கப்படுகின்றன. ஆகவே, இந்தப் பனைத் தொழிலில் ஈடுபட்டு இருக்கக்கூடிய அந்தத் தொழிலாளர்கள், தமிழகத்தில் அமைக்கப்பட்டு இருக்கக்கூடிய பனை வளர்ச்சி அபிவிருத்தி வாரியத்தின் மூலம் அந்த உரிமத்தை முறையாகப் பெற்று, அவர்கள் தொழிலைச் செய்தால் அவர்களுக்கும் இந்த வாரியத்திற்கும் பயன் அளிக்கும் என்பதைத் தெரிவித்து, தமிழகத்தில் இருக்கக்கூடிய அந்த ஏழை எளிய மக்கள் அதைப் பின்பற்ற வேண்டும் என்று நான் இங்கே கூறிக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

இந்தக் கிராமத் தொழில்கள் பயிற்சி மையத்தைப் பற்றி மாண்புமிகு அந்தியூர் சட்டமன்ற உறுப்பினர் அன்பிற்குரிய அண்ணன் பெரியசாமி அவர்கள் கூட கேட்டார்கள். அந்தியூர் தொகுதியிலே, அந்தியூர் ஊராட்சி ஒன்றியத்திலே பர்கூர் மலைப் பகுதியிலே அது வேண்டும் என்று கேட்டு இருக்கிறார்கள். அதற்கு அன்றே நான் பதில் சொல்லி இருக்கிறேன். இந்தக் கிராமத் தொழில்கள் பயிற்சி மையத்தை அமைப்பதற்கு மத்திய கதர்,......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்கள் ஊரும் அந்தியூர் தானே? அதனால், ஏன் திரு. பெரியசாமியை மட்டும் சொல்லுகிறீர்கள் ? (சிரிப்பு).

மாண்புமிகு திரு. பி. ஈஸ்வரமூர்த்தி : அந்தியூர் சட்டமன்ற உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை பரிசீலிக்கப்பட்டு இருக்கிறது. கிராமத் தொழில்களுக்குப் பயிற்சி மையம் தேவைதான். அதிகமான முறையில் இல்லாமல் இருந்தாலும்கூட, முக்கியமான கிராமத் தொழில்களாகப் பயன்படுத்தக்கூடிய பனைத் தொழில், மட்பாண்டம் செய்தல், பாய் நெசவு, கூடை நெசவு போன்ற கிராமத் தொழில்களுக்குத்தான் பயிற்சி மையம் தேவை என்பதை வாரியம் கருதி, தமிழகத்திலே இப்போது ஏற்கெனவே கடலூரில் ஒரு பயிற்சி மையம் அமைத்து நடத்தி வருகிறோம். அதன் மூலம் ஆண்டு ஒன்றுக்கு 110 கிராம ஏழை எளிய மக்களுக்குப் பயிற்சியை கொடுத்து வருகின்றோம். பனைப் பொருள் அபிவிருத்தி வாரியம் அமைத்த பிறகு 110 நபர்களுக்குப் பயிற்சிக் கொடுப்பது என்பது மிகக் குறைவாக இருக்கிறது என்பதை வாரியம் கருத்திலே கொண்டு, இனிமேல் ஒவ்வோர் ஆண்டும் 220 நபர்களுக்குப் பயிற்சி கொடுக்க வேண்டும் என்று வாரியத்தில் முடிவு செய்து இருக்கிறோம். அதன் அடிப்படையிலே, கடலூரிலே இருக்கக் கூடிய பயிற்சி மையத்தைப் போன்று, தெற்கு மாவட்டங்களில்—மாண்புமிகு உறுப்பினர் சிங்காரம்

அவர்கள் கூட சொன்னார்கள், தெற்கு மாவட்டங்களிலே, திருநெல்வேலி, காமராசர் மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் பனைத் தொழில் போன்ற கிராமத் தொழில்கள் மிக அதிகமான முறையிலே நடந்து வருகிறது; அந்தப் பகுதிகளிலே இருக்கக்கூடிய ஏழை எளிய மக்கள் பயன் அடையக்கூடிய அளவிலே, மதுரை பகுதியிலே ஒரு பயிற்சி மையத்தை அமைத்தால் அது மிக பயன் உள்ளதாக இருக்கும் என்று அன்பிற்குரிய மாண்புமிகு உறுப்பினர் சிங்காரம் அவர்கள் குறிப்பிட்டார்கள். மேலும், பல்வேறு உறுப்பினர்கள் இங்கே வெட்டுத் தீர்மானங்கள் கொடுத்து இருக்கிறார்கள். பயிற்சி மையங்கள் மத்திய கதர் ஆணையத்தினுடைய அனுமதியோடுதான் செய்யப்பட வேண்டும். ஏனென்று கேட்டால், அவர்கள்தான் இதற்கு நிதி கொடுக்கிறார்கள். மத்திய கதர் ஆணையத்திடம் நாம் ஏற்கெனவே இரு முறை கேட்டு இருக்கிறோம். தமிழகத்திலே கடலூரிலே இருக்கும் மையமானது 4 தென் மாநிலங்களுக்குப் பொதுவான, கதர் வாரியத்தால் அமைக்கப்பட்ட பயிற்சி மையம்; அதன் மூலம் நாம் பயிற்சிக் கொடுத்து வருகிறோம் என்பதைக் கூறி இருக்கிறேன். மேலும், மதுரைப் பகுதியிலே இதுபோன்ற ஒரு பயிற்சி மையத்தை அமைப்பதற்கு மத்திய கதர் ஆணையத்தினுடைய அனுமதியைப் பெற்று இந்த ஆண்டு நாங்கள் அமைக்க இருக்கிறோம் என்பதை நான் உறுதியாகக் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

கிராமத் தொழில்களில் மிக முக்கியமானது பனைத் தொழில். அதற்குப் பிறகு, தேனீ வளர்ப்பு என்பது கிராமத் தொழில் வாரியத்தைப் பொறுத்தவரையில் ஒரு முக்கியமான தொழில். ஏன் என்று கேட்டால், ஒவ்வோர் ஆண்டும் 5 கோடி ரூபாய் மதிப்பிற்கு தேன் உற்பத்தி செய்து எங்களுடைய காதி கிராப்ட் மூலம் விற்பனை செய்து வருகிறோம். ஆகவே, தேனீ வளர்ப்பு என்பது எங்களுடைய கதர் கிராமத் தொழில் வாரியத்தைப் பொறுத்தவரையில் ஒரு முக்கியமான தொழில். அது பனைத் தொழிலுக்கு அடுத்தபடியான முக்கியமான தொழிலாக இருக்கிறது. இந்தத் தொழில் மூலம் ஒவ்வோர் ஆண்டும் கிட்டத்தட்ட 76 ஆயிரம் நபர்களுக்கு வேலை வாய்ப்பு கொடுக்கிறோம் என்பதை கடந்த ஆண்டு மானியக் கோரிக்கையிலே குறிப்பிட்டு இருக்கிறேன். தேனீ வளர்ப்புத் தொழிலைக் கிட்டத்தட்ட 76 ஆயிரம் நபர்கள் செய்கிறார்கள். அந்த 76 ஆயிரம் நபர்களும் அந்தத் தொழிலை முழுமையான தொழிலாகச் செய்யவில்லை. 32 ஆயிரம் நபர்கள் மட்டுமே அதை முழுமையான தொழிலாகச் செய்கிறார்கள். கொல்லிமலை, கன்னியாகுமரி மாவட்டத்திலே பல பகுதிகள், குற்றாலம் பகுதியில், நீலகிரி மாவட்டத்தில் இருக்கும் மலைப் பகுதிகளில் தேனீ வளர்ப்புத் தொழிலை முழுமையான தொழிலாக செய்து வருகிறார்கள். மேலும், கிட்டத்தட்ட 30 ஆயிரம் நபர்களுக்கும்

மேலாக இதைப் பகுதி நேரத் தொழிலாகச் செய்கிறார்கள். அதாவது வீட்டிலேயே கிட்டத்தட்ட 10 தேனீப் பெட்டிகளை வைத்திருப்பார்கள். அதன் மூலம் குடும்பத்திற்கு மாதத்திற்கு 200 ரூபாயிலிருந்து ரூ. 300 வரை வருமானம் கொடுக்கக்கூடிய இந்த தேனீ வளர்ப்புத் தொழிலை அவர்கள் பகுதி நேரத் தொழிலாகச் செய்து வருகிறார்கள். இந்தத் தொழிலை ஊக்குவிக்கும் எண்ணத்தோடு வாரியத்தில் நாங்கள் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறோம். இதை மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். பி. பரமசிவம் அவர்கள் சொன்னார்கள். கடந்த வாரத்திலே ஒரு கேள்வியின்போது கூடக் கேட்டிருந்தார்கள். எதிர்பாராத விதமாக ஒரு நோயால் தாக்கப்பட்டு தேனீக்கள் மரணமடைந்தன. இந்தத் தேனீக்களைப் பாதித்த நோயை இன்னமும் இனம் கண்டுபிடிக்க முடியாத சூழ்நிலையில் இருக்கிறோம்.

பிற்பகல் 8-10

மத்திய கதர் ஆணைக் குழுவினுடைய அமைப்பாக இருக்கக்கூடிய புனேரிலே ஒரு ஆராய்ச்சி மையம் இருக்கிறது. அந்த ஆராய்ச்சி மையத்திலே இருந்து அதிகாரிகளை அழைத்து வந்து நாங்கள் காட்டியபோது அவர்களும் இந்த நோய் என்ன இனம் என்று இன்னமும் அவர்களுக்குத் தெரியவில்லை என்று குறிப்பிட்டார்கள். மேலும் இந்த நோய் பரவாமல் இருப்பதற்கு பல்வேறு நடவடிக்கைகளை எங்களுக்கு எடுத்துக் கூறியிருந்தார்கள். அதைப் பின்பற்றியதன் பலனாக இந்த ஆண்டு அந்த நோய் முழுமையான முறையிலே குறைக்கப்பட்டு நல்ல முறையிலே, சிறப்பான முறையிலே செய்யப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த ஆண்டு மேலும் கூடுதலாக 600 நபர்களுக்கு ரூபாய் 45 இலட்சம் செலவிலே, அதாவது தலா 5,750 ரூபாய் பெறுமானமுள்ள தேனீப் பெட்டிகள் ஒவ்வொருவருக்கும் கொடுப்பதற்கு வாரியத்திலே நடவடிக்கை மேற்கொண்டிருக்கிறோம் என்பதைத் கூறிக் கொள்ள விரும்புகிறேன். இதுகுறித்து வெட்டுத் தீர்மானம் எண்ணாக 3248-னைப் போன்ற வெட்டுத் தீர்மானத்தை திரு. கே. ஏ. மனோகரன் அவர்கள் முன்மொழிந்து இருக்கிறார்கள். அவர் அவையில் இல்லாமல் இருந்தாலும்கூட அவர்களுக்குப் பதில் கூறவேண்டியது என்னுடைய கடமை. ஏனென்று கேட்டால், வெட்டுத் தீர்மானத்தைப் பார்த்து நாங்கள் பயப்படுகின்றவர்கள் இல்லை. யார் வெட்டுத் தீர்மானத்தைக் கொண்டு வந்தாலும் சரி, அதற்குப் பதில் கொடுக்க வேண்டியது என்னுடைய கடமை. அந்த வெட்டுத் தீர்மானத்தை வெற்றித் தீர்மானமாக மாற்றி, அதை வெற்றுத் தீர்மானமாக மாற்றக்கூடிய புரட்சித் தலைவியினுடைய அரசிலே அந்த வெட்டுத் தீர்மானத்திற்குப் பதில் கொடுப்பது என் கடமை எனக் கருதி நான் பதிலைக் கொடுத்திருக்கிறேன்.

அதற்கு மேல், பீங்கான் கலைப் பொருள் தொழிலானது வாரியத்தினுடைய அலகுகள் மூலமாக மிகச் சிறிய அளவிலே செய்து வந்தாலும்கூட 75 ஏழையெளிய கிராமப் பெண்கள் பயன் பெறக்கூடிய அளவிலே, புரட்சித் தலைவி அவர்கள் சொல்வார்கள், ஒரு பெண் வேலைவாய்ப்பைப் பெற்றால் அந்தக் குடும்பமே வேலை வாய்ப்பு பெற்றதாகப் பொருள்படும் என்று அடிக்கடி சொல்வார்கள். ஆகவே 75 பெண்கள் வேலைவாய்ப்பு பெறக்கூடிய அளவிலே மிக நல்லமுறையிலே, சீரோடும் சிறப்போடும் விருத்தாச்சலம் பகுதியிலே செய்யக்கூடிய அந்தத் தொழிலுக்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் 6 இலட்சம் ரூபாய் செலவிலே பால்மில், அஜிடேட்டர், பில்டர் பிரஸ் போன்றவை அமைக்க முதல்வர் அவர்கள் ஒப்புதல் அளித்திருக்கிறார்கள். அந்த அமைப்புகளை அமைப்பதன் மூலம் மேலும் 75 பெண்கள் மிக நல்ல முறையிலே வேலைவாய்ப்பு பெறுவதற்கு வாய்ப்பு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், ஒருங்கிணைந்த மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் தேனீ வளர்ப்பு, கடுக்காய் பதப்படுத்தல், புளி பதப்படுத்துதல், பாய் நெசவு செய்தல், மூங்கில் பிரம்பு தொழில் போன்ற தொழில்கள் மலைப் பகுதியில் இருக்கக்கூடிய மக்களுக்கு என்று வாரியத்தின் மூலம் நல்லமுறையிலே செயல்படுத்தப்பட்டுக் கொண்டு வருகிறது.

இந்த ஆண்டே புதிய கூட்டுறவுச் சங்கங்கள் அமைத்து அந்தப் பழங்குடி மக்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காக மேற்கூறிய தொழில்களுக்கு வாரியத்தின் மூலம் நல்ல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன என்பதைக் கூறிக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன். மேலும் 200 நபர்களுக்கு இந்த ஆண்டு தச்சு, கருமார் தொழில் செய்வதற்கு அவர்களுக்குத் தேவையான உபகரணங்கள் வழங்குவதற்கு வாரியத்தில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதை இங்கே கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

மத்திய கதர் ஆணைக் குழுவினுடைய நிதி உதவியோடு தமிழகத்திலே தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் மூலம் செயல்படுத்தக்கூடிய சிறப்பு வேலைவாய்ப்புத் திட்டங்களைப் பற்றி நான் இங்கே கூறிக்கொள்கிறேன். கதர் ஆணைக் குழுவின் சிறப்பு வேலைவாய்ப்புத் திட்டத்தை தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் இராமநாதபுரம் மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் ஏற்கனவே தெரிவு செய்து நல்லமுறையிலே இதை நாம் நடத்தி வருகின்றோம். வருகின்ற ஆண்டு, அதாவது நடப்பு ஆண்டு, தர்மபுரி மற்றும் வட ஆற்காடு-அம்பேத்கர் ஆகிய இரு மாவட்டங்களைத் தெரிவு செய்து இத்திட்டத்தின்கீழ்

ஒவ்வொரு மாவட்டத்திலும் 10 ஆயிரம் கிராமக் கைவினைஞர்களுக்கு நடப்பு 8-வது திட்டக் காலத்திற்குள்ளாக வேலைவாய்ப்பு அளிக்க வேண்டுமென்ற அடிப்படையிலே இந்தத் திட்டமானது மிகச்சிறப்பான முறையிலே செயல்படுத்தப்பட்டுக் கொண்டு வருகிறது. இந்தத் திட்டத்திற்கான நிதி ஆதாரத்தை கதர் ஆணைக் குழு ஊராட்சி வளர்ச்சி திட்ட முகமை மற்றும் தேசிய வங்கியிலிருந்து எதிர்பார்த்திருக்கிறோம். இது போன்ற நிறுவனங்களிடமிருந்து நிதியைப் பெற்று இந்தச் சிறப்பு வேலைவாய்ப்புத் திட்டத்தை வாரியமானது மிக நல்ல முறையிலே செயல்படுத்துவதற்குத் திட்டமிடப்பட்டிருக்கிறது. மேலும், சிறப்பு மேம்பாட்டுத் திட்டம், தொகுப்பு வளர்ச்சித் திட்டம், மேற்கு தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம், மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம், விவசாய வளர்ச்சிக்கான பன்னாட்டு நிதி உதவி போன்ற திட்டங்கள் மூலம் மலை வாழ் மக்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காக பல்வேறு வேலை வாய்ப்புகளை உருவாக்கிக் கொடுக்க வேண்டுமென்ற எண்ணத்தின் அடிப்படையிலே இந்த ஆண்டு விரைவான திட்டங்களை வாரியமானது செயல்படுத்தத் திட்டமிட்டு இருக்கிறது. மேற்கூறிய அந்தத் திட்டங்களுக்காக மத்திய அரசிடமிருந்து ஏராளமாக நிதி கேட்கப்பட்டுள்ளது. அவர்கள் தாராளமாக தராவிட்டாலும் பரவாயில்லை, பாரபட்சம் இல்லாமல் கொடுத்தாலே மிகச் சிறப்பான முறையிலே வாரியத்தின்மூலம் மேற்கூறிய தொழில்களைச் செய்வதற்கு சாத்தியக்கூறுகள் இருக்கின்றன என்பதை நான் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். அதற்கு மேலாக மாண்புமிகு உறுப்பினர் திரு. சிங்காரத்தினுடைய கவனத்தைக் கவரக்கூடிய அளவிலே ஒரு சுவையான செய்தி. வடக்கே இருந்து வந்த வளமான செய்தி என்று தலைப்பே கொடுத்திருக்கிறேன் இதற்கு.

பிற்பகல் 8-15

மத்திய கதர் ஆணைக் குழுவின் மூலம் எட்டாவது திட்ட காலத்திற்குள்ளாக 20 லட்சம் கைவினைஞர்களுக்குக் கூடுதல் வேலைவாய்ப்பு ஏற்படுத்துவதற்காக, கதர் உற்பத்தியை இரண்டு மடங்காக உயர்த்துவதற்காக, கதர் கிராமத் தொழில் பொருட்களை பெருமளவு ஏற்றுமதி செய்யவும், விற்பனை செய்யவும் மேற்கூறிய திட்டங்களுக்காக அகில இந்திய அளவிலே 5,600 கோடி ரூபாய் எட்டாவது திட்ட ஒதுக்கீட்டுக்கு கொடுக்கப்படுவதாக மாண்புமிகு மத்திய நிதியமைச்சர் டாக்டர் மன்மோகன்சிங் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்த அடிப்படையிலே 1995-96 மற்றும் 1996-97 ஆகிய அடுத்து வரக்கூடிய இரண்டு ஆண்டுகளுக்கு ஆயிரம் கோடி ரூபாய் ஒதுக்கப்படுவதாக இந்த

ஆண்டே குறிப்பிட்டிருக் கிறார்கள். அப்படி ஆயிரம் கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருந்தால் இந்தியாவில் இருக்கக்கூடிய அனைத்து கிராமத் தொழில்களும் மிக நல்லமுறையிலே பல்வேறு வளர்ச்சியடைய வாய்ப்புகள் இருக்கின்றன என்பதை நான் இங்கே கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்தத் திட்டங்களுக்காக தமிழ்நாடு கதர் கிராம தொழில் வாரியத்தின்மூலம் 2 லட்சம் கைவினைஞர்களுக்கு வேலைவாய்ப்பு கொடுப்பதற்காக ரூ.676 கோடிக்கு திட்டங்கள் தீட்டப்பட்டு மத்திய கதர் ஆணைக் குழுவுக்கு அனுப்பியிருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) அவர்கள் இதை கருணையோடு பரிசீலிப்பார்கள் என்று கருதுகிறேன். இந்தத் திட்டத்தில் நூற்பு அதிகரித்தல், நெசவு அலகுகள் விரிவாக்கம் செய்தல், பட்டு ஏற்றுமதி பிரிவு ஏற்படுத்தல், தோல்பொருட்கள் உற்பத்தி அலகுகள் அதிகரித்தல், கிராம கைவினைஞர்களுக்குப் பயிற்சி நிலையங்கள் அமைத்தல், அலுமினியத் தொழில், பிளாஸ்டிக் தொழில், கிராமப்புற மின் மற்றும் மின்னணுப் பொருள் தொழிற்பேட்டைகள் நிறுவுதல் ஆகிய கிராமத் தொழில்களுக்காக தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின்மூலம் மேற்கூறிய இந்தத் திட்டங்களுக்காக ரூ.676 கோடிக்கு திட்டத்தை மத்திய அரசிடம் அனுப்பியிருக்கிறோம். அவர்கள் மனசாட்சியோடும், மனிதாபி மானத்தோடும் பரிசீலித்தால் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் மிக விரைவிலே பல்வேறு வளர்ச்சி அடையும் என்பதை இங்கே தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

வெட்டுத் தீர்மானத்தில் குறிப்பிட்டிருக்கின்றார்கள். நலிந்திருக்கக் கூடிய கதர் தொழிலை ஊக்குவிக்க வேண்டுமென்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அதுபோன்று நலிந்து கொண்டிருக்கக் கூடிய அந்தத் தொழிலை செம்மைப்படுத்துவதற்கு இது உதவியாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன். வாய்ப்பு இங்கே உண்டு. வசதி அங்கே உண்டு.

அண்ணல் காந்தியடிகளுடைய 125-வது பிறந்தநாள் சிறப்புத் திட்டமாக தமிழகத்திலே கடந்த அக்டோபர் 2 ஆம் தேதி முதல் பல்வேறு திட்டங்களை மேற்கொண்டு மிக நல்லமுறையிலே வாரியமானது செயல்படுத்தி வந்திருக்கிறது. அதன் அடிப்படையிலே 4 ஊராட்சி ஒன்றியங்களைத் தெரிவு செய்து ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் 2 கோடி ரூபாய் அடிப்படையிலே இந்தத் திட்டமானது மிக நல்லமுறையிலே, சிறப்பான முறையிலே வாரியமானது செயல்படுத்திக்கொண்டு வந்திருக்கிறது. ஒன்று பர்கூர் ஊராட்சி ஒன்றியம். நரிக்குடி ஊராட்சி ஒன்றியம், ஜவ்வாது மலை, விளாத்திகுளம் ஆகிய 4 ஊராட்சி ஒன்றியங்களைத் தெரிவு செய்து அந்த ஊராட்சி ஒன்றியங்களுக்கு

தலா 2 கோடி ரூபாய் திட்டத்திலே (மேசையைத் தட்டும் ஒலி) இந்தக் கிராமத் தொழில்கள் வளர்ச்சிக்கு வாரியமானது வழிவகை செய்திருக்கிறது என்பதைக் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். முதல் கட்டமாக பர்கூர் ஊராட்சி ஒன்றியத்திலே ஜெகதேவி, திப்பனூர், கொராக்குப்பம் ஆகிய கிராமங்களில் 6 கதிர் இராட்டைகளைக் கொண்ட நூற்பு நிலையங்கள் இந்த மாதம் இறுதிக்குள்ளாக செயல்படுத்த நடவடிக்கை மேற்கொண்டுள்ளோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஏற்கெனவே பயனாளிகளைத் தெரிவு செய்து மாவட்ட ஊரக வளர்ச்சி திட்ட முகமை மூலம் பயிற்சி கொடுக்கப்பட்டு வருகிறது. அனைவரும் பெண்களே என்பது குறிப்பிடத்தக்கது.

பிற்பகல் 8-20

மாண்புமிகு உறுப்பினர் திரு. சிங்காரம் அவர்களால் கொடுக்கப்பட்ட வெட்டுத் தீர்மானத்தில், கதரின் புனிதத்தைக் கெடுக்கும் வகையிலே கதர் நூல்களோடு மில் நூல்களைச் சேர்த்து இங்கே கதர் துணி நெசவு செய்யப்படுகிறது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இது உண்மை. உண்மை தான். அது இல்லையென்று சொல்லவில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நான் ஒரு விளக்கத்தை இங்கே கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். கலப்படமாக சரக்கு இருக்கிறது. வடக்கே இதைப் பார்ப்பதில்லை. அது புலப்படும் நாள் வரும் வரைக்கும் தெற்கே குறை பேசி குற்றமில்லை. அதாவது, மத்திய கதர் ஆணைக் குழுவினுடைய அங்கீகாரத்தைப் பெற்ற சில கதர் நிறுவனங்கள் தமிழகத்தில் இருக்கின்றன. கதர் கிராமத் தொழில் வாரியத்தைத் தவிர, அந்த நிறுவனங்களும் கதரை நெசவு செய்கிறன்றன, விற்பனை செய்கின்றன. தள்ளுபடி போன்ற சலுகைகளை மத்திய கதர் ஆணைக் குழுவிடம் பெற்று, இதுபோன்ற நடவடிக்கைகளைச் செய்கிறார்கள். அவர்கள் வியாபார நோக்கோடு மற்ற துணிகளோடு போட்டி போட்டுக்கொண்டு செய்யக்கூடிய அளவிலே, கதர் நூலோடு மில் நூலைச் சேர்ப்பது என்பது உண்மைதான். அது எந்த நிறுவனம் என்று குறிப்பிட விரும்பவில்லை. மத்திய கதர் ஆணைக் குழுவின் அங்கீகாரம் பெற்ற நிறுவனங்கள், பல்வேறு நிறுவனங்கள் இருக்கின்றன. ஆனால் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தால் தயாரிக்கப்படக்கூடிய கதர் ஆடைகளில் இது போன்ற நிலைமைகள் இருப்பதாக மாண்புமிகு உறுப்பினர் திரு. சிங்காரம் அவர்கள் உணர்ந்து, இப்படிக் கொடுத்திருக்கிறார்கள் என்று கருதுகிறேன். இதுபோன்ற தவறுகள் எங்களுடைய வாரியத்தில் நடைபெறவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) புரட்சித் தலைவி ஆட்சிக் காலத்தில் இங்கே இதுபோன்ற தவறுகள் நிச்சயமாகத் தெரிந்து நடைபெறாது. தெரியாமல் எங்கேயாவது நடந்திருந்தால் நிச்சயமாக நாங்கள் திருத்திக் கொள்வோம். (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சிங்காரம், வடக்கே உங்கள் ஆட்கள்கிட்டே சொல்லுங்கள்.

திரு. ஆர். *சிங்காரம் :* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கொடுத்த வெட்டுத் தீர்மானத்தை ஏற்று, உண்மை என்று அதற்கு தக்க பதில் அளித்தமைக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதேநேரத்தில் யார் யார் அப்படிச் செய்கிறார்கள், மத்திய அரசுக்கு தமிழக அரசு இது பற்றிப் புகார் செய்திருக்கிறதா, அப்படிப் புகார் செய்யவில்லை என்று சொன்னால் புகார் செய்ய அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

மாண்புமிகு திரு. பி. ஈஸ்வரமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சிங்காரம் அவர்கள் சொன்னதுபோன்று அந்தத் தகவலை மத்திய கதர் ஆணைக் குழுவிற்கு 2 முறை கடிதம் மூலம் தெரிவித்திருக்கிறோம். உங்களுடைய அங்கீகாரம் பெற்ற நிறுவனங்கள் செய்யும் தவற்றின் அடிப்படையிலே கதரின் புனிதம் கெடுகிறது, தமிழக கதர் கிராமத் தொழில் வாரியத்திற்குக் கெட்ட பெயர் வருகிறது, ஆகவே இது போன்ற நிறுவனங்களுடைய அங்கீகாரத்தை நீங்கள் ரத்து செய்ய வேண்டும், மேலும் அந்த நிறுவனங்களுக்குக் கொடுக்கப்படக்கூடிய தள்ளுபடி போன்ற சலுகைகளை நீங்கள் நிறுத்த வேண்டும் என்று நாங்கள் கோரியிருக்கிறோம். 2, 3 முறை கடிதம் எழுதி இருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கதர் ஆடை உடுத்துகிற திரு. சிங்காரமும் சரி, அவருடைய நண்பர்களும் சரி, அதைத்தான் விரும்பி அணிகிறீர்கள் என்று ஒரு தகவல் இருக்கிறது. கலப்படம் செய்ததுதானா உங்களுடையது ? (மேசையைத் தட்டும் ஒலி).

திரு. ஆர். *சிங்காரம் :* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் சொன்னது என்னுடைய கதரில் பரிசுத்தம் இல்லை என்பது மாதிரி தோன்றுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இல்லை, இல்லை.

திரு. ஆர். *சிங்காரம் :* அது அவைக் குறிப்பிலே இருக்கிறது. ஏனென்றால் எங்களுடைய கதர் பரிசுத்தமானது, ஒரிஜினல், உண்மையானது, நேர்த்தியானது, நேர்மையானது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதுவும் அவைக்குறிப்பில் இருக்கலாம்.

திரு. ஆர். சிங்காரம் : சில கதர் அப்படி இருக்கலாம். அந்தக் கதர் பற்றி நீங்கள் ரிப்போர்ட் பண்ணுங்கள் என்று சொல்லுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதைத்தான் அமைச்சர் சொல்லுகிறார். தமிழ்நாட்டில் சில கலப்பட கதர் எல்லாம் வந்துவிட்ட காரணத்தால்தான் எங்கெங்கோ போய்க் கொண்டிருக்கிறது. அதைத்தான் அமைச்சர் வருத்தத்தோடு சொல்லுகிறார். (மேசையைத் தட்டும் ஒலி).

மாண்புமிகு திரு. பி. ஈஸ்வரமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சிங்காரம் அவர்கள் அணிந்திருக்கக்கூடிய கதர் தூய்மையானது. ஏனென்றால் அது நம்முடைய காதி கிராப்டிலே பெற்றது. இன்னும் பல்வேறு உறுப்பினர்கள் தங்களுடைய வெட்டுத் தீர்மானங்களிலே, காந்தியினுடைய கனவுகளை நிறைவேற்றும் வகையிலே இந்தியத் துணைக் கண்டத்திலே சீரோடும் சிறப்போடும் நடந்து வரக்கூடிய கதர் வாரியத்திலே தியாகிகளுடைய வாரிசுகளுக்கு வேலை வாய்ப்பு கொடுக்கப்பட வேண்டுமென்று கோரியிருக்கிறார்கள். கதர் கிராமத் தொழில் வாரியத்தினுடைய விதிகள் மத்திய கதர் ஆணைக் குழுவால் நிர்ணயிக்கப்பட்டது. வாரியத்திலே இது போன்ற நடவடிக்கைகள் எடுத்தால் மத்திய கதர் ஆணைக் குழுவினுடைய கோபத்திற்கு நாங்கள் ஆளாவோம். ஆகவே, வாரிய விதிகளில் தியாகிகளினுடைய வாரிசுகளுக்கு முன்னுரிமை கொடுக்க எந்தவித சாத்தியக்கூறும் இல்லை. ஆகவே, வேலை வாய்ப்புத் துறையில் அவர்கள் வைத்திருக்கக்கூடிய தகுதியின் அடிப்படையில் வேண்டுமானால் அவர்களுக்கு வாய்ப்புக் கொடுக்கலாம் என்பதை இங்கே கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மின்விசைச் செக்குகள் பற்றி பல்வேறு உறுப்பினர்கள் வெட்டுத் தீர்மானங்களில் குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்த மின் விசைச் செக்கானது, மத்திய கதர் ஆணைக் குழுவால் நிர்ணயிக்கப்பட்ட விலை ரூ.17,470/- என்ற அடிப்படையிலே வாரியத்தின்மூலம் கொடுக்கப்பட்டு வந்தது. அந்தத் தொகை போதாது என்று மத்திய கதர் ஆணைக் குழுவிடம் நாங்கள் கடந்த சில ஆண்டுகளாகக் கேட்டுக்கொண்டு இருக்கிறோம். கதர் ஆணைக் குழு ரூ.27,650/- என்று விலை நிர்ணயித்தால்தான் மின்விசைச் செக்குகளைக் கிராமப்புறங்களில் இருக்கக்கூடிய அந்த எண்ணெய் ஆட்டக்கூடிய தொழிலாளர்களுக்குக் கொடுக்க வாய்ப்பு இருப்பதால் அதை எடுத்துக் கூறினோம். ஆனால், கடைசியாக கதர் ஆணைக் குழு 20,699 ரூபாய் மட்டுமே அனுமதித்து இருக்கிறது. அந்த அடிப்படையில் இந்த ஆண்டு 110 நபர்களுக்கு வாரியத்தின் மூலம் கொடுக்கப்பட இருக்கிறது. மேலும் கடந்த ஆண்டு மிகச் சீரோடும் சிறப்போடும் புரட்சித் தலைவி ஆட்சிக் காலத்திலே நடைபெற்ற இந்த

மானியக் கோரிக்கையில் தமிழ்நாடு கதர் வாரியத்தின் பல்வேறு அமைப்புகள் பற்றியும் செயல்பாடுகள் பற்றியும் மிக விளக்கமாகவும் தெளிவாகவும் எடுத்துக் கூறியிருந்தேன். மேலும் இன்று தேவையான விளக்கங்களை நான் கொடுத்திருப்பதாக நம்புகிறேன். (குறுக்கீடு) மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் அறிவிப்புக்குப் போகலாம் என்று சொல்கிறார்கள். அறிவிக்கப் போகிறேன் என்பதை அறிந்துதான் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள் என்று கருதுகிறேன். வாரியத்தின் மூலம் இந்த ஆண்டு செய்யக்கூடிய சில புதிய அறிவிப்புகளைக் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 8-25

தமிழ்நாடு கதர் கிராம வாரியத்தில், கிராமப்புறங்களில் ஏழை எளிய மக்கள் எஸ்.எஸ்.எல்.சி. தேர்ச்சி பெற்று 5 ஆண்டுகளுக்கு மேல் முதுநிலை நூற்பாளர்களாக பணி முடிக்கப் பெற்றவர்கள் பல்வேறு ஆட்சிக் காலங்களில் பணி நிரந்தரம் செய்ய வேண்டுமென்று போராடி இருக்கிறார்கள். எந்த ஆட்சிக் காலத்திலும் அது செய்யப்படவில்லை. புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். ஆட்சிக் காலத்தில் 1986 ஆம் ஆண்டு ஒரு முறை செய்யப்பட்டது. அதற்குப் பிறகு இதய தெய்வம் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் புரட்சிகரமான ஆட்சியிலே 1991 ஆம் ஆண்டு அது நிறைவேற்றப்பட்டது. அதற்குப் பிறகு இன்று தமிழகத்தில் இருக்கிற முதுநிலை நூற்பாளர்கள் தகுதியின் அடிப்படையில் அதாவது எஸ்.எஸ்.எல்.சி. தேர்ச்சி பெற்றும், 5 ஆண்டுகளுக்கு மேல் பணி மூப்பு பெற்றவர்களுக்கு வேலை வாய்ப்புத் துறையின் அனுமதியோடு பணி நிரந்தரம் செய்வதற்கு வாரியம் நடவடிக்கை எடுத்துள்ளது என்பதைக் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி). மேலும் திரு. சிங்காரம் போன்ற காங்கிரஸ் உறுப்பினர்கள் உட்பட ஆளுங்கட்சித் தரப்பிலும் பல மாண்புமிகு உறுப்பினர்கள் கதர் விற்பனை வாரியத்தின் மூலம் நடக்கும் விற்பனையில் பரிசுத் திட்டத்தை அறிவிக்க வேண்டுமென்று கோரியிருக்கிறார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் இந்தக் கதர் விற்பனையை ஊக்குவிப்பதற்காக நடவடிக்கைகள் எடுத்திருக்கிறார்கள். பொதுவாக, தீபாவளி நேரங்களில் 90 விழுக்காடு அளவிற்கு விற்பனையாகும்போது, அந்த அடிப்படையிலே ரொக்கமாக கதர் கொள்முதல் செய்யக் கூடியவர்களுக்கு, ரொக்க விற்பனை பரிசுத் திட்டம் ஒன்றை நடைமுறைக்குக் கொண்டுவருவதற்கு வாரியம் சில நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

ஆயிரம் ரூபாய் மதிப்பிற்கு மேல் ரொக்கம் செலுத்தி, கதர் ரகங்கள் வாங்குபவர்களுக்கு ஒவ்வொரு மாவட்டத்திற்கும் - அதாவது

டெவலப்மெண்ட் டிஸ்டிரிக்ட்டுக்கு மூன்று பரிசுகள் வழங்கப்படும். மூன்று பரிசுக்குரிய நபர்கள் குலுக்கல் முறையில் மாவட்ட ஆட்சித் தலைவரால் தேர்ந்தெடுக்கப்படுவர் என்ற நோக்கத்தோடு விற்பனைத் திட்டம் அறிவிக்கப்படுகிறது. மேலும் அதிக அளவில் கதர் விற்பனையை இது பெருக்கும் என்ற நம்பிக்கையில் இந்த ஆண்டு கொண்டுவரப்படுகிறது என்பதை அறிவிக்க விரும்புகிறேன்.

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் மகிழ்ச்சி அடைவார்கள் என்று நம்புகிறேன். கதர் நெசவாளர்களின் நலனுக்காக தாராபுரம், வெள்ளக்கோயில், காங்கேயம் போன்ற பகுதிகளில் நெசவாளர்கள் அதிக அளவில் இருப்பதால் தாராபுரத்தில் ஒரு சமுதாயக்கூடம், அதாவது திருமண மண்டபம் அமைக்க வாரியத்தால் முடிவெடுக்கப்பட்டிருக்கிறது என்பதைக் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். மேலும், இப்போது தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் வேலூர், திருச்சி, மதுரை மற்றும் திருப்பூர் ஆகிய இடங்களைக் கொண்ட நான்கு மண்டலங்களாக செயல்பட்டு வருகிறது. நிர்வாக நலன் கருதியும் எண்ணற்றவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் பொருட்டும், அதை 6 மண்டலங்களாக உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று மத்திய கதர் ஆணைக்குழுவை நாங்கள் பல ஆண்டுகளாகக் கேட்டு வந்திருக்கிறோம். மத்திய கதர் ஆணைக்குழு இந்த ஆண்டு அதைப் பரிசீலிக்கலாம் என்று கூறியிருக்கிறார்கள். அவர்கள் அனுமதியோடு இந்த 4 மண்டலங்கள் 6 மண்டலங்களாக பிரிக்கப்படுவதற்கு வாரியத்தால் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ராசிபுரம் சட்டமன்ற உறுப்பினர் திருமதி பழனியம்மாள் அவர்கள் பேசும்போது ராசிபுரத்தில் ஒரு பட்டு நெசவுக் கூட்டுறவுச் சங்கம் அமைக்க வேண்டுமென்று கேட்டார்கள். ஏற்கெனவே அங்கு ஒரு பட்டுப்புடவை உற்பத்தி நிலையம் மிக நல்ல முறையில் செயல்பட்டு வந்திருக்கிறது. அதை வேண்டுமானால் விரிவாக்கம் செய்யலாம். அடுத்தபடியாக 20 நூற்பு மையங்கள் இந்த ஆண்டு வாரியத்தின் மூலம் தொடங்கப்படுகின்ற நேரத்திலே ராசிபுரத்துக்கு ஒரு நூற்பு மையம் வேண்டுமென்றும் கேட்டிருக்கிறார்கள். இந்த ஆண்டு அது கொடுக்கப்படும் என்பதைக் கூறிக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

பிற்பகல் 8-30

பனை மரங்கள் ஏறும் கருவி கேட்டிருக்கிறார்கள். அந்தக் கருவியானது கிடைக்கக்கூடிய பனை தொழிலாளர்கள், அவர்களுடைய வாழ் நாள் முழுவதும் இதய தெய்வம் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு

நன்றி கூறக் கடமைப்பட்டவர்களாக இருக்கிறார்கள். ஏனென்றால் நாங்கள் வாரியத்தின் மூலம் 300 நபர்களுக்கு இந்தப் பனை மரம் ஏறும் கருவிகளைக் கொடுக்கலாம் என்று நாங்கள் பேசுகிறபோது புரட்சித் தலைவி அவர்கள் சொன்னார்கள், 300 நபர்கள் என்பது மிகவும் குறைவாக இருக்கிறது. ஒரு ஆயிரம் பேர்களுக்காவது கொடுத்தால்தான் இந்தத் திட்டத்தை நாம் செயல்படுத்துகிறோம் என்பது தெரியும் (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, பனை தொழிலாளர்களுக்காக ஆயிரம் நபர்களுக்குக் கொடுங்கள் என்று மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் சொன்னார்கள். ஆகவே, அந்த அடிப்படையில் தலா ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள பனை ஏறும் கருவியானது ஆயிரம் நபர்களுக்கு தமிழ்நாடு முழுவதும் நாங்கள் கொடுக்கிறோம். அந்த அடிப்படையில் இந்த ஆண்டு நமது இராசிபுரம் சட்டமன்ற உறுப்பினர் கேட்டுக் கொண்டதற்கிணங்க ஏழு பனைவெல்ல கூட்டுறவுச் சம்மேளனங்கள் இருக்கக்கூடிய சேலம் மாவட்டத்திற்குட்பட்ட பகுதியில் இராசிபுரம் அமைந்திருக்கிறது. ஆகவே, சேலம் மாவட்ட பனை வெல்ல கூட்டுறவுச் சங்கத்திற்கு நாங்கள் 150 ஒதுக்கி இருக்கிறோம். அந்த அடிப்படையில் உங்களுக்கு தகுதி அடிப்படையில் உங்களுடைய பனைத் தொழிலாளர்களுக்கு கிடைக்கும் என்பதைக் கூறிக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

ஆகவே, இந்தக் கதர் மற்றும் கிராமத் தொழில் துறையினுடைய மானியக் கோரிக்கையில் கிட்டத்தட்ட 78 வெட்டுத் தீர்மானங்களை மாண்புமிகு காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் பெரும்பாலும் கொடுத்திருக்கிறார்கள். ஆளும் கட்சித் தரப்பிலிருந்தும் * கோரிக்கைகள் வைக்கப்பட்டிருக்கின்றன. (குறுக்கீடுகள்) ஆளும் கட்சியின் தரப்பிலே கோரிக்கையாக கேட்கப்பட்டிருக்கிறது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர்களின் கோரிக்கைகள், அவைப் பதிவேட்டில் பதிவாகி இருக்கும் என்று கருதுகிறேன். என்னுடைய பதிலுரையில் வெட்டுத் தீர்மானங் களுக்கும், மாண்புமிகு உறுப்பினர்களுடைய கோரிக்கைகளுக்கும் தகுந்த பதில் கிடைத்திருக்கும் என்றே கருதுகிறேன். ஆகவே, 1995-96 ஆம் ஆண்டிற்கான கதர் மற்றும் கிராமத் தொழில்கள் துறை மீதான மானியக் கோரிக்கையில் கோரப்பட்டிருக்கிற தொகைக்கு மாண்புமிகு உறுப்பினர்கள் மனமுவந்து, வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்று, ஒப்புதல் அளிக்க வேண்டுமென்று கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுத் தீர்மானம் என்றாலே பலருக்கு அலர்ஜியாக இருக்கிற நேரத்தில் (மேசையைத் தட்டும் ஒலி)

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க மாற்றப்பெற்றது.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வெட்டுத் தீர்மானங்களுக்கு எல்லாம் ரொம்பவும் இலாவகமாகப் பதில் சொல்லி இங்கே விளக்கம் அளித்தது நன்றாக இருந்தது. அதேநேரத்தில் வெட்டுத் தீர்மானங்களை எதிர்க்கட்சி சார்பிலே கொடுத்திருப்பதாகச் சொன்னார்கள். ஆளும் கட்சி சார்பிலேயும், கொடுத்திருப்பதாகச் சொன்னார்கள். ஆளும் கட்சி சார்பில் வெட்டுத் தீர்மானம் கொடுப்பது என்பது, எந்த அளவிலேயும், எந்த உறுப்பினரும் வெட்டுத் தீர்மானம் கொடுக்கிற உணர்வோடு இந்த அவையிலே யாரும் இருக்க மாட்டார்கள். அந்த அளவிலே இல்லை. இப்போது அமைச்சர் அவர்கள் சொன்னதிலே மற்ற இடங்களிலே எல்லாம் ஆளும் கட்சியிலேயும் வெட்டுத் தீர்மானம் கொடுக்கிற நிலைமை ரொம்ப சர்வசாதாரணமாக வந்து விட்டதாலே அப்படிச் சொன்னார்கள் என்று நினைக்கிறேன்.

மாண்புமிகு திரு. பி. ஈஸ்வரமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளும் கட்சியிலே பல்வேறு கோரிக்கைகளைக் கேட்டிருந்தார்கள். வெட்டுத் தீர்மானம், வெட்டுத் தீர்மானம் என்று பேசிக் கொண்டு வந்த நேரத்திலே ஆளும் கட்சித் தரப்பிலே கொடுத்ததாக நான் தவறாகச் சொல்லி விட்டேன். ஆளும் கட்சி தரப்பிலே பலர் கோரிக்கைகளை வைத்திருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவ்வாறு திருத்தப்படுகிறது. ஆளும் கட்சி சார்பிலே கோரிக்கைகளும், எதிர்க்கட்சி சார்பிலே கொடுக்கப்பட்ட வெட்டுத் தீர்மானங்களும் என்று திருத்தப்படுகிறது. ஏனென்றால் வெட்டுத் தீர்மானத்திலேதான் இந்தியாவில் ஆழ்ந்த சிந்தனையில் பலர் இருந்து கொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி).

மூன்று அமைச்சர்கள் பதில் சொல்லி இங்கே மூன்று துறைகள் எடுத்துக்கொண்டதால் இவ்வளவு நேரம் ஆகியிருக்கிறது. நாள்தோறும் இப்படி நேரம் ஆக்குவேன் என்று மாண்புமிகு உறுப்பினர்கள் யாரும் அஞ்ச வேண்டாம். இனி நாளையிலிருந்து தனித்தனி அமைச்சர்களின் துறைகளே மாலை நேரத்தில் வருவதனாலே வேகமாக முடித்து விடலாம். ஆனால் மாலை நேரமும் அவை இருக்கிற போது காலையில் எந்த அளவுக்கு ஆர்வத்தோடு வந்து இருக்கிறீர்களோ அந்த அளவுக்கு உறுப்பினர்கள் வந்து இருக்க வேண்டும். சில இருக்கைகளைப் பார்க்கிறபோது அந்த உறுப்பினர்களை நீங்கள்தான் பார்த்துச் சொல்ல வேண்டும் என்று இப்போது இருக்கிற உறுப்பினர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

(அ) கோரிக்கை எண் 47 - ஊரகத் தொழில்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கை எண் 47 - ஊரகத் தொழில்கள். வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. ஆர். சிங்காரம்.

திரு. ஆர். சிங்காரம் : இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சிங்காரம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"ஊரகத் தொழில்கள் பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ.55,72,14,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்,

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

பிற்பகல் 8-35

(ஆ) கோரிக்கை எண் 59 - ஊரகத் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கை எண் 59 - ஊரகத் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. ஆர். சிங்காரம்.

திரு. ஆர். சிங்காரம் : இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஆர். சிங்காரம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"ஊரகத் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு பற்றிய 59 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ.4,53,67,000-க்கு மேற்படாத தொகை

அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்,

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி).

(இ) கோரிக்கை எண் 24 - தொழில்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கை எண் 24 - தொழில்கள். வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. ஆர். சிங்காரம்.

திரு. ஆர். சிங்காரம் : இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஆர். சிங்காரம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"தொழில்கள் பற்றிய 24 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ.21,68,25,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்,

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி).

(ஈ) கோரிக்கை எண் 53 - தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கை எண் 53 - தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. ஆர். சிங்காரம்.

திரு. ஆர். சிங்காரம் : இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஆர். சிங்காரம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு பற்றிய 53 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ.24,72,19,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்,

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி).

(உ) கோரிக்கை எண் 26 - கதர்-கிராமத் தொழில்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கை எண் 26 - கதர்-கிராமத் தொழில்கள். வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. ஆர். சிங்காரம்.

திரு. ஆர். சிங்காரம் : இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஆர். சிங்காரம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"கதர்-கிராமத் தொழில்கள் பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ.12,63,44,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு

வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்,

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி).

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (25-4-1995) காலை 10.00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 8.37 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்

111. 1944 ஆம் ஆண்டு தமிழ்நாடு வட்டிக்குக் கடன் கொடுப்பவர்கள் விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் 10-10-1994 ஆம் நாளிட்ட 227 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1943 ஆம் ஆண்டு தமிழ்நாடு வட்டிக்குக் கடன் கொடுப்பவர்கள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1943) 22(4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது).

112. 1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு வடிசாலை விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து, மதுவிலக்கு ஆயத்தீர்வைத் துறையின் 28-12-1992 ஆம் நாளிட்ட 295 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54(3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது).

113. 1981 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்தியாவில் தயாரிக்கப்பட்ட அயல்நாட்டு சாராவிகள் (உற்பத்தி) விதிகளில் திருத்தமொன்று

வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்,

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி).

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (25-4-1995) காலை 10.00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 8.37 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்

111. 1944 ஆம் ஆண்டு தமிழ்நாடு வட்டிக்குக் கடன் கொடுப்பவர்கள் விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் 10-10-1994 ஆம் நாளிட்ட 227 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1943 ஆம் ஆண்டு தமிழ்நாடு வட்டிக்குக் கடன் கொடுப்பவர்கள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1943) 22(4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது).

112. 1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு வடிசாலை விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து, மதுவிலக்கு ஆயத்தீர்வைத் துறையின் 28-12-1992 ஆம் நாளிட்ட 295 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54(3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது).

113. 1981 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்தியாவில் தயாரிக்கப்பட்ட அயல்நாட்டு சாராவிகள் (உற்பத்தி) விதிகளில் திருத்தமொன்று

செய்வது குறித்து மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையின் 10-6-1993 ஆம் நாளிட்ட 108 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54(3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது).

114. சென்னை, திருவாளர்கள் வாவின் இந்தியா லிமிடெட் 1-4-1994 முதல் 31-3-1999 வரையிலான ஐந்து ஆண்டுகளுக்கு செலுத்தப்பட வேண்டிய விற்பனை வரியை தள்ளி வைப்பது குறித்து வணிக வரிகள்–சமய அறக்கட்டளைகள் துறையின் 8-12-1994 ஆம் நாளிட்ட 388 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது).

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

126. மானியக் கோரிக்கை எண்கள் 47 மற்றும் 59 - ஊரகத் தொழில்கள் மற்றும் ஊரகத் தொழில்கள் மீதான மூலதனச் செலவு பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1995-96. (தமிழ், ஆங்கிலம்).

127. ஊரக மற்றும் சிறு தொழில்கள் பற்றிய சாதனைத் திட்டம், 1995-96. (தமிழ், ஆங்கிலம்).

128. மானியக் கோரிக்கை எண் 47-ன் கீழ் பட்டு வளர்ச்சித்துறை மற்றும் தமிழ்நாடு கைத்தறித் தொழில்கள் வளர்ச்சிக் கழகம் பற்றிய கொள்கையும் திட்டங்களும், 1995-96. (தமிழ், ஆங்கிலம்).

129. பட்டு வளர்ச்சித் துறை பற்றிய சாதனைத் திட்டம், 1994-95. (தமிழ், ஆங்கிலம்).

130. மானியக் கோரிக்கை எண் 24 - பெருந் தொழில்கள் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 1995-96. (தமிழ், ஆங்கிலம்).

131. தொழில்கள் பற்றிய செயலாக்கத் திட்டம், 1995-96. (தமிழ், ஆங்கிலம்).

132. புவியியல் மற்றும் சுரங்கத் துறை பற்றிய செயல்முறைத் திட்டம், 1995-96. (தமிழ், ஆங்கிலம்).

133. மானியக் கோரிக்கை எண் 26 - தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் பற்றிய கொள்கையும் திட்டங்களும், 1995-96. (தமிழ், ஆங்கிலம்).

செய்வது குறித்து மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையின் 10-6-1993 ஆம் நாளிட்ட 108 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54(3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது).

114. சென்னை, திருவாளர்கள் வாவின் இந்தியா லிமிடெட் 1-4-1994 முதல் 31-3-1999 வரையிலான ஐந்து ஆண்டுகளுக்கு செலுத்தப்பட வேண்டிய விற்பனை வரியை தள்ளி வைப்பது குறித்து வணிக வரிகள்–சமய அறக்கட்டளைகள் துறையின் 8-12-1994 ஆம் நாளிட்ட 388 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது).

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

126. மானியக் கோரிக்கை எண்கள் 47 மற்றும் 59 - ஊரகத் தொழில்கள் மற்றும் ஊரகத் தொழில்கள் மீதான மூலதனச் செலவு பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1995-96. (தமிழ், ஆங்கிலம்).

127. ஊரக மற்றும் சிறு தொழில்கள் பற்றிய சாதனைத் திட்டம், 1995-96. (தமிழ், ஆங்கிலம்).

128. மானியக் கோரிக்கை எண் 47-ன் கீழ் பட்டு வளர்ச்சித்துறை மற்றும் தமிழ்நாடு கைத்தறித் தொழில்கள் வளர்ச்சிக் கழகம் பற்றிய கொள்கையும் திட்டங்களும், 1995-96. (தமிழ், ஆங்கிலம்).

129. பட்டு வளர்ச்சித் துறை பற்றிய சாதனைத் திட்டம், 1994-95. (தமிழ், ஆங்கிலம்).

130. மானியக் கோரிக்கை எண் 24 - பெருந் தொழில்கள் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 1995-96. (தமிழ், ஆங்கிலம்).

131. தொழில்கள் பற்றிய செயலாக்கத் திட்டம், 1995-96. (தமிழ், ஆங்கிலம்).

132. புவியியல் மற்றும் சுரங்கத் துறை பற்றிய செயல்முறைத் திட்டம், 1995-96. (தமிழ், ஆங்கிலம்).

133. மானியக் கோரிக்கை எண் 26 - தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் பற்றிய கொள்கையும் திட்டங்களும், 1995-96. (தமிழ், ஆங்கிலம்).

இணைப்பு I

(47 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)

தொழில் கொள்கை மற்றும் திட்டங்கள்

சிறு தொழில்கள் வளர்ச்சி சார்ந்த அரசின் அணுகுமுறை

1.1. சிறுதொழில்கள் மற்றும் ஊரகத் தொழில்களின் வளர்ச்சியானது தொழில்வளப் பெருக்கத்தோடு ஒருங்கிணைந்த ஒரு இன்றியமையாப் பகுதியாக விளங்குகிறது. இது ஊரக மக்கள் மற்றும் தனியார் தங்களது திறன் மற்றும் நிதி நிலைக்கேற்றவாறு தொழில் நடவடிக்கைகளை மேற்கொள்ள வழிவகுக்கிறது. இதன் மூலம் மக்களை நாட்டின் பொருளாதார மற்றும் தொழில் வளர்ச்சியில் பங்குபெறுவதற்கு வழி வகுக்கிறது. தொழிலாளர்களை அதிக அளவில் தன்னுள் ஏற்றுக் கொள்வது, திட்டங்களை நிறைவேற்றுதற்கான குறைந்த கால அளவு, அந்தந்தப் பகுதியில் காணப்படும் நிலைமைக்கேற்றவாறு எளிதில் மாற்றியமைக்கத் தக்க தன்மை ஆகியவை இத்துறையின் உள்ளார்ந்த சிறப்பம்சம் என்பது அனைவரும் அறிந்த ஒன்றாகும். சிறுதொழில்களில், குறைந்த முதலீட்டில் அதிகபட்ச வேலைவாய்ப்பு அளிப்பதைக் கருத்தில் கொண்டு ஆர்வமுள்ள தொழில் முனைவோர்களுக்கு தொழில் முனைவர் பயிற்சி அளிப்பதற்கு அரசு தலையாய முன்னுரிமை வழங்கியுள்ளது.

1.1.2. பின்தங்கிய பகுதிகளின் வளர்ச்சியில், சிறு தொழில்கள், குறுந்தொழில்கள் மற்றும் குடிசைத் தொழில்கள் போற்றத்தக்க அளவில் பங்கு வகித்துள்ளன. இத்தொழில்கள் மாநில முழுவதிலும் எளிதாக பரவியுள்ளதன் மூலம், வளர்ச்சியடைந்துள்ள மற்றும் வளர்ச்சி பெறாத பகுதிகளுக்குமிடையே உள்ள இடைவெளியைப் போக்குவதில் பாலமாக விளங்குகின்றன. இத்துறை, உள்ளூரில் கிடைக்கின்ற மூலப்பொருட்கள், தொழிலாளர்கள் ஆகியவற்றை அதிக பட்சம் பயன்படுத்துகிறது. இதன் மூலம் ஊரகத் தொழிலாளர்களின் வருமானத்தை உயர்த்த ஏதுவாக இருப்பதால் தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு ஏற்ற தலை சிறந்த கருவியாக இத்துறை விளங்குகிறது.

1.1.3. சிறுதொழில்கள் மற்றும் ஊரகத் தொழில்களுக்கு ஊக்கமளிக்க வேண்டுமென்ற நோக்குடன், சிறுதொழில்களின் வளர்ச்சிக்குரிய சூழ்நிலைகளை ஏற்படுத்துவதற்கும், பின்தங்கிய மற்றும்

குக்கிராமப் பகுதிகளில் தொழில் முனைவோர்களை முனைப்பாக ஈடுபடச் செய்வதற்கும் அரசு பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. சிறுதொழில்களின் வளர்ச்சிக்குத் தனிக்கவனம் செலுத்துவதன்மூலம், தொழில் நடவடிக்கைகளை முழு அளவில் செயல்படுத்தி போற்றத்தக்க சாதனைகளை எய்திடும் பொருட்டு, தலைமைச் செயலகத்தில் "சிறு தொழில் துறை" என்ற புதிய துறை 1993 ஆம் ஆண்டு ஜூலைத் திங்களில் ஏற்படுத்தப்பட்டது.

1.1.4. தொழில் வளர்ச்சிப் பாங்கினைத் துரிதப்படுத்த வேண்டுமென்றதைக் கருத்தில் கொண்டு, பொதுவாக தொழில்களின் வளர்ச்சிக்கு குறிப்பாக சிறு தொழில்களின் வேகமான வளர்ச்சிக்கு அரசினால் அளிக்கப்படும் பல்வேறு தொழில் நடவடிக்கைகளை உள்ளடக்கிய பல நோக்குக்கொண்ட கருத்துச் செறிவுள்ள தொழில் கொள்கை மாண்புமிகு புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களால் சனவரி 1992இல் அறிவிக்கப்பட்டது. இத்தருணத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மிகத்தெளிவாக எடுத்துரைத்த கீழ்க்கண்ட கருத்தினை நினைவு கூர்வது சாலப் பொருத்தமாக இருக்கும்.

"சிறு தொழில்களைச் சார்ந்த தொழில் கொள்கையில் வெற்றியடைவதன் மூலம்தான் துரிதமான தொழில் மயமாக்கத்தினை எய்திட முடியும் என்பதை அரசு உறுதியாக நம்புகிறது".

1.2. மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களின் சீரிய தலைமையில் அமைந்துள்ள மாநில அரசின் தொழில் கொள்கை இப்போதைய தேவைகளுக்கு ஏற்றவாறு தெளிவாக வகுக்கப்பட்டுள்ளது. தொழில் மேம்பாட்டில் அரசு ஆற்ற வேண்டிய பணிகளையும் தொழில் நாட்டமுள்ளவர்களின் ஆர்வத்தைத் தூண்டுவதற்குத் தேவையான ஊக்கத் தொகை வழங்க வேண்டிய அவசியத்தையும் அரசின் தொழில் கொள்கை மையமாகக் கொண்டுள்ளது. வளர்ச்சிக்கு வாய்ப்புள்ள துறைகளில் பெரிய தொழில்களும், சிறு தொழில்களும் ஒன்றின் வளர்ச்சிக்கு மற்றொன்று உதவி, இரண்டுமே ஒருங்கிணைந்த முறையில் வளர வேண்டுமென்பதில் அரசு மிகவும் தீவிரமாக உள்ளது. சிறு தொழில்களைப் பொறுத்த வரை, வளர்ச்சி, தனியார் துறையிலேயே அமைவதால் மாநிலத்தில் சாதகமான சூழ்நிலையை உருவாக்குவதற்கு கடந்த 42 மாதங்களில் பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ள. புதிய சலுகைகள் அறிவிக்கப்பட்டன. ஏற்கெனவே உள்ள சில சலுகைகளின் பயனை

மேம்படுத்தும் பொருட்டு, ஒரு சில மாற்றியமைக்கப்பட்டுள்ளன. அனுமதி வழங்கும் முறையினைத் துரிதப்படுத்தும் பொருட்டு நடைமுறைகள் எளிதாக்கப்பட்டுள்ளன.

பின்வருகின்ற குறிக்கோள்களை எய்திடுவதற்கு, அரசால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளாவன:-

(அ) தொழில் உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறனை அதிகபட்சம் எய்திடுவதற்கு தொழில் வளர்ச்சியினைத் துரிதப்படுத்துவது;

(ஆ) தொழில் பேட்டைகள் அமைப்பதற்கும் உரிய இடங்களில் தனியார் மற்றும் கூட்டுறவுத் தொழிற் பேட்டைகளை அமைப்பதற்கும் ஊக்குவிப்பது;

(இ) தொழில் நிலையங்கள் அமைப்பதற்கு தொழில் முனைவர்களுக்குத் தேவையான தொழில் நுட்ப ஆலோசனை வழங்குவது;

(ஈ) அடிப்படை வழிகள், மூலப்பொருள்கள் முதலியவற்றை வழங்குவதற்குத் தகுந்த நடவடிக்கைகளை மேற்கொள்வது;

(உ) தர நிர்ணயம், தரக்கட்டுப்பாடு, தொழிலியல் ஆராய்ச்சி, தொழில் நுட்பவியல் மாற்றம் போன்ற வசதிகளை வழங்குவது;

(ஊ) சிறு தொழில்கள், குறுந்தொழில்கள் மற்றும் குடிசைத் தொழில்களுக்குத் தேவையான கடன் தொகை வழங்குவதை உறுதியாக்கும் பொருட்டு மேம்பாட்டு நிறுவனங்கள் மற்றும் நிதி நிறுவனங்கள் ஆகியவற்றைத் தொடர்ந்து வலியுறுத்துவது;

(எ) பின்தங்கிய பகுதிகளில் தொழில் மயமாக்குதலை மேம்படுத்துவதன் மூலம் சீரான தொழில் வளர்ச்சிக்கு வழிவகுப்பது;

(ஏ) பின்தங்கிய பகுதிகள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட தொழில்கள் ஆகியவற்றின் வளர்ச்சிக்கு ஊக்கமளிக்கும் பொருட்டு சலுகை மற்றும் ஊக்க உதவித்தொகைகள் வழங்குவது.

1.2.1. 31 மிகவும் பின்தங்கிய வட்டங்களுக்கு அளிக்கப்படுகின்ற 20 விழுக்காடு மாநில மூலதன மானியம் மதுரை மாவட்டத்திலுள்ள பேரையூர் வட்டத்திற்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

1.2.2. சிறு தொழில் நிலையங்களுக்கு நடைமுறை மூலதனம் ஏற்பாடு செய்வது மற்றும் அவற்றிற்குத் தேவையான பல்வேறு அனுமதிகளைப் பெறுவதைத் துரிதப்படுத்தும்பொருட்டு, மாவட்ட தொழில் மையத்தின் பொது மேலாளரைத் தலைவராகக் கொண்ட மாவட்ட அளவிலான கூட்டுக் குழு அமைக்கப்பட்டுள்ளது. டிஐஜசி-யின் கிளை மேலாளர், சிட்கோ நிறுவனத்தின் கிளை மேலாளர், தலைமை வங்கி, தாய்கோ வங்கி மற்றும் மாவட்ட கூட்டுறவு வங்கி ஆகியவற்றின் சார்பாளர்கள் இதர உறுப்பினர்களாவர்.

1.2.3. நிறுவப்பட்ட 5 குதிரைத் திறன் வரை மின்சாரத்தை நுகர்கின்ற குடிசைத் தொழில்களுக்கு ஏற்கெனவே அளிக்கப்பட்டு வந்த மின் கட்டணச் சலுகை 5-10-1994 நாளிட்ட அரசு ஆணை எண் 131 மின்சக்தி (அ2) துறை-இல் 10 குதிரைத் திறன் வரையுள்ள குடிசைத் தொழில்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

1.2.4. புதிய தொழில் கொள்கையில் அறிவித்துள்ளபடி, அரசு ஏற்றுமதியை அதிகரிப்பதற்கு ஊக்குவிக்கிறது. தோல் மற்றும் மின்னணுத் தொழில்கள், ஈடுகாட்டு ஆவணம்/ஏற்றுமதி இறக்குமதி ஆவணங்களுக்கு செலுத்திய விற்பனைவரிக்குச் சமமாக 8 சதவீதம் ஏற்றுமதி சலுகை அளிக்கப்படுகிறது. 1994-95 ஆம் ஆண்டிற்கு ரூ. 2 கோடி ஒப்புதலளிக்கப்பட்டுள்ளது.

1.2.5. பெருமளவில் பொருள்களை வாங்குகின்ற அரசு நிறுவனங்கள் சிறு தொழில்களுக்கு செலுத்த வேண்டிய நிலுவைத் தொகையினை உரிய நேரத்தில் செலுத்துவதனைக் கண்காணிக்க அரசினால் அமைக்கப்பட்ட குழுவின் நடவடிக்கை வெற்றி கண்டுள்ளது. இக்குழுவின்முன் கொண்டு வரப்பட்ட 226 இனங்களுக்குரிய ரூ. 1,095.30 இலட்சத்தில் 195 இனங்களைச் சார்ந்த ரூ. 1,066.66 இலட்சம் நிலுவைத் தொகை ஏற்கெனவே வசூலிக்கப்பட்டதிலிருந்து இது தெளிவாகிறது.

1.2.6. தமிழ்நாடு தொழில்நுட்ப ஆலோசனைக் கழகத்தால் (ITCOT) நடத்தப்பட்ட ஆய்வு, சின்னஞ்சிறு மற்றும் சிறு தொழில் துறைகளின் நிதித் தேவைக்கும், அவற்றிற்கு கிடைக்கக்கூடிய அளவிற்கும் இடையே பெரிய இடைவெளி உள்ளது என்று காட்டுகிறது. கடன்வசதி கிடைக்கப்பெறாதது தொடர்ந்து பிரச்சினையாக உள்ளது. இதனால் இத்துறைக்கு ஏற்படும் எதிர் விளைவுகளைக் களைவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இந்த இடைவெளியைக் கூடுமான வரையில் ஈடு செய்யும் பொருட்டு, ஏப்ரல் 1993 வரவு செலவுத் திட்ட விவாதத்தின் போது, சட்டப் பேரவையில் மாண்புமிகு முதலமைச்சர்

அவர்களால் அறிவிக்கப்பட்டபடி, சின்னஞ்சிறு மற்றும் சிறு தொழில் நிலையங்களுக்கு கடன் வழங்குவதற்கு, தமிழ்நாடு தொழிற் கூட்டுறவு வங்கிக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

1.2.7. "வரிச் சலுகைகள்" என்ற தலைப்பின் கீழ் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களால் அறிவிக்கப்பட்ட முற்போக்கான புதிய தொழில் கொள்கையில் அரசு நிறுவனங்களால் நிர்வகிக்கப்படும் அனைத்துத் தொழிற்பேட்டைகளிலும், தொழில் கூடங்களுக்கென, நிலம் வாங்கப்படுவதற்குரிய முத்திரைத்தாள் கட்டணத்திலிருந்து முழு விலக்கு அளிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. 1956 ஆம் ஆண்டு நிறுவனச் சட்டத்தின் கீழ் (மைய அரசுச் சட்டம் 1-இன் கீழ்) பதிவு செய்யப்பட்டு அரசு உதவியுடன் அமைக்கப்பட்ட தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம் (சிட்கோ), தமிழ்நாடு தொழில் மேம்பாட்டு நிறுவனம் (சிப்காட்), தமிழ்நாடு அடிப்படை வசதி தொழில் வளர்ச்சி நிறுவனம் (டாசிட்) ஆகியவற்றின் பதிவுத்தாள்கள் மற்றும் 1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்கள் சட்டத்தின் கீழ் (1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டம் 30) பதிவு செய்யப்பட்டு அரசு உதவியுடன் அமைக்கப்பட்ட தொழிற்பேட்டைகளில் அமைந்த தொழிற்கூட மனைகள் மற்றும் தொழிற்கூடங்கள் ஆகியவற்றின் விற்பனை மற்றும் குத்தகை ஆகியவற்றிற்கு 1899 ஆம் ஆண்டின் இந்திய முத்திரைத்தாள் கட்டணத்திலிருந்து விலக்களித்து 7-6-1993 ஆம் நாளிட்ட வணிக வரி மற்றும் அறநிலையத் துறை ஆணை எண் 169-இல் ஆணையிடப் பட்டுள்ளது.

1.2.8. தொழில் முனைவோர்களுக்கு நன்முறையில் உரிய நேரத்தில் உதவியளிக்கும் நோக்குடன், தொழில் வணிகத் துறையின் பல்வேறு பிரிவுகள் தங்களது திறனை அதிகபட்சம் எய்திடுவதற்கு முடுக்கிவிடப்பட்டுள்ளன. கடந்த ஆண்டுகளில் தொழில் வணிக இயக்ககத்தின் செயல்களில் குறிப்பிடத்தக்க மாற்றம் காணப்பட்டுள்ளதன் விளைவாக தற்போது இந்த இயக்ககத்தின் நடவடிக்கைகள் வளர்ச்சி நோக்கோடு அமைந்துள்ளன. துறைத் தலைவரின் நடைமுறை அதிகாரங்களில் பெரும்பாலானவை மாவட்ட தொழில் மையங்களின் பொது மேலாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. பல்வேறு அனுமதிகளை வழங்குவதற்கு, காலக் கெடு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. தொழில் முனைவோர்களுக்கு வழிகாட்டி உதவி அளிக்கும் பொருட்டு மாவட்டங்களில், தொழில் முனைவோர் வழிகாட்டும் பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

1.2.9. வட்டார அளவில் சீரான தொழில் வளர்ச்சிக்கு வழிவகுக்கும் வகையில் மாநிலத்தில், சிறு தொழில்களின் வளர்ச்சியை துரிதப்படுத்தும் பொருட்டு, தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் திட்டங்களை மேலும் தீவிரமான முறையில் முனைப்பாக செயல்படுத்திடக்கூடிய வகையில் இது முடுக்கப்பட்டுள்ளது.

1.2.10. தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகளில் சிறு தொழில்களே மிக முக்கியமான பங்கினை வகிக்கின்றன. இந்நிறுவனத்தைப் பொறுத்தவரை, கடன் பெறுவோர்க்கு உதவிகரமானதோர் சூழ்நிலையை ஏற்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

1.2.11. மாநிலத்தில், தோல் தொழில் வளர்ச்சியை மேம்படுத்துவதற்கு உரிய நடவடிக்கைகளை தமிழ்நாடு தோல் தொழில் வளர்ச்சி நிறுவனம் தீவிரப்படுத்தியுள்ளது. தமிழ்நாடு சிறு தொழில் நிறுவனத்தைப் பொறுத்தவரை அதன் நிர்வாக செலவுகளைக் குறைத்து செயல்திறனை மேம்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

குறிப்பிட்ட துறைகளில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம், எதிர்காலத்திட்டங்கள் பற்றி பின்வரும் பத்திகளில் கூறப்பட்டுள்ளன.

2. மாவட்ட தொழில் மையம்.

தொழில் வணிகத்துறையில், மாவட்ட அளவில் பொது மேலாளரைத் தலைவராகவும், 7 பணிமேலாளர்களையும் கொண்ட மாவட்ட தொழில்மையங்கள் செயல்படுகின்றன. இவற்றின் நடவடிக்கைகள் தேவையை அடிப்படையுடன் கூடிய பல்நோக்குக் கொண்டவையாகும். சிறுதொழில்கள் பதிவு மேற்கொள்வது, தொழில் முனைவோர்களுக்கு பயிற்சித் திட்டங்கள் நடத்துவது, தொழில்வழி காட்டுவது, முதலிய பல்வேறு நடவடிக்கைகளை இம் மையங்கள் மேற்கொள்கின்றன.

2.1. தமிழ்நாட்டில் சென்னை மாவட்டம் நீங்கலாக அனைத்து மாவட்டங்களும் இத்திட்டத்தின்கீழ் கொண்டு வரப்பட்டுள்ளது. (சென்னை நகரத்தின் பணி, மண்டல இணை இயக்குநரால் கவனிக்கப்பட்டு வருகிறது) இந்த மைய அரசின் உதவித் திட்டம் 1978-79 முதல் நடைமுறையில் உள்ளது. இத்திட்டம், தொழில் முன் முதலீடு, முதலீடு மற்றும் பின் முதலீடு நிலைகளில் முக்கிய அங்கமாக விளங்குகிறது.

1995 ஏப்ரல் 24]

2.2. 1978-79 ஆம் ஆண்டில், ஒவ்வொரு மாவட்டத் தொழில் மையத்திற்கும் ரூ. 3.75 இலட்சம் வீதம், மொத்தச் செலவில் 75 சதவீதம் மைய அரசினால் உதவியாக வழங்கப்பட்டது. பிறகு ரூ. 2.50 இலட்சம் வீதம் அல்லது 50 சதவீதம் (எது குறைவோ அத்தொகை) இந்திய அரசினால் 1982-83 வரை உதவியாக வழங்கப்பட்டது. 1983-84 மற்றும் 1984-85 ஆம் ஆண்டுகளில் ரூ. 3.00 இலட்சம் அல்லது 50 சதவீதம் (இதில் குறைவான, தொகை எதுவோ) உதவித் தொகையாகப் பெறப்பட்டது. 1985-86 முதல் ஒவ்வொரு மாவட்டத் தொழில் மையத்திற்கும் உதவியானது 50 சதவீதம் அதிகப்படியாக ரூ. 4 இலட்சமாக இருந்தது.

2.3. தற்பொழுது செயல்பட்டு வருகின்ற 22 மாவட்டத் தொழில் மையங்களில் 19-க்கு மட்டும் இந்திய அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. இந்திய அரசின் பங்கு ஒவ்வொரு மாவட்டத் தொழில் மையத்திற்கும் ரூ. 4.00 இலட்சம் அல்லது மொத்தத்தில் ஆண்டு ஒன்றுக்கு ரூ. 76 இலட்சமாகும். ஆனால் இவற்றிற்காகும் மொத்தச் செலவு ரூ. 450 இலட்சமாகும். இத்திட்டம் 1994-95 ஆம் ஆண்டு முதல் மாநிலத் துறைக்கு மாற்றப்பட்டு உள்ளது.

2.4. மாவட்டத் தொழில் மையங்கள் அமைக்கப்படுவதற்கு முன்பு 21,273 நிரந்தரமாக பதிவு செய்யப்பட்ட சிறு தொழில்கள் மட்டுமே இருந்தன. ஆனால், இச் சிறு தொழில்களின் எண்ணிக்கை டிசம்பர் 1994 இல் 1,98,669 ஆக உயர்ந்துள்ளது. இதிலிருந்து மாவட்டத் தொழில். மையங்கள் எந்த அளவு மகத்தான பணியாற்றியுள்ளன என்பது நன்கு புலனாகும்.

2.5. மாவட்டத் தொழில் மையங்கள் அமைக்கப்பட்ட பிறகு, படித்து வேலையற்ற இளைஞர்களுக்குரிய சுய வேலைவாய்ப்புத் திட்டம், பிரதமரின் ரோஜ்கார் யோஜனாத் திட்டம், தொழில் முனைவோர் வளர்ச்சித் திட்டங்கள், சலுகை கொடுக்க ஒப்புதல் மற்றும் வழங்குதல் முதலிய புதிய திட்டங்கள் இந்த மையங்களிடம் ஒப்படைக்கப்பட்டன.

2.6. வேலைவாய்ப்புத் திட்டமான பாரத பிரதமரின் ரோஜ்கார் யோஜனாத் திட்டத்தின்கீழ், 1994-95 ஆம் ஆண்டிற்கு இலக்கு 17,400 என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் 8-வது ஐந்தாண்டுத் திட்டம் வரை தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

2.7. சிறு தொழில் நிலையங்கள் உரிய நேரத்தில் அனுமதிகளைப் பெறுவதில் உதவியளிப்பதே இம்மையங்களின் முக்கிய பணிகளில் ஒன்றாகும். அகன்ற நோக்குடன் கூடிய ஒருமுனைத் தீர்வு அமைப்பினை வலுப்படுத்தும் பொருட்டு, ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட ஆட்சியரைத் தலைவராகக் கொண்ட சட்ட ரீதியிலான அமைப்பினை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அமைக்கப்பட்ட பிறகு, இந்த அமைப்பினைத் திறம்படச் செயற்படுத்தும் பொறுப்பு மாவட்டத் தொழில் மையங்களைச் சாரும். அரசு தலைமைச் செயலர் அவர்களின் தலைமையின் கீழ், தற்பொழுது இயங்கிவரும் மாநில அளவிலான ஒருமுனைத் தீர்வுக்குழு சிறுதொழில்களின் தேவையினை நிறைவேற்றும் வகையில் விரிவுபடுத்தப்படும்.

2.8. ஏற்கனவே சுட்டிக் காட்டியுள்ளபடி, ஐந்தாண்டுகளில் ஒரு இலட்சம் சிறு தொழில் நிலையங்கள் அமைக்கப்படவேண்டுமென்ற இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதால், மாவட்டத் தொழில் மையங்களும், இலக்கினை எய்துவதற்கு முடுக்கிவிடப்பட்டுள்ளன.

2.9. பூர்வாங்க ஒப்புதல்கள் பெற்று தொழில்களுக்குத் தேவையான உதவிகளை அளித்து, அவைகளை விரைவில் செயல்பட வழிவகுப்பது தொழில் மையங்களின் பொறுப்பாகும். மையங்கள் மேற்கொண்ட முயற்சிகளின் விளைவாக, ஒப்புதல் பெற்ற 1,137 தொழில்களில், 449 ஏற்கனவே உற்பத்தி துவங்கியுள்ளன. எஞ்சியவை பல்வேறு நிலைகளில் உள்ளன.

2.10. ஏற்றுமதி ஆணைகளை கைவசம் கொண்டுள்ள தொழிற்சாலைகள் மூலப்பொருட்கள், இயந்திரப்பாகங்கள் மற்றும் உதிரிப்பாகங்கள் ஆகியவற்றுக்கு முன் உரிமங்கள் வழங்குவதற்கு விண்ணப்பிப்பதின் மூலம் தீர்வையின்றி பெறத் தகுதியுடையவாகும். தொழில் நுட்ப வளர்ச்சி பொது இயக்குநர் அவர்களின் மண்டல அலுவலகத்தை மூடிய பிறகு, ஏற்றுமதி செய்யும் நிலையங்களின் விண்ணப்பங்களைப் பரிசீலித்து விரைவில் முடிவெடுக்கும் பணி தொழில் வணிக இயக்ககத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. 1994 டிசம்பர் வரை, இந்த இயக்ககம் 457 தொழில்கள் சம்பந்தமாக தொழில் நுட்ப ஆலோசனைகளையும் அளித்துள்ளது.

2.11 மாவட்டத் தொழில் மையங்கள், சாதாரண வளர்ச்சிப் பணிகளோடு, மேற்கண்ட பொறுப்புக்களையும் ஏற்றுக் கொண்டுள்ளதால், 1994-95 ஆம் ஆண்டிற்கு பிறகும் இதே அமைப்போடு தொடருவது அவசியமாகும்.

1995 ஏப்ரல் 24]

3. தொழில் முனைவோர் வளர்ச்சித் திட்டங்கள்

3.1. துரித தொழில் மயமாக்குதலுக்கு தொழில் வளர்ச்சித் திட்டம் குறிப்பிடத்தக்க வகையில் பங்கு செலுத்துவதால், மாவட்ட தொழில் மையங்கள் அமைக்கப்பட்ட பிறகு, இத்திட்டம் தொழில் வணிகத் துறையின் முறையான பணிகளில் ஒன்றாகி விளங்குகிறது. 1991-92 ஆம் ஆண்டில் சிறப்பு தொழில் முனைவோர் வளர்ச்சித் திட்டம் நடத்த, 800 மகளிர் தொழில் முனைவர்களுக்கு பயிற்சியளிப்பதற்காக ரூ. 10.00 இலட்சம் அரசு ஒப்புதலளித்தது. 1993-94 ஆம் ஆண்டில் தேர்ந்தெடுக்கப்பட்ட 800 பேரில் 733 பேர் வெற்றிகரமாக பயிற்சியினை முடித்தனர். இவர்களில் 171 நபர்கள் தொழில் நிலையங்களை அமைத்து, 684 பேருக்கு நேரிடையாகவும் 2736 பேருக்கு மறைமுகமாகவும் வேலை வாய்ப்பளித்துள்ளனர். 1993-94 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் மதிப்பு ரூ. 12 இலட்சமாகும். ஏனையவர்கள் தொழில் நிலையங்கள் அமைப்பதில் பல்வேறு நிலைகளில் உள்ளனர்.

3.2. முதல் தலைமுறை தொழில் முனைவர்களிடமிருந்து வருகின்ற பெரும் ஆர்வத்தினைக் கருத்திற் கொண்டு, 1994-95 ஆம் ஆண்டில் அரசு பயிற்சி பெறுபவர்களின் எண்ணிக்கையை 800-ல் இருந்து 1000 ஆக உயர்த்தி ரூ. 15.00 இலட்சம் ஒப்புதல் அளித்துள்ளது. இத்திட்டத்திற்கு நல்ல வரவேற்பு இருப்பதால் 1995-96 ஆம் ஆண்டிலும் 1000 பேருக்கு பயிற்சி தொடர்ந்து அளிக்கப்படும்.

4. சிறப்பு வேலை வாய்ப்புத் திட்டங்கள்

பிரதமரின் ரோஜ்கார் யோஜனா திட்டம்

4.1. படித்து வேலையற்ற இளைஞர்களுக்காக "பிரதமரின் ரோஜ்கார் யோஜனா திட்டம்" என்றழைக்கப்படும் மேலும் ஒரு திட்டத்தை மத்திய அரசு அறிமுகப்படுத்தியுள்ளது. இத்திட்டம் 2-10-1993-ல் அமலுக்கு வந்துள்ளது. தொழில்கள், சேவை நிலையங்கள் மற்றும் வர்த்தக நிறுவனங்கள் அமைப்பதன்மூலம் சுய வேலை வாய்ப்பிற்கு வழி வகுக்கிறது. இத்திட்டத்தினை செயல்படுத்துவதற்கு, குறிப்பாக தொழில் முனைவர்கள் பயிற்சி மற்றும் திட்டத் தொகுப்புகள் தயாரிப்பதற்கு அரசு சாரா அமைப்புகளின் உதவியையும் கோரப்படுகிறது.

4.2. இத்திட்டம் 1993-94 ஆம் ஆண்டில் நகர்ப்பகுதிகளுக்கு மட்டும் பொருந்தும். 1994-95 முதல் நாடு முழுவதும்

விரிவுபடுத்தப்பட்டுள்ளது. 1994-95 முதல் ஏற்கனவே உள்ள படித்து வேலையற்ற இளைஞர்களுக்குரிய சுய வேலை வாய்ப்புத் திட்டம் பிரதமரின் ரோஜ்கார் யோஜனாத் திட்டத்துடன் இணைக்கப்பட்டது. இத்திட்டத்தில் 18 முதல் 35 வயது வரையுள்ள 10-ம் வகுப்பு தேறியவர்கள் அல்லது தவறியவர்கள் அல்லது தொழில் பயிற்சி சான்றிதழ் பெற்றவர்கள் அல்லது அரசு சார்ந்த தொழில் நுட்பப் பாட முறைகளில் குறைந்தது 6 மாதம் பயிற்சி முடித்தவர்கள் பங்கு பெறத் தகுதியுடைவராவார்கள். குடும்ப ஆண்டு வருமானம் ரூ. 24,000-க்கு அதிகமாக இருக்கலாகாது. இத்திட்டத்தில் ஆதி திராவிடர்/ பழங்குடியினர்களுக்கு 22.5 விழுக்காடும், இதர பின் தங்கிய வகுப்பினர்களுக்கு 27 விழுக்காடும் ஒதுக்கப்பட்டுள்ளது.

4.3. இத் திட்டத்தின் கீழ், தனிப்பட்டவர்கள் ரூ. 1 இலட்சம் வரை உதவி பெறலாம். தகுதியுடைய இரண்டு அல்லது அதற்கு மேற்பட்டவர்கள் இணைந்து கூட்டாண்மை திட்டத்தில் அதிக மதிப்புத் தொகை பெறலாம். இதற்கு ஒவ்வொருவரும் திட்ட மதிப்பில் ரூ. 1 இலட்சமோ அல்லது குறைவாகவோ பங்கு பெற தகுதி உடையவராக இருத்தல் வேண்டும்.

4.4. பயன் பெறுபவர் திட்ட மதிப்பில் 5 % செலுத்த வேண்டும். ஒவ்வொரு தொழில் முனைவருக்கும் 15 % அல்லது அதிக பட்சம் ரூ. 7,500 அரசு மானியம் அளிக்கிறது. கடன் ஒப்பளிக்கப்பட்ட பிறகு, தொழில் முனைவர்களுக்கு 4 வாரங்கள் கட்டாயப் பயிற்சிக்கும் இத்திட்டம் வழிவகுக்கிறது.

4.5. பயன் பெறுபவர் ஒவ்வொருவருக்கும் பயிற்சி உதவித் தொகை திட்டத் தொகுப்பு தயாரித்தல், சந்தை ஆய்வு நடத்துதல் ஆகியவற்றிற்கு ரூ. 1,000 உதவித் தொகை இந்திய அரசினால் அளிக்கப்படுகிறது. 1994-95 ஆம் ஆண்டிற்கு நமது மாநிலத்திற்கு 17,400 பயனாளிகள் என இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. 31-12-1994 வரையிலான சாதனைகள் பின்வருமாறு :

இலக்கு	..	17,400
வங்கிகளுக்கு பரிந்துரைக்கப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை	..	24,581
வங்கிகளால் ஒப்புதலளிக்கப்பட்டவை (எண்ணிக்கையில்)	..	5,473
தொகை (ரூ. இலட்சத்தில்)	..	3153.40

LEGISLATIVE ASSEMBLY ... TRUTH ALONE TRIUMPHS

1995 ஏப்ரல் 24]

5. சிறுதொழில், கைவினைத் தொழில் மற்றும் குடிசைத் தொழில் பதிவு

5.1. ஒரு சிறு தொழில் என்பது

(அ) சொந்தமாகவோ அல்லது குத்தகை அல்லது தவணைக் கொள்முதல் அடிப்படையிலோ உள்ள ஒரு தொழில் நிலையத்தின் இயந்திரங்களின் மதிப்பு ரூ.60 இலட்சத்திற்கு அதிகமாக இருக்கலாகாது.

(ஆ) மேலே 'அ' வில் கூறப்பட்டுள்ளபடி ஒரு தொழில் நிறுவனம், உற்பத்தி துவங்கிய நாளிலிருந்து மூன்றாவது ஆண்டின் இறுதியில், ஆண்டு உற்பத்தியில் குறைந்தது 30 விழுக்காடு ஏற்றுமதி செய்யும் தொழில் நிறுவனத்திற்கு இயந்திரங்களின் மதிப்பு வரம்பு ரூ. 75 இலட்சமாகும்.

5.1.1. உதிரிப்பாகங்கள், துணைப்பாகங்கள், துணைக்கருவிகள் ஆகியவற்றை தயாரிக்கின்ற ஒரு தொழில் நிறுவனம் அல்லது சேவை நிலையம் அதன் உற்பத்திப் பொருள்களை குறைந்தபட்சம் 50 விழுக்காடு ஒன்று அதற்கு மேற்பட்ட தொழில் நிறுவனங்களுக்கு வழங்கி வந்தால் அந்த தொழில் நிறுவனத்தின் இயந்திரத்தின் மதிப்பு ரூபாய் 75 இலட்சத்திற்கு அதிகமாக இருக்கலாகாது.

5.2. இந்த இயக்ககத்தில் சிறு தொழில் பதிவு பெற வேண்டுமென்பது கட்டாயமில்லையென்றாலும் மைய மற்றும் மாநில அரசுகளால் வழங்கப்படும் அனைத்து உதவிகள்/சலுகைகள் தொலைபேசி இணைப்பு முன்னுரிமை, இறக்குமதிக்குரிய சுங்கவரி சலுகை ஆகியவை பெறுவதற்கு இவை வகை செய்வதால் பதிவு பெற தொழில் முனைவோர் முன்வருகின்றனர். உற்பத்தியை துவக்க உள்ள அல்லது சேவையில் ஈடுபட்டுள்ள அல்லது பழுது பார்ப்புப் பணியில் ஈடுபட்டுள்ள அல்லது இவற்றில் ஏதாவதொன்றில் ஈடுபடவுள்ள தொழில் நிலையம் சிறு தொழில் நிலையமாகப் பதிவு பெறுவதற்கு தகுதி உடையனவாகும்.

5.3. தற்காலிக பதிவு, இறுதிப்பதிவு ஆகிய இருவித பதிவுகள் உள்ளன. அமைக்கப்படவுள்ள ஒரு தொழில் நிலையத்திற்கு ஐந்தாண்டு காலத்திற்கு அமலிலிருக்கக்கூடிய தற்காலிக பதிவுச் சான்றிதழ் வழங்கப்படுகிறது. அனுமதியளிக்கப்பட்டுள்ள ஐந்து ஆண்டு காலத்திற்குள் தொழில் நிலையம் அமைக்கப்படவில்லை என்றால்,

புதிய சான்றிதழ் பெற வேண்டும். அதாவது தற்காலிக சான்றிதழ் உற்பத்தி துவக்கிய பின் செல்லுபடியாகாது. இச்சான்றிதழ் சிறு தொழில் நிலையம் உற்பத்தி துவக்குவது வரை உள்ள காலத்திற்கு மட்டும் செல்லுபடியாகும்.

5.4. உற்பத்தி துவங்கிய தொழில் நிலையங்கள் அல்லது உற்பத்தி துவக்குவதற்கு தயாராக உள்ள நிலையங்கள் நிரந்தரப் பதிவுச் சான்றிதழ் பெறத்தகுதியுடையனவாகும். இச்சான்றிதழ்கள் இந்த நிலையம் எத்தொழில் பிரிவிற்கு பெற்றுள்ளதோ அதில் உற்பத்தி நடவடிக்கையில் தொடர்ந்து ஈடுபட்டிருக்கும் வரை செல்லத் தக்கதாகும்.

5.5. சிறு தொழில் பதிவுச் சான்றிதழ்கள் பற்றிய விவரங்கள் பின்வரும் பட்டியலில் கூறப்பட்டுள்ளன. இவை இத்துறையில் ஏற்பட்டுள்ள வளர்ச்சிக்கு சான்று கூறுகின்றன.

ஆண்டு	நிரந்தரமாகப் பதிவு செய்யப் பட்டுள்ள நிலையங்களின் எண்ணிக்கை.	முதலீடு (ரூபாய்	உற்பத்தி கோடியில்)	வேலை வாய்ப்பு (இலட்சத்தில்)
(1)	(2)	(3)	(4)	(5)
1979-80	28,642	191.57	1110.79	3.49
1990-91	1,27,202	2289.64	6996.11	13.74
1991-92	1,38,404	2906.48	7612.22	14.95
1992-93	1,57,892	3577.89	8884.06	17.50
1993-94	1,78.114	3972.27	10348.41	19.41
1994-95 (31-12-94 வரை)	1,98,699	4967.48	12915.44	21.45

ஐந்து ஆண்டுகளில் ஒரு இலட்சம் சிறு தொழில்கள் பதிவு செய்வதற்குரிய இலக்கு

5.6. 1991-92 ஆம் ஆண்டிலிருந்து ஐந்து ஆண்டு காலத்தில் ஒரு இலட்சம் சிறு தொழில்கள் பதிவு செய்யப்பட வேண்டும் என்ற இலக்கு இத்துறைக்கு நிர்ணயிக்கப்பட்டது. இத்துறையினால் மேற்கொள்ளப்பட்ட வளர்ச்சி நடடிக்கைகளின் விளைவாக 1-7-91 முதல் 31-12-1994 வரை 86858 நிரந்தர சிறு தொழில் பதிவுச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன.

5.7. 1995-96 ஆம் ஆண்டிற்கு 30,000 சிறு தொழில்கள் பதிவு செய்யப்படவேண்டுமென இலக்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

5.8. கைவினைத் தொழில்கள்

கைவினைத் தொழில்கள், பிற தொழில்களோடு ஒப்பிடுகையில் தொன்மை காலங்கொண்டு தனியிடம் பெற்று விளங்குகின்றன.

5.8.1. புதுடெல்லியிலுள்ள அனைத்திந்திய கைவினைத் தொழில் வாரியத்தினால் வரையறுக்கப்பட்டுள்ளபடி, தொன்மையான பாரம்பரியமுள்ள கைவண்ணம் கொண்ட தொழில்கள் கைவினைத் தொழில்களாகும்.

5.8.2. மாவட்ட தொழில் மையங்கள் இத்தொழிலில் ஈடுபட்டுள்ள கைவினைஞர்கள் மற்றும் கைத்திறனாளர்களைக் கண்டறிந்து சான்றிதழ்கள் வழங்குகின்றன.

5.8.3. இப்பகுதியில் மாவட்ட தொழில் மையங்களின் சாதனைகள் பின்வருமாறு:

ஆண்டு	இலக்கு	சாதனை	
		தொழில் நிலையங்களின் எண்ணிக்கை	வேலை வாய்ப்பு
(1)	(2)	(3)	(4)
1991-92	7500	7822	17698
1992-93	8000	7936	19741
1993-94	8000	7634	17754
1994-95 (31-12-94 வரை)	8000	5901	12173

5.8.4. 1995-96 ஆம் ஆண்டிற்கு 8000 கைவினைத் தொழில்கள் பதிவு செய்யப்பட வேண்டுமென உத்தேசிக்கப்பட்டுள்ளது.

5.9. குடிசைத் தொழில்கள்

5.9.1. முழுநேரமாகவோ அல்லது பகுதி நேரமாகவோ குடும்பத்திலுள்ள உறுப்பினர்களின் உதவியுடன் இருப்பிடங்களிலேயே மேற்கொள்ளப்படும் பத்து குதிரைத் திறனுக்கும் மேற்படாத மின்சாரத்தைப் பயன்படுத்துகின்ற தொழில்கள் தான் குடிசைத் தொழில்களாகும். இத் தொழில்கள், அரசினால் அவ்வப்பொழுது அறிவிக்கப்படுகின்றன.

5.9.2. மாவட்ட தொழில் மையங்களால் இது போன்ற கைவினைஞர்கள் கண்டறியப்பட்டு பதிவுச் சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன.

ஆண்டு	இலக்கு	சாதனை	
		பதிவு செய்யப்பட்ட தொழில்களின் எண்ணிக்கை.	வேலை வாய்ப்பு
(1)	(2)	(3)	(4)
1991-92	7500	8169	21,955
1992-93	8000	8879	19,622
1993-94	8000	8122	18,652
1994-95 (31-12-94 வரை)	8000	6399	13,352

5.9.3. 1995-96 ஆம் ஆண்டிற்கு 8000 குடிசைத் தொழில்கள் பதிவு செய்வதற்கு இலக்கிடப்பட்டுள்ளது.

6. அனுமதிகள் பெறுவதில் உதவி

6.1. மாவட்டங்களில், மாவட்ட ஆட்சித் தலைவர்களின் தலைமையில் அமைந்துள்ள, மாவட்ட அளவிலான ஒருமுனைத் தீர்வுக் குழுக்கள் மூலம் ஒரு தொழில் நிலையம் துவக்குவதற்குத் தேவையான, சட்ட ரீதியிலான அனுமதிகளைப் பெறுவதற்கு, சிறு தொழில் நிலையங்களுக்கு உதவியளிக்கப்பட்டு வருகின்றன. பல்வேறு துறைகளின் அலுவலர்கள் இதில் உறுப்பினர்களாக உள்ளனர். அரசின்

1995 ஏப்ரல் 24]

தலைமைச் செயலரைத் தலைவராகக் கொண்ட மாநில அளவிலான குழு, மாவட்ட அளவிலான குழுக்களின் செயல்பாட்டினை அவ்வப்போது ஆய்வு செய்கிறது.

6.2. ஒருமுனைத் தீர்வுக் குழுவின் முன்னேற்ற அறிக்கை பின்வருமாறு :

1.	1-4-1994ல் நிலுவையாக இருந்த விண்ணப்பங்களின் எண்ணிக்கை ..	137
2.	1-4-1994 முதல் 31-12-1994 வரை பெறப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை ..	1709
3.	மொத்தம் ..	1846
4.	1-4-1994 முதல் 31-12-1994 வரை தீர்வு காணப் பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை ..	1692
5.	31-12-1994 அன்று நிலுவையாக இருந்த விண்ணப்பங்களின் எண்ணிக்கை ..	154
6.	1-4-1994 முதல் 31-12-1994 வரை நடத்தப்பட்ட கூட்டங்களின் எண்ணிக்கை ..	129

7. நிலுவையின் சுருக்கம்

நிலுவையிலுள்ள துறை/ அமைப்பு	கால வாரியாக நிலுவை			
	மூன்று மாதங் களுக்குள்	மூன்று மாதங் களுக்கு மேல்	ஆறு மாதங் களுக்கு மேல்	மொத்தம்
(1)	(2)	(3)	(4)	(5)
மின்சார வாரியம்	14	5	..	19
மாசு கட்டுப்பாட்டு வாரியம்	1	..	..	1
சுகாதாரத் துறை	20	..	..	20
நகர மற்றும் ஊரகத் திட்டத்துறை	18	..	..	18
தீயணைப்புத் துறை	8	..	..	8
உள்ளாட்சி அமைப்புகள்	45	2	2	49
தொழிற்சாலை ஆய்வாளர்	15	..	..	15
இதர துறைகள்	24	..	..	24
மொத்தம் ..	145	7	2	154

LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

ஒருமுனைத் தீர்வு குழுமம்:

6.3. சிறு தொழில் நிலையங்கள் துவக்குவதற்குத் தேவையான பல்வேறு துறைகளிடமிருந்து சட்ட ரீதியிலான அனுமதிகள் பெறுவதை துரிதப்படுத்துவதற்கு மாநிலத்தில் மாவட்ட அளவில் ஒருமுனைத் தீர்வுக்குழு அமைக்கப்பட்டுள்ளது.

6.4. இந்த ஒருமுனை அமைப்புக் குழு, பல்வேறு துறைகளால் அளிக்கப்படும் அனுமதிகளைப் பெற உதவியளித்தாலும், இது ஆலோசனை அமைப்பாகவே தற்பொழுது செயல்படுகிறது. எனவே, மாவட்ட அளவில் மாவட்ட ஆட்சியரைத் தலைவராகக் கொண்டு சட்ட ரீதியிலான ஒருமுனைத் தீர்வுக்குழுவினை அமைப்பதற்கு அரசு முடிவெடுத்துள்ளது.

7. அரசு ஊக்க உதவிகள் மற்றும் சலுகைகள்:

7.1. பின்தங்கிய பகுதிகளில் வட்டார அளவில் சீரான தொழில் வளர்ச்சியை எய்திட அரசு பல்வேறு ஊக்குதவி மற்றும் சலுகைகளை அறிவித்து உள்ளது. வரவு செலவுத் திட்ட ஒதுக்கீட்டுக்குள் பின்வருகின்ற சலுகைத் தொகையினை ஒப்புதலளித்து வழங்குவதற்கு களப்பணி அலுவலர்களுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

(அ) மாநில மூலதன உதவித்தொகை

7.2. மாநில அரசு நிறுவனங்களால் ஏற்படுத்தப்படும், தொழில் வளாகங்கள் உள்ளிட்ட 83 பின்தங்கிய வட்டங்களில், ஏற்கனவே அமைந்துள்ள சிறு தொழில் நிலையங்கள், புதிய மற்றும் விரிவாக்கத்தில் ஈடுபட்டுள்ள சிறு தொழில் நிலையங்களுக்கு ரூ. 15 இலட்சத்திற்கு மிகாமல் நிலையான மூலதன முதலீட்டில் 15 விழுக்காடு வரை மானியம் அளிக்கப்படும். இச்சலுகை கோயம்புத்தூர் மாவட்டம், திருப்பூருக்கு அருகில் முதலிப்பாளையத்திலுள்ள தனியார் தொழிற்பேட்டை, மதுரை மாவட்டம் வேடத்துக்குளம், வல்லக்குண்டு கிராமங்களில் அமைந்துள்ள தொழிற்பேட்டை மற்றும் காசி பாளையத்திற்கருகில் பெரியார் மாவட்ட சிறு தொழில் சங்கத்தினால் அமைக்கப்பட்ட தொழிற்பேட்டைக்கும் அளிக்கப்படுகிறது.

7.3. 32 மிகவும் பின்தங்கிய வட்டங்களில் அமைந்துள்ள தொழில் நிலையங்களுக்கு மூலதன மானியம், அதன் மொத்த முதலீட்டில் 20 விழுக்காடாக, அதிகப்படியாக ரூ. 20 இலட்சத்திற்கு மிகாமல் வழங்கப்படும்.

7.4. இரும்பு மற்றும் எஃகு உருக்கு நிலையங்கள், அலுமினியம் உருக்கு நிலையங்கள் மற்றும் கால்சியம் கார்பைடு நிலையங்கள் ஆகியவை போன்ற மின்சாரத்தை அதிக அளவில் பயன்படுத்துகின்ற தொழில் நிலையங்களுக்கு இச்சலுகை கிடையாது.

7.5. மேற்கண்ட சலுகையுடன் தொழில் நிலையத்தில் பணிபுரியும் மொத்த பணியாளர்களில் 30 விழுக்காட்டிற்கும் அதிகமான மகளிர் தொழிலாளர்களைக் கொண்ட தொழில் நிலையங்களுக்கு ரூ. 5 இலட்சத்திற்கு மிகாமல் 5 விழுக்காடு வரை கூடுதல் மூலதன மானியம் அளிக்கப்படுகிறது. ஆனால் இம்மானியம் அதிக அளவில் மகளிர் இயற்கையாகவே வேலை வாய்ப்பினைப் பெறும் பின்வருகின்ற தொழில்களுக்குக் கிடையாது.

1. தீப்பெட்டித் தொழில்
2. தயாரான ஆடைகள்
3. தோல் பொருட்கள்
4. பின்னாலாடைகள் மற்றும்
5. உணவுப் பக்குவப்படுத்துதல்.

(ஆ) சிறப்பு மூலதன உதவித் தொகை

7.6. கீழ்க்கண்ட தொழில்களை மேற்கொள்ளும் புதிய மற்றும் விரிவாக்கம் பெற்ற தொழில் நிறுவனங்கள் இச்சலுகை பெறத் தகுதியானவை:-

1. தோல் தொழில்
2. மின்னணுத் தொழில்
3. தானியங்கி துணைத் தொழில்கள்
4. மருந்து மற்றும் மருந்தகத் தொழில்கள்
5. சூரிய வெப்ப சக்தி இயந்திர சாதனங்கள்
6. ஏற்றுமதிக்குரிய தங்கம் மற்றும் வைர ஆபரணத் தொழில்கள்
7. கீழ்க்கண்ட 6 வட்டங்களில் அமைந்துள்ள சணல் பக்குவப் படுத்தும் தொழில்கள்-அம்பாசமுத்திரம் (திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம்) மதுரை (மதுரை மாவட்டம்), முசிறி (திருச்சிராப்பள்ளி மாவட்டம்), கும்பகோணம் (தஞ்சாவூர் மாவட்டம்), செங்கல்பட்டு (செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர். மாவட்டம்) மற்றும் பண்ருட்டி (தென் ஆற்காடு-வள்ளலார் மாவட்டம்).

8. மாசுக் கட்டுப்பாட்டுச் சாதனங்கள்.

9. விளையாட்டுச் சாதனங்களும் கருவிகளும்

10. அலுமினியம், பிவிசி கதவுகள் மற்றும் சன்னல்கள், சன்னல் சட்டங்கள் போன்ற ஆதாய கட்டுமானப் பொருள் தயாரிப்புக் கூடங்கள்.

11. உணவுப் பொருள் பக்குவப்படுத்தும் தொழில்கள்.

7.6.1. இச்சலுகை மின்னணுத் தொழில்களுக்கு அவற்றின் மொத்த முதலீட்டில் 20 விழுக்காடு அளவிற்கு ரூ. 35 இலட்சத்திற்கு மிகாமல் அளிக்கப்படும். தோல் பொருட்களுக்கு 20 விழுக்காடு அளவிற்கு ரூ. 20 இலட்சத்திற்கு மிகாமல் அளிக்கப்படும். இதர தொழில்களுக்கு 20 விழுக்காடு ரூ. 15 இலட்சம் அதிகப்படியாக வழங்கப்படும்.

7.6.2. சூரிய வெப்ப சக்தி இயந்திர சாதனங்கள் மற்றும் சில சூரிய வெப்ப சக்தி முறைகளைப் பயன்படுத்தும் தொழில் நிலையங்கள் ஆகியவற்றிற்கு 10 விழுக்காடு மூலதன மானியம் அளிக்கப்படும்.

7.6.3. கழிவு நீர் சுத்திகரிப்பு இயந்திர வசதிகள் அமைத்துக்கொள்ளும் பழைய தோல் பதனிடும் தொழில்சாலைகள், கழிவு நீர் சுத்தப்படுத்தும் இயந்திரங்களுக்குரிய கூடுதல் மூலதனச் சொத்து மதிப்பில் 10 விழுக்காடு ரூ. 2 இலட்சத்திற்கு மிகாமல் சலுகை அளிக்கப்படும்.

7.7. மாநிலத்தில், சிறப்பு மூலதன மானியம் கிடைக்கும் இடங்களில் பின்தங்கிய பகுதிக்குரிய மானியமும் கிடைக்கப்பெற்றால் இரண்டில் ஏதாவதொரு மானியத்தைப் பெற சம்பந்தப்பட்ட சிறு தொழிலுக்கு வாய்ப்புண்டு.

(இ) குறைந்தழுத்த மின் கட்டணச் சலுகை

7.8. குறைந்தழுத்த மின்சாரத்தை நுகர்கின்ற சிறிய மற்றும் பெரிய துறைகளைச் சார்ந்த அனைத்து தொழில்களும் இச்சலுகையினைப் பெறத் தகுதியுடையவனவாகும். இச்சலுகை உற்பத்தி துவங்கிய நாளிலிருந்து முதல் மூன்று ஆண்டுகளுக்கு அளிக்கப்படும். முதல் ஆண்டிற்கு செலுத்தப்பட்ட மின் கட்டணத்தில் 40 விழுக்காடும், இரண்டாம் ஆண்டிற்கு 30 விழுக்காடும் மூன்றாம் ஆண்டிற்கு 20 விழுக்காடும் வழங்கப்படும். சென்னை பெருநகர குழுமத்தின் கீழ் வரும் பகுதிகள், நகர்ப்புற நிலவரி எல்லைக்குள்ளும் நகர்ப்புற உச்ச வரம்பு எல்லைக்குள்ளும் வரும் பகுதிகள் சென்னை மற்றும் அதனைச் சுற்றி 15 கிலோ மீட்டர் வரையுள்ள பகுதிகள் மற்றும் கோயம்புத்தூர்,

மதுரை, சேலம், திருச்சிராப்பள்ளி ஆகிய நகரங்களும் அவற்றைச் சுற்றி 8 கிலோ மீட்டர் தூரத்திற்குள் உள்ள பகுதிகள் நீங்கலாக மாநிலம் முழுவதிலும் உள்ள ஏனைய பகுதிகளுக்கு இச்சலுகை அளிக்கப்படும் விரிவாக்கத்தில் ஈடுபட்டுள்ள ஏற்கனவே உள்ள தொழில் நிலையங்களுக்கும் மேற்கண்ட விகிதத்தில் சலுகை வழங்கப்படும்.

(ஈ) ஜெனரேட்டர் மானியம்.

7.9. தொழில் நிலையத்தின் உபயோகத்திற்கென, ஜெனரேட்டர் நிறுவப்பட்ட உயர் அழுத்த / குறைந்தழுத்த மின்சாரத்தைப் பயன்படுத்துகின்ற சிறு தொழில் நிலையங்களுக்கு, ஜெனரேட்டர் விலையில் 15 விழுக்காடு அதிகப்படியாக ரூ. 5 இலட்சத்திற்கு மிகாமல் இம்மானியம் அளிக்கப்படும். கீழே குறிப்பிட்ட மரபு சார்புடைய, வள அடிப்படையிலான மற்றும் உயர் மின்சக்தி தேவைப்படும் தொழில்கள் இதனைப் பெறத் தகுதியற்றவையாகும்.

1. சிமெண்ட்
2. சர்க்கரை
3. ஜவுளித் தொழில்கள்
4. சுரங்கப் பணி/குவாரி
5. மாவு ஆலைகள்
6. உணவகங்கள்
7. உட்கொள்ளும் எண்ணெய்கள் மற்றும் கரைத்து வடித்த பொருட்கள்
8. அரிசி ஆலைகள்
9. வடிசாலைகள், வடிப்பாலைகள், உப்பு பிரித்தல்.
10. கருங்கல் மெருகூட்டும் தொழிற்கூடங்கள் (சுரங்கம் மற்றும் வெட்டி எடுத்தல் சம்பந்தப்பட்டவை).
11. ஜவுளி பதப்படுத்தல், துணிகளை மொறுமொறுப்பாக்குதல் இழை நயப்படுத்தல் (ஜவுளித் தொழில் சம்பந்தப்பட்டவை)
12. மட்கலத் தொழில் (பீங்கான்) உற்பத்தி மற்றும் உயர் மின்சாரம் நுகரும் கீழ்வருகின்ற தொழில்கள்.
 (1) 2000 கிலோ வோல்ட் ஆம்பியருக்கும் அதிகமாக மின்சாரம் தேவைப்படும் இரும்பு மற்றும் அலுமினியத் தொழில்.

(2) ஒரு டன் உற்பத்திப் பொருள் தயாரிப்புக்கு 2000 யூனிட்டிற்கும் அதிகமாக மின்சாரம் பயன்படுத்தும் தொழில்கள் (அதாவது செய்தித் தாள் காகிதம் தயாரித்தல், காஸ்டிக் சோடா, உரம், நைலான்/ரேயான்/செயற்கையிழை நூல், பொட்டாசியம் குளோரைடு).

விதிமுறைகள் வரையறைகள்

1. இவ்வுதவித் தொகை புதிய ஜெனரேட்டருக்கு மட்டும் கிடைக்கும்.
2. புதிய ஜெனரேட்டர்கள் நிறுவுவதற்கு தமிழ்நாடு மின்வாரியத்தின் முன் அனுமதி பெற வேண்டும.
3. ஜெனரேட்டர்கள் தயாரிப்பாளரிடமிருந்தோ அல்லது தயாரிப்பாளர்களால் அங்கீகரிக்கப்பட்ட முகவர்களிட மிருந்தோதான் வாங்க வேண்டும்.
4. சுயமின் பெருக்கத்தை அதிகரிப்பதற்காக வாங்கப்படும் கூடுதல் ஜெனரேட்டருக்கும், இச்சலுகை பெற பரிசீலனை செய்யப்படும்.
5. ஏற்கெனவே உள்ள ஜெனரேட்டரை மாற்றி அதிக கொள்ளளவுத் திறனுடன் கூடிய புதிய ஜெனரேட்டரை வாங்கும் தொழில் நிலையத்திற்கு கூடுதல் கொள்ளளவுத் திறனுக்கு மட்டும் சலுகை அளிக்கப்படும்.
6. மைய மற்றும் மாநில அரசு நிதி நிறுவனங்கள் மூலம் தவணைக் கடன் அல்லது தவணைக் கொள்முதல் திட்டம் ஆகியவை மூலம் ஜெனரேட்டர் வாங்கலாம். சொந்த நிதியிலிருந்தும் வாங்கலாம்.

உ. விற்பனை வரி ஒத்தி வைப்பு / தள்ளுபடி திட்டம்

7.10. தொழில் வளர்ச்சிப் பாங்கினை மேலும் அதிகமாக்குவதற்கு மேற்கண்ட திட்டத்தின் கீழ், அரசு சில சலுகைகளை வழங்குகிறது. இதன் மூலம் நிதி வாயில்களை அதிகரிக்க வேண்டியுள்ள தொழில்களுக்கு சிறிது நிவாரணம் கிடைக்கும். இத்திட்டத்தின் மூன்று முக்கிய அம்சங்கள் பின்வருமாறு:-

(1) மிகவும் பின் தங்கிய 32 வட்டங்கள் புதுக்கோட்டை, தூத்துக்குடி மற்றும் மானாமதுரை ஆகிய இடங்களிலுள்ள மூன்று

1995 ஏப்ரல் 24]

சிப்காட் தொழில் வளாகங்கள், டாக்டர் விக்ரம் சாராபாய் மின்னணுத் தொழிற்பேட்டை, திருவான்மியூர் மற்றும் செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர். மாவட்டம் சோளிங்கநல்லூரில் உள்ள மின்னணு நகரம் ஆகிய இடங்களில் அமைக்கப்படும் புதிய தொழில்கள் விரிவாக்கம் மாற்று உற்பத்திப் பொருட்கள் தயாரிக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளன. ஏற்கெனவே நடைபெற்று வரும் தொழில்களில் நிலையான சொத்துக்களுக்காக செலுத்தப்பட்ட மொத்த முதலீட்டுத் தொகை அளவிற்கு ஐந்தாண்டுகளுக்கு விற்பனை வரி முழுமையாக தள்ளுபடி செய்யப்படும். விரிவாக்கத்தில் ஈடுபடும் ஏற்கனவே உள்ள தொழில்களுக்கு கூடுதலாக செலுத்தப்பட்ட நிலையான சொத்துக்களின் முதலீட்டு அளவுக்கு விற்பனைவரி தள்ளுபடி செய்யப்படும்.

(2) பின்தங்கியவையென அறிவிக்கப்பட்ட வட்டங்கள், அரசு/ அரசுத் துறைகளால் அமைக்கப்பட்ட தொழில் வளாகங்கள் ஆகியவற்றில் அமைந்திடும் புதிய தொழில்களுக்கு அவற்றின் நிலையான சொத்துக்களின் மொத்த முதலீட்டுத் தொகை அளவிற்கு ஒன்பது ஆண்டுகளுக்கு முழு விற்பனை வரி ஒத்தி வைக்கப்படும். விரிவாக்கத்தில் ஈடுபட்டு ஏற்கெனவே இயங்கும் தொழில்களுக்கு விரிவாக்கத்திற்காக ஏற்படுத்தியுள்ள நிலையான கூடுதல் சொத்துக்களின் 80 விழுக்காடு அளவிற்கு விற்பனை வரி ஒத்தி வைப்பு அளிக்கப்படும்.

(3) எஞ்சிய பகுதிகளில் புதிய தொழில்களுக்கு, அவற்றின் நிலையான சொத்துக்களின் மொத்த முதலீட்டில் 60 விழுக்காட்டிற்கு மிகாமல் 5 ஆண்டுகளுக்கு விற்பனை வரி ஒத்தி வைக்கப்படும். விரிவாக்கத்தில் ஈடுபட்டுள்ள தொழில்களுக்கு கூடுதல் முதலீட்டில் 50 விழுக்காடு அளவுக்கு மிகாமல் இந்த உதவி அளிக்கப்படும்.

(4) தள்ளிவைப்புத் திட்டத்தின் கீழ், ஒரு ஆண்டின் நிலுவையாக உள்ள தள்ளி வைக்கப்படும் விற்பனை வரி, ஐந்து/ஒன்பது ஆண்டுகளுக்குப் பிறகு தொழிற்சாலை அமைவிடத்தைப் பொறுத்து வசூலிக்கப்படும். இவ்வாறு தள்ளி வைக்கப்படும் தொகை வருமான வரிக்குட்படுவதால் இத்திட்டத்தின் முழுப் பயனையும் அடைய இயலவில்லையென சிறு தொழில்களிடமிருந்து முறையீடுகள் வந்துள்ளன. விற்பனை வரி மற்றும் அற நிலையத்துறையின் 11-12-1994 நாளிட்ட அரசு ஆணை எண் 48-ல் இவ்வாறு தள்ளிவைக்கப்படும் தொகை சிறு தொழிலுக்கு வழங்கப்பட்ட வட்டியில்லாக் கடனாகக் கொள்ளப்பட வகை செய்கிறது. இதற்குரிய ஒப்பந்தப்பத்திரம் அளிக்க சிறு தொழில் முனைவோர் உடன்பட வேண்டும்.

(5) விரிவாக்கத்தில் ஈடுபட்டுள்ள அனைத்து தொழில்களும் 15 விழுக்காடு அளவிற்கு உற்பத்தியை அதிகரித்துக் காட்ட வேண்டும். எத்தனைமுறை வேண்டுமானாலும் விரிவாக்கத்தை மேற்கொள்ளலாம்.

7.11 மேற்கண்ட திட்டங்களில் ஏற்பட்டுள்ள சாதனை விவரங்கள் கீழே உள்ள அட்டவணையில் தரப்பட்டுள்ளன:-

திட்டத்தின் பெயர்	1992-93		1993-94		1994-95	
	பயன டைந்த தொழில் களின் எண் ணிக்கை	வழங்கப் பட்ட தொகை (ரூபாய் இலட்சத் தில்)	பயன டைந்த தொழில் களின் எண் ணிக்கை	வழங்கப் பட்ட தொகை (ரூபாய் இலட்சத் தில்)	பயன டைந்த தொழில் களின் எண் ணிக்கை	வழங்கப் பட்ட தொகை (31.12.94 வரை) (ரூபாய் இலட்சத் தில்)
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)
மாநில மூலதன உதவித் தொகை சிறப்பு மூலதன உதவித் தொகை	709	800.00	746	900.00	412	700.00
குறைந்த அழுத்த மின் கட்டண மானியம்	2842	125.00	2219	100.00	1504	100.00
ஜெனரேட்டர் மானியம்	115	25.00	99	25.00	109	25.86
வட்டியில்லா விற் பனை வரிக் கடன்	43	34.99	23	46.55	..	..
வட்டியில்லா விற் பனை வரிக்கடன் தள்ளிவைப்பு / தள்ளுபடித் திட்டம்	388	3117.83	256	2694.08	152	1531.83

நலிவுற்ற சிறு தொழில்களுக்கு உதவி

7.12. தொழில்கள் நலிவுறுவதற்கான காரணங்களை அரசு வெகுவாக அறிந்துள்ளது. இதனை முனைப்புடன் தீர்வு செய்ய வேண்டும்.

நலிவுற்ற சிறு தொழில்களின் மறுவாழ்விற்காக பின்வருகின்ற நிவாரணங்கள் வழங்குவதற்கு சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு இத்துறை பரிந்துரை செய்கிறது.

1. கூடுதல் கடன் வசதிகள், நிலுவையிலுள்ள கடனை மாற்றி அமைத்தல் மற்றும் தண்ட வட்டி தள்ளுபடி ஆகியவற்றிற்கு சம்பந்தப்பட்ட நிதி நிறுவனங்கள்/வங்கிகளுக்கு பரிந்துரை செய்தல்.

2. அதிகப்படியாக 5 ஆண்டுகளுக்கு விற்பனை வரியைத் தள்ளி வைப்பதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பரிந்துரை செய்தல்.

3. ஒவ்வொரு தொழில் நிலையத்தின் தன்மைக்கேற்ப முடிவெடுக்கப்படும் காலத்திற்கு நலிவுற்ற தொழில்களுக்கு மின்வெட்டிலிருந்து விலக்களித்தல்.

4. தமிழ்நாடு நிவாரண நிறுவனச் (சிறப்பு விதிகள்) சட்டம் 1969-ன் கீழ், அரசு தகுதியடிப்படையில் "நிவாரண நிறுவனம்" என அறிவித்து அதன் மூலம் அத்தொழில் நிலையம் தொடர்ந்து வேலை செய்ய வழி வகை செய்தல்.

5. மின்சார வாரியம் மற்றும் வணிக வரித்துறையினால் நலிவுற்ற தொழில் நிலையங்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதைத் தவிர்த்தல்.

6. அரசு கொள்முதல் திட்டத்தின் கீழ் நலிவுற்ற தொழில் நிலையங்களிடமிருந்து உற்பத்திப் பொருள்களை வாங்குவதற்கு முன்னுரிமை வழங்குதல்.

7. அரசு ஆணை எண்(3டி), 10 - வணிக வரி மற்றும் அறநிலையத்துறை, நாள் 15-3-1991-ன் படி நலிவுற்ற சிறு தொழில் நிலையங்கள் இரண்டாவது அடமானப் பத்திரம் மற்றும் சார்புரிமை அளிப்பு ஆவணம் ஆகியவற்றிற்கு முத்திரைத்தாள் கட்டணத்திலிருந்து விலக்கு அளித்தல்.

[1995 ஏப்ரல் 24

8. தொழிற்பேட்டைகள் மற்றும் செப்பனிட்ட மனைகள்

8.1. தொழிற்தொகுதிகளின் மேம்பாட்டிற்குத் தேவையான அடிப்படை வசதிகளை குறைந்த செலவில் வழங்கும் பொருட்டு அரசு தொழிற்பேட்டைகளை நிறுவியுள்ளது. இவை பிற்பட்ட பகுதிகளில் விரைவான சிறு தொழில் வளர்ச்சிக்கு வழி கோலியுள்ளது என்றால் அது மிகையாகாது. சமீப ஆண்டுகளில் இத் திட்டம் குறிப்பிடத்தக்க முக்கியத்துவம் பெற்று வருகிறது. தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம் போன்ற அரசு நிறுவனங்கள் மூலம் தொழிற்பேட்டைகளை அமைப்பதோடு தனியார் தொழிற்பேட்டைகள் அமைவதையும் மாண்புமிகு முதல் அமைச்சர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களின் சிறப்புமிக்க தலைமையில் அமைந்துள்ள அரசு ஊக்குவித்து வருகிறது. இத்திட்டத்தின் சிறப்பம்சங்கள் பின் வருகின்ற பத்திகளில் கூறப்பட்டுள்ளன:–

தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம் (சிட்கோ)

8.1.1. அனைத்து அடிப்படை வசதிகளுடன் கூடிய பல்வேறு அளவுகளில் தொழிற்கூடங்கள் மற்றும் செப்பனிட்ட மனைகள் வழங்குவது இந்த நிறுவனத்தின் மிக முக்கியமான பணியாகும். கடந்த 24 ஆண்டுகளில், மாநிலம் முழுவதிலும், 62 இடங்களில், 3502 தொழிற்கூடங்களை சிறு தொழில்களின் உபயோகத்திற்காக இந்நிறுவனம் வழங்கியுள்ளது.

8.1.2. 1994-95 ஆம் ஆண்டிற்கு 200 தொழிற்கூடங்களைக் கட்டுவது மற்றும் 100 செப்பனிட்ட மனைகள் வழங்குவது ஆகியவை இலக்காக நிர்ணயிக்கப்பட்டது. இதில் டிசம்பர் 1994 வரை 150 தொழிற்கூடங்கள் கட்டும் பணி முடிக்கப்பட்டுள்ளது. எஞ்சிய தொழிற்கூடங்கள் விரைவில் கட்டி முடிக்கப்படும். டிசம்பர் 1994 வரை சிட்கோ நிறுவனம் 96 செப்பனிட்ட மனைகளை வழங்கியுள்ளது.

8.1.3. 1994-95 ஆம் ஆண்டில் செயல்படுத்தப்பட்டுள்ள புதிய திட்டங்கள் :–

1. நஞ்சை ஊத்துக்குளி

பெரியார் மாவட்டம், ஈரோட்டிற்கு அருகில் நஞ்சை ஊத்துக்குளி கிராமத்தில் தொழிற்பேட்டை அமைப்பதற்கு சுமார் 13.53 ஏக்கர் நிலத்தை சிட்கோ நிறுவனம் வாங்கியுள்ளது. கட்டிட வரைபடங்கள் தயாரிக்கப்பட்டு, 14 தொழிற்கூடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

இத் தொழிற்கூடங்கள் ஒதுக்கும் பணி நடைபெற்று வருகிறது. இவற்றில் சுமார் 1050 பேருக்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் வேலைவாய்ப்பு கிடைக்கும்.

2. வெள்ளக்கோயில்

பெரியார் மாவட்டம், காங்கேயம் வட்டம், வெள்ளக்கோயிலிலுள்ள ராசாத்துவலசு மற்றும் மேட்டுப்பாளையம் கிராமங்களில் தொழிற்பேட்டை ஒன்றை அமைப்பதற்கு சிட்கோ நிறுவனம் சுமார் 53 ஏக்கர் நிலத்தை வாங்கியுள்ளது. தொழிற்பேட்டையின் கட்டிட வரைபடம் தயாரிக்கப்பட்டு தொழிற்கூடங்கள் கட்டுவதற்குரிய தேவை அளவு பற்றிய ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இத்தொழிற் பேட்டையில் அமைக்கப்படும் சிறுதொழில்களுக்கு நீர்வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

3. இராஜபாளையம்

காமராஜர் மாவட்டம், இராஜபாளையம் வட்டம், தென் வேங்கைநல்லூர் மற்றும் சோழபுரம் கிராமங்களில் ஒரு தொழிற்பேட்டை அமைப்பதற்கு சுமார் 40 ஏக்கர் நிலத்தை சிட்கோ நிறுவனம் வாங்கியுள்ளது. 10 தொழிற்கூடங்கள் கட்டப்பட்டுள்ளன. இத் தொழிற்பேட்டை சுமார் 750 பேருக்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் வேலை வாய்ப்பினை அளிக்கும்.

4. கடையநல்லூர்

திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம், கடையநல்லூரில், தொழில்வணிக இயக்குநரகத்தின் மூலமாக திருவாளர்கள் பாண்டியன் சிறு தீக்குச்சி தயாரிப்பாளர்கள் தொழிற்கூட்டுறவுச் சங்கத்திடமிருந்து சுமார் 10 ஏக்கர் நிலத்தை சிட்கோ நிறுவனம் வாங்கியுள்ளது. கட்டிட வரைபடம் தயாரிக்கப்பட்டு, சுமார் 10 தொழிற்கூடங்கள் முதல் கட்டத்தில் கட்டப்படும். இத்தொழிற்பேட்டை சுமார் 750 பேருக்கு நேரடியாகவும், மறைமுகமாகவும் வேலை வாய்ப்பினை ஏற்படுத்தும்.

5. திருமுடிவாக்கம்

செங்கை-எம்.ஜி.ஆர். மாவட்டம், திருப்பெரும்புதூர் வட்டம் திருமுடிவாக்கம் கிராமத்தில் தோல் உற்பத்திப் பொருள்களுக்குரிய ஒரு தொழிற்பேட்டை அமைப்பதற்கு சிட்கோ நிறுவனம் சுமார் 225 ஏக்கர் நிலத்தை வாங்கியுள்ளது. இந்தத் தொழிற்பேட்டையில்

அமைக்கப்படும் தொழில் நிலையங்கள் 100 விழுக்காடு ஏற்றுமதி செய்யும் தொழில் நிலையங்களாகவே இருக்கும். தென்னிந்தியாவிலேயே இது முதன்மையாக இருக்கும். இதற்கான கட்டிட வரைபடம் தயாரிக்கப்பட்டு விட்டது. சிட்கோ நிறுவனம் பல்வேறு அளவுகளில் சுமார் 105 தொழிற்கூடங்களை பல்வேறு கட்டங்களில் கட்டுவதற்கும் 105 சிறு தொழில் நிலையங்களுக்கு ஒதுக்குவதற்கும் திட்டமிட்டுள்ளது. இத்திட்டம் செயல்படுத்தப்பட்ட பிறகு சுமார் 75000 பேருக்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் வேலைவாய்ப்பளிக்கும்.

6. ஆடைகள் தொழில் வளாகம், கிண்டி

கிண்டி தொழிற்பேட்டையில் 1.5 ஏக்கர் நிலப்பரப்பில் ஆடைகள் வளாகம் ஒன்றை ரூ.4.5 கோடி மதிப்பில் சிட்கோ நிறுவனம் கட்டியுள்ளது. இத் தொழில் வளாகம் நான்கு மாடிகளைக் கொண்ட அடுக்கு மாடிக் கட்டிடமாகும். ஒவ்வொரு மாடியிலும் 16 தொழிற்கூடங்கள் உள்ளன. இவற்றில் 13 தொழிற்கூடங்கள் ஒவ்வொன்றும் 1000 சதுர அடி உடையதாகவும் மூன்று தொழிற்கூடங்கள் ஒவ்வொன்றும் 500 சதுர அடி உடையனவாகவும் உள்ளன. மொத்தத்தில், 64 தொழிற்கூடங்கள் உள்ளன. சாலை, தண்ணீர், மின்சாரம், கார் நிறுத்துமிடம், தொலைத் தொடர்பு வசதி முதலிய அனைத்து அடிப்படை வசதிகளும் வழங்கப்பட்டுள்ளன. இத் தொழிற்கூடங்களை ஒதுக்கும் பணி நடைபெற்றுவருகிறது. இவை 7500 பேருக்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் வேலை வாய்ப்பளிக்கும்.

1995-96 ஆம் ஆண்டிற்குரிய கண்ணோட்டம்

8.1.4. இந்நிறுவனம் எட்டாவது ஐந்தாண்டு திட்ட காலத்தில் ஒவ்வொரு ஆண்டும், குறைந்தது 200 தொழிற்கூடங்கள் கட்டுதல் மற்றும் 50 செப்பனிட்ட மனைகள் ஒதுக்குதல் ஆகியவற்றிற்கு திட்டமிடப்பட்டுள்ளது. இதன்படி 1995-96 ஆம் ஆண்டில் 200 தொழிற்கூடங்கள் கட்டுவதற்கும் 50 செப்பனிட்ட மனைகள் ஒதுக்குவதற்கும் இந்நிறுவனம் திட்டமிட்டுள்ளது. மேலும், சிறு தொழில் நிலையங்களிடமிருந்து வரும் தேவையினைக் கருத்தில் கொண்டு மேலும் கூடுதல் தொழிற்கூடங்களைக் கட்டுவதற்கும் திட்டமிட்டுள்ளது.

உருவாகும் புதிய திட்டங்கள்

8.1.5 மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆணைப்படி, மாநிலத்திலுள்ள பின்தங்கிய மற்றும் மிகவும் பின் தங்கிய பகுதிகளின் வளர்ச்சிக்கு சிட்கோ நிறுவனம் ஊக்கமளித்து வருகிறது. இதன்படி,

இந்த வட்டங்களில் புதிய தொழிற்பேட்டைகளை அமைப்பதற்காக அரசு புறம்போக்கு நிலங்களைக் கண்டறிந்து வருகிறது. பின்தங்கிய மற்றும் மிகவும் பின்தங்கிய வட்டங்களில் தொழிற்பேட்டைகளை அமைப்பது சிறு தொழில் துறையின் வளர்ச்சிக்கு வழி வகுக்கும். மேலும், அப்பகுதிகளிலுள்ள வேளாண்மைத் தொழிலாளர்கள் மற்றும் வேலை வாய்ப்பற்ற கிராமப்புற இளைஞர்கள் வேலைவாய்ப்பு பெறுவதன் மூலம் வறுமைக் கோட்டிற்கு கீழே உள்ள மக்களின் வாழ்க்கைத் தரம் உயரும்.

சிட்கோ நிறுவனம், பின்வருகின்ற இடங்களில் புதிய தொழிற்பேட்டைகளை அமைப்பதற்கு உத்தேசித்துள்ளது:—

1. பர்கூர்

தர்மபுரி மாவட்டம் பர்கூர் வட்டத்தில் கொண்டப்பநாயணபள்ளி மற்றும் அச்சமங்களம் கிராமங்களில் 37 ஏக்கர் மலைப்புறம்போக்கு நிலங்களை சிட்கோ நிறுவனம் தொழிற்பேட்டை ஒன்று அமைப்பதற்கு கண்டறிந்துள்ளது.

2. போச்சம்பள்ளி

தர்மபுரி மாவட்டம், ஜம்புகுட்டப்பட்டி மற்றும் போச்சம்பள்ளி கிராமங்களில் தொழிற்பேட்டை ஒன்றை அமைப்பதற்கு 50 ஏக்கர் தோப்பு புறம்போக்கு நிலத்தை சிட்கோ நிறுவனம் கண்டறிந்துள்ளது.

3. ஊத்தங்கரை

தர்மபுரி மாவட்டம், ஊத்தங்கரை, வைத்தியனூர் கிராமத்தில் 40 ஏக்கர் புறம்போக்கு நிலத்தை தொழிற்பேட்டை ஒன்று அமைப்பதற்கு சிட்கோ நிறுவனம் கண்டறிந்துள்ளது.

இவை தவிர, தர்மபுரி மாவட்டம் போச்சம்பள்ளி, திண்டுக்கல் அண்ணா மாவட்டம் நிலக்கோட்டை, பெரியார் மாவட்டம் பெருந்துறை ஆகிய இடங்களில் தமிழ்நாடு அடிப்படை வசதி வளர்ச்சி நிறுவனத்தால் அபிவிருத்தி செய்யப்படும் வளர்ச்சி மையங்களில் தொழிற்பேட்டைகள் அமைப்பதற்கு 200 ஏக்கர் நிலத்தை ஒதுக்கித் தருமாறு ”டாசிட்“ நிறுவனத்தை சிட்கோ நிறுவனம் கேட்டுக் கொண்டுள்ளது.

4. பொதட்டூர்பேட்டை

செங்கை எம்.ஜி.ஆர். மாவட்டத்தில் பள்ளிப்பட்டு வட்டம் பொதட்டூர்பேட்டை கிராமத்தில் தொழிற்பேட்டை ஒன்று அமைப்பதற்கு 7 ஏக்கர் புறம்போக்கு மற்றும் 10 ஏக்கர் பட்டா நிலங்களை சிட்கோ நிறுவனம் கண்டறிந்துள்ளது. சுமார் 22 தொழில்

முனைவோர்கள் இந்த உத்தேசிக்கப்பட்டுள்ள தொழிற்பேட்டையில் சிறுதொழில்கள் அமைப்பதற்கு வழிவகைச் செலவுகள் செலுத்துவதற்கு சிட்கோ நிறுவனத்தை அணுகியுள்ளனர். நிலங்களை எடுத்துக் கொண்டபிறகு, தொழிற்கூடங்கள் கட்டும்பணி பல்வேறு கட்டங்களில் எடுத்துக் கொள்ளப்படும்.

5. நாஞ்சிக் கோட்டை

தஞ்சாவூர் மாவட்டத்தில், தஞ்சாவூர் வட்டம், நாஞ்சிக்கோட்டை கிராமத்தில் தருமபுரம் ஆதினக் கோவிலுக்குச் சொந்தமான நிலத்தில் மகளிர் தொழில் முனைவோர்களுக்கென்றே தொழிற்பேட்டை ஒன்றை அமைப்பதற்கு 26.30 ஏக்கர் கோயில் நிலத்தை சிட்கோ நிறுவனம் கண்டறிந்துள்ளது. நிலங்களை எடுத்துக் கொண்டபிறகு, சிட்கோ நிறுவனம் 72 தொழிற்கூடங்களை பல்வேறு கட்டங்களில் கட்டுவதற்கு உத்தேசித்துள்ளது.

6. சிவகாசி

காமராஜர் மாவட்டம். சிவகாசியில், விஸ்வநாதர் கோயிலுக்கு சொந்தமான கோயில் நிலத்தில் தொழிற்பேட்டை ஒன்றை அமைப்பதற்கு 15.43 ஏக்கர் நிலத்தை சிட்கோ நிறுவனம் கண்டறிந்துள்ளது. நிலங்களை எடுத்துக் கொண்டபிறகு, சிட்கோ நிறுவனம் பல்வேறு கட்டங்களில் 30 தொழிற்கூடங்களைக் கட்டுவதற்கு உத்தேசித்துள்ளது.

7. திருநீர்மலை

செங்கை எம்ஜிஆர் மாவட்டம், சைதாபேட்டை வட்டம், பல்லாவரத்துக்கு அருகில் திருநீர்மலை கிராமத்தில், அருள்மிகு ரங்கநாதர்சாமி கோயிலுக்குச் சொந்தமான நிலத்தில் தொழிற்பேட்டை ஒன்றை அமைப்பதற்கு சிட்கோ 34.68 ஏக்கர் கோவில் நிலத்தை கண்டறிந்துள்ளது. நிலங்களை எடுத்துக் கொண்டபிறகு, சிட்கோ நிறுவனம், பல்வேறு கட்டங்களில் 100 தொழிற்கூடங்களைக் கட்டுவதற்கு உத்தேசித்துள்ளது.

8.2. தனியார் தொழிற்பேட்டைகள்

1. நவீனமுறை பக்குவப்படுத்தும் தொழில் வளாகம், தாராபுரம்.

திருப்பூர் ஏற்றுமதியாளர்கள் சங்கம் நவீனமுறை பக்குவப்படுத்தும் தொழில் வளாகம் (TEAMPIC) என்ற நிறுவனம் தொழில் வளாகம் அமைப்பதற்கு தாராபுரத்தில் சுமார் 450 ஏக்கர் நிலத்தை வாங்கியுள்ளது.

மேலும் 150 ஏக்கர் நிலத்தை வாங்குவதற்கு இந்நிறுவனம் உத்தேசித்துள்ளது. இதற்கான மொத்தம் 600 ஏக்கர் நிலங்களும் தனியார் தொழிற்பேட்டை கட்டுவதற்கு சிட்கோ நிறுவனத்திடம் ஒப்படைக்கப்படும். திருவாளர்கள் டீம்பிக் நிறுவனம், பொது நீர் சுத்திகரிப்பு நிலையம் ஒன்றை அமைத்து மாசுகளை நீக்கிய நீரை, விவசாயத்திற்கு பயன்படுத்துவதற்கு உத்தேசித்துள்ளது. இந் நிறுவனம், பக்குவப்படுத்தும் தொழில் வளாகத்திற்கு அமராவதி நதியிலிருந்து தண்ணீர் எடுத்துக் கொள்வதற்கு அரசிடமிருந்து அனுமதி கேட்டுள்ளது. சிட்கோ நிறுவனம் 1995-96 ஆம் ஆண்டில் இத்திட்டத்தை எடுத்துக் கொள்வதற்கு உத்தேசித்துள்ளது.

2. விழுப்புரம் இராமசாமி படையாச்சியார் சிறு தொழில் சங்கம்.

விழுப்புரம் இராமசாமி படையாச்சியார் சிறு தொழில் சங்கம், விழுப்புரத்திற்கு அருகில் 15 ஏக்கர் நிலத்தைக் கண்டறிந்து, தனியார் தொழிற்பேட்டை அமைப்பதற்கு சிட்கோ நிறுவனத்தை அணுகியுள்ளது. சிட்கோ நிறுவனம், இதுவரை, சங்கத்தின் உறுப்பினர்களிடமிருந்து ரூ. 10,000 வைப்புத் தொகையுடன் 21 விண்ணப்பங்களைப் பெற்றுள்ளது. சிட்கோ நிறுவனம், 1995-96 ஆம் ஆண்டில் இத்திட்டத்தை எடுத்துக் கொள்வதற்கு உத்தேசித்துள்ளது.

8.3. தொழில் வணிக இயக்கத்தின் கட்டுப்பாட்டிலுள்ள தொழிற்பேட்டைகள்:–

(அ) மின் மற்றும் மின்னணுத் தொழிற்பேட்டைகள்

8.3.1. மின்னணுத் தொழில் மிக முக்கியத்துவம் வாய்ந்த தொழில்களில் ஒன்றாக மாநில அரசினால் அறிவிக்கப்பட்டுள்ளது. அன்றாட உபயோக மின்னணுப் பொருட்கள் மின் நுண்கருவிகள், "கம்ப்யூட்டர் சாப்ட்வேர்" முதலியவற்றுக்குள்ள வாய்ப்புகளைக் கருத்தில் கொண்டு, பின் வருகின்ற 8 இடங்களில் அனைத்து அடிப்படை வசதிகளுடன் கூடிய மின்சார மற்றும் மின்னணுத் தொழிற்பேட்டைகள் அமைக்கப்பட்டுள்ளன:

1. டாக்டர் விக்ரம் சாராபாய் மின்னணுத் தொழிற்பேட்டை, சென்னை-41.

2. செப்பனிட்ட மனைத் தொழிற்பேட்டை, பெருங்குடி.

3. மின்சாரத் தொழிற்பேட்டை, காக்களூர்.

4. மின்னணுத் தொழிற்பேட்டை, சேலம்.

5. மின் மற்றும் மின்னணுத் தொழிற்பேட்டை, கோயம்புத்தூர்,

6. மின் மற்றும் மின்னணுத் தொழிற்பேட்டை, ஓசூர்.

7. மின் மற்றும் மின்னணுத் தொழிற்பேட்டை, மதுரை.

8. மின் மற்றும் மின்னணுத் தொழிற்பேட்டை, திருச்சிராப்பள்ளி.

8.3.2. திருவான்மியூர்-பெருங்குடி பகுதியானது, மின்னணு மற்றும் அதனைச் சார்ந்த தொழில்களுக்கு முக்கியமான வளர்ச்சி மையமாக உருவாகி வருகிறது. டாக்டர் விக்ரம் சாராபாய் மின்னணுத் தொழிற்பேட்டையில் ஏற்கனவே 104 தொழிற்கூடங்கள், தொழிலதிபர்களுக்கு வழங்கப்பட்டுவிட்டது. பெருங்குடி செப்பனிட்ட மனைத் தொழிற்பேட்டையில் 174 செப்பனிட்ட மனைகள் அபிவிருத்தி செய்யப்பட்டு, இரண்டு கட்டடங்களில் 130 தொழில் முனைவர்களுக்கு வழங்கப்பட்டு விட்டது. மேலும் தமிழ்நாடு மின்னணு அடுக்கு மாடி தொழிற்கூட்டுறவுச் சங்கத்தினால் ஒவ்வொரு அடுக்கிலும் 40 தொழிற்கூடங்களை கொண்ட மூன்று அடுக்கினை உடைய பல மாடிக் கட்டிடம் ரூ. 10.00 கோடி மதிப்பில் கட்டுவதற்கு உத்தேசிக்கப் பட்டுள்ளது.

8.3.3. காக்களூர், கோயமுத்தூர், மதுரை, திருச்சிராப்பள்ளி மற்றும் ஓசூர் ஆகிய இடங்களிலுள்ள தொழிற்பேட்டைகளில் மொத்தம் சுமார் 100 தொழில் நிலையங்கள் உள்ளன. சேலத்தில் 27.50 ஏக்கர் நிலம் 55 மனைகளாக பிரிக்கப்பட்டு அவற்றுள் 42 மனைகள் ஏற்கனவே ஒதுக்கப்பட்டு விட்டன.

8.3.4. மேற்கண்ட எட்டுத் தொழிற்பேட்டைகளின் தொழில் நிலையங்கள் சுமார் 10,000 பேருக்கு வேலையளிக்கின்றன. இந்நிலையங்களில் உற்பத்தி ஆண்டொன்றுக்கு சுமார் ரூ. 250 கோடியாகும். தற்போதைய வாடகை முறைத்திட்டத்திலிருந்து தவணைக் கொள்முதல் திட்டத்திற்கு மாற்றிக் கொள்வதற்கு தனிப்பட்ட தொழில் நிலையங்களுக்கு அனுமதியளிக்க அரசு முடிவு செய்துள்ளது.

(ஆ) மட்பாண்டத் தொழிற்பேட்டை, விருத்தாசலம்

8.3.5. விருத்தாசலத்திலுள்ள தொழிற்பேட்டை விருத்தாசலத்திலுள்ள மட்பாண்டத் தொழில் நிறுவனத்திடமிருந்து 1-4-1988 முதல் தொழில்

மற்றும் வணிகத் துறைக்கு மாற்றப்பட்டு நிர்வாக அலுவலரின் கண்காணிப்பில் இயங்கி வருகிறது. இத்தொழிற்பேட்டையில் அமைக்கப்பட்டுள்ள 64 நிலையங்களுக்கும் சதுர அடி ஒன்றுக்கு 0.50 பைசா வீதம் வாடகை வசூலிக்கப்படுகிறது. இவற்றிற்கு தேவையான தண்ணீர், மின்சாரம் மற்றும் வெப்பமூட்டும் வசதிகள் நியாயமான கட்டணத்தில் தொழில் நிலையங்களுக்கு அளிக்கப்படுகின்றன.

நிலப்பரப்பு	..	42.80 ஏக்கர்
தொழில் பிரிவுகளின் எண்ணிக்கை	..	64
வசூலிக்கப்பட்ட மொத்த வாடகை (தோராயமாக மாதமொன்றுக்கு)	..	ரூ. 50,000

(இ) கூட்டுறவுத் தொழிற்பேட்டைகள்

8.3.6. சிறு தொழில் முனைவோர்களுக்கு தவணைக் கொள்முதல் அடிப்படையில், நியாயமான விலையில் செப்பனிட்ட மனைகள்/ தொழிற் கூடங்கள் வழங்கும் நோக்கத்துடன் கூட்டுறவு அடிப்படையின் கீழ் கூட்டுறவு தொழிற்பேட்டைகள் அமைக்கப்பட்டுள்ளன. தொழில்களுக்குத் தேவையான மின்சாரம், தண்ணீர், வடிகால், சாலைகள், தெருவிளக்குகள், உணவகம், மருத்துவமனை, தொழிலாளர் நல மையங்கள் போன்ற அடிப்படை வசதிகளை இத் தொழிற்பேட்டைகள் அளிக்கின்றன.

8.3.7. இதுவரை 12 கூட்டுறவு தொழிற்பேட்டைகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. அவற்றில் 5 தொழிற்பேட்டைகள் செயல்பட்டு வருகின்றன. எஞ்சியவை செயலாக்க நிலையில் உள்ளன. இத்தொழிற்பேட்டைகளின் செயல்பாடு விவரம் கீழே குறிக்கப்பட்டுள்ளது.

நிலப்பரப்பு	..	225.97 ஏக்கர்.
ஒதுக்கப்பட்ட தொழிற்கூடங்களின் எண்ணிக்கை	..	130
செப்பனிட்ட மனைகளின் எண்ணிக்கை	..	365
வழங்கப்பட்ட மனைகளின் எண்ணிக்கை	..	257

[1995 ஏப்ரல் 24

செயல்படுத்தப்பட்டு வரும் கூட்டுறவு தொழிற்பேட்டைகள்

வ. எண்.	கூட்டுறவுத் தொழிற் பேட்டையின் பெயர் மற்றும் இடம்.	திட்டத்தின் மதிப்பு (ரூபாய் இலட்சத்தில்).	வேலை வாய்ப்புத் திறன்.	இதுவரை கையகப் படுத்தப்பட்ட நிலப்பரப்பு (ஏக்கரில்).	உத்தேசிக்கப் பட்டுள்ள தொழிற் கூடங்களின் எண்ணிக்கை.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
1.	கன்னியாகுமரி கூட்டுறவுத் தொழிற்பேட்டை (இண்ட் எண். 1741), கன்னியாகுமரி.	52.80	500	9.165	55
2.	பிரியதர்சினி கூட்டுறவுத் தொழிற்பேட்டை (இண்ட் எண். 1750), தென்காசி.	62.52	600	6.06	26
3.	சேரன் கூட்டுறவு தொழிற்பேட்டை (இண்ட் எண். 1754), கோயமுத்தூர்.	80.00	500	7.77	60
4.	அறிஞர் அண்ணா கூட்டுறவுத் தொழிற்பேட்டை (இண்ட் எண். 1807), கோயமுத்தூர்.	3,660.00	10,000	227.84	463
5.	மதுரை ஆட்டோ மொபைல்ஸ் கூட்டுறவுத் தொழிற்பேட்டை (இண்ட் எண். 1839), மதுரை.	126.34	2,000	23.90	250
6.	சேலம் கிரானைட் மற்றும் பொதுத் தொழில் கூட்டுறவுத் தொழிற்பேட்டை, (இண்ட் எண். 1908), சேலம்.	287.84	2,000	75.00*	59
7.	தமிழ்நாடு மின்னணு அடுக்குமாடி தொழிற் கூட்டுறவுச் சங்கம், பெருங்குடி	1,260.00	3,000	5.00*	120

* கையகப்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

1995 ஏப்ரல் 24]

8.4. தமிழ்நாடு தோல் தொழில் வளர்ச்சி நிறுவனத்தினால் நிர்வகிக்கப்படும் தொழிற்பேட்டை.

8.4.1. தோல் துறையில் எதிர்கால வளர்ச்சிக்கு அதிக வாய்ப்புள்ளதைக் கருத்தில் கொண்டு மாதவரத்திலுள்ள தோல் தொழிற்பேட்டையை அரசு அமைத்தது. இத்தொழிற்பேட்டை சிட்கோ நிறுவனத்திடமிருந்து 18-6-1986 இல் தமிழ்நாடு தோல் தொழில் வளர்ச்சி நிறுவனத்தினால் எடுத்துக் கொள்ளப்பட்டது. தமிழ்நாடு தோல் தொழில் வளர்ச்சி நிறுவனமானது, இத் தொழிற்பேட்டையினை பராமரிப்பது மற்றும் கொள்முதல் தவணைத் தொகையினை வசூலிப்பது போன்றவற்றை மேற்கொள்கிறது. தற்சமயம் தவணைக் கொள்முதல் அடிப்படையில் 34 தொழிற்கூடங்கள் சொந்த உரிமை அடிப்படையில் தொழில் முனைவர்களால் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. ஒரு தொழிற்கூடம் மட்டும் டால்கோ நிறுவனத்தால் வைத்துக் கொள்ளப்பட்டு 1-10-1993 முதல் குத்தகைக்கு விடப்பட்டுள்ளது.

8.4.2. இத் தொழிற்பேட்டையை மேலும் அபிவிருத்தி செய்வதற்கு தமிழ்நாடு தோல் தொழில் வளர்ச்சி நிறுவனம், கழிவுநீர் சுத்திகரிப்புத் திட்டம் அமைப்பதற்குரிய சாத்தியக்கூறு அறிக்கைகளை தயாரிக்கும் பணியை சென்னையிலுள்ள இந்திய தொழில் நுட்பக் கழகத்திடம் ஒப்படைத்துள்ளது. இதன் மூலம் தோல் பதனிடும் மற்றும் உற்பத்தி மேற்கொள்ளும் தோல் தொழில் முனைவர்களுக்கு காலியாக உள்ள நிலங்களை குத்தகை அடிப்படையில் வழங்குவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

9. கிடைத்தற்கரிய மூலப் பொருட்கள் பெறுவதில் உதவி

(அ) தொழில் வணிக இயக்கம்

9.1 கொள்கை ரீதியில் சிறுதொழில் நிலையங்களுக்கு மூலப் பொருட்கள் போதுமான அளவில் கிடைக்க வேண்டுமென்பதனை உறுதியளிக்கும் பொருட்டு, சிறு தொழில்களுக்கு உதவியளிப்பதில் அரசு முக்கியத்துவம் செலுத்தி வருகிறது. பரிந்துரைக்கும் அமைப்பாக உள்ள இந்த இயக்ககம் உள்நாட்டில் கிடைக்கக் கூடிய மற்றும் இறக்குமதி செய்யப்படும் கிடைத்தற்கரிய மூலப் பொருட்களை, சிறு தொழில் நிலையங்கள் பெறுவதற்கு உதவி செய்வதில் முக்கிய பங்காற்றி வருகிறது. சிறு தொழில் நிலையங்களின் தேவைகளைக் கணித்து, மாநிலத்திற்குரிய மொத்த ஒதுக்கீட்டுக்கு உட்பட்டு பங்கிட்டு வழங்கும் சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு பரிந்துரை செய்கிறது. சில

அத்தியாவசிய மூலப் பொருட்களைப் பற்றிய நிலை கீழே சுருக்கமாக குறிப்பிடப்பட்டுள்ளது:–

இறக்குமதி வர்த்தகக் கட்டுப்பாட்டுக் கொள்கை

இறக்குமதியை கவனிப்பதற்கு தொழில் வணிக இயக்ககம் முழு அளவில் முடுக்கி விடப்பட்டுள்ளது.

9.2. சிறு தொழில் நிலையங்கள், அரசுத் துறைகள் மற்றும் அரசுடைமை நிறுவனங்கள் ஆகியவற்றின் இறக்குமதி விண்ணப்பங்களை, இறக்குமதி உரிமங்கள் வழங்கும் பொருட்டு உரிமம் வழங்கும் அதிகாரிகளுக்கு பரிந்துரை செய்வது இந்த இயக்ககத்தின் பொறியியல் பிரிவின் பொறுப்பாகும்.

9.3. இந்திய அரசு 1-4-1992 முதல் அடுத்த ஐந்தாண்டுகளுக்கு ஒரு இறக்குமதி ஏற்றுமதிக் கொள்கையினை அறிவித்துள்ளது. இக்கொள்கை 1-4-1992 முதல் அமலுக்கு வந்துள்ளது. 1997 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் வரை அமுலில் இருக்கும். சுதந்தரமே இப்புதிய கொள்கையின் அடிப்படைச் சாரம். புதிய கொள்கையினால் உரிமம் வழங்குதல், அளவுக் கட்டுப்பாடுகள் மற்றும் பிற ஒழுங்கு முறை விதிகள், கட்டுப்பாடுகள் போன்றவை பெருமளவு நீக்கப்பட்டுள்ளன. இரண்டு தடைப்பட்டியல்களில் சேர்க்கப்பட்டுள்ள சில இனங்கள் நீங்கலாக அனைத்துப் பொருள்களையும் எளிதாக ஏற்றுமதி மற்றும் இறக்குமதி செய்யலாம். அவ்விரு பட்டியல்களில் சேர்க்கப்பட்டுள்ள பொருட்களுக்கு மட்டுமே இறக்குமதி மற்றும் ஏற்றுமதி செய்தல் குறித்து சில வரையறைகள் விதிக்கப்பட்டுள்ளன. இவ்விரு பட்டியல்களும் கூட, தற்போதைய சூழ்நிலைகளுக்கேற் , முடிந்தவரை சிறியனவாகவே உள்ளன.

9.4 இவ்விரு பட்டியல்களில் காணும் பொருட்களை இறக்குமதி செய்ய உரிமம் தேவைப்படும் தொழிற்கூடங்களின் மனுக்களையும், ஏற்றுமதிப் பொருட்கள் உற்பத்தி செய்யும் தொழிற்கூடங்கள் தேவைப்படும் உரிமங்கள் வழங்குவதற்கான மனுக்களையும் விரைவில் முடித்திட மண்டல உரிமங்கள் வழங்கும் அதிகாரிகள் கூட்டத்தில் பல்வேறு குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. அக்குழுக்களிலெல்லாம் இத்துறைக்கு இடம் அளிக்கப்பட்டுள்ளது. பரிந்துரைக்கும் அலுவலரான தொழில் வணிக இயக்குநர் அவர்கள், இணை இயக்குநர் (பொறியியல்) அவர்களை சார்பாளராக நியமித்துள்ளார். தமிழ்நாடு, கேரளா ஆகிய மாநிலங்கள் மற்றும் பாண்டிச்சேரி யூனியன் பிரதேசம் ஆகியவற்றைச் சார்ந்த விண்ணப்பங்களைப் பரிசீலனை செய்வதற்கு ஒவ்வொரு

மாதமும் இக்குழுக்களின் கூட்டம் நடைபெறும். சென்னையில் தொழில் நுட்ப வளர்ச்சி பொது இயக்குநர் அவர்களின் மண்டல அலுவலகத்தை நவம்பர் 1993-ல் மூடிய பிறகு, தமிழ்நாடு மற்றும் பாண்டிச்சேரி ஆகியவற்றிலுள்ள ஏற்றுமதி செய்யும் நிலையங்களின் விண்ணப்பங்களை பரிசீலித்து விரைவில் முடிவெடுக்கும் பணி தொழில் வணிக இயக்ககத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இதன் முடிவாக, முன்பணம், உரிமங்கள், சிறப்பு இறக்குமதி உரிமங்கள், சுங்கத்துறை அனுமதி முதலியவற்றிற்குரிய விண்ணப்பங்கள், துறைக்கு அனுப்பப்பட்டு, ஒவ்வொரு மாதமும் நடைபெறும் மண்டல ஒருங்கிணைப்புக் கூட்டங்களுக்கு எடுத்துச் சென்று முடிவு எடுக்கப்படுகிறது. இந்த இயக்ககம், டிசம்பர் 1994 முடிய சென்னையிலுள்ள அயல்நாட்டு வர்த்தக இணைத் தலைமை இயக்குநருடன் இணைந்து செயலாற்றி 457 விண்ணப்பங்கள் பரிசீலிப்பதற்கு உதவியுள்ளது.

9.5. இவை தவிர நேரடி உபயோகச் சான்றிதழ்கள் வழங்குவதன் மூலம் இறக்குமதி செய்கின்ற தொழில் நிலையங்களுக்கு சுங்க வரியில் சலுகை பெற, இந்த இயக்ககம் உதவியளிக்கிறது. நடப்பாண்டில் டிசம்பர் 1994 வரை, சுங்க வரி அலுவலர்களிடமிருந்து வரியில் சலுகை பெற 66 சிறு தொழில் நிலையங்களுக்கு இந்த இயக்ககம் உதவியளித்துள்ளது.

இரும்பு மற்றும் எஃகு

9.6. கட்டுப்பாடு நீக்கப்பட்ட பிறகு, சிறு தொழில் நிலையங்கள் அவற்றிற்குத் தேவையான இரும்பு மற்றும் எஃகுப் பொருள்கள் தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனத்திடமிருந்து பெற்று வருகின்றன. 1994-95 ஆம் ஆண்டிற்கு சிட்கோ நிறுவனம் 44,000 மெட்ரிக் டன் தேவையாயிருந்தது என கூறியுள்ளது.

9.7. வார்ப்படத் தொழிலில், குறிப்பாக கோயமுத்தூரைச் சுற்றியுள்ள வார்ப்படத் தொழிற்சாலைக்கு தேனிரும்பு முக்கிய மூலப் பொருள்களில் ஒன்றாகும். கட்டுப்பாடு நீக்கியதன் விளைவாக, சிறு தொழில் நிலையங்கள் தங்களுக்குத் தேவையான மூலப் பொருள்களை மாவட்டத்தொழில் மையங்களின் பரிந்துரையின்படி இந்திய இரும்பு எஃகு நிறுவனம் மற்றும் விசாகப்பட்டினம் எஃகு ஆலையிடமிருந்து பெற்று வருகின்றன.

நிலக்கரி மற்றும் கல்கரி

9.8. தமிழ்நாட்டிலுள்ள சிறு தொழில்களுக்கு, தொழிலியல் உபயோகத்திற்கு தொழில் வணிகத் துறையை பரிந்துரைக்கும்

அலுவலராக கல்கத்தாவிலுள்ள மூலப்பொருள் நிர்வாக இயக்குநர் (இரயில்போக்குவரத்து) மற்றும் நிலக்கரி இந்தியா லிமிடெட் அவர்கள் அங்கீகரித்துள்ளனர்.

9.9. 1993 ஆம் ஆண்டு வரை, கல்கத்தாவிலுள்ள மூலப் பொருள் நிர்வாக இயக்குநர் (இரயில் போக்குவரத்து) அவர்கள் நிர்ணயித்த வரம்பிற்குள் இப்பொருள்களை இத்துறை வழங்கியுள்ளது. இப்பொருள்களின் உற்பத்தி குறிப்பிடத்தக்க அளவுக்கு அதிகரித்தமையாலும், நிலக்கரிச் சுரங்கத்திலிருந்து இப்பொருள்களை எடுத்துச் செல்வதற்குரிய இரயில்வே சரக்குப் பெட்டிகள் சுலபமாக கிடைப்பதாலும், 1994 ஆம் ஆண்டிலிருந்து உச்சவரம்பு எடுக்கப்பட்டுவிட்டது. கல்கத்தாவிலுள்ள மூலப் பொருள் நிர்வாக இயக்குநர் (இரயில் போக்குவரத்து) மற்றும் மேற்கத்திய நிலக்கரிச் சுரங்கம் ஆகியவை இத்துறையினால் பரிந்துரைக்கப்பட்ட முழு அளவினையும் ஒப்பளித்து வருகின்றனர்.

1994 ஆம் ஆண்டிற்கு ஒதுக்கப்பட்ட நிலக்கரி மற்றும் கல்கரி, 1995 ஆம் ஆண்டிற்கு ஒதுக்குமாறு கேட்கப்பட்டுள்ள அளவும் கீழே தரப்பட்டுள்ளன.

இனம்	ஒதுக்கீடு (சரக்குப் பெட்டிகளின் எண்ணிக்கை)	
	1994	1995
(1)	(2)	(3)
நீராவி நிலக்கரி	134	120
பழுப்பு நிலக்கரி	126	126
கடின நிலக்கரி	60	60
கல்கரி கழிவு	94	99

9.10. இத்துறையின் பரிந்துரையின்படி, சிங்கரேணி நிலக்கரிச் சுரங்கமும் சிறு தொழில் நிலையங்களுக்கு நிலக்கரி மற்றும் கல்கரியை வழங்கி வருகிறது. தற்பொழுது மாநிலத்திலுள்ள சிறு தொழில் நிலையங்களுக்கு நிலக்கரி மற்றும் கல்கரி வழங்குவதில் தட்டுப்பாடு இல்லை.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

(ஆ) சிட்கோ நிறுவனத்தால் மூலப் பொருள் பங்கீடு

9.11. மூலப் பொருள் வழங்கும் திட்டத்தின் கீழ் சிட்கோ நிறுவனம் 1994-95 ஆம் ஆண்டில் சிறு தொழில் நிலையங்களுக்கு 60,160 மெட்ரிக் டன் மூலப் பொருள்களை வழங்குவதற்கு உத்தேசித்துள்ளது. இதில் டிசம்பர் 1994 வரை ரூ. 8,772.46 இலட்சம் மதிப்புள்ள 41,349 மெட்ரிக் டன் மூலப்பொருட்கள் சிறு தொழில் நிலையங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. எஞ்சிய அளவு மூலப் பொருட்கள் விரைவில் வழங்கப்பட்டுவிடும்.

9.12. இந்நிறுவனம் 1995-96 ஆம் ஆண்டில் ரூ. 93 கோடி மதிப்புள்ள 58,005 மெட்ரிக் டன் மூலப் பொருட்கள் சிறு தொழில்களுக்கு வழங்க வேண்டுமென திட்டமிட்டுள்ளது. சிட்கோ நிறுவனம் சிறுதொழில் நிலையங்களின் தேவையினை அறிந்து, புதிய மூலப்பொருள் வழங்குவதை மேற்கொள்ள ஆர்வமாக உள்ளது.

(இ) மூலப் பொருள் வழங்குவதில் தோல் வளர்ச்சி கழகத்தின் பங்கு

9.13. சிறுதோல் பதனிடுவோர்க்கு, இராசாயனப் பொருட்கள் மற்றும் இறக்குமதி செய்யப்பட்ட இரசாயனப் பசைப்பொருள் (Wattle extract) நியாயமான விலையில் வாங்கும் பொருட்டு, திண்டுக்கல், ஈரோடு, பேராணம்பட்டு, வாணியம்பாடி, திருச்சிராப்பள்ளி, இராணிப்பேட்டை மற்றும் குரோம்பேட்டை ஆகிய இடங்களில் "தால்கோ" நிறுவனத்தின் மூலப்பொருள் வங்கிகள் செயல்பட்டு வருகின்றன. கடந்த மூன்றாண்டுகளின் சாதனை பின்வருமாறு:-

ஆண்டு	ரூபாய் இலட்சத்தில்
1992-93	242.15
1993-94	257.82
1994-95 (ஜனவரி 1995 வரை)	324.47

9.14 இராணிப்பேட்டையில் புதிய மூலப்பொருள் வங்கி 31-3-1994-லிலும் குரோம்பேட்டையில் உள்ள மூலப்பொருள் வங்கி ஆகஸ்ட் 1994-லிலும் திறக்கப்பட்டன.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

10. தொழிற்கூட்டுறவுகள் மூலம் ஊரக மற்றும் சிறு தொழில்களின் மேம்பாடு

10.1. தொழில் நடவடிக்கையை ஊக்கப்படுத்துவதற்கும், தனிப்பட்ட முறையில் சொந்தமாக தொழில் துவங்குவதற்கும் சிரமப்படும் ஆர்வமுள்ள தொழில் முனைவர்கள் ஒன்றாக இணைந்து ஒரு அமைப்பின் கீழ் செயல்படுவதற்கும் கூட்டுறவு ஒரு ஆற்றல் மிக்க கருவியாக விளங்குகிறது. சமீபகாலத்தில் தொழில் மற்றும் அதன் சார்பு நடவடிக்கைகளில் நலிவுற்ற மக்களையும் பங்கு பெறச் செய்து சமூக பொருளாதார ரீதியில் அவர்களது வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதற்கு தொழிற்கூட்டுறவு முக்கிய அமைப்பாக திகழ்கிறது. உள்ளபடியாக கூட்டுறவு, சமூக பொருளாதார அடிப்படையிலானதாகும். உற்பத்தி மற்றும் பதப்படுத்துதல் அல்லது சேவை வசதிகள் ஆகியவற்றில் ஈடுபட்டுள்ள தொழில் முனைவர் குழு தொழிற்கூட்டுறவு சங்கமாகிறது. இதில் கைவினைஞர்கள், தொழில் நுட்ப வல்லுநர்கள் மற்றும் ஏனையோர் பங்கு பெறலாம்.

10.2. மாநிலத்திலுள்ள பின்தங்கிய வட்டங்களில் ஊரகத் தொழில்களை வளர்ச்சியடையச் செய்து வேலை வாய்ப்பு பெருக்குவதற்கு தொழிற் கூட்டுறவுத் துறையை மிக முக்கிய கருவியாக மாநில அரசு பயன்படுத்தி வருகிறது. அரசின் உதவி மற்றும் ஒத்துழைப்புடன் இப்பிரிவு குறிப்பிடத்தக்க முன்னேற்றம் அடைந்துள்ளதை கீழே தரப்பட்டுள்ள விவரங்களிலிருந்து அறியலாம்.

ஆண்டு	உற்பத்தி	விற்பனை
	(ரூபாய் இலட்சத்தில்)	
(1)	(2)	(3)
1989-90	10,871.9	12,738.6
1990-91	11,109.1	13,887.9
1991-92	11,517.8	14,967.6
1992-93	14,339.0	16,952.7
1993-94	20,163.0	22,273.9
1994-95 (31-12-1994 வரை)	13,996.4	15,876.2

1995 ஏப்ரல் 24]

10.3 தொழிற்கூட்டுறவுச் சங்கங்களின் மொத்த உற்பத்தி மற்றும் விற்பனை ஆகியவற்றில் முக்கிய பங்கினை வகிக்கும் பிரிவுகள் பற்றிய விவரங்களை காணலாம்.

தொழிற்சாலை	விற்பனை (ரூபாய் இலட்சத்தில்)			
	1991-92	1992-93	1993-94	1994-95 (31-12-1994 வரை)
(1)	(2)	(3)	(4)	(5)
தேயிலை சேவை மற்றும் தேயிலைத் தொழிற்சாலைகள்	4,322.0	4,420.3	5,189.09	2,997.93
சவ்வரிசி மற்றும் ஸ்டார்ச்	5,982.3	6,751.0	10,735.18	7,595.81
கயிறு	231.6	425.3	653.28	449.83
தீப்பெட்டி சேவை	1,153.1	1,256.2	1,340.19	1,116.06
மற்ற தொழில்கள்	3,278.6	4,099.9	4,356.17	3,716.59
	14,967.6	**16,952.7**	**22,273.91**	**15,876.22**

சில முக்கிய பொருள்கள் உற்பத்தியில் அமைந்துள்ள முன்னேற்றத்தின் சிறப்பு அம்சங்கள் பின்வருமாறு:-

(அ) தேயிலை தொழில்

10.4 நீலகிரி மாவட்டத்தில் சுமார் 40,000 ஏக்கர் பயிரிடும் நிலப்பரப்பைக் கொண்ட சுமார் 30,000 சிறு தேயிலை பயிரிடுவோர் உள்ளனர். 1960-க்கு முன்பு சிறிய தேயிலை பயிரிடுவோரின் பச்சைத் தேயிலைகள் தனியார் தேயிலைக் கொள்முதல் தொழிற்சாலைகளால் மிகக் குறைந்த விலைக்கு வாங்கப்பட்டு வந்தன. மேலும் நெருக்கடியான பருவ காலங்களில் இத்தனியார் தொழிற்சாலைகள் பச்சைத் தேயிலையை நிராகரித்தன. இவ்வாறு சிறு தேயிலை பயிரிடுவோர், தனியார் பச்சைத் தேயிலைக் கொள்முதல் செய்பவர்களையே நம்பி இருந்தனர். இந்த பொருளாதார சுரண்டலைத் தவிர்க்கும் பொருட்டு, சிறிய தேயிலை பயிரிடுவோர் தமிழ்நாடு அரசின் முனைப்பான

உதவியுடன், "குந்தா" என்ற இடத்தில் அமைந்த ஒரு கூட்டுறவு தேயிலைத் தொழிற்சாலை 1962-இல் உற்பத்தியைத் துவக்கியது. இந்த சோதனைத் தொழிற்சாலை பெரும் வெற்றி கண்டமையால், அம்மாவட்டத்தில் இதர பகுதிகளிலிருந்து சிறு தேயிலை பயிரிடுவோரிடமிருந்து அதே போன்ற புதிய தேயிலை தொழிற் கூட்டுறவுத் தொழிற்சாலைகள் அமைக்கக் கோரிக்கைககள் வந்தன.

தற்பொழுது நீலகிரி மாவட்டத்தில் ரூ. 757.70 இலட்சம் செலுத்தப்பட்ட பங்கு மூலதனத்துடன் கூடிய சுமார் 30,077 ஏக்கர் நிலத்தினை சொந்தமாகக் கொண்ட 17,521 சிறு தேயிலை பயிரிடுவோரை உறுப்பினர்களாகக் கொண்டு 15 கூட்டுறவு தேயிலைத் தொழிற்சாலைகள் உள்ளன. இத் தொழிற்சாலைகள் ஆண்டுக்கு ரூ. 144.00 இலட்சம் கிலோ பச்சைத் தேயிலையை அரைக்கும் திறனுடையவை. ரூ. 4.74 கோடி மதிப்பில் ஏப்பநாடு மற்றும் பித்தர்காடு ஆகிய இடங்களில் இரண்டு கூட்டுறவு தேயிலைத் தொழிற்சாலைகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இவை முறையே 3.39 ஏக்கர், மற்றும் 2.62 ஏக்கர் நிலங்களை வாங்கியுள்ளன.

10.4.1. கூட்டுறவுத் தேயிலைத் தொழிற்சாலைகளின் செயலாக்கம் பின்வருமாறு:-

வ. எண்.	விவரங்கள்	1963-64	1992-93	1993-94	1994-95 (டிசம்பர் 1994 வரை)
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
1.	உறுப்பினர்களின் எண்ணிக்கை	128	16,469	17,268	17,521
2.	நிலப்பரப்பு (ஏக்கரில்)	650	28,652	29,744	30,077
3.	கொள்முதல் செய்யப் பட்ட பச்சைத்தேயிலை (கிலோ கிராம் இலட் சத்தில்)	5.06	459.85	497.81	379.50
4.	உற்பத்தி செய்யப்பட்ட தேயிலை (கிலோ கிராம் இலட்சத்தில்)	1.31	110.02	127.44	97.64

1995 ஏப்ரல் 24]

வ. எண்.	விவரங்கள்	1963-64	1992-93	1993-94	1994-95 (டிசம்பர் 1994 வரை)
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
5.	பச்சைத் தேயிலைக்கு வழங்கப்பட்ட சராசரி விலை (ரூ. கிலோவிற்கு)	0.81	5.47	6.86	3.95
6.	தேயிலை விற்பனை (கி.கி. இலட்சத்தில்)	1.05	106.54	125.54	96.95
7.	தேயிலை விற்பனை மதிப்பு (ரூபாய் இலட்சத்தில்)	7.01	3,316.29	4,379.00	2,345.10

10.4.2. அனைத்து கூட்டுறவுத் தேயிலைத் தொழிற்சாலைகளின் நடவடிக்கைகளை ஒருங்கிணைத்து செயல்படுத்திட தமிழ்நாடு சிறு தேயிலை பயிரிடுவோர் கூட்டுறவுத் தேயிலை தொழிற்சாலைகளின் இணையம் என்னும் ஒரு தலைமை அமைப்பு 1965-இல் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த இணையம் 'இன்கோசர்வ்' என பிரபலமாக அழைக்கப்படுகிறது. அனைத்து கூட்டுறவுத் தேயிலைத் தொழிற்சாலைகளும், மாநில அரசும் இந்த அமைப்பில் உறுப்பினர்களாக உள்ளனர்.

இன்கோசர்வ் நிறுவனத்தின் செயல்பாடு

ஆண்டு	ரூபாய் இலட்சத்தில்
(1)	(2)
	(தேயிலை விற்பனை)
1974-75	16.00
1991-92	1,246.96
1992-93	1,104.00
1993-94	810.09
1994-95 (டிசம்பர் '94 வரை)	652.83

10.4.3. நீலகிரி மாவட்டத்திலுள்ள தேயிலைத் தொழிற்சாலைகளின் தேயிலையின் உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறன் ஆகியவற்றை அதிகப்படுத்துவதற்காகவும் தேயிலை தொழிற்சாலைகளை நவீனப்படுத்தவும் புதிய பகுதிகளில் தேயிலை விளைச்சலைக் கொண்டு வருவதற்கும் ஒருங்கிணைந்த தேயிலை வளர்ச்சித் திட்டம் ஒன்று ஐந்தாண்டுகளில், 1992-93 முதல் 1996-97 வரை தேசீய கூட்டுறவு வளர்ச்சி நிறுவனத்தின் உதவியுடன் ரூ. 21.80 கோடி மதிப்பீட்டில் வகுக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் மூன்று கூட்டுறவுத் தேயிலைத் தொழிற்சாலைகளை அமைப்பது மற்றும் ஏற்கெனவே உள்ள கூட்டுறவுத் தேயிலைத் தொழிற்சாலைகளை நவீனப்படுத்துவது உள்ளிட்டதாகும். தேசீய கூட்டுறவு வளர்ச்சி நிறுவனம் ரூ. 7.12 கோடி மதிப்புள்ள திட்டங்களை ஒப்புதலளித்துள்ளது. இத்திட்டத்தைச் செயல்படுத்து வதற்கு திட்டத்தின் 80 விழுக்காடு தொகையான ரூ. 5.70 கோடி தமிழ்நாடு அரசு ஒப்புதலளித்துள்ளது. மேலும் அரசின் பங்கு மூலதனமாக தமிழ்நாடு அரசு ரூ. 82.00 இலட்சம் ஒப்புதலளித்துள்ளது.

(ஆ) கயிறுத் தொழில்

10.5. கயிறு வளத்தை முனைப்பாகப் பயன்படுத்தி நாட்டில் அதிக அளவில் கயிறு உற்பத்தி செய்பவர்களில் தமிழ்நாடு இரண்டாவது இடத்தை வகிக்கிறது. தமிழ்நாட்டில் கயிறு தொழில் மிகத் துரிதமாக வளர்ச்சியடைந்து வருகிறது. நாட்டின், பழுப்பு நிற தென்னை நார் உற்பத்தியில் தமிழ்நாடு மட்டுமே சுமார் 65 விழுக்காடு அளவிற்கு தயாரிக்கும் பெருமையைப் பெற்றுள்ளது. மாநிலத்தில் கயிறு தொழில் சுமார் 40,000 பேருக்கு வேலை வாய்ப்பளிக்கிறது.

10.5.1. சுமார் 2.25 இலட்சம் ஹெக்டேர் நிலப்பரப்பில் தென்னை பயிரிடப்படுகிறது. ஆண்டொன்றுக்கு 2,302 மில்லியன் தேங்காய் உற்பத்தி செய்யப்படுகிறது. இத்தொழில், கன்னியாகுமரி, தஞ்சாவூர், மதுரை, கோயம்புத்தூர், திருநெல்வேலி கட்டபொம்மன் மற்றும் தென்ஆற்காடு வள்ளலார் மாவட்டங்களில் பெருமளவில் அமைந்து உள்ளது.

10.5.2. மாநிலத்தில் கூட்டுறவுத் துறையிலும், தனியார் துறையிலுமாக 487 தென்னை நார் உற்பத்தி செய்யும் தொழில் நிலையங்கள் உள்ளன. இத்தொழில் நிலையங்கள் 85,000 மெட்ரிக் டன், தென்னை நார் உற்பத்தி திறன் கொண்டவையாகும். உற்பத்தி செய்யப்படும் பெரும்பாலான தென்னை நார். இதர கயிறு, கயிறுபாய், கயிறு நூழிழை முறுக்கு கயிறு, இரப்பர் கலந்த கயிறு, மெத்தைகள்

மற்றும் தரை விரிப்பான்கள் போன்றவை தயாரிக்கும் கயிறுதொழில் நிலையங்களில் மூலப்பொருளாகப் பயன்படுத்தப்படுகிறது.

10.5.3 31-12-1994-இல் ரூ. 202.57 இலட்சம், செலுத்தப்பட்ட பங்கு மூலதனத்துடன் கூடிய 12,038 உறுப்பினர்களாக கொண்ட 83 கயிறு கூட்டுறவுச் சங்கங்கள் இருந்தன. 1993-94-ஆம் ஆண்டில் இத்தொழில் கூட்டுறவுச் சங்கங்களின் விற்பனை ரூ. 653.28 இலட்சம். 1994-95-ஆம் ஆண்டில் டிசம்பர் முடிய இவற்றின் விற்பனை ரூ. 449.83 இலட்சமாகவும் இருந்தன.

10.5.4. சென்னையிலுள்ள தமிழ்நாடு மாநில கயிறு தொழிற்கூட்டுறவு சங்கத்தின் இணையம், அதன் உறுப்பினர் சங்கங்களுக்கு விற்பனை வசதியினை அளிக்கிறது.

10.5.5. புதிய கயிறு தொழில் நிலையங்கள் நிறுவப்பட்டாலோ அல்லது ஏற்கெனவே உள்ள கயிறு தொழில் நிலையங்களின் உற்பத்தி நடவடிக்கையை விரிவுப்படுத்தினாலோ இவை கிராமப்புறத்தை அடிப்படையாகக் கொண்டுள்ளதால், கிராமப் பகுதி மக்களுக்கு, குறிப்பாக ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கும், அதிக அளவில் மகளிருக்கும் வேலைவாய்ப்பு உருவாக வழி வகுக்கிறது.

10.5.6. எனவே நமது மாநிலத்தில் தனியார் மற்றும் கூட்டுறவுத் துறையில் புதிய கயிறு தொழில் நிலையங்களை ஊக்குவிப்பதே அரசின் கொள்கையாகும்.

10.5.7. கயிறுத் துறையில் முதலீட்டினை ஊக்குவிக்கும் பொருட்டு, மிகவும் பின்தங்கிய பகுதிகள் மற்றும் பின் தங்கிய பகுதிகளில் அமைக்கப்படும் கயிறு தொழில் நிலையங்களுக்கு மாநில அரசின் பின்தங்கிய பகுதிகளுக்கு அளிக்கப்படும் மூலதன மானியம் வழங்கப்படும். மேலும் கயிறு வாரியத்தினால் அளிக்கப்படும் இயந்திர சாதனங்கள் சலுகை 25 விழுக்காடு, ஒவ்வொரு தொழில் நிலையத்திற்கும் ரூ.1.00 இலட்சத்திற்கு மிகாமல் வழங்கப்படும். இதன் மூலம் தற்பொழுது, மாநிலத்தில் பின்தங்கிய மற்றும் மிகவும் பின்தங்கிய பகுதிகளில் அமைக்கப்படும் புதிய கயிறு தொழில்களுக்கு அவற்றின் முதலீட்டில் 40 முதல் 45 விழுக்காடு அளவுக்கு மானிய சலுகை அளிக்கப்படுகிறது. கயிறு தொழில்களில் பெருமளவில் மகளிர் வேலை செய்வதால் மகளிருக்கு 5 % மாநில மூலதன மானியம் பெறவும், கயிறு தொழில் அமைப்புகள் தகுதியுடையனவாகும்.

10.5.8. தொழில் நிலையங்கள் மின் வெட்டினால் பாதிக்கப்படுவதால் ஜெனரேட்டர் நிறுவுவதற்கும் மாநில அரசு 15 % மானியம் வழங்குகிறது. கயிறுத் தொழில்கள் கிராமப்பகுதிகளை அடிப்படையாகக் கொண்டதாகும். இவை ஊரகப்பகுதி மக்களுக்கு வாழ்வளிக்கின்றன. எனவே, மின்வெட்டுக் காலங்களில் ஊரகப் பகுதி மக்களுக்கு பாதிப்பு ஏற்படுவதைத் தவிர்க்க கயிறு வாரியத்துடன் தொடர்பு கொண்டதனைத் தொடர்ந்து கயிறு தொழிலில் நிறுவப்படும் ஒவ்வொரு ஜெனரேட்டரும் அதன் மதிப்பில் 25 % விழுக்காடும் அதிகப்படியாக ரூ. 50,000 மானியம் அளிக்க இவ்வாரியம் முன்வந்துள்ளது. ஏற்கெனவே கூறப்பட்டது போல், அதாவது மாநில அரசு அளிக்கும் 15 % ஜெனரேட்டர் மானியத்துடன், கயிறு வாரியத்தின் மானியம் கூடுதலாகக் கிடைக்கப்பெறுகிறது.

10.5.9. ஏற்கெனவே உள்ள 48 சங்கங்களை வலுப்படுத்தும் பொருட்டும் புதிய 11 கயிறுச் சங்கங்களை கூட்டுறவுத் துறையில் அமைக்கும் பொருட்டும், தமிழ்நாட்டிற்கு ஒருங்கிணைந்த கயிறு வளர்ச்சித் திட்டம் ஒன்று வகுக்கப்பட்டுள்ளது. இதற்கென மாநில அரசு (ரூ.337.215 இலட்சம்) கயிறு வாரியம் (ரூ.326.225 இலட்சம்) மற்றும் தேசீய கூட்டுறவு வளர்ச்சி நிறுவனம் (ரூ 1,007.660 இலட்சம்) ஆகியவற்றிடமிருந்து நிதியுதவி கோரப்பட்டது. இவை பரிசீலனையில் உள்ளன. இத்திட்டத்தை கணிப்பதற்குரிய துணைக்குழு (கயிறு வாரியத்தால் அமைக்கப்பட்டது) இத்திட்டத்திற்கு அனுமதியளிப்பதற்கு ஒப்புதலளித்துள்ளது. இத்திட்டம், அனுமதி அளிப்பதற்கு தேசீய கூட்டுறவு வளர்ச்சி நிறுவனத்தின் பரிசீலனையில் உள்ளது. அடுத்து மூன்றாண்டுகளில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

10.5.10. 1994-95-ஆம் ஆண்டில் காமராசர் மாவட்டத்தில், வத்திராயிருப்பு என்னுமிடத்தில் புதிய கயிறு தொழிற்கூட்டுறவுச் சங்கம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

10.5.11. கயிறுத்துறைக்கு சிறப்புக் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. கயிறுத் தொழிற்கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்பட்ட நிதி பின்வருமாறு:

ஆண்டு	கயிறு வாரியம்	தாட்கோ	என்.சி. டி.சி.	தாப் செட்கோ	தமிழ்நாடு அரசு	மொத்தம்
				(ரூபாய் இலட்சத்தில்)		
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)
1991-92	20.74	3.63	..	..	5.00	29.37
1992-93	20.59	3.40	13.80	2.28	5.00	45.07
1993-94	24.82	..	..	..	26.68	51.50
1994-95 (டிசம்பர் '94 வரை)	0.28	..	..	..	61.63	61.91
மொத்தம்	66.43	7.03	13.80	2.28	98.31	187.85

இ. சவ்வரிசித் தொழில்

10.6. "சாகோசெர்வ்" என்றழைக்கப்படுகின்ற சேலம் சவ்வரிசி மற்றும் கிழங்கு மாவுப் பொருள் தயாரிப்பாளர்கள் சேவை தொழில் கூட்டுறவுச் சங்கம் சவ்வரிசி மற்றும் கிழங்கு மாவுப் பொருள்கள் விற்பனையைக் கவனிக்கிறது. இச்சங்கம் 19-10-1981-இல் வர்த்தக நடவடிக்கைகளைத் துவக்கியது. மரவள்ளிக் கிழங்கிலிருந்து கிழங்கு மாவுப் பொருள் மற்றும் சவ்வரிசி தயாரிப்பாளர்கள் இச்சங்கத்தில் உறுப்பினர்களாக உள்ளனர்.

10.6.1. இந்த சாகோசெர்வ் தமிழ்நாடு முழுவதிலுள்ள சவ்வரிசி மற்றும் கிழங்கு மாவுப் பொருள் தயாரிப்பாளர்களுக்கு சேவை புரிகிறது. இச்சங்கத்தின் தற்போதைய உறுப்பினர்களின் எண்ணிக்கை 742 ஆகும். மாநிலத்திலுள்ள சவ்வரிசி மற்றும் கிழங்கு மாவு தயாரிக்கும் தொழிற் கூடங்கள் சுமார் 50,000 பேருக்கு நேரடி வேலை வாய்ப்பளிக்கின்றன.

10.6.2. கடந்த 40 ஆண்டு காலமாக இருந்து வரும் மாவு மற்றும் சவ்வரிசித் தொழிலின் உற்பத்தியாளர்கள் மற்றும் உபயோகிப்பாளர் களின் தேவைகளைப் பாதுகாத்திடக் கூடிய அமைப்பு ரீதியிலான விற்பனை முறை ஒன்று இல்லாதிருந்தது. சவ்வரிசி மற்றும் மாவுப் பொருள்கள் ஆகிய இரண்டும் தமிழ்நாட்டிற்கு வெளியே பயன்படுத்தப்படுவதால், இப்பொருட்களை சிறிய அளவில் உற்பத்தி செய்பவர்கள் தாங்களே நேரிடையாக விற்பனை செய்ய முடியாது சிரமமேற்பட்டது. ஏனெனில், அதுபோன்ற நேரடி விற்பனைக்கு பரவலான விற்பனை வசதிகள், உபரி நடைமுறை மூலதனம் தவிர உபயோகிப்பாளருடன் நேரிடைத் தொடர்பு கொள்வதற்கும்

இயலவில்லை. இந்த இடர்பாடுகள் சவ்வரிசி மற்றும் மாவுப் பொருள்களின் விற்பனையை ஏகபோகப்படுத்தி வந்த இடைத்தரகர்களின் வளர்ச்சிக்கு ஏதுவாகி விட்டன. சுருங்கச் சொன்னால் உற்பத்தியாளர்கள் தங்களது உற்பத்திப் பொருளுக்குரிய விலையை தாங்களே நிர்ணயம் செய்யக்கூட முடியவில்லை.

10.6.3. இத்தொழிலை இடைத் தரகர்கள் பிடியிலிருந்து விடுவிக்கும் பொருட்டு ஒரு சவ்வரிசி மற்றும் மாவுப் பொருள் கூட்டுறவுச் சங்கம் அமைத்திட முடிவு செய்யப்பட்டது. இந்த முயற்சிகள் "சாகோசெர்வ்" என்று சிறப்பாக அழைக்கப்படும் சேலம் சவ்வரிசி மற்றும் மாவுப் பொருள் தொழிற் கூட்டுறவு சங்கமானது 1981-ஆம் ஆண்டு அமைக்கப்பட்டதன் மூலம் நிறைவேறியது.

10.6.4. இச்சங்கம் ரூ.7.62 இலட்சம் செலுத்தப்பட்ட பங்கு மூலதனத்துடனும் 168 உறுப்பினர்களைக் கொண்டும் எளிமையாகத் துவக்கப்பட்டது. 742 உறுப்பினர்களைத் தற்போது கொண்டுள்ள இதன் செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் ரூ. 286.12 இலட்சம் ஆகும். மாநிலத்தின் பங்கு ரூ. 99.83 இலட்சமாகும். 1993-94-இல் இதன் விற்பனை ரூ. 107/- கோடியாகும்.

10.6.5. இச்சங்கம் அமைப்பதற்கு முன்பு சவ்வரிசி மற்றும் மாவுப் பொருள்களின் விலை 90 கிலோ கொண்ட மூட்டை ஒன்றுக்கு முறையே ரூ. 150 மற்றும் ரூ. 100 ஆக இருந்தது. தற்பொழுது சவ்வரிசி மூட்டை ஒன்றுக்கு சுமார் ரூ. 859/- மாவுப் பொருள் மூட்டை ஒன்றுக்கு ரூ. 626/- ஆகவும் விலை உயர்ந்துள்ளது. மர வள்ளிக்கிழங்கு மூட்டை ஒன்றுக்கு ரூ. 20/- பெற்று வந்த மர வள்ளிக்கிழங்கு பயிரிடுவோர் தற்பொழுது மூட்டை ஒன்றுக்கு சுமார் ரூ. 130 பெற்று வருகின்றனர். இவ்வாறு, இச்சங்கம் அமைக்கப்பட்ட பிறகு சவ்வரிசி மற்றும் மர வள்ளிக்கிழங்கு ஆகியவற்றின் விலை குறிப்பிடத்தக்க அளவிற்கு அதிகரித்துள்ளது. விவசாயிகளும், தயாரிப்பாளர்களும் இப்பொழுது நியாயமான விலையினைப் பெறுகின்றனர்.

10.6.6. அரசு உதவி

தமிழ்நாடு அரசு இச்சங்கத்திற்கு கீழ்க்கண்ட உதவியினை வழங்கியுள்ளது.

(1) மற்றவர்களுக்கு விதிக்கப்படும் 5 விழுக்காடு விற்பனை வரிக்கு பதிலாக சேகோசெர்வ் மூலம் விற்பனை செய்யும் சவ்வரிசி மற்றும் மரவள்ளிக்கிழங்கு மாவுக்கு சலுகையாக தமிழ்நாடு பொது விற்பனை வரியாக 2 விழுக்காடு மட்டும் வசூலிக்கப்படுகிறது.

(2) இச்சங்கம் துவக்கப்பட்டபொழுது, அரசு இச்சங்கத்திற்கு நடைமுறை மூலதனக் கடனாக ரூ. 10 இலட்சம் ஒப்புதலளித்துள்ளது. இக்கடன் தொகை திரும்பச் செலுத்தப்பட்டுவிட்டது.

(3) அரசு இதுவரை, ரூ. 99.825 இலட்சம் மாநில பங்கு மூலதனமாக ஒப்புதலளித்துள்ளது.

(4) கடந்த ஆண்டுகளில் கூடுதல் விற்பனை வரிச் சுமையை சமாளிக்கும் பொருட்டு, அரசு பின்வருமாறு மானியம் வழங்கியுள்ளது.

வருடம்	ரூபாய் இலட்சத்தில்
1989-90	33.00
1990-91	25.00
1991-92	50.00
1992-93	50.00
1993-94	50.00

வங்கி உதவி

வரிசை எண்	வங்கியின் பெயர்	அளவு (ரூபாய் இலட்சத்தில்)
(1)	(2)	(3)
1.	சேலம் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி லிட்.	445.00
2.	தாய்கோ வங்கி	300.00
3.	இந்தியன் ஓவர்சீஸ் வங்கி	100.00
4.	ஸ்டேட் வங்கி	50.00
5.	யூனியன் பேங் ஆப் இந்தியா	25.00
	மொத்தம் ..	**1,000.00**

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
சட்டமன்றப் பேரவை
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

சேமிப்பு கிடங்கு வளாகம் கட்டுதல்

10.6.7 தேசீய கூட்டுறவு வளர்ச்சி நிறுவன சேமிப்புத் திட்டத்தின் கீழ் இச்சங்கம் 11 ஏக்கர் நிலத்தை வாங்கி ரூ. 427.00 இலட்சம் மதிப்புடைய நிர்வாகக் கட்டிடத்துடன் கூடிய 9 பொருள் வைப்பு கிடங்குகளைக் கட்டியுள்ளது.

10.6.8. சவ்வரிசி மற்றும் மாவுப் பொருள் தயாரிக்கும் நவீனப் பக்குவப்படுத்தும் தொழில் நிலையம் அமைக்கும் நோக்குடன், சேலம் மரவள்ளிக்கிழங்கு பயிரிடுவோர் நவீன முறையில் பக்குவப்படுத்தும் தொழிற் கூட்டுறவுச் சங்கம் என்ற பெயரில் மரவள்ளிக்கிழங்கு பயிரிடுவோர்களின் நலனைப் பாதுகாப்பதற்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. 30,000 மெட்ரிக் டன் மொத்த பக்குவப்படுத்தும் திறனுடன் கூடிய இத்திட்டத்தின் மதிப்பு ரூ. 1,147 இலட்சமாகும்.

(ஈ) தோல் தொழில்

10.7. பச்சை தோலினை தொழிற்சாலைகளுக்கு அனுப்பப் படுவதற்குமுன், பதனிடுதல் அவசிமான செயலாகும். பிறகு கால் மேலுறைகள் அல்லது தோல்பொருட்களாக மாற்றப்படுகின்றன. வட ஆற்காடு அம்பேத்கார் மாவட்டத்தில் சிறு அளவில் தோல் பதனிடுபவர்கள் அதிகமுள்ளனர். அவர்களுக்கு அடிப்படை வசதிகள் கிடைப்பதில்லை. இந்த பதனிடும் முறைக்கு பெரிய அளவில் மூலதனத்தோடு கூடிய நுட்பமான இயந்திரங்கள் தேவைப்படுகின்றன. இவை சில நேரங்களில் இறக்குமதி செய்யப்பட வேண்டும். அனைத்து சிறு அளவில் தோல் பதனிடுபவர்கள் இவற்றைச் சொந்தமாக கொள்ளமுடியாது. இவர்களின் தேவையை நிறைவேற்றும் பொருட்டு, வடஆற்காடு அம்பேத்கார் மாவட்டத்தில் வாணியம்பாடி, இராணிப்பேட்டை, பேரணாம்பட்டு ஆகிய இடங்களிலும், திண்டுக்கல்லிலும் தொழில் கூட்டுறவுத் துறையின் கீழ் நான்கு தோல் பதப்படுத்தும் தோல் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஈரோட்டில் அப்பகுதியிலுள்ள தோல் பதனிடுபவர்களின் தேவைகளை நிறைவுசெய்ய ஒரு சங்கம் பதிவு செய்யப்பட்டுள்ளது. இச்சங்கங்களில் மொத்த முதலீடு ரூ. 4 கோடியாகும். இராணிப்பேட்டை தோல் முடிவாக்க சங்கத்திற்கு ரூ. 148 இலட்சம் மதிப்பில் விரிவாக்கத் திட்டம் ஒன்று தேசீய தோல் வளர்ச்சித் திட்டத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. ஒப்புதல் பெறப்பட்டவுடன் விரிவாக்கத் திட்டம் செயல்படுத்தப்படும்.

1995 ஏப்ரல் 24]

முன்னேற்றம்

ஆண்டு	சங்கங்களின் எண்ணிக்கை	தோல் பதனிடுபவர்களில் பயனடைந்தோர் எண்ணிக்கை	ஈட்டப்பட்ட சேவை கட்டணம் (ரூபாய் இலட்சத்தில்)
(1)	(2)	(3)	(4)
1991-92	4	399	70.87
1992-93	5	488	84.64
1993-94	5	580	105.20
1994-95 (டிசம்பர் '94 வரை)	5	555	82.25

(உ) தீப்பெட்டிச் சேவை தொழிற்கூட்டுறவுச் சங்கங்கள்

10.8 தமிழ்நாட்டில் குடிசைத் தொழிற் துறையில் கையினால் தயாரிக்கப்படும் தீப்பெட்டிகளின் உற்பத்தி, நாட்டின் மொத்தத் தேவையில் சுமார் 85 விழுக்காடாகும். இத்துறை திருநெல்வேலி, இராமநாதபுரம், காமராசர், பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டங்களிலுள்ள கிராமப் பகுதிகளில் வறுமைக் கோட்டிற்கு கீழே உள்ள நலிவுற்ற பிரிவினர் குறிப்பாக மகளிருக்கு வேலை அளிப்பதில் முக்கிய பங்கினை வகிக்கிறது.

10.9 உறுப்பினர் சங்கங்களுக்கு தரமுள்ள மூலப்பொருள்களை மொத்தமாகப் பெற்று, நியாயமான விலையில் வழங்குவதில் தீப்பெட்டி உற்பத்தியாளர் சேவைச் சங்கம் முக்கிய பங்கினை வகிக்கிறது. உறுப்பினர் சங்கங்களால் மேற்கொள்ளப்படும் தரமுள்ள தீப்பெட்டிகளை கண்காணித்து, அவற்றை வட இந்தியாவில் விற்பனை செய்து வருகிறது. தற்பொழுது 31.12.94 அன்று 15 தீப்பெட்டி தொழிற்கூட்டுறவுச் சேவைச் சங்கங்கள் உள்ளன. இவை 755 உறுப்பினர் சங்கங்களுக்கு உதவியளித்து கிராமப்புற மகளிருக்கு வேலையளிக்கிறது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வேண்டுகோளின்படி, இந்திய அரசு 1.6.93 முதல் தமிழ்நாட்டிலுள்ள சின்னஞ்சிறு தீப்பெட்டித் தொழிற்சாலைகளுக்கு ஆயத்தீர்வையினை குறைத்துள்ளது. ஆயத் தீர்வை குறைப்பின் பயனாக, பின்வருகின்ற தீப்பெட்டிச் சேவைச்

சங்கம் புதுப்பிக்கப்பட்டு, 1994-95 ஆம் ஆண்டில் பகுதி II திட்டத்தின் கீழ் ஒவ்வொன்றுக்கும் ரூ. 1.00 இலட்சம் அரசு பங்கு மூலதனமாக அரசு ஒப்புதலளித்தது.

1. திட்டங்குளம் சிறு தீப்பெட்டி தயாரிப்பாளர்கள் தொழிற் கூட்டுறவுச் சேவைச் சங்கம், கோவில்பட்டி, வ.உ சிதம்பரனார் மாவட்டம்.

2. ஏ. இராமலிங்கபுரம் ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார் தீப்பெட்டி உற்பத்தியாளர்கள் தொழிற்கூட்டுறவுச் சேவைச் சங்கம், சாத்தூர், காமராஜர் மாவட்டம்.

3. சங்கரன்கோவில் சிறு தீப்பெட்டி உற்பத்தியாளர்கள் தொழிற்கூட்டுறவுச் சேவைச் சங்கம், சங்கரன் கோவில், நெல்லை கட்டபொம்மன் மாவட்டம்.

11. சிறு மற்றும் சின்னஞ்சிறு தொழில்கள் மற்றும் தொழில் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நிதியுதவி

11.1 தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம்

11.1.1. தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் 1949 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட முதன்மையான மாநில நிதிக் கழகமாகும். இதில், மாநில அரசும் இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கியும் சம உரிமை பெற்று, அவற்றின் உறுப்பினர்கள் அடங்கிய குழுவினால் இதன் கொள்கைகள் வகுக்கப்படுகின்றன. மேலும், பல்வேறு பணிகளுக்கு, இக்கழகம் வங்கியாகவும் செயல்படுகிறது. இந்திய ரிசர்வ் வங்கி, இதன் நிர்வாகக் குழுவில் பங்கு பெற்று, இதன் பணிகளை மேற்பார்வையிடுகிறது. இந்திய தொழில் வளர்ச்சி வங்கி, குறிப்பிட்ட பணிகளில் இந்திய ரிசர்வ் வங்கியின் சார்பிலும் செயல்படுகிறது. மேலும், இந்திய தொழில் வளர்ச்சி வங்கி இதன் செயல்பாட்டிற்கு மறு நிதியுதவி கடன் வழங்குவதோடு, ஆண்டுத் தணிக்கையையும் மேற்கொள்கிறது. தமிழ் நாட்டில், மாநில நிதிக் கழகம் இல்லாததால், இக் கழகம் நாட்டிலுள்ள இதர மாநில நிதிக் கழகங்களைப் போலவும் செயல்படுகிறது. மாநில நிதிக் கழகங்கள் சட்டத்தின் பெரும்பாலான பிரிவுகள், இதற்குப் பொருந்துவதாக உள்ளன. ஒரு தனிப்பட்ட தொழில் நிலையத்திற்கு ரூ. 150 இலட்சம் வரை, நிலம் கட்டிடம் இயந்திர தளவாடங்கள் மற்றும் இயந்திர கருவிகள் வாங்குவதற்கு

இக்கழகம் நிதியுதவி வழங்கி வருகிறது. புதிய தொழில் நிலையங்களை அமைப்பதற்கு மட்டுமல்லாமல் ஏற்கெனவே உள்ள தொழில் நிலையங்களுக்கு விரிவாக்கம், நவீனமாக்குதல் உற்பத்திப் பொருளை மாற்றியமைத்தல் ஆகியவற்றிற்கும் இக்கழகம் நிதியுதவி அளிக்கிறது.

11.1.2. மாநிலத்தில் தொழில் வளர்ச்சி மற்றும் மேம்பாட்டிற்கு இக்கழகம் மகத்தான பணியாற்றி வருகிறது. அதாவது தமிழ் நாட்டிலுள்ள எந்த வெற்றியடைந்துள்ள தொழிலும் ஏதாவதொரு முறையாவது இக்கழகத்தின் உதவி பெறாமல் இருந்திருக்க வாய்ப்பில்லை. முதல் 20 ஆண்டு காலங்களில் பருத்தித் துணி, சர்க்கரை, காகிதம், சிமிட்டி, இரசாயனப் பொறியியல் முதலிய பல தொழில்களுக்கு தவணைக் கடன் வழங்கியிருப்பது மட்டுமல்லாமல், அவற்றின் பங்கு மூலதனத்திலும் கலந்து கொள்வதன் மூலம் இக்கழகம் மேற்கண்ட தொழில்களை ஊக்குவித்துள்ளது. திருப்பூரில் பின்னல் ஆடைத் தொழில்கள், கோயம்புத்தூரில் பருத்தித் துணி மற்றும் வார்ப்படத் தொழில்கள், சேலம் மற்றும் தர்மபுரியில் பட்டு மற்றும் சவ்வரிசித் தொழில்கள், சிவகாசி மற்றும் சாத்தூரில் ஆப்செட் அச்சடித்தல் மற்றும் தீப்பெட்டித் தொழில் ஆகிய தொழில் நிலையங்களின் வளர்ச்சியில் இந்நிறுவனம் சிறப்பான பங்கினைப் பெற்றுள்ளது என நிச்சயமாகக் கூறலாம்.

நிதியுதவியில் வரம்பு

11.1.3. தமிழ் நாட்டிலுள்ள தொழில் முனைவர்களின் தேவைகளை நிறைவு செய்யும் பொருட்டு, தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டத் தலைநகரங்களிலும் 33 கிளை அலுவலகங்களை இக்கழகம் திறந்துள்ளது. மேலும் எட்டு மண்டல அலுவலகங்களும் உள்ளன.

11.1.4. கிளை அலுவலகம் மற்றும் மண்டல அலுவலகங்களுக்கு ரூ. 20.00 இலட்சம் வரை கடன் வழங்குவதற்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதற்கு மேல் கடன் வழங்கும் அதிகாரம் தலைமை அலுவலகத்தினைச் சாரும். ரூ. 150 இலட்சம் வரை கடன் வழங்கப்பட்ட அனைவருக்கும், ஆவணங்கள் மற்றும் கடன் தொகை வழங்கும் பணி, கிளை அலுவலகங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் பயன் பெறுவோர் சென்னைக்கு பயணம் மேற்கொள்ள வேண்டிய அவசியமில்லை.

11.1.5. இந்நிறுவனம் கடன் வழங்குவதற்கு சுமுகமான நடைமுறையை ஏற்படுத்தியுள்ளது. இதன்படி ஒவ்வொரு கடன் பெறும் தொழிலுக்கும் இந்நிறுவனத்தைச் சார்ந்த அலுவலர் நிர்வாக அலுவலராக இருப்பார். இந்த நிர்வாக கடன்தாரரை தன் பொறுப்பில் ஏற்றுக் கொண்டு தொழிற்சாலையை குறைந்தது மாதமொருமுறை தொடர்பு கொள்ளுவார். இதன் மூலம் தொழிலில் ஏற்படும் பிரச்சினைகளைக் களைவதற்கும் நலிவு ஏற்படும் முன் தவிர்க்கவும் தொழிலைப் பற்றிய உண்மையான நிலையை இந்நிறுவனம் அறிந்து கொள்ளவும் வாய்ப்பு ஏற்படுகிறது.

மூலதன அமைப்பு

11.1.6. இக்கழகத்தின் அங்கீகரிக்கப்பட்ட பங்கு மூலதனம் ரூ.50 கோடியாகும். 31.3.94 இல் செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் ரூ. 42 கோடியாகும். இதில் தமிழ் நாடு அரசும், இந்திய தொழில் வளர்ச்சி வங்கியும் சம பங்கு வகிக்கின்றன. பாண்டிச்சேரி அரசு, பொது காப்பீட்டுக் கழகம், இந்திய ஆயுள் காப்பீட்டுக் கழகம் மற்றும் வங்கிகள் ஆகியவை சிறிய அளவு பங்கு பெற்றுள்ளன.

நிர்வாகம்

11.1.7. இக்கழகத்தின் நிர்வாகக் குழுவில், தமிழ்நாடு அரசின் அலுவலர்களான தொழில் துறை, சிறு தொழில் துறை மற்றும் நிதித்துறை ஆகிய துறைகளின் செயலர்கள், தொழில் வணிக இயக்குநர் மற்றும் இந்திய ரிசர்வ் வங்கி, இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கி, இந்திய சிறு தொழில் வளர்ச்சி வங்கி மற்றும் சிறு தொழில்கள் சங்கம் ஆகியவற்றின் உறுப்பினர்கள் மற்றும் மாநில அளவிலான நிதி நிறுவனங்களின் தலைமை பொது மேலாளர்களும் உறுப்பினர்களாக உள்ளனர்.

நடவடிக்கைகளின் முன்னேற்றம்

11.1.8. இக்கழகத்தினால் கடந்த மூன்றாண்டுகளில் வழங்கப்பட்ட மொத்த கடன் ஒப்புதல்கள், வழங்கப்பட்ட தொகை, வசூலிக்கப்பட்ட தொகை மற்றும் நடப்பாண்டின் செயல் மற்றும் நிதி இலக்கு விவரங்கள் அட்டவணை எண் 1 மற்றும் 2ல் தரப்பட்டுள்ளன.

11.1.9. கடந்த ஐந்தாண்டுகளில் ஒப்புதலளிக்கப்பட்ட மற்றும் வழங்கப்பட்ட மொத்தத் தொகை பின்வருமாறு:

ஆண்டு (1)	ஒப்புதலளிக்கப்பட்ட திரண்ட தொகை மொத்தம் (2)	வழங்கப்பட்ட திரண்ட தொகை மொத்தம் (3)
	(ரூ. கோடியில்)	
1990-91	1085	801
1991-92	1318	962
1992-93	1524	1092
1993-94	1842	1290
1994-95 (31.12.94 வரை)	2010	1421

11.1.10. குறைந்த மூலதனத்தில் அதிக வேலை வாய்ப்பளிக்கக் கூடிய சிறு தொழில்கள் தமிழ்நாடு தொழில் மூதலீட்டுக் கழகத்தின் நடவடிக்கையில் மிக முக்கியத்துவம் பெறுகின்றன. சராசரியாக மொத்த கடன் ஒப்புதல்களில் சிறு தொழில்களின் பங்கு 95 விழுக்காட்டிற்கும் அதிகமாக உள்ளது. சிறு தொழில்களுக்கு வழங்கப்பட்ட கடன் தொகை 68 % விழுக்காடாகும்.

வேலை வாய்ப்பு

11.1.11. இக்கழகத்தால் உதவியளிக்கப் பெற்ற தொழில்கள் குறிப்பிடத் தக்க அளவுக்கு வேலை வாய்ப்பினை அளிக்கின்றன. கடந்த மூன்றாண்டுகளில் தமிழ்நாடு தொழில் மூதலீட்டுக் கழகத்தால் ஏற்படுத்தப்பட்ட வேலை வாய்ப்பு விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

ஆண்டு	வேலை வாய்ப்பு பெற்றவர்களின் எண்ணிக்கை
1991-92	36160
1992-93	36350
1993-94	36740
1994-95 (31.12.94 வரை)	26354

இலாபம்

11.1.12. கடந்த மூன்றாண்டுகளில் இக்கழகத்தின் இலாபம் கீழ்க்கண்டவாறு இருந்தது.

ஆண்டு	இலாபம் (இலட்சத்தில்)
1991-92	221.82
1992-93	232.49
1993-94	2005.07

மானியத் தொகை

11.1.13. இக்கழகத்தினால் நிதி உதவியளிக்கப்பட்ட தொழில் நிலையங்களுக்கு உரிய மானியம் வழங்கும் பணியை இக்கழகமே மேற்கொள்கிறது. தொழில் திட்டங்களை தாமதமின்றி செயல்படுத்த தொழில் முனைவர்களுக்கு உதவியளிக்கும் பொருட்டு தவணைக் கடனோடு மானியம் பெறுவதற்கான தகுதியும் ஒப்பளிப்பு செய்யப்படுகிறது. கடந்த மூன்றாண்டுகளில் இக்கழகத்தால் மாநில முதலீட்டு மானியம் திட்டத்தில் ஒப்புதலளித்து வழங்கப்பட்ட விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

ஆண்டு	ஒப்புதல் எண்ணிக்கை	ரூபாய் கோடியில்	வழங்கப்பட்ட தொகை (ரூபாய் கோடியில்)
(1)	(2)	(3)	(4)
1992-93	811	18.99	10.21
1993-94	923	32.44	14.73
1994-95 (31.12.94 வரை)	750	24.46	11.56

1995 ஏப்ரல் 24]

வட்டியில்லா விற்பனை வரிக் கடன் திட்டம்

11.1.14. இந்நிறுவனத்தால் உதவியளிக்கப்பட்ட சிறு தொழில்களைப் பொறுத்தவரை, வட்டியில்லா விற்பனை வரித் திட்டத்தை செயல்படுத்தும் பொறுப்பும் இதனிடமே ஒப்படைக்கப்பட்டுள்ளது. இக்கழகம், சிறு தொழில் நிலையங்கள் 1-4-91 முதல் வட்டியில்லா விற்பனை வரிக் கடன்/தள்ளுபடி / தள்ளி வைப்பு ஆகிய சலுகைகள் வணிக வரித் துறையிடமிருந்து பெறுவதற்கு சான்றிதழ்கள் கீழ்க்கண்டவாறு வழங்கியுள்ளது.

செயலாக்கம்

ஆண்டு	வழங்கப்பட்ட தகுதிச் சான்றிதழ்கள் எண்ணிக்கை	ஒப்புகை (ரூ. கோடியில்)
(1)	(2)	(3)
1992-93	136	21.27
1993-94	142	29.35
1994-95 (31.12.94 வரை)	111	34.72

செயல்படுத்தப்படும் சிறப்புத் திட்டங்கள்

11.1.15 போக்குவரத்துத் திட்டக் கடன் (சுற்றுலா டாக்சி, ஆட்டோ ரிக்ஷா, டிரக்குகள், லாரிகள், டேங்கர்கள், போக்குவரத்து பஸ்கள் முதலியவை வாங்குவதற்கு), அனைத்து பரிசோதனை வசதிகள் மற்றும் அறுவை சிகிச்சைக் கூடங்கள் கொண்ட சிறு மருத்துவமனைகள் அமைப்பதற்கு தகுதி பெற்ற மருத்துவர்களுக்குரிய பதிவு பெற்ற மருத்துவர்கள் திட்டக் கடன், மகளிர் தொழில் முனைவர்களுக்கு சலுகையளித்திடும் திட்டம் இவற்றை இக்கழகம் செயல்படுத்தி வருகிறது. நலிவுற்ற தொழில்களுக்கு மறு வாழ்வு அளிக்கும் திட்டத்தையும் இக்கழகம் செயல்படுத்தி வருகிறது.

செயலிலுள்ள புதிய திட்டங்கள்

குத்தகை நிதியுதவித் திட்டம்/தவணை கொள்முதல் திட்டம்

11.1.16. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கடந்த ஆண்டு சனவரியில் சட்டப்பேரவையில் அறிவித்தபடி மருத்துவமனைகள், உணவு விடுதிகள் ஆகியவற்றை அமைக்கவும், விரிவுபடுத்த/நவீனப்படுத்த உதவியளிக்கும் பொருட்டு, இக்கழகம், குத்தகை நிதியுதவி, தவணை கொள்முதல் திட்டங்களை அறிமுகப்படுத்தியது. இத்திட்டங்களின் கீழ் ஒப்புதலளிக்கப்பட்டவை பின்வருமாறு:

(ரூபாய் இலட்சத்தில்)

	31.3.94ல்		31.12.94 இல்	
	நிலையங்களின் எண்ணிக்கை	தொகை	நிலையங்களின் எண்ணிக்கை	தொகை
(1)	(2)	(3)	(4)	(5)
(அ) இயந்திரங்களின் குத்தகை	8	355.15	18	605.54
(ஆ) தவணைக் கொள்முதல்	2	83.00	13	272.80

நடைமுறை மூலதனம் பெறுவதற்கு சிறுதொழில் நிலையங்களுக்கு உதவியளிக்கும் திட்டம்

11.1.17. இந்நிறுவனம் ஏற்கெனவே ஒருமுனைத் தீர்வுத் திட்டத்தை செயல்படுத்தி வருகிறது. இதன்படி, சிறு தொழில்களுக்கு தவணைக் கடனோடு, திட்டத்தின் மதிப்பு, செயல்படும் தன்மை, பிணை வைப்பு ஆகியவற்றைக் கருத்திற்கொண்டு நடைமுறை மூலதனக் கடனை வழங்குவதற்கு பரிசீலிக்கப்படுகிறது. (நடைமுறை மூலதன முன்பணம் இல்லாமல்) ரூ.50 இலட்சத்திற்கு மேற்படாத மொத்த நடைமுறை மூலதனத்தை உடைய திட்ட மதிப்பு கொண்ட சிறு தொழில்கள் நடைமுறை கடன் பெறத் தகுதி பெறுகின்றன.

1995 ஏப்ரல் 24]

மேம்பட்ட நுகர்வோர் உறவு

11.1.18. நுகர்வோரிடமிருந்து பெறப்படும் விண்ணப்பங்களை உடனடியாக நடவடிக்கை எடுக்கும் பொருட்டு, இக்கழகம், தொழில் முனைவர் வழிகாட்டிப் பிரிவினை அமைத்துள்ளது. இப்பிரிவு, ஆர்வமுள்ள தொழில் முனைவோருக்கு ஆலோசனைகளையும் வாய்ப்புள்ள புதிய திட்டங்களையும் அளிக்கிறது.

மண்டல ஆலோசனைக் குழுக் கூட்டங்கள்

11.1.19. வளர்ந்துள்ள நிதி நிலை மற்றும் போட்டியுடன் கூடிய வர்த்தக நடவடிக்கைகளில், நிதி நிறுவனங்கள் புதிய வாடிக்கையாளர்களை வரவேற்பதுடன் ஏற்கெனவே உள்ள வாடிக்கையாளர்களுடன் சுமுக உறவு கொள்வது அவசியமாகும். இதனைக் கருத்தில் கொண்டு, இக்கழகம், சிறு தொழில் சங்கம், மாவட்ட தொழில் மையம், தலைமை வங்கி, சிட்கோ, சிப்காட், ஆகியவற்றின் சார்பாளர்கள் மற்றும் சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர்கள் ஆகியவர்களைக் கொண்ட மண்டல ஆலோசனைக் குழுக்களை எட்டு மண்டலங்களிலும் அமைத்துள்ளது. இக்கழகத்தின் தலைவர் மற்றும் மூத்த அலுவலர்கள் மண்டல ஆலோசனைக் குழுக் கூட்டங்களில் கலந்து கொண்டு, வாடிக்கையாளர்களுக்கு நன்முறையில் உதவியளிக்கப்படுகிறது.

தங்க அட்டை/பச்சை அட்டை/ தகுதி அட்டை முறை வழங்கல்

11.1.20. கடன் தொகையை தவறாமல் செலுத்துபவர்களுக்கு தங்க அட்டை/பச்சை அட்டை/தகுதி அட்டை வழங்கும் முறையை இக்கழகம் சமீபத்தில் அறிமுகப்படுத்தியுள்ளது. இது கடன்தாரர்கள் டிஐஐசிக்கு கடனை உரிய நேரத்தில் திரும்பச் செலுத்துவதற்கு ஊக்கமளிப்பதாகும். இந்த அட்டைதாரர்களுக்கு நகராச் சொத்துக்களில் வட்டி விகிதம் குறைப்பு, அசையா சொத்துக்களின் மீதான பிணை வைப்பு, ஆவணக் குறைப்பு மேம்பாட்டாளர்களின் பங்கு, விரைவான ஒப்புதல் முதலிய சில சலுகைகள் அளிக்கப்படும்.

நலிவுற்ற தொழில்களின் மறுவாழ்வு

11.1.21. டி.ஐஐசி, தொடர்ந்து தகுதி வாய்ந்த நலிவுற்ற தொழில்களுக்கு மறுவாழ்வு அளித்து வருகிறது. 1993-94 ஆம் ஆண்டில் இந்திய தொழில் வளர்ச்சி வங்கி, தேசீய தொழில் வளர்ச்சி வங்கி ஆகியவற்றின் ஆர்.எஸ்.ஆர். திட்டத்தின் கீழ், ஏழு தொழில்

நிலையங்களுக்கு மொத்தம் ரூ. 87.18 இலட்சம் இக்கழகம் மறுவாழ்வளித்துள்ளது. மார்ச் '94 முடிய இத்திட்டத்தின் கீழ், 143 தொழில் நிலையங்களுக்கு, மொத்தம் ரூ. 1993.89 இலட்சம் கடன் ஒப்புதலளித்துள்ளது. மேற்கண்டவை தவிர, டிஐஐசியும், தேவையான நலிவுற்ற தொழில் நிலையங்களுக்கு அசல் மாற்றியமைத்தல், இடைவெளிக் காலம் முதலிய சாதாரண நிவாரணம் வழங்குகிறது. கடந்த இரண்டாண்டுகளில் வழங்கப்பட்ட இது போன்ற நிவாரண விவரங்கள் பின்வருமாறு:-

ஆண்டு	அசல்	வட்டி (ரூபாய் இலட்சத்தில்)	மொத்தம்
(1)	(2)	(3)	(4)
1992-93	1122	2154	3276
1993-94	506	624	1130

செயல் முன்னேற்றம்

அட்டவணை. 1

(அ) மொத்தம்	(அனைத்து வகைகள்) 31.3.94 வரை திரண்ட மொத்தம்		1994-95 (1.4.94 முதல் 31.12.94 வரை)		(ரூபாய் கோடியில்) 31.12.94 வரை திரண்ட மொத்தம்	
	எண்ணிக்கை	மொத்தம்	எண்ணிக்கை	மொத்தம்	எண்ணிக்கை	மொத்தம்
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)
ஒப்புதல்கள் (அனைத்து வகை)	65800	1842.48	2092	167.92	67892	2010.40
சிறு தொழில்கள்	64121	1432.97	1999	127.03	66120	1560.00
வழங்கப்பட்ட தொகை (மொத்தம்)	..	1290.49	..	131.33	..	1421.82

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1995 ஏப்ரல் 24]

(ஆ) கடந்த மூன்றாண்டுகளில் ஏற்பட்ட ஒப்புதல்கள், வழங்கப்பட்ட தொகை, வசூலிக்கப்பட்ட தொகை பற்றிய அட்டவணை

ஆண்டு (1)	ஒப்புதல்கள் (2)	வழங்கப் பட்ட தொகை (3)	வசூலிக்கப்பட்ட தொகை (4)
		(ரூபாய் கோடியில்)	
1992-93	206.37	130.09	134.43
1993-94	321.42*	198.37*	183.06
1994-95	167.92	131.33*	124.61

*இது, தமிழ்நாடு மின்வாரியத்திற்கு ஒப்புதலளிக்கப்பட்ட குறைந்த காலத் தவணைக் கடன் ரூ.50 கோடியும் உள்ளிட்டதாகும்.

(இ) மொத்த ஒப்புதல்களில், சிறுதொழில் துறைக்கு வழங்கப்பட்ட உதவி

ஆண்டு (1)	எண்ணிக்கை (2)	தொகை (3)
		(ரூபாய் கோடியில்)
1992-93	2633	177.44
1993-94	2742	219.87
31-3-94வரை திரண்ட மொத்தம்	64121	1432.97
1-4-94 முதல் 31-12-94 வரை	1999	127.03
31-12-94 வரையிலான திரண்ட மொத்தம்.	66120	1560.00

அட்டவணை-2.

தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம், செயல் இலக்கு, நிதி இலக்கு மற்றும் சாதனைகள்

செயல் இலக்கு

(1)	1994-95 இலக்கு (2)	சாதனை 31-12-94 வரை (3)	சாதனையில் விழுக்காடு (4)
		(ரூபாய் கோடியில்)	
ஒப்புதல்	350.00	167.92	48.00
வழங்கப்பட்ட தொகை	250.00	131.33	53.00
வசூலிக்கப்பட்ட தொகை	240.00	124.61	52.00

நிதி இலக்கு :

(1)	வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடு 1994-95 (2)	செலவு 31-12-94 முடிய (3)	சாதனை விழுக்காடு (4)
	(ரூபாய் இலட்சத்தில்)		
முதலீட்டுக்குரிய கடன்	700.00	இல்லை.	இல்லை
தொழில் நிலையங்களுக்குரிய மூலதன மானியம்	1500.00	இல்லை	இல்லை
மோட்டார் பொருத்திய சைக்கிள் ரிக்ஷா, ஆட்டோ ரிக்ஷா முதலியவற்றிற்கு மானியம்	50.00	இல்லை	இல்லை

2(அ) 1992-93 மற்றும் 1993-94ஆம் ஆண்டுகளில் வட்டி, வரி, முதலியவற்றில் மாநிலத்தில் பங்கு குறைந்துள்ளது.

ஆண்டு (1)	வட்டி (2)	வரி (3)	ஆயத்தீர்வை (4)
		(ரூபாய் இலட்சத்தில்)	
1. மூலதனத்தின் மீதான கடன்			
1992-93	234.55	இல்லை	இல்லை
1993-94	427.58	இல்லை	இல்லை
2. எம்யூடிபி கடன்			
1992-93	12.48	இல்லை	இல்லை
1993-94	7.82	இல்லை	இல்லை

2(ஆ) தமிழ்நாடு அரசுக்கு செலுத்தப்பட்ட பங்கீட்டுத் தொகை

ஆண்டு	(ரூபாய் இலட்சத்தில்)
1992-93	67.33
1993-94	68.33

2(இ) **31-3-93-ல் தொழிலாளர்களின் எண்ணிக்கை 849**

31-3-94-ல் தொழிலாளர்களின் எண்ணிக்கை 855

1995 ஏப்ரல் 24]

11.2. தமிழ்நாடு தொழில் கூட்டுறவு வங்கி

11.2.1. *1960-களில் தொழிற் கூட்டுறவு சங்கங்கள் போதுமான நிதியுதவிகளைப் பெறுவதில் மிகுந்த சிரமத்திற்குள்ளாயின. அவை தங்களின் தேவைகளுக்குத் தங்களது சொந்த நிதியின் மூலமாகவோ அல்லது வங்கிக் கடன் மூலமாகவோ போதுமான நிதிகளைப் பெற முடியவில்லை.*

11.2.2. *இத்தகைய கடினமான சூழ்நிலையை மாற்றுவதற்கு தொழிற் கூட்டுறவு சங்கங்களை உறுப்பினர்களாகக் கொண்ட, முதன்மை வங்கியாகத் தமிழ்நாடு தொழில் கூட்டுறவு வங்கி 13-9-1961 இல் நிறுவப்பட்டது.*

11.2.3. *தற்பொழுது ரூ.399.32 இலட்சம் செலுத்தப்பட்ட பங்கு மூலதனத்துடன் கூடிய 471 தொழிற்கூட்டுறவு சங்கங்கள் இதில் உறுப்பினர்களாக உள்ளன. இதில் தமிழக அரசின் பங்குத் தொகை ரூ.268.30 இலட்சமாகும். மாநில அரசு ரூ. 500 இலட்சம் நிலை வைப்புத் தொகையினை திரும்ப செலுத்துவதற்கு உத்தரவாதம் அளித்துள்ளது. அரசின் இத்தகைய தாராள உதவியினால், இவ்வங்கி, தொழிற் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நிதியுதவியினை அளிக்க இயலுகிறது. தொழிற் கூட்டுறவுச் சங்கங்களுக்கு 31-10-94-இல் ரூ.1833.38 இலட்சம் நிதியுதவி அளிக்கப்பட்டுள்ளது.*

11.2.4. *தேயிலை, தீப்பெட்டி, கயிறு, தோல், உலோகப் பொருள் கைவினைத் தொழில்கள், போக்குவரத்து வாகனங்கள் முதலிய பல்வேறு வகைத் தொழிற்கூட்டுறவுச் சங்கங்களுக்கு இவ்வங்கி நிதியுதவி அளிக்கிறது.*

11.2.5. *இத்துறையின் விடாமுயற்சியினால், 20 ஆண்டுகளுக்குப் பிறகு இவ்வங்கியை சென்னை, திருநெல்வேலி கட்டபொம்மன், திருச்சிராப்பள்ளி, இராமநாதபுரம், நீலகிரி, சிதம்பரனார், காமராசர் மற்றும் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் ஆகிய எட்டு மாவட்டங்களிலுள்ள தொழிற்கூட்டுறவு சங்கங்கள் நீண்ட கால கடன்களுக்கு தேசிய வேளாண்மை ஊரக வளர்ச்சி வங்கியின் மறு நிதியுதவி பெறுவதற்கு இந்திய ரிசர்வ் வங்கி 1987 இல் அங்கீகரித்தது. தொழிற் கூட்டுறவுகளின் புதிய திட்டங்கள் மற்றும் ஏற்கெனவே உள்ள திட்டங்களை விரிவாக்குதல் போன்றவற்றிற்கு குறைந்த வட்டி வீதத்தில் நிதியுதவி அளிக்கும் நிலையில் இவ்வங்கி தற்போது உள்ளது.*

11.2.6. *கோவில்பட்டி, சாத்தூர், மதுரை, திருச்சிராப்பள்ளி, குன்னூர், நாகர்கோவில், வேலூர், தஞ்சாவூர், சேலம், நெய்வேலி, கோயமுத்தூர், திருநெல்வேலி, ஈரோடு, அம்பத்தூர் மற்றும் சேப்பாக்கம் ஆகிய இடங்களில்*

15 கிளைகளை இவ்வங்கி கொண்டுள்ளது. இக்கிளைகள் அந்தந்தப் பகுதிகளிலுள்ள உறுப்பினர் சங்கங்கள் மற்றும் சிறுதொழில்கள் மற்றும் குறுந்தொழில்கள் ஆகியவற்றிற்கு கடனுதவி அளித்து வருகிறது.

11.2.7. இவ்வங்கி *31-10-1994* இல் வைப்புத் தொகை அளவை ரூ. *1613.07* இலட்சத்திற்கு அதிகரித்துள்ளது. மேலும் ரூ.*554.03* இலட்சம் அளவிற்கு காப்பு நிதியும் சேர்ந்துள்ளது. இவ்வங்கி ஈட்டியுள்ள இலாபம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

ஆண்டு	ரூபாய் இலட்சத்தில்
1988-89	*49.96*
1989-90	*23.79*
1990-91	*23.84*
1991-92	*15.04*
1992-93	*29.82*
1993-94	*34.73*
1994-95	*47.76*

11.2.8. கடந்த மூன்றாண்டுகளில் இவ்வங்கி புரிந்துள்ள சாதனை பின்வருமாறு:-

	1992-93	*1993-94*	*1994-95 (31-12-94)*
		(ரூபாய் இலட்சத்தில்)	வரை
(1)	*(2)*	*(3)*	*(4)*
வைப்புத் தொகை	*1162.18*	*1630.23*	*1773.32*
கடன் நிலுவை	*1364.88*	*1855.41*	*1668.95*
இலாபம்	*29.82*	*34.73*	*47.76*

கடந்த மூன்றாண்டுகளில் வங்கியினால் அரசுக்கு செலுத்தப்பட்ட ஈவுத் தொகை பின்வருமாறு:

ஆண்டு	தொகை. ரூ.
1990-91	*10,54,000*
1991-92	*6,46,567*
1992-93	*9,33,200*

11.2.9 நடப்பாண்டில், இவ்வங்கி *30-11-94* "நபார்டு" நிறுவனத்திடமிருந்து "மறு நிதியுதவி" பெற்று *72* சின்னஞ்சிறு மற்றும் சிறுதொழில் நிலையங்களுக்கு ரூ.*97.45* இலட்சம் உதவியளித்துள்ளது.

11.3. தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம் தவணைக் கொள்முதல் மற்றும் இயந்திரங்கள் குத்தகைத் திட்டம்.

தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம், தவணைக் கொள்முதல் திட்டம் மற்றும் இயந்திரங்கள் குத்தகைத் திட்டத்தை *1994* ஆம் ஆண்டிலிருந்து துவக்கி செயல்படுத்தி வருகிறது. *1994-95* ஆம் ஆண்டில் தவணைக் கொள்முதல் திட்டத்தின் கீழ் இது வரை *11* இனங்களுக்கு ரூ.*47.18* இலட்சம் ஒப்புதலளிக்கப்பட்டுள்ளது.

இயந்திரங்கள் குத்தகைத் திட்டத்தின்கீழ் எவ்வித விண்ணப்பமும் பெறப்படவில்லை.

சிட்கோ நிறுவனம், தவணைக் கொள்முதல் மற்றும் இயந்திரங்கள் குத்தகைத் திட்டத்தை இந்திய சிறு தொழில் வளர்ச்சி வங்கியின் தவணைக் கடன் மூலம் செயல்படுத்த முதலில் உத்தேசித்திருந்தது. இந்திய சிறு தொழில் வளர்ச்சி வங்கி, ஏற்கெனவே அரசு உத்திரவாதத்துடன் ரூ.*100* இலட்சம் தவணைக் கடன் ஒப்புதலளித்துள்ளது. இந்திய சிறு தொழில் வளர்ச்சி வங்கியின் நிதியுதவியுடன் தவணைக் கொள்முதல் திட்டத்தை செயல்படுத்துவதற்கு அரசின் பொறுப்புறுதி வாங்குவதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

12. விற்பனை உதவி: சிறுதொழில் நிலையங்களுக்கு விற்பனை உதவி என்பது அதிமுக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

12.1. நடைமுறை மூலதனம் என்ற பிரச்சினை இல்லாமல், சிறுதொழில் நிலையங்களில் உற்பத்திப் பொருள்களுக்கு விற்பனை உதவி வழங்கும் திட்டத்தை சிட்கோ நிறுவனம் எடுத்துள்ளது. இத்திட்டத்தின் கீழ் இந்நிறுவனமானது, மாநில அரசுத் துறைகள், அரசு சார்புத் துறைகள் மற்றும் பொருள் வழங்கல் பொது இயக்குநர் போன்ற துறைகளால் கோரப்படும் ஒப்பந்தப்புள்ளிகளில், சிறு தொழில்களின் சார்பாக கலந்து கொண்டு, அவற்றிற்கென *1994-95* ஆம் ஆண்டிற்கு ரூ.*2500* இலட்சம் ஆணைகளைப் பெற்றுள்ளது.

12.2. விற்பனை உதவி அளித்திடுவதில் இந்நிறுவனம் கண்டுள்ள முன்னேற்றம் கீழ்க்கண்ட விவரங்களிலிருந்து தெரிய வரும்.

ஆண்டு	பெறப்பட்ட ஆணைகள் (ரூபாய் கோடியில்)
1990-91	5.20
1991-92	5.47
1992-93	25.41
1993-94	132.84
1994-95 (31-12-1994 வரை)	69.27

12.3. சிறு தொழில் நிலையங்களில் உற்பத்திப் பொருள்களுக்கு விற்பனை வசதி அளிக்கும் பொருட்டு, அநேக வாங்குவோர் - விற்போர் கூட்டங்கள் அடிக்கடி நடத்தப்படுகிறது.

12.4. இத்திட்டத்தின் கீழ் இந்நிறுவனம் 1995-96ல் புதிதாக 150 தொழில் நிலையங்களைப் பதிவு செய்யவும் ரூ.2000 இலட்சம் மதிப்புள்ள ஆணைகள் சிறு தொழில் நிலையங்களுக்கு பெற்றுத் தரவும் திட்டமிட்டுள்ளது. சிறு தொழில் நிலையங்கள் அரசுத் துறைகளிடமிருந்து அதிக அளவு ஆணைகள் பெறும் பொருட்டு, கூடுதலாக வாங்குவோர்-விற்போர் கருத்தரங்குகளை நடத்துவதற்கு இந்நிறுவனம் திட்டமிட்டுள்ளது.

சிறு கைவினைஞர்களுக்கு அளிக்கப்படும் விற்பனை உதவியில் டால்கோ நிறுவனத்தின் பங்கு.

12.5. சிறு கைவினைஞர்களுக்கு உதவிடும் வகையில், பெரம்பூரில் ஒன்றும் சேலத்தில் ஒன்றும் ஆக இரு பொருட்கள் சேகரிப்பு மையங்கள் செயல்பட்டு வருகின்றன. இந்த மையங்கள் கைவினைஞர்களிடமிருந்து, தரமான காலணிகளைச் சேகரித்து சீரான வேலைவாய்ப்பினை அளித்து வருகின்றன.

12.6. இவ்வாறு சேகரிக்கப்பட்ட பொருட்கள், 'டால்கோ' வின் விற்பனைக் கூடங்கள் மற்றும், பொருட்காட்சிகளில் பங்கு பெறுவதன் மூலமாகவும் விற்பனை செய்யப்படுகின்றன. 1994-95ல், 31-1-95 வரை பொருட்கள் சேகரிப்பு நிலையங்கள் மூலம் ரூ.21.10 இலட்சம் மதிப்புள்ள பொருட்கள் வாங்கப்பட்டன. இது 1993-94ல் ரூ.24.88 இலட்சமாக இருந்தது.

1995 ஏப்ரல் 24]

12.7. *1995-96* இல் 'டால்கோ' நிறுவனம், இவ்விதம் பெறப்படும் கொள்முதல் அளவினை உயர்த்தி அதே சமயம், இப்பொருள்களுக்கு மேலும் அதிகப்படியான, சந்தை வாய்ப்பினை ஏற்படுத்துவதற்கும் திட்டமிட்டுள்ளது.

13. ஏற்றுமதி

சிட்கோ ஏற்றுமதி இல்லம்

இந்திய அரசின் கொள்கையின்படி, இந்திய அரசிடமிருந்து ஏற்றுமதி மாளிகைக்கு டிசம்பர் *1993*-ல் அங்கீகாரம் கிடைத்த பிறகு, சிட்கோவின் ஏற்றுமதி இல்லம், தோல் ஏற்றுமதிக்குழு, ஆடை ஆபரணங்கள் ஏற்றுமதிக்குழு, பொறியியல் ஏற்றுமதி மேம்பாட்டுக்குழு, இந்திய ஏற்றுமதியாளர்களின் ஒருங்கிணைந்த இணையம், இந்திய ஜெர்மனி வர்த்தக நிறுவனம் முதலியவற்றில் பதிவு செய்வதற்கு தேவையான துவக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. பல்வேறு நிறுவனங்களின் தூதுவரகங்களுடன் நேரடியாக தொடர்பு கொண்டு வெளி நாட்டு வாங்குபவர்களின் பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது. அலுவலர்களுக்கும், பணியாளர்களுக்கும் வெளிநாட்டு வர்த்தகம், வெளிநாட்டு வர்த்தகக் கொள்கை மற்றும் நடைமுறைகள் பற்றிய தேவையான பயிற்சித் திட்டங்கள் அளிக்கப்படுகிறது. பன்னாட்டு வர்த்தகப் பொருட்காட்சிகளில் கலந்து கொள்வதற்கும் வெளிநாட்டு வாங்குபவர்களுடன் தொடர்பு கொண்டு, ஏற்றுமதி ஆணைகளைப் பெறவும் சிட்கோ நிறுவனம் உத்தேசித்துள்ளது. ஏற்றுமதி ஆணைகள் வரப்பெற்றவுடன் உடனடி கடன் வசதிகள் பெறும் பொருட்டு, வர்த்தக வங்கிகளுடன் இணைந்து சிட்கோ செயல்பட வேண்டும்.

இது புதிய திட்டமாகையால், முழு அளவில் செயல்படுத்துவதற்கு சிட்கோ துவக்க வேலைகளை எடுத்துக் கொள்ள வேண்டியுள்ளது.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

14. தமிழ்நாடு சிறு தொழில் நிறுவனம் (டான்சி)

அமைப்பு

14.1. முந்தைய திட்டக் காலங்களில் மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் அமைக்கப்பட்ட அரசுத் தொழிற்சாலைகளை எடுத்துக்கொண்ட டான்சி நிறுவனம் *1965*ல் நிறுவப்பட்டது. பல்வேறு பொருள்களைத் தயாரிக்கும் இந்நிறுவனம் மாநிலத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட நகரங்களில் தனது விற்பனை மையங்களைக் கொண்டுள்ளது. மாநில மைய அரசுத் துறைகள்,

அரசு சார்பு நிறுவனங்கள் மற்றும் பொது மக்களுக்கும் பொருள்கள் மற்றும் சேவை வசதிகளை டான்சி நிறுவனம் வழங்கி வருகிறது.

14.2. தற்பொழுது டான்சி நிறுவனத்தின்கீழ், 33 உற்பத்தி நிலையங்கள் மற்றும் 6 விற்பனை மையங்கள் உள்ளன. இவற்றைத் தவிர தமிழ்நாடு வர்ணங்கள் மற்றும் அவை சார்ந்த பொருள்கள் தயாரிக்கும் நிறுவனம் மற்றும் தமிழ்நாடு பொறியியல் சேவை நிறுவனம் (செஸ்காட்) ஆகிய இரு துணை நிறுவனங்களையும் டான்சி கொண்டுள்ளது.

உற்பத்திப் பொருள்களின் வகை:-

14.3. டான்சி நிறுவனத்தின் உற்பத்திப் பொருள்களின் வகை பின்வருமாறு:-

வகை	உற்பத்திப் பொருள்கள்
கட்டுமானச் சாதனங்கள்	சர்க்கரை ஆலைகள், சிமிட்டி தொழிற்சாலைகள், அனல் மின் நிலையங்கள், உயர் அழுத்த மின் மாற்றித் தடங்களுக்கு 'மைக்ரோவேவ்' முதலியவற்றிற்கு தேவைப்படும் தரைக் கட்டுமானப் பொருட்கள்.
பொறியியல்	தொழிற்கூடங்கள், திரையரங்குகள், பள்ளிக்கூடங்கள், கிடங்குகள் முதலியவற்றிற்கு தேவையான சிறு கட்டுமானச் சாதனங்கள்.
கருவிகள் அறை	பாதுகாப்புத் துறைக்குத் தேவையான கருவிகள், துணைப் பாகங்கள் போன்ற தேவைகளை நிறைவு செய்ய கிண்டியிலுள்ள கருவிகள் பட்டறை மற்றும் அம்பத்தூரிலுள்ள இயந்திரக் கருவிகள் அறை ஆகியவற்றில் வசதிகள் உள்ளன.
வார்ப்பகங்கள்	இயந்திரவியல் மற்றும் இயந்திரவியல் அல்லாத துணைப் பாகங்கள், வார்ப்பு இரும்பு குழாய்கள் முதலியவை.
மரச் சாமான்கள்	மரச்சாமான்கள், உள் அலங்காரப் பொருட்கள் முதலியவை அன்றாட வாழ்க்கைக்கும், மருத்துவ நிலையங்களுக்கும் தேவையான இரும்பு எஃகு சாமான்கள் ஆகியவை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1995 ஏப்ரல் 24]

இதர வகை — இந்தியமார்க்-2, ஆழ் துளைக் கிணறு மற்றும் கைப்பம்புகள், சிறு கருவிகள், வார்ணீசுகள் எச்.எம்.டிக்காக கைக்கடிகார பாகங்களை இணைத்தல் முதலியவை.

14.4. டான்சி நிறுவனத்தின் செயல்பாடு துவக்க முதல் இணைப்பில் தரப்பட்டுள்ளது. டான்சி நிறுவனம் வெகு காலமாக 1981-82 ஆம் ஆண்டு முதல் நிதி நெருக்கடியில் உள்ளது.

டான்சி நிறுவனம் நலிவுறுதலுக்குரிய காரணங்கள்:-

14.5.. முன்மாதிரித் திட்டங்களாகவும், பயிற்சி நிலையங்களாகவும் மாநிலத்தின் முதல் மூன்று திட்டக் காலங்களில் பல்வேறு பகுதிகளில் அடிப்படை வசதிகளை அளித்திடவும் ஏற்படுத்தப்பட்ட 64 தொழில் பிரிவுகள் டான்சியில் அடங்கியுள்ளன. திட்ட நோக்கங்கள் நிறைவேற்றப்பட்டவுடன், இந்த நிலையங்கள் திட்டத்தில் சேராதவையாகக் கருதப்பட்டதால் சுமையாக இருந்தன. எனவே டான்சி அமைக்கப்பட்ட பிறகு, இந்நிலையங்களை வர்த்தக ரீதியில் டான்சி நிறுவனத்தின் கீழ் செயல்படுத்த அரசு முடிவு எடுத்தது. இந்நிலையங்கள் அமைவிடத்தைப் பொறுத்தும் முழுமையான பொருள்களின் தயாரிப்பு இன்மையாலும் பெரிதும் பாதிக்கப்பட்டன. பல்வேறு நிலையங்கள் நிதி நிலையின் இழுபறி நிலையை உணர்ந்தன. டான்சி நிறுவனம் பல்வேறு உற்பத்திப் பொருள்களைத் தயாரிப்பதில் ஈடுபட்டிருந்த பொழுதும். இந்நிலையங்கள் அவற்றின் வளர்ச்சிக்கு அரசுத் துறைகளின் தேவைகளைப் பெரிதும் நம்பியிருந்தன.

14.6. உற்பத்தி நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளவற்றில், டான்சி நிறுவனம் முன்னோடியாக விளங்கும்போதும், கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியம், வேளாண்மை பொறியியல் சேவை நிலையங்கள் என்கோபெட் (Encofed) கூட்டுறவு சங்கங்கள் போன்ற பல்வேறு அமைப்புகள் அமைக்கப்பட்டு டான்சி நிறுவனத்துடன் போட்டியிடத் துவங்கின. இவற்றிற்குச் கிடைக்கும் மைய ஆயத் தீர்வை மற்றும் விற்பனை வரிச் சலுகைகளின் மூலம் டான்சியை விட நல்லமுறையில் செயல்படக்கூடிய வாய்ப்பினைப் பெற்றுள்ளன. காலப்போக்கில் டான்சி நிலையங்கள் போட்டியில் நிற்கமுடியவில்லை.

14.7. கடந்த 30 ஆண்டுகளில் நாட்டின் தொழில் வளர்ச்சியில் பெரிய மாற்றம் ஏற்பட்டுள்ளது. சிறப்பாகச் செயல்படக்கூடிய சிறு தொழில் நிலையங்கள் பெருகியுள்ளன. நவீனப்படுத்துவதற்கு போதுமான மூலதன

முதலீடு இன்மையால் டான்சி நிறுவனம் நவீனத் தொழில் நுட்பவியல் மற்றும் புதிய உற்பத்தி முறைகளைப் பின்பற்றாமல் அதே முறையை தொடர்ந்து கடைப்பிடிக்க வேண்டியுள்ளது. ஆயத் தீர்வை மற்றும் விற்பனை வரிச் சலுகைகளில் மற்றும் வங்கிகளின் குறைந்த வட்டி கடன் ஆகியவற்றினைப் பெறும் சிறு தொழில்கள் டான்சி நிறுவனத்தோடு போட்டியிடும் நிலையை பெற்றுள்ளன. இவை தவிர, தொழிலாளர்கள், வரி ஏய்ப்பு மற்றும் தொழிலாளர் சட்டங்களைத் தவிர்ப்பது, ஆகியவை தனியார் சிறுதொழில் நிலையங்களின் வளர்ச்சிக்கு வழிவகுத்தன.

14.8. டான்சி நிறுவனத்திற்கு அரசு பண்டங்கள் வாங்குதலில் முன்னுரிமை அளிக்க முன்வந்த போதிலும், கதர் வாரியம், "என்கோபெட்" ஆகிய நிறுவனங்களுக்கு அடுத்த நிலையை இந்நிறுவனத்திற்கு அளிக்கப்பட்டிருப்பதால் இம்முயற்சிகளும் பலனளிக்கவில்லை. டான்சி நிறுவனத்திடம் பொருள்கள் வாங்கும் அரசுத் துறைகள் 10 விழுக்காடு விலையில் சலுகை முன்னுரிமை அளிக்க வாய்ப்பு இருந்தபோதிலும் சிறு தொழில்களின் உற்பத்திப் பொருள்களுக்கு 15 விழுக்காடு விலையில் சலுகை இருப்பதால், இம்முயற்சியும் பலனளிக்கவில்லை.

14.9. விற்பனை உதவித் திட்டத்தின் கீழ் தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம் (சிட்கோ) டான்சியுடன் போட்டியிட்டு வருகிறது. மேலும் தனியார் சிறு தொழில் நிலையங்களில் விலையில் 3 விழுக்காடு மட்டும் கூடுதலாக வைத்து சிட்கோ நிறுவனம் விற்பனை செய்து வருகிறது. இதுவும் டான்சி நிறுவனத்திற்கு சாத்தியமாயில்லை.

14.10. மொத்தத்தில் டான்சி நிறுவனம் நலிவுற்றமைக்கு பின் வருகின்றவை முக்கிய காரணமாகும்.

(1) வர்த்தக அமைப்புக்குட்படாத தொழில் பிரிவுகள்

(2) சாதகமில்லாத இடங்களில் தொழில் நிலையங்கள் அமைந்திருப்பது.

(3) ஒரே வசதிகளை பல்வேறு முனைகளில் வழங்குதல்

(4) சிறு தொழிற்சாலைகளை மாநிலத்தின் பல்வேறு இடங்களில் அமைத்திருப்பது.

(5) பல்வேறு இடங்களில் அமைந்திருந்தாலும் எல்லா பிரிவுகளுக்கும் அதே நிர்வாகச் செலவு

(6) கதர் வாரியம் போன்றவற்றிற்கு அளிக்கப்படும் சுங்கவரி மற்றும் விற்பனை வரி விலக்கு இல்லாமை.

(7) அரசுத் துறைகளில் உள்ள ஏனைய நிறுவனங்களுக்கு டான்சியைவிட அதிக சலுகை அளிப்பது.

(8) சிறு தொழில் நிலையங்களுக்கு அளிக்கப்படும் முன்னுரிமைகளும், சலுகைகளும்.

(9) வழக்கிலில்லாத தொழில் நுட்பம் பின்பற்றப்படுவது.

(10) பெரும்பாலான தொழில் நிலையங்களில் இறுதி வடிவில் பொருள்கள் தயாரிக்கப்படாததோடு, அவற்றிற்கும் அரசுத் துறைகளின் ஆணைகளை நம்பியிருப்பது.

(11) அதிகச் சம்பளம், ஆனால் குறைந்த உற்பத்தித் திறன்.

(12) நீண்ட காலத் திட்டமின்மை.

(13) இந்த நிறுவனத்திற்கு புதிய இளைஞர்களை வேலைக்கு எடுக்காமல் இருப்பது.

(14) பொதுத்துறை நிறுவனமாக இருப்பதால் பொறுப்பேற்பதில் குறைவு.

(15) தொழிலாளர்களுக்கு உற்சாகமின்மை.

(16) தொடர்ந்த இழப்பினால், நடைமுறை மூலதனம் இல்லாமல் புதிய மூலப்பொருள்களைப் பெறுவதில் இந்நிறுவனத்திற்குள்ள சிரமம்.

(17) தனியார் தொழில் நிறுவனங்களோடு ஒப்பிடுகையில் ஒரே மாதிரியான வேலைக்கு பணியாளர்கள் மற்றும் தொழிலாளர்களுக்கு ஊதியக் குழுவின் ஒப்பந்தப்படி அகவிலைப்படி அவ்வப்போது அதிகரிப்பதால் கூடுதல் சம்பளம் வழங்குவது.

டான்சி நிறுவனத்திற்கு மறு வாழ்வளிக்க அரசு எடுத்துக் கொண்ட முயற்சிகள் :

14.11. பொது நிறுவனங்களுக்கான செயலாளர்கள் குழு மற்றும் இதனால் அமைக்கப்பட்ட உட்குழு ஆய்வுகளைத் தவிர, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் அக்டோபர் 1991 மற்றும் அக்டோபர் 1992-ல் டான்சி நிறுவனத்தின் செயலாக்கம் பற்றி ஆய்வு நடத்தினார்கள்.

14.12. அரசினால் எடுக்கப்பட்ட கீழ்க்காணும் முடிவுகள் இந்நிறுவனத்தின் செயல்திறனை மேம்படுத்த வாய்ப்பளித்துள்ளன.

(அ) இலாபகரமாக இயங்க இயலாத பிரிவுகளை மூடுதல்.

(ஆ) மூடப்பட்ட நிலையங்களின் சொத்துக்களை விற்பதன் மூலம் கூடுதல் நிதி பெறுதல்.

(இ) தேவைக்கு அதிகமாக உள்ள தொழிலாளர்கள் மற்றும் பணியாளர்கள் எண்ணிக்கைகளை குறைப்பதற்குரிய பணியாளர்கள்

தாமாகவே முன் வந்து ஓய்வு பெறும் திட்டம் மற்றும் அவர்களுக்கு ஊக்கத் தொகைக்கு நிதி ஒதுக்குதல்.

(ஈ) பழைய கடன்களை மானியமாகக் கொள்ளவும் திரண்ட வட்டியினை தள்ளுபடி செய்வதற்கும் செய்யப்பட்ட ஏற்பாட்டின் மூலம் நிதி அமைப்பில் முன்னேற்றம். விற்பனை வரிச்சலுகை முதலியவை வழங்குவது.

(உ) டான்சி நிறுவனம் இலாப-இழப்பு அற்ற நிலையினை எய்திடும் பொருட்டு டான்சி நிலையங்களிலுள்ள இயந்திரங்களை செயல்படத்தக்க வகையில் பொதுத்துறை நிறுவனங்கள் தங்களது வழங்கல் ஆணைகளை டான்சி நிறுவனத்திடம் தரவேண்டுமென்று சிறப்பு ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன.

(ஊ) டான்சி நிறுவனத்தின் பணியாளர்களை அரசுக்குச் சொந்தமான பிற பொதுத்துறை நிறுவனங்களில் மறுபணி அமர்த்துதல்.

1994-95 ஆம் ஆண்டில் வழிவகை முன்பணம் மற்றும் சலுகை என்பதன்கீழ் கீழ்க்கண்ட உதவிகளை தமிழ்நாடு அரசு வழங்கியுள்ளது :-

1. வழிவகை முன்பணம் ரூ. *5,55,14,000*

2. மானியம்/சலுகைத் தொகை ரூ. *2,00,00,000.*

தற்போதைய செயலாக்கம் :

14.13. நடப்பாண்டிற்கு அரசினால் ரூ. 40 கோடியாக இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

1994 டிசம்பர் வரையிலான இதன் செயலாக்கம், கடந்த ஆண்டுடன் ஒப்பிட்டு கீழே தரப்பட்டுள்ளது :-

	செயலாக்கம் டிசம்பர் 1994 வரை (ரூபாய் இலட்சத்தில்.)	டிசம்பர் 1993
(1)	(2)	(3)
விற்பனை	2131.22	2576.29
உற்பத்தி	1898.39	2483.41
ஈட்டிய வருவாய்	323.57	376.77
நிகர இலாபம்/இழப்பு	(-)242.76	(-)184.89

டான்சி நிறுவனம் போதுமான ஆணைகளைப் பெற்று, உற்பத்தி மற்றும் விற்பனையை அதிகரித்து இழப்பைச் சரிக்கட்ட அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டுள்ளது.

1994-95 ஆம் ஆண்டின் டான்சி நிறுவனத்தின் முன்னேற்றம் :

14.14. பொருள்கள் வழங்குவதற்கு ஆணைகள் பெற்றிருப்பது திருப்திகரமாக உள்ளது. ரூ. 40 கோடி என்ற இலக்கினை எய்திடுவதற்கு டான்சி அனைத்து முயற்சிகளையும் எடுத்து வருகின்றது.

14.15. 95-96 ஆம் ஆண்டின் கண்ணோட்டம் :

இந்நிறுவனத்தின் விற்பனை இலக்கு ரூ. 45.00 கோடியாயிருக்கும்.

14.16. மாநில மற்றும் மைய அரசுகளின் வருவாயில் டான்சி நிறுவனத்தின் பங்கு :

1985-86 ஆம் ஆண்டு முதல் 1993-94 ஆம் ஆண்டு வரை, டான்சி நிறுவனத்தால் செலுத்தப்பட்ட விற்பனை வரி மற்றும் மையத் தீர்வை வரி விவரம் பின்வருமாறு :

ஆண்டு (1)	விற்பனை வரி (ரூபாய் இலட்சத்தில்) (2)	ஆயத்தீர்வை (3)
1985-86	148.07	183.16
1986-87	181.49	188.86
1987-88	183.82	219.34
1988-89	178.78	206.34
1989-90	197.00	80.26
1990-91	196.22	80.99
1991-92	162.79	65.56
1992-93	190.20	99.12
1993-94	230.81	146.41
1994-95 (31-12-94 முடிய)	195.32	68.98

இலாபகரமாகச் செயல்படும் பிரிவுகளுக்கு ஊக்குவிப்பு :

14.17. உற்பத்திப் பொருள்களின் (பம்ப் நிலையங்கள், வார்ப்பட நிலையம் கைக்கடிகார இணைப்பு சார்ந்த விற்பனை மையங்கள்

போன்றவை) தன்மையினைப் பொறுத்து சில தொழில் நிலையங்களுக்கு உற்பத்தி ஊக்குவிப்புத் திட்டங்கள் நடைமுறையில் உள்ளன. கடந்த மூன்றாண்டுகளில் சராசரி இலாபத்தில் 90 விழுக்காட்டிற்கு மேல் இலாபம் ஈட்டுகின்ற அனைத்து தொழில் நிலையங்களுக்கும் சிறப்பு ரொக்க ஊக்க உதவித் திட்டமும் உள்ளது.

தொழிலாளர்கள் உறவு :

14.18. தற்போது, தொழிலாளர்கள் உட்பட 1662 பணியாளர்கள் உள்ளனர். தொழில் உறவுகள் சுமுகமான முறையில் பராமரிக்கப்படுகின்றன.

துணை நிறுவனங்கள் : தமிழ்நாடு மாநில பொறியியல் மற்றும் சேவை நிறுவனம் (செஸ்காட்) (முன்னர் தமிழ்நாடு மொபெட்ஸ் நிறுவனம்).

14.19. இந்த துணை நிறுவனம் 1977-ல் மொபெட் தயாரிப்பதற்காக துவங்கப்பட்டது. நடைமுறைச் சிக்கல்களினால் இம்முயற்சி 1981-ல் கைவிடப்பட்டது. இதிலிருந்த மனித வளம் மற்றும் இயந்திரங்களின் திறனை பயனுள்ள வகையில் உபயோகப்படுத்தும் பொருட்டு, இந்நிறுவனம் வெளி ஆணைகளைப் பெற்று நிறைவேற்றி வந்தது. இத்துணை நிறுவனத்தில் பாகங்களை இணைத்து இறுதிப் பொருள் உருவாக்கும் கூடம், பொறியியல் கூடம் மற்றும் கருவி அறை ஆகியவை இருந்தன.

தொழில்துறையின் 30-9-1985 நாளிட்ட அரசாணை (நிலை) எண் 833-இல் இத்துணை நிலையத்தை செயல்படுகின்ற நிலையில் விற்பதற்கு ஆணையிடப்பட்டது. அவ்வாறு விற்க இயலவில்லையென்றால் அந்த நிறுவனத்தை கலைத்துவிட்டு மூன்று பிரிவுகளையும் மீண்டும் டான்சி நிறுவனத்தோடு இணைத்துவிட வேண்டுமென அரசு ஆணையிடப்பட்டது. இப்பிரிவுகளின் முன்னேற்றம் ஊக்கமளிக்கக் கூடியதாக அமைந்ததால் தமிழ்நாடு மாநிலப் பொறியியல் சேவை நிறுவனம்” என்ற தனிப் பெயருடன் 1-5-1991 முதல் தொடர்ந்து வைத்துக் கொள்ள அரசு ஆணையிடப்பட்டுள்ளது.

14.20. தொழில் துறையின் 24-4-1991 நாளிட்ட அரசு ஆணை (வாலாயம்) எண் 184-ல் 1-5-1991 முதல் தமிழ்நாடு மொபெட் நிறுவனத்துடன் இணைந்திருந்த கருவிகள் பட்டறையை “டாபப்” என்ற டான்சியின் மற்றொரு துணை நிறுவனம் எடுத்துக் கொண்டது. எனவே இந்த நிறுவனத்தில் தற்போது இரு பிரிவுகள் உள்ளன.

14.21. தமிழ்நாடு மாநிலப் பொறியியல் சேவை நிறுவனம் (செஸ்காட்) டான்சி-ஃபிளேம் என்ற துருப்பிடிக்காத எஃகிலான கேஸ் அடுப்புகள்

தயாரிப்பினை மேற்கொண்டுள்ளது. இதற்கு இந்திய தர நிர்ணயக் குறியீடு சான்றிதழைப் பெற்றுள்ளது. இந்த அடுப்பு விற்பனை நன்முறையில் அதிகரித்து வருகிறது. உற்பத்தியை அதிகரித்து பெருமளவில் விற்பனை செய்வதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஒரு பர்னர் கொண்ட சிறிய கேஸ் அடுப்பும் வடிவமைக்கப்பட்டு சந்தையில் விற்பனைக்கு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

14.22. துவக்கத்திலிருந்து இந்த நிறுவனத்தின் உற்பத்தி, விற்பனை மற்றும் செயல்திறன் ஆகியவை பின்வருமாறு :

தமிழ்நாடு மாநிலப் பொறியியல் மற்றும் சேவை நிறுவனம்: (செஸ்காட்)

ஆண்டு (1)	உற்பத்தி (2)	விற்பனை (3)	செயல் திறன் (4)
		(ரூபாய் இலட்சத்தில்.)	
1977-78	5.56	9.73	18.81
1978-79	24.71	28.20	38.90
1979-80	35.20	42.20	40.07
1980-81	42.05	35.05	30.08
1981-82	14.74	8.87	50.11
1982-83	20.91	27.46	53.87
1983-84	32.27	31.13	60.72
1984-85	35.42	35.66	64.99
1985-86	44.09	30.39	71.03
1986-87	39.55	37.34	68.70
1987-88	33.83	36.34	95.85
1988-89	46.32	43.75	37.35
1989-90	87.38	87.11	65.02
1990-91	85.54	72.34	64.99
1991-92	113.81	123.58	75.67
1992-93	138.30	132.88	78.30
1993-94	138.89	134.70	69.89*
1994-95 (31-12-94 வரை)	108.83	127.71	(-)20.00**

* வட்டி உட்பட் ரூ. 60.02 இலட்சம்.

** வட்டி இல்லாமல்.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[1995 ஏப்ரல் 24

தமிழ்நாடு வர்ணங்கள் மற்றும் அதன் சார்பு பொருள்கள் நிறுவனம் (TAPAP) :

14.23. இத்துணை நிறுவனம் 1985 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டு 1-4-1986 முதல் உற்பத்தியைத் துவக்கியுள்ளது. இந்நிறுவனம் "ரெட் ஆக்ஸைடு வர்ணம்" சாலையில் குறியிட "இரப்பர் கலந்த வர்ணம்" மற்றும் எனாமல் வர்ணங்கள் முதலியவற்றை தயாரித்து வருகிறது. இந்த வர்ணங்களை டான்சி நிறுவனம் தனது பொருள்களில் பயன்படுத்தி வருகிறது. மேலும் இவை காவல்துறை மற்றும் சென்னை மாநகராட்சி போன்ற துறைகளுக்கும் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. இந்த நடவடிக்கை மேலும் வளர்ச்சியடைய வாய்ப்பு உள்ளது.

14.24.. துவக்கத்திலிருந்து இந்த நிறுவனத்தின் உற்பத்தி, விற்பனை மற்றும் செயல்திறன் கீழே தரப்பட்டுள்ளன :

தமிழ்நாடு வர்ணம் மற்றும் அதன் சார்பு பொருள்கள் நிறுவனத்தின் செயல்பாடு :

ஆண்டு	உற்பத்தி		விற்பனை செயல்திறன்		(-)இழப்பு (+)இலாபம்
	அளவு (லிட்டரில்.)	மதிப்பு	அளவு	மதிப்பு	
		(ரூபாய் இலட்சத்தில்.)			
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
1986-87	67,532	8.40	66,601	8.07	(-) 0.44
1987-88	71,908	13,97	70,571	13.97	(+) 0.10
1988-89	85,032	19.13	81,229	19.24	(+) 0.11
1989-90	90,000	20.86	88,000	19.96	(+) 0.11
1990-91	111,334	35.59	108,816	29.41	(+) 1.06
1991-92	149,385	44.18	139,478	42.08	(+) 0.19
1992-93	124,230	48.22	103,767	46.52	(+) 0.24
1993-94	142,498	77.71	159,436	82.23	(-) 0.41
1994-95 (31-12-94 வரை)	106,851	59.87	106,340	51.10	(+) 4.14

14.25. இந்நிறுவனம் டான்சி மொபெட் நிறுவனத்தின்கீழ் செயல்பட்டு வந்த கருவிகள் பொறியியல் பட்டறையை 1-5-1991 முதல் விரிவாக்கம் மற்றும் உற்பத்திப் பொருள் மாற்றியமைக்கும் செயலுக்காக எடுத்துக் கொண்டுள்ளது.

1995 ஏப்ரல் 24]

டான்சி நிறுவனத்தின் செயல்பாடுகள் :-

14.26. துவக்கத்திலிருந்து இந்நிறுவனத்தின் உற்பத்தி, விற்பனை மற்றும் செயல்திறன் கீழே தரப்பட்டுள்ளன.

ஆண்டு (1)	உற்பத்தி (2)	விற்பனை (3)	செயல்திறன் (ரூபாய் இலட்சத்தில்.) (4)
1965-66	389	342	(+) 7.04
1966-67	479	417	(+) 12.88
1967-68	493	419	(-) 30.33
1968-69	562	483	(-) 22.41
1969-70	662	661	(-) 18.8
1970-71	757	746	(+) 3.3
1971-72	818	828	(+) 11.52
1972-73	814	833	(+) 18.58
1973-74	919	904	(+) 26.78
1974-75	1022	969	(+) 1.03
1975-76	1029	947	(-) 45.28
1976-77	1062	1022	(-) 81.98
1977-78	1187	1121	(-) 100.28
1978-79	1537	1497	(-) 37.66
1979-80	1835	1661	(+) 17.53
1980-81	2065	2016	(+) 31.6
1981-82	2333	2339	(-) 94.46
1982-83	2216	2985	(-) 176.32
1983-84	2514	2342	(-) 211.29
1984-85	2368	2392	(-) 443.36
1985-86	2479	2420	(-) 420.46*
1986-87	2389	2774	(-) 280.63*
1987-88	2492	2472	(-) 303.77*
1988-89	2919	3106	(-) 222.45*
1989-90	2815	3033	(-) 259.82*
1990-91	2340	2659	(-) 681.26
1991-92	2396	2524	(-) 967.21
1992-93	2485	2552	(-) 240.42*
1993-94	3651	3695	(-) 164.86*
(தணிக்கை செய்யப்படாத)			
1994-95 (31-12-94 வரை)	1898.39	2131.22	(-) 242.76

* அரசுக் கடன்மீது வட்டி தவிர்த்து :

[1995 ஏப்ரல் 24

குறிப்பு : தரம் குறிப்பிடப்படாத பல்வேறு பொருட்கள் உற்பத்தி செய்யப்படுவதால் அவைகளின் பண மதிப்பு குறிப்பிடப்பட்டுள்ளது.

தமிழ்நாடு தோல் தொழில் வளர்ச்சி நிறுவனம் (டால்கோ) :

15. தோல் பதனிடும் தொழில்களுக்கான கழிவுகள் சுத்திகரிப்புக்கான உதவிகள் :

15.1. தமிழ்நாட்டில் தோல் தொழிற்சாலைகளிலிருந்து வெளியேற்றப்படும் கழிவு நீரால் சுற்றுப்புறச் சூழலுக்கு ஏற்படும் கேடு நீண்டகாலப் பிரச்சினையாக இருந்து வருகிறது. மாநிலத்தில், தோல் பதனிடும் தொழிற்சாலைகள் நிறைந்துள்ள சில இடங்களில் "டால்கோவின்" உதவியுடன் பொது சுத்திகரிப்பு நிலையங்கள் நிறுவப்பட்டு வருகின்றன. இத்தகைய நிலையங்கள், வாணியம்பாடி, ராணிப்பேட்டை, ஆம்பூர், பேரணாம்பட்டு, திண்டுக்கல் மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களில் "டால்கோவினால்" ஏற்படுத்தப்பட்ட நிறுவனங்களால் அமைக்கப்பட உள்ளன.

15.2. இத்திட்டத்திற்கு மத்திய மாநில அரசுகளின் பங்குத் தொகையாக ஒவ்வொன்றுக்கும் ரூ. 409.00 இலட்சம் வீதம் உதவித் தொகையாக அளிக்கப்பட்டுள்ளது. நான்கு திட்டங்களுக்கு அவற்றில் செலவு அதிகரித்துள்ளமையால் தமிழ்நாடு அரசு ரூ. 268.00 இலட்சம் கூடுதல் பங்காக ஒப்புதலளித்துள்ளது. இதே அளவிற்குரிய பங்கு பற்றிய மைய அரசின் ஏற்பு வரவேண்டியுள்ளது.

15.3. மாநிலத்தில் தோல் பதனிடும் தொழில் செறிந்துள்ள வாணியம்பாடி, இராணிப்பேட்டை, ஆம்பூர், பேரணாம்பட்டு, திண்டுக்கல் மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களில் அறு பொது சுத்திகரிப்பு நிலையங்கள் கட்டப்பட்டு வருகின்றன. இவற்றின் தற்போதைய நிலை பின்வருமாறு :-

1. வாணியம்பாடி	:	10-9-94 அன்று மாண்புமிகு முதல்வர் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டது.
2. ஆம்பூர்	:	17-11-94 அன்று சோதனை ஓட்டம் நடத்தப்பட்டது.
3. இராணிப்பேட்டை	:	இத்தொழிற்சாலைகள் சூன் திங்கள் 1995-ல் கட்டிமுடிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.
4. பேரணாம்பட்டு	:	
5. திண்டுக்கல்	:	
6. திருச்சிராப்பள்ளி	:	இத்தொழிற்சாலை டிசம்பர் 1995-க்குள் முடிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

1995 ஏப்ரல் 24]

தோல் தொழிற் கூடங்கள் :

15.4. டான்சி நிறுவனத்தின் கீழ் இயங்கி வந்த 4 தோல் தொழிற் கூடங்கள் ஏப்ரல் 1986 முதல் 'டால்கோ'விற்கு மாற்றப்பட்டன. அவை பின்வருமாறு :

1. டால்கோ தோல் பதனிடும் தொழிற்சாலை, விண்ணமங்கலம்.
2. டால்கோ தோல் பதனிடும் தொழிற்சாலை, மாதவரம்.
3. டால்கோ தொழிற்கூடம், பல்லாவரம்.
4. டால்கோ தொழிற்கூடம், பெரம்பூர்.

15.5. மாதவரத்திலுள்ள டால்கோ தோல் பதனிடும் தொழிற்கூடம் 1-10-1993 முதல் குத்தகைக்கு விடப்பட்டுள்ளது. விண்ணமங்கலத்திலுள்ள மற்றொரு தோல் பதனிடும் தொழிற்சாலை, பதப்படுத்தப்பட்ட தோல் உற்பத்தி மற்றும் சேவைப் பணி மேற்கொண்டு வருகிறது.

15.6. மற்ற இரண்டு தோல் தொழிற்கூடங்கள், பாதஅணிகள், காலணிகள் பாகங்கள், கைவுறை, நடத்துனர் பைகள், இடுப்புப் பட்டைகள் முதலியவைகளை உற்பத்தி செய்து மாநிலத்தின் அரசு சார்பு நிறுவனங்களின் தேவைகளை நிறைவு செய்து வருகின்றன.

16. தொழில் வணிக இயக்ககம் :

பரிசோதனை மற்றும் தரக்கட்டுப்பாட்டு வசதிகள் :

16.1. தரக்கட்டுப்பாட்டின் அவசியத்தை எடுத்துக்கூற தேவையில்லை. ஒரு சாதாரண சிறு தொழில் நிலையம், சொந்தமாக பரிசோதனைக்குரிய இயந்திர சாதனங்களை நிறுவிக் கொள்ள இயலாது என்பதால் மாநில அரசு இரசாயனப் பொருட்கள், மின்னணுப் பொருட்கள் மற்றும் இதர தொழில்களுக்காக இம்மையங்களை அமைத்துள்ளது.

16.2. இரசாயனப் பரிசோதனை :

16.2.1. பல்வேறு வகையான தொழில்களுக்குத் தேவைப்படும் பரிசோதனை மற்றும் பகுப்பாய்வுப் பணி வசதிகளை அளிக்கும் பொருட்டு, இந்த இயக்ககம், சென்னை, மதுரை, கோயம்புத்தூர், சேலம் மற்றும் தூத்துக்குடி ஆகிய இடங்களில் பரிசோதனை ஆய்வுக் கூடங்களை அமைத்துள்ளது. கோயம்புத்தூரிலுள்ள இந்த ஆய்வுக் கூடம், 10 குதிரைத் திறன் வரையுள்ள மைய நீர் இழுக்கும் பம்புகள், நீரில் மூழ்கியிருக்கும்

பம்பு, ஃபுட்வால்வுகள் (Foot Valves) ஆகியவற்வை பரிசோதனை செய்யும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. சேலத்திலுள்ள மண்டல ஆய்வுக்கூடம், சேலம் மற்றும் அதனைச் சுற்றி அமைந்துள்ள பகுதிகளில், சவ்வரிசி மற்றும் மாவு தொழிற்சாலைகளின் பரிசோதனைத் தேவைகளை நிறைவு செய்து வருகிறது. மேலும் இந்த ஆய்வுக்கூடம், பல்வேறு வகையான கனிமங்கள், மாட்டுத் தீவனம், தண்ணீர் முதலியவற்றின் மாதிரிகளையும் பரிசோதனை செய்து வருகிறது. சேலத்திலுள்ள மண்டல ஆய்வுக் கூடம், திருவனந்தபுரத்திலுள்ள மைய கிழங்குப் பொருள் ஆராய்ச்சி நிலையத்துடன், கூளைக்கிழங்கு (மரவள்ளிக் கிழங்கின் வகை) பொருட்களின் ஆராய்ச்சிக்குத் துணை புரிந்து வருகிறது. தூத்துக்குடியிலுள்ள மண்டல ஆய்வுக்கூடம், அப்பகுதியிலுள்ள தரமான உப்பு மற்றும் இரசாயனங்களின் ஆராய்ச்சிப் பணியினையும் மேற்கொள்கிறது. இதர வகை உற்பத்திப் பொருட்களுக்கு குறுகிய அளவில் பரிசோதனை வசதிகள் அளிக்கப்படுகிறது.

16.2.2. இரசாயனப் பிரிவின் ஆய்வுக் கூடங்களில் ஆய்வு செய்யப்பட்ட மாதிரிகளின் எண்ணிக்கை மற்றும் அதன்மூலம் கிடைத்த வருமானம் ஆகியவை கீழே தரப்பட்டுள்ளது.

நிலையத்தின் பெயர். (1)	1993-94-ல் பரிசோதனை யிடப்பட்ட மாதிரிப் பொருட் களின் எண்ணிக்கை. (2)	1993-94-ல் வசூலிக்கப் பட்ட பரி-சோதனை கட்டணம். (3)	1994-95 பரிசோதனை யிடப்பட்ட மாதிரிப் பொருட்களின் எண்ணிக்கை. (31-12-94 வரை) (ரூபாய் இலட்சத்தில்.) (4)	1994-95 வசூலிக்கப் பட்ட பரி-சோதனை கட்டணம். (5)	பயனடைந்த தொழிற் சாலை களின் எண் ணிக்கை. (6)
1. இரசாயனப் பரிசோதனை மற்றும் பகுப்-பாய்வுக் கூடம், சென்னை-32.	4436	8.37	3292	5.86	1315
2. மண்டல பரிசோதனைக் கூடம், மதுரை.	1890	2.8	1713	2.28	354

(1)	(2)	(3)	(4)	(5)	(6)
3. மண்டல பரிசோதனைக் கூடம், கோயம்புத்தூர்.	2019	2.17	1516	2.14	453
4. மண்டல பரிசோதனைக் கூடம், சேலம்.	1452	0.91	1189	0.83	635
5. மண்டல பரிசோதனைக் கூடம், தூத்துக்குடி.	914	0.91	630	0.57	511

16.2.3. அரசால் ஆணையிடப்பட்டுள்ளபடி, பரிசோதனைக் கட்டணம் வசூலிக்கப்படுகிறது. பதிவு செய்யப்பட்டுள்ள சிறு தொழில் நிலையங்களுக்கு 50 விழுக்காடு கட்டணச் சலுகை அளிக்கப்படுகிறது. இந்திய தர நிர்ணய நிறுவனத்திற்கு தரச் சான்றிதழ் திட்டத்தின் கீழ் கட்டணத்தில் 33 1/3 விழுக்காடு சலுகை அளிக்கப்படுகிறது.

16.3. மின் மற்றும் மின்னணு பிரிவு :

பொருள்களின் விற்பனையை அதிகரிப்பதில், தரக்கட்டுப்பாடு முக்கிய பங்கு வகிக்கிறது.

16.3.1. தரமான பொருள்களை உற்பத்தி செய்வதற்கு ஆர்வத்தை ஏற்படுத்தும் பொருட்டு, திருவள்ளூர்க்கு அருகில் காக்களூரில் மைய மின் ஆய்வுக்கூடத்தையும்; கோயம்புத்தூர் மற்றும் ஓசூரில் பொது வசதி சேவை மையங்களையும் மதுரையில் மின்னணுப் பொருள் ஆய்வுக்கூடத்தையும் அரசு அமைத்துள்ளது.

16.3.2. காக்களூரிலுள்ள மத்திய மின் ஆய்வுக் கூடத்தை, இந்திய தர நிர்ணய நிறுவனம், இரயில் துறை மற்றும் பொருள்கள் வழங்கல் மற்றும் விற்பனை பொது இயக்ககம் ஆகியவை பல்வேறு மின்சாரப் பொருள்களில் பரிசோதனைக்கு அங்கீகரித்துள்ளது. மின்சாரப் பொருட்களை வாங்குவதில் அரசுத் துறைகளுக்கு இம்மையம் ஆலோசகராகவும் செயல்படுகிறது.

16.3.3. இத்துறை, வீட்டு உபயோக மின் சாதனங்களின் தரக் கட்டுப்பாடு சம்பந்தமான மைய அரசின் கட்டுப்பாட்டு ஆணையை செயல்படுத்தி வருகிறது. இத்துறை, சென்னை, மதுரை மற்றும் கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் தரக்கட்டுப்பாட்டு ஆணையை செயல்படுத்துவதற்கு தரக்கட்டுப்பாட்டு மையங்களை அமைத்துள்ளது.

[1995 ஏப்ரல் 24

16.3.4. மின் பிரிவில் மாதிரிப் பொருட்கள் பரிசோதனை செய்ததின் வாயிலாக வசூலிக்கப்பட்ட வருமான விவரம் பின்வருமாறு:-

வ. எண்.	நோக்கம்.	1993-94		1994-95 (31-12-94 முடிய)	
		பரிசோதனை செய்யப்பட்ட மாதிரிப் பொருட்களின் எண்ணிக்கை.	வசூலிக்கப்-பட்ட பரிசோதனை கட்டணம். ரூ.	பரிசோதனை செய்யப்பட்ட மாதிரி பொருட்களின் எண்ணிக்கை.	வசூலிக்கப்பட்ட பரிசோதனைக் கட்டணம். ரூ.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
1.	மத்திய மின் ஆய்வுக்கூடம்	4688	1646685	3727	1523835
2.	மின்னணுப் பொருள் வளர்ச்சி மற்றும் பயிற்சி மையம், மதுரை	25	1175	25	1250
	மருத்துவக் கருவிகள் செப்பனிடுதல்	60	28065	159	36775
3.	பொது வசதி பணி மையம் ஓசூர்	1803	96170	607	79170
	மருத்துவக் கருவிகள் செப்பனிடுதல்	235	72083	1733	88000
4.	மின் மருத்துவக் கருவிகள் செப்பனிடு நிலையம், கிண்டி, செப்பனிட்ட கருவிகள்	3503	1153573	1652	687312
5.	மின் மருத்துவக் கருவிகள் செப்பனிடு நிலையம், தஞ்சாவூர், செப்பனிட்ட கருவிகள்	2275	804018	592	209515
6.	மின் மருத்துவக் கருவிகள் செப்பனிடு நிலையம், மதுரை, செப்பனிட்ட கருவிகள்	1029	373310	837	350215
7.	மின் மருத்துவக் கருவிகள் செப்பனிடு நிலையம், கோயமுத்தூர், செப்பனிட்ட கருவிகள்	1403	907975	387	249228

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1995 ஏப்ரல் 24]

16.4. ***பயிற்சி மையங்கள்:***

அ. அரசு தொழில் நுட்ப பயிற்சி நிலையம், கிண்டி, சென்னை-32.

16.4.1. சிறு தொழில் நிலையங்களில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்குத் தேவையான தொழில் நுட்பத் திறனை அளிக்கும் நோக்குடன், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில், கிண்டியில் அரசு தொழில் நுட்பப் பயிற்சி நிலையம் ஏற்படுத்தப்பட்டது. இந்த பயிற்சி நிலையம், அச்சுக் கருவி வடிவமைப்பில் பட்டயதாரர்களுக்கு சான்றிதழ் பயிற்சி அளித்து வருகிறது.

16.4.2. தொழில் நிலையங்களிடமிருந்து வருகிற தொழிலாளர்களுக்கு பயிற்சியளிப்பதற்கும் தற்போது வந்துள்ள நவீன தொழில் நுட்பவியலைக் கருத்தில் கொண்டும் அச்சு மற்றும் கருவி வடிவமைப்பியல் சான்றிதழ் பாடமுறையானது பட்டய மேற்படிப்புக்காக உயர்த்தப்பட்டது. இந்தப் பட்டய மேற்படிப்புக்கு இயந்திரப் பொறியியல் பட்டதாரிகள்/இயந்திரப் பொறியியல் தகுதிப் பட்டயதாரர்கள்/கருவிப் பொறியியல் தகுதிப் பட்டயம் பெற்றவர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டனர்.

16.4.3. அச்சு வடிவமைப்பு மற்றும் கருவிகள் தயாரிப்பு சான்றிதழ் பயிற்சியானது கருவி பொறியியல் தகுதிப் பட்டயமாகவும், குளிர்பதன இயல் சான்றிதழ் பயிற்சி தகுதிப் பட்டய பாடமுறையாகவும் உயர்த்தப்பட்டன. தகுதிப் பட்டய சான்றிதழ்கள் சென்னை-25, கிண்டியிலுள்ள மாநில தொழில் நுட்பக் கல்வி இயக்ககத்தினால் வழங்கப்படுகின்றன.

16.4.4. தென் மாநிலங்களிலேயே, வேலை வாய்ப்போடு கூடிய பாடமுறைகளில் பயிற்சி அளிக்கின்ற நிறுவனம் இந்நிறுவனம் என்றும் கூறலாம். இதுபோன்ற பாடப்பயிற்சிகள் தொழில் நுட்பக் கல்வி இயக்ககத்தின் கட்டுப்பாட்டின் கீழுள்ள அரசு தொழில் நுட்பப் பயிலகம் மற்றும் இதர அரசு உதவிபெற்ற தொழில் நுட்பப் பயிலகங்களிலும் இல்லை. பயிற்சி முடித்தவர்கள் வேலை வாய்ப்பு பெற சிரமப்படுவதில்லை. தொழிலதிபர்களால் ஒவ்வொரு ஆண்டும், இப்பயிற்சி நிலையத்தில் முகாமிட்டு நேர்முகப் போட்டியில் மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

16.4.5. மூன்றாண்டு தகுதிப் பட்டயப் பாடமுறைகளை உடைய ஒவ்வொரு வகைக்கும், ஒரு ஆண்டு பட்டய மேற்படிப்புக்கும் இதுவரை பயிற்சி பெற்றவர்கள் விவரம் கீழே தரப்பட்டுள்ளது:-

1. கருவி பொறியியல் தகுதிப் பட்டயம் .. ஒவ்வொரு தொகுதியிலும் 30 பேர் வீதம் 10 தொகுதிகளில் 300 பேர்.

2. அச்சு மற்றும் கருவிகள் பட்டய மேற்படிப்பு .. ஒவ்வொரு தொகுதியில் 10 பேர் வீதம் 19 தொகுதிகள் (மொத்தம் 190 பேர்).

ஆ. அரசு கருவிகள் பொறியியல் பயிற்சி நிலையம், திண்டுக்கல்.

16.4.6. கருவிகள் மற்றும் அச்சு வடிவமைப்பதில் சிறப்புப் பயிற்சி அளிக்கும் நோக்குடன், 1962 ஆம் ஆண்டில் இந்த நிலையம் துவக்கப்பட்டது. பள்ளி இறுதி வகுப்புத் தேறியவர்கள் மூன்றாண்டு சான்றிதழ் பாடமுறைக்கு சேர்த்துக் கொள்ளப்பட்டனர்.

16.4.7. அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல் முன்னேற்றத்தினைக் கருத்தில் கொண்டு, மாணவர்களுக்கு உயர்மட்ட அளவில் பயிற்சியளிப்பதற்கு அவசியம் ஏற்பட்டது. இதனை நிறைவேற்றும் பொருட்டு, 'கருவிப் பொறியியல் தகுதிப் பட்டய பாடமுறை' என்ற பாடமுறை 1981-ல் துவக்கப்பட்டது.

16.4.8. தொழில் நுட்பக் கல்வி இயக்குநரின் பரிந்துரைகளின்படி நுழைவுக்குரிய தகுதி, பள்ளி இறுதி வகுப்பு என மாற்றப்பட்டது. புதிய தகுதிப் பட்டய சான்றிதழ்கள் மாநில தொழில் நுட்பக் கல்வி இயக்ககத்தினால் வழங்கப்படுகின்றன. 10 தொகுதிகளில் 288 பேர் இதுவரை பயிற்சி பெற்றுள்ளனர். பயிற்சி பெற்ற அனைவரும் வேலை வாய்ப்பைப் பெற்றுள்ளனர். ஒருசிலருக்கு சிங்கப்பூரிலும் ஆஸ்திரேலியாவிலும் உள்ள கருவி அறைகளில் வேலை வாய்ப்பு பெறவும் முடிந்துள்ளது.

(இ) அரசு மட்பாண்டத் தொழில் நுட்பப் பயிற்சி நிலையம், விருத்தாசலம்.

16.4.9. விருத்தாசலத்திலுள்ள மட்பாண்டத் தொழில் நுட்பப் பயிற்சி நிலையம் மட்பாண்டத் தொழில் நுட்பவியலில் 1964 ஆம் ஆண்டிலிருந்து பயிற்சி அளித்து வருகிறது. இப் பயிற்சிக்கு தற்போது ஒவ்வொரு ஆண்டும் 30 மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். இதன் பயிற்சிக் காலம் 31/2 ஆண்டுகளாகும். பள்ளி இறுதி வகுப்பு (பத்தாம் வகுப்பு) தேறியவர்கள் இதில் பயிற்சி பெறத் தகுதியுடையவராவர். இதுவரை 520 பேர் பயிற்சி முடித்துள்ளனர்.

16.4.10. இது மாதிரியான பயிற்சி நிலையம் தமிழகத்தில் இது ஒன்றாகும். இந்நிலையத்தில் நன்கு அமைந்துள்ள ஆய்வுக்கூடத்தில்,

தொழிற்பேட்டை மற்றும் இதனைச் சுற்றியுள்ள மட்பாண்டத் தொழில் நிலையங்களிடமிருந்து பெறப்படுகின்ற மட்பாண்ட மூலப்பொருட்கள் மற்றும் மட்பாண்ட மூலப்பொருட்களின் பரிசோதனை மேற்கொள்ளப்படுகிறது.

(ஈ) அரசு அறிவியல் கண்ணாடி பயிற்சி நிலையம், கிண்டி, சென்னை-32.

16.4.11. இப்பயிற்சி நிலையம், அறிவியல் கண்ணாடிக் கருவிகளைத் தயாரிப்பதில் மாணவர்களுக்கு இரண்டு ஆண்டு கால பயிற்சி அளிக்கிறது. ஒவ்வொரு ஆண்டும் 25 மாணவர்கள் பயிற்சி பெறுகின்றனர். பயிற்சி பெறுபவர் ஒவ்வொருவருக்கும் மாதம் ஒன்றுக்கு ரூ. 120 உதவித் தொகையாக அளிக்கப்படுகிறது. இதுவரை 42 கட்டங்களில் 725 மாணவர்கள் பயிற்சியினை வெற்றிகரமாக முடித்துள்ளனர். 42வது கட்ட மாணவர்கள் 2-வது ஆண்டு பயிற்சி பெறுகின்றனர். 1994-95-ல் முதல் ஆண்டு பயிற்சியில் 25 மாணவர்கள் உள்ளனர். பயிற்சி முடிவுற்ற பின் மாணவர்கள் பல்வேறு அறிவியல் கண்ணாடி கருவிகள் தயாரிக்கும் தொழில் நிலையங்களில் சுலபமாக வேலை பெறுகின்றனர். ஒரு சிலர் அறிவியல் கண்ணாடி உபகரணங்கள் தயாரிப்பதற்கு சொந்தமாகவும் தொழில் நிலையங்களை அமைத்துள்ளனர்.

உ. அரசு அறிவியல் கண்ணாடிக் கருவிகள் உற்பத்தி மையம், கோயம்புத்தூர்.

16.4.12. இம்மையம், அறிவியல் கண்ணாடி உபகரணங்கள் தயாரிப்பதில் ஈடுபட்டுள்ளது. 1973-லிருந்து மாநிலம் முழுவதிலுமுள்ள கல்வி மற்றும் இதர நிறுவனங்களுக்கு அறிவியல் கண்ணாடி உபகரணங்கள் வழங்கி வருகிறது.

(ஊ) நவீன கருவிகள் பட்டறை மற்றும் பயிற்சி மையம், கோயம்புத்தூர்.

16.4.13. சிறு தொழில் முனைவர்களுக்குத் தேவைப்படும் நவீன கருவிகள் அச்சுகள், உபகரணங்கள், இயந்திரத் துணைக் கருவிகள் ஆகியவற்றை வடிவமைத்துக் கொடுக்க கோயம்புத்தூரில், ஜெர்மானிய நாட்டின் உதவியுடன் நவீன கருவிகள் பட்டறை மற்றும் பயிற்சி மையம் அமைப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மதிப்பு ரூ. 22.25 கோடியாகும். இதில் முதலீட்டு விபரம் பின்வருமாறு:-

வெளிநாட்டு அமைப்பு	..	ரூ. 12.31 கோடி
இந்திய அரசு	..	ரூ. 4.44 கோடி
தமிழக அரசு	..	ரூ. 5.50 கோடி

அயல்நாட்டு உதவி கிடைக்கப் பெறாதமையால், கோயம்புத்தூரில் நவீன கருவிகள் மற்றும் பயிற்சி மையத்தை, ரூ. 7.27 இலட்சம் மதிப்பில் எவ்வித அயல்நாட்டு உதவியின்றி அமைப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. கோயம்புத்தூரில் நிலம் கண்டறியப்பட்டுவருகிறது.

(எ) பம்புகள், மோட்டார் மற்றும் டீசல் இயந்திரங்களுக்குரிய செயல்முறை மற்றும் பொருள் உற்பத்தி மையம்:

16.4.14. இத்திட்டத்தை, ஐக்கிய நாடுகள் வளர்ச்சி திட்ட உதவியின் கீழ் கோயம்புத்தூரில் அமைப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. தொழில் நுட்பத்தின் மிக உயர்ந்த வடிவமைப்பு, மேம்படுத்தப்பட்ட தரம் மற்றும் சிறப்புப் பயன்கள் பெறுவதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

இத்திட்டத்தின் நிதி அமைப்பில் தமிழ்நாடு அரசு தேவையான நிலம் மற்றும் கட்டிடத்தை வழங்கி பங்கு கொள்ளும். ஐக்கிய நாடுகளின் வளர்ச்சித் திட்டம் தேவையான இயந்திர சாதனங்களையும் இந்திய அரசு இயந்திர சாதனங்களின் போக்குவரத்துச் செலவையும் தொடர் செலவினையும் சுங்க வரியினையும் அளிக்கும். தமிழ்நாடு அரசு ரூ. 1.20 கோடி ஒதுக்கியுள்ளது. இதில் கோயம்புத்தூர் குறிச்சி தொழிற்பேட்டையின் கையகப்படுத்தப்பட்ட நிலம் மற்றும் கட்டிடத்தினை ஒதுக்கியது உள்ளிட்டதாகும். இதன் மொத்த மதிப்பு ரூ. 15.30 கோடியாகும். இந்திய அரசு ரூ. 7.86 கோடி உதவியளிக்குமாறு ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்டத்தைக் கேட்டுக் கொண்டுள்ளது. இதில் இந்திய அரசின் பங்கு ரூ. 4.59 கோடியாகும்.

ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்ட உதவியுடன் இந்திய அரசு இத்திட்டத்திற்கு அனுமதி அளித்துள்ளது. இத்திட்டத்தின் திருத்தப்பட்ட மதிப்பு பின்வருமாறு:-

1.	ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்டத்தின் பங்கு	.. ரூ. 6.17 கோடி
2.	இந்திய அரசின் பங்கு	.. ரூ. 6.20 கோடி
3.	மாநில அரசின் பங்கு	.. ரூ. 1.20 கோடி
4.	சிறுதொழில் பரிசோதனை மற்றும் ஆராய்ச்சி மையத்தின் பங்கு (SITARC)	.. ரூ. 1.65 கோடி

கோயம்புத்தூரிலுள்ள சிறு தொழில்கள் பரிசோதனை மற்றும் ஆராய்ச்சி மையம், இத்திட்டத்தினை செயல்படுத்தி வருகிறது.

(ஏ) காட்-காம் உலோகப் பொருள் வடிக்கும் மையம், சென்னை.

16.4.15. இந்தியா மற்றும் இத்தாலி ஆகிய இரு நாடுகளுக்கிடையே 'தொழில் நுட்ப உறவு 1991 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் கையெழுத்தானது.

1995 ஏப்ரல் 24]

சென்னையில் கேட்-கேம் மையம் நிறுவுவதும் இதில் அடங்கும். இத்தாலி நாட்டிலிருந்து ஒரு தொழில் நுட்பவியல் குழு, ஆகஸ்டு '91ல் வருகை தந்து தமிழ்நாட்டிலுள்ள பல்வேறு தொழில் வளர்ச்சி அமைப்புகளுடன் பேச்சு வார்த்தைகள் நடத்தியது. உலோகத் தொழில்களுக்கு சென்னையில் கேட்-கேம் மையம் அமைப்பதற்கு போதுமான வாய்ப்பு இருப்பதை இக்குழு பாராட்டியுள்ளது. இம்மையம் அமைப்பது தொழில் நுட்ப ரீதியிலும் பொருளாதார ரீதியிலும் இயலும் என இக்குழு நம்பியுள்ளது. இத்திட்டத்தின் மதிப்பு ரூ.54.03 கோடியாகும். அதன் விவரம் பின்வருமாறு:-

	ரூ. கோடியில்
மாநில அரசின் பங்கு (நிலம் மற்றும் கட்டிடம் மதிப்பு) போன்ற அடிப்படை வசதிகள் உள்ளிட்டது.	13.57
இந்திய அரசின் பங்கு (சுங்க வரி)	12.50
இயந்திர சாதனங்களுக்குரிய இத்தாலிய அரசின் உதவி	25.78
தொழில் சங்கங்கள் ஏற்கும் தொடர் செலவினம் (உபயோகப்படுத்தும் தொழிற்சாலைகள்)	2.18
	54.03

தொடர் செலவினத்தை ஏற்றுக் கொள்வதாக தொழில் சங்கங்கள் விருப்பம் தெரிவித்துள்ளன. இத்திட்டத்தைச் செயல்படுத்துவதாக மாநில அரசு, ஏற்கனவே தொழில் துறையைச் சார்ந்த கிண்டியிலுள்ள தொழில் நுட்பப் பயிற்சி மையம், மற்றும் மின் மற்றும் மின்னணு செப்பனிடு நிலையத்தைச் சார்ந்த நிலங்களைக் கண்டறிந்துள்ளது. இந்திய மற்றும் இத்தாலிய அரசுகளின் அலுவலர்கள் இந்த இடத்தைப் பார்வையிட்டு, இத்திட்டத்திற்குத் தகுந்தது எனத் தெரிவித்துள்ளனர். இத்திட்டத்தின் மீதான இத்தாலிய அரசின் கருத்துரைகள் இன்னும் வரவேண்டியுள்ளன என்று இந்திய அரசின் நிதி அமைச்சகத்தில் பொருளாதார பிரிவு தெரிவித்துள்ளது.

16.5. தகவல்கள் வழங்குவது:

அ. தொழில் நுட்பத் தகவல் நூலகங்கள்:

16.5.1. எந்த ஒரு தொழிலை அமைப்பதற்கும், அது வளர்ச்சியடைவதற்கும் தொழிலதிபர்கள், தொழில் முனைவர்கள் மற்றும் இதர தொழில் நுட்பப் பணியாளர்களுக்கு பல்வேறு தகவல்கள்

தேவைப்படுகின்றன. இவர்கள் அனைவருக்கும் தகவலை அளிப்பதில் கிண்டியிலுள்ள தொழில் நுட்பத் தகவல் மையம் முக்கிய பங்கினை வகிக்கிறது. அறிவியல் சார்ந்த தொழில் நுட்ப நூல்கள், தொழிலியல் செய்தி இதழ்கள், இந்திய மற்றும் மாநில அரசுகளின் கொள்கைகளை விவரிக்கின்ற செய்தி இதழ்கள், பல்வேறு சிறு தொழில்கள் சம்பந்தப்பட்ட இந்திய தர நிர்ணய குறியீடுகள், திட்டத் தொகுப்புகள் மற்றும் பல தகவல் குறிப்புகள் ஆகியவை தொடர்ந்து வாங்கப்பட்டு அவைகள் இந்நூலகத்திற்கு வரும் வாசகர்களுக்கு கிடைக்க வகைப்படுத்தப்பட்டு வைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு ஆண்டும், அறிவியல், பொறியியல், தொழில் நுட்பவியல், மேலாண்மை ஆகியவற்றில் வெளிவரும் புதிய நூல்கள் வாங்கப்படுகின்றன.

16.5.2. நூலகத்தை பயன்படுத்துபவர்களுக்கு உடனடித் தொழில் நுட்பத் தகவல் வசதிகளும் தொடர்ந்து குறிப்பு வசதிகளும் அளிக்கப்படுகிறது. தொழில்நுட்ப நூல்கள் மற்றும் சஞ்சிகைகளிலிருந்து அறிவியல் மற்றும் தொழில் நுட்பத் தகவல்களை நாடி வருபவர்களின் குறிப்புக்கென பராமரிக்கப்பட்டு வருகிறது. வாசகர்களுக்கு நகல் எடுத்துத் தரும் வசதியும் அளிக்கப்படுகிறது. தங்களால் சொந்தத்தில் இது போன்ற வசதிகளைப் பெற முடியாத ஒவ்வொரு தொழிலதிபர், தொழில் முனைவர்கள் போன்றோருக்கு இந்த நூலகமானது அவர்களுக்கென அமைந்த ஒரு நூல் நிலையமாக செயல்படுகிறது.

16.5.3. தொழில் நுட்பப் பணியாளர்களுக்கென தொழில் நுட்பங்கள் பற்றிய திரைப்படங்களைத் திரையிடுவதற்கும், தொழில் நுட்பப் பணியாளர்கட்கு கூட்டங்கள் மற்றும் செய்முறை விளக்கங்கள் அளிப்பதற்கும் அனைத்து வசதிகளுடன் கூடிய ஒரு நல்ல திரையரங்கம் உள்ளது. இத்துறை சம்பந்தப்பட்ட பல்வேறு அறிக்கைகள், மற்றும் திட்டங்கள் பற்றிய அனைத்து மொழி பெயர்ப்புகள் இம்மையத்தின் மொழி பெயர்ப்புப் பிரிவில் தமிழிலிருந்து ஆங்கிலத்திலும், ஆங்கிலத்திலிருந்து தமிழிலும் மொழி பெயர்த்து அனுப்பப்படுகிறது. வீடியோ, கேசட்டுகள் மூலம் படக் காட்சிகள் காண்பிப்பதற்காக ரூ. 2.30 இலட்சம் மதிப்பில் வீடியோஸ்கோப் கருவிகளும் உள்ளன.

16.5.4. இது போன்ற தொழில் நுட்பத் தகவலகங்கள், அம்பத்தூர், மதுரை, பேட்டை, காட்பாடி, திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர் மற்றும் சேலம் ஆகிய இடங்களில் செயல்பட்டு வருகின்றன. இவற்றின் பணிகள் கிண்டியிலுள்ள தொழில் நுட்பத் தகவல் மையத்தினால் மேற்பார்வை செய்யப்பட்டு வருகிறது. இந்த நூலகங்களோடு கூடிய தகவலகங்கள் அமைத்துள்ள இடங்கள் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதியில் உள்ள தொழில் முனைவர்களுக்கு தகவல் வசதியினை அளித்து வருகிறது. வாசகர்கள், தொழில் முனைவர்களுக்கு மற்றும் தொழிலதிபர்கள்

1995 ஏப்ரல் 24]

ஆகியோரின் நலனுக்கென கோயம்புத்தூர் மற்றும் மதுரை ஆகிய இடங்களில் உள்ள தொழில் நுட்ப தகவலகங்கள் ஒவ்வொன்றிலும் ரூ. 3.10 இலட்சம் மதிப்பில் நகலெடுக்கும் இயந்திரங்கள் உள்ளன.

(ஆ) தகவல் வங்கிகள்:

16.5.5. திருவான்மியூரில், டாக்டர் விக்ரம் சாராபாய் மின் நுண் கருவிகள் தொழிற்பேட்டையில் மின்னணுத் தகவல் வங்கியும், கிண்டி, தொழிற்பேட்டையில் இரசாயனத் தொழில் தகவல் வங்கியும் செயல்பட்டு வருகின்றன. மின்னணுத் தகவல் வங்கியில் 1301 தொழில் நுட்ப நூல்களும், 80 இந்திய மற்றும் வெளிநாட்டு சஞ்சிகைகளும் உள்ளன. தகவல்களை சேமித்து வைக்கும் கம்ப்யூட்டரும் இம்மையத்தில் உள்ளது.

16.5.6. இம்மையம் தேர்ந்தெடுக்கப்பட்ட தொழில்களில் திட்டத் தொகுப்புகளைத் தயாரிக்கிறது. மாநிலத்திலுள்ள மின்னணுத் தொழில் நிலையங்கள் அடங்கிய டைரக்டரியினை வாங்குவோர் மற்றும் விற்போர் பற்றிய தகவல்கள் அறிய தொழில் முனைவர்களின் உபயோகத்திற்கு வெளியிடப்பட்டுள்ளது. தொழிலதிபர்களின் உபயோகத்திற்கு வழிகாட்டிப் புத்தகம் ஒன்றும் தயாரிக்கப்பட்டுள்ளது.

இரசாயனத் தொழில் தகவல் வங்கி:

16.5.7. மாநிலத்தில் இரசாயனத் தொழில் சம்பந்தப்பட்ட விவரங்களை சேகரித்து, பேணுவதற்கென இரசாயனப் பிரிவில், இந்த இரசாயனத் தொழில் தகவல் வங்கி செயல்பட்டு வருகிறது. அடிப்படைப் புள்ளி விவரங்களைச் சேகரிப்பது மட்டுமின்றி, மாநிலத்தின் சிறு தொழில் பிரிவில் இரசாயனம் மற்றும் அதைச் சார்ந்த தொழில்களை அமைக்க முன்வருவோருக்கு திட்டத் தொகுப்புகளையும் அளித்து வருகிறது. மேலும் சிறு தொழில் துறையில் இரசாயனம் மற்றும் அதனைச் சார்ந்த தொழில்களை அமைக்க முன்வருகின்ற ஆர்வமுள்ளவர்களுக்கு தொழில் நுட்ப மற்றும் தொழில் தகவல்கள் வழங்கப்படுகிறது. சேகரிக்கப்பட்ட புள்ளி விவரங்களும், திட்ட தொகுப்புகளும், அவ்வப்போது தொடர்ந்து புதுப்பிக்கப்பட்டும் வருகிறது. சேகரிக்கப்பட்ட புள்ளி விவரங்கள் மாவட்ட தொழில் மையங்கள், அரசு நிறுவனங்கள் மற்றும் துறையின் உபயோகத்திற்கு உபயோகப்படுத்தப்பட்டு வருகிறது.

16.6 நவீனமயமாக்க உதவி:

16.6.1. சிறு தொழில் கூடங்கள் எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகளில் தொழில் நுட்பவியல் மேம்பாடும் ஒன்றாகும். வழக்கொழிந்த தொழில் நுட்ப முறையினை பின்பற்றி வருவதால் குறைவான உற்பத்தி திறனையும் தரக்குறைவினையும் சந்திக்கும் தொழிற்கூடங்கள் நாளடைவில் உள்நாட்டு

மற்றும் வெளிநாட்டு சந்தைகளில் தகுதியற்றதாய் இறுதியில் நலிவுற்றதாகி விடுகின்றன். தொழிற்கூடங்கள் தங்கள் தொழில் நுட்பத் திறனை நவீனப் படுத்த உதவும் பொருட்டு *1985* ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களில் தொழில் வணிக இயக்ககத்தில் தொழில் நவீனமயமாக்கும் பிரிவு அமைக்கப்பட்டது. தமிழ்நாட்டில் தொழிற்கூடங்கள் நவீனமயமாக்குவதை ஊக்குவிக்கும் பொருட்டு கீழ்க்கண்ட நடவடிக்கைகளை இப்பிரிவு மேற்கொண்டு வருகிறது.

உள் ஆலை ஆய்வு:

16.6.2. ஒவ்வொரு சிறு தொழில் நிலையத்திலும் உள்ள தொழில் நுட்பவியல் இடைவெளியைக் கண்டறிந்து, அவைகளை நவீனமயமாக்கிட தொழில் நவீனமயமாக்கும் பிரிவு ஒவ்வொரு தொழில் நிலையத்திலும் ஆய்வுகளை நடத்துகிறது. அவ்வாறு செய்யப்படும் ஆய்வுகளின் அடிப்படையில் நவீன மயமாக்கப்படும் திட்டமொன்று, பரிந்துரைக்கப்பட்டு, தொழில் நுட்ப பொருளாதார ஆய்வு அறிக்கை தரப்படுகின்றது. இந்திய சிறு தொழில் வளர்ச்சி வங்கியின் மறு நிதியுதவி திட்டத்தின் கீழ் சிறு தொழில் நிலையங்களை நவீனமயமாக்குவதற்கு மறு நிதியுதவி அளிப்பதற்காக இந்த அறிக்கை நிதி நிறுவனங்களுக்கும் வர்த்தக வங்கிகளுக்கும் அனுப்பப்படுகின்றன. சென்னையிலுள்ள சிறு தொழில் சேவை நிலையம் மற்றும் தமிழ்நாடு தொழில் நுட்ப ஆலோசனைக் கழகம் ஆகியவற்றின் உதவியுடன் நடத்தப்படும் இந்த ஆய்வுகளின் தொடர் நடவடிக்கை ஒவ்வொரு தொழில் நிலையத்துடனும் நடத்தப்படுகிறது. திட்டத்தினை செயல்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

16.6.3. பல்வேறு தொழில்களின் தொழில் நுட்ப முறையினை மேம்படுத்தும் வாய்ப்புகள் குறித்து விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தும் பொருட்டு, கூட்டு தொடர்பு திட்டங்கள் மிகவும் பயனுள்ளதாக இருப்பதை அறியமுடிந்தது. எனவே, இந்த நவீனமயமாக்கும் பிரிவு சென்னையிலுள்ள சிறு தொழில் சேவை நிலையம் மற்றும் தொழில் நுட்ப ஆலோசனைக் கழகம் ஆகியவற்றின் உதவியுடன் கூட்டு தொடர்பு கூட்டங்களை நடத்துவது/கலந்து கொள்வது ஆகியவற்றில் ஈடுபட்டுள்ளது. புதிய தொழில் நுட்பங்கள், ஆராய்ச்சி நிலையங்கள் மற்றும் மைய ஆய்வகங்கள் ஆகியவற்றினால் மேம்படுத்தப்பட்ட தொழில் நுட்ப செயல் முறைகளும், தொழில் வணிக இயக்ககத்தினால் அமைக்கப்பட்டு தொழிலியல் தகவல் உள்ளிட்ட பல்வேறு அம்சங்கள் இக்கருத்தரங்குகளில் இடம் பெற்றுள்ளன.

16.6.4. கூட்டு தொடர்பு திட்டங்களை அமைப்பது/ குழுவாக பங்கு பெறுவது தவிர, இந்தப் பிரிவு, உதவி வேண்டும் தொழில் முனைவருக்கு

முறையாக கருத்துரை வழங்குகிறது. பொருள் உற்பத்தி, பொருளின் தரம், ஆற்றல் திறன் போன்றவைகளை மேம்படுத்துவதற்குண்டான பரிந்துரைகளை தொழில் முனைவர்களுக்கு, நன்கு செயல்படுகின்ற வகையில் இப்பிரிவினால் அளிக்கப்படுகின்றன. பலவிதமான முகவர் அமைப்புகளிடமிருந்து கிடைக்கும் தொழில் நுட்ப அறிவு பற்றிய வழிமுறைகள் ஒவ்வொரு தொழில் முனைவருக்கும் அளிக்கப்படுகிறது.

16.7. மட்பாண்டம் மற்றும் உப்பு தொழில் அபிவிருத்திக்கான திட்டங்கள்:

16.7.1. விருத்தாசலத்திலுள்ள மட்பாண்டத் தொழில் சேவை மையம் 1-4-1988 முதல் தமிழ்நாடு மட்பாண்டத் தொழில் நிறுவனத்திடமிருந்து தொழில் வணிகத் துறைக்கு மாற்றப்பட்டது. விருத்தாசலத்தைச் சுற்றியுள்ள 100 சிறிய மட்பாண்ட பொருட்கள் உற்பத்தி நிலையங்களுக்கு தேவைப்படும் பாடி சிலிப்-பை (body slip) இம்மையம் தயாரிக்கிறது. சராசரியாக மாதம் ஒன்றுக்கு சுமார் 120 மெட்ரிக் டன் உள்ள பாடி சிலிப்பை இம்மையம் உற்பத்தி செய்து அவற்றை அனைத்து மட்பாண்டத் தொழில் நிலையங்களுக்கும் வழங்குகின்றது. உலைக்கணல் (Turnnel kiln) மூலமாக வெப்பப்படுத்தும் வசதிகளை நாள் முழுவதும் இம்மையம் அளித்து வருகிறது. இதன் மூலம் விருத்தாசலம் மற்றும் அதன் சுற்றுப்புறங்களிலும் உள்ள மட்பாண்டத் தொழில்கள், மட்பாண்டப் பொருட்கள் தயாரிப்பதற்குரிய மூலப் பொருட்களையும் உலைக்கணல் வெப்பமூட்டும் வசதிகளையும் பெறுகின்றன. இத்தொழில்பேட்டையின் குறைந்த மின்னழுத்த "இன்சுலேட்டர்கள்" கலைவண்ணமுடைய பொருட்கள், பீங்கான் பொருட்கள் மற்றும், மட்பாண்டப் பொருட்கள் ஆகியவை தயாரிக்கப்படுகின்றன.

16.8. தொழிலியல் சேவைப் பிரிவு:-

16.8.1. மாநிலத்தில், நடுத்தர மற்றும் பெருரகத் தொழில் துறைகளில் புதிய தொழில்களை அமைப்பதற்கு தொழில் முனைவர்களுக்கு பல்வேறு நிலைகளில் உதவிடும் பொருட்டு, தொழிலியல் சேவைப் பிரிவினை தொழில் வணிக இயக்ககத்தில் அரசு அமைத்துள்ளது.

16.8.2. திருத்தப்பட்ட தொழில் கொள்கையின்படி, தொழில் நிலையங்கள் புதிய தொழில் திட்டங்களை அமைக்க விரும்பினாலும், அல்லது ஏற்கனவே உள்ள திட்டங்களை விரிவாக்குவதற்கு உரிமங்கள் பெறத் தேவையில்லாவிட்டாலோ அல்லது திருத்திய தொழில் கொள்கையின்படி விலக்கு பெற்றுள்ள தொழில்களாயிருந்தாலோ அவை மைய அரசின் தொழிலியல் ஒப்புதலுக்கான தலைமைச் செயலகத்தில்

மனு தாக்கல் செய்து எண் பெற வேண்டும். இவ்வாறு தொழில் முனைவர்களால் தரப்பட்ட குறிப்புக்கடிதங்கள் இந்த இயக்ககத்திற்கு பரிசீலனைக்காக அனுப்பப்படுகின்றன.

16.8.3. தொழில் முனைவர்களால் அனுப்பப்பட்ட தொழிலியல் அறிக்கையின் செயல்பாட்டின் மேற்பார்வைப்பணி இந்த இயக்ககத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இத்திட்டங்களின் செயல்பாட்டினைக் காட்டும் முன்னேற்ற அறிக்கை தொழில் துறையின் முதன்மை செயலர் மூலமாக இந்திய அரசுக்கு ஒவ்வொரு காலாண்டிற்கு அனுப்பப்படுகிறது.

16.8.4. இவ்வியக்ககத்தினால் பரிசீலனை செய்யப்பட்ட இனங்களின் ஆண்டுவாரியான விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

ஆண்டு (1)	தொழிலியல் உரிமங்கள்/ 100% ஏற்றுமதி செய்யும் தொழிற் கூடங்கள் (2)	பெறப்பட்ட விண்ணப்பங்கள் மற்றும் பரிந்துரைக்கப்பட்டவை. (3)
1991	*207*	*101*
1992	*166*	*373*
1993	*134*	*344*
1994 (31-12-1994 முடிய)	*141*	*497*

16.9. மின் மருத்துவக் கருவி மையங்கள்:

16.9.1. இத்துறை, மின் மருத்துவக் கருவிகள் செப்பனிடு நிலையங்களை கிண்டி, மதுரை, தஞ்சாவூர் மற்றும் கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் நடத்தி வருகிறது. இந்நிலையங்கள் மருத்துவ மனைகள், ஆரம்ப சுகாதார மையங்கள் மற்றும் இதர அரசு மருத்துவ நிலையங்கள் முதலியவற்றின் மருத்துவ கருவிகளை பழுது பார்த்து செப்பனிடும் பணியினை மேற்கொள்ளுகிறது.

16.10. தொழில்களுக்கு மாநில அரசின் பரிசுகள்:

16.10.1. சிறிய நடுத்தர மற்றும் பெரு ரகத் தொழில் துறைகளின் கீழ், செயல்படும் திறமை வாய்ந்த தொழில் நிலையங்களுக்கு ஒவ்வொரு ஆண்டும் பரிசுகள் வழங்குவதற்கு பின்வருகின்ற திட்டங்களை அரசு அறிவித்துள்ளது.

1995 ஏப்ரல் 24]

அ. சிறு தொழில்களுக்கு மாநில மற்றும் மாவட்ட அளவிலான பரிசுகள்:

16.10.2. இதன்படி மாநில அளவிலான பரிசுக்கு ரூ. 10,000/- ரொக்கப் பரிசும், ரூ.3,000/- மதிப்புள்ள கேடயமும் வழங்கப்படும். மாவட்ட அளவிலான பரிசுக்கு சான்றிதழுடன் ரூ. 3,000/- மதிப்புள்ள நினைவு கேடயமும் வழங்கப்படும்.

ஆ. மகளிர் தொழில் முனைவர்களுக்கு மாநில அளவிலான பரிசுகள்:

16.10.3.. இத்திட்டத்தின் கீழ் திறம்பட செயலாற்றிய மகளிர் தொழில் முனைவர்களுக்கு முதல் பரிசாக ரூ. 25,000 ரொக்கப் பரிசும், ரூ. 3,000 மதிப்புள்ள கேடயமும் நற்சான்றிதழும் அளிக்கப்படுகிறது. இரண்டாவது, மூன்றாவது பரிசுகளாக முறையே ரூ. 15,000/- ரூ. 10,000/- ரொக்கத் தொகையுடன் கூடிய ரூ. 3,000/- மதிப்புள்ள கேடயமும் நற்சான்றிதழும் அளிக்கப்படுகின்றன.

இ. தரமிக்க பொருள்களுக்குரிய பரிசுகள்:

16.10.4. பெரிய நடுத்தர மற்றும் சிறு தொழில் துறையின் கீழ் வருகின்ற திறமை வாய்ந்த தொழில் முனைவர்களுக்கு முதல் பரிசு ரூ. 25,000–மும், இரண்டாவது பரிசு ரூ. 15,000-மும் மூன்றாவது பரிசு ரூ. 10,000-மும் , ரூ.3,000 மதிப்புள்ள கேடயமும், நற்சான்றிதழும் அளிக்கப்படும்.

ஈ. பின்வருகின்ற மூன்று வகையைச் சார்ந்த சிறப்பான தொழில் முனைவர்களுக்கான ஏற்றுமதிக்குரிய பரிசுகள்:

1. 100 விழுக்காடு ஏற்றுமதிக்கான பொருள்கள் தயாரிப்பில் ஈடுபட்டுள்ள தொழில் நிலையங்கள்.

2. புதிய உற்பத்திப் பொருள்களை புதிய சந்தைகளில் விற்பனை செய்தல் மற்றும் ஏற்றுமதியில் கணிசமான முன்னேற்றம் காண்பிக்கும் தொழில் நிலையம்.

3. முந்தைய இரண்டு ஆண்டுகளுக்குள் ஏற்றுமதியை துவங்கயிருக்கும் ஒரு தொழில் நிலையம்.

16.10.5. பெரிய, நடுத்தர மற்றும் சிறுரகத் துறையைச் சார்ந்த தேர்வு செய்யப்பட்ட ஒவ்வொரு ஏற்றுமதியாளருக்கும் ரூ. 4,000 மதிப்புள்ள கேடயமும் ஒரு சான்றிதழும் அளிக்கப்படும்.

16.11. கட்டுமானப் பிரிவு:

இந்த இயக்ககத்தில் இணைக்கப்பட்டுள்ள கட்டுமானப் பிரிவு, சென்னை மற்றும் சேலம் ஆகிய இரண்டு மண்டலங்களைக் கொண்டு விளங்குகிறது. இப்பிரிவு, துறையின் கட்டுமானம் மற்றும் மின்சாரம் போன்ற பணிகளை கவனித்து வருகிறது. மேலும் தொழிற்பேட்டைகள் மற்றும் செப்பனிட்ட மனைகள் ஆகியவற்றிற்கு அத்தியாவசிய அடிப்படை வசதிகளை வழங்கும் பணியையும் இப்பிரிவு மேற்கொள்கிறது. இப்பிரிவு, வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சி மற்றும் புவியியல் மற்றும் சுரங்கவியல் துறைகள் தமிழ்நாடு உப்புத் தொழில் நிறுவனம் மற்றும் தமிழ்நாடு கோழிவளர்ப்பு நிறுவனம் ஆகிய நிறுவனங்களின் கட்டுமானப்பணியையும் கவனித்து வருகிறது.

17. ஒட்டு மொத்தமாக பார்க்குங்கால், கடந்த கால அனுபவத்தின் அடிப்படையில் உருவாகி, எதிர்கால ஏற்றத்தினைக் கருத்தில் கொண்டு நிறைவேற்றப்படும் இந்த அரசின் தொழில் கொள்கை, தொழில் மேம்பாட்டில் உன்னத நிலையை அடைய வழிவகுக்கும், போற்றத்தக்க சாதனைகளை நிகழ்த்தும் பொருட்டு, புதிய திட்டங்களை இந்த அரசு தொடர்ந்து நிறைவேற்றிவரும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு II

(49 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

கொள்கை விளக்கம்

தொழில்கள்

1995 - 96

உலக அளவில் பொருளாதார, தொழில்துறை நிலைமைகளில் ஏற்பட்ட அடிப்படை மாற்றங்களைத் தொடர்ந்து, 1992 ஜனவரியில் மாண்புமிகு முதல்வர் புதிய தொழிற்கொள்கையினை அறிவித்தார்கள். அப்புதிய கொள்கையின் பயனாக மாநிலத்தில் விரைவான தொழில் மயமாக்கம் நடைபெற்று இதன் காரணமாக, வேலைவாய்ப்பும் பெருகியது. அடிப்படை வசதிகளைச் செய்து கொடுத்தும், உரிய ஊக்கச் சலுகைகளை அளித்தும், இம்மாநிலத்தில் தொழில்களை ஊக்குவிப்பது மற்றும் தொழிலதிபர்களை இம்மாநிலத்திற்கு கவர்ந்திழுக்கும் அமைப்புடன் தொழில் முன்னேற்றத்திற்கு அரசு உதவுவதும் இக்கொள்கையின் பிரதான நோக்கமாகும்.

தாராளமயமாக்கப்பட்ட இச்சூழ்நிலையில், அரசு அதன் சுதந்திரம் அதிகரித்துள்ளதை உணர்ந்துள்ளது; எனவே, மாநிலத்தில் தொழில் வளர்ச்சியையும், மேம்பாட்டினையும் ஊக்குவிக்கும் பெரும் பொறுப்பினை அது சுமக்க வேண்டியுள்ளது. பெரும் விற்பனை வாய்ப்பினை ஏற்படுத்த வேண்டிய அவசியத்தையும், ஏனைய தொழில்மயமாக்கப்பட்டுள்ள மாநிலங்களுடன் போட்டியிட்டு முதலீடுகளை இம்மாநிலத்திற்கு ஈர்க்க வேண்டியதன் தேவையையும் அது உணர்ந்துள்ளது. தொழிற்கொள்கை, அடிப்படை வசதி மேம்பாடு, நடைமுறைகளை எளிமையாக்குதல், தொழில் மேம்பாடு ஊக்கச் சலுகைகள் ஆகிய ஐந்து முக்கிய அம்சங்களில் கவனம் செலுத்தியதன் பயனாக மாநிலத்தின் தொழில் நிலைமையில் கணிசமான முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. இதன் உண்மையான தாக்கத்தை மிக விரைவில் காணலாம்.

பெருந்தொழில் திட்டத்திற்கு ஒரிடத்திலேயே அனைத்து நடைமுறை வசதிகளையும் செய்து கொடுக்க வேண்டியதன் தேவையை உணர்ந்து, 1995 ஆம் ஆண்டு ஜனவரியில் இந்த அரசு, உயர் அதிகாரக்குழு ஒன்றை நியமித்துள்ளது. இதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைவராவார். இக்குழு ரூ. 50 கோடிக்கு மேற்பட்ட திட்டச் செலவுடைய திட்டங்களுக்கு அனைத்து ஒப்புதல்களையும் வழங்கும்.

தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் (டிட்கோ) :

தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம், இதுவரையில் கூட்டு/இணைத் துறையில் 79 திட்டங்களை உருவாக்கியுள்ளது. இவற்றில் 4 துணை நிறுவனங்கள் உட்பட 36 தொழில் பிரிவுகள் வணிக ரீதியில் உற்பத்தியைத் தொடங்கியுள்ளன. 1994-95 ஆம் ஆண்டில் டிட்கோவின் முதலீட்டுப் பங்காக, ரூ. 40.27 கோடியோடு மொத்தம் ரூ. 1742.19 கோடி திட்டச் செலவில் கூட்டு/இணைத் துறையில் 18 புதிய திட்டங்களுக்கு அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. இத்திட்டங்கள் நன்கு பிரபலமான தொழில் நிறுவனங்களால் உருவாக்கப்பட்டுள்ளன. இதில் பிரபலமான தொழில் முனைவர்களான விம்கோ லிமிடெட், பென்னர் குரூப், நேஷனல் பிளைவுட் இந்தியா லிமிடெட், பேக்லைட் ஹைலம் லிமிடெட் போன்ற வெளி மாநிலங்களைச் சேர்ந்த தொழில் முனைவோர் உருவாக்கிய 8 திட்டங்களும் அடங்கும். நடப்பு ஆண்டில், அரசு ஏற்கெனவே ஒப்பளித்த 3 திட்டங்களைத் தொடங்கியுள்ளது.

1994-95 ஆம் ஆண்டில், டிட்கோ, திருவாளர் உஸ்தாத்-தீ-பயோடெக் இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட் என்ற கூட்டுத்துறை நிறுவனத்தில் முதலீடு செய்திருந்த அதன் பங்குகளை திரும்பப் பெற்றுள்ளது. தனியார் முதலீட்டினைப் பெறவும், புத்துயிரளிக்கவும், வளர்ச்சி, நவீனமயமாக்குதலை ஊக்குவிக்கவும், டிட்கோவில் பின்வரும் 4 துணை நிறுவனங்களைத் தனியார் மயமாக்குவதென அரசு தீர்மானித்துள்ளது:-

1. தமிழ்நாடு ஸ்டீல்ஸ் லிமிடெட்.
2. தமிழ்நாடு மக்னீசியம்-மரைன் கெமிக்கல்ஸ் லிமிடெட்.
3. தமிழ்நாடு சிமிண்ட்ஸ் நிறுவனம்.
4. தமிழ்நாடு தொழிற்சாலை வெடி மருந்துகள் நிறுவனம்.

தமிழ்நாடு எஃகு நிறுவனத்தையும், தமிழ்நாடு மக்னீசியம்-மரைன் கெமிக்கல் நிறுவனத்தையும், தனியார்மயமாக்கவும், தமிழ்நாடு சிமிண்ட்ஸ் நிறுவனத்தை இணைத்துறை நிறுவனமாக (Associate Sector) மாற்றவும் செயற்குறிப்புகளை அரசு பரிசீலனை செய்து வருகின்றது; மதிப்பீட்டாய்வு செய்து, அதற்கு எதிராக ரிட் மனுக்கள் மீது தீர்ப்பு அளிக்கப்பட்ட பின்னர் தனியார்மயமாக்கும் இந்நடவடிக்கை முடிவடையும். தொழில் நிதி மறு சீரமைப்புக் கழகத்திற்கு அனுப்பப்பட்டுள்ள, தமிழ்நாடு தொழிற்சாலை வெடிமருந்துகள் நிறுவனத்திற்கான புத்துயிர் அளிக்கும் திட்டம், பல்வேறு நிதி நிறுவனங்கள்/வங்கிகள் மற்றும் தனியாரின் பரிசீலனையில் உள்ளது; தொழில் நிதி மறு சீரமைப்புக் கழகத்தின் ஒப்புதலுடன் முதலீட்டைத் திரும்பப் பெறுவதற்கான நடைமுறை மேற்கொள்ளப்பட வேண்டும்.

1995 ஏப்ரல் 24]

'டிட்கோ' தமிழ்நாட்டில் புதிய தனியார் துறைகளில் முதலீடுகள் செய்வதில் அதிக கவனம் செலுத்தும் பொருட்டு, இந்த நான்கு துணை நிறுவனங்களையும் தன் பொறுப்பில் எடுத்துக்கொள்வதென அரசு கொள்கை முடிவொன்றை அண்மையில் எடுத்துள்ளது. இந்நோக்கத்திற்காக, தமிழ்நாடு சிமிண்ட்ஸ் நிறுவனம் மற்றும் தமிழ்நாடு எஃகு நிறுவனத்தின் பங்குகள் ஏற்கெனவே அரசுக்கு மாற்றப்பட்டு உள்ளன. தமிழ்நாடு மக்னீசியம்-மரைன் கெமிக்கல்ஸ் லிமிடெட் மற்றும் தமிழ்நாடு தொழிற்சாலை வெடிமருந்துகள் நிறுவனம் ஆகியவற்றைப் பொறுத்தமட்டில், அதற்கான நடைமுறை இறுதி நிலையில் உள்ளது; நிதி நிறுவனங்கள்/தொழில் நிதி மறு சீரமைப்புக் கழகத்தின் ஒப்புதல் எதிர்பார்க்கப்படுகிறது.

ஜெயங்கொண்டம் பழுப்பு நிலக்கரி மின் நிறுவனத்தின் 1,500 மெ.வா. ஒருங்கிணைந்த சுரங்க மின் திட்டத்தைப் பொறுத்த மட்டில், தொழில் நுட்ப பொருளாதார சாத்தியக் கூறு நிரூபிக்கப்பட்டுள்ளது. திட்ட மதிப்பீட்டின்படி திட்டச்செலவு சுமார் 18,000 கோடி ரூபாயாக இருப்பதால் நிதி சாத்தியக்கூறு குறித்து நிதி ஆலோசகர்கள் சில பிரச்சினைகளை எழுப்பியுள்ளனர். திட்டத்திற்கு எளிதாக நிதி கிடைக்கச் செய்ய, ஒப்பந்த அடிப்படையில் சுரங்கப் பணியை விடுவதற்கான வாய்ப்பு குறித்து ஆய்வு செய்யப்படுகின்றது.

இதுவரையில், உற்பத்தித் துறையில் தொழில்களை மேம்படுத்துவதில் டிட்கோ ஈடுபட்டு வந்தது. தற்போது அது பணித்துறைகளிலும் அதன் நடவடிக்கையினைத் தொடங்கி உள்ளது. இதன் தொடக்கமாக நிதிப்பணிகள் துறையில் பரஸ்பர நிதித் திட்டத்தைச் செயல்படுத்தியுள்ளது. இதனை ரூ. 20 கோடி செலவில் கூட்டுத்துறைத் திட்டமாக செயல்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

'டிட்கோ' விடம் பாராட்டுதற்குறிய குறித்த கால வைப்புத் தொகைத் திட்டமும் உள்ளது. டிட்கோ வெளிக்கடன் வீத அறுதிப்பாடு முகவரமைப்புகளை வீத அறுதிப்பாட்டிற்காக அணுகுகின்றது. இது குறித்து பன்னாட்டுக் கடன் வீத அறுதிப்பாடு முகவரமைப்புடனான (I.C.R.A.) பேச்சு வார்த்தைகள் முன்னேறிய நிலையிலுள்ளது. சி.ஆர்.ஐ.எஸ்.ஐ.எல். நிறுவனமும் அணுகப்பட்டு வருகிறது.

1991-92 ஆம் ஆண்டிலிருந்து டிட்கோ ஆதாயப் பங்குத் தொகை அறிவித்து வருகிறது.

சென்னையிலிருந்து 20 கி.மீ. தொலைவிலுள்ள பள்ளிக்கரணை, சோளிங்கநல்லூர் கிராமங்களில் 800 ஏக்கர் நிலத்தில் ரூ. 450 கோடி மதிப்பீட்டுச் செலவில், தொழில் நகரம் ஒன்றை அமைப்பதற்கான சென்னை தொழில் பூங்கா திட்டமொன்று உருவாக்கப்பட்டுள்ளது. டிட்கோவின் பங்குத்தொகை 11% ஆக இருக்கும். 1994 பிப்ரவரி 24ஆம் நாளன்று

சென்னைத் தொழில் பூங்கா நிறுவனமொன்று பதிவு செய்யப்பட்டுள்ளது. சென்னை, சதர்ன்பெட்ரோ கெமிக்கல் இண்டஸ்ட்ரீஸ் கார்ப்பரேஷன் லிமிடெட், சென்னை, திருவாளர் பாலாஜி குரூப் ஆகியவை உள்ளூர் இந்தியத் தனியார் பங்குதாரர்களாகத் தெரிவு செய்யப்பட்டு, **8-12-1994** ஆம் நாளன்று ஒப்பந்தம் கையெழுத்தாகியுள்ளது. உயர்நிலைக் குழுவொன்று சிங்கப்பூர், மலேசியா நாடுகளைப் பார்வையிட்டு இத்திட்டத்தில் பங்கேற்கச் செய்வதற்காக பிரபலமான தெழிலதிபர்களுடன் விவாதங்களை நடத்தியுள்ளது. உரிய வெளிநாட்டு பங்குதாரர்களைத் தெரிந்தெடுக்கும் முயற்சி நடந்து வருகிறது. இங்கு துவங்கப்படும் அடிப்படை வசதிகள் ஆசிய பசிபிக் வட்டாரத்தில் வழங்கப்படும் தரத்தை ஒத்திருக்கும். (உதாரணம்: சிங்கப்பூர், ஜூராங் தொழில் பூங்கா மற்றும் இந்தோனேசியாவில் உள்ள பாட்டம் தொழில் பூங்கா). இத்திட்டத்திற்கு தேவைப்படும் நிலத்தை மாற்றம் செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

தமிழ்நாடு மாநில தொழில் முன்னேற்ற நிறுவனம் (சிப்காட்):

இம்மாநிலத்தில் நடுத்தர, மற்றும் பெரும் தொழில்களின் மேம்பாட்டுக்கும், மாநில அரசு மற்றும் இந்திய தொழில் வளர்ச்சி வங்கியின் தீவிர ஆதரவுடன் பின்வரும் பெரும் திட்டங்களைச் செயல்படுத்துவதற்கும், 'சிப்காட்' நிறுவனம் பொறுப்பு வகிக்கிறது:-

(1) தொழில் வளாகங்களை உருவாக்கிப் பராமரித்தலும், தொழிற்சாலைகளை அமைப்பதற்கான மேம்படுத்தப்பட்ட மனைகளை ஒதுக்கீடு செய்தலும்.

(2) இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கியின் மறுநிதி உதவித் திட்டத்தின்படி திட்டமொன்றுக்கு உயரளவாக ரூ. **250** இலட்சம் வரை குறித்த் காலக் கடன்களை தொழில் திட்டங்களுக்கு அனுமதித்தல்.

(3) தொழிற்சாலைகளுக்கான விற்பனை வரி தள்ளிவைப்பு/தள்ளுபடி திட்டத்தின் கீழ் தகுதிச் சான்றிதழ் வழங்குதல்.

(4) சென்னை ஏற்றுமதி செய்முறை மண்டலத் தொழிற்பிரிவுகளுக்கும், 100% ஏற்றுமதியை நோக்கமாகக் கொண்ட தொழில் பிரிவுகளுக்கும் விற்பனை வரி (த.நா.பொ.வி.வ) ஈடு செய்யும் திட்டத்தைச் செயல்படுத்தல்.

(5) தொழிற்சாலைகளுக்கான குறித்தபகுதி, மற்றும் குறித்த தொழில் உதவித்தொகைகள் வழங்குதல்.

(6) நடுத்தர மற்றும் பெருந்தொழில்களுக்கான அனுமதிக் கடிதங்களை கண்காணித்து தொழில் அமைப்பு உதவிப் பணிகளை அளித்தல்.

1995 *ஏப்ரல்* 24]

ராணிப்பேட்டை, ஒசூர், கும்மிடிப்பூண்டி, கடலூர், மானாமதுரை, புதுக்கோட்டை, தூத்துக்குடி ஆகிய இடங்களில் 'சிப்காட்' வெற்றிகரமாக தொழில் வளாகங்களை ஏற்படுத்தி மேம்படுத்தியுள்ளது. தற்போது, கும்மிடிப்பூண்டி, கடலூர், ஒசூர் பகுதிகளிலுள்ள தொழில் வளாகங்களை விரிவுபடுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. தொழில் ரீதியில் பின்தங்கிய மாவட்டமான திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டத்திலும் 'சிப்காட்' புதிய தொழில் வளாகம் ஒன்றினை அமைக்கும். இந்நோக்கத்திற்காக, 'சிப்காட்' நிறுவனம் செய்யாறு வட்டத்தில் முதல் கட்டமாக 600 ஏக்கர் நிலத்தை தெரிவு செய்துள்ளது. 'சிப்காட்' கும்மிடிப்பூண்டியில் இந்திய அரசின் உதவியுடன் ரூ. 20 கோடி செலவில் 211 ஏக்கர் பரப்பளவில் ஏற்றுமதி மேம்பாட்டு தொழிற்பூங்கா ஒன்றினை நிறுவி வருகின்றது.

1994-95 ஆம் ஆண்டில், 1994 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் வரை ரூ. 56.43 கோடி வரையில் சிப்காட் குறித்த காலக் கடன்களுக்கு அனுமதி வழங்கியுள்ளது. 1995-96 ஆம் ஆண்டில், சிப்காட் ரூ. 65 கோடி குறித்த காலக் கடன் வழங்க உத்தேசித்துள்ளது. இது ரூ. 260 கோடி வரை முதலீடுகளைத் திரட்ட உதவுமென்றும், இதனால் 6,500 மக்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்குமென்றும் மதிப்பிடப்பட்டுள்ளது. ரூ. 75 இலட்சத்திற்கும் அதிகமாக செலவாகக் கூடிய அனைத்துத் திட்டங்களுக்கும் உதவிட சிப்காட், அதன் குறித்த காலக்கடன் கொள்கையினைத் தளர்த்தியுள்ளது. மேலும், வட்டிவீதம் குறைக்கப்பட்டு குறித்தகாலத்தில் கடனைத் திருப்பிச் செலுத்துபவர்கள் என்ற நற்பெயர் பெற்ற கடன்தாரர்களுக்கு குறைந்த வட்டி வீதம் விதிக்கப்படுகிறது.

தமிழ்நாடு மின்னணுவியல் நிறுவனம் (எல்காட்):

'எல்காட்' நிறுவனம் இம்மாநிலத்திலுள்ள மின்னணுத் தொழிலை மேம்படுத்தும் நோக்கத்துடன் 1977 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. இந்நிறுவனம், பலவகையான மின்னணுப் பொருட்களை உள்ளடக்கிய மின்னணுத் தொழில்களைக் கூட்டுத்துறை/இணைத்துறை/வழிகாட்டுத் துறையில் நிறுவுவதற்கு ஆதரவு அளித்து வருகிறது. மின்னணுவியல் தொழில்கள், பொதுவாக மிதமான முதலீடு-உற்பத்தி என்ற அளவில் செயல்படுவதுடன், குறைந்த அடிப்படை வசதிகள், குறைந்த அளவு மின்சாரம் மற்றும் நீர் ஆகியவற்றைப் பயன்படுத்திக்கொண்டு அதிக வேலை வாய்ப்பினையும் அளிக்கின்றன. மேலும், இத்தொழில்களில் சுற்றுச் சூழல் மாசடையும் பிரச்சினையும் இல்லை. தமிழ்நாட்டில் கிடைக்கிற ஏராளமான தொழில் நுட்ப மனித ஆற்றலைப் பயன்படுத்தவும் இது உதவுகிறது.

இதுவரை, இந்நிறுவனம், பொதுத்துறையில் ஒரு பிரிவையும் கூட்டுத்துறை/இணைத்துறை/வழிகாட்டுத் துறையில் 23 பிரிவுகளையும் உருவாக்கியுள்ளது. இவை வணிக ரீதியிலான உற்பத்தியைத் தொடங்கியுள்ளன. தொலைத் தொடர்பு, தொழில் மின்னணுவியல் கருவிகள், கணிப்பொறிகள், நுகர்வோர் மின்னணுவியல் கருவிகள், மின்னணுவியல் துணைப் பொருள் தயாரிப்பு கணிப்பொறி மென்பொருள் (Software) மேம்பாடு, மருத்துவமனைகளுக்கான மின்னணுச் சாதனங்கள் தயாரிப்பு போன்ற துறைகளிலும் ஏற்கனவே முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தமிழ்நாட்டில், தயாரிக்கப்படும் தெரிந்தெடுக்கப்பட்ட சில மின்னணுப் பொருட்களை விற்பனை செய்யவும் இந்நிறுவனம் ஏற்பாடு செய்கிறது. 1994-95 ஆம் ஆண்டில், மொத்தம் 14.82 கோடி ரூபாய் செலவில் இந்நிறுவனம் தயாரித்த 9 புதிய திட்டச் செயற்குறிப்புகளுக்கு, அரசு ஒப்புதலளித்துள்ளது.

இந்த ஆண்டில் (1994-95) 'எல்காட்' நிறுவனம் உருவாக்கிய 7 திட்டங்கள் செயல்படத் தொடங்கியுள்ளன. இந்நிறுவனம் சென்னைக்கருகில், சோளிங்கநல்லூரில் மின்னணுவியல் நகரத்தை (முதற்கட்டம்) அமைத்துள்ளது. இத்திட்டத்தின் அடுத்த கட்டப்பணிகளுக்கு நிலம் கையகப்படுத்தப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு தொழில் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம் (டாசிட்):

டாசிட் நிறுவனம் தொழிற்சாலைக்கு உள்ளேயும் தொழிற்சாலைக்கு வெளியேயும் முழுமையாக ஒருங்கிணைக்கப்பட்ட அடிப்படை வசதிகளுடன் புதிய தொழில் வளர்ச்சி மையங்களை/வளாகங்களை உருவாக்கும் நோக்கத்துடனும், ஏற்கனவே மேம்படுத்தப்பட்ட தற்போதுள்ள தொழில் பகுதிகளில் குறையாகவுள்ள அடிப்படை வசதிகளை நிறைவு செய்யும் நோக்கத்துடனும் 31-3-1992 அன்று ஏற்படுத்தப்பட்டது. மொத்தத்தில், 'டாசிட்' நிறுவனம் 8 திட்டங்களைச் செயற்படுத்திவருகிறது. கங்கைகொண்டானில் ஒன்றும், பெருந்துறையில் ஒன்றுமாக மத்திய அரசு பொறுப்பேற்கும் இரு வளர்ச்சி மையங்களை 'டாசிட்' நிறுவனம் செயல்படுத்த எடுத்துக்கொண்டுள்ளது. நாகப்பட்டினத்தில், நன்னிலத்திற்கருகில் மூன்றாவது வளர்ச்சி மையத்திற்கு மத்திய அரசின் ஒப்புதல் எதிர்பார்க்கப்படுகிறது. தருமபுரி மாவட்டத்தில் பர்கூரிலும், திண்டுக்கல்-அண்ணா மாவட்டத்தில் நிலக்கோட்டையிலும், இராணிப்பேட்டை திட்டத்தின் மூன்றாம் கட்டமும் செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர் மாவட்டத்தில் ஊத்துக்கோட்டையிலும், மாநில அரசு பொறுப்பேற்கும் தொழில் வளாகங்களை மேம்படுத்துவதற்கான

திட்டங்களை 'டாசிட்' நிறுவனம் மேற்கொண்டுள்ளது. செலவையும் காலதாமதத்தையும் குறைக்கும் பொருட்டும், தொழில் முனைவோர்களுக்கு நிலத்திற்கான திட்டவட்டமாக நிர்ணயிக்கப்பட்ட விலையை அளிக்கும் பொருட்டும் நிலம் கையகப்படுத்தப்படுவதற்கான பணியுடன் இயன்ற இடங்களிலெல்லாம் நில உரிமையாளர்களிடம் நேரடியாகப் பேச்சுவார்த்தை நடத்துவதன் மூலமும் நிலம் வாங்கும் பணியும் மேற்கொள்ளப்படுகிறது. மொத்தம் 653.20 கோடி ரூபாய் செலவில், திருப்பூரில் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதற்காகவும், உயர்நிலைப்படுத்துவதற்காகவும், 'டாசிட்' நிறுவனம், திருப்பூர் ஏற்றுமதியாளர் சங்கத்துடனும், திருவாளர்கள் அடிப்படை வசதி கட்டமைப்பு மற்றும் கடன் நிதியுதவிப் பணிகள் நிறுவனத்துடனும் (I.L. & F.S.) ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொண்டுள்ளது. இந்த அரசு, இத்திட்டத்திற்காக 'டாசிட்' நிறுவனத்தின் மூலம் மூலதனப் பங்குத் தொகையாக 10 கோடி ரூபாய் வழங்கும். இத்திட்டத்தில், மூலதனப் பங்குத் தொகையாக 30 கோடி ரூபாய் வழங்க வேண்டுமென்று மத்திய அரசிடம் கேட்கப்பட்டுள்ளது.

'டாசிட்' நிறுவனம், மணலி தொழில் வளர்ச்சிப்பகுதியில் சாலை வசதியை மேம்படுத்தும் பணியை மேற்கொண்டுள்ளது. இத்திட்டத்திற்கான செலவை, 'டாசிட்' நிறுவனமும், மணலி தொழிற்சாலைகள் சங்கமும் சமமாகப் பகிர்ந்துகொள்ளும்.

'டாசிட்' நிறுவனம், இந்திய ஏற்றுமதி கூட்டமைப்பு (FIEO) இந்திய வர்த்தக மேம்பாட்டு அமைப்பு (ITPO) ஆகியவற்றின் ஒத்துழைப்புடனும், ஏனைய அமைப்புகளின் ஒத்துழைப்புடனும், சென்னைக்கு அருகில் நந்தம்பாக்கத்தில், பன்னாட்டு வர்த்தகப் பொருட்காட்சி வளாகம் ஒன்றை அமைக்கும். அரசு இந்த வர்த்தகப் பொருட்காட்சி வளாகத்திற்காக, நந்தம்பாக்கத்தில், 34.56 ஏக்கர் நிலத்தை இலவசமாக ஒதுக்கியுள்ளது.

தமிழ்நாடு கனிம நிறுவனம் (டாமின்) :

டாமின் நிறுவனம் தனது வியாபாரத்தொகையைத் தொடர்ந்து அதிகரித்து வருவதுடன், இம்மாநிலத்தின் ஏற்றுமதி முயற்சியில் குறிப்பிடத்தக்க அளவுக்கு பங்கு வகிக்கிறது. உலகச் சந்தையில் கிரானைட்டுக்கு விலை இறக்கம் இருந்தபோதிலும், ரூ.40 கோடி அளவுக்கு வியாபாரத்தொகையை டாமின் நிறுவனம் எதிர்பார்க்கிறது. 1994-95 ஆம் ஆண்டில், இந்நிறுவனம் சுமார் ரூ.16 கோடி ஆதாயம் ஈட்டும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. 1994-95 ஆம் ஆண்டில் இந்நிறுவனம் சுமார் ரூ.39 கோடி அந்நியச் செலவாணியை ஈட்டும்.

டாமின் நிறுவனம் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டம், சிவகங்கையில், சுமார் ரூ.28 கோடி செலவில் ஏற்படுத்திய கிராபைட் கனிம தயாரிப்புத் தொழிற்சாலை, தனது வர்த்தக ரீதியிலான உற்பத்தியைத் தொடங்கியது. பின்தங்கிய பகுதிகளை தொழில் மயமாக்க வேண்டும் என்று தற்போது வலியுறுத்தப்படுவதைக் கருத்தில் கொண்டு, டாமின் நிறுவனம் கிராபைட்டை மூலப்பொருளாகப் பயன்படுத்தும் துணைப்பொருள்களை தயாரிக்கும் திட்டங்களை தொடங்கக் கருதியுள்ளது. இந்நிறுவனம் கிருஷ்ணகிரியிலுள்ள செந்தாரப்பள்ளிக்கு அருகில், கனசதுர வடிவில் கிரானைட் கற்களை வெட்டும் பிரிவையும் அமைக்கும். இந்நிறுவனம், அரூர், ஆலங்காயம் பகுதிகளில் மாலிப்டினம் தாதுவை வெட்டி எடுத்து மதிப்பிடவும் நடவடிக்கைகள் எடுத்துள்ளது. இந்த அரசு இத்திட்டத்தைக் கண்காணிக்க இரண்டு உயர்நிலைக் குழுக்களை அமைத்துள்ளது.

தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனம் (டி.என்.பி.எல்) :

தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனம், புகலூரில் கரும்புச் சக்கையைக் கொண்டு ஆண்டொன்றுக்கு 90,000 மெட்ரிக் டன் அளவு உயர்திறன் கொண்ட செய்தித்தாள்கள், அச்சிடுவதற்கான தாள்கள், எழுதுவதற்கான தாள்கள் ஆகியவற்றைத் தயாரிக்கும் ஒருங்கிணைந்த ஆலையை வெற்றிகரமாக நடத்தி வருகிறது. இந்த ஆலை, கடந்த ஐந்து ஆண்டுகளாக தொடர்ந்து ஆதாயம் ஈட்டி வந்துள்ளதோடு, 1990-91 முதல் ஆதாயப் பங்குகளை வழங்கி வருகிறது. ரூ.525 கோடி செலவில் ஆண்டிற்கு 1,80,000 மெட்ரிக் டன் அளவிற்கு உற்பத்தித் திறனை இருமடங்கு ஆக்குவதற்கான இந்நிறுவனத்தின் விரிவாக்கத் திட்டம், 1995 ஜூன் மாதத்தில் நிறைவு பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்நிறுவனம், தொடர்ந்து ஐந்து ஆண்டிற்கு “இருப்பு இல்லை” என்ற சாதனையை எட்டியுள்ளது; காகிதத் தயாரிப்புத் தொழிலில் இது ஈடு இணையற்ற ஒரு சாதனையாகும். விற்பனை உத்தியின் ஒரு பகுதியாக, தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனம் தனது உற்பத்தி, பொருள்களுக்கு ஏற்றுமதி சந்தைகளிலும் இடம் பிடித்துள்ளது. 1994-95 ஆம் ஆண்டில் இந்நிறுவனம், எகிப்து நாட்டிற்கு 9,000 டன் காகிதமும், ஜோர்டான் நாட்டிற்கு 2,000 டன் காகிதமும், துபாய் நாட்டிற்கு 4,000 டன் காகிதமும், ஆஸ்திரேலியா நாட்டிற்கு 50 டன் காகிதமும் அனுப்புவதற்கு ஏற்றுமதி ஆணைகளைப் பெற்றுள்ளது.

இந்நிறுவனம், 1,550 பேருக்கு நேரடியாகவும் சுமார் 5,000 பேருக்கு வேறுவகையிலும் வேலைவாய்ப்பு அளிக்கிறது. இந்நிறுவனம் திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டத்திலுள்ள தேவர்குளம் மற்றும் பெருங்குடியில் 15 மெகா வாட் திறன் கொண்ட காற்றாலை மின் உற்பத்தித்

1995 ஏப்ரல் 24]

திட்டம் ஒன்றையும் சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீரைக் கொண்டு புகளூரில் 1,500 ஏக்கர் புன்செய் நிலங்களுக்குப் பாசனவசதியளிப்பதற்கான இறவைப் பாசனத் திட்டம் ஒன்றையும் தொடங்கியுள்ளது.

சர்க்கரைத் தொழில்:

தமிழ்நாட்டில் 32 சர்க்கரை ஆலைகள் உள்ளன; அதாவது கூட்டுறவுத் துன்றயில் 15 சர்க்கரை ஆலைகளும், பொதுத் துறையில் 3 சர்க்கரை ஆலைகளும், தனியார் துறையில் 14 சர்க்கரை ஆலைகளும் உள்ளன. 1993-94 ஆம் ஆண்டில் இந்த அனைத்து சர்க்கரை ஆலைகளும் பிழிந்த கரும்பின் அளவு 121 இலட்சம் டன் என்று இருக்கையில், 1994-95 ஆம் ஆண்டில் கரும்பு பிழியும் அளவு 190 இலட்சம் டன்னாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இது எப்போதும் இல்லாத உயர் அளவாகும். 1993-94 ஆம் ஆண்டில் சராசரியாகச் சர்க்கரையின் அளவு அனைத்து ஆலைகள் மூலமாக 8.96 சதவீதம் ஆகும். கூட்டுறவுத்துறை ஆலைகள் மற்றும் பொதுத்துறை ஆலைகள் மூலமாகச் சராசரியாகக் கிடைத்த சர்க்கரையின் அளவு 8.90 சதவீதம் ஆகும். 1994-95 ஆம் ஆண்டில் அனைத்து ஆலைகள் மூலமாகச் சராசரியாக கிடைத்த சர்க்கரையின் அளவு 8.67 சதவீதம் ஆகும். கூட்டுறவுத்துறை ஆலைகள் மற்றும் பொதுத்துறை ஆலைகள் மூலம் சராசரியாகக் கிடைத்த சர்க்கரையின் அளவு 8.59 சதவீதம் ஆகும்.

திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டம் போளூரில் ஒன்றும், செங்கற்பட்டு-எம்.ஜி.ஆர் மாவட்டம், வாலாஜாபாத்தில் ஒன்றும் ஆக இரண்டு புதிய சர்க்கரை ஆலைகள் தனியார் துறையில் தொடங்கப்படும்.

திருத்தணி, மதுராந்தகம், கள்ளக்குறிச்சி மற்றும் என்.பி.கே.ஆர்.ஆர். கூட்டுறவு சர்க்கரை ஆலைகளின் கரும்பு பிழியும் திறனை விரிவுபடுத்தும் பணியும், சேலம் கூட்டுறவு சர்க்கரை ஆலையை நவீனப்படுத்தும் பணியும், ரூ.12,668 இலட்சம் செலவில் நடைபெற்று வருகிறது. இத்திட்டப் பணிகள், 1994-95 கரும்பு பருவத்தின் இறுதிக்குள் முடிக்கப்பட்டுவிடுமென எதிர்பார்க்கப்படுகிறது.

தமிழ்நாடு தொழில் ஆலோசனை-ஏற்றுமதி மேம்பாட்டு நிறுவனம் (கைடன்ஸ்):

தொழில்களைத் தொடங்குதல், ஊக்க உதவிகள் முதலியவற்றினைப் பெறுதல் ஆகிய நடைமுறை அம்சங்கள் குறித்து தொழில் முனைவோருக்குத் தகவல் அளித்தல், ஆலோசனை அளித்தல், தொழில்களைத் தொடங்குவதில்

தொழில் முனைவோர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளைத் தீர்த்துவைப்பதில் அவர்களுக்கு உதவி செய்தல், தமிழ்நாட்டிலும், தமிழ்நாட்டிற்கு வெளியேயும் வசிக்கும் தொழில் தொடங்க விருப்பமுள்ள தொழில் முனைவோரைக் கண்டறிந்து அவர்களுடன் தொடர்பு கொள்ளுதல், தமிழ்நாட்டில் தொழில் தொடங்குவதற்கு அவர்களை ஊக்குவிப்பதற்காக சிறப்பு கருத்தரங்குகளை நடத்துதல், தொழில் வளர்ச்சித் தொடர்பான தகவல் அளித்தல் ஆகிய நோக்கங்களுடன், தமிழ்நாடு தொழில் ஆலோசனை-ஏற்றுமதி மேம்பாட்டு நிறுவனம் (கைடன்ஸ்) ஏற்படுத்தப்பட்டது. அரசுக் கொள்கைகள், நடைமுறைகள், ஊக்க உதவிகள் முதலிய தகவல், விவரங்கள் அடங்கிய பல்வேறு வெளியீடுகளை இந்த நிறுவனம் வெளியிட்டுள்ளது. இம்மாநிலத்தில் தொழில் தொடங்குவதற்கான சூழ்நிலையை உருவாக்கி, தொழில் முதலீட்டிற்கு உகந்த இடமாக இம்மாநிலத்தை வெளிப்படுத்தும் விதத்தில் நம்நாட்டிலும் வளைகுடா நாடுகளிலும் இந்நிறுவனம் தொழில் வளர்ச்சி கருத்தரங்குகளை நடத்தியுள்ளது.

ஏற்றுமதியாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளைக் குறிப்பிட்ட கால அளவில் தீர்ப்பதற்காக ஏற்படுத்தப்பட்டுள்ள ஏற்றுமதி குறித்த உயர் அளவிலான குழுவின் கூட்டங்களை இந்நிறுவனம் ஒருங்கிணைத்து வருகிறது. இந்நிறுவனம், வெளிநாட்டில் வசிக்கும் இந்தியர்களுக்கும், வெளிநாட்டு நேரடி முதலீட்டிற்கும் மைய அமைப்பாக செயல்பட்டு வருகிறது.

புவியியல் மற்றும் சுரங்கவியல் துறை:

புவியியல் மற்றும் சுரங்கவியல் துறை (i) உலோக-உலோகம் சாரா ஏனைய கனிப் பொருள்களை வெட்டியெடுத்தல், (ii) மலைப் பகுதிகளில் புவி தொழில் நுட்ப ஆய்வுகள் நடத்துதல், (iii) பெரு மற்றும் சிறு கனிமங்களுக்குச் சுரங்கக் குத்தகை வழங்குவது மற்றும் கனிம வருவாயை வசூலித்தல், கனிமப் பாதுகாப்பு, மேம்பாட்டு நடவடிக்கைகள், திறமையான கனிமக் கொள்கைகளுக்காக அரசுக்குத் தொழில்நுட்ப உதவி ஆகியவை உட்பட சுரங்கவியல் பணிகளை முறைப்படுத்தல் ஆகிய பணிகளைத் தொடர்ந்து செய்து வருகிறது.

இத்துறையின் 19 மாவட்ட அலுவலகங்களின் உதவியுடன், சுரங்கப் பணிகளைச் சீரமைக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

1995 *ஏப்ரல்* 24]

1995-96-ம் ஆண்டில் இத்துறை பின்வரும் பணிகளைத் தொடர்ந்து மேற்கொள்ளும்:–

(1) செங்கற்பட்டு-எம்.ஜி.ஆர். மாவட்டத்தில், களிமண் படிமங்களை மறு மதிப்பீடு செய்தல்.

(2) நாகப்பட்டினம்-காயிதே மில்லத், விழுப்புரம்-இராமசாமி படையாச்சியார், செங்கற்பட்டு-எம்.ஜி.ஆர். ஆகிய மாவட்டங்களில் சிலிகா மணலை வெட்டியெடுக்க விரிவான ஆய்வு மேற்கொள்ளுதல்.

(3) திருநெல்வேலி-கட்டபொம்மன், கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களின் ஒரு சில பகுதியில் ஒருங்கிணைந்த புவி இயற்பியல் ஆய்வுகள், புவி வேதியியல் ஆய்வுகள் மேற்கொள்ளுதல்.

(4) கன்னியாகுமரி, திருநெல்வேலி-கட்டபொம்மன், சேலம் ஆகிய மாவட்டங்களில் குறை மணி கற்களுக்கான விரிவான ஆய்வு மேற்கொள்ளுதல்.

(5) திருநெல்வேலி-கட்டபொம்மன், கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் கிராபைட் படிமங்கள் குறித்து மறுமதிப்பீடு செய்தல்.

(6) தருமபுரி மாவட்டத்தின் ஒரு சில பகுதியில் பிளாட்டினம் வகையைச் சேர்ந்த கனிமங்களுக்கான ஆய்வு செய்தல்.

(7) திண்டுக்கல்-அண்ணா மாவட்டத்தில் மாலிப்டினம், வெள்ளீயம் (Tin) மின்னிழைமம் (Tungsten) ஆகியவை குறித்து மறுமதிப்பீடு செய்தல்.

(8) புதுக்கோட்டை, திருச்சிராப்பள்ளி ஆகிய மாவட்டங்களில் கருப்பு மற்றும் பல வண்ண கிரானைட் கற்களுக்கான ஆய்வு செய்தல்.

(9) நுண்பகுப்பாய்வுக் கூடத்தை நவீனப்படுத்தல்.

மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், புவி தொழில் நுட்பப் பிரிவு, நீலகிரி மாவட்டத்தில் குறிப்பாக நிலச்சரிவு தொடர்பாக, புவி தொழில் நுட்ப ஆய்வுகளைத் தொடர்ந்து மேற்கொள்ளும்.

ஏற்றுமதிகள்:

மாநில அரசு பல்வேறு ஊக்க உதவிகள் அளிப்பதன் மூலம் ஏற்றுமதிக்கு போதிய கவனம் செலுத்தி வருகிறது. பிற்படுத்தப்பட்ட வட்டங்களிலுள்ள தொழில் பிரிவுகளுக்கு வழங்கப்பட்டுவரும் ஊக்க உதவித் தொகைகள்,

சென்னை-ஏற்றுமதி செய்முறைப்படுத்தல் மண்டலத்தில் (மெப்ஸ்) உள்ள தொழில் பிரிவுகளுக்கும் தொடர்ந்து வழங்கப்பட உள்ளது. மேலும், ஏற்றுமதி நோக்கில் அமைந்த தொழில் பிரிவுகளுக்கு, மின்வெட்டிலிருந்து விலக்களிப்படுகிறது. தமிழ்நாட்டிலுள்ள சிறிய, நடுத்தர மற்றும் பெரிய அளவிலான தொழில் துறைகளைச் சேர்ந்த முன்னணி ஏற்றுமதியாளர்களுக்கு ஒவ்வோராண்டும் அரசு சிறப்பு விருதுகளை வழங்கி வருகிறது. 1993-94 ஆம் ஆண்டில் இம்மாநிலம் ரூ. 9082 கோடி அளவிற்கு ஏற்றுமதி செய்ததன் மூலம், தென் மாநிலங்களிடையே முதல் நிலையைப் பெற்றுள்ளது.

ஏற்றுமதி மேம்பாட்டுத் தொழில் பூங்கா (ஈ.பி.ஐ.பி.):

ஏற்றுமதி மேம்பாட்டுத் தொழில் பூங்கா, மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டத்தின் கீழ் ரூ.20 கோடி மதிப்பீட்டுச் செலவில் 211 ஏக்கர் நிலப்பரப்பில் செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர். மாவட்டத்திலுள்ள கும்மிடிப்பூண்டியில் ஏற்படுத்தப்படும். மத்திய அரசு 1995 ஜனவரியில் அதன் ஒப்புதலை அளித்துள்ளது. இதற்கு மத்திய அரசு வழங்கும் பங்குத் தொகை ரூ.10 கோடியாக இருக்கும். உற்பத்தியில் குறைந்த அளவு 33 சதவீதம் பொருட்களை ஏற்றுமதி செய்யும் தொழில் பிரிவுகள் மட்டுமே, இப்பூங்காவில் அமைக்கப்பட பரிசீலிக்கப்படும். அடுத்த இரண்டாண்டுகளுக்குள் ஏற்றுமதி மேம்பாட்டுத் தொழில் பூங்கா ஏற்படுத்தும் பணி முடிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மத்திய அரசின் வழிகாட்டிக் குறிப்புகளின்படி, இத்திட்டப்பணியின் முன்னேற்றம் குறித்து மேற்பார்வையிட்டு ஆய்வு செய்து, மத்திய அரசுக்கு அறிக்கை அளிப்பதற்காக, இவ்வரசு, மாநில அளவிலான குழு ஒன்றை ஏற்படுத்தியுள்ளது. இக்குழுவின் அறிக்கையின் அடிப்படையில் நிதி வழங்கப்படும்.

புதிய ஊக்க உதவிகள்:

1992-ஆம் ஆண்டில் புதிய தொழில் கொள்கையின்படி அறிவிக்கப்பட்ட ஊக்க உதவி தொகுப்புத் திட்டங்கள், உறுதியாகச் செயல்படுத்தப்பட்டுள்ளன; அவை இம்மாநிலத்தில் பலர் தொழில் தொடங்குவதற்கு உறுதுணையாக இருந்துள்ளன. மாநில அரசு வழங்கும் பல்வேறு ஊக்க உதவிகளுக்கான விதிகளும் நடைமுறைகளும் தற்போது எளிமையாக்கப்பட்டு, சீரமைக்கப்பட்டுள்ளன. பெண் தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு அளிப்பதற்காக கூடுதல் உதவித் தொகை வழங்கும் மாநில அரசின் திட்டங்கள் திறம்பட செயற்படுத்தப்பட்டுள்ளன.

LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1994-95-ஆம் ஆண்டில், கீழ்க்கண்ட கூடுதல் சலுகைகள் வழங்கப்பட்டுள்ளன:-

(i) தகுதி வாய்ந்த தோல்தொழில் பிரிவுகள் மற்றும் மின்னணுவியல் தொழில் பிரிவுகளுக்கு வழங்குவதற்காக ரூ.2.00 கோடிக்கு ஏற்றுமதி உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளது.

(ii) தொழில்-நிதி மறு சீரமைப்புக் கழகத்தின் சட்டத்தில் விளக்கம் அளித்துள்ளபடி நலிவடைந்த தொழில் பிரிவுகளுக்குக் கிடைக்கும் பயன்களை நலிவடையும் நிலையிலுள்ள நிறுவனங்களுக்கும் (அதாவது நிகர மதிப்பில் 50 சதவீதம் இழந்துவிட்ட நிறுவனம்) வழங்கும் நோக்கத்துடன், நலிவடையும் வாய்ப்புள்ள நிறுவனங்களின் நிலை குறித்து மதிப்பீடு செய்யவும், அவற்றின் சீரமைப்புத் திட்டத்தை வகுக்கவும், அத்தகைய நிறுவனங்கள் குறித்து ஆய்வு செய்யும் பணி, தமிழ்நாடு தொழில் மற்றும் தொழில் நுட்ப ஆலோசனை நிறுவனத்திடம் (ITCOT) ஒப்படைக்கப்படலாம் என்று அரசு ஆணையிட்டுள்ளது. தமிழ்நாடு தொழில்-தொழில் நுட்ப ஆலோசனை நிறுவனம் அளிக்கும் அறிக்கையின் முடிவுகள் பற்றி ஆய்வு செய்ய, தொழில் துறையின் முதன்மைச் செயலாளரின் தலைமையில் நிலைக்குழு ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது.

(iii) மதுரை மாவட்டத்திலுள்ள பேரையூர் வட்டம், விழுப்புரம்-இராமசாமி படையாச்சியார் மாவட்டத்திலுள்ள சங்கராபுரம் வட்டம் ஆகியவை முறையே தொழிலில் மிகவும் பிற்பட்ட, மற்றும் பிற்பட்ட வட்டங்கள் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளன. இதன்மூலம் மேற்சொன்ன இரண்டு வட்டங்களில் ஏற்படுத்தப்படும் தொழிற்சாலைகள் விற்பனை வரிச்சலுகை, உதவித்தொகைப் பயன்கள் ஆகியவற்றைப் பெறத் தகுதியுடையவையாக ஆக முடியும்.

மத்திய முதலீடு:

தமிழ்நாட்டில் மத்திய அரசு செய்யும் முதலீடு 1969-70 ஆம் ஆண்டில் 9.3 சதவீதமாக இருந்தது; அது, 1990-91 ஆம் ஆண்டில் 5.24 சதவீதமாகவும், 1991-92 ஆம் ஆண்டில் 5.08 சதவீதமாகவும், 1992-93 ஆம் ஆண்டில் 4.96 சதவீதமாகவும் குறைந்துள்ளது. தமிழ்நாட்டிற்கு எரிவாயு கொண்டு வருவதற்காக, தென்னக எரிவாயு இணைப்பை ஏற்படுத்த மத்திய அரசு கொள்கை அளவில் ஒப்புக் கொண்டுள்ளது. தென் மாநிலங்களுக்கான திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக கேரள மாநிலத் தொழில் மேம்பாட்டுக் கழகம் ஒருங்கிணைப்பு அமைப்பாகச் செயல்படுகிறது.

இத்திட்டத்திற்கான சாத்தியக்கூறு அறிக்கையைத் தயாரிப்பதற்காக, கேரள மாநிலத் தொழில் மேம்பாட்டுக் கழகம் பம்பாயிலுள்ள திருவாளர்கள் லோஜிகன் எஞ்சினியர்ஸ் நிறுவனத்தைத் தெரிவு செய்துள்ளது. இத்திட்டச் சாத்தியக்கூறு அறிக்கையைத் தயாரிப்பதற்காகவும் ஏனைய செலவுகளுக்காகவும், தமிழ்நாடு, அதன் பங்கான ரூ.20 இலட்சத்தை, தமிழ்நாட்டிற்கான ஒருங்கிணைப்பு அமைப்பான தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் மூலம் வழங்கியுள்ளது.

இணைப்பு III

(50 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)

தமிழ்நாடு கதர் கிராமத்தொழில் வாரியம் கொள்கையும் திட்டங்களும் 1995-96.

1. கதர் கிராமத் தொழில்களின் வளர்ச்சியினைத் துரிதப்படுத்தி, நல்ல முன்னேற்றம் அடையச் செய்யும் நோக்கத்துடன் (1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியச் சட்டம் 18ன் படி) 1960-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் முதல் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் துவக்கப்பட்டது. ஊரகப் பகுதிகளில் கிடைக்கும் மூலப் பொருள்களைக் கொண்டு நலிவுற்ற ஏழை மக்களுக்கு சுய வேலை வாய்ப்பு அளித்து அவர்களது பொருளாதார நிலையை உயரச் செய்வதே இவ்வாரியத்தின் முக்கிய குறிக்கோளாகும். தமிழ்நாட்டில் கதர் கிராமத் தொழில் திட்டங்கள் வாரிய அலகுகள், கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் கிராமப்புறக் கைவினைஞர்களுக்கு சுயவேலை துவங்க நிதி உதவிகள் அளித்தல் ஆகிய வழிகளில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. தமிழ்நாடு அரசின் கொள்கைகளுக்கு இணங்க கிராமப் பகுதியில் வேலை வாய்ப்பினை ஏற்படுத்தி நலிந்த பிரிவினரை முன்னேறச் செய்ய ஒருங்கிணைந்த மலைவாழ் மக்கள் வளர்ச்சித் திட்டம், மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம், மேற்குத் தொடர்ச்சி மலை வளர்ச்சி திட்டம் போன்ற சிறப்புத் திட்டங்களை மாவட்ட ஊரக வளர்ச்சி நிறுவனம் மற்றும் தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டு வளர்ச்சி நிறுவனங்களுடன் ஒருங்கிணைந்து இவ்வாரியம் செயல்படுத்தி வருகிறது.

2. பம்பாயிலுள்ள கதர் கிராமத் தொழில் ஆணைக் குழுவினரால் அங்கீகரிக்கப்பட்ட 96 கிராமத் தொழில்களில் 59 கிராமத் தொழில்களையும் மற்றும் கதர்த் தொழில்களையும் வாரியம் மூன்று வகைகளில் பின்வருமாறு செயல் படுத்துகிறது :

		எண்.
1.	வாரியத்தின் சொந்த தொழில் பிரிவுகள்	1,289
2.	வாரியம் பதிவு செய்த தொழில் கூட்டுறவு அமைப்புகள்	1,880

எண்.

3. கதர் கிராமத்தொழில் ஆணைக்குழு அளிக்கும் உதவி போன்று, நிதியுதவி அளிக்கப்பட்ட கைவினைஞர்கள் 88,116.

2.01 கதர் திட்டங்கள் ஆகியவை, உண்ணா எண்ணெய், சோப்புத் தொழில் திட்டங்கள் ஆகியவை வாரியத்தின் சொந்த தொழில் பிரிவுகள் மூலம் செயல்படுத்தப்படுகின்றன. பனைவெல்லம், பனங்கற்கண்டு, பழுப்புச் சர்க்கரை, பருப்பு மற்றும் தானிய வகைகள், தும்பு, சுண்ணாம்பு, பிரம்பு, மூங்கில் ஆகிய தொழில்கள் கூட்டுறவு அமைப்புகள் மற்றும் தனிநபர் மூலமாக செயல்படுத்தப்படுகின்றன. ஏனைய அனைத்துநீக்ஷ தொழில்களும் வாரியத்தின் சொந்த தொழிற்பிரிவுகள், தொழிற்கூட்டுறவு அமைப்புகள் மற்றும் தனிநபர் மூலமாக செயல்படுத்தப்படுகின்றன.

3. கதர்:

கதர் வாரியத்தின் கீழ் 670 கிராமிய நூற்பு நிலையங்களும் 85 கதர் உற்பத்தி நிலையங்களும் இயங்கி வருகின்றன. இவற்றின் மூலம் 47,300 நபர்கள் வேலை வாய்ப்பு பெற்று வருகின்றனர். இவர்களில் 38,000 பேர் பெண்கள் என்பது குறிப்பிடத் தக்கது. 1994-95ம் ஆண்டு கதர் உற்பத்தி குறியீடு ரூபாய் 20-40 கோடி என நிர்ணயம் செய்யப்பட்டது. அதில் 31-12-1994 வரை ரூபாய் 12.65 கோடி உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. மீதமுள்ள 7.75 கோடியும் 1994-95ஆம் ஆண்டு இறுதிக்குள் உற்பத்தி செய்யப்பட்டுவிடும். மேலும் 1995-96ம் ஆண்டில் கதர் உற்பத்தியினை ரூபாய் 21.00 கோடியாக அதிகரிக்க திட்டமிடப் பட்டுள்ளது.

3.01. 1995-96ஆம் ஆண்டில் புதியதாக 20 கிராமிய நூற்பு நிலையங்கள் ஆரம்பிக்க வாரியம் திட்டமிட்டுள்ளது. இதனால் கிராமப் புறங்களிலுள்ள படிப்பறிவற்ற 600 பெண்களுக்கு கூடுதலாக வேலைவாய்ப்பு கிடைக்கும். இதனால் வீட்டிற்கு அருகாமையிலிருந்தபடியே அவர்கள் நாளொன்றுக்கு ரூபாய் 17 வரை சம்பாதிக்க இயலும்.

4. கதர் பட்டு:

கதர் வாரியக் கட்டுப்பாட்டின்கீழ் 25 பட்டு உற்பத்தி நிலையங்கள் இயங்கி வருகின்றன. 1994-95ஆம் ஆண்டுக்கான கதர் பட்டு உற்பத்திக் குறியீடு ரூபாய் 20.00 கோடி என வாரியம் நிர்ணயம் செய்துள்ளது. அதனில் 21-12-1994 வரை 12.33 கோடி மதிப்பிற்கு கதர் பட்டு உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. மீதமுள்ள ரூபாய் 7.67 கோடி மதிப்புள்ள பட்டு ரகங்கள் 1994-95ஆம் ஆண்டு முடிவதற்குள் உற்பத்தி செய்யப்பட்டுவிடும். மேலும், தமிழ்நாடு மற்றும் வட மாநிலங்களுக்குமான கதர் பட்டு ரகங்களின் தேவையை பூர்த்தி செய்யும் பொருட்டு 1995-96ஆம் ஆண்டு ரூபாய் 22.00 கோடி மதிப்பிற்கு கதர் பட்டு ரகங்கள்-உற்பத்தி செய்ய வாரியம் திட்டமிட்டு, குறியீடு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

5. கதர் பாலியஸ்டர்:

கதர் பாலியஸ்டர் ரகங்களின் தேவை ஆண்டுதோறும் ஏறுமுகமாகவே உள்ளது. எனவே, வாரியம் 1994-95ஆம் ஆண்டில் கதர் பாலியஸ்டர் ரகங்களுக்கு உற்பத்திக் குறியீடு ரூபாய் 7.90 கோடி என நிர்ணயம் செய்ததில், 31-12-1994 வரை ரூபாய் 4.74 கோடி மதிப்பிற்கு பாலியஸ்டர் கதர் ரகங்கள் உற்பத்தி செய்யப்பட்டு உள்ளது. மீதமுள்ள ரூபாய் 3.16 கோடி அளவுள்ள கதர் பாலியஸ்டர் ரகங்கள் 1994-95ஆம் ஆண்டு இறுதிக்குள் உற்பத்தி செய்யப்பட்டு விடும். 1995-96ஆம் ஆண்டிற்கான பாலியஸ்டர் கதர் ரகங்களின் உற்பத்திக் குறியீடு ரூபாய் 8.50 கோடி என வாரியம் நிர்ணயம் செய்துள்ளது.

6. சாயம் சலவை மற்றும் அச்சு அலகுகள்:

6.01 வாரியக் கட்டுப்பாட்டின் கீழ் துணிகளுக்கு சாயம், சலவை மற்றும் அச்சு அலகு ஒன்று பெரிய அளவில் பவானிசாகர் என்னுமிடத்திலும், தாராபுரம், திருப்பூர், புதுகை, ஜலகண்டாபுரம் மற்றும் தஞ்சாவூர் ஆகிய ஐந்து இடங்களில் சிறிய அலகுகளும் இயங்கி வருகின்றன.

6.02 இந்த அலகுகள் வாடிக்கையாளர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு ஏதுவாக 60 இலட்சம் மீட்டர் துணிகள் ஆண்டுதோறும் பதப்படுத்துகின்றன.

7. நூற்புக் கைவினஞர்களுக்கான நலத்திட்டங்கள்:

7.01 நூற்போர்கள் மற்றும் நெசவாளர்கள் நலன்களைக்கருதி அவர்களுக்கென வாரியம் பல்வேறு நலத்திட்டங்களை வழங்கி வருகிறது. நூற்பாளர்கள் மற்றும் நெசவாளர்கள் நலனுக்காக நலநிதியொன்று உருவாக்கப்பட்டுள்ளது. அவர்களுடைய ஊதியத்திலிருந்து 10 சதவீதம் பிடித்தம் செய்து, பிடித்தம் செய்யப்பட்டதொகைக்கு ஈடான தொகையினை வாரியம் நலநிதியாக வழங்கி வருகிறது. மேலும், நூற்போர் மற்றும் நெசவாளர்களுடைய ஊதியத்தில் 8.33 சதவீதம் ஊக்குவிப்புத் தொகையினையும் வாரியம் வழங்கி வருகிறது.

7.02 மேலும், வாரியம் 16-8-1994 முதல் கதர் மற்றும் பாலியஸ்டர் நூற்பாளர் மற்றும் நெசவாளர்கள் ஊதியத்தினையும் மற்றும் பட்டு நெசவாளர்களின் ஊதியத்தினையும் 1-1-1995 முதல் உயர்த்தியுள்ளது. அதனடிப்படையில் கதர் நூற்பாளர்களின் தினக்கூலி ரூபாய் 15-லிருந்து ரூபாய் 17 ஆகவும் நெசவாளர்களின் தினக்கூலி ரூபாய் 25-லிருந்து ரூபாய் 30 ஆகவும் பட்டு நெசவாளர்கள தினக்கூலி ரூபாய் 35-லிருந்து ரூபாய் 42 ஆகவும் உயரும்.

8. கதர் விற்பனை தள்ளுபடி மானியம்:

ஒவ்வொரு ஆண்டும் தமிழக அரசு, விழாக்காலங்களில் கதர் மற்றும் பட்டு ரகங்களின் விற்பனைக்கு 90 நாட்களுக்கும், கதர் பாலியஸ்டர் துணி விற்பனைக்கு 60 நாட்களுக்கும், 10 சதவீதம் சிறப்புத் தள்ளுபடி அனுமதிக்கிறது. இத்துடன் கதர் கிராமத்தொழில் ஆணைக்குழு பருத்தி கதர் ரகங்களின் விற்பனைக்கு ஆண்டு முழுவதும் 15 சதவீதம் விற்பனை தள்ளுபடியும், பாலியஸ்டருக்கு 10 சதவீதம் விற்பனை தள்ளுபடியும், இது தவிர விழாக்காலங்களில் ஒவ்வொரு ஆண்டும் கதர் மற்றும் பட்டு ரகங்களுக்கும் பாலியஸ்டர் ரகத்திற்கும் 90 நாட்களுக்கு 10 சதவீதம் சிறப்புத்தள்ளுபடியும் அளிக்கிறது.

9. கிராமத்தொழில்கள்:

9.01 ஊரகப் பகுதியில் கிடைக்கின்ற மூலப்பொருட்களையும் மனித சக்தியையும் பயன்படுத்தி ஊரகப் பகுதியில் வறுமையை

அகற்றுவதற்கு இவ்வாரியம் கிராமத்தொழில் திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. குறைவான மூலதனத்தில் அதிக வேலை வாய்ப்பு அளிப்பது கிராமத்தொழில் திட்டங்களின் சிறப்பாகும்.

9.02 இவ்வாரியத்தின்கீழ் 241 துறை அலகுகளும் 1880 கிராமத் தொழில் கூட்டுறவுச் சங்கங்களும் செயல்பட்டு வருகின்றன. வாரியம் 88,116 தனிப்பட்ட கைவினஞர்களுக்கு சொந்தமான தொழில் துவங்கிட நிதியுதவி அளித்துள்ளது. 1994-95ல் கிராமத் தொழில் பொருட்களின் உற்பத்தி மற்றும் விற்பனை முறையே ரூபாய் 348.00 கோடி மற்றும் ரூபாய் 385.00 கோடி ஆக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. 1995-96ஆம் ஆண்டில் கிராமத் தொழில் பொருட்களின் உற்பத்தி மற்றும் விற்பனை முறையே ரூபாய் 354.00 கோடி மற்றும் ரூபாய் 453.00 கோடிக்கு உயரும் என எதிர்பார்க்கப்டுகிறது.

10. தோல் தொழில்:

மிக ஏழ்மையில் வாழும் கைவினஞர்களுக்காக அதிகப் படியான வேலைவாய்ப்பு அளிக்கும் தொழில்களில் தோல் தொழிலும் ஒன்றாகும். வாரியம் 27 காலணிகள் தயாரிக்கும் அலகுகளை ஏற்கனவே நிறுவியுள்ளது. இந்தக் காலணி அலகுகளின் மூலம் காவலர், ஊர்க்காவலர் ஆகியோருக்கு ஷூக்கள் மற்றும் அம்யூனிஸன் பூட்ஸ் மற்றும் பள்ளி செல்லும் குழந்தைகளுக்கு இலவச செருப்புகள் தயாரித்து விநியோகம் செய்து வருகிறது. காலணித் தொழிலாளர்களின் சிரமத்தை கருத்தில் கொண்டு அவர்களின் வருமானத்தை அதிகரிக்கும் நோக்கத்துடன் தையல் இயந்திரத்துடன் கூடிய தொழில்கூடம் வழங்கும் திட்டத்தை வாரியம் மேற்கொண்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் இதுவரை 11,250 தொழிற்கூடங்கள் விநியோகம் செய்யப்பட்டுள்ளன. மேலும் 2,000 தொழிற்கூடங்கள் விநியோகத்திலுள்ளன.

11. உண்ணா எண்ணெய் மற்றும் சோப்புத் தொழில்:

வாரியத்தில் உற்பத்தி செய்யும் சலவை சோப்பு தவிர டிடர்ஜெண்ட் பவுடர், டிடர்ஜெண்ட் வில்லைகள் மற்றும் டிடர்ஜெண்ட் திரவ வடிவில் மக்களின் தற்போதைய தேவைக்கு தகுந்தவாறும் இத்தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்குத் தொடர்ந்து வேலைவாய்ப்பு அளிக்கவும் உற்பத்தி செய்யப்பட்டு

வருகிறது. குறிஞ்சி என்ற பெயரில் புதியதாக மல்லிகை, எலுமிச்சை, சந்தன நறுமணமுள்ள குளியல் சோப்புகளும் இவ்வாண்டில் உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது. இந்த குளியல் சோப்புகளுக்கு அங்காடியில் நல்ல வரவேற்புள்ளது. மேலும் வாரியம் திரவ வகை சலவை சோப்புகளும் தயாரித்து வருகிறது.

12. மட்பாண்டத் தொழில்:

வாரியத்தின்கீழ் இயங்கும் 4 மட்பாண்ட அலகுகளில் அதிகமாக விற்பனைத் திறனுள்ள மெருகு மட்பாண்டங்கள், அழகு வண்ண மட்பாண்டப் பொருட்கள், மண் குதிரை வகைகள் மற்றும் வண்ணமிகுப் பொருட்கள் செங்கற்பட்டு எம்.ஜி.ஆர். மாவட்டம் செவ்வாய் பேட்டையிலும், தென்னாற்காடு வள்ளலார் மாவட்டம் விருத்தாசலத்திலும் மற்றும் வீரப்பெருமாநல்லூரிலும், நெல்லை கட்டபொம்மன் மாவட்டம் காருகுறிச்சியிலும் தயாரிக்கப் படுகின்றன. இவ்வகைத் தயாரிப்புகளுக்கு சந்தையில் நல்ல வரவேற்புள்ளது.

13. கிராமிய மின்னணுத் தொழில்:

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் மின்னணுத் தொழிலுக்காக 10 கூட்டுறவு சங்கங்களை பதிவு செய்துள்ளது. இதன் மூலம் 217 நபர்கட்கு பெரும்பாலும் மகளிருக்கு வேலை வாய்ப்பு கிட்டும். இவ் ஊரக மின்னணுத் திட்டம் "எல்காட்" நிறுவனத்தின் உதவியுடனும் மத்திய மின்னணுத் துறை மற்றும் கதர் கிராமத் தொழில் ஆணைக்குழுவினால் அளிக்கப்படும் நிதியுதவியுடனும் துவங்கப்பட்டுள்ளது.

14. கைமுறை காகித தொழில் :

14.01 வேலை வாய்ப்பினை பெரிய அளவில் முறைப்படுத்தும் பொருட்டு கைமுறை காகிதத் தொழிலை கிராமப் புறத்தில் ஒரு பெரிய தொழிலாக செயல்படுத்தக் கருதி கைமுறை காகித அலகுகள் ஏற்படுத்தி அவற்றை தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் அபிவிருத்தி செய்து வருகிறது. இந்த கைமுறை காகிதங்கள், துண்டுத் துணிகள், பனியன் துண்டுகள், அரசு அலுவலகங்களிலிருந்து எடுக்கப்பட்ட உபயோகமற்ற காகிதங்கள் போன்ற கழிவுப் பொருட்களிலிருந்து உற்பத்தி

செய்யப்படுகின்றன. சுருங்கக்கூறின், கழிவிலிருந்து செல்வ வளம் உண்டாக்கப் படுகிறது எனலாம். உற்பத்தி செய்யப்படும் இத்தகை கைமுறைக் காகிதங்கள் பெரும்பாலும், அரசுத் துறைகள், உயர்நீதி மன்றம், ஆவணக் காப்பகம், மருத்துவமனைகள் மற்றும் எழுதுபொருள் துறைக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. கைமுறைக் காகிதங்கள் இயல்பாகவே ஆலையில் உற்பத்தி செய்யப்படும் காகிதங்களை விட உறுதியானவை.

14.02 திருச்சி மாவட்டத்திலுள்ள மகேந்திரமங்கலம் மற்றும் பெரியார் மாவட்டத்திலுள்ள செண்பகதூர் கைமுறை காகித அலகுகளில் உற்பத்தி செய்யப்படும் அலங்கார மற்றும் அழகான கைமுறை காகிதங்கள், அட்டைகள், கலர் அட்டைகள், மார்பிள் அட்டைகள், பரிசுப் பொருட்களுக்கான மேலுறைகள், அழகான கைப் பைகள் மற்றும் வாழ்த்து அட்டைகள் ஆகியவை அயல் நாட்டிற்கு ஏற்றுமதி செய்யும் முகவர்களுக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

14.03 மேற்கண்ட கைமுறைக் காகிதங்களுக்கு அயல் நாட்டில் அதிகமாக தேவைகள் ஏற்பட்டுள்ளது. அயல் நாட்டினரின் விருப்பத்திற்கேற்றபடி குறிப்பிட்ட காலத்திற்குள் இந்த தேவைகளைப் பூர்த்தி செய்தால் மேலும் ஆணைகள் பெற முடியும். ஆகவே, அயல் நாட்டில் அதிக அளவில் விநியோக ஆணை பெற்று ஏற்றுமதி செய்ய திட்டம் தீட்டி மேலும் வாரியம் இரண்டு கைமுறை காகித அலகுகளை காமராஜர் மாவட்டம் அருப்புக்கோட்டையிலும் விழுப்புரம்-ராமசாமி படையாச்சியார் மாவட்டம் பிடாகம் என்ற ஊரிலும் நிறுவி உற்பத்தியினைப் பெருக்கி கைமுறைக் காகிதம் மற்றும் அதனைச் சார்ந்த பொருட்களை அயல்நாட்டிற்கு ஏற்றுமதி செய்ய உள்ளது.

15. சேவைத் தொழில் மற்றும் புதிய தொழில்களின் மூலம் வேலை வாய்ப்பு மற்றும் தனிநபர் நிதியுதவி வழங்குதல்:

தனிநபர்களுக்கு நிதியுதவி வழங்குதல்:

15.01 ஒவ்வொரு ஆண்டும், கதர் கிராமத் தொழில் ஆணைக்குழு, தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்திற்கு சேவைத் தொழில் தொடங்கவும் மற்றும் கிராமிய கைவினை நபர்கள் புதிய தொழில்கள் அமைக்கவும் நிதியுதவி அளிக்கிறது.

[1995 ஏப்ரல் 24

15.02 1994-95ம் ஆண்டில் ஒப்புக்கொள்ளப்பட்ட திட்டத்தின் கீழ் பின்வரும் சேவைத் திட்டம் மற்றும் புதிய தொழில்களுக்காக பின்வருமாறு நிதியுதவி ஒதுக்கப்பட்டுள்ளது:

சேவைத் தொழில்	ரூ. 88.00 இலட்சம்
புதிய தொழில்கள்:	
மின்னணுத் தொழில்	ரூ. 7.65 இலட்சம்
துணிவகைத் தொழில்கள்	ரூ. 22.25 இலட்சம்
செம்பு, பித்தளை மற்றும் வெண்கலம் சம்மந்தமான உலோகத் தொழில்	ரூ. 4.95 இலட்சம்
மொத்தம்	ரூ. 122.85 இலட்சம்

16. சேவைத் தொழில்:

	தொழிலின் பெயர்.	கைவினைஞர்களின் எண்ணிக்கை.	மான்யம்.	கடன்.
			(ரூபாய் இலட்சத்தில்)	
அ.	லாண்டரி அலகு	100	..	7.400
ஆ.	சலவைத் தொழில்	150	..	6.600
இ.	முடிதிருத்தும் தொழில்	120	..	6,000
ஈ.	குழாய் இணைப்புத் தொழில் (பொது)	100	..	10.000
உ.	குழாய் இணைப்புத் தொழில் (தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினர்)	30	0.180	2.820
ஊ.	மின்சாரம் பழுது பார்ப்புத் தொழில் (பொது)	80	..	16.000
எ.	மின்சாரம் பழுது பார்ப்புத் தொழில் (தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினர்)	21	0.315	3.885
ஏ.	டீசல் எஞ்சின் மற்றும் பம்பு செட் பழுது பார்த்தல்	100	..	30.000
ஐ.	டீசல் எஞ்சின் மற்றும் பம்புசெட் பழுது பார்த்தல் (தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினர்)	16	0.480	4.320

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

மின்னணுத் தொழில்

அ.	தனியார் மின்னணுக்கடை	51	-	7.650
	துணிவகைத் தொழில்	250	-	22.250

செம்பு, பித்தளை (ம) வெண்கலம்

அ.	செம்பு, பித்தளை, மற்றும் வெண்கலம் சம்பந்தமான தொழில் (பொது)	40	-	3.600
ஆ.	செம்பு, பித்தளை மற்றும் வெண்கலம் சம்பந்தமான தொழில் (தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர்)	15	0.090	1.260
	மொத்தம்	1,073	1.065	121.85

மொத்த மானியம் ரூபாய் 1.065 இலட்சம்

மொத்த கடன் ரூபாய் 121.785 இலட்சம்

கூட்டு மொத்தம் ரூபாய் 122.850 இலட்சம்

17. செயற்கை இரத்தினக் கற்களுக்கு பட்டை தீட்டுதல்:

17.01 செயற்கை இரத்தினக் கற்களுக்கு பட்டை தீட்டி மெருகிடும் தொழில் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் நீண்ட காலமாக இருந்து வருகிறது. கதர் கிராமத் தொழில் ஆணைக்குழு சட்டத்தில் அண்மைக்கால பொருள் விளக்கத்தில் செயற்கை இரத்தினக் கற்களுக்கு பட்டை தீட்டி மெருகிடுவது கிராமத் தொழில்களில் ஒரு இனமாக சேர்க்கப்பட்டுள்ளது.

17.02 வாரியம் பின்வரும் மாவட்டங்களில் 18 செயற்கை இரத்தினக் கற்களுக்கு பட்டை தீட்டும் கூட்டுறவுச் சங்கங்களைத் தொடங்கி கிராமப்புற பெண் கைவினைஞர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கிறது.

வ.எண்	மாவட்டத்தின் பெயர்	சங்கங்களின் எண்ணிக்கை
1.	திருச்சி	6
2.	விழுப்புரம் இராமசாமி படையாச்சியார்	4
3.	வடஆற்காடு அம்பேத்கார்	1
4.	செங்கற்பட்டு எம்.ஜி.ஆர்	1
5.	தர்மபுரி	3
6.	திண்டுக்கல் அண்ணா	2
7.	நெல்லை கட்டபொம்மன்	1
	மொத்தம்	18

18. வணிகம்

18.01 தமிழ்நாடு கதர் கிராமத்தொழில் வாரியத்தில் கீழ்க்கண்டவாறு விற்பனை அலகுகள் செயல்பட்டு வருகின்றன.

1.	காதி கிராப்ட்கள்	225 (நகரங்களிலும், தாலுக்கா தலைநகர்களிலும், கதர் கிராமத் தொழில் பொருட்களின் விற்பனைக்காக)
2.	கிராமோதய விற்பனை நிலையம்	10 (கிராமத் தொழில் பொருட்கள் விற்பனைக்கு மட்டும்)
3.	கிராம சில்பாக்கள்	20 (கிராமப் பகுதிகளில் கதர் கிராமத்தொழில் பொருட்கள் விற்பனைக்காக)
4.	தோல் பொருட்களின் விற்பனை நிலையம்	25 (தோல் பொருட்களின் விற்பனைக்கு மட்டும்)

18.02 மொத்தமுள்ள 225 கதர் அங்காடிகளில் ஒரு கதர் அங்காடி மட்டும் கர்நாடக மாநிலத்தில் பெங்களூரில் செயல்பட்டு வருகிறது.

18.03 1994-95ம் ஆண்டு டிசம்பர் 1994 வரை, கதர் கிராமப்பொருட்களின் விற்பனை முறையே ரூபாய் 37.37 கோடி மற்றும் ரூபாய் 262.00 கோடி ஆகும்.

18.04 1995-96ம் ஆண்டிற்கு கதர் ரகங்களின் விற்பனை இலக்கு ரூபாய் 46.00 கோடி எனவும், கிராமத் தொழில் பொருட்களின் விற்பனை இலக்கு ரூபாய் 453.00 கோடி எனவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

19. வேலைவாய்ப்பு அளித்தல்:

19.01 கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியம் கிராமப்புற இளைஞர்களுக்கு அவர்களுடைய வீட்டிலேயே வேலை வாய்ப்பு அளித்து வேலை வாய்ப்பினைத் தேடி நகர்புறங்களுக்கு வரும் மக்கள் கூட்டத்தைக் குறைக்கிறது. 31-3-1994 வரை வாரியம் 13.02 இலட்சம் நபர்களுக்கு வேலை வாய்ப்பினை ஏற்படுத்தியுள்ளது. இதில் 2.84 இலட்சம் நபர்கள் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி இனத்தைச் சேர்ந்தவர்கள், மற்றும் 4.87 இலட்சம் நபர்கள் பெண்கள்.

19.02 1994-95ம் ஆண்டில் கூடுதல் வேலை வாய்ப்பினை முழுநேர பருவகால மற்றும் பகுதிநேர அடிப்படையில் 1.30 இலட்சம் நபர்களுக்கு வழங்கிட வாரியம் திட்டமிட்டுள்ளது. இது 1995-96ஆம் ஆண்டில் 1.40 இலட்சம் நபர்களாக அதிகரிக்கக்கூடும்.

20. தமிழக அரசின் பகுதி - 2 திட்டங்கள்:

இவ்வாரியம், மர அறுவை அலகு, அகர் பத்தி உற்பத்தி மற்றும் பயிற்சி நிலையம், எண்ணெய் மற்றும் சோப்பு பரிசோதனைக் கூடம் நிறுவுகிறது, பாய் உற்பத்தி, செயற்கை வைரக்கல் பட்டை தீட்டுவது, விழுதுகள் மற்றும் அச்சு விநியோகம் செய்வது, கதர் நெசவாளர்களின் பழைய தறிகளை நவீனப்படுத்துவது, கதர் பட்டு நெசவாளர்களுக்கு ஜாக்குவார்டு பெட்டிகள் வழங்குவது, சோப்பு அலகினை நவீனப்படுத்துவது, கைமுறைக் காகித அலகு மற்றும் அலுமினியப் பாத்திரங்கள் உற்பத்தி அலகு நிறுவுவது போன்ற திட்டங்களை நிறைவேற்றி வருகிறது.

[1995 ஏப்ரல் 24

21. 1994-95 ல் அறிமுகப்படுத்தப்பட்டு தொடரும் திட்டங்கள் :

வ.எண்.	திட்டத்தின் பெயர்	ஒதுக்கீடு (ரூபாய் இலட்சத்தில்)	பயனாளிகளின் எண்ணிக்கை
1.	கதர் நெசவாளர்களின் பழைய தறிகளை நவீனப்படுத்துவது.	7.50	500
2.	கதர் பட்டு நெசவாளர்களுக்கு ஜாக்குவார்டு பெட்டிகள் வழங்குவது	3.60	300

22. 1995-96 ல் செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ள புதிய திட்டங்கள் :

வ.எண்.	திட்டத்தின் பெயர்	ஒதுக்கீடு (ரூபாய் இலட்சத்தில்)	பயனாளிகளின் எண்ணிக்கை
1.	நூல் நூற்பதற்கு 48 கதிர் இராட்டைகள் நிறுவுவது	3.00	18
2.	சூலூர் பஞ்சு பட்டை உற்பத்தி அலகிற்கு பஞ்சை அரைத்து நயமாக்கும் இயந்திரங்கள் வாங்குவது	20.85	-
3.	சென்னை, எஸ்பிளனேடு காதி கிராப்ட்டில் 50 கே.வி மின் உற்பத்தி இயந்திரம் நிறுவுவது.	3.50	-
4.	பனங்கற்கண்டு படிக வளர்ச்சிக்கான ஆராய்ச்சி மேற்கொள்வது	1.09	

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

வ.எண்.	திட்டத்தின் பெயர்	ஒதுக்கீடு (ரூபாய் இலட்சத்தில்)	பயனாளிகளின் எண்ணிக்கை
5.	பனைத் தொழிலாளருக்கான பனை மரம் ஏறும் உபகரணம் வழங்குவது	10.00	1000
6.	விருத்தாசலம் பீங்கான் அலகிற்கு போன்சைனா கலவை உற்பத்திக்கான அடிப்படை வசதிகள் ஏற்படுத்துதல்	6.00	25
	மொத்தம்	44.44	1043

23. கதர் நெசவாளர்களின் பழைய தறிகளை நவீனப்படுத்துவது :

கதர் பாலியஸ்டர் நெய்வோரின் நாள் ஊதியம் ரூ. 23/-லிருந்து ரூ. 28/-பெறுவதற்கு ஏதுவாக 1994-95-ம் ஆண்டில் தலா ரூ. 1500/- பெறுமானமுள்ள நவீன தறியும் பிற உபகரணங்களும் 500 நெசவாளர்களுக்கு இலவசமாக வழங்கப்பட்டுள்ளன. இதேபோல் 1995-96-ம் ஆண்டிலும் 500 நெசவாளர்களுக்கு நவீன தறிகளும் பிற உபகரணங்களும் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மொத்த செலவினம் ரூ. 7.50 இலட்சமாகும். (ரூ. 1500 x 500 = ரூ. 7.50 இலட்சம்).

24.600 பட்டு நெசவாளர்களுக்கு ஜாக்குவார்டு பெட்டிகள் வழங்குவது :

1994-95-ம் ஆண்டில் புதிய வடிவமைப்பில் பட்டு நெய்து, அதிக ஊதியம் பெறுவதற்கு ஏதுவாக ஒவ்வொன்றும் ரூ. 600/- பெறுமானமுள்ள இரண்டு ஜாக்குவார்டு பெட்டிகள் வீதம் 300 பட்டு நெசவாளர்களுக்கு வழங்கப் பட்டுள்ளன. இதேபோல் 1995-96-ம் ஆண்டிலும் 600 கதர் பட்டு நெசவாளர்களுக்கு ஜாக்குவார்டு பெட்டிகள் வழங்கிட உத்தேசிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மொத்த செலவினம் ரூ. 7.20 இலட்சமாகும். (ரூ. 600 x 2 x 600 = ரூ. 7.20 இலட்சமாகும்)

25. நூல் நூற்பதற்கு 48 கதிர் இராட்டைகள் நிறுவுவது :

25.01 நூல் உற்பத்தியை அதிகரிக்கவும் நூற்போருக்கான நாள் கூலியை ரூ. 30/-லிருந்து ரூ.40/- ஆக உயர்த்திடவும் ஏதுவாக, கதர் கிராமத்தொழில் ஆணைக்குழு ``48 கதிர் இராட்டை களை'' அறிமுகப்படுத்திட நடவடிக்கை எடுத்து வருகிறது.

25.02 48 கதிர் இராட்டையில் உற்பத்தி செய்யப்படும் நூல் நல்ல தரமானதாக இருக்கும். ரூ. 1.00 இலட்சம் மதிப்புள்ள மூன்று 48 கதிர் இராட்டைகள் நிறுவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

26. சூலூர் பஞ்சுபட்டை தயாரிக்கும் அலகிற்கு பஞ்சை அறைத்து நயமாக்கும் இயந்திரம் வாங்குவது :

26.01 தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் மூலம் செயல்படும் 670 கிராமிய நெசவு மையங்களுக்குத் தேவையான பருத்தி மற்றும் பாலியஸ்டர் கலந்த பட்டைகள், சூலூர், ஜலகண்டபுரம் மற்றும் சென்னகிரியில் செயல்படும் பஞ்சு பட்டை தயாரிக்கும் அலகுகளில் தயார் செய்யப்படுகின்றது. இவற்றுள் சூலூரிலுள்ள அலகு பெரியதாகும்.

26.02 சூலூரில் அடிப்படை இயந்திர வசதியினை துரிதப்படுத்துவதற்கு ஏதுவாக, ஒரி லேப் பார்மர், கோம்பர் மற்றும் டிராஃபிரேம்ஸ் அமைத்திட உத்தேசிக்கப்பட்டுள்ளது. இவ்வியந்திரங்கள் பஞ்சிலுள்ள நூற்கத் தகுதியற்ற குட்டை இழை மற்றும் முதிர்ச்சி பெறாத இழைகளை நீக்கி, நூற்பதற்கு நயமான பட்டை தயாரித்து அளிக்கும். இதனால் நூற்போர் ஒரு நாளொன்றிற்கு ரூ.2/- கூடுதல் ஊதியமும், நெய்வோர் ரூ. 5/- கூடுதல் ஊதியமும் பெற ஏதுவாகும்.

26.03 1995-96-ம் ஆண்டில் 20.85 இலட்சம் செலவில் திட்டத்தினை செயலாக்க வாரியம் உத்தேசித்துள்ளது.

27. சென்னை எஸ்பிளனேடிலுள்ள காதி கிராப்டிற்கு 50 கே. வி. மின் உற்பத்தி இயந்திரம் நிறுவுவது :

கதர் வாரியக் கட்டுப்பாட்டில், சென்னையிலுள்ள பிரதான காதிகிராப்ட் மிகப்பெரிய விற்பனை அங்காடியாகும். இப்பிரதான காதிகிராப்டிற்கு ரூ. 3.50 இலட்சம் செலவில் ஒரு

50 கே.வி.மின் உற்பத்தி இயந்திரம் வாங்குவதன்மூலம், தடையின்றி விற்பனை மேற்கொண்டு ஆண்டு முழுவதும் இதன் செயல்திறனை மேம்படுத்தலாம். எனவே, 1995-96 ஆம் ஆண்டில் ரூ. 3.50 இலட்சம் செலவில் ஒரு 50 கே.வி. மின் உற்பத்தி இயந்திரம் நிறுவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

28. பனங்கற்கண்டு படிக வளர்ச்சிக்கான ஆராய்ச்சி மேற்கொள்வது :

தமிழ்நாட்டின் சில பகுதிகளிலிருந்து கிடைக்கும் பதநீரில் பனங்கற்கண்டு தயார் செய்யப்படுகிறது. பிற பகுதிகளிலிருந்து கிடைக்கும் பதநீரிலிருந்து பனங்கற்கண்டு தயாரிப்பதற்கான சில ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது. எனவே ரூ. 1.09 இலட்சம் செலவில் இந்த ஆராய்ச்சிப் பணியினை 1995-96 ஆம் ஆண்டில் அண்ணா பல்கலைக் கழகத்தில் ஒப்படைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

29. பனைத் தொழிலாளருக்கான பனைமரம் ஏறும் உபகரணம் வழங்குவது :

பனைமரம் ஏறுவதிலுள்ள சிரமங்களை குறைத்திடவும், இளைய தலைமுறையினர் இத்தொழிலில் ஆர்வம் காட்டிட ஏதுவாகவும், பனைமரம் ஏறும் உபகரணம் ஒன்றினை அறமுகப்படுத்திட உத்தேசிக்கப்பட்டுள்ளது. இவ்வுபகரணம் ஒன்றின் விலை ரூ. 1,000/- 1995-96 ஆம் ஆண்டில் ரூ, 10.00 இலட்சம் செலவில் 1000 பனைத் தொழிலாளர்களுக்கு, இவ்வுபகரணம் வழங்கிட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

30. விருத்தாச்சலம் பீங்கான் கலைப்பொருள் உற்பத்தி அலகில் போன்சைனா கலவை தயார் செய்வதற்கான அடிப்படை வசதிகள் ஏற்படுத்துவது :

விருத்தாசலத்திலுள்ள பீங்கான் கலைப்பொருள் உற்பத்தி அலகில், புதிய தொழில் நுட்பமுறையில் போன்சைனா கலைவைப் பொருட்கள் செய்திட உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதற்கு, இவ்வலகில் தேவையான உஷ்ணம் தரும் சூளை தேவைப்படுகிறது. இப்புதிய வசதியின்மூலம், அழகிய வடிவமைப்புகள் கொண்ட புதிய கலைப்பொருட்களுக்கு ஏற்ற

கலவையை உற்பத்தி செய்யலாம். 1995-96 ஆம் ஆண்டில் ரூ. 6.00 இலட்சம் செலவில், பால்மில், அஜிடேட்டர், பில்டர் பிரஸ் போன்றவைகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படும். இதன் மூலம் இவ்வலகில் கூடுதலாக 25 கைவினைஞர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும்.

மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்கள்

31. ஒருங்கிணைந்த மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டம் :

மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டப் பகுதிகளில், பழங்குடியினருக்கு பல்வேறு வேலை வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுப்பதற்கென்று, தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் தேனீ வளர்ப்பு, கடுக்காய் பதப்படுத்துவது, புளி பதப்படுத்துவது, பாய் நெசவு செய்வது, மூங்கில் பிரம்புப் பொருட்கள் தயாரிப்பது, கூடை முடைவது, புங்கம் எண்ணெய் பிழிவது போன்ற தொழில்களைச் செயல்படுத்தி வருகிறது. 1994-95-ம் ஆண்டு முடிய ரூ. 369.27 இலட்சம் செலவில் 6901 பழங்குடியினர் பயனடைந்துள்ளனர். 1995-96 ஆம் ஆண்டில் பழங்குடியினர் மேம்பாட்டிற்கென்று ரூ. 45.00 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு குடும்பத்திற்கும் தலா ரூ. 5750/- பெருமானமுள்ள தேனீப் பெட்டி மற்றும் உபகரணங்கள் 600 குடும்பங்களுக்கு வழங்கிட உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலும், பழங்குடியினருக்கென்று புதிய கூட்டுறவு சங்கங்கள் அமைப்பது, தொழிற் பயிற்சி அளிப்பதுடன் 200 பேருக்கு தச்சு மற்றும் கருமாரத் தொழில் கருவிகள் வழங்கிடவும் உத்தேசிக்கப் பட்டுள்ளது.

32. சிறப்பு மேம்பாட்டுத்திட்டம் :

1995-96 ஆம் ஆண்டில் "தாட்கோ" மூலம் இவ்வாரியம் தோல், பாய் மற்றும் செங்கல் தொழில்கள் தொடங்கி 1513 ஏழை ஆதிதிராவிடக் கைவினைஞர்கள் இலாபகரமான வேலை வாய்ப்புப் பெறும் வகையில் ரூ. 386.27 இலட்சம் செலவிடத் திட்டமிடப்பட்டுள்ளது.

33. தொகுப்பு வளர்ச்சித் திட்டம் :

தொகுப்பு வளர்ச்சித் திட்டத்தின் கீழ் அரசு இதுவரை 11,720 கைவினைஞர்கள் பயன் பெறும் பொருட்டு ரூ. 779.133

இலட்சம் அனுமதித்துள்ளது. மேலும் 1995-96-ல் 180 கைவினைஞர்கள் பயன் பெறும் பொருட்டு ரூ. 13.80 இலட்சம் மதிப்பில் திட்டங்கள் செயல்படுத்தப்படவுள்ளது.

34. மேற்குத் தொடர்ச்சிமலை மேம்பாட்டுத் திட்டம் :

இத்திட்டம் 1985-86 ஆம் ஆண்டு முதல் வாரியத்தின் மூலம் திண்டுக்கல் அண்ணா காமராஜர், மதுரை, திருநெல்வேலி, கன்னியாகுமரி, கோவை மற்றும் பெரியார் ஆகிய மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் வழி தேனீ வளர்ப்பு தொழில், நீலகிரி தைலம் எடுத்தல் ஜேரேனியம் எண்ணெய், எலுமிச்சைப்புல் தைலம் எடுத்தல் வேப்பமுத்துக்கள் சேகரிக்கும் திட்டங்களுடன் பனை ஓலைத்தொழில், பிரம்பு மற்றும் மூங்கில் தொழில்களுக்கும் நிதிஉதவி அளிக்கப்படுகிறது. திண்டுக்கல் அண்ணா மாவட்டம் கொடைக்கானல் பகுதியில் வாரியத்திற்குச் சொந்தமான நிலத்தில் ஜேரேனியம் பயிர்ச் செய்யப்பட்டு பின்னர் இத்திட்டம் கைவிடப்பட்டது. 1994-95 ஆம் ஆண்டு வரைக்கும் 3512 நபர்கள் பயன்பெறும் வகையில் ரூ. 57.63 இலட்சம் செலவினில் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன. 1995-96 ஆம் ஆண்டினில் ரூ. 11.71 இலட்சம் மதிப்பீட்டில் 205 நபர்கள் பயன் பெறும் திட்டங்களை வாரியம் நிறைவேற்ற உத்தேசிக்கப்பட்டுள்ளது.

35. மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் :

மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் எலுமிச்சைப்புல் தைலம் மற்றும் நீலகிரி தைலம் தயாரிக்கும் கருவிகள் வழங்குவது, தேனீ வளர்ப்புத் தொழில் அபிவிருத்தி, தனிநபர்கள் பயன்பெறும் வகையில் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நிதியுதவி அளித்தல், தேயிலை நிரப்பும் கயிறு பைகள் தயாரிக்கும் அலகு, உருளைக்கிழங்கு சீவல் தயாரிக்கும் அலகு ஆகிய திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 1994-95 வரை 5416 நபர்கள் பயனடையும் வகையில் ரூ. 128.30 இலட்சம் மதிப்புள்ள திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளது. 1995-96 ஆம் ஆண்டிற்கு 242 நபர்கள் பயன்பெறும் வகையில் ரூ. 28.19 இலட்சத்திற்கு திட்டங்களை வாரியம் நிறைவேற்றிடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

36. விவசாய வளர்ச்சிக்கான பன்னாட்டு நிதியுதவி :

1994-95 ஆம் ஆண்டில் விவசாய வளர்ச்சிக்கான பன்னாட்டு நிதியுதவித் திட்டத்தில் வாரியத்தின் மூலம் 1670 பெண்கள் பயனடைந்துள்ளனர். 1995-96 ஆம் ஆண்டிற்கு தர்மபுரி, சேலம், தென்னாற்காடு-வள்ளலார் மதுரை மற்றும் இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களுக்கான ஐபாட் திட்ட அலுவலரின் எடுத்துரை மகளிர் மேம்பாட்டுக் கழகத்தின் பரிசீலனையில் உள்ளது.

37. வாரியத்தின் நிதிநிலை :

37.01 தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம், அரசின் வரவு செலவு அமைப்பின்படி (1) கதர் நிதி (2) கிராமத் தொழில் நிதி என்ற இருவகைத் தலைப்பின் கீழ் வரவு செலவுத் திட்டங்களைத் தயாரிக்கிறது.

37.02 பம்பாயிலுள்ள கதர் கிராமத் தொழில் ஆணையம், மத்திய அரசு ஒப்புக்கொண்டுள்ள திட்டத்தின்படி பல்வேறு திட்டங்களை செயல்படுத்த வாரியத்திற்கு தேவைப்படுகின்ற நிதியை அளிக்கிறது.

37.03 1994-95 ஆம் ஆண்டில் ஒப்புக்கொள்ளப்பட்ட திட்டத்தின் கீழ் கதர் கிராமத்தொழில் ஆணைக்குழு கீழ்க்கண்டவாறு தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

தொழிலின் பெயர்	மான்யம்	கடன்	வங்கிக் கடன்	மொத்தம்
	(ரூபாய் இலட்சத்தில்)			
1. கதர்	0.07	170.04	483.90	654.01
2. கிராமத் தொழில்கள்	25.93	745.44	472.10	1243.47
மொத்தம்	26.00	915.48	956.00	1897.48

37.04 ஒப்புக்கொள்ளப்பட்ட தொகையான ரூ. 941.48 இலட்சத்தில், கதர் ஆணைக்குழு ரூ. 533.10 இலட்சத்தை வழங்கியுள்ளது. நிலுவைத் தொகையான ரூ. 408.38 இலட்சத்தை கதர் ஆணைக்குழு 50 விழுக்காடு கடன் வசூல் தொகையினை, வாரியம் திரும்பப் பயன்படுத்திக்கொள்ளக் கோரப்பட்டுள்ளது.

37.05. அத்துடன் மாநில அரசால் ஒப்படைக்கப்படும் பல்வேறு சிறப்புத் திட்டங்களை செயல்படுத்தி நிறைவேற்ற மாநில அரசிடமிருந்து வாரியம் நிதியுதவி பெற்று வருகிறது. அரசால் வழங்கப்பட்டுள்ள நிதியுதவி பற்றிய விவரங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

	திருத்திய மதிப்பீடு 1994-95	திட்ட மதிப்பீடு 1995-96
	(ரூபாய் இலட்சத்தில்)	
அ. நிகர செலவு மான்யம்	550.00	550.00
ஆ. தணிக்கைக் கட்டணம்	75.00	75.00
இ. கதர் விற்பனைத் தள்ளுபடி	450.00	500.00
ஈ. ஏனைய சிறப்புத் திட்டங்களை செயல்படுத்துவதற்காக	89.66	94.00
மொத்தம்	1164.66	1219.00

38. பனைவெல்லத்தொழில்

38.01 தமிழ்நாடு, இந்தியாவிலேயே அதிகமான பனைமரங்கள் உள்ளது என்ற முதலிடத்தை வகிக்கிறது. நாட்டிலுள்ள 8.59 கோடி பனைமரங்களில் தமிழ்நாட்டில் மட்டும் 5.19 கோடி பனைமரங்கள் உள்ளன.

38.02 பனைத்தொழிலின் முக்கியத்தைக் கருதியும், அத்தொழிலில் ஈடுபட்டுள்ள கைவினைஞர்கள் மேம்பாடு அடைய வேண்டும் என்ற நோக்கத்துடனும் பனைவெல்லத் தொழிலுக்காக தனியாக வாரியம் ஒன்று 6-1-1995 இல் நிறுவப்பட்டுள்ளது. தற்சமயம்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

பனைத்தொழில், மூன்று அடுக்கு முறையில் ஆரம்ப சங்கங்கள், மாவட்ட சம்மேளனங்கள் மற்றும் மாநில அளவில் ஒரு உயர்மட்ட கூட்டுறவு சம்மேளனம் என்ற அளவில் அபிவிருத்தி செய்யப்பட்டு வருகிறது. உண்பொருட்களான பதனீர், பனைவெல்லம், பனங்கற்கண்டு, பனஞ்சீனி, பனஞ்சீனிமிட்டாய்கள் மற்றும் உண்ணாப் பொருட்களான பனைஓலையில் மற்றும் பனை நாரில் செய்த ஆடம்பர மற்றும் உபயோகப் பொருட்கள், பிரஷ்கள், கட்டிடத் தாராய் முதலிய பொருட்கள் பனைப்பொருட்களில் அடங்கும். பனைத் தொழில் அதிக அளவில் அந்நியச் செலவாணி ஈட்டிக் கொடுக்கிறது. வெளிநாட்டு ஏற்றுமதியும் சேர்த்து 1994-95-ம் ஆண்டு பனந்தும்பு விற்பனை ரூ. 1.25 கோடிக்கு செய்யப்பட்டுள்ளது. 1995-96-ம் ஆண்டு பனந்தும்பு விற்பனை ரூ. 1.70 கோடிக்கு செய்யப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. 1994-95-ம் ஆண்டு பனைப்பொருட்கள் உற்பத்தி ரூ. 121.00 கோடியாகும். 1995-96-ம் ஆண்டு பனைப்பொருட்கள் உற்பத்தி ரூ. 133.00 கோடியாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இத்தொழில் கிராமப்பகுதிகளில் அதிக அளவில் வேலை வாய்ப்பினை அளிக்கிறது. பதனீர் இறக்கும் பொழுது விபத்து ஏற்பட்டால் சம்பந்தப்பட்ட பனைத்தொழில்களின் வாரிசுதாரர்களுக்கு தமிழக அரசால் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ரூ. 10,000/- வழங்கப்பட்டு வருகிறது.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

(50 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)

கொள்கை விளக்கக் குறிப்பு 1995 - 96
பட்டுவளர்ச்சித் துறை

01. இந்தியாவில் பட்டு உற்பத்தி செய்யும் மாநிலங்களிலேயே காஞ்சீபுரம், கும்பகோணம், ஆரணி, இராசிபுரம் மற்றும் தமிழகத்தின் இதர இடங்களிலும் கவர்ச்சிகரமாக வடிவமைக்கப்பட்டு வண்ணமிகு பட்டாடைகள் பாரம்பரியமாக உற்பத்தி செய்யப்படுவதால் தமிழகம் பெருமைக்குரிய ஒரு இடத்தைப் பெற்றுள்ளது. சமுதாயத்தில் நலிந்த பிரிவினருக்கு கூடுதல் வேலைவாய்ப்பைத் தரும் நோக்குடன் கிராமப்புற மற்றும் சிறுதொழில்களை ஊக்குவிப்பதே தமிழக அரசின் முக்கிய கொள்கையாக உள்ளது. இந்த கொள்கையின் அடிப்படையில் தமிழக அரசு, பண்ணை மற்றும் பண்ணைசாரா தொழில்கள் மூலம் கிராமப்புற ஏழை எளிய மக்களுக்கு அதிகவேலை வாய்ப்பினை தரக்கூடிய மற்றும் விவசாயத்தினை அடிப்படை யாகக் கொண்ட பட்டுத்தொழிலுக்கு முன்னுரிமை அளித்து வருகிறது. பட்டுத் தொழிலானது சிறிய முதலீட்டுடன் மிகக் குறுகிய காலத்தில் குறுகிய இடைவெளியில் வருமானம் தருவதும் அதிக அளவில் பெண்களுக்கு வேலை வாய்ப்பைத் தரக்கூடிய விவசாயத்தைச் சார்ந்த தொழில் என்பதால் சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு உகந்த ஒரு தொழிலாகிறது.

02. மாநிலத்தில் பட்டுவளர்ச்சித் தொழிலை விரைவாக வளரச் செய்து விரிவுபடுத்தும் நோக்கத்தோடு பட்டுவளர்ச்சித்துறை பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. பட்டுவளர்ச்சித் துறையின் நடவடிக்கைகளில் பின்வருவனவும் அடங்கும்.

1. விவசாயிகளை புதிய வீரிய மல்பரி இனங்களை பயிர் செய்ய ஊக்குவித்தல்.

2. மல்பரி பயிரிடுதல், பட்டுப்புழு வளர்த்தல், பட்டுநூற்பு மற்றும் விதைநுட்பம் ஆகியவற்றில் பயிற்சியளித்தல்.

3. பட்டுத்தொழிலுக்குத் தேவையான தளவாடங்கள் கொள்முதல் மற்றும் புழுவளர்ப்பகம் கட்டத் தேவையான உதவிகள் செய்தல்.

4. பட்டு விவசாயிகளுக்குத் தரமான, நோயற்ற பட்டுமுட்டைகளை விநியோகித்தல்.

5. பட்டுப்புழு வளர்ப்பில் முறையான நோய் தடுப்பு முறைகளை கையாண்டு தரமான பட்டுக்கூடுகளை உற்பத்தி செய்யவும் விவசாயிகளின் உற்பத்தித் திறனை அதிகரிக்கவும் தேவையான தொழில்நுட்ப உதவிகளைத் தருவது.

6. தனியார் மற்றும் கூட்டுறவு அமைப்பின் மூலம் பட்டு நூற்பு மற்றும் முறுக்கேற்றும் அலகுகளை அமைக்க உதவுதல்.

7. பட்டுக்கூடு மற்றும் பட்டிற்கு சந்தையில் போட்டி விலை மூலம் நியாயமான விலை கிடைக்க தேவையான அங்காடி வசதிகளை செய்து தருதல்.

03. 1979 ம் ஆண்டு பட்டு வளர்ச்சித்துறை ஒரு தனித்துறையாக சீரமைக்கப்பட்ட பின் பட்டு வளர்ப்புத் தொழிலின் வளமான மற்றும் சீரான வளர்ச்சியைக் கருதி விதைப் பண்ணைகள், வித்தகங்கள், பட்டுக்கூடு அங்காடிகள், தொழில் நுட்ப சேவை மையங்கள், பட்டு நூற்பகங்கள் மற்றும் பட்டு பரிமாற்றகம் போன்ற எண்ணற்ற உட்கட்ட அமைப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. உலக வங்கி, சுவிஸ் வளர்ச்சி கூட்டுறவு நிறுவனம், போர்டு நிறுவனம், உலக தொழிலாளர் நிறுவனம் ஆகிய அன்னிய நிதி நிறுவனங்களின் உதவியோடு பல்வேறு வளர்ச்சித் திட்டங்கள் திட்டமிடப்பட்டு செயல்படுத்தப்பட்டுள்ளன. குறிப்பிட்ட பகுதியின் பிரச்சினைகளின் அடிப்படையிலும் நலிவுற்ற மக்களுக்கு அதிக வருவாய் தரும் ஒரு வழிவகையாகவும், பகுதி மற்றும் விவசாயிகள்

நலத்திட்டங்களாக ஒருங்கிணைந்த மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டம், மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம், மேற்கு தொடர்ச்சி மலை அபிவிருத்தி திட்டம், வறட்சிக்கு இலக்காகும் பகுதி திட்டம் போன்ற திட்டங்களிலும் பட்டு வளர்ப்புத் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. இது தவிர மத்திய சிறப்பு உதவி நிதியிலிருந்து ஆதி திராவிடர் இன மக்களின் பொருளாதார வளர்ச்சிக்காக ஒரு தனித்த திட்டமும் செயல்பாட்டில் இருந்து வருகிறது. இந்த திட்டங்களின் தற்போதைய செயல்பாட்டு நிலவரங்களும் 1995 96 ஆண்டிற்கான திட்டமிடப்பட்டுள்ள திட்டங்களின் விபரங்களும் கீழே தரப்பட்டுள்ளன.

04. தேசிய பட்டு வளர்ச்சித் திட்டம்

தேசிய பட்டு வளர்ச்சித் திட்டமானது உலக வங்கி மற்றும் சுவிஸ் வளர்ச்சி கூட்டுறவின் உதவியோடு 1989-90 ம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வரும் ஒரு முக்கியமான திட்டமாகும். ஆரம்ப காலத்தில் மாநில்த்தின் கீழ்குறிப்பிட்ட 10 மாவட்டங்களில் மட்டும் 5 ஆண்டுகளில் இது செயல்படுத்தப்பட்டது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1. தர்மபுரி
2. சேலம்
3. திருச்சிராப்பள்ளி
4. வட ஆற்காடு அம்பேத்கார்
5. பெரியார்
6. கோயமுத்தூர்
7. மதுரை
8. திண்டுக்கல் அண்ணா
9. நீலகிரி
10. திருவண்ணாமலை சம்புவராயர்

பின்னர் இத்திட்டம் 1996 டிசம்பர் திங்கள் வரை நீட்டிக்கப்பட்டு கீழ்க்கண்ட 7 மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

1. செங்கல்பட்டு எம்.ஜி.ஆர்
2. விழுப்புரம் ராமசாமி படையாச்சியார்
3. தென்னாற்காடு வள்ளலார்
4. தஞ்சாவூர்
5. நாகப்பட்டினம் காயிதே மில்லத்
6. காமராஜர்
7. திருநெல்வேலி கட்டபொம்மன்

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

தேசிய பட்டு வளர்ச்சித் திட்டமானது மாநிலத்தில் 13500 ஹெக்டேர் (33750 ஏக்கர்) பரப்பில் மல்பரி பயிரை விஸ்தரிக்கவும் 1.69 லட்சம் நபர்களுக்கு வேலை வாய்ப்பினை ஏற்படுத்தி தரும் நோக்கங்களையும் கொண்டது. திட்டம் ஆரம்பிப்பதற்கு முன் 700 மெ.டன் என்றளவில் இருந்த வருடாந்திர கச்சாப்பட்டு உற்பத்தி திட்ட இறுதியில் 1666 மெ.டன் என்ற அளவை அடையுமென எதிர்பார்க்கப்படுகிறது. மேலும் சிறந்த தொழில் நுட்ப முன்னேற்றங்களினாலும் நவீன மயமாக்கப்பட்ட செயல்பாடுகளினாலும் உற்பத்தி திறனில் பெருத்த முன்னேற்றம் அடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்த முயற்சி காரணமாக 1 ஏக்கர் இறவை மல்பரி சாகுபடியில் அப்பொழுதிருந்த சராசரி பட்டுக்கூடு உற்பத்தி 180 கிலோ என்பதிலிருந்து 240 கிலோ என்றளவிற்கும் மானாவாரியில் சராசரி 51 கிலோ என்றள விலிருந்து 60 கிலோ என்றளவிற்கும், 100 முட்டைத் தொகுதிகளுக்கான சராசரி உற்பத்தி 22.500 கிலோ என்பதிலிருந்து 30.000 கிலோ அளவிற்கும் உயரும். இதனோடு கூடவே பட்டு விதை உற்பத்தியில் மாநிலம் தன்னிறைவையும் எட்டும். இத்திட்டத்தின் மொத்த செலவினம் நிதி நிறுவனங்களிலிருந்து வர வேண்டிய கடன் பகுதியான ரூ. 19.77 கோடி, மான்யமாக ரூ. 64.85 லட்சம் மற்றும் உதவி வளர்ச்சிப் பணிகளுக்காக அரசின் பங்கான

ரூ. 40.78 கோடி ஆகியவற்றோடு தற்போது ரூ. 62.85 கோடி என்றளவில் உள்ளது. பயனீட்டாளர்களும் ரூ. 1.65 கோடி அளவிற்கு இத்திட்டத்தில் பங்கேற்பார்கள்.

மேற்குறிப்பிட்ட இந்த நோக்கங்களை நிறைவேற்றும் பொருட்டு இந்த திட்டத்தில் பட்டு வளர்ச்சித் துறை கீழ்கண்ட பல்வேறு பணிகளை மேற்கொண்டுள்ளது.

அ. வீரிய இன மல்பரி நாற்றுக்களை உற்பத்தி செய்து கூடுதல் பரப்பில் அவைகளை விஸ்தரிப்பது.

ஆ. விவசாயிகளுக்கும் நூற்பாளர்களுக்கும் பயிற்சி வசதிகளை ஏற்படுத்துதல்.

இ. விவசாயிகள் மற்றும் பட்டு நூற்பாளர்களுக்குத் தேவையான கடன் உதவிக்கு ஏற்பாடுகள் செய்தல்.

ஈ. அரசு வித்தகங்களில் பட்டு முட்டை உற்பத்தியை அதிகரிக்க வித்தகங்களில் உற்பத்தி திறனை உயர்த்துதல் மற்றும் தனியார் வித்தகங்கள் உருவாகுவதை ஊக்குவித்தல்.

உ. விதைப் பண்ணைகள், பட்டுக்கூடு அங்காடிகள், தொழில் நுட்ப சேவை மையங்கள், பயிற்சி மையங்கள் போன்றவற்றில் அடிப்படை வசதிகளை பெருக்குதல்.

ஊ. பட்டு நூற்புத் தொழில் தனியார் மயமாவதை ஊக்குவித்தல்.

திட்டக்கால மல்பரி விரிவாக்கக் குறியீடான 13500 ஹெக்டேரில் டிசம்பர் ’94 வரை 14067 ஹெக்டேர் என்றளவிற்கு மல்பரி சாகுபடி செய்யப்பட்டு சாதனை அடையப்பட்டுள்ளது. 1991-92 லிருந்து 1993-94 வரை நிலவிய பட்டு நூல் விலை இறக்கம் மற்றும் அதிக அளவிலான பெப்ரின் நோய் தாக்குதல் ஆகியன பட்டுத் தொழிலின் உற்பத்தி திறனை வெகுவாக பாதித்துள்ளது. இதனால் 1994-95 ஆண்டு இறுதியில் 10500 மெ.டன் பட்டுக்கூடு உற்பத்தி என்பதும் 1105 மெ.டன் கச்சாப்பட்டு உற்பத்தி என்பதற்கு பதிலாக டிசம்பர் ’94 இறுதியில் 5111 மெ. டன் பட்டுக்கூடுகளும் 538 மெ. டன் கச்சாப் பட்டுமே உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. திட்ட ஆரம்பம் முதல் திட்டக்குறியீடான 14690 என்ற இலக்கத்திற்கு பதிலாக 11092 புதிய விவசாயிகள் பயிற்சி பெற்றுள்ளார்கள். இது குறியீட்டின் பேரில் 75 விழுக்காட்டிற்கும் மிஞ்சிய சாதனை. மேலும் 2966 விவசாயிகள் பட்டுப்புழு வளர்ப்பில் தீவிர பயிற்சியும் 1362 நபர்கள் பட்டு நூற்பிலும் பயிற்சி பெற்றுள்ளனர். இத்திட்டத்தில் திட்டகாலத்தில் இதுவரை 10166 பெண் விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு அவர்கள் பட்டுப்புழு வளர்ப்பில்

ஈடுபடும் அரிய சாதனையும் செய்யப்பட்டுள்ளது. இவர்களில் 6008 மகளிருக்கு தேவையான பயிற்சியும் 5856 பேர்களுக்கு தேவையான கடன்களும் வழங்கப்பட்டுள்ளன. ஒப்பளிக்கப்பட்ட மொத்த முதலீடான 41.43 கோடியில் ரூ. 26.57 கோடி டிசம்பர் 1994 இறுதி வரை செலவழிக்கப்பட்டுள்ளது. மாநிலத்தில் பல்வேறு பகுதிகளில் துறைக்குத் தேவையான விரிவான உள்கட்டமைப்புகளும் ஏற்படுத்தப் பட்டுள்ளன. தற்போதுள்ள ஒரு சில வசதிகள் மேம்படுத்தப்பட்டு நவீனமயமாக்கப்பட்டுள்ளன. சேலத்தை தலைமை யிடமாகக் கொண்டு ஒரு கண்காணிப்புப் பொறியாளரை தலைவராகக் கொண்ட ஒரு பொறியியல் பிரிவு இத்திட்டத்தின்கீழ் மேற் கொள்ளப்பட்ட கட்டுமானப் பணிகளை செய்து முடிக்க பட்டுவளர்ச்சி துறையில் ஏற்படுத்தப் பட்டுள்ளது. இப்பணிகளை விரைவாக முடிக்கும் நோக்குடன் திருச்சி மற்றும் மதுரையை தலைமையிடமாகக் கொண்ட 2 புதிய பொறியியல் பிரிவுகள் சமீபத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

1995-96 ம் ஆண்டு இத்திட்ட செயல்பாட்டில் 7ம் ஆண்டு ஆகும். 1995-96 ம் ஆண்டில் இத் திட்டத்தின் முக்கிய பணிகள் கீழே தரப் பட்டுள்ளன.

04.1. மல்பரி விரிவாக்கம்

1995-96 ம் ஆண்டில் 2310 ஹெக்டேர் அளவில் மல்பரி விரிவாக்கம் செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளது. இப்பணிக்காக அரசுப் பண்ணைகள் மற்றும் பரவலாக்கப்பட்ட நாற்றுப் பண்ணைகளிலும் 289 லட்சம் வீரிய இன மல்பரி நாற்றுக்கள் உற்பத்தி செய்யப்படும். இவற்றில் 25 இலட்சம் நாற்றுக்கள் 200 ஹெக்டேர் பரப்பிற்கு விவசாயிகளுக்கு வழங்கப்படும். இரண்டாம் கட்ட திட்டத்தில் உள்ள 7 புதிய மாவட்டங்களுக்கு 1 நாற்றுக்கு 5 பைசா என்றளவில் மான்யம் வழங்கப்படும்.

04.2. பயிற்சி திட்டங்கள்

அ. விவசாயிகள் பயிற்சி திட்டம்

பட்டு வளர்ப்பை மேற்கொள்ளும் புதிய விவசாயிகளுக்கு மல்பரி தோட்ட பராமரிப்பு மற்றும் பட்டுப்புழு வளர்ப்பு ஆகியவற்றின் நுட்பங்களை கற்றுத்தரும் பொருட்டு இவ்வாண்டின் திட்டத்தில் புதிதாக சேர்க்கப்பட்ட 7 மாவட்டங் களைச் சார்ந்த 1000 விவசாயிகளுக்கு பயிற்சிக்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது. மாவட்ட வாரியான குறியீடு கீழே தரப்பட்டுள்ளது.

வ.எண்	மாவ்ட்டம்	பயிற்சி பெற உள்ள விவசாயிகளின் எண்ணிக்கை
1.	திருநெல்வேலி கட்டபொம்மன்	200
2.	காமராஜர்	200
3.	விழுப்புரம் ராமசாமி படையாச்சியார்	100
4.	தென்னாற்காடு வள்ளலார்	100
5.	தஞ்சாவூர்	100
6.	நாகப்பட்டினம் காயிதே மில்லத்	100
7.	செங்கற்பட்டு எம்.ஜி.ஆர்.	200
	மொத்தம்	1000

ஒவ்வொரு விவசாயியும் பயிற்சி கால மாத ஊதியமாக ரூ. 150/ ம், ரூ 150/- மதிப்பிற்கான பயிற்சி தளவாடங்களும் வழங்கப்படுவார். முன்னேறிய விவசாயிகளின் தோட்டங்கள், அரசு பண்ணைகள் மற்றும் விவசாய சேவை மையங்கள் ஆகியவை மூலமாக பயிற்சி வழங்கப்படும். பயிற்சியாளர்களில் 30% பெண்களாக இருப்பர்.

ஆ. தீவிர விவசாயிகள் பயிற்சித் திட்டம்

இத்திட்டத்தில் தற்போது பட்டு விவசாயம் செய்து வருகிற விவசாயிகளில் புதிய மாவட்டங்களைச் சேர்ந்த 250 பேர்களுக்கு மல்பரி பயிர் செய்தல் மற்றும் பட்டுப்புழு வளர்ப்பு ஆகியவற்றில் துறையின் விவசாயிகள் பயிற்சி மையங்களில் ஒவ்வொருவருக்கும் ரூ. 500/ உதவித் தொகையோடு ஒரு மாத கால தீவிர பயிற்சி அளிக்கப்படும். பயிற்சியின் மாவட்ட வாரியான ஒதுக்கீடு கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

வ.எண்	மாவட்டம்	பயிற்சிபெற உள்ள விவசாயிகள் எண்ணிக்கை
1.	திருநெல்வேலி கட்டபொம்மன்	75
2.	காமராஜர்	25
3.	விழுப்புரம் ராமசாமி படையாச்சியார்	50
4.	தென்னாற்காடு வள்ளலார்	25
5.	தஞ்சாவூர்	25
6.	நாகப்பட்டினம் காயிதே மில்லத்	25
7.	செங்கல்பட்டு எம்.ஜி.ஆர்	25
	மொத்தம்	250

இப்பயிற்சி புதிய தொழில் நுட்பங்கள் மற்றும் புழு வளர்ப்பு முறைகளை விவசாயிகள் தெரிந்து கையாண்டு அதன் மூலம் அவர்களது உற்பத்தி திறனை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டது. இப்பயிற்சியில் 30% அளவிற்கு மகளிருக்கு நடமாடும் பயிற்சி மையம் மூலமாக அவர்கள் இருக்கும் ஊர்களுக்கு அருகிலேயே பயிற்சி வழங்கப்படும்.

இ) நூற்பாளர் பயிற்சித் திட்டம்

திட்டத்தின் புதிய மாவட்டங்களில் உள்ள 5 பட்டு நூற்பு பயிற்சி மையங்கள் மூலமாக மாதந்தோறும் ரூ. 250/- உதவித் தொகையோடு 100 நபர்களுக்கு பட்டு நூற்பில் பயிற்சியளித்து, பட்டு நூற்பிற்குத் தேவையான திறமையான நபர்களை கிடைக்கச் செய்வது. திட்ட விபரம் கீழ் வருமாறு :

வ.எண்	இடம்	வட்டம்	மாவட்டம்	பயிற்சியாளர் எண்ணிக்கை
1.	காஞ்சிபுரம்	காஞ்சிபுரம்	செங்கல்பட்டு எம்.ஜி.ஆர்	20
2.	தஞ்சாவூர்	தஞ்சாவூர்	தஞ்சாவூர்	20
3.	விழுப்புரம்	விழுப்புரம்	விழுப்புரம் இராமசாமி படையாச்சியார்	20
4.	நன்னகரம்	தென்காசி	திருநெல்வேலி கட்டபொம்மன்	20
5.	விருதுநகர்	விருதுநகர்	காமராஜர்	20
			மொத்தம்	100

இப்பயிற்சி பல்வேறு நூற்பு அமைப்புக்களான சர்க்கா/பேசின் மற்றும் பல்முனை நூற்பு இயந்திரம் ஆகியவற்றில் பயிற்சி போன்றவை களோடு 6 மாத காலத்திற்கு வழங்கப்படுகிறது.

ஈ. மற்ற பயிற்சி திட்டங்கள்

மேற்குறிப்பிட்ட பயிற்சிகள் மட்டுமல்லாது முதலீட்டாளர் வளர்ச்சித் திட்டங்கள் தேவையான தொழில் நுட்பம் மற்றும் பட்டு நூற்பில் தொழில் முனைவோருக்கான நிர்வாகத் திறனை மேம் படுத்தும் பொருட்டு மத்திய பட்டு வாரியத்தின் உதவியோடு திட்டமிடப்பட்டுள்ளது. தவிர தனியார் வித்தகத்தினர் விதைக்கூடு உற்பத்தியாளர் ஆகி யோர்களின் தொழில் திறனை மேம்படுத்த சிறப்பான பயிற்சிகள், மகளிர் நிலையை உணர்ந்து செயல்படும் பயிற்சிகள், விரிவாக்க அலுவலர் களுக்கான புத்தாக்கப் பயிற்சிகள் போன்றவை களும் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

04.3 ஆதார விதைப் பண்ணைகள்

பட்டு விவசாயிகளுக்கு தேவைப்படும் பெரும் அளவிலான பட்டு முட்டைகள் தா3, தா2, தா1 என 3 நிலைகளில் தொடர்ச்சியாக 3 பரம்பரையாக வளர்க்கப்பட்டு அவற்றில் பெருக்கப்பட்ட விதைக் கூடுகளைக் கொண்டு உற்பத்தி செய்யப்படுகின்றன.

இவ்வகை பட்டுக்கூடுகள் தனியாக, அவற்றிற்கென சூழ்நிலை அமைத்துள்ள ஒதுக்குப்புறமான பட்டுப்பண்ணைகளில் விதை உற்பத்திக்காக வளர்க்கப்படுகின்றன. ஒவ்வொரு நிலையிலும் இவ்வகை விதைக்கூடுகளை தேர்வு செய்ய அதற்கென நிர்ணயிக்கப்பட்ட வரைமுறைகள் உள்ளன. அவ்வரைமுறைகளின்படி தேர்வு செய்யப்பட்டால் மட்டுமே அடுத்த விதை பெருக்கத்திற்கு பயன்படுத்தப்படுகின்றன.

நாட்டின மற்றும் இரு சுழற்சி இன பட்டுப்புழு இனங்களை பாதுகாக்கவும், தேவையான விதைக் கூடுகளை உற்பத்தி செய்யும் நோக்குடன் 26 ஆதார விதைப் பண்ணைகளை துறை ஏற்படுத்தியுள்ளது. அவைகளின் விபரம் கீழ் வருமாறு:

வ.எண்	இடம்	வட்டம்	மாவட்டம்
தாய்வழிநிலை 3			
1.	ஆவலப்பள்ளி	ஒசூர்	தர்மபுரி
2.	பேரிகை	ஒசூர்	தர்மபுரி
3.	சித்தேரி	கரூர்	தர்மபுரி
4.	கல்கொண்டப்பள்ளி	தேன்கனி கோட்டை	தர்மபுரி

5.	தளி	தேன்கனிகோட்டை	தர்மபுரி
6.	குன்னூர்	குன்னூர்	நீலகிரி

<u>தாய்வழிநிலை 2</u>

7.	ஓசூர்	ஓசூர்	தர்மபுரி
8.	மசக்கல்	கோத்தகிரி	நீலகிரி
9.	உத்தனப்பள்ளி	தேன்கனிகோட்டை	தர்மபுரி
10.	உளிமங்கலம்	தேன்கனிகோட்டை	தர்மபுரி
11.	மேலகிரி	தேன்கனிகோட்டை	தர்மபுரி
12.	ஊத்தங்கரை	ஊத்தங்கரை	தர்மபுரி
13.	ஆனைக்கட்டி	கோயம்புத்தூர் (வடக்கு)	கோயம்புத்தூர்
14.	உறாசனூர்	சத்தியமங்கலம்	பெரியார்
15.	மசினகுடி	கூடலூர்	நீலகிரி
16.	மயிலாடும்பாறை	ஆண்டிப்பட்டி	மதுரை
17.	ஏற்காடு	ஏற்காடு	சேலம்
18.	அத்தனாவூர்	திருப்பத்தூர்	வடஆற்காடு அம்பேத்கார்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

<u>தாய்வழிநிலை 1</u>

19.	காட்டுநாயக் கன்தொட்டி	ஒசூர்	தர்மபுரி
20.	சிறுமலை	திண்டுக்கல்	திண்டுக்கல் அண்ணா
21.	கொல்லட்டி	தேன்கனிக்கோட்டை	தர்மபுரி
22.	மாதஉறள்ளி	சத்தியமங்கலம்	பெரியார்
23.	பிளவக்கல்	திருவில்லிப்புத்தூர்	காமராஜர்
24.	செங்கோட்டை	செங்கோட்டை	திருநெல்வேலி கட்டபொம்மன்
25.	கேர்மாளம்	சத்தியமங்கலம்	பெரியார்
26.	கொல்லிமலை	நாமக்கல்	சேலம்

இந்த விதைப்பண்ணைகள் 1995-96 ஆம் ஆண்டிற்கு தேவையான ஆதார விதைக்கூடுகளை உற்பத்தி செய்யும் என எதிர்பார்க்கப்படுகிறது. நாட்டினத்தில் 7 லட்சம் தாய்வழி நிலை1 இன முட்டைகள் விதைக் கூடுகள் உற்பத்தியாளர்களுக்கு வழங்கப்பட்டு 1400 லட்சம் விதைக்கூடுகள் உற்பத்தி செய்யப்படும். அதேபோல 800 லட்சம் இரு சுழற்சிஇன விதைக்கூடுகள் உற்பத்தி செய்ய 4 லட்சம் இரு

சுழற்சி இன தாய்வழிநிலை1 முட்டைகள் பயன் படுத்தப்படும். இவ்விதைக்கூடுகள் அரசு மற்றும் தனியார் வித்தகங்களுக்கு வழங்கப்பட்டு 300 லட்சம் கலப்பின பட்டு முட்டைகள் தயாரிக்கப்படும்.

04.4 வித்தகங்கள்

அ. அரசு வித்தகங்கள்

இந்த ஆண்டு தமிழ்நாட்டில் துறையால் நடத்தப்படும் வித்தகங்கள், தனியார் வித்தகங்கள் மற்றும் மத்திய பட்டு வாரிய வித்தகங்கள் ஆகியவைகள் மூலமாக 300 லட்சம் கலப்பின முட்டைகள் உற்பத்தி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. 10 அரசு வித்தகங்கள் கீழ்கண்ட இடங்களில் அமைக்கப் பட்டுள்ளன.

வ. எண்	இடம்	வட்டம்	மாவட்டம்
1.	ஓசூர்	ஓசூர்	தர்மபுரி
2.	கிருஷ்ணகிரி	கிருஷ்ணகிரி	தர்மபுரி
3.	பென்னாகரம்	பென்னாகரம்	தர்மபுரி
4.	வாணியம்பாடி	வாணியம்பாடி	வடாற்காடு அம்பேத்கார்
5.	சேலம்	சேலம்	சேலம்
6.	கோயமுத்தூர்	கோயம்புத்தூர் (தெற்கு)	கோயம்புத்தூர்
7.	தாளவாடி	சத்தியமங்கலம்	பெரியார்
8.	திருச்சி	திருச்சிராப்பள்ளி	திருச்சிராப்பள்ளி
9.	திண்டுக்கல்	திண்டுக்கல்	திண்டுக்கல் அண்ணா
10.	குற்றாலம்	தென்காசி	திருநெல்வேலி கட்டபொம்மன்

உலக வங்கியின் நியமங்களின்படி அரசு வித்தகங்கள் திட்டத்தின் 4 ஆம் ஆண்டு முதல் வணிக அடிப்படையில் செயல்பட வேண்டும். அதற்காக ஒவ்வொரு வித்தகத்திற்கும் அவற்றின் நடைமுறை செலவினங்களை மேற்கொள்ளும் பொருட்டு ஒரு சுழல்நிதி தரப்பட்டுள்ளது. ஆரம்ப நாட்களில் ரூ. 37.20 லட்சங்களாக இருந்த இந்த சுழல்நிதி டிசம்பர் '94 இறுதியில் ரூ. 261.99 லட்சங்களாக பெருகியுள்ளது என்பது மகிழ்ச்சி தரும் செய்தி.

ஆ. தனியார் வித்தகங்கள்:

இத்திட்டத்தின்கீழ் 22 தனியார் வித்தகங்களுக்கு உரிமங்கள் வழங்கப்பட்டு அவை கீழ்க்கண்ட இடங்களில் செயல்படுகின்றன.

வ.எண்	இடம்	எண்ணிக்கை	வட்டம்	மாவட்டம்
1.	பேரிகை	1	ஓசூர்	தர்மபுரி
2.	ஓசூர்	3	ஓசூர்	தர்மபுரி
3.	தளி	1	தேன்கனிக் கோட்டை	தர்மபுரி
4.	தர்மபுரி	3	தர்மபுரி	தர்மபுரி
5.	கிருஷ்ணகிரி	2	கிருஷ்ணகிரி	தர்மபுரி

6.	ஈரோடு	2	ஈரோடு	பெரியார்
7.	சேலம்	2	சேலம்	சேலம்
8.	ஆலங்காயம்	1	திருப்பத்தூர்	வடஆற்காடு அம்பேத்கார்
9.	திண்டுக்கல்	1	திண்டுக்கல்	திண்டுக்கல் அண்ணா
10.	குளித்தலை	1	குளித்தலை	திருச்சிராப்பள்ளி
11.	கோயமுத்தூர்	1	கோயம்புத்தூர்	கோயமுத்தூர்
12.	பொள்ளாச்சி	1	கோயம்புத்தூர்	கோயம்புத்தூர்
13.	காவேரிப்பட்டினம்	1	கிருஷ்ணகிரி	தர்மபுரி
14.	இராசிபுரம்	1	இராசிபுரம்	சேலம்
15.	உடுமலைப் பேட்டை	1	உடுமலைப் பேட்டை	கோயம்புத்தூர்
	மொத்தம்	22		

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இவ்வித்தகங்கள் 1995-96ம் ஆண்டு திட்டமிட்ட உற்பத்தி அளவான 140 லட்சங்கள் கலப்பின பட்டு முட்டைகளை உற்பத்தி செய்யும் என எதிர் பார்க்கப்படுகிறது.

04.5 தொழில்நுட்ப சேவை மையங்கள்

தமிழ்நாட்டிலுள்ள 92 தொழில்நுட்ப சேவை மையங்களில் 67 தேசியப் பட்டு வளர்ச்சித் திட்டத்தின்கீழ் ஏற்படுத்தப்பட்டு கீழ்க்கண்ட இடங்களில் செயல்படுகின்றன.

வ.எண்	இடம்	வட்டம்	மாவட்டம்
1.	தர்மபுரி	தர்மபுரி	தர்மபுரி
2.	லளிகம்	தர்மபுரி	தர்மபுரி
3.	அரூர்	அரூர்	தர்மபுரி
4.	பாப்பி ரெட்டிப்பட்டி	கரூர்	தர்மபுரி
5.	பர்கூர்	கிருஷ்ணகிரி	தர்மபுரி
6.	காவேரிப்பட்டினம்	கிருஷ்ணகிரி	தர்மபுரி
7.	வேப்பினபள்ளி	கிருஷ்ணகிரி	தர்மபுரி
8.	காரிமங்களம்	கிருஷ்ணகிரி	தர்மபுரி
9.	பென்னாகரம்	பென்னாகரம்	தர்மபுரி
10.	பாலக்கோடு	பாலக்கோடு	தர்மபுரி
11.	பாப்பாரப்பட்டி	பென்னாகரம்	தர்மபுரி
12	பேரிகை	ஓசூர்	தர்மபுரி
13.	பாகானூர்	ஓசூர்	தர்மபுரி

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

14.	ஓசூர்	ஓசூர்	தர்மபுரி
15.	ஓசூர் (விதை)	ஓசூர்	தர்மபுரி
16.	சூளகிரி	ஓசூர்	தர்மபுரி
17.	தேன்கனிக்கோட்டை	தேன்கனிக்கோட்டை	தர்மபுரி
18.	தளி (உள்ளூர்)	தேன்கனிக்கோட்டை	தர்மபுரி
19.	தளி	தேன்கனிக்கோட்டை	தர்மபுரி
20.	ஆன்செட்டி	தேன்கனிக்கோட்டை	தர்மபுரி
21.	கெலமங்கலம்	தேன்கனிக்கோட்டை	தர்மபுரி
22.	சேலம்	சேலம்	சேலம்
23.	ஆத்தூர்	ஆத்தூர்	சேலம்
24.	மேச்சேரி	மேட்டூர்	சேலம்
25.	நாமக்கல்	நாமக்கல்	சேலம்
26.	எடப்பாடி	சங்ககிரி	சேலம்
27.	ராசிபுரம்	ராசிபுரம்	சேலம்
28.	உடுமலைப்பேட்டை	உடுமலைப்பேட்டை	கோயம்புத்தூர்
29.	அன்னூர்	அன்னூர்	கோயம்புத்தூர்
30.	துடியலூர்	கோயம்புத்தூர்	கோயம்புத்தூர்
31.	நெகமம்	பொள்ளாச்சி	கோயம்புத்தூர்
32.	அவிநாசி	அவினாசி	கோயம்புத்தூர்
33.	பி.என். பாளையம்	கோயம்புத்தூர்	கோயம்புத்தூர்

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

34.	தாராபுரம்	தாராபுரம்	பெரியார்
35.	பவானி	பவானி	பெரியார்
36.	கோபி	கோபி	பெரியார்
37.	குண்டாடம்	தாராபுரம்	பெரியார்
38.	சிம்டஉறள்ளி	சத்தியமங்கலம்	பெரியார்
39.	தாளவாடி 1	சத்தியமங்கலம்	பெரியார்
40.	தாளவாடி 2	சத்தியமங்கலம்	பெரியார்
41.	குத்தியாலத்தூர்	சத்தியமங்கலம்	பெரியார்
42.	காவேரிப்பாக்கம்	ஆற்காடு	வடாற்காடு அம்பேத்கார்
43.	திருப்பத்தூர்	திருப்பத்தூர்	வடாற்காடு அம்பேத்கார்
44.	ஆற்காடு	ஆற்காடு	வடாற்காடு அம்பேத்கார்
45.	குடியாத்தம்	குடியாத்தம்	வடாற்காடு அம்பேத்கார்
46.	நாட்ராம்பள்ளி	திருப்பத்தூர்	வடாற்காடு அம்பேத்கார்
47.	ஆலங்காயம்	திருப்பத்தூர்	வடாற்காடு அம்பேத்கார்
48.	கீழ்பென்னத்தூர்	திருவண்ணாமலை	திருவண்ணாமலை சம்புவராயர்

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

49.	திருவண்ணாமலை	திருவண்ணாமலை	திருவண்ணாமலை சம்புவராயர்
50.	வத்தலக்குண்டு	நிலக்கோட்டை	திண்டுக்கல் அண்ணா
51.	வேடசந்தூர்	வேடசந்தூர்	திண்டுக்கல் அண்ணா
52.	சானார்பட்டி	திண்டுக்கல்	திண்டுக்கல் அண்ணா
53.	பழனி	பழனி	திண்டுக்கல் அண்ணா
54.	தேனி	பெரியகுளம்	மதுரை
55.	கரூர்	கரூர்	திருச்சிராப்பள்ளி
56.	முசிறி	முசிறி	திருச்சிராப்பள்ளி
57.	பாளையூர்	லால்குடி	திருச்சிராப்பள்ளி
58.	காஞ்சிபுரம்	காஞ்சிபுரம்	செங்கல்பட்டு எம்.ஜி.ஆர்
59.	செங்கல்பட்டு	செங்கல்பட்டு	செங்கல்பட்டு எம்.ஜி.ஆர்
60.	தஞ்சாவூர்	தஞ்சாவூர்	தஞ்சாவூர்
61.	வேதாரண்யம்	வேதாரண்யம்	நாகை காயிதே மில்லத்
62.	ஸ்ரீவில்லிப்புத்தூர்	ஸ்ரீவில்லிப்புத்தூர்	காமராஜர்

63.	அருப்புக்கோட்டை	அருப்புக்கோட்டை	காமராஜர்
64.	செஞ்சி	செஞ்சி	விழுப்புரம் ராமசாமி படையாச்சியார்
65.	விழுப்புரம்	விழுப்புரம்	விழுப்புரம் ராமசாமி படையாச்சியார்
66.	அடைக்கலப்பட்டினம்	தென்காசி	திருநெல்வேலி கட்டபொம்மன்
67.	கடையநல்லூர்	தென்காசி	திருநெல்வேலி கட்டபொம்மன்

இந்த மையங்கள் கீழ்க்கண்ட பணிகளை செய்து வருகின்றன.

1. மல்பரி நடவு செய்து பட்டுப்புழு வளர்ப்பை மேற்கொள்ள புதிய விவசாயிகளை ஊக்குவிப்பது.

2. இவ்விவசாயிகள் பட்டுப்புழு வளர்ப்பை முறையாக மேற்கொள்ளவும், நோய் தடுப்பு நடவடிக்கைகளிலும் உதவுவது.

3. அவர்களுக்குத் தேவையான தொழில் நுட்பம் மற்றும் மற்ற உதவிகளை செய்தல்.

4. நிதி நிறுவனங்களிலிருந்து அவர்களுக்குத்

தேவையான கடனுக்கு ஏற்பாடு செய்தல்

5. விவசாயிகளுக்கு தேவையான பயிற்சியளித்தல்

6. அவர்கள் உற்பத்தி செய்த பட்டுக்கூடுகளை விற்பதில் உதவுதல்

04.6 பட்டுக் கூடு அங்காடிகள்

அ) விதைக்கூடு அங்காடிகள்

பட்டு விதைக்கூடு அங்காடிகள் ஓசூர், தேன்கனிக்கோட்டை மற்றும் கோயமுத்தூரில் செயல்பட்டு வருகின்றன. இத்திட்டத்தின் மூலம் இவ்வங்காடிகளுக்குத் தேவையான உபகரணங்கள், உள்கட்டமைப்புகள் ஆகியவை வழங்கப்பட்டதின் மூலம் பட்டுத் தொழிலின் உயிர் நாடியாக இவ்வங்காடிகள் தொடர்ந்து பணியாற்றும்.

ஆ) வணிக பட்டுக்கூடு அங்காடிகள்

தமிழ்நாட்டில் கீழ்க்கண்ட 23 இடங்களில் பட்டுக்கூடு அங்காடிகள் இயங்கி வருகின்றன.

வ.எண்	இடம்	வட்டம்	மாவட்டம்
1.	ஓசூர்	ஓசூர்	தர்மபுரி
2.	தர்மபுரி	தர்மபுரி	தர்மபுரி
3.	பென்னாகரம்	பென்னாகரம்	தர்மபுரி

1995 ஏப்ரல் 24]

4.	கிருஷ்ணகிரி	கிருஷ்ணகிரி	தர்மபுரி
5.	வாணியம்பாடி	வாணியம்பாடி	வடாற்காடு அம்பேத்கார்
6.	திருவண்ணாமலை	திருவண்ணாமலை	திருவண்ணாமலை சம்புவராயர்
7.	காஞ்சிபுரம்	காஞ்சிபுரம்	செங்கல்பட்டு எம்.ஜி.ஆர்
8.	சேலம்	சேலம்	சேலம்
9.	திருச்சி	திருச்சிராப்பள்ளி	திருச்சிராப்பள்ளி
10.	தஞ்சாவூர்	தஞ்சாவூர்	தஞ்சாவூர்
11.	விழுப்புரம்	விழுப்புரம்	விழுப்புரம் ராமசாமி படையாச்சியார்
12.	ஈரோடு	ஈரோடு	பெரியார்
13.	கோயமுத்தூர்	கோயம்புத்தூர்	கோயம்புத்தூர்
14.	தாளவாடி	சத்தியமங்கலம்	பெரியார்
15.	தேனி	பெரியகுளம்	மதுரை
16.	திண்டுக்கல்	திண்டுக்கல்	திண்டுக்கல் அண்ணா
17.	நன்னகரம்	தென்காசி	திருநெல்வேலி கட்டபொம்மன்
18.	ஸ்ரீவில்லிப்புத்தூர்	ஸ்ரீவில்லிப்புத்தூர்	காமராஜர்
19.	புதுக்கோட்டை	புதுக்கோட்டை	புதுக்கோட்டை

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

20.	வேதாரண்யம்	வேதாரண்யம்	நாகை காயிதே மில்லத்
21.	சாத்தான்குளம்	சாத்தான்குளம்	வ.உ.சிதம்பரனார்
22.	நாகர்கோவில்	அகஸ்தீஸ்வரம்	கன்னியாகுமரி
23.	சிவகங்கை	சிவகங்கை	பசும்பொன் முத்துராமலிங்க தேவர்

இந்த அங்காடிகள் 1995-96 ஆம் ஆண்டில் ரூ. 40.00 கோடி மதிப்புடைய 40 லட்சம் கிலோ கலப்பின பட்டுக்கூடுகளை பற்று வரவு செய்யும் என எதிர்பார்க்கப்படுகிறது. தமிழ்நாட்டில் 13 விவசாயிகள் தகவல் மையங்கள் கீழ்க்கண்ட இடங்களில் செயல்பட்டு வருகின்றன.

வ.எண்	இடம்	வட்டம்	மாவட்டம்
1.	ஒசூர்	ஒசூர்	தர்மபுரி
2.	பென்னாகரம்	பென்னாகரம்	தர்மபுரி
3.	தர்மபுரி	தர்மபுரி	தர்மபுரி
4.	திருவண்ணாமலை	திருவண்ணாமலை	திருவண்ணாமலை சம்புவராயர்
5.	சேலம்	சேலம்	சேலம்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

6.	கோயம்புத்தூர்	கோயம்புத்தூர்	கோயம்புத்தூர்
7.	திருச்சி	திருச்சிராப்பள்ளி	திருச்சி ராப்பள்ளி
8.	திண்டுக்கல்	திண்டுக்கல்	திண்டுக்கல் அண்ணா
9.	தேனி	பெரியகுளம்	மதுரை
10.	வாணியம்பாடி	வாணியம்பாடி	வடாற்காடு அம்பேத்கார்
11.	கிருஷ்ணகிரி	கிருஷ்ணகிரி	தர்மபுரி
12.	ஈரோடு	ஈரோடு	பெரியார்
13.	தேன்கனிக்கோட்டை	தேன்கனிக்கோட்டை	தர்மபுரி

04.7 பட்டு நூற்பு அலகுகள்

பட்டு வளர்ச்சிக்கு உதவும் உள்கட்ட வசதியாக பட்டு வளர்ச்சித்துறை கீழ்க்கண்ட 13 மையங்களில் பட்டு நூற்பு அலகுகளை இயக்கி வருகிறது.

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

வ.எண்	இடம்	வட்டம்	மாவட்டம்
1.	சோகத்தூர்	தர்மபுரி	தர்மபுரி
2.	வாணியம்பாடி	வாணியம்பாடி	வடாற்காடு அம்பேத்கார்
3.	சேலம்	சேலம்	சேலம்
4.	திருச்சி	திருச்சிராப்பள்ளி	திருச்சிராப்பள்ளி
5.	தாளவாடி	சத்தியமங்கலம்	பெரியார்
6.	தேனி	பெரியகுளம்	மதுரை
7.	நன்னகரம்	தென்காசி	திருநெல்வேலி கட்டபொம்மன்
8.	ஓசூர்	ஓசூர்	தர்மபுரி
9.	புதுக்கோட்டை	புதுக்கோட்டை	புதுக்கோட்டை
10.	வேதாரண்யம்	வேதாரண்யம்	நாகை காயிதே மில்லத்
11.	சாத்தான்குளம்	சாத்தான்குளம்	வ.உ.சிதம்பரனார்
12.	நாகர்கோவில்	அகஸ்தீஸ்வரம்	கன்னியாகுமரி
13.	சிவகங்கை	சிவகங்கை	பசும்பொன் முத்துராமலிங்க தேவர்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

1995 ஏப்ரல் 24]

இவ்வலகுகளின் மூலமாக இந்த ஆண்டில் 24 மெட்ரிக் டன் கோரா பட்டு உற்பத்தியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. இவ்வலகுகள் பயிற்சிபெற்ற பணியாளர்களை பெற்றுள்ளது.

நடைமுறை மூலதன உதவி :

சிறு நூற்பாளர்களின் நடைமுறை மூலதன தேவைகளுக்கு உதவும் வகையில் ஒரு 'வட்டி மான்யத் திட்டம்' நடைமுறையில் உள்ளது. இதன்மூலம் பட்டு நூற்பாளர்கள் பெற்ற வங்கிக் கடனுக்கு ஆகும் வட்டியில் 2.5 சதவீதம் அளவுக்கு வட்டி மான்யம் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் பொருட்டு மத்திய பட்டு வாரியத்திடம் இருந்து பெறப்பட்ட ரூ. 80.00 லட்சத்தில் ரூ. 39.92 லட்சங்கள் பயன்படுத்தப்பட்டு 1053 பட்டு நூற்பு கருவிகளுக்காக 196 பட்டு நூற்பாளர்கள் பயனடைந்துள்ளனர். இதில் மீதமாக உள்ள தொகை 1995-96ம் ஆண்டில் பயன்படுத்தப்பட உள்ளது.

பல்முனை நூற்பு இயந்திரம் நிறுவுதல்

உயர்ந்த தரமுள்ள பட்டு நூலை உற்பத்தி செய்யும் நோக்கோடு மேம்படுத்தப்பட்ட பல்முனை நூற்பு இயந்திரத்தை ஊக்குவிக்க திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் இந்த ஆண்டில் இவ்வியந் திரத்தை நிறுவும் பட்டு நூற்பாளர் ஒவ்வொருவருக்கும் ரூ 11,250/- க்கு மிகாத 25

சதவிகித மான்யம் தந்து இவ்வகையான இயந்திரத்தை நிறுவுதலை ஊக்குவிக்க எண்ணியுள்ளது. இதுவரை இவ்வகையான மூன்று நூற்பு அலகுகள் மட்டுமே தமிழ்நாட்டில் இயங்கி வருகின்றன என்றாலும், இந்த ஆண்டில் இவ்வகையான அலகுகள் அதிக அளவில் துவங்கப்படும் என எதிர்பார்க்கப் படுகிறது.

04.8 அண்ணா பட்டு பரிமாற்றகம், காஞ்சிபுரம்

கச்சாப்பட்டு நூலுக்கு ஒரு போட்டி விலையை ஏற்படுத்தும் வாய்ப்புகளை தர காஞ்சிபுரத்தில் அண்ணா பட்டு பரிமாற்றகம் செயல்படுகிறது. 126.31 மெட்ரிக் டன் எடையுள்ளதும், ரூ 13.23 கோடி மதிப்புள்ளதுமான கச்சாப்பட்டு இப்பரிமாற்றகத்தில் டிசம்பர் '94 முடிய விற்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டில் 250 மெட்ரிக் டன் அளவும் ரூ. 35.00 கோடி மதிப்புள்ளதுமான கச்சாப்பட்டு விற்பனையாகும் என எதிர்பார்க் கப்படுகிறது. ரூ 95.00 லட்சம் மதிப்புடைய பரிமாற்றகத்திற்கு தேவையான கட்டிடங்களும், தளவாடங்களும் வாங்கும் பணியும் விரைவில் முடியும் என எதிர்பார்க்கப்படுகின்றது. தவிர பட்டு நூற்பாளர்களிடையே அதிக வரவேற்பை பெற்றுள்ள, வாரத்தில் ஒரு நாள் சேலத்தில் நடைபெறும் நடமாடும் பரிமாற்றகத் திட்டம் இந்த ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

மேலும் ஒரு பட்டு பதனப்படுத்தி சோதனை செய்யும் நிலையம், மத்திய பட்டு வாரியத்தால் காஞ்சிபுரத்தில் நிறுவப்பட்டு கச்சாப்பட்டின் தரத்தை இலவசமாக சோதனை செய்வதன் மூலம் அவர்களிடையே தர உணர்வை ஏற்படுத்தி வருகிறது. இடம் மற்றும் குறைவான ஆள் வசதி காரணமாக பட்டு பரிமாற்றகத்திற்கு வரும் பட்டுத் தொகுதிகளில் 25 சதவீத அளவிற்கே தற்போது சோதனை செய்யப்படுகின்றன. மத்திய பட்டு வாரியம் இச்சோதனை நிலையத்திற்கு, தேவையான தனித்த கட்டிடத்தை இந்த ஆண்டில் நிறுவ உள்ளது. இப்புதிய கட்டிடம் மற்றும் தேவையான வசதிகளை மேம்படுத்துவதன் மூலம் எல்லா பட்டுத் தொகுதிகளுமே, அதன் தரத்திற்கு சோதனை செய்யும் நிலை ஏற்படும்.

04.9 பட்டு நூற்பாளர்களுக்கு அண்ணா பட்டு பரிமாற்றகத்தில் வழங்கப்படும் கடன் வசதிகள்

பட்டுச் சந்தையில் விலைச் சரிவு உள்ள காலங்களில், பட்டு நூற்பாளர்களுக்கு பொருளாதார உதவி செய்யும் நோக்கத்துடன் அண்ணா பட்டு பரிமாற்றகம், பரிமாற்றகத்தில் இருப்பு வைக்கப் பட்ட பட்டின் மதிப்பில் 75 சதவீதத்தை, முன்பணமாக தரும் திட்டத்தை செயல்படுத்தி வருகிறது. இந்தவசதிகள் பாதகமான சந்தை நிலைகளில், சிறுநூற்பாளர்களுக்கு அதிக உதவி செய்வதாக

உள்ளது. இவ்வசதியினை பெரும்பாலான நூற்பாளர்கள் குறுகிய காலத்திற்கு பயன்படுத்திக் கொண்டு, கடனை திரும்பச் செலுத்தியுள்ளனர். இப் பணிக்காக ரூ. 50 இலட்சம் அண்ணா பட்டு பரிமாற்றகத்திற்கு வழங்கப்பட்டுள்ளது, டிசம்பர் 1994 முடிய 194 பட்டு நூற்பாளர்கள் இவ்வசதியை பயன்படுத்தி ரூ. 71.00 இலட்சம் அளவிற்கு பயன் பெற்றுள்ளார்கள்.

04.10 ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி

பட்டு வளர்ச்சித் துறையைச் சார்ந்த தனித்த ஆராய்ச்சி மைய உதவி ஏதும் இல்லாத நிலையில், மாநிலத்தில் உள்ள பல்கலைக்கழகங்கள் ஆராய்ச்சிப் பணிகளை மேற்கொள்ளும் பொருட்டு அவற்றிற்கான தொகையை மத்திய பட்டு வாரியம் உதவி செய்ய முன்வந்துள்ளது. பட்டுத் தொழிலின் பல்வேறு வகையான பகுதிகளிலும், இவ்வாராய்ச்சி இருக்கும். இதன் அடிப்படையில் 6 பல்கலைக் கழகங்களில் இருந்து பெறப்பட்ட 14 ஆராய்ச்சித் திட்ட முன்மொழிவுகள் மொத்தம் ரூ. 160.87 இலட்சம் அளவிற்கு ஒப்புக் கொள்ளப்பட்டு அதில் ரூ. 102.25 இலட்சங்கள் விடுவிக்கப்பட்டுள்ளன. இந்த ஆராய்ச்சி விளைவுகள் களப் பிரச்சினைகளை எதிர்கொள்ளவும், தரத்தை உயர்த்தவும், உற்பத்தித் திறனை அதிகரித்து நுட்பத்தை உயர்த்தவும் உதவும்.

04.11 அரசு சாரா நிறுவனங்களுக்கு உதவிகள்

பெரிய அளவில் மகளிரை அவர்களது பொருளாதார மேம்பாட்டிற்காகவும், அதற்கு வகையூட்டும் நோக்கத்தோடு, தேசிய பட்டு வளர்ச்சித் திட்டம், அரசு சாரா நிறுவனங்களை இத்திட்டத்தில் ஈடுபடுத்த வகை செய்துள்ளது. இத்திட்டத்தின் கீழ் மத்திய பட்டு வாரியம் ரூ. 178.68 இலட்சங்கள் மதிப்பிற்கு 34 அரசு சாரா நிறுவனங்களின் முன்மொழிவுகளை ஏற்று ஒப்பளித்துள்ளது. இதில் ரூ. 70.33 லட்சம் அளவிற்கு இத் திட்டம் ஏற்றுக் கொள்கிறது. இதுவரை ரூ. 37.544 லட்சம் மத்திய பட்டு வாரியத்திடம் இருந்து பெறப்பட்டு அதில் அரசு சாரா நிறுவனங்களுக்கு ரூ. 29.079 லட்சங்கள் விடுவிக்கப்பட்டுள்ளன.

04.12 பட்டு தொழிலின் மூலம் பெண்களின் முன்னேற்றம்

பெண்களின் மேம்பாட்டு உணர்வுகளை உருவாக்கி அதனை ஊக்குவிக்கும்வகையில் தேசீய பட்டு வளர்ச்சித் திட்டத்தின் கீழ் பட்டுத் தொழிலில் பெண்கள் ஆண்டு ஜுன் 1995 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

பெண்கள் பட்டுத் தொழிலை மேற்கொள்ளத் தேவையான வங்கிக் கடன் பெறவும்,

பெண்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தவும் மாவட்ட அளவிலும், மாநில அளவிலும் கருத்தரங்குகள் நடத்தப்பட்டு வருகிறது.

பெண்களை பட்டு நூற்புத் தொழிலில் ஈடுபடுத்தும் வகையில் பெண் தொழில் முனைவோர் ஊக்குவிப்பு முகாங்கள் நடத்தப்படுகின்றன. பெண்களை ஊக்குவிக்கும் நோக்கத்தோடு பட்டுக்கூடு அங்காடிகளில் பட்டுக்கூடுகளை பெண்கள் எளிதாக கையாளுவதற்குத் தேவையான ட்ராலிகள், பிளாஸ்டிக் கூடைகள் அளித்தல் மற்றும் ஓய்வு அறைகள் ஏற்படுத்துதல் போன்ற புதிய யுக்திகள் இவ்வாண்டில் எஞ்சியுள்ள காலத்திற்கு திட்டமிடப்பட்டுள்ளது. நன்கு பலனுள்ள வகையில் பெண்களுக்கு கடன் வழங்குவதற்கும் வங்கியாளர்கள் முழு ஈடுபாட்டுடன் பெண்கள் முன்னேற்றத்தில் பங்கெடுப்பதற்கும் மாவட்ட அளவிலான கடன் வழங்கும் கருத்தரங்குகள் கீழ்காணும் இடங்களில் நடைபெறுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

1. ஈரோடு
2. கோவை
3. வடஆற்காடு அம்பேத்கார்
4. திருச்சி
5. மதுரை
6. திருநெல்வேலி கட்டபொம்மன்

இந்த கருத்தரங்குகளை தொடர்ந்து தர்மபுரியில் மாநில அளவிலான கருத்தரங்கு நடைபெறும். இதுபோலவே மத்திய பட்டு வாரியங்கள் உதவியால் பட்டு நூற்புத் தொழிலில் குறிப்பாக பெண்களுக்காக தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்த உத்தேசிக்கப் பட்டுள்ளது. பட்டு நூற்புத் தொழிலில் பெண்களின் நிர்வாகம் மற்றும் தொழில் நுட்பு திறமைகளை மேம்படுத்துவதற்கு கீழ்காணும் 7 இடங்களில் பயிற்சி அளிக்கப்படுகிறது.

1. தருமபுரி
2. பாலக்கோடு
3. ஓசூர்
4. வாணியம்பாடி
5. ஈரோடு
6. கோவை
7. தென்காசி

கீழ்க்காணும் 7 இடங்களிலுள்ள பட்டுக்கூடு அங்காடிகளில் பட்டுக்கூடுகளை எளிதாக கையாளுவதற்காக ட்ராலிகள், பிளாஸ்டிக் கூடைகள், ஓய்வறைகள் மற்றும் சிற்றுண்டி விடுதிகள் போன்ற வசதிகள் பெண்களுக்கு மட்டும் ஏற்படுத்தப்படும்.

1. தர்மபுரி

2. சேலம்

3. வாணியம்பாடி

4. ஓசூர்

5. கோவை

6. தேனி

7. தென்காசி

தமிழ்நாடு மற்றும் கர்நாடகாவிலுள்ள பட்டுவளர்ப்பு தொழில் நடைபெறும் முக்கிய பகுதிகளுக்கும் மைசூர் மற்றும் பெங்களூரில் அமைந்துள்ள மத்திய பட்டு வாரியத்தின் கீழ் செயல்படும் பயிற்சி மையங்களுக்கும் 5 பெண் பட்டு விவசாய குழுக்களை பட்டு வளர்ப்பு கல்வி சுற்றுலாவாக அழைத்துச்செல்ல திட்டமிடப்பட்டுள்ளது.

05. பகுதி மேம்பாட்டுத் திட்டங்கள்

நமது மாநிலத்தில் செயலாக்கத்திலுள்ள பகுதி மேம்பாட்டுத் திட்டங்களில், பட்டுத் தொழில் முக்கிய பங்கு வகிக்கிறது. இத்திட்டங்களில் இதுவரையில் அடைந்துள்ள முன்னேற்றம் மற்றும் 1995-96ம் ஆண்டிற்கான திட்டம் கீழே தரப்பட்டுள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY சட்டமன்றப் பேரவை வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

05.1 மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம்

1981-82ம் ஆண்டிலிருந்து நீலகிரி மாவட்டத்தில் இத்திட்டம் செயலாக்கத்தில் உள்ளது. இம்மாவட்டத்திலுள்ள விவசாயிகளுக்கு கீழே தரப்பட்டுள்ள சலுகைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

1. வீரிய இன மல்பரி நாற்றுக்கள் இலவசமாக வழங்குதல்.

2. ஒவ்வொரு விவசாயிக்கும் ரூ. 150/ பயிற்சி உதவித் தொகை வழங்குதல்

3. ரூ. 150/ பெறுமானமுள்ள இலவச பயிற்சி பொருட்கள் வழங்குதல்

4. புழு வளர்ப்புக்கான ரூ. 500/ பெறுமான அடிப்படை சாதனங்கள் இலவசமாக வழங்குதல்.

1989-90ம் ஆண்டிலிருந்து ரூ. 150.76 இலட்சம் இத்திட்டத்தின்கீழ் 1675 விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

1995 96ம் ஆண்டில் 260 விவசாயிகளுக்கு ரூ. 7.58 இலட்சம் பெறுமானமுள்ள உதவிகள் வழங்கப்படும்.

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[1995 ஏப்ரல் 24

05.2 மேற்கு தொடர்ச்சி மலை அபிவிருத்தி திட்டம்

இத்திட்டத்தின்கீழ் கீழ்க்கண்ட மாவட்டங்களில் பட்டு வளர்ச்சித் திட்டங்கள் செயலாக்கப்படுகிறது.

1. கோயம்புத்தூர்
2. திண்டுக்கல் அண்ணா
3. காமராஜர்
4. திருநெல்வேலி கட்டபொம்மன்
5. கன்னியாகுமரி
6. மதுரை

இத்திட்டத்தின்கீழ் விவசாயிகளுக்கு கீழ்க்கண்ட உதவிகள் வழங்கப்படுகின்றன.

1. வீரிய இன மல்பரி நாற்றுக்கள் மான்ய விலையில் வழங்குதல்
2. பட்டுப்புழு வளர்ப்பு பயிற்சிக்கு ரூ. 150/ பயிற்சித் தொகை வழங்குதல்.
3. ரூ. 150/- க்கான பயிற்சிப் பொருட்கள் இலவசமாக வழங்குதல்

4. 0.50 ஏக்கர் மல்பரி சாகுபடி செய்துள்ள விவசாயிகளுக்கு ரூ. 750/ பெறுமானமுள்ள மற்றும் 0.25 ஏக்கர் மல்பரி சாகுபடி செய்துள்ள விவசாயிகளுக்கு ரூ 500/ பெறுமானமுள்ள ஆதார புழு வளர்ப்பு தளவாடங்கள் இலவசமாக வழங்குதல்.

1989-90ம் ஆண்டிலிருந்து ரூ. 80.60 லட்சங்கள் செலவில் 1365 ஏக்கர் மல்பரிசாகுபடி பரப்பளவில் இத்திட்டம் செயலாக்கப்பட்டுள்ளது. 1995-96ம் ஆண்டில் ரூ. 29.83 லட்சங்கள் செலவில் 580 விவசாயிகள் பயனடையும் வகையில் 220 ஏக்கர் பரப்பளவில் மல்பரி சாகுபடி செய்யப்படும்.

இத்திட்டத்தின்கீழ் உற்பத்திச் செய்யப்படும் பட்டு கூடுகளை நூற்கும் வகையில் தேனி மற்றும் கோவையில் 24 தொழில் முனைவோர்களை கொண்டு இரண்டு பட்டு நூற்பு தொழிற் பேட்டைகள் துவங்கப்படும்.

05.3 ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம்

இத்திட்டம் கீழ்க்கண்ட மலைப்பகுதிகளில் செயல் படுத்தப்பட்டு வருகிறது.

[1995 ஏப்ரல் 24

1. சேலம் மாவட்டத்திலுள்ள கொல்லிமலை

2. சேலம் மற்றும் விழுப்புரம் இராமசாமி படையாச்சியார் மாவட்டத்திலுள்ள கல்வராயன் மலைகள்

3. சேலம் மற்றும் திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலுள்ள பச்சை மலைகள்

4. திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டத்திலுள்ள ஜவ்வாது மலைகள்

5. வடாற்காடு அம்பேத்கார் மாவட்டத்திலுள்ள ஜவ்வாது, ஏலகிரி மலைகள்.

6. தர்மபுரி மாவட்டத்திலுள்ள சித்தேரி மலைகள்

7. சேலம் மாவட்டத்திலுள்ள ஆர்நூத்து மலைகள்

8. சேலம் மாவட்டத்திலுள்ள ஏற்காடு மலைகள்

பழங்குடியினரை பட்டுத் தொழிலை மேற்கொள்ளும் வகையில், ஊக்குவிக்க கீழ்க்கண்ட உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

1. மல்பரி நாற்றுக்களை மான்ய விலையில் வழங்குதல்

2. புழு வளர்ப்புப் பயிற்சிக்கு ரூ. 150/ பயிற்சி தொகை வழங்குதல்

3. ரூ. 150/- பெறுமானமுள்ள பயிற்சி பொருட்கள் இலவசமாக வழங்குதல்

4. புழு வளர்ப்பு தளவாடங்கள் வாங்குவதற்கு மற்றும் புழு வளர்ப்பு கூடம் கட்டுவதற்கு கடன் மற்றும் மான்யம் வழங்குதல்

பழங்குடியினருக்கு மலைப்பகுதிகளிலுள்ள 'லேம்ப்' கூட்டுறவுச் சங்கங்களிலிருந்து கடன் வழங்கப் படுகிறது. புதிய மலைப்பகுதிகளான பச்சை மலை, கல்ராயன் மலை மற்றும் ஏற்காடு மலைப் பகுதியிலுள்ள பழங்குடியினருக்கு ஒவ்வொரு பயனடைபவரின் மொத்த அலகு தொகை ரூ 7000/ல் ரூ 6300/ அளவில் 90 சதவீத மான்யமாகவும், பழைய மலைப்பகுதிகளான கொல்லி மலை, கல்ராயன், ஜவ்வாது, ஏலகிரி, சித்தேரி மற்றும் ஆர்நூத்து மலைப்பகுதிகளில் உள்ள பழங்குடி யினருக்கு 75 சதவீத மான்யமாக ரூ 5250/ வழங்கப்படுகிறது.

1989-90ம் ஆண்டிலிருந்து ரூ 374.48 லட்சங்கள் செலவில் 2847 பழங்குடியினர் இத்திட்டத்தின் கீழ் பயன்பெற்றுள்ளனர். 1995-96 ஆண்டில் ரூ. 96.496 லட்சங்கள் செலவில் 630 பழங்குடியினர் இத்திட்டத்தின்கீழ் பயன்பெறுவர் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

[1995 ஏப்ரல் 24

05.4 வறட்சிக்கு இலக்காகும் பகுதி மேம்பாட்டுத் திட்டம்

வறட்சிக்கு இலக்காகும் பகுதி திட்டத்தின்கீழ், கீழ்க்கண்ட மாவட்டங்களில் பட்டுத் தொழில் விரிவாக்கம் நடைபெற்று வருகிறது.

1. வ.உ. சிதம்பரனார்
2. திருநெல்வேலி கட்டபொம்மன்
3. பசும்பொன் முத்துராமலிங்க தேவர்
4. இராமநாதபுரம்
5. புதுக்கோட்டை

வீரிய இன வறட்சியை தாங்கக்கூடிய மல்பரி வகைகள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகின்றன. 1991-92ம் ஆண்டிலிருந்து 1729.40 ஏக்கர் பரப்பளவில், மல்பரி சாகுபடி செய்யப்பட்டு ரூ 701.937 லட்சங்கள் செலவில் இத்திட்டம் செயலாக்கப்பட்டுள்ளது. 1995-96 ஆம் ஆண்டில் ரூ.12.80 லட்சம் செலவில் 1000 விவசாயிகள் பயன்பெறும் வகையில் இத்திட்டம் செயலாக் கப்படும்.

05.5 மத்திய சிறப்பு உதவி நிதித் திட்டம்

ஆதி திராவிட மக்கள் மேம்பாடு அடையும் வகையில் இத்திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. 6000 நிலமுள்ள விவசாயிகள் மற்றும் 4000 நிலமற்ற ஆதி

திராவிட குடும்பங்கள் இத்திட்டத்தின்கீழ் நிதி உதவிபெற்று பயன்பெறும் வகையில் இத்திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. முதலில் 20 மாவட்டங்களிலுள்ள 80 வட்டாரங்களில் அமுல்படுத்தப்படவிருந்த இத்திட்டம் இம்மாவட்டத்திலுள்ள எல்லா வட்டாரங்களிலும் விரிவுபடுத்த அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. தாட்கோ நிறுவனத்தின் மூலம் ஆதி திராவிட குடும்பங்களுக்கு வங்கி கடன், 50 சதவீதம் மான்யம், மற்றும் 25 சதவீத விளிம்புத் தொகை வழங்கப்படும். நிலமுள்ள ஆதி திராவிட குடும்பத்திற்கு மொத்த உதவித் தொகையான ரூபாய் 24,100/ ல் ரூ 12050/ ம் மான்யமாகவும், ரூ 6025/ விளிம்புத் தொகையாகவும், ரூ 6025/ கடனாகவும் வழங்கப்படும். இதுவரை இத்திட்டத்தின்கீழ் 1656 ஆதி திராவிட பயனாளிகள் ரூ. 1-168 கோடி உதவி பெற்றுள்ளனர்.

06 டான்சில்க் காஞ்சிபுரம்

மாநில கதர் வாரியம் மற்றும் கூட்டுறவு பட்டு தொழில் உற்பத்தி சங்கங்களுக்கு தேவையான கச்சா மற்றும் முறுக்கேற்றிய பட்டுநூல் வழங்கும் வகையில் 'டான்சில்க்' ஒரு மாநில கூட்டுறவு சங்கமாக செயல்பட்டு வருகிறது. 1994-95ம் ஆண்டு ரூ. 37.54 கோடி பெறுமானமுள்ள 308 மெ.டன் பட்டு நூல் டிசம்பர் '94 வரை விற்பனை செய்யப்பட்டுள்ளது. 1995-96 ஆண்டில் ரூ.54.00

கோடி மதிப்புள்ள 420 மெ.டன் பட்டுநூல் விற்பனை செய்யப்படும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

07. தேசிய பட்டு நூல் வங்கித் திட்டம்

பட்டின் சந்தை விலையில் ஏற்படும் அதிக ஏற்றத்தாழ்வுகள், சென்ற சில ஆண்டுகளில் தொழிலை பாதிக்கும் ஒரு காரணமாக இருந்தது. இதன் கடுமையான பாதிப்புகளை கட்டுப்படுத்தும் நோக்கத்தோடும், புது நிறுவனங்கள் இத்தகைய நிகழ்வின்போது தலையிட்டு விலையை கட்டுப் படுத்தும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இந்த நோக்கத்தில் தமிழ்நாட்டின் முதன்மை பட்டுக்கூட்டுறவு இணையமான 'டான்சில்க்' இத்திட்டத்தை தமிழ்நாட்டில் செயல்படுத்தும் அமைப்பாக தேர்வு செய்யப்பட்டு, மைய அரசிடம் இருந்து முதல் தவணைத் தொகையாக ரூ. 25.00 லட்சங்களை பெற்றுள்ளது. இத்திட்டத்தினை செயல்படுத்துவதன் மூலம் விவசாயிகள், நூற்பாளர்கள், முறுக்காளர்கள் ஆகிய இத்தொழிலில் ஈடுபடுத்தப்பட்டுள்ள அனைவரின் மனதிலும் ஒரு நம்பிக்கையினையூட்டி அனைத்து வகையிலும் பட்டு வளர்ச்சியை ஊக்குவிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

08. 1995-96 க்கான புதிய திட்டங்கள் (பகுதி 2.)

கீழே உள்ள திட்டங்கள் ரூ. 17.90 இலட்சம் செலவில் 1995-96 ஆண்டில் செயல்படுத்தப்படும்.

வ.எண்	திட்டத்தின் பெயர்	மொத்த மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்)
1.	இருசுழற்சி இழை பட்டுக்கூடுகள் மற்றும் நூல் உற்பத்தி ஊக்கத்தொகை	15.50
2.	விதைக்கூடு உற்பத்தி பகுதிகளான தர்மபுரி மற்றும் கோவையில் ஊசிஈ தடுப்பு வலை மான்யவிலையில் வழங்குதல்	2.40
	மொத்தம்	17.90

பட்டுத்தொழில் வளர்ச்சியை ஊக்குவிக்கும் வகையிலும், உலகளவில் ஏற்கப்படும் பட்டுநூல் தரத்தினை பெறவும், 1995-96ம் ஆண்டு இருசுழற்சியின் கலப்பின கூடுகள் மற்றும் கச்சாப்பட்டு உற்பத்தி செய்யும் திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும். இத்திட்டத்தில் பங்கு பெறும் விவசாயிகள் மற்றும் பட்டு நூற்பாளர்களுக்கு ஊக்கத்தொகை வழங்கப்படும். இத்திட்டத்தின் கீழ் விவசாயிகள் உற்பத்தி செய்யும் ஒவ்வொரு கிலோ இருசுழற்சி இன கூடுகளுக்கும் ரூ. 15/ வீதமும்,

இக்கூடுகளிலிருந்து எடுக்கப்படும் ஒரு கிலோ பட்டுநூலுக்கு ரூ.100/ வீதமும், ஊக்கத்தொகை வழங்கப்படும். 1995-96ம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் சுமார் 1500 விவசாயிகளினால் 1,05,000 கிலோ கூடுகள் உற்பத்தியும், இதிலிருந்து 10 டன் அளவு தரமான பட்டுநூலை 100 நூற்பாலைகளால் உற்பத்தி செய்யப்படும் என்று எதிர்பார்க்கப் படுகிறது. இதற்காக ரூ. 15 லட்சம் ஊக்கத் தொகையாக செலவிடப்படும். ஊசிஈ தாக்கு தலினால் பட்டுத் தொழிலில் ஈடுபட்டிருக்கும் விவசாயிகள் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளார்கள். குறிப்பாக விதைக்கூடு உற்பத்தி பகுதிகளில் ஊசிஈ தாக்குதலினால் கூட்டுப்புழுக்கள் கொல்லப்பட்டு முட்டைத்தொகுதிகள் உற்பத்தி பாதிக்கப்பட்டு வருகிறது. இதனை தவிர்க்கும் பொருட்டு தருமபுரி மற்றும் கோயம்புத்தூர் மாவட்டங்களிலுள்ள விவசாயிகளுக்கு நைலான்வலை வழங்கப்படும். ஒவ்வொரு விவசாயிக்கும் மீட்டர் ஒன்றுக்கு ரூ. 15 வீதம் 20 மீட்டர் (50 சதவீதம் மான்யவிலையில்) 800 விவசாயிகளுக்கு ரூ. 2.40 லட்சம் செலவில் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தினால் பட்டு முட்டை உற்பத்தி கணிசமாக உயரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மேலே குறிப்பிட்டுள்ள அனைத்து திட்டங் களின் செயல்பாட்டினால் மாநிலத்தில் 1995-96ம்

ஆண்டில் பட்டுநூலின் உற்பத்தி 1200 மெ.டன்னாக இருக்கும் என்றும் எதிர்பார்க்கப் படுகிறது. மேலும் இதனால் 28875 நபர்களுக்கு வேலை வாய்ப்பை அளிக்கும் நிலை உருவாகும்.

09. 1995-96 ஆண்டில் இத்திட்டங்களில் மொத்த செலவு ரூ. 1759.09 இலட்சங்களாக இருக்கும். மத்திய சிறப்பு நிதியுதவிக்குத் தேவையான செலவினங்கள் இதில் சேர்க்கப்படவில்லை.

1995-96 ஆண்டிற்கான திட்ட மதிப்பீடு

(ரூ. இலட்சத்தில்)

1.	திட்டப்பணிகள் (தேசிய பட்டுவளர்ச்சிதிட்டம் சேர்த்து)	
	அ.பகுதி - 1	1322.91
	ஆ. பகுதி - 2	17.90
2.	திட்டமிடாப் பணிகள்	356.33
3.	ஒருங்கிணைந்த மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டம்	49.44
4.	மத்திய நிதியுதவியுடன் கூடிய திட்டங்கள்	
	அ. மேற்கு தொடர்ச்சி மலை அபிவிருத்தி திட்டம்	7.50
	ஆ. மலைப்பகுதி மேம்பாட்டு திட்டம்	3.61
5.	தனி நிறுவனங்களுக்கு நிதியுதவி (டான்சில்க்)	1.40
	மொத்தம்	1759.09

தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம்

தமிழக அரசின், ஊரகத் தொழில்களை ஊக்குவிக்கும் கொள்கையை கருத்தில் கொண்டு, தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம், தமிழக கைவினைப் பொருட்களை மேம்படுத்துவதிலும் பல்வேறு கைவினைப் பொருட்களை தயாரிப்பதில் ஈடுபட்டிருக்கும் கைவினைஞர்களின் நலனைப் பாதுகாப்பதையும் முக்கிய நோக்கமாகக் கொண்டிருக்கின்றது. இக்கழகம் வணிக நோக்கோடு 1973 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப் பட்டிருந்தாலும், கைவினைஞர்களின் நலனைப் பாதுகாப்பதையும் மற்றும் தமிழ்நாட்டு தொன்மைவாய்ந்த கைவினைப் பொருட்களை மேம்படுத்துவதையும் குறிக்கோளாக கொண்டு செயல்பட்டு வருகிறது.

மூலதனம்

இக்கழகத்தின் அங்கீகரிக்கப்பட்ட மூலதனம் 1973 இல் இக்கழகம் ஆரம்பிக்கப்பட்ட பொழுது ரூ. 50 இலட்சமாக இருந்தது. அதன் பிறகு ரூ 100 இலட்சமாக 1979 இல் உயர்த்தப்பட்டது. மேலும் ரூ 150 இலட்சமாக 1980 இலும் ரூ. 175 இலட்சமாக 1982 இலும் உயர்த்தப்பட்டு தற்பொழுது 1991 முதல் ரூ. 300 இலட்சமாக உள்ளது.

இக்கழகத்தின் அங்கீகரிக்கப்பட்ட மூலதனமான ரூ. 300 இலட்சத்தில் ரூ. 208.86 இலட்சம் செலுத்தப்பட்ட மூலதனமாக இருக்கிறது. அதனில் பெரும்பாலான பங்கு தமிழக அரசின் பங்குத் தொகையாகும். அவற்றின் விவரங்கள் கீழ்வருமாறு:

(ரூபாய் இலட்சத்தில்)

தமிழக அரசு	:	134.19
மத்திய அரசு	:	74.00
கைவினைஞர்கள் மற்றும் கூட்டுறவு சங்கங்கள்	:	0.67
மொத்தம்	:	208.86

உற்பத்தி

இக்கழகம், பஞ்சலோக சிலைகள், பித்தளை மற்றும் வெண்கலம், மரசிற்ப வேலைப்பாடுகள், கற்சிற்பங்கள் மற்றும் தஞ்சாவூர் கலைத்தட்டுகள் இவைகளுக்காக 9 இடங்களில் உற்பத்தி நிலையங்களை நடத்தி வருகின்றது.

1. பஞ்சலோக சிலைகள்	:	சுவாமிமலை, நாச்சியார்கோவில்
2. பித்தளை மற்றும் வெண்கலம்	:	நாச்சியார் கோவில், மதுரை, ஆய்குடி, வாகைகுளம்.

3. மரச்சிற்ப வேலைப்பாடுகள் : கள்ளக்குறிச்சி.

4. கற்சிற்பங்கள் : மாமல்லபுரம்

5. தஞ்சாவூர் கலைத்தட்டுகள் : தஞ்சாவூர்.

கடந்த நிதியாண்டில் தஞ்சாவூர் கலைத்தட்டு மற்றும் பஞ்சலோகங்களுக்காக, செயற்படுத்தப்பட்ட பயிற்சித் திட்டங்கள் இந்த நிதியாண்டிலும் தொடரப்படுகின்றன. கைவினைஞர்கள் தாம் உற்பத்தி செய்யும் பொருட்களை இக்கழகத்தின் விற்பனை நிலையங்களுக்கு வழங்கி வருகின்றனர். அவர்கள் இக்கழகம் மற்றும் மத்திய அரசின் அபிவிருத்தி ஆணையர் (கைவினைப் பொருட்கள்) அவர்கள் நடத்தும் கண்காட்சிகளில் நேரடியாக பங்கேற்கின்றனர்.

உற்பத்தி புள்ளி விவரம்

வருடம்	குறியீடு	சாதனை
	(ரூபாய் இலட்சத்தில்)	
1992-93	150.00	150.00
1993 -94	150.00	162.97
1994-95	160.00	123.10 (28.2.95 வரை)

விற்பனை

இக்கழகம் கைவினைஞர்களுக்கு சந்தை வாய்ப்பு ஏற்படுத்தித் தரும் வகையிலும் கழகத்தின் உற்பத்தி நிலையங்களில் செய்யப்பட்டவற்றை விற்கவும், "பூம்புகார்" என்ற பெயரில், பிற மாநிலங்கள் உட்பட பலவிடங்களில் விற்பனை நிலையங்களை நடத்தி வருகிறது. கைவினைஞர்களை அழைத்து அவர்களது பலதரப்பட்ட கைவினைப் பொருட்களை அவர்களே விற்க நேரடியாக நாடு முழுவதிலும் கண்காட்சிகளையும் இக்கழகம் நடத்தி வருகிறது.

விற்பனை விவரம்

(ரூபாய் இலட்சத்தில்)

வருடம்	குறியீடு	சாதிக்கப்பட்ட விற்பனை		மொத்த
		உள்நாட்டில்	ஏற்றுமதி	விற்பனை
1992-93	*700.00*	*656.69*	*19.77*	*676.46*
1993-94	*750.00*	*763.41*	*18.09*	*781.50*
1994-95	*800.00*	*668.63*	*24.17*	*692.80*

(28.02.1995 வரை)

[1995 ஏப்ரல் 24

பூம்புகார் விருதுகள்

கைவினைஞர்களின் புதிய வடிவமைப்புகளையும் அவர்களது செயல்திறன்களையும் வெளிக்கொணர் வதற்கு இக்கழகம் தகுந்த வாய்ப்புகளைச் செய்து தருகிறது. அவர்களது திறமையை வளர்க்கவும் புதிய வடிவமைப்புகளை உருவாக்கவும், ஆண்டுதோறும் போட்டி நடத்தி 'பூம்புகார்' என்ற பெயரில் வெற்றி பெறும் ஐந்து கைவினைஞர்களுக்கு தலா ரூ. 1000/ ரொக்கமும், வெள்ளிப் பதக்கமும், நற்சான்றிதழும் வழங்கி ஊக்குவித்து வருகிறது. மிகத் திறமை மிக்க கைவினைஞர்களுக்கு, மத்திய அரசு நடத்தி வரும் 'தேசிய விருது' போட்டிகளில் கலந்து கொள்வதற்கும் இக்கழகம் பரிந்துரை செய்கிறது.

விருது பெற்றவர்களின் விவரம்

வருடம்	தேர்ந்தெடுக்கப்பட்ட கைத்திறத்தொழில்	விருது பெற்ற கைவினைஞர்களின் எண்ணிக்கை	விருதின் பயன்
1992-93	மண் பொம்மை, தஞ்சாவூர் வண்ணப்படம், காகித கூழ் பொம்மை, கற்சிற்பம், தஞ்சாவூர் மாலைகள்	*5*	தலா ரூ. *1000*/ ரொக்கம் வெள்ளிப்பதக்கம் மற்றும் சான்றிதழ்

1993-94	மரவேலைப்பாடு, கற்சிற்பம், களிமண் வேலைப்பாடு, நூக்கமர ஒட்டு வேலைப்பாடு, தஞ்சாவூர் வண்ணப்படம்	5	தலா ரூ.1000/ ரொக்கம், வெள்ளிப் பதக்கம், மற்றும் சான்றிதழ்

1994-95 பூம்புகார் விருது போட்டி ஜூலை 1995 இல் நடக்க இருக்கிறது.

கைவினைஞர்களுக்குப் பயிற்சித் திட்டம்.

தமிழகத்தின் பாரம்பரியக் கலைகளை அழிவிலிருந்து காக்க அவர்களுக்கு பலதரப்பட்ட கைவினைப் பொருள்களில் பயிற்சியளிப்பது அவசியமாகிறது. அத்தகைய பயிற்சிகள் கைவினைஞர்களை உருவாக்கிடவும் அவர்களுக்குத் தகுந்த வேலை வாய்ப்பினை ஏற்படுத்தவும் உதவி புரியும். பூம்புகார் விற்பனை நிலையங்களுக்கும், கண்காட்சிகளுக்கும், மேலும் ஏற்றுமதி செய்யவும் தேவைப்படும் பலதரப்பட்ட கைவினைப்பொருட்களை உற்பத்தி செய்வதற்கு கைவினைஞர்கள் பற்றாக்குறை இருப்பது உணரப்பட்டது. பஞ்சலோக சிலைகள், மரச்சிற்பங்கள் மற்றும் தஞ்சாவூர் கலைத்தட்டுகள் ஆகியவை உற்பத்தி மதிப்பை பெருக்கவல்ல கலைகளாகும். அவை, இத்தொழிலில்

ஈடுபடும் புதிய கைவினைஞர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கக் கூடியவை. இக்கழகத்தில் கூலிக்கு பணிபுரியும் கைவினைஞர்களில் 75 சதவீதத்தினர் இக்கழகத்தில் அந்தந்தக் கலைகளில் பயின்று தேர்ச்சி பெற்றவர்களாவார்கள்.

பயிற்சித்திட்ட புள்ளி விவரம்

வருடம் (1)	பயிற்சி அளிக்கப்பட்ட கலைகள் (2)	பயிற்சி அளிக்கப் பட்ட இடம் (3)	பயிற்சி பெற்ற கைவினைஞர்களின் எண்ணிக்கை (4)
1992-93	தகடு வேலைப்பாடு	மதுரை	15
	சந்தனமரம்	கள்ளக்குறிச்சி	15
	கருங்கல்	மாமல்லபுரம்	15
	பஞ்சலோகம்	சுவாமிமலை	20
	வெண்கலம்	நாச்சியார் கோவில்	5
	வெண்கலம்	மதுரை	5
	வெண்கலம்	வாகைகுளம்	5
	பஞ்சலோகச் சிலைகள்	நாச்சியார் கோவில்	5
1993-94	தகடு வேலைப்பாடு	மதுரை	15
	சந்தனமரம்	கள்ளக்குறிச்சி	15
	கருங்கல்	மாமல்லபுரம்	15
	பஞ்சலோகம்	சுவாமிமலை	20
	வெண்கலம்	நாச்சியார் கோவில்	5

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

	வெண்கலம்	மதுரை	5
	வெண்கலம்	வாகைகுளம்	5
	பஞ்சலோகச் சிலைகள்	நாச்சியார்கோவில்	5
1994-95	பஞ்சலோகம்	மதுரை	5
	வெண்கலம்	நாச்சியார்கோவில் (ட்ரைசம்)	4

கண்காட்சிகள்

கைவினைஞர்களுக்கு சந்தை வாய்ப்பினை பெற்றுத் தருவதும், அவர்களை நேரடியாக கைவினைப் பொருட்களில் ஈடுபாடு கொண்டுள்ளவர்களுடன் தொடர்பு கொள்ளச் செய்வதும் இடைத்தரகர்களை தவிர்ப்பதும் இக்கழகம் நடத்தும் கண்காட்சிகளின் நோக்கமாகும். ஒரே இடத்தில் பலதரப்பட்ட கைவினைஞர்கள் கூடுவதால், கைவினைப் பொருட்களின் மீது நாட்டம் உள்ளவர்கள் ஒரே இடத்தில் அவைகளை வாங்க வசதியாகவும், மேலும் கைவினைஞர்களுடன் நேரடியாக வியாபாரத் தொடர்பு கொள்ளவும் வசதி செய்து தரப்படுகிறது. பல்வேறு மாநிலங்களிலிருந்து வரும் வாடிக்கையாளர்களுக்கும், அந்நிய நாட்டிலிருந்து வரும் இறக்குமதி / ஏற்றுமதியாளர்களுக்கும், உதவியாக இருக்கவும், அவர்கள் கைவினைப் பொருட்களைப் பற்றி அதிக அளவில் தெரிந்து கொள்ளவும், கண்காட்சி நடத்தப்படும் இடங்களில் கைவினைப் பொருட்களின் செயல்முறை விளக்கங்கள் நடத்தப்படுகின்றன.

கண்காட்சிகள் மூலமாக 1991 - 92 ஆம் ஆண்டு முதல் நடந்த விற்பனை பின்வருமாறு:

(ரூபாய் இலட்சத்தில்)

1991-92	*105.00*
1992-93	*209.00*
1993-94	*233.00*
1994-95 (28.2.95 வரை)	*160.04*

இக்கழகம், இந்தியாவில் பெரிய நகரங்களான, சென்னை பம்பாய், டெல்லி, கல்கத்தா, பூனா, பரோடா, ஐதராபாத் மற்றும் திருவனந்தபுரம் ஆகிய இடங்களில் ஒவ்வொரு வருடமும் கண்காட்சிகளை நடத்தி வருகிறது. இதர மாநிலங்களில் நடத்தும் கண்காட்சிகள் மூலம், கலை பாராம்பரியங்கள் பரிமாறிக் கொள்ளப்படுகின்றன. மேலும், பிற மாநிலக் கைவினைஞர்களும் பயன் அடைகின்றனர். இந்தியாவின் பெரிய நகரங்களில் கலைப்பொருட்கள் சந்தையைக் கூட்டுவதன் மூலம் கைவினைஞர்களுக்கு பெரிய அளவில் பயனை கொடுக்க திட்டமிடப்பட்டுள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

சிறப்புப் பணிகள்

தமிழகத்தில் சில கலைகள் குறைந்து காணப்பட்டாலும் கலைநயம் மிகுந்து இருக்கின்றன. கோயில் தேர் செய்வது என்பது பாரம்பரிய கலையாகும். 1983 வரை அந்த கலையில் பலருக்கு பயிற்சி அளித்து வந்ததால்தான் அக்கலையானது இன்னமும் இருக்கின்றது என்றே கூற வேண்டும். பாரம்பரியமாக இந்தக் கலையைக் கற்றுக் கொண்ட கைவினைஞர்கள் இக்கலையின் மூலமாக முன்னேறி வருகிறார்கள். தமிழ்நாட்டிலும் பிறமாநிலங்களிலும் உள்ள தேவஸ்தானங்கள், குறைந்த எண்ணிக்கையில் உள்ள இந்த கைவினைஞர்களையே பெரிதும் நம்பி உள்ளன. ஆதலால் இக்கழகம், தமிழ்நாட்டிலும் இதர மாநிலங்களிலும் உள்ள பல்வேறு தேவஸ்தானங்களுக்கு வேண்டிய தங்கரதம் மற்றும் வெள்ளிரதம் செய்யும் சிறப்புப் பணிகளை மேற்கொண்டுள்ளது. மேலும், இக்கழகம் அரசுத் துறைகளுக்குத் தேவையான பித்தளை சலவைப் பெட்டிகள் மற்றும் தஞ்சை கலைதட்டுகளையும், அயல்நாட்டு பிரமுகர்களுக்கு வேண்டிய நினைவுப் பரிசுப் பொருட்களையும் செய்து வருகிறது.

1994-95 ஆம் ஆண்டில் ரூ. 40.53 இலட்சம் மதிப்புள்ள கீழ்க்கண்ட சிறப்புப் பணிகளை இக்கழகம் மேற்கொண்டு முடித்துள்ளது:

வரிசை எண்	பணியின் விவரம்	மொத்த மதிப்பு	1993-94ல் முடிவடைந்த வேலையின் மதிப்பு	1994-95ல் முடிவடைந் துள்ள வேலையின் மதிப்பு
(1)	(2)	(3)	(4)	(5)
				(ரூபாய் இலட்சத்தில்)
1.	திருமலை திருப்பதி தேவஸ்தானம் 21 ' 5 " உயர மர ரதத்திற்கு தங்கத்தகடு போர்த்தும் பணி	25.77	11.22	14.55
2.	அருள்மிகு இராமநாதசுவாமி திருக்கோயில், இராமேஸ்வரம் இரண்டாம் பிரகார கட்டுமானப் பணி	14.52	5.18	3.94
3.	அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் மருதமலைக்கு 16' உயர தங்க ரதம் செய்து வழங்குதல்	13.12	5.79	4.97
4.	அருள்மிகு தேவி கருமாரி அம்மன் திருக்கோயில் திருவேற்காடு 12' உயர வெள்ளி ரதம் செய்து வழங்குதல்	7.40	3.18	4.22

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY சட்டமன்றப் பேரவை வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

5.	அருள்மிகு விநாயகர் திருக்கோயில் ஈச்சனாரி 9' உயர தங்கரதம் செய்து வழங்குதல்	9.04	-	6.25
6.	அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில், கொன்னையூர் 9 3/4' உயர வெள்ளிரதம் செய்து வழங்குதல்	7.45	-	3.90
7.	அருள்மிகு வெக்காளியம்மன் திருக்கோயில், திருச்சி, தங்க கவசம் செய்து வழங்குதல்	2.70	-	2.70
	மொத்தம்	80.00	25.37	40.53

செயற்பாடு அறிக்கை

இக்கழகத்தின் கடந்த மூன்று ஆண்டுகளுக்கான நிதிநிலை விவரம் கீழே தரப்பட்டுள்ளது.

ஆண்டு	இலாபம் (ரூபாய் இலட்சத்தில்)
1991 - 92	54.41
1992 - 93	51.38
1993 - 94	31.04

1994-95ம் ஆண்டு இறுதியில், இக்கழகம் ரூ. 35.00 இலட்சம் வரை இலாபம் அடைந்து, இக்கழகம் இதுவரை

அடைந்துள்ள நட்டத்தை சரி செய்து உபரி வருமானத்தைப் பெற்று, மொத்த இலாபக் கணக்கைத் தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இக்கழகத்தின் கைவினைப் பொருட்களை சிங்கப்பூரில் விற்பனை செய்வதற்கு ஒரு முகமையை (Agency) நியமித்து அதன் மூலம் கைவினைப் பொருட்களின் ஏற்றுமதியைப் பெருக்கிடவும் இக்கழகம் பரிசீலனை செய்து வருகிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS